D
V 211,31'N 89
N.89.11.2
144363

வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 14 9 ... எழும்பூர், சென்னை-600008.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

1279

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 21, 1989–தொகுதி 11–எண் 2

Friday, the 21st April, 1989–Volume 11–No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

உள்ளடக்கம்.

21–4–1989.


| | பக்கங்கள் |
| --- | --- |
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | 4[illegible]1—518 |
| 2. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| இராமேஸ்வரம் பகுதியில் மீன்பிடிக்கச் சென்றவர்களை இலங்கை மீனவர்கள் கடத்திச் சென்றுள்ளதாகக் கூறப்பெறுவது குறித்து. | 519—521 |
| 3. தகவல் கோரல்— | |
| (அ) துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து. | 521—522 |
| (ஆ) பால் கமிஷன் அறிக்கை தொடர்பான புலன் விசாரணை முடிவுகள். | 522—523 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (அ) மாநில நிலவள வங்கிப் பணியாளர்களுடைய சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படுவதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு. | 523—528 |
| (ஆ) திண்டுக்கல் மருத்துவமனையில் போதுமான இடவசதி, படுக்கை வசதிகள் இல்லாதது குறித்து. | 529—531 |
| 5. மானியக் கோரிக்கைகள், 1989–90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. | |
| (அ) கோரிக்கை எண். 27—கதர்த் தொழில் | 42—117 |
| (ஆ) கோரிக்கை எண். 30—சமூகநலன் | 119—144 |
| (இ) கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் | 532—607 |
| (ஈ) கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 609—634 |

| | பக்கங்கள். |
|---|---|
| *மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் | 632—634<br>619—632 |
| *திரு. வெ. இராசு | 535—540 |
| *திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி | 540—548 |
| திருமதி பாப்பா உமாநாத் | 548—559 |
| *திரு. ரவி அருணன் | 559—562 |
| திரு. எஸ். என். எம். உபயதுல்லா | 563—566 |
| *திரு. எஸ். குணசேகரன் | 566—569 |
| *திரு. கே. ஏ. மணி | 569—572 |
| *திரு. கோ. பூவராகன் | 572—580 |
| திரு. எம். அப்துல் லத்தீப் | 580—587 |
| *திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 587—595 |
| *திருமதி பி. லட்சுமி | 596—599 |
| திரு. ஜி. பழனிச்சாமி | 599—604 |
| *திரு. கே. ஆர். இராஜேந்திரன் | 604—607 |
| 6. அறிவிப்புகள்— | |
| (அ) பேரவை அலுவல்கள். | 607—609 |
| (ஆ) சட்டமன்றப் பேரவையின் 50-வது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி குறித்து. | 634 |
| 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. | 634—635 |


D
V21,31'N29
N89.11.2
144363

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 ஏப்ரல் 21, வெள்ளிக்கிழமை

சித்திரை 8, சுக்ல— திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள''.

காக்கை தனக்குக் கிடைத்ததை மறைத்து வைக்காமல் சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும். அத்தகைய இயல்புடையவர்களே கூட்டுறவு உணர்வோடு கூடிய அத்தகைய ஆக்கத்தை உருவாக்குபவர்கள்.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கோவை மற்றும் மதுரை மாநகராட்சிகளில் காவல்துறை கமிஷனர் பதவி உருவாக்குதல்.

91—(*வினா எண். 276) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மற்றும் மதுரை மாநகராட்சிகளில் காவல் துறை கமிஷனர் பதவி உருவாக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : சென்னை மாநகரில் உள்ளது போல கோவை, மதுரை மாநகரங்களில் காவல் துறை ஆணையர் பதவி உருவாக்குவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல்துறை ஆணையர் பதவி உருவாக்குவதற்கு செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட்ட உள்ளன? அவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்யப்பட இருக்கின்றன என்ற குறிப்புகளைச் சொல்ல முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரக் காவல்துறை ஆணையருக்கு என்னென்ன பொறுப்புகள் தரப்பட்டிருக்கிறதோ அந்தப் பொறுப்புகள் மதுரையில், கோவையில் காவல்துறை ஆணையர் பதவி அமைக்கப்பட்டால் அவர்களுக்கு வழங்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தலைவர் அவர்களே, காவல் துறை ஆணையருக்கு நீதி மன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறதா? அவர்கள் யாரையும் எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் கைது செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார்கள் வந்தால் அந்த புகார்களின் அடிப்படையில் கைது செய்ய அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. நோட்டீஸ் கொடுத்துவிட்டு கைது செய்ய மாட்டார்கள்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோவைக்கு போலீஸ் கமிஷனர் நியமிப்பதால் அரசுக்கு செலவு எவ்வளவு அதிகமாகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காவல்துறை ஆணையர் பதவி மதுரை கோவை ஆகிய மாநகரங்களில் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று 1982–83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கடந்த கால ஆட்சியில் அறிவிக்கப்பட்டது. 1982–83-ம் ஆண்டில் அறிவித்து பிறகு 1987 ஆம் ஆண்டு அதற்காக ஜீ. ஓ. ஒன்று பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அந்த ஜீ. ஓ.படி எந்தத் தேதியிலிருந்து இது அமலாகும் என்று சொல்லப்படவும் இல்லை. அது நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை. அந்த நேரத்தில் இதற்காக ஆகும் என்று திட்டமிடப்பட்ட செலவு கோவை நகருக்கு ஒரு கோடியே 74 லட்சத்து 20 ஆயிரத்து 104 ரூபாய். மதுரையில் இந்தத் திட்டத்தை அமல்படுத்த அதாவது கமிஷனர் நியமிக்க இரண்டு கோடியே 74 லட்சத்து 11 ஆயிரத்து 580 ரூபாய் ஆகும் என்றும் அப்போது மதிப்பிடப்பட்டது.

திரு. கே. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியாகி 7, 8 வருடங்கள் ஆகியும் கூட கமிஷனர் நியமிக்க வேண்டுமென்று கோரிக்கை இருந்தும், அது நிறைவேற்றப்படுவதற்கான உத்தரவு இருந்தும், இன்று வரையில் நிறைவேற்றப்படாமல் இருந்து, இப்போது நிறைவேற்றப்படுவது ஒரு மகிழ்ச்சியான விஷயம். நான் அறிந்து கொள்ள விரும்புவது என்னவென்றால் அவர்களது அதிகார எல்லை என்பது கோவை மாநகராட்சிக்கு உட்பட்டு இருக்குமா? அல்லது அதைத் தாண்டி எதுவரையில் அவர்களது அதிகாரம் இருக்கும் என்பது ஒரு விஷயம்.





மேற்கொண்டு கோவையிலே இப்போது இருக்கும்படியான மிகப் பெரிய கஷ்டம் போலீஸ் அதிகாரிகளுக்கு—டி. ஐ. ஜி. ஒருவரைத் தவிர—மற்றவர்களுக்கு நல்ல சரியான காரியாலயங்களுக்கான வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அப்படி இருக்கும் போது, இந்த கமிஷனர் ஆபீஸ் என்பது ஏராளமான விஷயங்கள் வந்து சேரக்கூடிய இடம். அதற்கு ஒரு நல்ல காரியாலயத்தை உடனடியாக ஏற்படுத்துவதற்கும் அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காவல் ஆணையம் இந்தத் திட்டம், நிறைவேற்றப்படுமேயானால் சென்னை மாநகரத்தினுடைய கமிஷனர் அவர்களுக்கு, எந்த அளவிற்கு அதிகார எல்லை, வரம்பு, இருக்கிறதோ அதே அதிகார எல்லை கோவைக்கும், மதுரைக்கும் அவர்களுக்கு வகுத்து அளிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் மேலும் ஒரு வினாவை இதன் தொடர்பாகத் தொடுத்திருக்கிறார்கள், நல்ல ஒரு காரியாலயம் அமைக்கப்படுமா என்று. கமிஷனர் பதவி அங்கே அமைக்கப்படுகிற நேரத்தில், அதற்குரிய காரியாலயங்களிலும் கவனம் செலுத்தப்படும்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, இந்தக் கமிஷனர் பதவிகள் உருவாகிற போது, இதோடு இணைந்து உதவிப் பதவிகள், உதவியாளர்கள் என்கிற முறையில், என்னென்ன பதவிகள் அங்கே உருவாக்கப்பட இருக்கின்றன? ஆக, அப்படி உருவாகக் கூடிய அந்தப் பகுதியில், ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறபோது, காவல் நிலையம் அமைப்பதற்கு சில இலக்கணங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். எனவே இதுபோன்ற கமிஷனர் பதவி உருவாவதற்கு இத்தனை லட்சம் மக்கள் தொகை இருக்கவேண்டும் என்கிற கணக்கீடு ஏதேனும் இருக்கிறதா, அதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 10 லட்சம் பேர்களுக்கு மேல் மக்கள் தொகை இருக்கவேண்டும் என்பது ஒரு நியதி. ஆனால் 'நேசனல் போலிஸ் கமிஷன்', அதனுடைய அறிவிப்பின்படி 5 லட்சம் பேர்கள் இருந்தால் போதுமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது, உறுப்பினர் கவலையோடு கேட்பது, கோவை நகரத்திலே அந்த நியதி பின்பற்றப்படுமா என்பதைப்பற்றி என்று நான் புரிந்துகொள்கிறேன். மதுரை மாநகராட்சியில் 1981 ஆம் ஆண்டு 8 லட்சத்து 20 ஆயிரம் பேர்கள் மக்கள் தொகை. கோவையில் 7,04,000 பேர்கள். இது அந்த 10 லட்சம் பேர்கள் என்கிற நியதிக்குக் குறைவானதுதான். ஆனால் நான் சொல்வது 1981 ஆம் ஆண்டுக் கணக்கு. அதற்குப் பிறகு அந்த நகர மக்களுடைய முயற்சியால் மேலும் அந்த மக்கள் தொகை வளர்ந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த முயற்சியில் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் எல்லோரும் ஒன்றே. (சிரிப்பு)

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோவை நகரங்களில் கமிஷனர்களை நியமனம் செய்யும்போது, டி.ஐ.ஜி. கிரேடிலே உள்ள கமிஷனரை நியமனம் செய்கிறீர்களா? அல்லது சென்னையில் இருப்பதைப் போல, ஐ.ஜி. கிரேடிலே கமிஷனரை நியமனம் செய்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதே போன்று சென்னையில் உள்ள கமிஷனருக்கு அதிக அதிகாரங்கள் ஜுடிசியல் பவர்ஸ் இருக்கின்றன. அந்தப் பவரை எல்லாம் நீங்கள் இந்த 2 மாநகராட்சியிலும் இருக்கின்ற கமிஷனருக்குக் கொடுக்க உத்தேசம் உள்ளதா? நான் ஏன் இதைக் கேட்கிறேன் என்றால், கேரளாவில் இருக்கின்ற திருவனந்தபுரத்தில் உள்ள கமிஷனருக்கு ஜுடிசியல் பவர்ஸ் கிடையாது. ஆனால் சென்னையில் இருக்கிற கமிஷனருக்கு ஜுடிசியல் பவர்ஸ் இருக்கிறது. ஏன் என்றால், வெள்ளைக்காரன் ஆண்ட காலத்திலே கொடுக்கப்பட்ட அதிகாரம் இது. எனவே இதையும் இந்த இரண்டு கமிஷனர்களுக்கும் கொடுக்கும் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஐ. ஜி. தகுதியிலேதான் கமிஷனர் நியமிக்கப்படுவார். சென்னையில் ஐ. ஜி. தகுதியிலேதான் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இன்னொரு கேள்வி; சென்னையைப்போல மதுரையிலும் கோவையிலும் கமிஷனர் அமைக்கப்படுவாரா என்பது. சென்னையைப் போலத்தான் அமைக்கப்படுவார்.

திரு. என். பால்ராஜ்: தலைவர் அவர்களே, மதுரை, கோவை மாநகரங்களில் காவல் ஆணையாளர் முறை கொண்டுவரப்படும் என்று எப்போது அறிவிக்கப்பட்டது? அதற்கான சட்டம் எப்போது நிறைவேற்றப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன் விவரமாக. 1982—83ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டது. பிறகு 1987-ல் அதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. நடைமுறைப்படுத்துவதைக் குறித்துத்தான் இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஒம். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2 மாநகராட்சிகளிலும் உள்ள வேலைப் பளுவின் காரணமாகவோ என்னவோ



[illegible] தெரியவில்லை. அதற்கு 1 கோடி, இதற்கு 2 கோடி ரூபாய் [illegible] என்று சொன்னார்கள். [illegible] சொல்லும் [illegible] அங்கே வேலைப்பளு போது அதற்குக் காரணம் என்ன? [illegible] இரண்டுக்கும் ஜாஸ்தியா, இங்கே வேலைப் பளு ஜாஸ்தியா? [illegible] சொல்கிறார்களே, 1 கோடி ரூபாய் வித்தியாசம் [illegible] அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது அதில் உள்ள மக்கள் தொகை அடிப்படையிலே அங்குள்ள காவலர்கள் ஆற்றவேண்டிய பணியைப் பொறுத்தது.

திரு. இரா. மோகன்: தலைவர் அவர்களே, கோவை, மதுரை மாநகராட்சிகளிலே காவல்துறை கமிஷனர்கள் நியமிக்கப்படாது 7, 8 ஆண்டுகளாக [illegible] காலதாமதம் ஆகிக் கொண்டு இருப்பதினுடைய காரணம் என்ன? மாநில அரசே அந்தக் கமிஷனர்களை நியமிப்பதற்கு முழு அதிகாரம் பெற்றிருக்கிற அமைப்பா? அல்லது மாநில அரசு மத்திய அரசினுடைய அல்லது போலீசில் இருக்கக்கூடிய வேறு துறைகளினுடைய அனுமதி பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறதா? ஏன் இந்தக் காலதாமதம்? உடனடியாக கமிஷனர்களை கோவை, மற்றும் மதுரையிலே நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—10)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறேன். அதற்காக ஜி. ஓ. போடப்பட்டாகி விட்டது. ஜி. ஓ. போடப்பட்ட பிறகு, அது அமலுக்கு வருவதற்கு ஏன் காலதாமதம், என்ன காரணம் என்று கேட்கிறார். பையன்கள் பள்ளிக்கூடத்திற்கு லேட்டாக வரும்போது ஏன் லேட் என்று ஆசிரியர் கேட்பார். லேட் ஆகி விட்டது சார் என்று பையன் பதில் சொல்வார். அந்தப் பதில் தான் இருக்கும். (சிரிப்பு).

பாபநாசம் குற்றவியல் நீதிமன்றத்தில் நடுவர் பதவி.

92—(* வினா எண். 197) திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் நகரில் குற்றவியல் நீதிமன்றத்தில் கடந்த ஓர் ஆண்டாக நடுவர் பதவி நிரப்பப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : பாபநாசம் குற்றவியல் நீதிமன்ற நடுவர் பதவி 10-2-89 அன்று நிரப்பப்பட்டு விட்டது.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவர் பதவி நிரப்பப்பப்பட்டதற்கு நன்றி. கடந்த அரசைப் போன்று அல்லாமல் நீதிபதிகளை அரசு விரைவாக நியமிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நீதிபதிகளை நியமிக்கின்ற பொறுப்பு உயர்நீதி மன்றத்திற்கு உண்டு. இதுபோன்ற குறைபாடு வருகின்றபோது நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஜூடிஷியல் மாஜிஸ்ட்ரேட்டுகளையும் டிஸ்ட்ரிக்ட் முன்சிப்களையும் 'இன்டகிரேஷன்' ஏற்படுத்தியதற்குப் பிறகு இன்னும் பல காலி இடங்கள் இருப்பதாக நான் அறிகிறேன். அதை விரைவில் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, டிஸ்ட்ரிக்ட் முன்சிப்-கம்-ஜூடிஷியல் மாஜிஸ்ட்ரேட் பதவி இப்போது நடைமுறைக்கு வந்திருக்கிறது. இன்றைய நிலவரப்படி மாவட்ட முன்சிப் மற்றும் நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் பதவிகள் 43 காலியாக உள்ளன. அந்த 43 காலியிடங்களையும், எதிர்காலத்திலே ஏற்படக்கூடிய காலி இடங்களையும் கருத்தில் கொண்டு, தகுதியான நபர்களைத் தேர்வு செய்து அனுப்புமாறு விரைவில் தேர்வாணைக் குழுவிடம் கேட்டுக் கொள்ளப்படும். தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டிய காலி இடங்களைப் பற்றி உயர்நீதிமன்றப் பதிவாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். ஏ. தங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,மாவட்ட தலைநகரங்களில் தொழிலாளர் நீதிமன்றம் இல்லாததன் விளைவாக வழக்குகள் காலதாமதம் ஆகின்றனவே, அதைக் கருத்தில் கொண்டு தொழிலாளர் நீதிமன்றங்களை மாவட்டந்தோறும் அமைப்பதற்கு அரசின் ஆய்வில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, தொழிலாளர் நீதிமன்றங்கள் இப்போதே கோவையிலும், மதுரையிலும் செயல்படுவதாக நான் அறிகிறேன். வேலைப் பளுவின் அடிப்படையில் நீதிமன்றங்கள் அதிகப்படுத்தப்பட வேண்டு



மென்றால், நீதிமன்றத்தின் மூலமாக நமது அரசாங்கத்திற்கு அறிவிப்பு வருகின்றபோது அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப் படும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போன்று சில மாவட்ட லேபர் கோர்ட் நீதிமன்றத்திலே வழக்குகள் தேங்கி யிருப்பதாக அரசுக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. உயர்நீதி மன்றத்தாரிடம் இந்தப் புகார்களைப்பற்றிக்கூறி, அந்த வழக்குகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரிமினல் கேஸ் ஒரு மாவட்ட நீதிமன்றத்திலும், சிவில் கேஸ் மற்ற மாவட்ட நீதிமன்றத்திலும் ஒரு நகரத்திலே நடத்தப்படுகின்றது. இது ஒழுங்குபடுத்தப்படுமா? உதாரணமாக இளையாங்குடி சிவில் கேஸ் பரமக்குடிக்கும் கிரிமினல் கேஸ் சிவகங்கைக்கும் செல்ல வேண்டியிருக்கிறது என்பதை உதாரணத்திற்குக் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வியைப் பேரவைத் தலைவரும் கேட்டதாக எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் கேள்வி கேட்க முடியாது. அவர் உத்தரவு களைத்தான் போட முடியும். பேரவைத் தலைவரை இன்ஃபுளு வன்ஸ் செய்வது மாதிரி கேள்வி கேட்பதுகூட முறையாக இருக்குமா என்ற ஒரு பிரச்சினைகூட எழுகிறது. கவர்னர் அவர்களைப் பற்றி, பேரவைத் தலைவர் அவர்களைப் பற்றி எல்லாம், அவர்களை . இன்ஃபுளுவன்ஸ் செய்கின்ற அளவிற்குக் கேள்விகளைக் கேட்பதும் அவர்களைப் பற்றிக் குறை கூறுவதும் சரியில்லை என்று நிலையிலே, நான் விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். தலைவரைப் பற்றி நான் ஒன்றும் குறிப்பாகச் சொல்லவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து குறித்த விவரங்களை எழுதிக் கொடுப்பார்களேயானால் அதை நீதி மன்றத்திற்குத்தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்கலாம் சிவில் நீதி மன்றம் என்பது தனி, கிரிமினல் நீதிமன்றம் என்பது தனி, அதற்கு அதற்கென்று எல்லை வரையறை வகுக்கப்பட் டிருக்கிறது. அப்படிப்பட்ட எல்லை வரையறைக்குள் அது ஒரு வேளை வந்திருக்கலாம். அல்லது அதிலே குறைபாடு இருக்குமே யானால் அதை நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தி நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்,

திரு. யூ. கே. வெள்ளங்கிரி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாநிலம் முழுவதும் தொழில் கோர்ட்டுகள் 4, 5 மாவட்டங்களைச் சேர்த்துத்தான் நடைபெற்று வருகின்றன. அப்படி இருக்கக்கூடிய நிலைமையில் தான் வழக்குகள் தேங்குகின்றன. ஆகவே மாவட்ட வாரியாக தொழில் கோர்ட்டுகளை உருவாக்க அரசு பரிசீலனையில் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: அந்த மாவட்ட தொழில் கோர்ட்டுகள் கேம்ப் கோர்ட்டுகளாகச் சென்று வழக்குகளை விசாரிக்கின்றன. சில மாவட்டங்களில் மாத்திரம் தான் இது போன்ற வழக்குகள் அதிகமாக இருப்பதாகவும் பல மாவட்டங்களில் இதுபோன்ற வழக்குகள் அதிகமாக இல்லை என்றும் சொல்கிறார்கள். நிலைமையை அனுசரித்தும், தேவையை அனுசரித்தும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. சு. குருநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் நடைபெறுகிற லேபர் கோர்ட் என்று சொல்லப்படுகிற தொழிலாளர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டால் அது நடந்து முடிப்பதற்குக் குறைந்த பட்சம் 6 ஆண்டுகள் அல்லது 7 ஆண்டுகள் ஆகின்றன. இந்த ஆண்டுகளைக் குறைத்து ஒரு குறிப்பிட்ட காலவரையறையில் அந்த வழக்குகளை முடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, வழக்கு மன்றங்களிலே வழக்குகளை ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் முடிக்கவேண்டுமென்றுதான் இப்போதும்கூட விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளை சில வேளைகளில் கடைப்பிடிக்க முடியாமல் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது என்பதுதான் இன்று நிலைமை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியை கவனத்தில் கொண்டு நீதிமன்றங்களும் சம்பந்தப்பட்ட லேபர் கோர்ட்டுகளும் உடனடியாக வழக்குகளை பைசல் செய்யும் என்று நான் கருதுகிறேன்.

திரு. வி. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகள் சம்பந்தமாக வழக்குகள் நடத்துவதற்கு நீதிமன்றம் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தில் இருக்கிறது. அதுவும் மேல் தஞ்சையில் இருக்கிறது. கீழ் தஞ்சை மாவட்டத்திற்கு என்று ஒரு கோர்ட் நிறுவப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: வழக்குகள் அதிகமாக இருக்கின்றன என்று ஒரு குறிப்பு இருந்தால் அது பற்றி பரிசீலிக்கலாம்.





திரு. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களில் ஆரம்பிக்கின்ற வழக்குகள் ஆரம்பிக்கின்ற வழக்குகள் 3 வருடங்கள் ஆகியும் முடிக்கப் பெறாமல் தேங்கியிருக்கின்றன. அதை முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களில் எத்தகைய வழக்குகள் என்று அவர் சொல்லவில்லை. இருந்தாலும் இன்றைக்குப் பல வழக்கு மன்றங்களிலே வழக்கை தடுத்து ஸ்டே வாங்கி விடுகிறார்கள். அது போன்ற நிலைமைகளில் உள்ளாட்சி மன்றங்களின் சார்பாக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறோம். ஒரு முக்கியமான குறிப்பு. பல நகராட்சி மன்றங்களிலும் உள்ளாட்சி மன்றங்களிலும் தொடுத்த பல வழக்குகள் உயர்நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் தேங்கியிருக்கின்றன. உச்சநீதிமன்றத்திலே வாங்கப்பட்ட ஸ்டேயை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அட்வகேட்-ஜெனரலுக்கு சிறப்பாக அறிவிக்கப்பட்டு அவரும் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்.

திரு. எம். சீரங்கன்: பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களிலே இப்போது அதிகமான கேஸ்கள் தேங்கியிருப்பதன் காரணமாகக்கூடுதல் நீதிபதிகளை நியமித்து விரைவில் கேஸ்களை பைசல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டது போல உங்களுடைய அத்தனை கோரிக்கைகளையும் அரசாங்கத்தால் நிறைவேற்றி விட முடியாது. அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் உயர்நீதிமன்றத்தின் மூலமாகத் தான் அந்தக் கருத்துக்களை வலியுறுத்த முடியும். எனவே நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே தலைமை நீதிபதி அவர்களோடும் மற்ற நீபதிகளோடும் பேசப்பட்டு இருக்கிறது. விரைவாக நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். உங்களுடைய உணர்வுகளை அவர் புரிந்து கொண்டு அந்த வழக்குகளை விரைவாக முடிக்க தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்களில் உள்ள கேஸ்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடந்து தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டது சம்பந்தமாக, ஒரு ஓட்டு வித்தியாசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் தலைவர் என்று சொல்லி அதை ஆட்சேபித்து வழக்கு தொடுத்தார்கள். அந்த வழக்கு குடியாத்தம் தாலுகாவில்

3 ஆண்டு கழிந்ததற்குப் பிறகும் தீர்ப்பு அளிக்கப்படாமல் இருக்கிறதே அத்தகைய வழக்குகளைத் தீர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சித் தேர்தல் குறித்து வழக்கு மன்றத்தில் நடைபெறுகிற வழக்கு பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று அந்த நீதி மன்றத்தினுடைய நீதிபதி அவர்களே விரைவுபடுத்தி வழக்கு நடத்துவது. இரண்டாவது சம்பந்தப்பட்ட கட்சிக்காரர். அவர்கள் வழக்கை விரைவுபடுத்த வேண்டுமென்று நீதிபதியை வற்புறுத்தி விண்ணப்பங்கள் போட்டு நடவடிக்கை எடுப்பது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது எந்த முறை என்று எனக்குத் தெரியவில்லை. தாங்களே அந்த கட்சிக்காரர்களை அட்வான்ஸ் பெட்டிஷன் போடச் சொல்லி நடவடிக்கை எடுத்து—அதிலே நடவடிக்கை எடுக்காவிட்டால், உத்தரவு போட்டு காலத்தைக் கடத்தினால்—அதற்கும் மேல் ரிவிஷன் பெட்டிஷன் போட இடம் இருக்கிறது. எனவே கட்சிக்காரர்கள் விழிப்போடு இருந்தால் தான் காரியம் நடைபெறுமே ஒழிய நீதிபதி என்ன செய்வார் என்று நம்மால் சொல்ல முடியாது என்று தான் நான் நினைக்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : தலைவர் அவர்களே, ஆதிராவிடர் துறை மூலமாக ஏழை, தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மலைவாழ் மக்களுக்காக வீடு கட்டுவதற்கு இடங்களை ஆர்ஜிதம் செய்கின்ற போது ஏறத்தாழ 6, 7 ஆண்டுகளாக அந்த நிலங்களை எடுத்து ஏழை மக்களுக்குக் கொடுப்பதற்குத் தடையாக இருக்கிறது. அவைகளை விரைந்து ஏறத்தாழ 3, 4 மாதங்களிலே அந்த கேஸ்களை முடிப்பதற்கு தனி கோர்ட் அமைத்து இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல் அரசாங்கம் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கும்போது, பல்வேறு பணிகளுக்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது சம்பந்தப்பட்டவர்கள் உயர்நீதி மன்றத்திற்கோ அல்லது சிவில் நீதி மன்றத்திற்கோ சென்று தடையாணை பெற்றுவிடுகிறார்கள். அந்த தடையாணையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு அரசாங்க வழக்குகளுக்கு நாங்கள் மிகவும் கண்டிப்பாகத் தெரிவித்திருக்கிறோம். இதுபோன்ற ஆணைகளை விரைவாக ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். உயர்நீதிமன்றத்தின் ரிஜிஸ்ட்ரார் மூலமாகவும் கருத்துத் தெரிவித்திருக்கிறோம். எனவே இதுபோன்ற காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை அரசுமூலமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் என்னதான் நடவடிக்கை எடுத்தாலும் உத்திரவு போட வேண்டியவர்கள் நீதிபதிகள். நீதிபதிகளைப் பொறுத்து நான் இங்கே ஒன்றும் சொல்வதற்கில்லை.



இழக்குக் கடற்கரைச் சாலையில் வீடுகள் கட்ட தடை.

93—(*வினா எண். 920) திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இழக்குக் கடற்கரைச் சாலையில் கொட்டிவாக்கம் முதல் உத்தண்டி வரை அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவில்கூட வீடுகள் கட்ட தடை விதித்துள்ள அரசு ஆணையைத் திரும்பப் பெறும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இழக்குக் கடற்கரைச் சாலையில் கொட்டிவாக்கம் முதல் உத்தண்டி வரை அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் கூட வீடுகள் கட்ட தடை விதித்துள்ள அரசு ஆணையைத் திரும்பப் பெறும் கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9 ஆண்டுக் காலமாக நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் அரசினுடைய அங்கீகாரத்தை நம்பி மனைகளை வாங்கிவிட்டு 9 ஆண்டுகளாக ஏறுகின்ற விலைவாசியினால் வீடுகள் கட்ட முடியாமல் தவிக்கின்ற காரணத்தால் இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கொட்டிவாக்கம் முதல் உத்தண்டி வரையுள்ள கேள்வி. நான் அதற்கு சற்று விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். திருவான்மியூரிலிருந்து மாமல்லபுரம் வரை ஏற்கெனவே ஐக்கிய நாட்டு சபையிலிருந்து இங்கே வந்த ஒரு வல்லுநர் குழு இந்த கடற்கரைப் பகுதி உலகத்திலே சிறந்த கடற்கரைப் பூங்கா பகுதியாக உருவாகலாம் என்ற ஒரு கருத்தினைத் தெரிவித்திருக்கிறது. அதன் அடிப்படையிலே தான் இங்கே பல்வேறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது. இந்த திருவான்மியூரிலிருந்து மாமல்லபுரம் வரை உள்ள பகுதியை 3 பிரிவாகப் பிரித்து திருவான்மியூரில் இருந்து உத்தண்டி வரை ஒரு பகுதி. இது இங்கே எம். எம். டி. ஏ. பொறுப்பிலே இருக்கிறது. திருவான்மியூரிலிருந்து உத்தண்டி வரை. உத்தண்டிக்கு அப்பால், மாமல்லபுரம் அருகே வரை அது

இன்னொரு மாமல்லபுரம்—உள்ளூர் திட்டக் குழுமம். அந்தக் குழுமத்தினுடைய பொறுப்பிலே இருக்கின்றது. அதற்குப் பிறகு மாமல்லபுரம். மாமல்லபுரம் புறநகர் வளர்ச்சிக் குழுமம், இப்படி மூன்று பகுதிகளாக இருக்கின்றன. முதல் பகுதியைப் பொறுத்த மட்டிலே அங்கே கூட கட்டிடங்கள் கட்டக்கூடாது என்று ஒரு கண்டிப்பான உத்தரவு. இது ஆரம்பத்திலே முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் கலைஞர் அவர்கள் இங்கே முதல்வராக இருந்தபோது, 1975 ஆம் ஆண்டிலே அங்கே கட்டிடங்கள் கட்டுவதானால், சுற்றுலாத் துறையினுடைய அனுமதி பெற்றுத்தான் கட்டவேண்டும் என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு பல்வேறு விதங்களிலே அந்த ஆணைகள் வளர்ச்சி பெற்று, இன்றைக்கு திருவான்மியூரிலிருந்து உத்தண்டி வரை இந்த ஆணையைத் தளர்த்தி விடலாம் என்ற ஒரு யோசனை இருக்கின்றது. அதற்குப் பிறகு உத்தண்டிக்குப் பிறகு மாமல்லபுரம் வரை, மாமல்லபுரத்திலே இன்னும் சில கட்டுப்பாடுகள் இருந்துதான் ஆக வேண்டும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உத்தரவு தாமதப்படுகிற காரணத்தால் வசதி படைத்தவர்கள் மட்டுமே வீடுகள் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களை யாரும் தடுக்க வில்லை. இதன்மூலம் அங்கிருக்கிற உள்ளாட்சி மன்றங் களினுடைய வருமானம் பெரிதும் பாதிக்கப்படுவதோடு, நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்த அரசு அலுவலர்கள் விலைவாசி ஏற்றத்தால் மிகவும் பாதிக்கப்படுவதால் இந்த அரசு விரைந்து அதுகுறித்து நடவடிக்கை எடுத்து உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவாக இதிலே ஒரு முடிவு எடுத்து நாங்கள் அறிவிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று எம்.எம்.டி.ஏ. அல்லது வீட்டுவசதி வாரி யம் இவற்றினுடைய நில ஆர்ஜித செயற்குறிப்புகளுக்கு அடங்கிய பல பகுதிகளிலே இன்றைக்கும் குடியிருப்புக்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அவை முறைப்படுத்தப்படாமலே இருப்பதனாலே அங்கே இருக்கிற குடியிருப்புகளிலே வசிக்கிறவர் களுக்கும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் முறைப்படுத்தி அங்கே அமைந்திருக்கிற குடியிருப்புக்களை அங்கீகரிக்கவும், மனைகள் இருக்கிற இடங்களிலும் தொடர்ந்து வீடுகள் கட்ட அனுமதிக்கவும் செயற்குறிப்பை அரசாங்கம் பரிசீலித்து உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தமட்டிலே நான் பதில் கூற முடியும். ஆங்காங்கே ஏற்கெனவே வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்தபோது, அப்படிப்பட்ட குறைகள் வந்து கொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் பரிசீலனை செய்து, எங்கெங்கே விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமோ அங்கே கொடுப்பதற்கு ஆவன செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரையும், கடலும் மக்களுடைய மனதைக் கவருகின்ற வகையில்எழிலாக இருப்பதனால் அதைக்காண்பதற்குப் பெருவாரியான மக்கள் விரும்புகிறார்கள். ஆனால் பல இடங்களில் அந்த எழிலைக் காணமுடியாத அளவிற்குக் கட்டிடங்கள் எழுப்பப்படுகின்றன. உதாரணமாகச் சொல்லப் போனால், கன்னியாகுமரியிலே உதயசூரியனையும், மறைகின்ற சூரியனையும் பார்ப்பதற்கு மக்கள் வருகிறார்கள். ஆனால் உதயசூரியனுடைய எழிலைக் காணமுடியாத அளவிற்கு, கடற்கரையிலே பெரிய, பெரிய கட்டிடங்கள் எழுப்பப்படுகின்றன. ஆகவே, இப்படி எழுப்பப்படுகின்ற கட்டிடங்கள் எழுப்பப்படக் கூடாது என்று தடை செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, உதயசூரியனையும், மறைகின்ற சூரியனையும் பார்ப்பதற்கு வெளிநாட்டுப் பயணிகள் அங்கே அதிக அளவில் வந்து கொண்டு இருக்கிறார்கள். இதுவரை அவர்களிடமிருந்து அப்படிப்பட்ட புகார் எதுவும் வரவில்லை. அப்படியே ஒரு புகார் வந்தாலும் கூட, கடலிலே, கப்பலிலே சென்று அந்தக் காரியத்தைப் பார்ப்பதற்குக்கூட ஏற்பாடு செய்யலாம். கட்டிடங்களைக் கட்டுப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. மோகன்: பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திலே இருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய குறை, ஏராளமான நிலங்களை வீடு கட்டுவதற்காக என்று சொல்லி, 4(1) நோட்டிபிகேஷன் கொடுத்து வருகிறார்கள், அதை அரசு கையகப்படுத்தும் என்று சொல்லி. ஆனால் அப்படி நோட்டிபிகேஷன் கொடுத்து, ஆண்டுக் கணக்கிலே, 10 ஆண்டு, 20 ஆண்டுகளாக நோட்டிபிகேஷன் கொடுத்து, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அப்படியே வைத்திருக்கிறார்கள். ஒன்று அதை அரசாங்கம் எடுக்க வேண்டும். எடுத்து, வீட்டு மனைகளாகவோ அல்லது வீடு கட்டுகின்ற திட்டங்களாகவோ அதைச் செய்ய வேண்டும். அல்லது அந்த நிலச் சொந்தக்காரர் களுக்கு, எங்களால் அதை எடுக்க முடியாது என்று திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். இரண்டும் செய்யாமல் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள், பல நகரங்களிலே—கோவையிலே மட்டும் சொன்னால் அப்படி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் 4(1)நோட்டிபிகேஷன் கொடுத்து அப்படியே கிடக்கிறது. தேவைப்

[1989 ஏப்ரல் 21

(முற்பகல் 9-30)

படுகின்ற நிலச் சொந்தக்காரர்களால் அதை விற்கவும் முடிய வில்லை. அதை முழுவதையும் கையகப்படுத்துவதற்கு அரசிடம் பணம் இருக்கிறதா? அவ்வளவு நிலங்களையும் அரசே எடுத்துக் கொள்ளப்போகிறதா? ஆகவே நமக்குத் தேவையான நிலங்களை மட்டும் எடுத்துக் கொண்டு தேவையற்ற நிலங்களை நம்மால் உடனடியாக அங்கே திட்டமிட்டு செய்யமுடியாத நிலங்களை நிலச் சொந்தக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுத்தால்தான் அவர்கள் அதை மற்றவர்களுக்கு விற்கமுடியும். அதை அரசாங்கம் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்வி மூலக் கேள்வியிலிருந்து சற்று விலகிச் செல்கிறது. இருந்தாலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: By-pass road.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தமிழ்நாடு முழுவதும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் அவர்கள் சொன்னதைப் போல் பல ஆயிரக்கணக்கான நிலங்களுக்கு 4(1) நோட்டிபி கேஷன் கொடுக்கக்கூடிய அளவில் ஏதோ ஒரு காரணத்திற்காக அப்படிப்பட்ட அளவில் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் அதற்கு பிறகு கவர்னர் ஆட்சிக் காலத்தில் அவைகளை எல்லாம் சற்று ஒழுங்குபடுத்தி அத்தனை இடங்களிலும் தேவை யில்லை, அதற்கான பணமும் வீட்டு வசதி வாரியத்திடம் இல்லை. ஆகவே ஒரு 35 நோடல் டவுன்ஸ் என்ற அளவிலே அவர்கள் தேர்ந்தெடுத்து அங்கே மட்டும் நில ஆர்ஜிதம் செய் தால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். 4(1) நோட்டிபி கேஷன் எனக்குத்தெரிந்தமட்டில் 4 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குத் தான் கொடுத்து இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அதிலும் கூட 2 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு கோர்ட்டில் ரிட் பெட்டிஷனாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதுபற்றி விரைவில் நாங்கள் பரிசீலனை செய்து முடிவு செய்கிறோம் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு, எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்த வரையில் நாம் அழகான ஒரு கடற்கரையை வைத்து இருக்கிறோம். அழகான உலகமே வியக்கின்ற அளவுக்கு மிக அழகான கடற்கரையாக அது இருந்து கொண்டு வருகிறது. பம்பாய் போன்ற பெருநகரங் களில் அங்கே இருக்கின்ற கடற்கரையை ஒட்டி பல்வேறு நல்ல சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற அளவுக்கு ஓட்டல்களும் மற்ற வசதிகளும் செய்து தரப்பட்டு இருக்கின்றன. அப்படிப் பட்ட வசதிகள் இதுபோன்ற பகுதியில் செய்து தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்பாயில் எந்த ஓட்டலைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அங்கே ஒரே ஒரு பைவ்ஸ்டார் ஓட்டல் கடற்கரை ஓரத்தில் இருக்கிறது. ஆனால் பம்பாய்க்கும் சென்னைக்கும் பல்வேறு வேறுபாடுகள் உண்டு. இங்கே இருக்கக் கூடிய நிலப்பரப்பு அங்கே பம்பாய் நகரத்திற்குள் இல்லை. ஆகவே அங்கேயுள்ள அமைப்பு வேறு; இங்கேயுள்ள அமைப்பு வேறு என்பதை மட்டும் இங்கே இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சேமாத்தம்மன் மற்றும் அனந்தீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான இடம்.

94—(*வினா எண். 2100) திரு. செங்கைசிவம்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதி 27-வது வட்டம் பழனியாண்டவர் கோவில் தெருவில் அருள்மிகு சேமாத்தம்மன் மற்றும் அனந்தீஸ் வரர் கோவிலுக்குச் சொந்தமான 25 கிரவுண்டு நிலம் குறைந்த விலைக்கு விற்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், யாருக்கு என்ன விலைக்கு விற்கப் பட்டது?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : பெரம்பூர் தொகுதி 27—வது வட்டம், பழனி ஆண்டவர் கோவில் தெருவில் அருள்மிகு சேமாத்தம்மன் மற்றும் அனந்தீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான 25 கிரவுண்ட் 1606 சதுர அடி நிலத்தினை பெரம்பூர் விவேகானந்தா கல்வி நிறுவனத்துக்கு ரூ. 1,28,346-க்கு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் 1986-ல் விற்பனை செய்யப் பட்டுள்ளது.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேமாத்தம்மன் மற்றும் அனந்தீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான 25 கிரவுண்ட் 1606 சதுர அடி நிலத்தினை பெரம்பூர் விவேகானந்தா கல்வி நிறுவனத்திற்கு வழங்கி இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதை அரசுக்கு வழங்குவது என்றாலும், குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம், அரசுக்குச் சொந்தமான கல்வி நிறுவனங்களுக்கு வழங்குவது என்றாலும் கூட ஒரு கிரவுண்ட் 7 ஆயிரம் ரூபாய்க்கு வழங்க வேண்டும். அதையும் மீறி அதற்குப் பின்னால் நகர் உச்ச

வரம்பு சட்டத்தினையும் மீறி ஒரு கிரவுண்ட் 5 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்ல, டி.எஸ். குமார், தமிழ் அருவி ரங்கநாதன் போன்றவர்கள் இதே போன்று கல்வி நிறுவனத்திற்காக அந்த நிலத்தை அதிகமாக ரூபாய்க்குக் கேட்டும் அந்த நிலம் கொடுக்கப்படாமல் இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறதே இதிலே நடந்து இருக்கிற முறைகேடுகளைப் பற்றி அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் செங்கை சிவம் அவர்கள் கிரவுண்ட் 7 ஆயிரம் ரூபாய் என்றுதான் சொன்னார்கள். ஆனால் அப்போதே சார்பதிவாளருடைய மதிப்பு ரிஜிஸ்டிரேஷன் வேல்யூவேஷன் கிரவுண்ட் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய். ஆனால் அன்றைக்கு இருந்த அறங்காவலர்கள் சிபாரிசு செய்த விலை 3 ஆயிரம் ரூபாய். எப்படிப்பட்ட அறங்காவலர்கள் அங்கே அப்போது இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ரெஜிஸ்டிரேஷன் பிரைஸ், கைடுலைன்ஸ் பிரைஸ் என்று சொல்லுகிறோமே அது 15 ஆயிரம் ரூபாயாக இருந்த காலத்திலே அறங்காவலர்கள் குழு 3 ஆயிரம் ரூபாய்க்கு சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால் அங்கே இன்னொரு சூழ்நிலையும் இருந்து இருக்கிறது. இதே இடம் ஒரு கல்வித்துறையின் ஆளுகையின் கீழ் தான் இருந்தது. அவர்களுடைய அனுபவத்திலே தான் இருந்தது. குத்தகைக்காக, அங்கே அது ஒரு குளமாக இருந்ததாகவும், அந்தக் குளத்தை தூர்க்கின்ற வகையிலே ஏறத்தாழ கிரவுண்ட் ஒன்றுக்கு 17 ஆயிரம் ரூபாய் செலவு செய்ததாகவும், ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவருடைய மதிப்பு 22 ஆயிரம் ரூபாய் என்றும், அந்த 22 ஆயிரத்தில் 17 ஆயிரத்தைக் கழித்து கிரவுண்ட் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் என்று ஆணையர் சிபாரிசு செய்திருக்கிறார். இந்த 5 ஆயிரம் ரூபாயைக் கணக்கிட்டு அந்த 25 கிரவுண்டுக்கும் அவர்கள் பெற்றுக்கொண்ட அந்த மொத்த நிலத்திற்கு என்று மொத்தமாக ரூபாய் 1,28,346-ஐ அந்தக் கல்வி நிறுவனம் பெற்றிருக்கிறது. அந்த நேரத்திலே கல்வி நிறுவனத்திலே யார் இருந்தார் என்பது பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. அறங்காவலர்களைப் பொறுத்தும், அங்கே கல்வி நிறுவனத்திலே யார் இருந்தார்கள் என்பதைப் பொறுத்துத்தான் இதிலே ஏதாவது முறைகேடுகள் இருந்ததா என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

திரு. செங்கைசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு இணங்க 1986-ல் அந்த இடத்திலே ஒரு கிரவுண்ட் விலை 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக இருந்திருக்கிறது. அந்த மதிப்பீட்டைப் பார்த்தால் 37 இலட்சம் ரூபாய்க்கு மேலே போகிறது. ஆக, இன்றைக்கு அதை விற்றாலும் கூட 50 இலட்சம் ரூபாய்க்கு மேலே அந்த இடம் விலை போகும். இதை விவேகானந்தா கல்வி நிலையம்



என்று சொல்கிறார்களே தவிர, அது ஒரு தனிப்பட்டவருக்குச் சொந்தம் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி இப்படிப்பட்ட தவறான முறைகேடுகளுக்கு அங்கே இருக்கின்ற அசிஸ்டெண்ட் கமிஷனர், ஹிந்து அறநிலையத் துறையும் மற்றவர்களும் இதிலே பின்னணியாக உள்ளார்கள். ஆகவே இதை நம்முடைய அரசு தனியாகப் பரிசீலித்து அதற்கென்று ஒரு குழுவைப் போட்டு, அந்த நிலையைப்பற்றி விசாரிக்க முயற்சிகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்த யோசனையின்படி, அத்தோடு இங்கே எனக்குத் தரப்பட்ட தகவலையும் சேர்த்துப் பார்த்தால் மொத்தம் 154 கிரவுண்டுகள் அங்கே இருந்திருக்கின்றன. அந்தக் கல்வி நிறுவனத்திற்கு கொடுத்த நிலம் 25 கிரவுண்ட். ஏறத்தாழ மிச்சமுள்ள 130 கிரவுண்டுகளை இங்கேயுள்ள 257 நபர்களுக்கு அடிமனை வாடகைக்கு விடப்பட்டு மொத்தம் 1,454 ரூபாய் அந்த ஆலயத்திற்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கேதான் இந்தமாதிரியான முறைகேடுகள் அதிகமாக இருக்கின்றன என்று நான் உணருகிறேன். நேற்றைய தினத்திலே நான் அறங்காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசும்போதுகூட காஞ்சிபுரத்தில் இப்படிப்பட்ட முறைகேடு நடைபெற்று அது டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் மற்றும் ஆண்டி கரப்ஷனுடைய அதிகாரியின் விசாரணைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். இதைக்கூட அப்படிப்பட்ட விசாரணைக்கு அனுப்பலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, இந்த நில விற்பனையிலே அறங்காவலர்களும் அத்தோடு கல்வி நிறுவனத்திலே இருந்தவர்களும் முறைகேடுகளைச் செய்திருப்பார்களோ என்றும் அதை பரிசீலிக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். இந்த நிலத்தினுடைய அரசு வேல்யூவேஷன் 15 ஆயிரம் ரூபாய் இருக்கும் போது 7 ஆயிரம் ரூபாய் போட்டு பதிவு செய்யப்பட்டதாகவும் அதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு இருப்பதாகவும் சொன்னார்கள். அப்படியானால் பத்திரப் பதிவுத் துறையும் அதற்கு உட்படாமல் இருந்திருக்குமா? ஏனென்றால் பத்திரப் பதிவுத் துறை, நில வேல்யூவேஷனுக்குரிய ஸ்டாம்ப் வாங்காவிட்டால் மீதிப் பணத்தைக் கட்டினால் தான் அவர்கள் பதிவு செய்ய முடியும். அதையும் மீறி ஏதோ நடைபெற்றிருக்கிறது என்பதையுஞ் சேர்த்து, இதையும் அரசு பரிசீலிக்க முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவரவர்களே, அந்த நிலத்தின் விலை 7,000 ரூபாய் அல்ல. 7,000 என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 8,000 ரூபாய்க்குத் தான் பத்திரப் பதிவு ஆகியிருக்கிறது. 15,000 ரூபாய் கைடு லைன் பிரைஸ் என்றாலும் அதைவிடக் குறைத்துப் பதிவு செய்வதாக இருந்தால் வித்தியாசமான தொகைக்கும் சேர்த்து ரெஜிஸ்ட்ரேஷன் பீஸ் செலுத்திவிட்டால் அதைப் பதிவாளர் ஏற்றுக் கொள்வது வழக்கம். ஆகவே என்ன நடந்தது என்று விசாரித்துப் பார்க்கலாம்.

சென்னையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு சிலை.

95—(*வினா எண் 244)—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு சிலை வைக்கும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு. பி. என். வல்லரசு: தலைவரவர்களே, தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் வெங்கலச் சிலையானது சென்னை எழும்பூரில் வைக்கப்பட வேண்டும் என்று அண்ணா தி.மு.க. ஆட்சியிலும், கவர்னர் ஆட்சியிலும் தொடர்ந்து வற்புறுத்தப்பட்டது. இந்த ஆட்சியிலும் முறையீடு செய்யப்பட்டுள்ளது. சிலை பொதுமக்களால் செய்யப்படுகிறது. தேவர் திருமகனார் பெயரில் மாவட்டத்தை உருவாக்கிய தமிழக அரசு அவருடைய சிலையையும் திறக்க வேண்டுமென்ற காரணத் தால், இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். எனவே தேவர் திருமகனார் சிலையை வைக்க சென்னை எழும்பூரில் இடம் ஒதுக்கீடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: தலைவரவர்களே, சிலை பொதுமக்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். எக்மோர் பகுதியிலே ஏதாவது ஒரு இடத்தில் சிலையை நிறுவுவதற்கு அனுமதி வழங்கவேண்டுமென்)



வேண்டுகோளையும் சொல்கிறார்கள். சட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு வருமானால் அந்த வேண்டுகோள் அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, பசும்பொன் தேவர் திருமகனார் பெயரில் ஏதாவது ஒரு பல்கலைக் கழகம் உருவாக்கப்படுமா? அல்லது ஒரு பல்கலைக் கழகத்திற்கு பசும் பொன் தேவர் பல்கலைக்கழகம் என்று பெயர் சூட்டும் உத்தேசம் அரசுக்கு உ டா?

மாண்புமிகு திரு. பொன்முத்துராமலிங்கம்: தலைவரவர்களே, அத்தகைய வேண்டுகோள்களை எல்லாம் முற்றிலும் உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுப்பார்கள்.

திரு. ஆர். சிங்காரம்: தலைவரவர்களே, இங்கே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய சிலை கடந்த காலத்தில் உடைக்கப்பட்டது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாதது. சிலை என்ற சொல் வந்தவுடனே ஊரில் இருக்கிற சிலைகளை எல்லாம் சொல்லக்கூடாது. இது பற்றி ஏற்கெனவே அவையில் விவாதிக்கப்பட்டிருப்பதால் எழுப்ப வேண்டாம்.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவர் திருமகனாருடைய சிலையை அமைப்பதற்கு முறையான வேண்டுகோள் வராவிட்டாலும் கூட தமிழ்நாட்டில் சென்னையில் தேசியத் தலைவர்களுக்கு ஏற்கெனவே கழக ஆட்சியிலும் அதைத் தொடர்ந்து பின் வந்த ஆட்சியிலும் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போன்று அரசாங்கமே முன்வந்து சென்னை கடற்கரையில் ஏதாவது ஒரு அழகிய இடத்தில் தேவர் திருமகனார் சிலையை வைக்க உத்தேசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அண்ணா அவர்களுடைய காலத்தில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது கடற்கரையில் வைக்கப்பட்ட சிலைகளும் அதற்குப் பிறகு வைக்கப்பட்ட சிலைகளும் கூட அரசாங்கத்தின் சார்பிலே வைக்கப்பட்ட சிலைகள் அல்ல. பொது மக்கள் அல்லது நிறுவனங்கள் அல்லது தனியார்கள்—அவர்களுடைய முயற்சியால் வைக்கப்பட்ட சிலைகள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, தனியார் செய்து கொடுக்கின்ற சிலையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடற்கரையில் பல தலைவர்களுடைய சிலைகளை வைத்திருப்பதுபோல் ஏதாவது ஒரு இடத்தை ஒதுக்கி தேவர் திருமகனார் சிலையை வைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே,
ஏற்கெனவே திரு. வல்லரசு கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில்
அளித்திருக்கிறார். முறையான கோரிக்கை வருமானால் முறை
யான இடத்தில் வைக்க முறையாக ஆலோசிக்கப்படும்.

திரு. கே. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, கடந்த ஆட்சிக் காலத்தில் சிலை வைப்பது பற்றி சில
நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருந்தன. அந்த நிபந்தனைகள்
இந்த ஆட்சியிலும் தொடர்ந்து பின்பற்றப்படுமா?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகள் என்றால் கடந்த
ஆட்சியில் என்ன நிபந்தனைகள் என்று மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் விளக்கிச் சொன்னால்தான் அந்த நிபந்தனைகள்
இப்போது அமுலில் இருக்கின்றனவா இல்லையா என்று
விளக்கிட முடியும்.

### வேடசந்தூர் வட்டம் எம். பி. டெக்ஸ்டைல்ஸ் மில் தொழிலாளர்கள் வழக்கு.

95—(*வினா எண். 383) திரு ப. முத்துசாமி: மாண்புமிகு
செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பா ா

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், வேடசந்தூர்
வட்டம் எம். பி. டெக்ஸ்டைல்ஸ் மில்லில் வேலை நீக்கம்
செய்யப்பட்ட தொழிலாளர்களின் வழக்கு நீண்ட காலமாக
தொழில் நீதிமன்றத்தில் நடந்து வருவது அரசின் கவனத்திற்கு
வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இவ்வழக்கை முடித்து தொழிலாளர்
களுக்கு வேலை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ); அந்த
மெ். பி. டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் வேலையிழந்த 14 தொழி
பாளர்கள் நித்து தொழில் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து
ல்காண்டிருக்கிறது. அந்த வழக்கின் முடிவினை எதிர் பார்த்து
ணியை அவர்களுக்கு வழங்குகிற நிலைமை இருக்கிறது
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத்
தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள்
வர்கள் 7, 8 பேர்கள் மட்டுமல்ல. ஆரம்பத்தில் 300-க்கு
மேற்பட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு தொழில்
கோர்ட்டுக்குப் போன பிறகு, நீண்ட இடைவெளி ஆனதால் 9



வருடங்கள் ஆனதால் வேறு வழியில்லாமல், தாக்குப் பிடிக்க
முடியாமல் சிலர் எழுதிக் கொடுத்துவிட்டு கொடுத்ததை
வாங்கிக் கொண்டார்கள். ஆகவே இந்தத் தொழில் கோர்ட்டிலே
இருக்கிற வழக்குகளை விரைவில் முடித்து தொழிலாளர்களுக்குப்
பாதுகாப்பான ஒரு நிலையை ஏற்படுத்திக் கொடுக்க அரசு
முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: பேரவைத்
தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினை நீதிமன்றத்திற்கு அனுப்
பப்படவேண்டும் என்பதில் அரசு முடிவு எடுக்கிறது. அந்தப்
பிரச்சினை நீதிமன்றத்திற்குச் சென்றால் பின்னாலே எடுக்க
வேண்டிய முடிவு நீதிமன்றத்தின் கையிலே தான் இருக்கிறதே
யல்லாமல் அரசிடம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்போது எம்.பி.
டெக்ஸ்டைல்ஸ் மில்லிலே இருக்கிற 7 தொழிலாளர்களுக்கும்
வேலை கொடுப்பதைப் பொறுத்தவரையில் விரைவில் கொடுக்கப்
படுமா அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை நான் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை அரசின்
கவனத்திற்கு வந்த பின்னாலே, உரிய முறையில் உடன் பரிசீலிக்
கப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களுடைய
பிரச்சினை நீதிமன்றத்திற்குச் சென்றால் காலதாமதம் ஆகிறது
என்ற ஒரு பிரச்சினை இங்கே வருகிறது. முதலாளிகள்
தரப்பில் கவுண்டர் பெட்டிஷன் போடுவதிலே காலதாமதப்
படுத்துகிறார்கள். மேலும் நீதிபதிகள் நீண்ட நாட்களுக்கு
நியமிக்கப்படாமலும் காலதாமதம் ஆகிறது. இப்படி வருவ
தற்கு ஆறு ஆண்டுகள் மட்டுமல்ல; 7 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்ற
காரணத்தால் எந்தத் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்
படுகிறார்களோ அவர்கள் உலகத்திலே இருந்தே நீங்கிவிட
வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

இன்னொன்று. அப்படி தீர்ப்பு கொடுக்கப்பட்ட பிறகு அது
தமிழக அரசினுடைய கெசட்டிலே பப்ளிஷ் ஆகவேண்டும்.
அப்படி பப்ளிஷ் ஆன பிறகு ஒரு மாதத்திற்குப் பிறகுதான் அது
அமல்படுத்தப்படவேண்டும் என்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்
கிறது. தீர்ப்பு கிடைத்த பிறகு கூட அரசு பப்ளிஷ் பண்ணு
வதில் அதிகக் காலதாமதம் செய்வதால் பிரச்சினை மேலும்
சிக்கலாகிறது. அதற்கு உதாரணம் கூட கூற முடியும். இவை
களை எல்லாம் கவனத்தில் கொண்டு அரசு நடவடிக்கை
எடுக்குமா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: பேரவைத்
தலைவர் அவர்களே, அரசின் தொடர்பான பணியான நீதிபதி
கள் நியமிப்பதில் உரிய கவனத்தை அரசு எடுத்துக்கொள்ளும்
என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். கெசட்டில் பப்ளிஷ்
பண்ணுவது பற்றிச் சொன்னார்கள். அது உடன் வெளியிடப்பட
வேண்டும் என்பதையும் அரசு கவனத்தில் கொள்ளும் என்று
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே
இதுபோன்ற வழக்குகளில் தொழில் நீதிமன்றங்களிலே காலம்
கடந்து தீர்ப்புகள் வழங்கப்பட்டாலும் கூட அந்தத் தொழிலா
ளர்களை பின்பாக்கி சம்பளத்தோடு வேலைக்கு எடுத்துக்
கொள்ளவேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டாலும் கூட
பின்பாக்கி சம்பளத்தை உரிய காலத்தில் கொடுக்கிற வகையில்
தொழிற்சாலை நிர்வாகத்தினர் அதனை அமலாக்குவது இல்லை.
அதனை ரெவின்யூ இலாக்காவின் மூலம்தான் வசூலிக்க
வேண்டும் என்று சொல்கிறார்கள். எனவே தீர்ப்பு வந்தாலும்
கூட அதன்படி தொழிலாளர்களுக்குக் கிடைப்பதில்லை என்ற
நிலைமை இருக்கிறது. ஆகவே அது நேரடியாகத் தொழிலாளர்
களுக்குக் கிடைக்க இந்த அரசு வகை செய்யுமா என்று நான்
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம். பேரவைத்
தலைவர் அவர்களே, பொதுவான அவர்களுடைய கருத்துக்கு
அரசு கவனம் செலுத்தும் என்று நான் தெரிவித்துக் கொள்
கிறேன். தனித்த ஏதாவது பிரச்சினை பற்றிக் குறிப்பிடுவார்
களேயானால் உரிய முறையில் அந்தத் தனித்த பிரச்சினைக்கு
அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர். வினாக்கள் 97, மற்றும் 98
ஆகியவை மாண்புமிகு ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை
அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்
றன.

(முற்பகல் 9.50)

ஜோலார்பேட்டைக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம்.

99—(*வினா எண்.128) திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா.—

(அ) அம்மலூர் அருகே பாலாற்றில் இருந்து ஜோலார்
பேட்டைக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின்
பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயற்படுத்தப்
படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:
தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஜோலார்பேட்டை
பேரூராட்சிக்கு ரூ.130.255 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கு
வதற்கான திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
தயாரித்துள்ளது. இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிப்பது
பற்றிய குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இங்கே திட்டம் தயாரிப்பதற்கு பரிசீலனையில் உள்ளதாக
அறிவித்திருக்கின்றார்கள். ஆனால் திட்டத்தை எடுத்துக்
கொண்டு, அங்கே கால்வாய்கள் தோண்டப்பட்டு வருகின்றன.
ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாகத் தோண்டப்பட்டு வருகின்றன.
அதை விரைவில் முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க.பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்
கான செலவு, இது ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டமாக உருவாக்கப்
பட்டிருக்கிறது. ஜோலார்பேட்டை மற்றும் நாட்ராம்பள்ளி ஆகிய
இரண்டு இடங்களுக்குமாக இந்த திட்டம் உருவாக்கப்பட்டு
இருக்கிறது. ஜோலார்பேட்டைக்கு 130.255 லட்சம் ரூபாய்களும்
நாட்ராம்பள்ளிக்கு 58.695 லட்சம் ரூபாய்களும் இதற்காக
செலவிடப்படும் என்ற அளவுக்கு செய்யப்பட்டிருக்கிறது. இந்த
செலவில் பாதி செலவினை ஜோலார்பேட்டைக்கு மானியமாகவும்
மீதி தொகையினை ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து
கடனாகவும் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.
ஆகவே இந்த நிதிநிலை எல்லாம் கருத்தில் கொண்டு இப்போது
அது தொடங்கப்பட்டிருக்கிறது. கூடிய விரைவில் அது முடியும்
என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
ஏற்கெனவே 1978 ஆம் ஆண்டு நான் சட்டமன்ற உறுப்பினராக
இருந்தபோது இந்த கேள்வி எழுப்பினேன். ஜோலார்
பேட்டையில் இன்று குடிநீர் இல்லை என்று பிரச்சினை எழுப்பி
அந்த திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இன்றுகூட அந்த
பகுதியிலே தண்ணீர் இல்லாத காரணத்தினால், ரெயில்வேயில்
இருக்கின்ற தண்ணீரை எடுக்கின்றபோது தண்டவாளத்தைத்
தாண்டிப் போகின்ற நிலையில் அங்கே வழக்குகள் பதிவு செய்யப்
படுகின்றன. இதுபோன்ற நிலைமைகள் எல்லாம் போக்குவதற்கு
உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து குடிநீர் வழங்க ஏற்பாடு
செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. தி. ரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பூவிருந்தவல்லி தொகுதியில் அடங்கிய திருநின்றவூர், திருமழிசை போன்ற பகுதிகளில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பல ஆண்டு காலமாக கிடப்பிலே கிடக்கிறது. குடிநீர் பஞ்சம் அதிகமாக இருப்பதால் உடனடியாக அதை நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டையிலே இருந்து இங்கே பைப் போடமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜோலார்பேட்டைக்குத் தொடர்பு இல்லாதவர்கள் கை உயர்த்த வேண்டாம். ஜோலார்பேட்டைக்குத் தொடர்பு உள்ளவர்கள் மட்டும் கையை உயர்த்தினால் வாய்ப்பு அளிக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குடிநீர்ப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குடிநீர்ப் பிரச்சினை எல்லா இடத்திலும்தான் இருக்கிறது. இது ஜோலார்பேட்டை விவகாரம்.

### விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சாரம்.

100—(*வினா எண். 272) திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் உபயோகிக்கும் விவசாயப் பம்பு செட்டுகளுக்கு ஏற்கனவே இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. இதை எல்லா விவசாயிகளுக்கும் நீட்டிக்கும் எண்ணம் இல்லை.

திரு வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே இந்த மின்சாரத்தைப் பயன்படுத்துவதில் இன்றைக்கு வறட்சி தாண்டவமாடுகின்ற இந்த கால கட்டத்திலாவது, சிறு விவசாயி, பெரிய விவசாயி என்று பாராமல், அனைத்து விவசாயிகளுக்கும் சலுகை அளிக்கப்படவேண்டும். சிறிய விவசாயி என்றால் தண்ணீர் அதிகமாகவும், பெரிய விவசாயி என்றால் தண்ணீர்



குறைவாகவும் கிடைக்கவேண்டுமென்பதில்லை. எனவே இந்த வறட்சி நிலை இருக்கின்ற காலத்திலாவது அனைத்து விவசாயிகளுக்கும் இந்த சலுகை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தால் ஒரு சிலர்தான் லாபம் அடைகிறார்கள். ஒரு மின்குதிரை ஓட்டுவதற்கு 75 ரூபாய் என்று வசூல் செய்வதால் பல விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அந்தந்த விவசாயிகள் கேட்கின்ற கோரிக்கையின் அடிப்படையில் மொத்தமாக கட்டுகின்ற விவசாயிகளுக்கு மொத்தமாகவும் யூனிட் கணக்கில் கட்டுகின்ற திட்டத்தைக் கேட்கின்ற விவசாயிகளுக்கு அந்தக் கணக்கிலும் திட்டத்தைச் செயல்படுத்த முடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பது அனைத்து விவசாயிகளுக்கும் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுமா என்பது பற்றியாகும். ஏற்கெனவே மின்சார வாரியத்திற்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதால் 270 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருப்பதால் மறுபடியும் மற்ற விவசாயிகளுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை. ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல குதிரைத் திறன் அடிப்படையில் 75 ரூபாய் கட்ட பிரியப்படுகிறவர்களுக்கு அப்படியும், யூனிட் பிரகாரம் கட்ட பிரியப்படுகிறவர்களுக்கு யூனிட் படியும் வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றித் தனியாக கேட்டால் விளக்கம் அளிக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதே கேள்வியைப்பல முறை கேட்டிருக்கிறேன். இதுகுறித்து ஒன்றும் செய்ய வேண்டாம். ஆனாலும் தண்ணீர் இல்லாத கிணற்றுக்குக் கூட 75 ரூபாய் வசூலிக்கப்படுகிறதே, அது நிறுத்தப்படுமா? ஏற்கெனவே கட்டியிருப்பது திருப்பிக்கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டியதை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் இனிமேல் வேண்டுமானால் ஆய்வு செய்து மின்வாரியத்திற்கு இது சரிப்பட்டு வருமா என்பதைப்பற்றி வேண்டுமானால் ஆய்வு செய்து பிறகு தெரிவிக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் இது வரை இலவச மின்சாரம் கொடுக்கப்பட்டதற்கு இத்தனை கோடி ரூபாய் நஷ்டம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது என்று சொன்னார்கள். ஏற்கெனவே மின்வாரியத்தில் உள்ள நிர்வாக முறைகேடுகளால் நஷ்டத்தில் இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து விவசாயிகள் தொடர்பாக, அவர்கள் நலன் தொடர்பாக இருப்பதால் அதுகுறித்துக் கூடுதலாக கவனம் செலுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடந்த முறைகேடுகளை அகற்ற அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. நிச்சயம் உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியாக இருக்கிற இடங்களிலாவது விவசாயிகளுக்கு அந்தக் காலத்திற்கு மட்டுமாவது இலவச மின்சாரம் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலமோ வறட்சி காலமோ, இப்போது விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவது தவிர வேறு வகையில் இலவசமாக மின்சாரம் யாருக்கும் வழங்குவது சம்பந்தமாக அரசிடம் இப்போது திட்டம் ஏதும் இல்லை.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொடர்ந்து 3 கடந்த ஆண்டுகளாக வறட்சி இருப்பதால் விவசாயம் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் விவசாயிகள் பம்ப் செட்டை பயன்படுத்தவில்லையென்றாலும் கூட மின் கட்டணம் கட்டும் நிலை இருக்கிறது. அதிலும் அவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிற நிலை என்னவென்றால் ஓராண்டு அவர்கள் கட்டவில்லையென்றால் கூட உடனே மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. ஆக, இலவச மின்சாரத்தை இந்த விவசாயிகள் பயன்படுத்த வாய்ப்பில்லை. ஆகவே, இவ்வாறு மின் இணைப்பைத் துண்டிப்பதிலிருந்து விவசாயிகளுக்கு விதி விலக்கு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 9 மாதம் கட்ட முடியாத, ஏற்கெனவே கட்டாததைத் கட்டினால் நிச்சயமாக அவர்களுக்கு மின் இணைப்புத் தரப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. டி. சி. விஜயேந்திரையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இன்டஸ்ட்ரீசுக்கு அவர்கள் பணம் கட்டினால் உடனே கரன்ட் கொடுக்கப்படுவதுபோல விவசாயிகளும் அதற்குத் தகுந்த பணத்தைக் கட்டினால் உடனே அவர்களுக்கும் மின்சாரம் தரப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கருத்து ஆய்வு செய்யப்படும்.

திரு. எ. சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமாதிரி சில தாலுக்காக்களில் ஒதுக்கப்பட்டு, R.E.S. என்று கொடுக்கப்பட்டு மின் இணைப்புத் தரப்பட்டிருக்கிறது. அதிலும் திருமயம் தொகுதியில் அந்தமாதிரி மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் அந்தப் பகுதி மக்களுக்கு எந்தவித நன்மையும் இல்லையென்று பலதரப்பு விவசாயிகளும் கூறுகிறார்கள். அந்தத் திட்டம் எத்தனை ஆண்டுகளுக்கு தொடர்ந்து நீடிக்கும்?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே, அதைப்பரிசீலனை செய்து எஞ்சியிருக்கின்ற, சிறு விவசாயிகள் தவிர பாக்கியிருக்கிறவர்களுக்கும் கொடுப்பதனால் மிகக் குறைந்த அளவுக்கு தான் செலவு ஏற்படும் என்பதையும் கருத்தில் கொண்டு இந்த அரசு எல்லா விவசாயிகளுக்கும் இந்தச் சலுகையை அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் வினா நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 1984ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை வெளியிடும்போது நிதி ஆதாரம் அரசைப் பொறுத்தவரையில் சுமாராக இருந்தது. ஆனால் இப்போது தேர்தல் அறிக்கை வெளியிடும்போது அந்த அளவுக்கு நிதி ஆதாரம் இல்லை. ஆங்காங்கே எப்படி நிலத்தில் வறட்சி இருக்கிறதோ அதைப்போல இங்கு நிதியில் வறட்சி இருக்கிறது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தில் வறட்சி இருப்பதுபோல, நிதியிலும் வறட்சி இருக்கிறதென்று முதல்வரவர்கள் கூறினார்கள். இப்படி வறட்சியான பகுதிகளிலே வாழ்கின்ற விவசாயிகள் பயன்படுத்தாத மின்சாரத்திற்குக் கட்டணம் வசூலிக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், நெல் உற்பத்தி அதிகமாகப் பாதிக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு, ஓடாத மோட்டார்களுக்கு வசூலிக்கின்ற மின் கட்டணத்தை நிறுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய பல்வேறு வினாக்களில் இந்தக் கருத்து எதிரொலிக்கப்பட்டிருக்கிறது,—ஓடாத பம்புசெட்டுகளுக்கு மின் கட்டணம் வசூலிக்கப்படுவதாக, இந்தக் கேள்விகளின் அடிப்படையில், அது குறித்து மின்சார இலாக்காவும், அரசுத் துறை செயலாளர்களும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சையிலும், திருச்சியிலும் காவிரி டெல்டா பகுதிகளில் இருக்கும் நிலங்களுக்கு கிணறு அல்லது பில்டர் பாயின்ட் மூலமாக தண்ணீர் இறைக்கும்போது, ஒரு ஏக்கருக்கு அரை ஹார்ஸ்பவர் விதம் கரன்ட் கொடுக்கப்பட வேண்டுமென்ற விதி இருக்கிறது. அதைத் தளர்த்தி, விவசாயிகளுக்குத் தேவையான ஹார்ஸ்பவர் மின்சார மோட்டார்களுக்கு இணைப்புக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அங்கே நஞ்சை நிலங்களில் வெடிப்பு ஏற்பட்டுள்ள காரணத்தாலும் அங்கே நஞ்சை நிலங்களில் கிடங்கு வெட்டி, வடிகால் ஏற்படுத்தி வாழை, கரும்பு, போன்ற பயிர்களைப் பயிரிடுவதால், 5 ஏக்கருக்கு 3 ஹார்ஸ்பவர் மோட்டாருக்கு மின் இணைப்புத் தந்தால்கூட, தண்ணீர் சென்று பாயவில்லை, எனவே அந்த விதியைத் தளர்த்தி, விவசாயிகள் விரும்பும் அளவுக்கு கரன்ட் தரப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

இராமேஸ்வரம் பகுதியில் மீன் பிடிக்கச் சென்றவர்களை இலங்கை மீனவர்கள் கடத்திச் சென்றுள்ளதாகக் கூறப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். விஜயராகவன் அவர்கள், இராமேஸ்வரம் கடற் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் இருவர் கடந்த ஏப்ரல் 15ஆம் தேதி இலங்கை மீனவர்களால் கடத்திச் செல்லப்பட்டு, தலைமன்னாரில் காவலில் வைக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி ஓர் அறிவிப்பைக் கொடுத்துள்ளார். அது எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஏப்ரல் 15ஆம் தேதி, இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியிலே மீன் பிடித்துக்கொண்டிருந்த, மெகனைஸ்டு போட்டில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழக மீனவர்கள், 5 பேரை இலங்கை மீனவர்கள் பலவந்தமாகக் கடத்திச் சென்று, 2 பேரை அங்கே சிறை வைத்துவிட்டு, 3 பேரை விடுதலை செய்திருக்கிறார்கள். தலைமன்னாரில் இருக்கக்கூடிய Pearls Fisheries Social Development Village Level Organisation என்று சொல்லக்கூடிய மீனவர் அசோசியேஷனில் அவர்கள் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அங்கே டிடெயின் செய்யப்பட்டு, வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தகவல் வந்திருக்கிறது. குறிப்பாக இராமேஸ்வரம் பகுதியிலே, மண்டபம் பகுதியிலே மீன் பிடிப்பதற்கான சூழ்நிலை, நல்ல சூழ்நிலையாக இல்லை. இரண்டு நாடுகளுக்கு இடையிலுள்ள கடலில் மீன் பிடிப்பதில் அடிக்கடி தகராறு வருவதும், இலங்கை அரசின் சார்பில் அங்கே இருக்கக்கூடிய மோட்டார் போட்டில் வரக்கூடியவர்கள் நம்முடைய மீனவர்களைத் தடுப்பது மட்டுமல்லாமல், அங்கேயுள்ள நேவி இருக்கிறதே, அவர்கள்கூட நம்முடைய மீனவர்களை விரட்டுவதும், சுடுவதுமான நிலைமை இருக்கிறது. சுமுகமான நிலைமை கடந்த காலங்களில் ஏற்படவில்லை. இது தொடர்ந்து நடந்துகொண்டு வருகிற நிலையாக இருப்பதால், இதை நீடிக்க விடாமல், அதற்கு நிரந்தரப் பரிகாரம் காண வேண்டும். கடத்திச் செல்லப்பட்ட மீனவர்களை மீட்டு வரவும், இது போன்ற நிலைமைகள் மீண்டும் உருவாகாமல் இருக்கவும் விவாதிக்க இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். விஜயராகவன் அவர்கள் தந்துள்ள இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தின் மீது ஒரு சில விவரங்களைத் தர விரும்புகிறேன்.

இந்த நிகழ்ச்சி, நமக்குத் தரப்பட்டுள்ள தகவல்களின்படி பதிலுக்குப் பதில் என்பதைப்போல் நடந்த சம்பவமாக விவரிக்கப் படுகிறது. கடந்த 6–4–1989 அன்று இலங்கையைச் சேர்ந்த மூஷின் என்னும் மீனவரும் சோம்ஸ்மூர்த்தி என்ற மற்றொரு மீனவரும், இராமேஸ்வரம் கோதண்டராமர் கோயிலுக்குக் கிழக்கே, சுமார் ½ கிலோமீட்டர் தொலைவில் காலை 9–45 மணி அளவில் சந்தேகத்திற்கு இடமான சூழ்நிலையிலே—அவர்கள் இந்தியா வுக்குள் நுழைய எந்த அனுமதியும் இல்லை என்ற காரணம் கூறப் பட்டு—கைது செய்யப்பட்டு, இராமேஸ்வரம் காவல்நிலைய குற்ற எண் 253,254/1989—பிரிவு 14 ஃபாரினர்ஸ் ஆக்ட், 6–ஏ பாஸ் போர்ட் ஆக்ட் ஆகியவற்றின்கீழ் வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகும், அதன் மோட்டாரும் இராமேஸ்வரம் கடல் படையினர் வசம் வைக்கப் பட்டன. இந்த நிகழ்ச்சி நடைபெற்ற பிறகு அதாவது இலங்கை மீனவர்கள் பாஸ்–போர்ட் இல்லாமல் இந்தியப் பகுதிக்குள் வந்தார்கள் என்ற காரணத்தால் கைது செய்யப்பட்டு வைக்கப் பட்ட பிறகு—15–4–1989 அன்று சுமார் 11-45 மணி அளவில் இயந்திரம் பொருத்திய இந்திய நாட்டுப் படகு ஒன்று தனுஷ்கோடி கடற்கரையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தது. அந்தப் படகில் அதன் உரிமையாளரான தாசன் மற்றும் 4 மீனவர்கள் இருந்தார்கள். அப்போது தலைமன்னாரைச் சேர்ந்த மூன்று இலங்கை மீன்பிடி படகுகள் அந்த இந்திய மீன்பிடி படகைத் தலைமன்னாருக்குக் கடத்திச் சென்றன. தலைமன்னாரை அடைந்தவுடன் இந்திய மீன்பிடி படகிலிருந்த போசீஸ் என்ற மீனவரையும் மற்றும் எம். ராஜூ என்ற மீனவரையும் 5 மீன்பிடி வலைகளையும் நிறுத்தி வைத்துக்கொண்டு மீன்பிடி படகினையும் மற்றும் 3 மீனவர்களையும் விடுவித்து அனுப்பி இருக்கிறார்கள். இலங்கையைச் சேர்ந்த 2 பிளாஸ்டிக் படகுகளையும் அவர்கள் நாட்டைச் சேர்ந்த மீனவர்களையும் இந்த கடற்படையினர் 6-ம் தேதி பிடித்து வைத்திருப்பதை விடுவித்தால்தான் இந்த இரண்டு பேர்களையும் விடுவிப்பதாகத் தெரிவிப்பதாக இராமேஸ்வரத்தில் உள்ள மீன்துறை உதவி இயக்குநர் 18–4–1989 அன்று தந்திச் செய்தி மூலமாக நம்முடைய மீன்துறை இயக்குநருக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார். தகவல் கிடைக்கப் பெற்ற உடன் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரை, இந்த இரண்டு இந்திய மீனவர்களையும் விடுவிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கும் படி தந்தி ஒன்றின் மூலம் மீன்துறை இயக்குநர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இராமேஸ்வரம் மாவட்ட ஆட்சித் தலைவரும் இதுபற்றிய தகவலை 19–4–1989 மாலை 5-25 மணிக்குத் தொலை அச்சுச் செய்தி மூலமாக மீன்துறை இயக்குநருக்குத் தெரிவித்துள்ளார்.





இந்தியக் கடற்படை பிடித்து வைத்துள்ளதாகக் கூறப் படும் இலங்கை மீனவர்களைப் பொறுத்தமட்டில் தேவையானால் கப்பல் படையோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற் கொள்ள பொதுத் துறையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. எனவே இந்த இரண்டு சாராரும் இதைச் சிந்தித்துப் பார்த்து, அங்கே இருந்து யாராவது இங்கே வந்து கைது செய்யப்பட்டிருந்தால் அவர்களை விடுவிக்கவும் அதைப்போலவே அங்கே கைது செய்யப் பட்டிருக்கிற மீனவர்களை விடுவிக்கவும் அரசு மேற்கொண்டு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். எனவே அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதை விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தலைவர் அவர்களே தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இதை விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## 3. தகவல் கோரல்.

### (அ) துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைத் துறைமுகத்தின் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டிருப்பாதாக நேற்றைய தினம் துறைமுகப் பொறுப் பாளரால் அறிவிக்கப்பட்டு, இன்றையதினம் பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. சென்னை உட்பட இந்தியாவில் உள்ள அத்தனைத் துறைமுகங்களிலும் ஐந்து அகில இந்திய சம்மேளனங்களுடைய அறைகூவலுக்கிணங்க வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது.

(முற்பகல்–10.10)

அவர்களுடைய ஊதியக் கோரிக்கை சம்பந்தமாக, அந்த வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. ஏற்கெனவே பொதுத் துறை யில் இருக்கிற ஊழியர்களுக்கு வழங்குகிற ஊதிய உயர்வுக்குச் சமமாக—பேரிட்டி—கேட்டு அந்த வேலை நிறுத்தத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். 24ம் தேதி ஒரு பேச்சு வார்த்தை மத்திய தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் நடைபெறும் என்று சொன்னது கூட இன்றைக்கு ரத்து செய்யப்பட்டிருப் பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலை நிறுத்தத்தைச் தடை செய்ய ஒரு புதிய தடைச் சட்டம் கொண்டுவரப்படும் அல்லது ஏற்கெனவே உள்ள இன்றியமையாப் பணிகள் தடைச் சட்டத்தின்கீழ் தடை செய்யப்படும் என்று அங்கே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த ஊழியர்களுக்கு மிரட்டல் விடுத்துள்ள செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. இன்றைக்குக் நெருக்கடி நிலைமை அல்லது அவசர நிலைமை என்பது. stevedore

துறைமுகமே, வேலை நிறுத்தம் செய்கிற தொழிலாளர்களுக்குப் பதிலாக ஒப்பந்தத்தொழிலாளர்களை, அவர்களே கொண்டுவந்து, அந்த வேலை நிறுத்தத்தை உடைக்கிற முயற்சிகளிலே ஈடுபடக் கூடும் என்பதற்கான நிலைமை ஏற்பட்டு இருக்கிற காரணத்தாலே, இந்தப் பிரச்சனையில் ஒரு சுமுகமான தீர்வு ஏற்படுவதற்கு பேச்சு வார்த்தை நடத்தி முடிவு காணுமாறு மத்திய அரசை வலியுறுத்த, மாநில அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்தத் துறைமுக தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் பல்வேறு கட்சி சார்புடைய தொழிற் சங்கங்களும் ஈடுபட்டு இருக்கின்றன. குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தொழிற் சங்கங்கள், தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையிலுள்ள தொழிலாளர்கள், அந்தோணிப் பிள்ளை அவர்களுடைய தலைமையிலுள்ள தொழிலாளர்கள், இப்படி எல்லா கட்சிகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி, அதிலே நல்ல தீர்வு காண வேண்டுமென்பதற்காக இதிலே ஈடுபட்டு இருக்கின்றார்கள். இது குறித்து மைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கின்ற வேண்டுகோளை விடுப்பது நம்முடைய கடமை, ஆனால், இதுபோன்ற நிர்வாக விஷயங்களில் மைய, மாநில அரசுகளுக்கிடையே மோதுதல் ஏற்படக் கூடாது என்ற கருத்தை நான் இன்றல்ல, தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். இருப்பினும் துறைமுகத் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தத்தால் அவசியப் பொருட்களின் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றது என்பதை நாம் உணர்கிறோம். தொழிலாளர்களுடைய குடும்பங்கள் மாத்திரமல்லாமல் பொது மக்களிலே பல்வேறு பிரிவினரும் இன்றைக்கு துன்பத்துக்கு ஆளாகி இருக்கின்றார்கள். கப்பல் போக்குவரத்தில் தடை ஏற்பட்டதன் காரணமாக அந்நியச் செலாவணி வசதி நிலைமையும் மோசமாகக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சட்டம், ஒழுங்கு, அமைதிக்கும் குந்தகம் ஏற்படக் கூடுமோ என்கின்ற அச்சமும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. எனவே பிரதமர், மாண்புமிகு ராஜீவ்காந்தி அவர்கள் இந்தப் பிரச்சினையிலே உடனடியாகத் தலையிட்டு தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்ற ஒன்றைத்தான் நான் இந்த அவையின் மூலமாக, பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்ள இயலும். பிரதமர் அவர்களும் விரைவிலே இதிலே தலையிட்டுத் தீர்வு காண்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

(ஆ) பால் கமிஷன் அறிக்கை தொடர்பாக புலன் விசாரணை முடிவுகள்

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையிலே பால் கமிஷன் அறிக்கையை வைத்து விவாதிக்கும்போது, அதன் அடிப்படையில், அதன்மீது



சி.ஐ.டி. புலன் விசாரணை செய்து, அறிக்கை தர வேண்டுமென்று மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். காலத்தில் உத்திரவிடப்பட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில் சி.ஐ.டி. போலீசார் புலன் விசாரணை செய்தார்களா? செய்து இருந்தால், முடித்து இருந்தால், நடத்தி இருந்தால், அறிக்கை தயாரித்து அரசாங்கத்திற்கு அளித்து இருந்தால், அந்த அறிக்கையை அரசு வெளியிடுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்போது திடீரென்று மின்னல் போலக் கேள்விகளைக் கேட்டால் பதில் அளிக்க இயலாது. இதை ஒரு கேள்வி வடிவத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பி.எச். பாண்டியன் அவர்கள் அனுப்பி இருப்பார்களேயானால், அந்தக் கேள்விக்கான விவரங்களையும் அறிந்து விவரமாகப் பதில் சொல்ல இயலும்.

4. கவன ஈர்ப்பு.

(அ) மாநில நிலவள வங்கிப் பணியாளர்களுடைய சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படுவதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் பணிபுரியும் நிலவள ஊழியர்கள் பெற்று வரும் ஊதியத்தில் 1989ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மாதம் ஒன்றுக்கு தற்போது பெற்று வருகின்ற ஊதியத்தில் 150 பிடித்தம் செய்ய வேண்டுமென கூட்டுறவுப் பதிவாளர் உத்திரவு பிறப்பித்துள்ளார். 1976ஆம் ஆண்டிலிருந்து தவறான கணக்கின்படி கூடுதலாக பஞ்சப்படி வழங்கியதாகக் கூறப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன கொடுத்து இருக்கிறீர்களோ அதை அப்படியே படிக்க வேண்டும்; விளக்கம் அல்ல: இங்கே நான்கு, ஐந்து வரிகள் தான் இருக்கின்றன.

திரு. செ. இராமலிங்கம் : 1976 ஆம் ஆண்டிலிருந்து தவறான கணக்கின்படி கூடுதலாகப் பஞ்சப்படி வழங்கியதாகக் கூறப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள்? அது உங்கள் கையிலே இல்லையா?

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநில நிலவள வங்கி ஊழியர்கள் பெற்று வந்த சம்பளத்தில் ரூ. 150ஐ 1989ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் பிடித்தம் செய்வதால் அவ்வங்கிப் பணியாளர்களிடம் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

விவசாயிகளின் நில அபிவிருத்திக்கு தேவைப்படும் கடனுதவியைச் செய்யும் வகையில், மாநிலத்தில் 181 நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலவள வங்கிகளில் சுமார் 1,645 பணியாளர்கள் பல வகையான பதவிகளில் பணிபுரிந்து வருகிறார்கள். நிலவள வங்கிகளில் நிர்வாகத்தினர்களுக்கும், பணியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், 1982 ஏப்ரல் மாதத்தில் ஒரே சீரான ஊதிய மாற்றம் செய்யப்பட்டது. பிரதம நிலவளவங்கிப் பணியாளர்களுடன் செய்து கொள்ளப்பட்ட இவ்வாறான ஒப்பந்த ஷரத்துக்களின்படி இந்த ஒப்பந்தம் 30-6-85 வரை அமுலில் இருக்க வேண்டும்.

மேற்கண்ட ஒப்பந்தத்தின் கால வரையறை 30-6-85 உடன் முடித்து விட்ட நிலையில் நிலவள வங்கிகளின் பணியாளர்களுக்கும் ஊதிய விகிதம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உள்ளிட்ட பல கோரிக்கைகளை, பணியாளர் சங்கங்கள் முன் வைத்தன. எனினும் இம்மாதிரியான கோரிக்கைகளை, கீழ்க்குறிப்பிட்டுள்ள காரணங்களால் உடனடியாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

1974-75 ஆண்டிலிருந்து தமிழகத்தில் பெரும் பகுதிகளில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் இயற்கையின் உற்பாதங்களினாலும், கூட்டுறவுக்கடன் பாக்கிகளைச்செலுத்துவதற்குஎதிராகவும், கடன் பாக்கிகள், வட்டி, அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் நடத்தப்பட்ட விவசாயிகளின் ஒன்றுபட்ட போராட்டத்தின் காரணமாக அங்கத்தினர்கள் அளவில் தவணை கடந்த நிலுவை மிகவும் அதிகமாக உள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. வட்டிச் சலுகை போன்ற பலவகையான சலுகைகளை அரசு அவ்வப்போது அறிவித்து வந்துள்ளபோதிலும், நிலவள வங்கிகளில், தவணை கடந்த தொகையின் நிலுவை அதிகரித்ததின் மூலம், இவ்வங்கிகள் தனித்தியங்கும் தன்மையை இழந்துள்ளன. இந்நிலையில் சட்டபூர்வமான இதர செலவுகளுக்கு நிதிகள் ஒதுக்கப்பட்ட பின்னர், இவ்வங்கிகளின் கடன் அளிக்கும் திறன் மிகவும் குறுகியதாகவே உள்ளது. தனது பணியாளர்களுக்கு, தற்காலிக ஊதிய விகிதத்தின் அடிப்படையில் ஏற்படும் செலவினத்தையே சமாளிக்கக்கூடிய நிலையில் பிரதம நிலவள வங்கிகள் இல்லாத சூழ்நிலையையும் வங்கிகளில் தற்காலிக நிதிநிலைமை மற்றும் செயல்பாட்டின் தன்மை ஆகியவற்றையும் கருத்தில் கொண்டால் எத்தகைய ஊதிய மாற்றங்களுக்கும் நிலவள வங்கிகளின் நி-



லைமை இடந்தர வாய்ப்பில்லை. மேற்கண்ட சூழ்நிலையில் கடைசியாக ஏற்பட்ட ஒப்பந்தத்தின் கால வரையறை 30-6-85 உடன் முடிந்துள்ள போதிலும் ஊதிய விகித மாற்றம் செய்யப்படவில்லை. இப்பிரச்சினையை, கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு தேர்தல் நடைபெற்று, பின்னர் வங்கிகளில் நடைமுறை பொறுப்பினை ஏற்கவிருக்கும் நிர்வாகக் குழுவின் முடிவிற்கு விட்டு விடலாம் என அரசு தெரிவித்துள்ளது.

1981-ம் ஆண்டில், அரசு தனது பணியாளர்களுக்கு எப்பொதெல்லாம் அகவிலைப்படி உயர்வு வழங்குகிறதோ அதே தேதியிலிருந்து அரசு விகிதத்தில், அகவிலைப்படி உயர்வினை தனது பணியாளர்களுக்கும் வழங்க, பிரதம நிலவள வங்கிகள் கூட்டுறவுப் பதிவாளரால் அனுமதிக்கப்பட்டன.

மேற்கண்ட அனுமதியின் அடிப்படையில், அரசு தனது பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்கிய போதெல்லாம் நிலவளவங்கிகளும் தனது பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வுகளைத் தொடர்ந்து வழங்கி வந்தன. நான்காவது ஊதியக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் பெரும் பகுதியை அடிப்படைச் சம்பளத்துடன் ஒன்று சேர்த்து 1-10-84 முதல் அரசுப் பணியாளர்களுக்கு புதிய ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டதையடுத்து அதன் பின்னர் அகவிலைப்படி உயர்வு தொகையைக் கணக்கிட கணக்கிடக்கூடிய சதவிகிதத் தொகையைக் குறைத்துக் கணக்கிட அரசு ஆணை பிறப்பித்தது. அகவிலைப்படி உயர்வு விகிதம் 1984 மே மாதம்வரை அரசு கையாண்டு வந்த விகிதத்தைவிட குறைவான ஒன்றாகும். இருந்தபோதிலும் 1981 ஆம் ஆண்டில் பதிவாளரால் நிர்ணயிக்கப்பட்ட அகவிலைப்படி உயர்வு விகிதத்திலேயே தொடர்ந்து, தனது பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வுகளை நிலவள வங்கிகளும் வழங்கி வந்தன.

மத்திய அரசு தனது பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்க கையாண்டு வரும் முறையே பின்பற்றப்படும் வகையில், மாநில அரசும் அகவிலைப்படி உயர்வு வழங்க கையாளப்படும் விகிதாச்சார முறையைமீண்டும் 1987 ஜனவரியில் மாற்றியமைத்தது. அதன்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஜூன் 30 மற்றும் டிசம்பர் 31 ஆகிய இரு தேதிகளில் மட்டில் விலைவாசி உயர்வுப்புள்ளி விபர நிலையைக்கணக்கில்கொண்டு அகவிலைப்படி உயர்வு வழங்க அரசு தீர்மானித்தது. ஊதிய விகிதம் மாற்றம் செய்யப்படாத நிலையில் பெரும்பாலான நிலவள வங்கிகளில் பணியாளர்கள் அரசுப் பணியாளர்களுக்கு இணையாக அதிக விகிதாசார அகவிலைப்படி பெற்று வந்தனர்.

பதிவாளரின் அனுமதியின்றி திருத்திய வழிமுறையைப் பின்பற்றி அகவிலைப்படி வழங்கிய நிலவள வங்கிகளின் தன்னிச்சையான செய்கையானது தவறானதாகும். இச்சூழ்நிலையின் பின்னணியில்தான் அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று 1981-ம்ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டபடி (அதாவது

அடிப்படை சம்பளத்துடன் அகவிலைப்படியை ஒருங்கிணைக் காமல்) அகவிலைப்படி உயர்வு வழங்குவதை முறைப்படுத்தி, அதனடிப்படையில் ஜூலை 86 முதல் அதிகமாகக் கொடுக்கப் பட்டுள்ள அகவிலைப்படித் தொகையை நிலவள வங்கிப் பணி யாளர்களின் ஊதியத்திலிருந்து அவர்களுக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தாத வகையில், சுலபமான தவணைகளில் பிடித்தம் செய்யும்படி, 1989 பிப்ரவரி மாதத்தில் நிலவள வங்கிகளுக்குப் பதிவாளரால் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இருந்தபோதிலும் ஒப்பந்தக் காலம் முடிவடைந்தபின்னர் ஊதிய விகித மாற்றம் செய்யப்படாத நிலையில், நிலவளவங்கி களில் பணியாளர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டமான நிலைமையைக் கருத்தில் கொண்டு அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வுகளைக் கணக்கிட முன்னதாக அனுசரிக்கப்பட்ட விகிதாச் சாரத்தின் அடிப்படையில் நிலவள வங்கிகளின் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்கிட அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இருந்தபோதிலும் பிப்ரவரி 89-ல் வழங்கப்பட்ட பதிவாளரின் அறிவுரைகளை அறவே நீக்கி உத்தரவிடும்படி, சென்னை உயர்நீதிமன்றத்தில் பணியாளர் சங்கம் ஒன்று வழக்கு தொடர்ந்துள்ளது. நீதிமன்றம் தமது 9-3-89-ம் தேதிய இடைக்கால உத்தரவில் அதிகப்படியாக வழங்கப்பட்ட அகவிலைப் படி உயர்வுகளை பிடித்தம் செய்வதைத் தற்காலிகமாக 4 வாரத் திற்கு நிறுத்தி வைத்து உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள வரையில் நிலவள வங்கிகளின் பணியாளர்களுக்கு, பழைய அகவிலைப்படி உயர்வு தொகைக்கும் தற்பொழுது பெறும் புதிய விகித உயர்வுத் தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகையில் 40 சதவிகிதம் தொகை வழங்கப்பட்டு வரப்பட வேண்டுமெனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேற்கண்ட நீதிமன்ற உத்தரவின்படி முந்தின விகிதாச்சாரப்படி கணக்கிடப்பட்ட ஒவ்வொரு அகவிலைப்படி உயர்வுத் தொகையுடன் நீதிமன்ற ஆணைப்படி வழங்கப்பட வேண்டிய 40 சதவிகித வித்தியாசத் தொகையையும் சேர்த்து 89 மார்ச் மாதம் முதல், மேற்கொண்டு உயர் நீதிமன்ற ஆணை பிறப்பிக்கப்படும் வரை அகவிலைப்படி வழங்குமாறு பதிவாளரால் நிலவள வங்கிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் நீதி மன்ற உத்தரவினை நடைமுறைப்படுத்துகையில் அகவிலைப்படித் தொகையில் குறைவு ஏற்பட்டுள்ளது. தங்களது அகவிலைப்படித் தொகையில் குறைவு ஏற்பட்டுள்ளது என்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, 89 மார்ச் மாத ஊதியத்தைப் பெற சில நிலவள வங்கிகளின் பணியாளர்கள் மறுத்துள்ளனர்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் பசுமைப் புரட்சிக்கான திட்டங்கள் கலைஞர் அவர் களின் ஆட்சிக் காலத்தில்தான் முடுக்கி விடப்பட்டன அதில் குறிப்பிடத்தக்கதோர் பணியாற்றிய பெருமை நிலவள வங்கி



களையே சாரும். காவிரி நீர் பொய்த்துவிட்ட நிலையிலும் எங்கெல்லாம் பசுமையினைப் பார்க்கிறோமோ அங்கெல்லாம் நிலவள வங்கிகளின் நிலையான பணி நிறைந்திருப்பதை நாம் கண்கூடாகக் காணலாம். நில அடமான வங்கியாக இருந்ததை, நிலவள வங்கியாக மாற்றியதோடு அல்லாமல், ஒன்றியத்திற்கு ஒரு வங்கி என உருவானதும்... ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு தவறான முன் உதாரணமாக அமைந்து விடும். ஒரு வினாதான் கேட்கலாம். இப்படி ஒவ்வொருவரும் கவன ஈர்ப்பிலே சொற்பொழிவு ஆற்றினால் கவன ஈர்ப்பையே எடுக்க முடியாமல் போய்விடும்.

திரு செ. இராமலிங்கம் : கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் தான் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. தற்போது உயர்நீதிமன்றத் தின் ஆணைப்படி இந்தப் பிடித்தம் செய்யப்படுவதாக இந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்தின் பணி யாளர்கள் சங்கம் மேல் முறையீடு செய்திருக்கிறதா? இன்னொன்று, தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவு நிலவள வங்கிகளுக்கு நிர்வாகக் குழு வந்ததற்குப் பிறகு இந்த ஆணையை அமல்படுத்தலாம் என முந்தைய அரசு தீர்மானித்து, அந்த உத்தரவை வழங்கியிருந்தது. இந்த ஆட்சிக்கு ஒரு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்தோடு இந்தப் புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, உடனடியாக இந்த உத்தரவை நிறுத்தி வைத்து, மீண்டும் நிலவள வங்கிகளுக்கு நிர்வாகக் குழு தேர்ந் தெடுக்கப்பட்டதற்குப் பிறகு இந்த ஊதியப் பிடித்தத்தைச் செய்யலாமா அல்லது அதுபற்றிப் பரிசீலிக்க அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்று நான்கு கேள்விகள் இருக்குமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, நிலவள வங்கி ஊழியர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்பது தான் இந்த அரசாங்கத்தினுடைய எண்ணம். ஆனால், இதற்கு முன்பு இருந்த ஆட்சியில் அந்த நிலவள வங்கிகளெல்லாம் செயல்பட முடியாத அளவிற்கு, தனுடைய நிர்வாகம் முடங்கி யிருந்த காரணத்தினாலும், 71.12 கோடி ரூபாய் வசூல் செய்ய வேண்டிய அந்த வங்கி 6.38 கோடி மட்டும் 1988 ஜூன் 30 ஆம் தேதி வரையிலே வசூல் செய்த காரணத்தாலும், அதைப்போலவே அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற அந்த டீயர்னெஸ் அலவன்ஸ் எல்லாம் பதிவாளருடைய முன் அனுமதியின்றி அந்த நிலவள வங்கிகளே வழங்கி வந்த காரணத்தினாலும், அந்த வங்கிகளுடைய நிலை மோசமாகி வேறு வழி இல்லாத காரணத் தாலே இப்படிப்பட்ட ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இருந்தாலும்கூட, ஊழியர்களுடைய கோரிக்கையை இந்த அரசாங்கம் பரிசீலிப்பதற்கு முன்னாலேயே பணியாளர் சங்கம் ஒன்று உயர்நீதிமன்றத்திலே 9-3-89 ஆம் நாளன்று ஒரு வழக்கு தொடர்ந்து, அந்த வழக்கின்மீது உயர்நீதி மன்றம், பழைய அகவிலைப்படி உயர்வு தொகைக்கும் தற்பொழுது பெறும் புதிய விகித உயர்வுத் தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகையில் 40 சதவிகிதம் தொகை வழங்கப்பட்டு வரவேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. அந்தத் தீர்ப்பை ஏற்று இந்த அரசாங்கம் அமல்படுத்தி வருகிறது. அந்தச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் முறைப்படி அரசாங்கத்தை அணுகுவார்களேயானால் அவர்களுடைய அந்த நியாயமான பிரச்சினையைப் பரிவோடு இந்த அரசாங்கம் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் சொல்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, இதுகுறித்து ஊழியர்களுக்கும், பதிவாளருக்கும் 1985 ஆம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் புதிய விகித மாற்றம் செய்யப்படாத காரணத்தினால் நிலவள வங்கிகளில் பணியாளர்களுக்கு ஏற்படக்கூடிய அந்தக் கஷ்டமான நிலைமையைக் கவனத்திலே கொண்டு, அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வுகளைக் கணக்கிடுவதற்கு முன்னதாக அனுமதிக்கப்பட்ட விகிதாச்சாரத்தில் நிலவள வங்கிகளின் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்க அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசாங்கம் கொடுக்கிற அகவிலைப்படி போல நிலவள வங்கி ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுமா என்று கேட்டால் இப்போது உள்ள நிதிநிலையில் அதைக் கொடுக்க இயலாது. இருந்தாலும்கூட மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், கூட்டுறவுத் துறையினுடைய பதிவாளரும் சேர்ந்து அவ்வப்போது இந்த விகிதத்தை மாற்றியமைக்கிறார்கள். அதன்படி 1985-ம் ஆண்டிற்குப் பிறகு மாற்றியமைக்கப்படாவிட்டாலும்கூட இப்போது புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் சங்கத்தினுடைய பணியாளர்கள் பதிவாளரோடு கலந்து பேசி அந்த முடிவிற்கும் வரமுடியாமல் போகுமானால் அரசாங்கம் அதிலே தலையிட்டு நல்ல முடிவை ஏற்படுத்தித் தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



(ஆ) திண்டுக்கல் மருத்துவமனையில் போதுமான இடவசதி படுக்கை வசதிகள் இல்லாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் எஸ். ஏ. தங்கராஜன், என். பழனிவேல் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, காயிதேமில்லத் மாவட்டத்தின் தலைநகரமான திண்டுக்கல் அரசினர் மருத்துவமனையில் இடவசதி இன்றி, மாவட்ட மக்கள் மற்றும் மாவட்டம் முழுவதும் இருந்து வரும் வியாதியஸ்தர்கள் படுக்கை வசதி, போதிய இடவசதி இன்றி மாவட்ட மக்கள் அவதிப்படுவதால் மருத்துவமனையைச் சுற்றி போதிய காலி மனைகள் இருந்து வருவதை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏற்கனவே பயிற்சி உள்ள உறுப்பினர்தானே? அங்கே என்ன இருக்கிறதோ அதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, நான் அதைத்தான் படிக்கிறேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, என்னிடம் கொடுத்தது ஒன்று, உங்களிடம் இருப்பது ஒன்று. உங்கள் சார்பில் நானே படிக்கட்டுமா? ''திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் போதுமான இடவசதி, படுக்கை வசதி இல்லாதது குறித்து'' அமைச்சரின் கவனத்திற்கு மாண்புமிகு திரு. என். பழனிவேல் கொண்டு வருகிறார். அமைச்சர் அவர்கள் விடை அளிக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

அண்ணா மாவட்டம், திண்டுக்கல் அரசினர் தலைமை மருத்துவமனையின் அருகே 3½ ஏக்கர் காலி நிலம் உள்ளது. தற்சமயம் அந்த நிலம் ''யூனியன் கிளப்'' வசம் உள்ளது. ''யூனியன் கிளப்பின்'' தற்போதைய உறுப்பினர்கள் அந்த நிலம் யூனியன் கிளப்பின் பிரத்யேக பயனுக்குத் தேவைப்படும் அளவு போக மீதமுள்ள பகுதி நிலத்தை அரசு மருத்துவமனை உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று கூறியுள்ளார்கள்.

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

2. அண்ணா மாவட்ட மருத்துவ அலுவலர் பத்தி ஒன்றில் கூறப்பட்டுள்ள நிலம் ''புறம்போக்கு நிலம்'' என்றும், பிற்காலத்தில் அதிக பிரிவுகள் இம்மருத்துவ மனையில் தோற்றுவிக்க இருப்பதால் மேற்கண்ட புறம்போக்கு நிலத்தின் நில உரிமையை அரசு மருத்துவமனைக்கு மாற்றம் செய்ய மருத்துவப்பணி மற்றும் குடும்பநல இயக்குநரே நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அந்த நிலத்தின் உரிமையினை அரசுக்கு மாற்றப்படும் வரை, இந்த மருத்துவ மனையினை விஸ்தரிக்க இயலாது.

3. இதுகுறித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவரையும், கொடைக்கானல் கோட்ட வளர்ச்சி அலுவலரையும், மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குநர் கேட்டுள்ளார்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம் என்று பிரிந்து இன்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. அப்படியிருந்தும் இன்றைக்கு அந்த மாவட்ட தலைநகரில் உள்ள மருத்துவமனையில் எந்தவிதமான வசதிகளும் கிடையாது. ஏற்கனவே தாலுக்கா மருத்துவமனையாக இருந்தபோது என்னென்ன வசதிகள் இருந்தனவோ அதே வசதிகள் தான் இன்றைக்கும் உள்ளன, மாவட்டம் பிரிந்ததற்குப் பிறகு இன்றைக்குக் கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் எதுவும் இதுவரையில் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது. இதனால் அந்த மாவட்டத்திலிருந்து வருகிற நோயாளிகள் மதுரைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த மருத்துவ மனையை மேலும் விரிவுபடுத்தி அங்கே வரக்கூடிய நோயாளிகளுக்குத் தங்குவதற்கு கட்டட வசதிகளை அபிவிருத்தி செய்து மற்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அரசினர் தலைமை மருத்துவமனை அருகே 3½ ஏக்கர் நிலம் காலியாக உள்ளது. தற்சமயம் அந்த நிலம் யூனியன் கிளப் வசம் உள்ளது யூனியன் கிளப்பினுடைய தற்போதைய உறுப்பினர்கள் அந்த நிலம் யூனியன் கிளப்பின் பிரத்யேகப் பயன்களுக்கு தேவைப்படும் அளவு போக மீதியுள்ள பகுதி நிலத்தை அரசு மருத்துமனை உபயோகத்திற்குக் கொடுப்பதாக கூறி இருக்கிறார்கள். அண்ணா மாவட்டம் மருத்துவ அலுவலர் இதுபற்றிக் குறிப்பிடுகிற போது, 'இந்த நிலம் புறம்போக்கு நிலம் என்றும், பிற்காலத்தில் அதிகப் பிரிவுகள் இந்த மருந்துமனையில் தோற்றுவிக்க இருப்பதால் மேற்கண்ட புறம்போக்கு நிலத்தின் நில உரிமையை அரசு மருத்துவமனைக்கு மாற்றம் செய்ய மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குநர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அந்த நிலத்தின் உரிமை அரசுக்கு மாற்றப்படும் வரையில் அந்த மருத்துவமனையை விஸ்தரிக்க இயலாது.' ஆகவே அவர் அந்த நிலத்தைப் பெற்று உடனடியாக அதை விஸ்தரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையை ஒட்டியே 3½ ஏக்கர் நிலம் இருப்பதாக இங்கே குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். அந்த மருத்துவமனையை ஒட்டியிருக்கிற அந்த நிலத்தை உடனடியாக எடுத்து அந்த மருத்துவமனையை விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலும் இந்த அறிக்கையில் கொடைக்கானல் கோட்ட வளர்ச்சி அலுவலகத்திலிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இது எனக்கு விளங்கவில்லை. கொடைக்கானல் கோட்ட வளர்ச்சி அலுவலகத்திற்கும், திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அதையும் விளக்க வேண்டும். இந்த நிலத்தைக் கையகப்படுத்துவதிலே— அது புறம்போக்கு நிலம், ஆகவே புறம்போக்கு நிலத்தை அரசு எடுப்பதில் சிக்கல் இருக்காது என்று கருதுகிறேன். அதை உடனடியாகச் செய்து கொடுப்பார்களா? அதற்கு உத்தரவிடுவார்களா? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன்: தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனை கட்டி 100 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. திண்டுக்கல் தாலுக்கா வட்டத்திற்கு என்று இருந்த மருத்துவமனை இப்போது மாவட்ட மருத்துவமனையாக மாறிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, ஒரு பகுதி நிலத்தைதான்அவர்கள் குறிப்பிட்டார்கள். வடபகுதியில் இருக்கும் படியான 3½ ஏக்கர் நிலம், மேற்குப் பகுதியல் 2 ஏக்கர் நிலம் அரசுப் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அங்கே கழிவுநீர் தேங்கி நாற்றம் வீசுகின்றது. மருத்துவமனைக்கும் ஆபத்தான நிலை இதனால் இருப்பதால், அதையும் அரசு கவனத்தில் கொண்டு, இந்த மருத்துவமனையை விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இயக்குநர் அவர்கள் இதுசம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கூறுவதை, திட்டவட்டமாக அமைச்சர் அவர்கள் கூற முடியுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, சபையில் வைக்கின்ற பதில் திட்டவட்டமான பதில்தான். அதிலே உறுப்பினருக்கு எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு ஏதேனும் சந்தேகம் இருக்கிறதா?

5. மானியக் கோரிக்கைகள், 1989–90, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 27—கதர்த் தொழில்.

*மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 27—கதர்த்தொழில் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,70,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''To discuss the need to open Khadi Sales Centres at various residential places by the Khadi Board', நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 27—கதர்த்தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,70,18,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர்த் தொழில் கூடங்களில் பணிபுரியும் தொழி லாளர்களுக்குக் கூலி உயர்வும், சலுகைகளும் வழங்கப்பட வேண்டிய தேவை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,70,18,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன்: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,70,18,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண். 30—சமூக நலன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,08,19,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''



திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுக் கூடங்களுக்கு சொந்தக் கட்டிடங்களைக் கட்ட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,08,19,91,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன்: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,08,19,91,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(இ) கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 23,31,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

THIRU. M. SUNDARADAS; Mr. Speaker Sir, to discuss the need to give priority to the rural population for employment in rural industries "I move that the sum of Rs. 23,31,44,000 under DemandNo. 48 Rural Industries be reduced by Rs. 100".

திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் ஆதிதிராவிட அருந்ததியினர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க ஊராட்சி மையங் களில் பாதணி தயாரிக்கும் தொழிற்கூடம் உருவாக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கைஎண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,31,44,000–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன்: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,31,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திருமதி. சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,40,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,40,95,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர்த் தொழில், சமூக நலன் மற்றும் ஊரகத் தொழில்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் அவை முன் வைக்கப்பட்டிருக்கின்றன. *இவைகளை நான் படித்ததாக அவைக் குறிப்பிலே ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கின்ற ஆலோசனைகள், கருத்துக்களின் அடிப் படையில், என்னுடைய பதில் உரையை இறுதியாக நான் அவைக்கு அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* குறிப்புகள் இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.



(முற்பகல் 10-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. நேற்றைக்கு சட்டமன்றம் 11 மணி நேரம், 20 மணித் துளிகள் நடைபெற்றது அனைவருக்கும் தெரியும். எனவே பேசுகின்ற உறுப்பினர்கள் குறைந்த நேரம் எடுத்துக் கொண்டால் அதிகப் பேருக்கு வாய்ப்பு அளிக்கலாம் என்பதைப் பொது நல நோக்கோடு உணர்ந்து தங்களுடைய பேச்சுக்களை சொற்பொழிவாக இல்லாமல், சொற்பிழிவாக வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. வெ. இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கண்ட அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக, தமிழகத்தின் கோடானகோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் மாண்புமிகு கழகப் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், எங்களுக்கு வழி காட்டியாக விளங்கக்கூடிய மதிப்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், எங்களை இயக்கிக் கொண்டிருக்கக் கூடிய கொறடா அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்து இம்மன்றத் திற்கு அனுப்பி வைத்த எனது குளத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கி என்னுடைய கன்னிப் பேச்சைத் துவக்குகின்றேன்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்ட கோரிக்கை எண்கள் 27, 30, 48 மற்றும் 57 தொடர் பாக எனது ஒருசில கருத்துக்களைக் கூற விழைகிறேன். இன்றைய தினம் கதர்த்துறை மூலம் உற்பத்தி செய்யும் ஆடைகள் மற்றும் ஏனைய பொருட்கள் மிகவும் எளிமையாக இருந்த போதிலும் அவற்றை எல்லாம் உற்பத்தி செய்யக் கூடிய அந்தத் தொழி லாளர்கள் மிகவும் ஏழ்மையாக இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த இந்த அரசு உறுதுணையாக இருக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில் படித்த வேலை இல்லாத ஆண் களும், பெண்களும் அதிகம் இருக்கிறார்கள். கதர் கிராமத் தொழில்களின் மூலம் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற சோப் தயாரித்தல், சாக் பீஸ், தீப்பெட்டி தயாரித்தல் மற்றும் நூல் நெசவு, ராட்டை மூலம் நூல்நூற்றல் போன்ற இதர வேலை வாய்ப்பு நல்கக் கூடிய திட்டங்களை அரசு தொடர்ந்து செயலாற்றி கிராமப்புறங்களில் வேலை இல்லாதவர்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய இத்திட்டத்தைத் தொடர்ந்து செயலாற்ற வேண்டுமாய கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த காலணித் திட்டத் தினால் எத்தனையோ கிராமப்புற காலணி தைப்பவர்கள் பயன் பெற்றுக் கொண்டிருந்தார்கள். அத்தகைய திட்டத்தை தொடர்ந்து செயலாற்றி, மீண்டும் அது ஏழை எளிய மக்களுடைய குழந்தைச் செல்வங்களுக்குச் சென்றடைந்து பயனடைகின்ற வகையில் தொடர்ந்து செயலாற்ற வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மகாத்மா காந்தியடிகள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் போற்றிப் புகழ்ந்த இந்தக் கதர்த்துறையைப் பெரிய அளவில் விரிவுபடுத்தினால் இதில் கிடைக்கக் கூடிய நல்ல பல பொருட்களை மக்கள் பெற்று பயனடைய ஏதுவாக இருக்கும். சமூக நலத்துறையின் கீழ் பெண்களுக்கும், உடல் ஊனமுற்றோர்களுக்கும் அனாதைகளுக்கும் நல்ல பல திட்டங்களை நாம் செயல்படுத்தி வருகின்றபோது, அவர்களுக்குத் தெரிந்த தொழில்கள் மூலம் பயிற்சி கொடுத்து, அவர்கள் பெற்ற பயிற்சிக்குப் பின் அரசு கடனுதவி கொடுத்து, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமாய் கேட்டுகொள்கிறேன்

ஒன்றியங்களின் மூலமாக கிராமப்புறங்களுல் ஐ.ஆர்.டி.பி. ட்ரைசம் மூலமாக படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு நல்கும் வகையில், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, மெக்கானிட்டம், வெல்டிங், பாய் நெய்தல் போன்றவைகளில் பயிற்சி அளிக்கப் படுகின்றது. இந்தப் பயிற்சிக்குப் பிறகும் அவர்கள் தொடர்ந்து இந்த அரசு கடன் உதவி மூலம் அவர்களுடைய பயிற்சியின்மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள அரசு கடன் உதவி வழங்க முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எல்லா ஊரக வளர்ச்சித் திட்டங்களிலும் சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களைக் கலந்தாலோசிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். இது தொடர்பான எல்லா குழுக்களிலும் சட்ட மன்ற உறுப்பினர் கலந்துகொள்ள வாய்ப்பு அளித்தால் தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி என்கிற முறையில் மக்களது கோரிக்கைகளை ஏற்று, அதைச் செயல்படுத்த ஏதுவாக இருக்கும் என்ற கருத்தையும் இந்த நேரத்தில் முன்வைக்கிறேன். எனது தொகுதியில் பெரும்பாலும் கடலை, பருத்தி போன்ற பயிர்களை அதிகமாகச் சாகுபடிசெய்கிறார்கள். அங்கே கிடைக்கக் கூடிய மூலதனப் பொருள்களை வைத்துக் கொண்டு அங்கே ஒரு நூற்பு ஆலையும், கடலை பருப்பு அதிகமாகக் கிடைக்கக்கூடிய பகுதியாக இருப்பதனால் கடலை எண்ணெய் தயாரிக்கக்கூடிய ஒரு தொழிற்சாலையும் அமைத்துக் கொடுத்தால் அங்கேயிருக்கக் கூடிய ஏழை கிராமப்புற மக்களுக்கும் ஆதிதிராவிட மக்களுக்கும் வேலை வாய்ப்பு நல்கி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதையும் இந்த நல்ல தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை பெறும்முதியோர்கள், ஆதர வற்ற அநாதைகள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், உடல் ஊனம் உற்றோர், விவசாயக் கூலிகள் இவர் களுக்கு தற்போது வழங்கப்படக் கூடிய உதவித் தொகை ரூ. 35–ஐ அரசு சுமார் 75–லிருந்து 100 ரூபாய் வரையில் உயர்த்தி கொடுத்தால் தற்போதுள்ள விலைவாசிஉயர்வினாலும், வறட்சியினாலும் கஷ்டப்படுகிற அவர்களுக்கு அது பெரிதும்உதவி யாக இருக்கும். மேலும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய வயது வரம்பைத் தளர்த்தி, மனுச் செய்கிறவர்கள் அனைவருக்கும்—



அதாவது தாலுக்காவில் ஒரு வருடத்திற்கு இவ்வளவுதான் என்று குறியீடு வைத்து நிர்ணயிக்கிறார்கள். குறியீடு என்று சொன்னால் 50, 100 என்று குறியீடு இருந்தால், 200, 300 மனுக்கள் வருகின்றன. அவைகளையெல்லாம் பரிசிலனை செய்து தகுதியின் அடிப்படையில் மனு கொடுக்கக்கூடிய எல்லோருக்கும்–இந்தத் திட்டம் போய்ச் சேர வேண்டுமாய் கேட்டுக் கொண்டு, அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் பசியின் கொடுமையை நன்கு உணர்ந்தவர்கள். அவர்கள் இளம் வயதில் பசியின் கொடுமையால் துன்புற்றிருந்த காரணத்தால், அந்த நிலை இந்த நாட்டு ஏழை மக்களுக்கு வந்து விடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தோடு சத்துணவுத் திட்டத்தை ஏற்படுத்தினார்கள். இத்திட்டத்தைத் தொடர்ந்து நமது அரசு நன்கு நிர்வகித்து, சத்துணவுத் திட்டத்தைத் தொடர்ந்து அளிக்கும் என்று நம்புகிறேன்.

மேலும் 85 லட்சம் சிறார்களுக்கு உணவு அளிக்கக்கூடிய சுமார் 2 லட்சத்திற்கு மேற்பட்ட சத்துணவு அமைப்பாளர்கள், மற்றும் பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் பகுதி நேரப் பணியாளர்களாகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அதில் ஆண்களும், பெண்களும் இரு பாலரும் பணியாற்றி னாலும் பெரும்பாலும் பெண்கள் அதிகமாகப் பணியாற்று கிறார்கள். அவர்களை நிரந்தர பகுதி நேர அரசு ஊழியர்கள் என்று அறிவித்திருக்கக்கூடிய இந்த அரசு, நிரந்தர முழு நேர அரசு ஊழியர்கள் என்று அறிவித்து அவர்களுக்கு செகண்டரி கிரேட் ஆசிரியர் அந்தஸ்தை அளிப்பதன் மூலமாக அவர்களுக்குப் பணிப் பாதுகாப்புக் கொடுத்து, சம்பளத்தை உயர்த்தி அவர் களுடைய வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். சத்துணவுக் கூடங்களில் பெரும்பாலான பகுதிகளில் இருப்பு வைப்பதற்கு இன்னும் ஸ்டாக் ரூம் கட்டிக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அவைகளுக்கு உடனடியாக ஸ்டாக் ரூம் கட்டிக் கொடுத்தால் அவர்கள் அங்கே வைக்கக் கூடிய பொருள்கள் பாதுகாப்பாகவும், திருடு போகாமலும் இருப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தில் பெரும்பாலும் பட்டதாரிகள் அதிகமாக இருப்பதனால், அவர்களுடைய வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கக்கூடிய பதிவு எண் ரத்து செய்யப்பட்டு, அவர்கள் மீண்டும் அவர்களுடைய தகுதிக்கு ஏற்றாற்போல் வேலைக்குச் செல்ல வழி இல்லாமல் இருக்கிறது. ஆகவே அந்த வேலை வாய்ப்புப் பதிவு எண்களை ரத்து செய்வதை நிறுத்தி அவர்கள் மீண்டும், அவர்களுடைய தகுதிக்கு தகுந்தார்போல் வேலைக்குச் செல்வதற்கு ஏதுவான வழி வகையைச் செய்ய வேண்டும். இல்லையேல் இருக்கிற பணிகளிலேயே நிரந்தரம் செய்து அவர்களுக்கு மேலும் ஊதிய உயர்வு கொடுத்து அவர்

களின் தரத்தை மேம்படுத்த வேண்டுமாய் நானும் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்தவன் என்ற வகையில் இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவுக் கூடங்களிலே சத்துணவு உண்ணக்கூடிய குழந்தை களுக்கு முட்டை வழங்கும் திட்டத்தை நாங்கள் வரவேற்பதுடன் முடிந்தால் அந்த முட்டையுடன் பாலும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

முட்டையும் பாலும் சேர்த்துக் கொடுக்கின்ற அந்த வேளை யில் அவர்களுக்கு அலுமினியத் தட்டு கொடுக்க வேண்டுமென்று இங்கே உறுப்பினர்கள் எல்லாம் கேட்டுக் கொண்டார்கள். அலுமினியத் தட்டு கொடுக்கும்போது அங்கே பயிலக் கூடிய குழந்தைகள் அதில் யார் யாரோ சாப்பிட்டது என்று கூறி, அதை யாரும் பயன்படுத்த முன்வர மாட்டேன் என்கிறார்கள்.

(முற்பகல் 10-40)

ஆகவே அவர்களுக்கு வாழை இலை வழங்கி சத்துணவு வழங்க வேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். கிராமத் தொழில், குடிசைத் தொழில் ஆகியவைகளைச் சீரான நிலைக்கு கொண்டு வந்து மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய புதிய 20 அம்ச திட்டத்தின் மூலம் தொழில் தொடங்குவதற்கு, மாவட்ட தொழில்மையத்தின் மூலமாக மனுச் செய்துள்ளவர் களுக்கு அவர்களது மனுவைப் பரிசீலனை செய்து உடனடியாக அவர்களுக்கு அரசு கடன் வழங்கி உதவி செய்ய வேண்டும். அவர்கள் சுய வேலைவாய்ப்பை தேடி அலைகிறார்கள். அதற்கு உடனடியாக அவர்களுடைய தொழில் ஆர்வத்தை ஊக்குவிக்கின்ற முறையிலே அவர்களுக்கு உதவ இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே பெரும்பாலும் குடிநீர்ப் பஞ்சம் பரவலாகக் காணப்படுகிறது. என்னுடைய தொகுதி விராலிமலை, குன்னாண்டார்கோயில், அன்னவாசல் ஆகிய மூன்று ஒன்றியங்களை உள்ளடக்கியுள்ளது. அங்கு பெரும்பாலும் ஏரிகள், குளங்கள் அதிகமாக வற்றியிருக் கிறது. குடிநீர் இல்லை. மேலும் நிலத்தடி நீரை நம்பியிருக் கின்ற அவர்களுக்கு நிலத்தடி நீர் இல்லாததால் விவசாயமும் குடிநீரும் பாதிக்கப்படுகிறது. நிலத்தடி நீரை நம்பியிருக்கின்ற அவர்களுக்கு அடிக்கேன் வெட்டி அவர்களது விவசாய, குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குகின்ற அளவிற்கு அரசு மானியத்துடன் கூடிய கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கீரனூர் பகுதியில் குடிநீர் மிகவும் தட்டுப்பாடாக இருப்ப தால் அங்கு திருச்சியிலிருந்து வரக்கூடிய புகைவண்டி மூலமாக காவேரி குடிநீரைக் கொண்டு வந்து அங்கு ஒரு பாதுகாப்புத் தொட்டி கட்டி நிரப்பி அதை லாரி மூலமாக கிராமப் பொது மக்களுக்கு விநியோகம் செய்தால் அங்குள்ள கிராமப் பொது மக்களின் குடிநீர்ப்பஞ்சம் தீரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்,



மேலும் என்னுடைய அன்னவாசல் ஒன்றியத்தில் இலுப்பூர் பேரூராட்சி அருகில் உள்ள கிளிக்குடி வெள்ளாற்றுப் படுகையில் உலக வங்கி உதவியுடன் ஒரு குடிநீர்த்திட்டம் அமைக்க, அதற்குத் தேவையான பைப் எல்லாம் வந்திறங்கி தற்போது அந்த பைப் எல்லாம் வேறு இடத்துக்குப் போய்விட்டது. அங்கு அந்த பைப் அமைப்பதின் மூலமாக குடிநீர் சப்ளை செய்தால் அந்த இலுப்பூர் பகுதி மக்கள் எல்லோரும் பயன் அடைவார்கள். மேலும் அந்தப் பகுதியிலே வெள்ளாற்றுப் படுகையிலிருந்து போரிங் மூலமாக தண்ணீர் எடுத்துவிடுவதால் அங்குள்ள விவசாய பெருமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று அவர்கள் அஞ்சி அந்த இடத்திற்கு தடை வாங்கியுள்ளார்கள் என்று அறிவித்துள்ளார்கள். அங்குள்ள விவசாய பெருமக்கள் பாதிக்காத அளவுக்கு அங்கே கசிவு நீர்க்குட்டையை வெட்டி அவர்களுக்கு வழிவகை செய்தால் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களும் பயன் அடைவார்கள. பெரும்பாலான பகுதிகளில் சாலை வசதி இன்மையால், டஸ் போக்குவரத்து அதிகமாக இல்லாததால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே என்னுடைய தொகுதியில் கீரனூர், இலுப்பூர் ஆகிய பகுதிகளில் ஒரு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக டெப்போ அமைத்து அதன் மூலமாக கிராமப் பகுதிகளுக்கு பேருந்து வசதி இயக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய பகுதியில் விராலிமலை, இலுப்பூர், அன்னவாசல், குன்னாண்டார்கோயில், கீரனூர், நீர்ப்பழனி, கொடும்பாளூர் ஆகிய பகுதிகளில் மருத்துவ மனை இருந்தும் அங்கு போதுமான படுக்கை வசதி இல்லாததால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளுக்கு அரசு படுக்கை விஸ்தரிப்பு மற்ற ஏனைய வசதி களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

குடுமியான்மலையிலே பேரறிஞர் அண்ணா காலத்திலே ஒரு அண்ணா பண்ணை துவக்கப்பட்டது. அங்குள்ள சுற்றுபுறச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அங்கு ஒரு விவசாயப் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வேளாண்மைத் துறையிலே அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்களே, சீக்கிரம் முடியுங்கள்.

திரு. வெ. இராசு: துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி களுக்கு அதிக அதிகாரம் வழங்குகின்ற வகையிலே எங்கும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. உள்ளாட்சித் துறைக்குத்தான் அதிக அதிகாரம் என்று அரசு அறிவித்துள்ளது ஆனால், என்னுடைய குளத்தூர் தொகுதியில்

நடக்கக்கூடிய அரசு விழாவிலே எனக்கு அழைப்பு கொடுப்ப தில்லை, அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே எனக்கு உரிய வாய்ப்பை அளிக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தொகுதியிலே பெரும்பாலும் விவசாயப் பெருங்குடி மக்களும், படித்த வேலையில்லாத பட்டதாரிகளும் அதிகமாக இருப்பதால் அங்கே ஒரு தொழிற்கூடம் அமைத்துக் கொடுக்கும் படி இந்த மாமன்றத்தில் கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன். வணக்கம்.

*திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்தப் பேரவையிலே மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்த மானியக் கோரிக்கைகள் கதர் தொழில் வாரியம் அதேபோல் சமூகநலம், ஊரகத் தொழிற்சாலைகள், இத்தகைய மானியக் கோரிக்கைகளின் மீது, அவற்றை வரவேற்று ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்துக் கூற விரும்பு கிறேன். இன்றையதினம் கதர்த் துறை ஏறத்தாழ நீண்ட நெடுங்காலமாக உருவாகியிருந்தாலும் மற்ற வாரியங்களைப் போல் இது வளர்ச்சி அடையவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கதர் வாரியம் பலவிதமான சலுகைகளைப் பெற்று, மத்தியிலே இருக்கிற கதர் கமிஷனோடு பல மானியங்களைப் பெற்று, அந்தக் கதர் வாரியத்தின் மூலமாக நல்ல பல சிறிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு சட்டத்திலே சில வாய்ப்புகள் இருந்தும், இதற்கு முன்னாலே இருந்த அரசு அத்தகைய ஒரு வளர்ச்சியைக் கண்டதாக எனக்குத் தெரிய வில்லை. ஆகவே, அந்தக் கதர் வாரியத்தின் மூலமாக, குறிப்பாக தமிழ்நாட்டில் வேப்பமரங்கள் அதிமாக இருக்கின்றன. வேப்பமரங்களிலிருந்து எடுக்கப்படுகிற வேப்பங்கொட்டையை எடுத்து, அதை எண்ணெய் ஆக்கி அந்த எண்ணெய், புண்ணாக்கை, கிராம விவசாயிகளுக்கு உரத்திற்காக விற்று விடுவோமானால் ரசாயன உரங்களைப் போடுவதைவிட, பூச்சி மருந்து தெளிப் பதைவிட, பூச்சிக் கொல்லி மருந்துபோல், இதனால் பல பூச்சிகள் கொல்லப்படுகின்றன. உரமும் நன்றாக வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே, விவசாயிகள் குறிப்பாக, மிளகாய், வாழை, கரும்பு போன்றவைகளுக்கு இந்த வேப்பெண்ணெயைப் புண்ணாக்கு கிடைக்காமல் தமிழகத்தில் மிகவும் கஷ்டப்படு கிறார்கள். அடுத்த மாநிலங்களில் இந்தப் புண்ணாக் கிற்கும், வேப்பெண்ணெய்க்கும் அதிகமாக கிராக்கி இருக்கிறது. வேறு மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்தால்கூட, அந்தப் பொருளுக்கு நல்ல இலாபமும் கிட்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக் கின்றேன்.



அதைப்போலவே, விளக்கெண்ணெய் தரும் கொட்டை முத்து தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் மிளகாய்த் தோட்டங் கள் இருக்கிற இடங்களில் எல்லாம், வெற்றிலைக் கொடிக்கால் இருக்கிற இடங்களில் எல்லாம் இருக்கிறது. ஆகவே, விளக் கெண்ணெய் தரும் கொட்டைமுத்துச் செடிகள் அதிகமாக இருக்கின்றன. அந்தக் கொட்டைமுத்து எடுத்து, விளக்கெண்ணெய் உற்பத்தி செய்து, அந்த விளக்கெண்ணெயிலிருந்து மீதப்பட்ட கழிவுப் பொருள்களோடு, 'சிலிக்கேட்' சேர்த்து சோப் செய்வ தற்கும், மற்ற இடங்களிலே மூலிகைகளைத் தயாரிப்பதற்கும், அடுத்த மாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் நல்ல கிராக்கி இருக்கிறது.

அதைப்போலவே, மாங்கொட்டை. அதைத் தயாரித்து, மாங்கொட்டையிலிருந்து எண்ணெய் எடுத்து அமெரிக்க நாட் டிற்கு அனுப்பிவிட்டால் ஒரு கிலோ எண்ணெய், நம்முடைய நாட்டுப் பொருளாதாரக் கணக்குப்படி ரூபாய் 685-க்கு விற்கிறது. ஆகவே, அமெரிக்க நாடுகளில் கிராக்கி இருக்கிற அந்த மாங் கொட்டை எண்ணெயை அந்தக் கதர் வாரியம் மாங் கொட்டையைச் சேகரித்து, அந்தக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கலாம். அத்தகைய முறையிலே வியாபாரத் தன்மையோடு, கதர் வாரியத்திற்காக, பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பொறுப்பேற்று இருக்கிற காரணத்தால் அதை செல்வாம் செய்ய வேண்டும் என்று நான் அவர்களுக்கு ஆலோசனையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே, கதர் வாரியத்திலுள்ள கதர்த் துணிகள், சர்வோதய சங்கத்திலே உற்பத்தியாகிற கதர்த் துணிகளைப் போல் தரமாக இல்லை என்பது மக்கள் மத்தியிலே இருக்கிற ஒரு குறைபாடு. ஆகவே, சர்வோதய சங்கத்தின் மூலமாக உற்பத்தி யாகிற துணிகள் நல்ல அழுத்தமாக வெளிநாட்டிற்குக் கூட ஏற்றுமதி செய்கிற ஒரு துணியாக இருக்கின்றன. ஆனால் கதர் வாரியத்தின் மூலமாக உற்பத்தி பண்ணுகிற பொருள்கள், அந்தத் துணிகள், கைலிகள், துண்டுகள் எல்லாம் அவ்வளவு அழுத்தமாக, தேசவு அழுத்தம் இல்லை என்பது ஒரு குற்றச்சாட்டு தமிழ் நாட்டில் இருக்கிறது. ஆகவே, அந்தக் கதரினுடைய தரத்தை உயர்த்துவதற்கு, சர்வோதயச் சங்கத்திலிருந்து தயாரிக்கிற முறையை கையாண்டு அல்லது அதிலுள்ள பயிற்சி பெற்றவர்களை எல்லாம் அதற்கு அமர்த்தி அந்த அளவிற்கு கதர்த் துணிகளை, பாலியெஸ்டர் துணிகள், கைலிகள், துண்டுகள் போன்றவைகள் எல்லாம் உற்பத்தி செய்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியைப் பெருக்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

அதைப்போலவே, கதர்த் துணிகளுக்கு ரிபேட் அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும். ரிபேட் கொடுப்பதன் மூலமாகத்தான் மற்ற ஜவுளியினுடைய வியாபாரத் தன்மையில் நாம் போட்டி

யிட்டு, அந்தத் துணியை விற்பனை செய்வதற்கு நாம் முன் வர முடியும். அந்த அளவிற்கு ரிபேட்டை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, கிராமங்களில் கதர் வாரியத்தின் மூலமாக ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்பு கிராமியத் தொழிலாக கதர் வாரியத்தின் மூலமாக பாய் முடைதல், பெட்டி முடைதல், கொட்டான் முடைதல், சங்குப் பாசிகளை எடுத்து பாசிகள் செய்தல், அதைப்போல் தையல் மெஷின்களை வைத்து பயிற்சி கொடுத்து, கிராமங்கள் தோறும் பயிற்சிகள் அளித்தல், இப்படிப் பட்ட நிலைமைகளிலெல்லாம் கதர் வாரியத்தில் ஒரு காலத்தில் செய்யப்பட்டது. ஆனால் ஏனோ தெரியவில்லை இப்போது கதர்வாரியம் எங்கே இருக்கிறது என்பது கூட மக்கள் தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு ஒரு நிலைமை இருக்கிறது. மங்கி இருக்கிறது, மறைந்து இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைதயவு செய்து கவனித்து இந்தக் கதர் வாரியம் மக்களுக்கு சேவை செய்கிற ஒரு இயக்கம் சேவை செய்கிற ஒரு வாரியம்,சேவை செய்கிற ஒரு ஸ்தாபனம் என்று மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்ற அளவுக்கு இதைஉருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—50.)

அதைப்போல் சத்துணவுத் திட்டத்தின் கோரிக்கை எண். 30. சமூகநலம் என்ற தலைப்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். சத்துணவுத் திட்டம் இன்றையதினம் தலைசிறந்த திட்டமாக இருக்கிறது. சத்து உள்ள உணவுகளை வழங்கப் போகிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இந்த ஆண்டில் சத்துணவு கூடங்கள் மிக திறமையாகச் செயல்படுகிறது என்ற பெயரை நம்முடைய அரசு எடுக்கவேண்டும் என்ற ஆசை எனக்கு அதிகமாக உண்டு. ஆகவே, ஏற்கனவே இருக்கிற குறைகளை, ஏற்கனவே இருக்கிற ஊழல்களை, ஏற்கனவே இருக்கிற சத்துணவு மையங்களில் காணப் படக்கூடிய குற்றச்சாட்டுக்களை அத்தனையையும் தயவுசெய்து மாணபுமிகு அமைச்சர் அவர்கள் களைவதற்குப் பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சத்துணவு மையங்களில் ஏற்படுகின்ற ஊழல்கள் குறித்து நீங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடத்தில் புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த மாதம் கூட என்னுடைய தொகுதியில் கூட 3 வழக்குகளை போட்டு இருக்கிறார்கள். ஒரு சத்துணவு அமைப்பாளர் 72 ஆயிரம் ரூபாய் கையாடல் செய்து இருக்கிறார். இன்னொரு சத்துணவு அமைப் பாளர் பெண் கன்னினர் 48,550 ரூபாய் கையாடல் செய்திருக் கிறார். இன்னொருவர் 37,500 ரூபாய் கையாடல் செய்திருக் கிறார். ஒரே ஒரு ஒன்றியத்தில் ஏற்பட்டுள்ள இந்த நிகழ்ச்சி சம்பந்தபட்ட துறை, ஊராட்சி ஒன்றிய ஆணையாளரோ அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் உதவி யாளரோ] சம்பந்தப்பட்ட காவல் துறைக்கு புகார் செய்து



அவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். நான் இதை சொல்வதற்குக் காரணமே 3 இடங்களில் இவ்வளவு தொகை கண்டுபிடிக்கப்பட்டால் ஒரே ஒரு ஒன்றியத்தில் இவ்வளவு தொகை 3 மையங்களில் களவாடப்பட்டிருந்தால்; கையாடல் செய்யப்பட்டிருந்தால், இருக்கிற ஸ்டாக்குகள் குறைவாக இருந்தால், இதுபோல் எத்தனை மையங்களில் எவ்வளவு பெரிய ஊழல்கள் நடந்து இருக்கும் என்பதைத் தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடத்தில் தகுந்த விளக்கங்களைக் கேட்டுத் தெரிந்து தகுந்த நடவடிக்கை எடுத்து, குற்றச்சாட்டுக்களை எல்லாம் களைந்து, குறைபாடுகளை நீக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலச் சத்துணவுக் கூடங்களில் அளவு மிக மிகக் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. நான் ஒரு இடத்திற்குச் சென்றிருந்தேன், அங்கே சாதாரணமாக 400 கிராம் அரிசி போட வேண்டும் என்று சொன்னால் பெரும்பகுதி மையங்களில் 200 கிராம், கூட போடுவது இல்லை, அது கடைசியில் 150 கிராம், 100 கிராம் ஆகக் குறைந்து கொண்டு வருகிறது. கேட்டால் அவர்கள் நாங்கள் பங்கு போடவேண்டிய வேலை இருக்கிறது. இதிலே வருகிற லாபத்தைப் பங்கிட வேண்டியிருக்கிறது. ஆசிரியருக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அமைப்பாளருக்குப் பங்கு போட வேண்டியிருக்கிறது; என்ற தகவல்களை எல்லாம் சொல்லுகிறார்கள். தயவுசெய்து இதை இப்போது இருக்கிற அரசின் மீது குற்றச்சாட்டாக சொல்லவில்லை அது நீண்ட நெடுங்காலமாக பழக்கத்தில் இருந்து வருகிற காரணத் தால் அந்த பழக்க தோசம் இன்னும் மாறவில்லை. அதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவுகளைச் சரியாக பராமரிக்க கிராமங்களில் இருக்கிற பால்வாடி மையங் களில் பள்ளிகளில் இருக்கிற சத்துணவு மையங்களில் ஒரு குழு அமைத்து அந்தக் குழு அடிக்கடி பரிசோதித்து அந்த எடை சரியாக இருக்கிறதா அல்லது போடுகிற அரிசி, காய்கறி, பருப்பு, எண்ணெய் சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இதற்கு அந்த ஆசிரியர் பொறுப்பாக வேண்டும். அந்த ஆசிரியர் ஜாயின்ட் கஷ்டோடியனைப் போல் இருக்க வேண்டும் பள்ளிகளில் இருக்கக்கூடிய மையங்களுக்கு. பால்வாடியாக இருந்தால் அந்த ஊராட்சித் தலைவரோ, அல்லது இருக்கிற குழுவோ அடிக்கடி உள்ளூரில் யாராவது 5 பேர் இருந்தால் யாராவது ஒருவர் ஊரில் இருப்பார் அப்படி இருக்கக்கூடியவர் அந்த அளவுகளை எடுத்து சரியாக மையங்களுக்கு வழங்கி நிச்சயமாக நல்ல உணவை; ஒழுங்கான குறைவு இல்லாத உணவை; சத்து உள்ள உணவை, அந்த கிராமங்களில் உள்ள பால்வாடி மையங்களில்; சத்துணவு வழங்கும் பள்ளி மையங்களில் வழங்க சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர் களையும், அரசையும் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே இந்தச்சின்னஞ்சிறும் குழந்தைகளுக்கு அவர்கள் போடுகிற உணவின் காரணமோ என்னமோ தெரியவில்லை. அடிக்கடி நோய் வருகிறது. பள்ளிகளில் படிக்கிற மாணவனாக இருந்தாலும் பால்வாடியில் இருக்கிற சிறிய குழந்தைகளாக இருந்தாலும் அடிக்கடி அவர்களுக்கு சிரங்கு போன்ற தொத்து நோய்கள் வருகின்றன. அடிக்கடி வயிற்றுப் போக்கு ஏற்படுகிறது. இதற்கெல்லாம் என்னுடைய பணிவான கருத்து பணிவான வேண்டுகோள் 15 தினங்களுக்கு ஒரு தடவை வைத்திய துறையில் ஆங்காங்கு இருக்கக்கூடிய பிரைமரி எல்த் சென்டரில் உள்ள டாக்டர்களை வைத்து அந்த பால்வாடி மையங்களிலே அல்லது பள்ளி மையங்களிலே இருக்கக்கூடிய சத்துணவு மையங்களில் அந்த குழந்தைகளைப் பரிசோதனை செய்து அதற்குத் தேவையான பி காம்பிளக்ஸ் போன்ற மருந்துகளை வழங்கி அந்த குழந்தைகளை நோயிலிருந்து காப்பாற்ற வேண்டிய வைத்திய முறைகளையும் ஊட்ட சத்துள்ள அல்லது நோய்களை தடுக்கக் கூடிய 'பி காம்பிளக்ஸ் ஆன்டிபையாடிக்ஸ்' போன்ற மருந்து மாத்திரைகளை எல்லாம் வழங்கி அங்கே உள்ள குழந்தைகளை, நல்ல குழந்தைகளாக, ஆரோக்கியம் உள்ள குழந்தைகளாக உருவாக்க அரசு முயற்சி எடுக்கவேண்டும் என்ற வேண்டுகோளைத் தெரிவிக்கிறேன். அதுபோல பால்வாடி மையங்களில் . . . . (மணி யடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டு, மூன்று சப்ஜெக்ட்டுகள் பற்றி பேச வேண்டியிருக்கிறது. தொகுதிக்கே இன்னும் போகவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : 10 நிமிடம் ஒதுக்க முடியும். 20 பேர் பேச வேண்டும். தொகுதி பற்றிச் சொல்லவேண்டும், சொல்ல வேண்டும் என்று சொல்கிறீர்கள். 10 நிமிடத்தில் சொல்லி விடலாம். இது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை.

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : இன்னும் கொஞ்சம் டைம் கொடுங்கள். எங்கள் கட்சியில் பேச ஆள் இடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : டையோரியாவுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைத் தொகுதிக்குக் கொடுத்து இருக்கலாம்.

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்களுக்கு ஆங்காங்கே கட்டிடங்கள் கட்டித்தர வேண்டு மென்ற வேண்டுகோளையும் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் வெளியிலே வைத்துச் சமைக்கிறார்கள். அதிலே தூசி விழுகிறது. அதனால் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. மரத்தடியிலே வைத்துச் சமைக்கிறார்கள். ஆகவே சிறிய அளவிலாவது சத்துணவுக் கூடங்களைக் கட்டுவதற்கு அரசு முயல வேண்டுமென்ற வேண்டு கோளையும் இந்த நேரத்தில் நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக் கிறேன்.



சிறு தொழிற்சாலைகள் மூலமாக, ஆங்காங்கே கிராமங்களிலே, சிமெண்ட் தளவோடு, ஓடு, செங்கல் சூளை, மண்பாண்டம், அழுமாய் போன்றவைகளைத் தயாரிக்க, சிறு தொழிற்சாலைகளை கிராமங்களிலே ஆரம்பிக்கலாம் என்ற ஆலோசனையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த அரசிற்கும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதிய சிறு தொழிற்சாலைகளுக்கு மின்சாரக் கட்டணத்திலே சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பின்தங்கிய பகுதி களாக இருக்கக்கூடிய வட்டங்கள், மாவட்டங்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு வருகிற விற்பனை வரித் தொகையை வட்டியில்லாத கடனாக மீண்டும் 5 ஆண்டுக் காலத்திற்கு கொடுக்கின்ற அரசினுடைய ஆணை ஏற்கெனவே அமலில் இருந்தாலும் என்னுடையஇராமநாதபுரம் மாவட்டத்திலே இதுவரையிலும் அப் படிஒருநிகழ்ச்சி, அந்த விற்பனை வரியினுடைய சலுகை, வட்டியில் லாக்கடன் அந்ததொழிற்சாலைகளினுடைய உரிமையாளர்களுக்கு இரண்டு ஆண்டுக்காலயாக வழங்கப்பட்டதேயில்லை. ஆகவே அந்த விற்பனை வரியினுடைய சலுகையை, அந்த விற்பனை வரிச் சலுகைகள் மூலமாக கிடைக்கக்கூடிய தொகையை அந்தத் தொழில் நடத்துகிற உரிமையாளர்களுக்கு வட்டியில்லாத கடனாக வழங்குவதற்கு அந்த மாவட்டத்திலே இருக்கிற தொழில் மையங்கள் மூலமாக வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நிதி இருக்கிறது, கொடுப்பதற்கு அனுமதியும் இருக்கிறது. ஆனால், தொழில் மையங்களிலே ஒரு விதியைப் போடுகிறார்கள். ஒரு எஸ்.எஸ்.ஐ. பர்மனெண்ட் சர்டிபிகேட்டுக்கு பதிவு செய்து விட்டால் பதிவு செய்த 60 நாட்களுக்குள்ளாக மனு செய்ய வேண்டும். 60 நாட்களைத் தாண்டிவிட்டால் விற்பனை வரிச் சலுகை கிடையாது என்று சொல்லுகிறார்கள். கிராமங்களிலே தொழில் நடத்துபவர்களெல்லாம் இந்த விதிகளை அறிந்தவர்கள் அல்ல. அங்கு இருக்கக்கூடியவர்கள் கம்பெனி ஆக்ட் தெரிந்தவர்கள் அல்ல. அவர்களுக்கு இன்டஸ்ட்ரீஸ்-உடைய ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் தெரியாது. ஆகவே கிராமப்புறத்திலே உள்ளவர் களுக்காக தயவுசெய்து அந்த 60 நாட்கள் என்று சொல்லக்கூடிய விதிமுறையைத்தளர்த்தி அந்த ஆண்டின் இறுதிக்குள்ளாகவாவது அவர்கள் முறையீடு செய்தால், மனு செய்தால் அந்த விற்பனை வரியை அவர்களுக்கு வட்டியில்லா கடனாக வழங்குவதற்கு தகுந்த அனுமதி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத்தாக்கீது அனுப்பவேண்டுமென்று ஒரு வேண்டுகோளையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குவதற்கு மத்திய சர்க்கார் 15 சதவீதம் மானியத் தொகையாக வழங்கி வந்தது. ஆனால் 'பி' கேட்டகிரி என்று சொல்லப்படுகின்ற பின்தங்கிய பகுதிகளுக்கு அந்த முதலீட்டுச் செலவிலிருந்து இயந்திரங்கள்

செலவிடப்படுகின்ற கட்டிடங்கள் சேர்த்து மொத்த ப்ராஜக்ட் தொகையிலிருந்து 15 சதவீதம் மானியமாக வழங்கப்பட்டுவந்தது. கடந்த 30-9-88ம் தேதியிலிருந்து நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே மத்திய சர்க்காரிடமிருந்து தமிழகத்திற்கு கிடைக்கக்கூடிய அந்த 15 சதவீத மானியம் நிறுத்தப்பட்டுவிட்ட காரணத்தினாலே பல தொழிற்சாலைகள் அரைகுறையாக நின்று கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்கு, தயவு செய்து நம்முடைய தமிழக அரசு மத்திய அரசோடு அணுகி அந்த 15 சதவீத மானியத்தைப் பெறுவதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப் பெறுவதற்கு சற்றுக் காலம் தாழ்ந்தால், தயவுசெய்து மாநில அரசு கொடுக்கப்படுகின்ற மானியம்போல 10 சதவீத மானியத்தை அந்த தொழிற்சாலைகளுக்கு வழங்கிட ஆவன செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, என்னுடைய தொகுதியாக இருக்கக்கூடிய முதுகுளத்தூர் மிக மிகப் பின்தங்கிய பகுதியாகும். இராமநாதபுரம் மாவட்டம் அதைவிட பின்தங்கிய நிலைமையில் இருக்கிறது. அங்கே தொழிற்சாலைகள் இடையாது. என்னுடைய தொகுதியில் ரெயில்களுடைய புகையும் இல்லை; தொழிற்சாலைகளுடைய புகையும் இல்லை. ஆகவே பின்தங்கி இருக்கிற முதுகுளத்தூரிலே உள்ளவர்கள் பலர் ரயிலைப் பார்த்ததும் கிடையாது; தொழிற்சாலைகளைப் பார்த்ததும் இடையாது. ஆகவே இந்த ஆட்சி மலர்ந்திருக்கிற இந்த நேரத்திலாவது தயவுசெய்து முதுகுளத்தூரிலே ஒரு சிறு தொழில் கூடம் 'சிட்கோ ஸ்தாபனத்தில் இருக்கக்கூடிய 'சிட்கோ' இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஒன்றை உருவாக்க வேண்டும். கமுதியிலே 'சிப்காட்' மூலமாக ஏற்கெனவே சர்வே செய்யப்பட்டு அரசினுடைய புறம்போக்கு நிலம் 140 ஏக்கருக்கு மேல் இருக்கிறது. குண்டாறு பக்கத்திலே ஓடிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே தண்ணீர் வசதியும் இருக்கிறது. அங்கே பெரிய சப்-ஸ்டேசனெல்லாம் இருக்கின்றன. மின்சார வசதி, தண்ணீர் வசதி, இட வசதி இத்தனையும் இருக்கிற அந்த இடத்திலே 'சிப்காட்' நிறுவனத்தை உருவாக்க வேண்டும். அதனால் பின்தங்கிய பகுதியாக இருக்கிற முதுகுளத்தூர் பகுதியில் இருக்கிறவர்களுக்கு தொழிற்சாலைகளைப் பார்ப்பதற்கு நம்முடைய ஆட்சிக் காலத்திலே அதற்கு வாய்ப்பை உருவாக்கித்தரவேண்டுமென்ற வேண்டுகோளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே நல்ல மூலப் பொருட்கள் கிடைக்கின்றன. கனிம வளங்கள் இருக்கின்றன. சிப்பி இருக்கிறது. சுண்ணாம்புக்கல் இருக்கிறது. உப்பு இருக்கிறது. அதைப்போல ஜிப்சம் இருக்கிறது. பனை நார் இருக்கிறது. தென்னை நார் இருக்கிறது. இத்தனை இருந்தும் தொழில்கள் இல்லை. ஆகவே அந்த மூலப் பொருள்களையெல்லாம் உபயோகிப்பதற்கும் வெள்ளை சிமெண்ட் போடக்கூடியவர்களுக்கென்று சிப்பி



சுண்ணாம்புக் காளவாய்களுக்கு சுண்ணாம்புக் கற்கள் கனிம உரிமம் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல தொழிற்சாலைகளுக்கு சிட்கோ மூலமாகக் கிடைக்கின்ற மூலப்பொருள் சரியாகப் போய் சேருவதில்லை. குறிப்பாக எம். ஆர். எல்-லிருந்து வரப் பெறுகின்ற பேரபின் வேக்ஸ் கோட்டா ஒரு மாதம் கொடுக்கப்படுகிறது, இரண்டாவது மாதம் நிறுத்தப்படுகிறது. ஒரு மாதத்திற்கு 100 டன் கொடுக்கிறார்கள் என்றால் இன்னொரு மாதம் திடீரென்று 30 டன்னாகக் குறைத்து விடுகிறார்கள் அதை நம்பி இருக்கின்ற தொழிற்சாலைகளெல்லாம் கதவடைப்பில் இருக்கின்றன. அந்த தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்றவர்கள் ரோட்டிலே நிற்கின்றார்கள். அந்தத் தொழிலைச் செய்ய முதல் கொடுத்திருக்கிற டி.ஐ.சி. நிறுவனத்தினர் அவர்களுக்கு டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்து கடனை வசூலிக்கிறார்கள் ஆகவே அந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் நடத்துவதற்குத் தேவையான, எம்.ஆர்.எல்-லிருந்து கிடைக்கக்கூடிய பாரபின் வேக்ஸ்-ஐ .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் தாண்டி விட்டது. உட்காருங்கள். ஏனென்றால் 20, பேர் இன்னும் பேச வேண்டியிருக்கிறது ஆகவே சீக்கிரம் முடியுங்கள்.

(முற்பகல் 11-00)

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: முறையாக எம்.ஆர்.எல் நிறுவனத்திடம் பேசி நமது அரசாங்கம் இந்த 'பராபின் வாக்ஸ்' கோட்டாவை அதிகமாகப் பெற்று சிட்கோ மூலமாக தொழில் அபிவிருத்திக்கு வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இந்த வாக்ஸ் சரியாகக் கிடைப்பதில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எம். ஆர். எல். நிறுவனத்தை அணுகி கோட்டாவை அதிகப்படுத்த வேண்டும். தீப்பெட்டித் தொழிலுக்கும் மற்ற பல கெமிக்கல் தொழிற்சாலைகளுக்கும் மூலப்பொருள்கள் தாராளமாகக் கிடைக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் பல்வேறு விவரங்களைத் தெரிவிக்க வேண்டியிருந்தாலும் நேரம் இல்லாத காரணத்தால் ஒரு முக்கியமான பொதுவான பிரச்சினையை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். மற்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்துவிடுகிறேன்.

இந்த சட்டமன்றக் கூட்டம் முடிந்தவுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்க்கச் செல்கிறபோது ஆங்காங்கே இருக்கிற சிறு தொழில் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், என்னைப் போன்ற தொழில் ஆர்வம் உடையவர்கள், சமுதாயத்தில் இருக்கிற தொண்டாற்றும் உள்ளம் கொண்டவர்கள், தேசிய மய மாக்கப்பட்ட வங்கி அதிகாரிகள், மின்சாரத் துறையைச் சேர்ந் தவர்கள், தொழில் நுட்ப உதவியாளர்கள் இவர்களைப் போன்ற வர்களை எல்லாம் அழைத்து கருத்தரங்கு நடத்தி, 'சிங்கிள் விண்டோ சிஸ்டம்' மாதிரி ஒரே இடத்தில் எல்லா வசதிகளும் கிடைக்கின்ற வகையில் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டு இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை சம்பந்தமாக பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூற வேண்டியிருக்கிறது. ஆகவே. பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வது, எனக்கு கொஞ்சம் கூடுதலாக அவகாசம் தேவைப் படும். அதுவும் பெண்கள் பிரச்சினைகளைப்பற்றி பேச இருப் பதால், இந்த மன்றத்திலே பெண்கள் மைனாரிட்டியாக இருப்பதால் நிச்சயமாக நீங்கள் மணி அடிப்பதை கொஞ்சம் தாமதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலத்துறை மூலமாக முதலில் நான் கூற வேண்டியது இந்த ஆட்சியிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் உண்மையி லேயே இந்தத் துறையில் கொஞ்சம் அக்கறை கொண்டவர்கள் என்று சொல்லி பாராட்ட விரும்புகிறேன். இந்தப் பாராட்டைத் தெரிவித்து தொடர்ந்து இந்தத் துறையில் அதிகமான கவனம் செலுத்த வேண்டும்; அதிகாரிகள் சொல்லுவதை மட்டும் வைத்து முடிவு எடுக்காமல் நேரடியாகச் சென்று பிரச்சினைகளைத் தெரிந்துகொண்டு தகுந்த நடவடிக்கை எடுத்து பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். இப்போது இல்லை என்று சொல்லவில்லை. இன்னும் கொஞ்சம் சுறுசுறுப்பு காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக சமுதாயத்தில் இருக்கிற மூன்று பிரிவினர் பற்றி இந்தத் துறையிலே சொல்லப்படுகிறது. மகளிர் குழந்தைகள், ஊனமுற்றோர் ஆகியவர்கள் இந்த மூன்று பிரிவினர். குறிப்பாக இந்த பட்ஜெட் அறிவிக்கப்பட்டபோது அதிலே பல நல்ல திட்டங்கள் அளிக்கப்பட்டன. அவற்றைச் சொன்னால் நேரம் ஆகும். அவை எல்லாம் நமக்குத் தெரியும். திருமணத்திற்கு 5,000 ரூபாய் உதவி, கருவுற்ற தாய்மார்களுக்கு 4 மாதங்களுக்கு 200 ரூபாய் உதவி, குடும்பத் தலைவரை இழந்துவிட்ட ஏழைப் பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் உதவி போன்ற விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏழை எளிய மக்களுக்கு இந்த உதவி என்று சொன்னால் போதாது; அவர்களுடைய தகுதி என்ன



என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். அரிசி கொடுப்பதற்கு 300 ரூபாய் வருமானம் என்று சொல்லப்பட்டிருப் பதைப்போல திட்டவட்டமாக வரையறையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல உதவித் தொகை 50 ரூபாய் வீதம் வழங்கப் படும் என்று இருக்கிறது. ஏற்கெனவே நான் சார்ந்திருக்கிற ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டபோது இந்த அரசுக்கும் அத்தகைய திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். முதியோர்களுக்கு சன்னரக அரிசி கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையில் வயோதிகர்களுக்கு அது கிடைக்கவில்லை.

மகளிர் மேம்பாட்டுக் கழகம் என்று ஒரு கழகம் அமைக்கப் பட்டிருக்கிறது. வெறும் வார்த்தையில் மட்டுமல்லாமல் சில நல்ல காரியங்கள் அங்கே நடைபெறுகின்றன. அதில் பெண் களுக்கு சில பயிற்சிகளும் தரப்படுகின்றன. ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மகளிர் மேம் பாட்டுக் கழகம் சமுதாயத்தில் மகளிர் முன்னேற்றமடைய அவர் களுடைய கல்வித் தகுதியை உயர்த்தி, பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். பெண்கள் சில கடினமான வேலைகளைச் செய்ய முடியாது; தையல் வேலை செய்வதும், பூக்கட்டித் தருவதும்தான் பெண்கள் வேலை என்று நினைத்திருந்ததற்கு மாறாக இயந்திரங்களையும் இயக்க முடியும், இலகுவான இயந்திரங்கள் மட்டுமல்லாமல், தொழில் நுட்பக் கருவிகளையும், எலக்ட்ரானிக் கருவிகளையும், அவர்களால் இயக்க முடியும் என்பதை இந்த மேம்பாட்டுக் கழகத்தில் செய்து காட்டியிருக்கிறார்கள் என்பதிலே எனக்கு கருத்து வேறுபாடு இல்லை.

பெரும்பாலும் எஸ்.எஸ்.எல்.சி. படித்த பெண்களுக்கு சுய வேலைவாய்ப்புக்கான பயிற்சி 2 ஆண்டுகளுக்குத் தரப்படுகிறது. அந்தப் பயிற்சிக் காலத்தில் மாநில அரசு உதவுகிறது என்றும், மத்திய அரசினுடைய நிதியும் வழங்கப்படுவதாகச் சொல்லப்படு கிறது. இருப்பினும் 5 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றுகிற பெண்களுடைய நிலைமை மிகவும் பரிதாபகரமானதாக இருக்கிறது. மற்ற எல்லா அம்சங்களும் சரியாக இருக்கிறதா என்று பார்த்தால் ஒரு பழமொழி கூடச் சொல்வார்கள். ரொம்பப் பிரமாதமான ஆப்பரேஷன், ஆனால் ஆள் க்ளோஸ் என்று சொல்வார்கள். அதுபோல் இப்போது பணியாற்றக்கூடிய நம்முடைய பெண்கள் 2 வருஷம் வேலை செய்திருந்தாலும், 3 வருஷம் வேலை செய்திருந்தாலும், 5 வருஷம் வேலை செய்திருந்தாலும் 300 ரூபாய்தான் தரப்படுகிறது. எதை எடுத்தாலும் 3 ரூபாய் என்று தெருவிலே கூவுவது மாதிரி எல்லோருக்கும் 300 ரூபாய் என்ற ஊதியம் கொடுப்பது நிச்சயமாக முறையானதல்ல. வீட்டிலே சமையல் வேலை

[திருமதி பாப்பா உமாநாத்] [1989 ஏப்ரல் 21

செய்யக்கூடியவர்களுக்குக் கூட 250 ரூபாய் கொடுத்து மூன்று வேளைச் சாப்பாடு போட்டாலும் அவர்கள் வேலைக்கு வர மாட்டேன் என்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட தொழில் களில் ஈடுபடக்கூடியவர்களுக்குக் கூடுதல் சம்பளம் தரவேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வேலைக்கு வருமாறு விளம்பரம் செய்கிறபோது உங்களை அரசு ஊழியர்களாக ஆக்குவோம் என்றும், சுய வேலைவாய்ப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் இதுவரையில் அது செய்யப்பட வில்லை. தொழிற்சாலை சட்டப்படி இந்த நிறுவனம் இயங்கி வருவதாக அறிவித்தும்கூட அதன் அடிப்படைச் சலுகைகள் மறுக்கப்பட்டு வருகிறது. ஊதிய உயர்வு என்று கேட்டாலே இந்த நிறுவனம் மூடப்படும் என்று அதிகாரிகளால் மிரட்டப் படுகிற நிலைமை இருக்கிறது. சங்கம் வைத்தால் அது தவறு என்று சொல்லி, இப்போது அவர்களை எடுக்காமல் வேறு ஆதரவற்ற விதவைகளை வேலைக்கு எடுத்துக்கொள்கிறோம் என்ற பெயரில், அந்தத் திரை மறைவில் சில வேலைகள் நடக்கின்றன. அது மட்டுமல்ல. இவர்களை வேலைவாங்கும் முறைகள், நடத்தும் முறைகள் மோசமாக இருக்கின்றன. இழி சொற்கள் கூறப்படுவதால் மகளிர் கூனிக் குறுகி அனுபவிக்கின்ற துன்பங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இதன் காரணமாக இங்கே மகளிர் மேம்பாடு என்பது தலைகீழாக மாற்றப்படுகிறது. குறிப்பாக இங்கே எம்.டி. மற்றும் சேர்மன் ஆகிய இருவரும் பெண்கள் என்று நான் அறிகிறேன்.

கிண்டி தொழில் பேட்டையில் உள்ள ஆஃப்செட் ப்ரிண்டிங் அச்சகத்தில் மெஷின்களை இயக்கி வைப்பது, கட்டிங், பைண்டிங் போன்ற அனைத்தையும் பெண்களே செய்கிறார்கள். எலக்ட்ரானிக் காயில் வைண்டிங் பொதுவாக ஆண்கள்தான் செய்வார்கள். ஆனால் இங்கே பெண்கள் செய்கிறார்கள். கல்விச் சாதனங்கள் பிரிவு, மரச்சாமான்கள் செய்தல் அதாவது தச்சர்கள் செய்யும் மேஜை, நாற்காலி போன்றவற்றைச் செய்கிற பிரிவுகளிலும் பெண்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால் வேலை நேரம் கணக்கிடப்பட வேண்டும். கூடுதல் வேலை வாங்கப்படு கிறது என்பதை நீங்கள் கவனிக்கவேண்டும்.

அதேமாதிரி ஸ்க்ரீன் பிரிண்டிங் என்று சொல்லக் கூடிய இவர அச்சுக்கூடமும் இருக்கிறது. இதில் பெண்கள் திறமையாக வேலை செய்கிறார்கள். ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால் பல துறைகள் நல்ல முறையில் பயன்படக்கூடிய வகையில் இருப்பதால் இந்தக் கழகத்தின் சார்பில் பெண்கள் நல்ல பயிற்சி அளிக்கப்படு கிறார்கள் என்பதையும் இதுபோன்ற வகையில் மாவட்டங்கள் தோறும் அமைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அச்சுத் துறையில் தனியாருடைய அந்த ஆதிக்கத்தைக் குறைத்து அரசு மேலாண்மை வகிக்கக்கூடிய வகையில் இதனை விரிவுபடுத்த



1989 ஏப்ரல் 21] [திருமதி பாப்பா உமாநாத்]

வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் வேலை செய்யக்கூடியவர்கள் மனிதப்பிறவிகள் என்பதால் மனிதாபி மானத்தோடு இந்த அரசு சில குறைந்தபட்ச நடவடிக்கைகளை யாவது எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊதிய உயர்வு உடனடியாக 200 ரூபாயாவது அளிக்கப்பட வேண்டும். பஞ்சப்படி விலைவாசிப் புள்ளிக்கேற்ப ஒரு ரூபாய் 65 காசு கொடுக்கப்பட வேண்டும். பயணப்படி 100 ரூபாய் கொடுக்கவேண்டும். ஷிப்டுக்கு ஒரு நாளைக்கு 2 கப் தேனீர் கொடுக்கப்பட வேண்டும். சீருடை 2 ஜோடி தரவேண்டும். இரவு 6 மணிக்கு மேலோ அல்லது அதிகாலையிலோ வேலை செய்வதாக இருந்தால் அதற்குத் தகுந்த மாதிரி ஷிஃப்ட் முறை ஏற்படுத்தப்பட வேண்டும். ஈட்டிய விடுப்பு, கேஷுவல் விடுப்பு போன்றவை தரப்படவேண்டும். அங்கே முதலுதவி சிகிச்சை இருக்கவேண்டும். அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும். சுகாதார வசதிகளைச் செய்யவேண்டும்

அடுத்து, இந்தத் துறையில் முக்கியமானது சத்துணவு. இந்தச் சத்துணவுத் திட்டம் பெரும் பொருட்செலவில் இன்றைக்கு நடைபெறுகிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோழி முட்டையும் விநியோகிக்கப்படுகிற நல்ல கருத்தைக் கூறி இருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தில் பணிபுரியக்கூடிய ஊழியர்களின் நிலைமை சமூக, பொருளாதார அடிப்படையில் மிக மோசமாக இருக்கிறது. இந்தத் திட்டத்தில் பணிபுரியக்கூடிய ஊழியர்களில் பெரும்பாலோர் குறைந்தபட்சக் கல்வித் தகுதி பெற்று அதாவது எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களாக இருக்கிறார்கள். அதே நேரத்தில் பி.ஏ., எம்.ஏ. போன்ற உயர்ந்தபட்ச கல்வித் தகுதி பெற்றவர்களும் இருக்கிறார்கள். வேறு வேலை கிடைக்காத காரணத்தால் இந்த ஊதியத்தில் இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இத்தகையோரின் நிலைமையை பரந்துபட்ட சமூகக் கண்ணோட்டத்துடனும், மனிதாபிமான அடிப்படையிலும் கவனிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தில் பணிபுரியக்கூடிய மேலதிகாரிகள் அவர் களை மனம் போன போக்கில் ஏசுவதும், கொத்தடிமை போன்று நடத்துவதுமான நிலைமை தொடர்கிறது. வேறு வேலைகள் எதுவும் கிடைக்கவில்லை என்பதால் அவர்கள் அஞ்சி, அடங்கி, ஒடுங்கி நடக்கவேண்டி இருக்கிறது. ஆகவே தங்களுடைய வாழ்வில் ஒருநாளா ஒளி கிடைக்காதா என்ற முறையில் ஏங்கிக் கொண்டு இருப்பவர்களுக்கு ஒரு மாற்று வழி தேட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசு தொடக்கப் பள்ளியில் பணிபுரியும் அமைப்பாளர்களில் குறைந்த பட்சக் கல்வித்தகுதியுடன் 5 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியக் கூடியவர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சியளித்து அந்தப் பள்ளிகளிலேயே ஆசிரியர்களாக அவர்கள் பணியமர்த் தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, பி.ஏ.,எம்.ஏ. படித்தவர்களுக்கு குறுகிய கால பயிற்சி அளித்து ஆசிரியர்களாக நியமனம் செய்யவேண்டும். மகளிரையும் பள்ளிகளிலே முதலாவது இரண்டாவது வகுப்பு களுக்கு எடுப்பது என்ற அந்த நல்ல கொள்கைகளுக்கு ஏற்ப, அரசு அவர்களுக்கும் முன் உரிமை தரலாம் என்பது என்னுடைய யோசனை.

(முற்பகல் 1-10)

ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் பணி புரியும் சத்துணவு அமைப்பாளர்களுக்கு உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் சமூகநலத் துறையில் ஏற்படும் காலியிடங்களில் கல்வித் தகுதியின் அடிப்படையில் பணி அமர்த்துவது உரிமையாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிகளிலுள்ள சத்துணவு ஊழியர்களுக்கு மாத ஊதியம், மதிப்பூதியம் என ரூபாய் 170 தான் இன்றைக்கு வழங்கப்படுகிறது. இன்றைய விலைவாசியில் இது சரிப்படாது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஏறத்தாழ 7 மணி நேரம் பணி புரிகின்றனர். இது பகுதி நேரம் அல்ல. இவர்களை பகுதி நேர ஊழியர்களா எப்படிச் சொல்லமுடியும் என்பதை யோசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி, குழந்தைகள் நலக் காப்பாளர்கள், ஐ.சி.டி.எஸ். என்று சொல்லக்கூடிய அந்த அமைப்பில் 6,7 மணி நேரம், 365 நாட்களும் வேலை செய்கின்றவர்கள் விஷயத்தில் நம்முடைய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அனைத்து சத்துணவு ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தில் பெண் ஊழியர்களை ஈடுபடுத்தக்கூடாது. மகப்பேறு விடுப்பு ஊதியத்துடன் வழங்கப்பட வேண்டும். சத்துணவுத் திட்டத்திற்கு தனித் துறை ஏற்படுத்தவேண்டும். பழி வாங்கும் நடவடிக்கைகளை ரத்து செய்யவேண்டும். இறப்பு நிதி என்று சொல்லக்கூடிய நிதி, அவர்கள் பணிக்காலத்தில் இறந்தால் அவர்கள் குடும்பத்தினருக்கும் ரூ. 20 ஆயிரம் அரசு ஊழியர் களுக்குக் கொடுப்பதுபோல தரப்படவேண்டும்.

பால சேவிகாக்கள் எனப்படும் குழந்தைகள் நலக் காப்பாளர்கள் இன்றைக்கு ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளை கவனிப்பது, போதிப்பது, விளையாட்டுகளைப் போதிப்பது, கல்வி களைப் போதிப்பது என்று சிறந்த பணி ஆற்றுகின்றார்கள். மற்றும் பாடல் பேர்கள்கூடச் சொன்னார்கள், ஐந்து வயதிலே சில ஐம்பது வயதிலே வளையுமா என்று வளையாதது சொன்னார்கள். அதுமாதிரி குழந்தைகள் பணி, சின்னக் குழந்தைகளுக்காகச் செய்கின்ற பணி, நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கூடிய அந்தப் பணி முக்கியமானது. 10 ஆண்டுகளாக அவர்களுக்கு எந்த பதவி உயர்வும் கிடையாது. உண்மை யிலேயே இவர்களுடைய பணியை நிரந்தரமாக்கி நம்முடைய



அரசாங்கத்தினுடைய ஆசிரியர்களாக நர்சரிப் பள்ளிகளிலேகூட அவர்களை வைத்துக்கொள்ளலாம் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். முந்தைய அரசு அவர்களை அப்படி வைத்துக்கொள்ளலாம் என்று அறிவித்தும்கூட அது செய்யப்பட வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அவர் களுடைய பணி அவசியமாக இருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல ஐ. சி. டி. எஸ். என்று சொல்லக்கூடிய ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம். அதில் அவர்களுக்கு கொடுப்பது ரூ. 195 மட்டுமே. நான் எல்லா மாநிலங்களைச் சொல்லவில்லை. பாண்டிச்சேரியில் இவர்களுக்கு இன்றைக்கு 851 ரூபாய் வரை ஊதியம் தரப்படுகிறது என்பதையும் குறிப்பிடு கிறேன்.

கார்மெண்ட்ஸ் என்று சொல்லக்கூடிய, ரெடிமேட் ஆடைகள் தயாரிக்கக்கூடிய கம்பெனிகள் நம்முடைய சென்னையிலே ஏராளமாக இருக்கின்றன. பெண்களைச் சுரண்டுவதற்கு ஒரு எல்லை இல்லை என்று சொன்னால் அங்கே தான் அதைப் பார்க்க முடியும்.

நம்முடைய மறைந்த தலைவர் திரு.வி.பி. சிந்தன் அவர்கள் பல முறை சென்ற கால ஆட்சியின்போது குறிப்பிட்டார்கள். அதை கூட்டுறவுத்துறையிலே கொண்டுவரவேண்டும் என்று சொன்னார்கள். அதை அந்த அரசு ஏற்றுக்கொண்டது. ஆனால் திரு.வி.பி. சிந்தன் மீது இருக்கக்கூடிய காழ்ப்புணர்ச்சி காரணமாக அன்றைக்கு கைவிடப்பட்டிருக்கிறது. என்னைக்கேட்டால், உழைப் பாளர்களை சுரண்டக்கூடாது, 8 மணி நேரம் வேலை என்பதற் கான போராட்டத்தினுடைய ஞாபகமாக வரக்கூடிய மே 1-ம் தேதி கொண்டுவரவேண்டும்.

கார்மெண்டிலே ஏராளமான பெண்கள் வேலை செய் கிறார்கள். ராதா கார்மெண்ட்ஸ் நிறுவனத்திலேகூட முன்பு ஒரு போராட்டம் நடந்தபோது நான் சென்றபோது அங்கே சிறுநீர் கழிக்கக்கூட அந்தப் பெண்களை அனுமதிப்பது இல்லை என்ற கொடுமையெல்லாம் நடந்துகொண்டிருக்கின்றது. ஆகவே இது நிறுத்தப்படவேண்டும். பெண்கள் இப்படி அநாகரீகமாக கொடு மைப்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். ஆகவே தனியார் நினைத்தால் மூடுகிறார்கள். அரசாங்கத்தைக் கேட்பது கிடையாது. ஏன் அரசாங்கமே அதை நடத்தக்கூடாதா? அந்நிய நாட்டுச்செலா வணி வரக்கூடிய அந்தத் தொழிலை அரசே ஏற்றுநடத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து முதியோர் விதவை பென்ஷன் சம்பந்தமாக உச்ச வரம்பு குறைத்திருக்கின்றார்கள். ஆயினும்கூட பல மாதங்கள் அலையக்கூடிய நிலைமைகள் இருக்கக்கூடாது. அதிகாரிகள் அதிலே சுறுசுறுப்பு காட்டுவது இல்லை. மனுவை வாங்கி வைத்து விடுகின்றார்கள். அப்புறம் காணாமல் போய்விட்டது என்று

சொல்வார்கள். அப்புறம் டாக்டர் சர்டிபிகேட் வாங்கி வருவார்கள் என்று இருக்கின்றார்கள். அந்த வயதானவர் களையும் விதவைகளையும் அலைய வைக்கக்கூடியதை தடுப்பதற் கான உருப்படியான உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உண்மையிலேயே எவ்வளவு திட்டம் நாம் கொண்டுவந்தாலும் அது கீழ்மட்டத்திலே போய்ச் சேர்வதில்லை. அவர்களுக்கு விவரமும் தெரியாது. இன்றைக்கு நிச்சயமாக அப்படிப்பட்ட ஆட்களை நியமிக்க வேண்டும். அப்போதுதான் அது மக்களுக்குத் தெரியும்.

இன்னொன்று விதவை பென்ஷனிலே மகள் இருந்தால் கொடுப்பார்கள். மகன் இருந்தால் கொடுப்பதில்லை. எனவே ஊரிலே இருக்கின்ற மகன்கள் எல்லாம் தாயாரை வைத்து காப்பாற்றுகின்ற மாதிரி அரசாங்கம் நினைக்கக்கூடாது. பல தாய்மார்களை கவனிக்காத தனையன்மார்களும் தமிழ்நாட்டில் உண்டு என்பதை கவனத்தில் கொண்டு அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி ஊராட்சி ஒன்றியங்களிலே 20 ஆண்டுக் காலமாக பணிபுரியும் தையல் ஆசிரியர்கள் சுமார் 1[illegible]50 பேர்கள் இருக்கின்றார்கள். எந்தப் பதவி உயர்வும் கிடையாது. ஆனால் அவர்கள் கிட்டதட்ட 8-ம் வகுப்பு 10-ம் வகுப்பு படித்திருக் கிறார்கள். இவர்களை அரசு ஊழியர்களாக ஏற்று பதவி உயர்வு தரவேண்டும். இன்றைக்கு கூட்டுறவு முறையிலே தையல் வேலை செய்து கொடுக்கக்கூடிய பெண்களுக்கு இன்னும் கூடுதல் சம்பளம் வேண்டும். ஏனென்றால் விலைவாசி உயர்ந்திருக்கிறது. இது எல்லாம் நாம் சொல்லக்கூடிய உண்மையும்கூட.

அடுத்து, கதர் தொழில். அதுமாதிரி இன்னும் பல்வேறு தொழில்கள் இருக்கின்றன. இது ஒரு நல்ல சிறுதொழில். விவசாயம் என்று எடுத்துக்கொண்டால் அங்குள்ள பெண்களுக்கு 3 மாதம்தான் வருடத்தில் வேலை கிடைக்கிறது. அதற்காக குறிப்பிட்ட சில இடங்களில் கூட்டுறவு முறையிலே கதர் தொழிலை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யலாம். அதுபோல புதிய ரகங்களை கதர் துறையில் கொண்டு வரவேண்டும். அந்த வகை யில் ஏற்பாடு செய்தால் பெண்கள் வாழ்வில் வளர்ச்சி ஏற்பட வாய்ப்பு உண்டாகும் அதுபோல தேன் வளர்ப்பு முக்கியமானது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்தில் 1,200 பேர் கூட்டுறவு சொசைட்டி ஒன்றை ஆரம்பித்து நல்ல முறையில் லாபத்தில் நடத்திவந்தார்கள். சமீப காலமாக அங்கே நிர்வாகிகளால் ஊழல் செய்யப்பட்டதால் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாக அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். எனவே இதுகுறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.



அடுத்து, மகளிர் மன்றங்கள், பல்வேறு மாதர் அமைப்புகள் போன்றவற்றின் மூலம் மகளிர்க்கான தொழில்களை உருவாக்க வேண்டும், அத்தகைய தொழில்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் அத்துடன் கண்காணிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள விண்ணமங்கலத்தில் தாட்கோ தொழிற்சாலை இருக்கிறது. அங்கே சென்றிருந்தபோது நடைபெற்றிருக்கிற ஊழலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டுபிடித்ததாக, பத்திரிகைகளில் கூட செய்தி வந்தது. அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, குழந்தை திருமணம். சிதம்பரம் நடராஜர் கோயில் தீட்சிதர்களைச் சார்ந்த குடும்பத்தினர் 4[illegible] குழந்தைகளுக்கு கல்யாணம் பண்ணி வைத்திருக்கிறார்கள். அதாவது பால்ய திருமணம். அதுவும் மனித குழந்தைகளுக்கு கல்யாணம். அங்கே 7 வயதில் 8 வயதில் கல்யாணம் பண்ணி வைத்திருக்கிறார்கள். இங்கே இருக்கிற ஸ்ரீரங்கம் தீட்சிதர் அல்ல, அந்த தீட்சிதர்கள் வேறு. இவர் வேறு. (சிரிப்பு) ஆனால் இடையில் அந்த மாப்பிள்ளைப் பையன் இறந்து போனால் அந்தப் பெண்ணுக்கு உடனே மொட்டையடித்து வெள்ளைத் துணி கட்டி விடுகிறார்கள். ஆனால் பெண்டாட்டி செத்துப்போனால் அம்மாதிரி பையனுக்கு மொட்டையடிப்பதோ, வெள்ளைத் துணி கட்டி விடுவதோ கிடையாது. சின்ன குழந்தைகளுக்கு ஏன் இப்படி கல்யாணம் பண்ணி வைக்கிறார்கள்? இதைத் தடுத்து நிறுத்த அங்கே தென்னாற்காடு மாவட்டத்தில் கலெக்டர் இல்லையா? அதிகாரிகள் இல்லையா? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று நான் தெரிய விரும்புகிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீட்சிதர்களில் வித்தியாசம் இருக்கிறது; அவர் வேறு இவர் வேறு என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். இப்படிப்பட்ட செயல்களைத் தடுப்பதற்காகத்தான் அந்தக் காலத்தில் சாரதா சட்டம் கொண்டுவரப் பட்டது. அது பற்றி எல்லாம் இங்கே இருக்கிற சில இளம் குழந்தைகளுக்கு ஒன்றும் தெரியாது. (சிரிப்பு) இச்செயலை அச் சட்டம் மூலம் தடை செய்தாலும் கூட இன்னமும் ராஜஸ்தான் மாநிலத்தில் ஆயிரக்கணக்கில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தீட்சிதர் அவர்களே, நீங்கள் இளம் பிள்ளைகள் திருமணத்தை ஆதரிக் கிறீர்களா, ஆதரிக்கவில்லையா?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நான் ஆதரிக்க
வில்லை. பொறுப்புக்கு வந்த பிறகுதான் திருமணத்தை நடத்த
வேண்டும். எங்கள் குடும்பத்தில் எல்லாம் வயதுக்கு வந்த பிறகு
தான் திருமணத்தை நடத்துகிறோம். அந்த அம்மையார்
அவர்கள் சொல்வது மாதிரி இன்னமும் இந்த நாட்டில்
சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முற்போக்கான சிந்தனைகள்
தீட்சிதர் அவர்களுக்கு இருப்பதற்காக என்னுடைய நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு). 8 வயது ஆண் பிள்ளை
இறந்துவிட்டால் உடனே பெண்டாட்டி என்கிற பெயரில் இருக்
கின்ற அந்தப் பெண் குழந்தைக்கு மொட்டையடித்து வெள்ளைத்
துணி கட்டுகிறார்கள். அதுகுறித்தும் மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் கவனிக்க வேண்டும். நாமே இன்றைக்குப் பார்க்கிறோம்.
13 வயதில் பெண்ணுக்கு கல்யாணம் பண்ணி வைத்தால் சில
சந்தர்ப்பங்களில் 14 வயதில்தான் பெண் வயதுக்கு வருகிற
நிலைமை இருக்கிறது. 8 வயது ஆன பெண்ணை பஸ்ஸில்
அழைத்துச் சென்றால் அதற்கு டிக்கெட்கூட வாங்க முடியாது.
அந்தச் சின்னக் குழந்தையை மடியில்தான் வைத்துக்கொள்ள
வேண்டும். ஆக 15 வயதில் கூட இன்றைக்கு பெண்கள் வயதிற்கு
வருகின்ற நிலை இருக்கிறது. இது குறித்து அதிகாரிகள் சமூக
சிந்தனையோடு கவனிக்க வேண்டும். இதில் கலெக்டருக்கும்,
அரசுக்கும், அதிகாரிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது. 7 வயதில்
சட்டத்திற்குப் புறம்பாக, விரோதமாக கல்யாணம் பண்ணி
வைப்பதை அவர்களுடைய சம்பிரதாயங்கள் என்று சொல்வதை
நாம் ஏற்க முடியாது.

ராஜஸ்தானில் இன்னமும் கணவன் இறந்தவுடன் பெண்
உடன் கட்டை ஏறும் நிலை இருக்கிறது. மத்தியப் பிரதேசத்தில்
எவ்வளவுதான் ஓட்டைகள் இருந்தபோதிலும் சட்டம் இது
சம்பந்தமாகக் கொண்டு வந்துவிட்டார்கள். கணவன் இறந்த
உடனே மனைவியும் உடன்கட்டை ஏற வேண்டும். ஆனால்
மனைவி இறந்துபோன உடனே அன்பான மனைவியுடனே
ஓரிடத்திலாவது ஆண் உடன்கட்டை ஏறியதாக சம்பவம் நடை
பெற்றிருக்கிறதா என்றால், இல்லையென்று சொல்வேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அம்மையார் அவர்
களுக்கு ஆண் மீது ஏன் இவ்வளவு வெறுப்பு? பழிக்குப் பழி
வாங்குகிற நடவடிக்கையை அம்மையார் அவர்கள் விட்டுவிட
வேண்டும். (சிரிப்பு)

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்றைக்கு அம்மாதிரி நம்முடைய நாட்டில்
சம்பிரதாயங்கள் தேவையில்லை. அதுபோல சிதம்பரம் தீட்சிதர்



கள் குடும்பங்களில் நடைபெறுகின்ற குழந்தைத் திருமணங்களை
உடனடியாக தடுத்து நிறுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் சொல்கிறார்
களே, அது மரபு அல்லது பழக்கங்கள் என்று, அதை நாம்
ஏற்றுக்கொள்ளவே முடியாது. ஆக, 18 வயதில் பெண்களுக்கு,
25 வயதில் ஆண்களுக்கு என்கிற அளவில் வயது வந்தவர்களுக்குத்
தான் திருமணம் என்கிற திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர
இந்த அரசு ரொம்ப கறாராக இருக்கவேண்டும், அது குறித்து
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இச்சந்தர்ப்பத்தில்
கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்து பெண்களுக்கு இழைக்கக்கூடிய கொடுமைகளை
விசாரிக்க ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுமென்று மத்திய
அரசில் உள்ள சமூக நலத்துறை..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடித்துக்
கொள்ளுங்கள். ஆண்கள் மேலே இவ்வளவு கோபமாகப் பேசு
கிறீர்களே.

திருமதி பாப்பா உமாநாத்: துணைத் தலைவரவர்களே,
ஆண்களைப் பற்றிச் சொன்னதால்தான் நிறுத்தச் சொல்கிறீர்
களோ என்னவோ என்ற ஐயப்பாடு வந்திருக்கிறது. நான்
ஒன்று மட்டும் சொல்கிறேன். நான் ஆண்களை எதிர்ப்பவள்
அல்ல. ஆண்களையும் சேர்த்துத்தான் முன்னேற்றம் வேண்டு
மென்று கருதுகிறவள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: துணைத் தலைவ
ரவர்களே, அம்மையார் அவர்கள் ஆண்களுக்கு எதிர்ப்பல்ல;
ஆண்கள் வர்க்கத்தினுடைய ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு என்று நான்
கருதுகிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு சட்ட அமைச்ச
ரவர்கள் சரியாகச் சொன்னார்கள். அவருக்கு என்னுடைய நன்றி.

திரு. பெ. சீனிவாசன்: உடன்கட்டை ஏறும் வழக்கத்தை
ஒழித்தவரே ஒரு ஆண்தான். இராஜாராம் மோகன்ராய்
அவர்கள்.

திருமதி பாப்பா உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே,
நான் ஆண்களை எதிர்க்கவில்லை. ஆண்கள்தான் பதவியில் இருக்
கிறார்கள் இங்கேகூட. அப்போது நாங்கள் என்ன பண்ணுவது?
ஆண்களிடம்தான் கேட்கவேண்டும். ஆகவே ஆண்கள் செய்ய
வேண்டும். அது அவர்களுடைய கடமை. நான் முடித்துக்
கொள்கிறேன்.

அடுத்து வரதட்சிணைக் கொலை, வரதட்சிணைக் கொடுமைகள் சம்பந்தமான ஆலோசனைக்குழு நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிறதா என்று அமைச்சரவர்கள் சொல்ல வேண்டும். அது போலீஸ் துறை சம்பந்தப்பட்டதுதான். எனவே முதலமைச்சரும் சொல்லவேண்டும். ஆலோசனைக் குழு ஒழுங்காக அமைப்பு இல்லை. கலெக்டரிடம் கேட்டால் மூன்று வருஷத்திற்கு முன்பே இங்கே அனுப்பியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். பெயர்கள் வருகிறதென்று சொல்லுகிறார்கள். இந்த [illegible] வந்தால் நல்லது. அதிலே உள்ளூர் பிரமுகர்களைப் போட வேண்டுமென்று, சில சீமாட்டிகளை அந்தக் குழுவில் போடுகிறார்கள். மாதர்கள் சம்பந்தப்பட்ட கொடுமைகளை நீக்குவதில் அக்கறையுள்ள அமைப்புகளைச் சேர்ந்தவர்களைப் போட்டால் தான் உதவியாக இருக்கும். அதையும் கவனிக்க வேண்டும்.

அடுத்து, வரதட்சிணைக் கொடுமை பற்றிய பிரச்சாரத்தை மக்கள் தொடர்பு ஸ்தாபனங்கள் செய்ய வேண்டும். பள்ளிகளில், கல்லூரிகளில் வரதட்சிணைக் கொடுமைகளைப் பற்றிச் சொல்ல வேண்டும். மாப்பிள்ளைகளை பேரம் பேசக்கூடாது ஆடு, மாடுகளை விலைக்கு வாங்குவதுபோல், பையனுக்கு இவ்வளவு விலை என்று சொல்லக்கூடிய அந்தப் பழக்கம் ஒரு கெட்ட பழக்கம் என்று பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடத் திட்டத்தில் கொண்டு வந்து சொல்ல வேண்டும். இது பெண்கள் சமாச்சாரம் என்று நினைக்காமல் இதைப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக அனாதைப் பெண்கள் இல்லம், சர்வீஸ் ஹோம்ஸ் என்று இருக்கின்றன. போலீஸ் வழக்குகள் தொடர்பாக வரக் கூடிய பெண்களும் விஜிலன்ஸ் ஹோம்களில் இருக்கிறார்கள். அங்கே மிக மோசமான நிலைமைகள் இருக்கின்றன. அவ்வளவு நன்றாக இல்லை. சில இடங்களில் காம்பவுண்ட் சுவர்களே இல்லை. போதுமான பாதுகாப்பு இல்லை. இதிலே பயிற்சி பெற்ற சமூக சேவகிகளை கவனிக்க வைத்து, மாதர் இயக்கங்களைச் சேர்ந்தவர்களை கண்காணிப்புக் குழுவாக அமைத்தால், அவற்றை ஒழுங்குபடுத்தலாம். அங்கே இருந்து விபச்சாரம் போன்றவை களுக்கு சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களே ஏற்பாடு செய்வதாகத் தகவல் வந்திருக்கிறது. அதைப்போல தற்காலிக இல்லங்கள் என்று இருக்கின்றன. அவை போதாது. புருஷனும் விரட்டி, அம்மா வீட்டுக்குக் குழந்தைகளோடு வருகிறபோது ரெயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் போயிருந்தால், தப்பாக நினைத்து அழைத்துப் போய் விடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள். [illegible] நிமிடங்கள் ஆகிவிட்டன.

திருமதி பாப்பா உமாநாத்: [illegible] தலைவரவர்களே, [illegible]ர், சௌளரி, சோவில்பட்டி [illegible] இடங்களில் [illegible] [illegible] வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு [illegible] சாப்பாடு போடவேண்டும். அரசு அதைப் போடுவதா, [illegible]



முதலாளிகள் போடுவதா, அல்லது இரண்டு பேரும் சேர்ந்து போடுவதா என்று முடிவு பண்ண வேண்டும். ஏனென்றால் அவர்கள் பள்ளிக்கூடங்களுக்குப் போக முடியாமல், வேலைக்குப் போகிறார்கள். அவர்களுக்கு மதியச் சோறு போட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து உழைக்கும் பெண்கள் விடுதி போதாது. அதைக் கூடுதலாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாதர் நல போர்ட்— இன்றைக்கு இருக்கும் அமைப்பு கூடாது. உண்மையிலேயே போராட்ட உணர்வுள்ள மாதர் இயக்கப் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கக்கூடிய போர்டை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பூர்வீகச் சொத்தில் பெண்களுக்கு பங்கு கொடுக்கக் கூடிய சட்டமுன்வடிவு நம் முன்னாலே இருக்கிறது. இதை இந்தச் சட்டமன்றத் தொடரிலேயே நிறைவேற்ற வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். பெண்களுடைய முன்னேற்றம் என்றால் சிலருக்குப் பிடிக்காது. நான் துணை சபாநாயகர் அவர்களைச் சொல்லவில்லை. சில பேருக்குப் பிடிக்காது. சில பத்தாம்பசலிகளுக்குப் பிடிக்காது. எப்படியாவது அதைத் தடுக்க முயற்சி பண்ணுவார்கள். இது நீண்ட காலத்திற்குப் பிறகு வந்திருக்கிற சட்டமுன்வடிவு. ஆகவே அதைத் தடுப்பதை நிறுத்தி, அந்தப் பெண்களுடைய உரிமைகளுக்காக அரசு கொண்டு வந்திருக்கக் கூடிய அந்தச் சட்டமுன்வடிவை இங்கே நிறைவேற்ற வேண்டுமென்று நான் முதல் அமைச்சரவர்களையும், மற்றவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே, நாட்டுக்கு, மொழிக்கு, நதிகளுக்கு, நல்லவை எல்லாவற்றுக்கும் பெண்களுடைய பெயரை இட்டு அழைக்கிறார்கள். பெண் தெய்வத்தின்மேல் அவ்வளவு அன்பும், பக்தியும் இந்த நாட்டிலே இருக்கிறது. ஆதி பராசக்தி உருவம் என்று சொல்லி. ஆனால் மனித ஜன்மங்களுக்கு மதிப்பு இல்லை. அந்த மாதிரி நிலைமையில் இருக்கிறவர்களுக்கு சில உரிமைகளை சட்ட ரீதியாகக் கொண்டுவர இந்த அரசு முனைப்பு காட்டி [illegible] வரவேற்று, அதைச் சீக்கிரமாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

*திரு. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலன் மற்றும் [illegible] அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள [illegible] மானியக் கோரிக்கையின் மீது [illegible] வாய்ப்பு அளித்தமைக்காக [illegible] நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நலத்துறையின் மூலம் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காகவும், பெண்களின் நலனிற்காகவும், உடல் ஊனமுற்றோர்களுக்காகவும், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்திக் கொண்டிருந்தாலும் அந்தத் திட்டங்கள் எல்லாம் பரவலாக எல்லாப் பகுதிகளுக்கும் போவதில்லை. எனவே, அந்த திட்டங்களையெல்லாம் ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக ஒதுக்கீடு செய்து, எல்லா பகுதிகளுக்கும் பரவலாக அவை கிடைக்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சமூக நலத் திட்டங்கள் பயனடைவோரைச் சென்று அடைவதில் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. உடல் ஊனமுற்றவர்கள், காது கேளாதோர் போன்றவர்கள் அந்தத் திட்டத்தின் பலன்களைப் பெறுவதற்காகப் பலமுறை மனு செய்தும், பல தடவை அலைந்துபோய்த்தான் அதன் பயன் அவர்களைச் சென்று அடைகிறது என்ற நிலையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பெண்கள் 8-வது வகுப்பு வரை படித்திருந்தால் ரூ. 5,000 உதவித் தொகை வழங்கப்படும் என்றும் அதற்காக ரூ. 6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. ஆனால் அரசின் கொள்கை விளக்கக் குறிப்பிலே அந்தத் திட்டமே இடம் பெறவில்லை. ஆகவே அந்தத் திட்டம் வருகிற நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே மகளிர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பனை நார் கூடை முடைதல், வடகம் தயாரித்தல், ஒயர் கூடை பின்னுதல் போன்ற பணிகளுக்குக் கடன் மற்றும் மானியம் வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்கள் மூலமாகச் செயல்படும் மகளிர் மன்றங்களுக்காக என்று ஏறத்தாழ ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆனால் ஊராட்சி மன்றங்களால் செயல்படுத்தப்படும் ஒரு மகளிர் மன்றம்கூட நல்ல முறையில் செயல்படவில்லை. தொண்டு நிறுவனங்கள் மூலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிற மகளிர் மன்றங்கள்தான் தமிழகத்திலேயே நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன, எனவே அந்த மகளிர் மன்றங்கள் மூலமாக அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியுமா என்பதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.]

சத்துணவுத் திட்டம் நல்ல முறையில் நடைபெறுவதற்காக அங்காங்கே கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தி அதில் ஊராட்சி மன்றத் தலைவர்கள், தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் படித்த பெண்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு ஒரு குழு அமைத்து நல்லபடி செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



சத்துணவுத் திட்ட ஊழியர்களை நிரந்தரமாக்கி அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டுமென்றும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். சத்துணவுக் கூடங்களில் வெயில் காலத்தில் அங்கெல்லாம் அஸ்பெஸ்டாஸ் கூரை வேயப்பட்டிருப்பதால்—அங்கே உள்ள குழந்தைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இன்றைய தினம் அரசு, ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ஆர்.சி.சி. கூரை அமைத்துத் தர இருப்பதாகச் சொல்லியிருக்கிறது. எனவே அதைப் போலவே சத்துணவுத் திட்ட மையங்களிலும் ஆர்.சி.சி. கூரை அமைத்துக் கொடுத்து அங்கே இருக்கிற குழந்தைகளின் நலனைக் காக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சத்துணவு மைய ஊழியர்கள் தாங்களாகவே விரும்பினால் மியூச்சுவல் டிரான்ஸ்பர் வழங்க வகை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ், தாலுக்காவிற்கு இவ்வளவு என்று ஒரு குறியீடு நிர்ணயித்து இருக்கிறார்கள், அதன் காரணமாக, அந்தப் பகுதியில் தகுதி வாய்ந்த நபர்கள் பலர் இருந்தும்கூட அவர்களெல்லாம் சேர்த்துக் கொள்ளப்படாமல், யாராவது மரணம் அடைந்தால்தான் புதிதாகச் சேர்த்துக் கொள்கிற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்கி அந்தப் பகுதியில் உள்ள தகுதி வாய்ந்த நபர்கள் அனைவருக்கும் அந்தத் திட்டத்தின் மூலமாகப் பயன் சென்று அடையச் செய்ய வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் அவர்களுக்கான உதவித் தொகை தற்போது ரூ. 35 என்று வழங்கப்படுவதையும், ரூ. 100 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றவர்களுக்கான சக்கர வண்டிகளைப் பெறுவதற்கு அவர்களெல்லாம் மாவட்டத் தலைநகருக்கு வர வேண்டும் என்று சொல்லுகிறார்கள். உடல் ஊனமுற்றவர்களுக்கு அவரவர்கள் இருக்கிற ஊர்களிலேயே அந்தச் சக்கர வண்டிகளை வழங்குவதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கதர் அணிவதை ஊக்குவிக்கும் வகையிலும், கதரின் சிறப்பை மக்கள் அறியச் செய்யும் வகையிலும், ஆண்டு முழுவதும் தள்ளுபடித் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆழ்வார்குறிச்சிப் பகுதியில் மண்பாண்டத் தொழிலாளர்கள் குளத்திலிருந்து மண் எடுக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய குறையையும் இந்த அரசு போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ரவி அருணன்] [1989 ஏப்ரல் 21

நெல்லை மாவட்டத்தில் பனை ஏறும் தொழிலாளர்கள் பல்லாயிரக் கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் கடந்த பல வருடங்களாக அங்கே பனை மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. இந்த நிலை தொடருமேயானால் அங்குள்ள பனை மரம் ஏறும் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இழக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். ஆகவே பனை மரங்கள் வெட்டப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30.)

பனைத் தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாகி இறந்தால் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று [illegible] சென்ற ஆண்டு அறிவித்திருந்தது. ஆனால் அது முன்பிருந்ததான் உயர்த்தியதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவிக்கப்பட்டு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

படித்த இளைஞர்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் உதவி பெறும்போது மாவட்டத் தொழில் மைய [illegible] கத்தில் தேர்வு செய்தாலும், அவர்களுடைய மனுக்கள் [illegible] அனுப்பப்படும் போது அந்த மனுக்கள் புறக்கணிக்கப்படுகின்றன. அவர்களுக்கு கடன் உதவி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மயிலபுரத்தில் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு தொழில் பயிற்சிக் கூடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அது தற்போது பழுதடைந்து அங்கே இருப்பவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது.

முதலியார்பட்டியில் பாய் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் செயல்படாது இருக்கின்றது. அதை [illegible] செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் மைய அரசின் 'டிரைசம்' திட்டத்தின் கீழ் அங்கே படித்த பெண்களுக்கு ஊறுகாய் தயாரிப்பதற்காக பயிற்சி அளிக்கப்பட்டது. அப்படி பயிற்சி அளிக்கப்பட்ட பெண்கள் பல பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே ஊறுகாய் தயாரிப்பதற்கான [illegible] அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடையம் ஒன்றியத்தில் முதலியார்பட்டி [illegible] [illegible] போன்ற பகுதிகளில் [illegible] ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு [illegible] விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.



1989 ஏப்ரல் 21]

திரு. எஸ். என். எம். உபயதுல்லா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தங்களுக்கும், நாங்கள் உயிருக்கும் மேலாகப் போற்றுகின்ற தமிழினத் தலைவர் முதல்வர் அவர்களுக்கும், தமிழ்த்தென்றல் பேராசிரியர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தின் வழிகாட்டி மன்னை அவர்களுக்கும் எங்கள் மாவட்டச் செயலாளர் அன்புக்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் கோ சி. மணி அவர்களுக்கும், இங்கேபேச எனக்குவாய்ப்பு தந்த தஞ்சைத்தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, சமூக நலம், ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

மகளிர் மேம்பாடு பற்றி எண்ணுகிறபோது உலக நாடுகளிலே கூட ஒரு காலத்தில் பெண்கள் நிலை எப்படி இருந்தது என்று பார்ப்போமேயானால், அரேபியாவில், எகிப்தில், ரோமாபுரியில பெண்கள் ஏலம் விடப்பட்ட நிலை ஒரு காலத்தில் இருந்தது. இந்தியாவில்கூடப் பெண்கள் உயிரோடு உடன்கட்டை என்ற பெயரால் எரிக்கப்பட்ட நிலை இருந்தது. சமீபத்தில் கூட அப்படி ஒரு நிகழ்ச்சி இந்த நாட்டிலே நடைபெற்றது. பெண் சிசுக்கள் புதைக்கப்பட்ட, கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் இருந்தன. பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது உண்டு. இப்படி இருந்த பெண்களுக்கு, சான்றோர் பலரும் இந்தியாவில் அண்ணல் காந்தியடிகள், ராஜாராம் மோகன்ராய், தந்தை பெரியார், பாரதியார், பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா அவர்கள், தலைவர் கலைஞர் அவர்கள், பெருந்தலைவர் காமராசர், பண்டித ஜவஹர்லால் நேரு போன்ற பல்வேறு மேதைகள் எல்லாம், முயன்று அந்த நிலைபோக்கப்பட்டு இன்று ஒரு நல்ல நிலைக்கு அவர்கள் வந்து இருந்தாலும் கூட இன்றும்கூட சமூகத்திலே வரதட்சிணை என்ற பெயரால் கொடுமைகள் நிகழ்த்தப்பட்டு வருகிற நிலையை நாம் தெரிந்தவர்களாக இருக்கிறோம். அப்படி உள்ள நிலையில் இன்றைய தினம் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற, 8-ம் வகுப்பு படித்த பெண்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை அளித்து, அவர்களுக்கு கல்வியிலே அக்கறை காட்ட தமிழக அரசு முன் வந்திருப்பது பாராட்டத்தக்கது.

குடும்பத் தலைவர் இறந்தால் ரூபாய் இரண்டு ஆயிரம், கர்ப்பிணிப் பெண்களுக்கு மொத்தமாக ரூ. 300, பெண்களுக்கு 30 சதவீதம் ஒதுக்கீடு; முதல் இரண்டு வகுப்புகளுக்கு பெண் ஆசிரியைகளையே நியமிப்பது போன்ற முடிவுகளை எல்லாம் தமிழகத்திலே இன்றைய நம்முடைய அரசு அறிவித்து இருப்பது பாராட்டத்தக்கது; போற்றத்தக்கது.

நமது நிதிநிலை அறிக்கையில், வெகு விரைவில் அனைத்து நாடுகள் விவசாய வளர்ச்சி நிதி உதவியுடன் பெரியதொரு திட்டம் செயல்பட உள்ளது என்றும், அதில் சேலம், தர்மபுரி, மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் ரூபாய் 45 கோடியே 80

இலட்சம் அளவிற்கு சுமார் 40,000 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய ஏழு ஆண்டுக் காலத் திட்டமாக இது நிறைவேற்றப்படும் என்றும் கூறப்பட்டு உள்ளது. தஞ்சை மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது. தயவுசெய்து தஞ்சை மாவட்டத்தையும் இதில் இணைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கீக இளம் பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், குடும்பத் தைக் காப்பாற்ற வேண்டுமென்ற அக்கறை உள்ள நடுத்தர வயதினர், நாள் ஒன்றுக்கு எவ்வளவு குறைந்த வருவாயானாலும் வேலை செய்யத் தயாராக உள்ளனர். அவர்களுக்கு நல்வழி காட்டும் வகையில் தஞ்சை மாவட்டத்தையும் அத்துடன் இணைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரியில் பயிலும் மாணவியர்களுக்குக் கல்லூரி விடுதியில் இடமின்மையாலும், பணிபுரியும் மகளிர் பாதுகாப்பாகத் தங்கிடவும் தஞ்சையில் ஒரு அரசு மகளிர் தங்கும் விடுதி ஏற்படுத்தித் தரவேண்டும். பெருநகரங்களில் மட்டுமே இத்தகைய வசதி இப்பொழுது உள்ளது. அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் இத்தகைய விடுதி உருவாக்கப்பட வேண்டும். என்றாலும், தஞ்சைக்கு மிக அவசியமாகத் தேவைப்படுகிறது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிப்பது பற்றி ஒரு விரிவான ஆய்வு நடத்திட வேண்டும். சிறுசிறு கடன்களாகக் கொடுத்து, அரசு பணத்தை விரயமாக்காமல், உபயோகமான முறையில் கயிறு பொருட்கள், பனையோலை பொருட்கள், பட்டுநூல் தயாரித்தல், சோப்பு தயாரித்தல், இலவச சீருடை காலணி போன்றவற்றை யெல்லாம் தயாரிக்கின்ற மையங்களை எல்லா நகரங்களிலும் அரசே நல்ல முறையில் நடத்தி, பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமூகத்தில் நலிவடைந்த மற்றும் பின்தங்கிய பிரிவினருக்கும், மகளிருக்கும், ஊனமுற்றோருக்கும் உதவும் பணியில் ஈடுபட்டுள்ள சமூக நல நிறுவனங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் உதவுகிற பொழுது அதன் செயல்பாட்டை மிக உன்னிப்பாகக் கவனித்து உதவ வேண்டும். கூடுமானவரை அரசே நேரடியாக இத்தகைய பிரிவினருக்கு உதவிடும் வகையில் சமூக நல மையங்களை அமைத்தல் நல்லது.

சத்துணவுத் திட்டத்தில் ஜூன் 3 முதல் முட்டைகள் கொடுக்க விருப்பது போற்றுதலுக்குரியது. அதே நேரத்தில் நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறபடி சத்துணவுத் திட்டத்தில் ஏற்படும் குறைபாடு, முறைகேடுகளைக் களைந்திட தாமதமின்றி தக்க கண்காணிப்பு ஏற்படுத்திட வேண்டும்.

சீர்திருத்தப் பள்ளிகளில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு நாளொன்றுக்கு உணவுக்காக ரூபாய் ஐந்து அனுமதிக்கப்படுகிறது. விசாரணைக்காகக் காத்திருக்கும் மாணவர்களுக்கு ரூ. 2.50



மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. விசாரணைக்காலம் இரண்டு வாரம் முதல் ஆறு மாத காலத்திற்கு ஆவதாகக் கூறப்படுவதால், விசாரணைக்குள்ள மாணவர்களுக்கும் உணவுக்கு ரூபாய் ஐந்தாக உயர்த்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியில் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக உள்ளதால் மாணவர்களுக்குச் சொறி, சிரங்கு ஏற்படக் கூடிய அபாய நிலை உள்ளது. அங்குள்ள மூன்று கிணறுகளிலும் தண்ணீர் இல்லை. சென்ற ஆண்டில் அங்கே 260 அடி போர்வெல் ஒன்று போடப்பட்டது. இதற்கு பம்பு செட்டுக்காக ரூபாய் 37,000 பொதுப் பணித் துறை எஸ்டிமேட் தயார் செய்து இன்று வரை அதற்கான அனுமதி கிடைக்காமல் இருந்து வருகிறது. இதற்கு உடன் தீர்வு காண வேண்டுகிறேன்.

மேலும், சீர்திருத்தப் பள்ளிகளில் பயிற்சி முடிந்து மாணவர் கள் வெளியே செல்லும் நிலையில் பயிற்சி பெற்ற தொழிலைச் செய்ய கையில் முதலின்றி [illegible] நிலையில் சென்றுவிடுகின்றனர். எனவே, வாழ்வில் அவர்களுக்கு ஒரு பிணைப்பு, பிடிப்பு ஏற்படும் வகையில் குறைந்தது ரூபாய் இரண்டாயிரம் முதல் ஐயாயிரம் வரை உதவியளித்து அவர்கள் வாழ்வில் வளம் சேர்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையில் ஒன்று முதல் ப்ளஸ் 2 முடிய ஒவ்வொரு வகுப்புக் கும் காது கேளாதோர் பள்ளியில் பத்து மாணவர்களே சேர்க்கப் படுகின்றனர். சேர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்த்தப் படவேண்டும்.

தஞ்சையில் இராஜா மிராசுதார் மருத்துவமனையில் உடல் ஊனமுற்றோர் பயிற்சி பள்ளி இருக்கிறது. இது ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை நடத்தப்படுகிறது. இதற்கு ஒரே ஒரு ஆசிரியை மட்டுமே உள்ளார். எனவே, குறைவான மாணவர்களே சேர்க்கப்படுகின்றனர். ஆசிரியைகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்தி, மாணவர்களை அதிகமாகச் சேர்க்க வேண்டுமென வேண்டுகிறேன்.

மன வளர்ச்சி குன்றியோர் பயிற்சிப் பள்ளி தற்போது சென்னையில் மட்டுமே உள்ளது. தஞ்சையிலே இராஜா மிராசு தார் மருத்துவமனையில் ஏராளமான இடம் உள்ளதால் அங்கே மன வளர்ச்சி குன்றியோர் பயிற்சிப் பள்ளி ஒன்றை அவசியம் ஏற்படுத்தித் தரவேண்டும். அது தஞ்சை மாவட்டத்திற்குப் பேருதவியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எஸ். என். எம். உபயதுல்லா] [1989 ஏப்ரல் 21

தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த விதவை மறுமணத் திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக சுமார் 50 நபர்களுக்கு அந்த ரூபாய் 5,000/ வழங்கப்படாமல் உள்ளதாகத் தெரிகிறது. இதை உடனடியாக வழங்கிட ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அரசுத் துறையில் செய்யப்படுகிற பொருள்களை டான்சி நிறுவனத்தில் செய்ய வேண்டுமென்று ஏற்கனவே அமைச்சர் அவர் களிடம் ஒரு மனு கொடுத்துள்ளேன். அதை அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். டான்சி நிறுவனத்தில், தஞ்சையில் வேலை மிகக் குறைவாக உள்ளது. எனவே அவர் களுக்கு வேலை பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்படுமோ என்று அச்சப்படுகிறார்கள். எனவே அரசுத் துறைகள் அனைத்தும் டான்சியில் தொழில் கொடுக்க உத்தரவிட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

*திரு. எஸ். குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனம் கமழ் பொதிகையும், சந்தப் பறவைகள் இசைக்கும் பாடலும், சிந்துதேன் பொங்கி செந்நெல் வயல்கள் செழிக்கச் செய்யும் செந்தமிழ் நாட்டில் தனிப்பெருந் தலைவராம் தமிழக முதல்வராய் விளங்கும் கலைஞர் அவர்களே! கருத்துக் கலைஞராய், கழகத்துக் கலைஞராய், மக்கள் கலைஞராய், தமிழகத்தின் தனிப்பெரும் அரசியல் கலைஞராய், காட்சிக்கு எளியராய், கடமையை நினைப்பவராய், கண்ணியமே காப் பவராய், கட்டுப்பாடே கொண்டவராய், பேரறிஞர் அண்ணா வழியில் நடந்து எங்களையும் வழிநடத்தும் அரசியல் பயிற்சியும், அறிவு முதிர்ச்சியும் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்பாத கமலங்கட்கு என் பொன்னான வணக் கத்தை இந்நாளில் செலுத்துகிறேன்.

கழகத்தின் வேராய், கலைஞரின் வேலாய், கல்வியின் தேராய் வீற்றிருக்கும் மாண்புமிகு பேராசிரியர் அவர்களே! நல்லாட்சி மன்றத்தில் உள்ளாட்சிப் பொறுப்பேற்று, சேலத்தால் சிறந்திட்ட சேலத்து நாயகனே, வீரபாண்டி ஈன்றெடுத்த வெற்றித் திருமகனே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே! தமிழினத்தையும், தமிழகத்தையும் கட்டிக்காத்து, அதன் உயர்வுக்கு உழைக்க பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! வாக்களித்தோர் குறைநீக்க வாக்காட வந்திருக்கும் என் அன்பு சட்டமன்ற உறுப்பினர்களே! உங்கள் அனைவருக்கும் சேலத்தின் நுழைவாசலாம் தலைவாசல் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் ஏன் பணிவான வணக்கங்களைத் தெரிவித்து எனது கன்னிப் பேச்சை துவங்க விருக்கிறேன்.



1989 ஏப்ரல் 21] திரு. எஸ். குணசேகரன்]

''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''

என்ற குறள் நெறிக்கேற்ப குறளோவியம் தீட்டும் கோமானாம் எங்கள் தானைத் தலைவர் தேர்தல் கால வாக்குறுதிகளை விரைந்து நிறைவேற்றி வருகிறார்கள்.

கர்ப்பிணி தாய்மார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் என்ற திட்டத்தை கடந்த ஆட்சியில் அறிவித்தார்கள். ஆனால் அதை செயல்படுத்தவில்லை. சட்டமன்றத்தில் பலமுறை அது பற்றி கேட்ட பிறகு மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டியில் பரிட்சார்த்தமாக ஆரம்பித்துள்ளோம். பின்னர் அது விரிவு படுத்தப்படும் என்றார்கள். ஆனால் நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு மாதம் 50 ரூபாய் வீதம் நான்கு மாதங்களுக்கு ரூ. 200 வழங்க திட்ட மிட்டுள்ளார்கள். தாய்மார்களுக்கெல்லாம் செவிலித் தாயாக நமது தலைவர் விளங்குவது கண்டு தாய்மார்கள் அனைவரும் தொழுது பாராட்டுகின்றார்கள்.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்றார் மணிமேகலை ஆசிரியர். குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவும் சத்துணவாய் அமைய வேண்டுமென்று கருதிய கலைஞர் அவர்கள் மாதம் இருமுறை உணவுடன் முட்டை வழங்கும் திட்டத்தையும் அறிவித்து உள்ளார்கள். இதனால் லட்சக்கணக்கான குழந்தைகள் பயன் பெறுவர். இத்திட்டத்தை நமது குடியரசுத் தலைவர் அவர்களே பாராட்டி உள்ளார்கள். முட்டை வழங்கும் திட்டத் தால் நலிவடைந்த நிலையில் இருந்த கோழி வளர்ப்போர் பயன் பெறுவார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் கோழிப் பண்ணைகள் அமைக்கும் திட்டத்தை நமது முதல்வர் அறிவித்துள்ளார்கள். இதனால் கணிசமான பேர்களுக்கு வேலை வாய்ப்பிற்கு வழி ஏற்படுகின்றது. பள்ளி விடுமுறை நாட்களில் உணவு வழங்கு வதை நிறுத்தி விடவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இதனால் பல முறைகேடுகள் தடுக்கப்படுவதோடு, அரசின் நிதிச் சுமையும் குறைகிறது.

தேனி வளர்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். தேன் மனிதர்களுக்கு உணவாகவும், மருந்தாகவும் பலவகைகளில் பயன் படுகிறது. ஆனால் நல்ல சுத்தமான தேன் கிடைப்பது மிகவும் கடினமாக உள்ளது. தேன் பல இடங்களில் விற்பனை செய்யப் பட்டாலும் அதில் பெரும்பாலும் கலப்படமாகத் தான் உள்ளது. ஆகையால் சுத்தமான தேனாக கிடைப்பதற்கு திட்டத்தை விரிவு படுத்துவதோடு விற்பனை செய்யும் இடங்களில் கலப்படம் இல்லாமல் கண்காணிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

சேலம் மாவட்டத்தில் பல இடங்களில் குறிப்பாக தலைவாசல் தொகுதியில் அதிக எண்ணிக்கையிலே தீப்பெட்டித் தொழிற்சாலை களுக்காக பல தொழிற்கூடங்கள் கட்டியிருக்கிறார்கள். அந்தத் தொழிற்கூடங்கள் எல்லாம் கட்டப்பட்டு வெறுமனே கிடக்கிறது. அவைகளையெல்லாம் தொழிலாளர்களே பயன்படுத்தக்கூடிய வகையில், நமது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது தமிழ்நாட்டில், பட்டு வகைகள் மிகவும் சிறந்து விளங்குகின்றன. வெளிநாடுகளில் அதற்கு நல்ல கிராக்கி உண்டு. ஆகவே பட்டுத் துணிகளை மிக அதிகளவிலே தயாரித்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பனைத்தொழிலில் அரசு கவனம் செலுத்தி பனை மரத்திலிருந்து கள் இறக்குவதைத் தடுக்க வேண்டும். பதநீராக இறக்கி, பனைபொருட்கள் உற்பத்தியைப் பெருக்கவேண்டும்.

சவ்வரிசி விற்பனை செய்வதில் அதிகாரிகளால் சில முறை கேடுகள் நடந்து வருகின்றன. அந்த முறைகேடுகளை நமது அரசு தகர்த்தெறியவேண்டும் என்று இந்த மாமன்றத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்திலும் ரா மெட்டீரியல்ஸ் டெப்போ கிடையாது. ஆகையினால், அங்கே ஒரு டெப்போவை உடனடியாக நிறுவவேண்டும்.

ஜப்பான் நாட்டு உதவியுடன் தோல் பதனிடும் ஒரு தொழிற் கூடத்தை சேலம் மாவட்டத்தில் நிறுவவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தலைவாசல் தொகுதியில் வசிஷ்டா நதி, சுவேதநதி ஆகிய இரண்டு ஆறுகள் ஓடுகின்றன. இதில் வெள்ளையர் ஆட்சியில் கட்டப்பட்ட சிறுசிறு அணைகள் உள்ளன. அந்த அணைகளில் இருந்து பாசன ஏரிகளுக்குச் செல்லும் கால்வாய்கள் பல ஆண்டுகளாக தூர் வாரப்படாமல் உள்ளன. ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், இக்கால்வாய்களை தூர் எடுக்கும் பணிகளைச் செய்து தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் ஆயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெறுவார்கள். மழைக் காலங்களில் நீரைச் சேமிக்கவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும் வாய்ப்பு ஏற்படுகின்றன.

ஆறகழூருக்கும்—பெரியேரிக்கும் இடையே ஒரு தரைப் பாலமும், வீரகனூர்—தென்கரைக்கும் இடையே ஒரு தரைப் பாலமும், 74—கிருஷ்ணாபுரம் அருகே ஒரு தரைப்பாலமும் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்பதுபோல் மக்கள் குடிநீர்ப் பஞ்சத்தை நீக்க ஆழ்துளைக் குழாய்க்கிணறுகள் பலவற்றை போர்க்கால நிவாரண அடிப்படையில் உடனடியாகச் செய்து கொடுத்திடவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன.

கல்லாமையை இல்லாமையாக்கிட, ஆதவன் ஒளிபோல் நிற்கும் அறிவாலயச் சுடராய் விளங்கும் நூல்நிலையங்கள், வாசக சாலைகள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்திட கேட்டுக் கொள்கிறேன்.

பத்து விரலால் பாடுபட்டும் ஐந்து விரலால் அள்ளிச் சாப்பிடக் கூட வழியில்லாமல் அவதிப்பட்டு அல்லலுறும் ஏழை எளியோர்க்கு வறட்சி நிவாரண அடிப்படையில் வேலைவாய்ப்புத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்திடக் கோருகிறேன்.

அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நேரடிக் கடன் உதவியினைக் கொடுத்திடவும், சிறு தொழில் துவங்கிட கடன் வசதியினை அதிகரித்து ஊக்கம் அளித்திடவும் வேண்டுகிறேன்.

பாமரர்க்கும் ஏழையர்க்கும் பயன்படும் திட்டம், குன்றாத வாழ்வினுக்கு களிப்பூட்டும் குடும்பநலத் திட்டம் குழந்தை ஒன்றிரண்டு பெற்றெடுத்து ஒன்றுபட்ட சமுதாயத்திற்கு உயிர்ப் பூட்டி பணிபுரியும் அரசு ஊழியர்கள் இத்திட்டத்தின் வழி நடந்தால் அவர்கட்கு அடிப்படைச் சம்பளத்தோடு ஊக்குவிப்புத் தொகை கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டுகிறேன்.

எமது கோரிக்கைகளை பரிசீலனை செய்து பாருங்கள், பகுத் தறிவோடு. கூர்ந்துநோக்குங்கள் குறையுள்ளதா என்று, பின்னர் பின்பற்றுங்கள் எம்மை, எமது திட்டத்தை, குறிக்கோளை. எமக்காக அல்ல, என்னைத் தேர்ந்தெடுத்த என் தொகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வு மலர்ந்திட, தமிழகம் பூத்துக் குலுங்கிட, புன்னகை சிந்திட வேண்டுகிறேன்.

கோடியிலே ஒருவர் எனப்பிறந்த தமிழக முதல்வராம் நீங்கள் கோடிஜனம் பின்தொடரச் செய்திடுவீர், வாடியுள்ள எம் தொகுதி மக்கள் வாட்டமதைப் போக்கிடவே வழிவகுப்பீர், நாங்கள் வழி நடப்போம் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன்.

*திரு. கே. ஏ. மணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் ஊரகத் தொழில் மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாகச் சத்துணவு மையங்களில் அதுவும் பால்வாடிகளில் எல்லாம் போது மான குழந்தைகள் இல்லாமல் இருக்கின்றன. ஒவ்வொரு மையங்

களிலும் இத்தனை குழந்தைகள் வைத்துத்தான் திறக்கவேண்டும் என்று இருந்தும்கூட, ஆரம்பிக்கின்ற காலங்களில் அங்கே யிருக்கின்ற மக்களின் கோரிக்கைகளுக்காக நிறைய மையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் எல்லாம் ஊராட்சி ஒன்றியப் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால், அந்த மையங்களுக்குச் சென்று பார்க்கும்போது 4 குழந்தைகள், 5 குழந்தைகள் உள்ள மையங்கள் நிறைய இடங்களில் செயல்பட்டுக்கொண்டு இருக் கின்றன.

(முற்பகல் 11-50)

அந்த மையங்களிலே 4, 5 குழந்தைகள் வரும்பொழுது அங்கே பணிபுரிகின்ற ஆர்கனைசர்கள் அந்தக் குழந்தைகளுடைய வருகையை அதிகப்படுத்திக் காட்டினால் தான் அவர்களுடைய வேலை நிலைக்கும் என்ற அடிப்படையிலே எல்லா மையங் களிலும், குறிப்பாக சிறு சிறு கிராமங்களிலே இருக்கின்ற மையங் களில் எல்லாம் 30, 40 குழந்தைகள் என்ற கணக்கை வைத்திருக் கிறார்கள். இதைத் தணிக்கை செய்யச் செல்கின்ற பெரிய அதிகாரிகள் அவர்களுடைய வருகைப் பதிவேட்டைப் பார்த்து, இன்று, அவர்கள் எழுதியதைப்போலவே 40 குழந்தைகள் வந்திருந் தார்கள் என்று அவர்களே எழுதி வைக்கிறார்கள். ஏன் என்று கேட்கின்றபோது இன்று அவர்களை குடும்பக்கட்டுப்பாடு பணி களில் ஈடுபடுத்துவதற்கு வகையாக அவர்களுடைய தணிக்கைப் பதிவேட்டிலே அவர்களுக்கு ஆதரவாக எழுதுகின்ற நிலைமையை நிறைய மையங்களில் எல்லாம் நான் பார்த்திருக்கிறேன். இன்னும் அந்த மையங்களுக்கு எல்லாம் முட்டைகள் வழங்கப்படுகின்ற திட்டம் வர இருக்கிறது. இப்படி முட்டைகள் வழங்கப் படுவதற்கு முன்பாக எந்தெந்த மையங்களில் வருகை எண் குறைவாக இருக்கிறது என்ற கணக்கை ஆய்வு செய்யவேண்டும். அதைப்போன்று உயர்நிலைப் பள்ளிகளிலே இருக்கின்ற மையங் களில் எல்லாம் கூட, அங்கே இருக்கின்ற தலைமையாசிரியருக்கும் அந்த சத்துணவு மையங்களுக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லாமல் இருக்கிறது அந்த தலைமையாசிரியர்களுக்கு எல்லாம் அவர்களுடைய வருகைப் பதிவேட்டைக்கூட பார்ப்பதற்கு வழி இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு சம்பந்தமில்லாமல் ஒரு அமைப்பு அங்கே செயல்பட்டுக் கொண்டிருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, அதிலே தலைமையாசிரியருக்கு பொறுப்பு இருக்க வேண்டுமென்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அந்த கிராமங்களிலே இருக்கின்ற சிறு மையங் களுக்கு எல்லாம் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. மூலமாக இலட்சக்கணக்கான ரூபாயைச் செலவு செய்து, பெரிய அளவில் கட்டிடங்கள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளிலே மற்றும் நடுத்தரப் பள்ளிகளிலே எல்லாம் அதிக மாணவர்கள் சத்துணவு சாப்பிடுகின்ற காரணத்தால், அந்தக்



கட்டிடங்களை அந்தப் பள்ளிகளிலே கட்டும்போது அவர்களுக்கு சாப்பிடுகின்ற அளவில் ஒரு 'டைனிங் ஹால்' வசதி கிடைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும். எனவே 4, 5 குழந்தைகள் இருக்கின்ற இடங்களில் பெரிய கட்டிடங்கள் கட்டுவதைத் தவிர்த்து, உயர்நிலைப் பள்ளிகளிலும், நடுத்தரப் பள்ளிகளிலும், அதிக மாணவர்கள் வருகின்ற இடங்களிலே இப்படி கட்டிடங்கள் கட்டுவது வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அந்த பால்வாடியில் இருக்கின்ற மையங்களிலே பணிபுரிகின்றவர்களை நிரந்தரப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறைவாக உள்ள மையங்களை, இன்னும் அதிக குழந்தைகள் வருகின்ற இடங்களுக்கு அதை மாற்றிக் கொடுப்பதற்கான அந்த அதிகாரம் இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத்தான் இருப்பதாகச் சொல்கிறார்கள். நாங்கள் எல்லாம் பலமுறை இந்த மையங்களை மாற்றவேண்டுமென்று எழுதியும்கூட அந்த மையங்கள் மாற்றமுடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. அந்த மையங்களை மாற்றுவதற்கு வேண்டிய வசதிகளையும், அதே சமயத்தில் பணி புரிகின்ற மையங்கள் துவக்கப்பட்டதிலிருந்து, குழந்தைகள் குறைவாக வந்தாலும், அதிகாரிகளுடைய அனுமதியோடு நடந்து கொண்டிருக்கிற அந்த மையங்களை மூடுகின்ற நிலைமை ஏற்படுமானால் அங்கே பணியாற்றுகின்ற அந்தப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு வேறு வகையிலே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டு மென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பரமத்தி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் எடுத்துக் கொண்டால், கிட்டத்தட்ட பாதி மையங்கள் மாற்றப்படவோ, அல்லது அந்த மையங்களில் குழந்தைகள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் மூடப்படுகின்ற நிலைமை ஏற்படுகின்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அப்படி ஒரு நிலைமை ஏற்படுமானால், அங்கே பணிபுரிகின்ற அந்தப் பெண்கள் பாதிக்கப்படாமல், அந்தப் பெண்களுக்கு மாற்று வேலை ஏதாவது தருவதற்கு உண்டான ஏற்பாட்டினை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அங்கே பணிபுரிகின்ற அந்த ஏழைப் பெண்கள் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்காக நபர்களை தேர்வு** செய்கிற ஒரு நிலைமை மிகவும் கொடுமையாக இருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கின்ற அந்த ஊதியத்திலே குடும்பக் கட்டுப்பாட்டிற்காக ஒரு நபரை அவர்கள் அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று சொன்னால், குறைந்தது ரூ. 500 வரையில் அவர்கள் கையிலிருந்து செலவழிக்கக்கூடிய நிலைமை அந்தப் பகுதியில் இருந்துகொண்டிருக்கிறது. இப்போது குடும்பக் கட்டுப்பாட்டுப் பணியிலே உயர்நிலைப்பள்ளி மற்றும் ஆரம்பப் பள்ளி இவைகளிலே இருக்கின்ற அந்த சத்துணவு மையங்களிலே பணிபுரிகின்ற நபர்களையும் அதிலே ஈடுபடுத்துவதற்கான

---

** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[illegible]—11

முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. அவர்களுடைய சங்கத்திலேயிருந்து குடும்பக் கட்டுப்பாட்டிற்கு அறுவை சிகிச்சைக்காக நபர்களை தேர்வு செய்கிற *வேலையை செய்யச் சொல்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. பெ. சீனிவாசன்): அந்த மாதிரிச் சொல்லாதீர்கள், அது நன்றாக இல்லை. மாற்றிக் கொள்ளுங்கள்.

திரு. கே. ஏ. மணி: குடும்பக் கட்டுப்பாட்டிற்கு அறுவை சிகிச்சைக்காக நபர்களைத் தேர்வு செய்கிற பணியிலே அவர்களை ஈடுபடுத்த வேண்டாம் என்று என்னுடைய கருத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும் கூட அரசாங்கத்திலே குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்கிறவர்களுக்கு கொடுக்கப்படுகிற அந்த ஊக்கத் தொகை குறைவாக இருப்பதோடு மட்டும் அல்லாமல் அரசாங்கத்திலே ஆரம்ப சுகாதார நிலையங்களிலே அதற்கென இருக்கிற அந்தப் பயிற்சி பெற்ற மகளிர் எல்லாம் இந்தப் பணியிலே தீவிரமாக ஈடுபட்டால், அந்த வேலைப் பளு மற்றவர்களுக்கு இருக்காது என்ற என்னுடைய கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இருக்கின்றவர்கள் பெரும்பாலும் இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்களும் நெருக்கடிகளும் இல்லாத நிலைமையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டு முழுவதும் அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பணியாற்றுகிற நிலையில் பெரும்பாலான நேரத்தை அவர்கள் இதற்காக செலவிடலாம் என்பதையும் அந்த குடும்பக் கட்டுப்பாடு முகாம்கள் என்று போடுகிற நேரத்திலே அத்தனை அதிகாரிகளும் அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பணி புரிகின்ற அந்த பேர்களும் அதிலே தீவிர கவனம் செலுத்திக்கொண்டு அத்தனை நேரங்களிலே அவ்வளவு தீவிரமாக இல்லாது இருக்கின்றார்கள். மற்ற அதனையும் தவிர்த்து சத்துணவிலே இருக்கிற பெண்களை குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சையிலே நபர்களை தேர்வு செய்கிற பணியிலிருந்து தவிர்க்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு. வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு கோ. பூவராகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். குறிப்பாக இந்த மானியக் கோரிக்கையை இன்றையதினம் இந்த மன்றத்திலே வைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டு. ஏனென்றால்

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.



இங்கே முன்னாலே பேசிய உறுப்பினர் பாப்பா உமாநாத் அவர்கள் பெண்களுக்கு சரியாக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்று வருத்தத்தோடு கேட்டுக்கொண்டார்கள். இன்றையதினம் அமைச்சர் அவர்களும், அவருடைய துறையிலே பணிபுரிகின்றவர்களும் பெரும்பாலானவர்கள் பெண்களாகவே இருக்கிறார்கள். அதுவும் இல்லாமல் அவர்கள் வகிக்கின்ற பொறுப்பும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நலன் சேர்ப்பது. அதிலே ஊனமுற்றவர்களும் மற்றவர்களும் அந்தத் துறையினைச் சேர்ந்து இருப்பதால், அவர்களுடைய நலனை கவனிக்கின்ற பொறுப்பை சரியாக நிர்வகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக அவர்களை ஊக்கப்படுத்தி, வருங்காலத்தில் இந்தத் துறை செம்மையாக செயல்பட வேண்டுமென்பதற்காக என் கருத்துக்களை, நான் என்ன சொன்னாலும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக இங்கே எனக்குக் கொடுத்திருக்கிற அறிக்கையிலே பார்க்கிறபோது ஏதோ அதிகாரிகள் அதிகமாக வளர்ந்திருக்கிறார்களே தவிர பொதுவான வளர்ச்சி இந்த இலாகாவிற்கு வரவில்லை. குறிப்பான பலன் அந்த மக்களுக்குப் போய் எட்டவில்லை. 11,500-க்கு மேற்பட்ட மகளிர் மன்றம் இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு என்ன வேலைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன, எவ்வாறு செயல்படுகின்றன என்பது குறித்து குறிப்பு இல்லை. குறிப்பாக பல துறைகளைப் பற்றியும் போட்டிருக்கிறார்கள். ஒவ்வொன்றும் 10, 5 வருஷங்களாக அப்படியே இருக்கிறது. குறிப்பாக ஒன்றிரண்டு சொல்லவேண்டுமென்றால், பாம்கர் இன்டஸ்ட்ரியைப் பார்த்தால் 10, அதிலே ஸ்டெரெங்க்த் யூனிட் பார்த்தால் 250, 4 வருஷமாக அப்படியே இருக்கிறது. ஸ்டேஷனரி குட்ஸ் சொசைட்டியைப் பார்த்தால் அதுகூட 15, அதுவும் அப்படியே இருக்கிறது. காயிர் இன்டஸ்ட்ரி என்று பார்த்தால் கூட ஒவ்வொன்றும் அப்படியே இருக்கிறது. செரிகல்சர் 2 இருக்கிறது. செரிகல்சருக்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. வெளிநாட்டுப் பணம் வருகிறது. அந்தப் பணத்தைப் பயன்படுத்தி ஏன் அந்த யூனிட்டை அதிகமாக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி.

(நண்பகல் 12.00)

இதை கணக்குக்கு ஒப்புக்கு அப்படியே போடுகிறார்கள். அந்த முறையை மாற்றுவதற்கு அவ்வப்போது அரசாங்கத்திலே வருகின்ற பணத்திற்கு தக்கவாறு இருக்கின்ற நிலைமைக்கு ஏற்றவாறு இதனுடைய முன்னேற்றத்திற்கு இந்த இலாக்கா பயன்படும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்த சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிறைய பணம்

ஒதுக்குகின்றோம். அந்த பணத்திற்கு பொறுப்பு அந்தந்த இலாக்காவிற்கே விடப்படுகிறது. எவ்வாறு அந்த இலாக்கா செயல்படுகிறதுஎன்று பார்க்கின்றபோது தாலுக்கா வாரியாககூட இன்றையதினம் அந்த நிர்வகிப்பதற்கு அதிகாரிகள் போட்டிருக்கிறீர்கள். அந்த அதிகாரிகள் எல்லாம் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். கிட்டத்தட்ட நாம் செலவழிக்கின்ற பணததிலே 3-ல் ஒரு பங்கு இந்த அதிகாரிகளுக்காக நிர்வாகச் செலவாக இருக்கிறது. பொதுவாக நம்முடைய மாநிலத்தை பொறுத்தளவில் நிர்வாகச் செலவு மற்ற மாநிலங்களை ஒப்பிடுகின்றபோது அதிகம் என்றே நான் சொல்வேன். இந்தத் துறையிலே அதிகாரிகளுக்குச் செலவிடுகின்ற நிர்வாகச் செலவு அதிகமாக இருக்கிறது. பொதுவாக எந்தத் துறைக்கு செலவிடவேண்டுமோ அதற்கு செலவிடப்படவில்லை என்பது என்னுடைய கருத்து. நிறைய திட்டங்கள் போடுகின்றோம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ட்ரெயினிங் சென்ட்டர்ஸ் இருக்கின்றன. பாதுகாப்பு அமைப்பகங்கள் இருக்கின்றன. அந்த ட்ரெயினிங் சென்ட்டர்ஸ் ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்திலே மட்டும் வைத்திருக்கிறார்கள். முயற்சி எடுத்து எந்தெந்த இடத்திலே அமைக்கப்பட வேண்டுமென்பதைப்பார்த்து அமைப்பதாகத் தெரியவில்லை. ஏதோ இருக்கின்றது அப்படியே காலம் கடத்துகின்ற மாதிரி இருக்கின்றதே தவிர எவ்வளவுதான் பெண்களுக்கு நாம் உற்சாகம் ஊட்டி அவர்களுக்கு இவ்வாறெல்லாம் வசதி வாய்ப்புகளைத் தேடித் தந்தாலும் கூட திரும்பத் திரும்ப அப்படியே ஒரு வட்டத்திற்குள்ளே வருகின்ற ஒரு நிலை இருப்பதை மாற்ற வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அங்கே படித்த பெண்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் வேலையிலே இருக்கிற பெண்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள். அவர்களை அழைத்து அவர்களுக்கு என்ன குறை இருக்கிறது. வேலைவாய்ப்புக்கு எவ்வாறு தடை இருக்கிறது என்பதையெல்லாம் கண்டறிந்து உற்சாகப்படுத்தி அவர்களுக்கு ஒரு புதிய முறையிலே இந்த மாதிரி வழிவகை எல்லாம் இருக்கிறது. உங்கள் சம்பாதியத்திற்கு நாங்கள் வழிவகை காட்டுகின்றோம் என்ற ஒரு நிலைக்கு வரவேண்டும். எவ்வளவு தான் நாம் மானியம் கொடுத்தாலும் கூட கடைசி வரையில் நாம் மானியம் கொடுத்துக் கொண்டே இருக்க முடியாது, ஓரளவு மானியம் கொடுக்கின்றோம். உற்சாகப்படுத்துவதற்காக கொடுக்கிறோம். அந்த மானியத்தைக் கூட சரியாக பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு நல்ல வழிகாட்டியாக இந்த இலாக்கா இருக்கவில்லை என்று நான் சொல்லிக்கொள்வேன். குறிப்பாக அவர்களுக்கு பழக்கப்பட்ட தொழில். அந்த தொழிலில் கூட இன்றையதினம் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டக்கூடிய தொழில் எல்லாம் இருக்கிறது. ஊறுகாய், வத்தல், அப்பளம், திடீர் சாம்பார், திடீர் ரசப் பொடி அந்தப் பொடி இந்தப் பொடி என்றெல்லாம் விளம்பரம் செய்கிறார்கள். கதர் வாரியத்திலே அல்லது சிறு தொழில் இலாக்காவிலே எடுத்து ஏன் செய்யக் கூடாது என்று அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். தனியார் நிறுவனம் இன்றைய தினம் வெளி



நாட்டாருக்கு இதையெல்லாம் ஏற்றுமதி செய்து நிறைய வருவாய் ஈட்டக்கூடிய அளவிற்கு இருக்கிறது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், இந்த இலாக்கா பெயரளவிலே இருந்து கொண்டிருக்கிறது. நகர்ந்து போய் வெளிநாட்டிலே என்ன நடக்கிறது என்றெல்லாம் பார்த்து அந்தத் துறையிலே அவர்கள் உற்சாகமாக செயல்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அவர்களுக்குத் தெரிந்த தொழிலான பாய் முடைதல், கூடை முடைதல், சிறு குழந்தைகளுக்கு வண்ண வண்ண உடைகள் தயாரித்தல் இவற்றை அவர்கள் தயாரிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். டெய்லரிங் சென்ட்டர்ஸ் ஆங்காங்கே இருக்கிறது. 4, 5 வருடங்களாக அப்படியே இருந்த இடத்திலே இருக்கிறது. தாலுக்கா லெவலிலே கட்டாயம் இந்த ட்ரெயினிங் சென்ட்டர்ஸ் வர வேண்டும் என்று முயற்சி எடுக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பெண்கள் வேலைவாய்ப்பிற்காக 30 சதவிகிதம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. பெண்களுக்கு வேலைவாய்ப்பு என்றால் படித்த பட்டம் பெற்ற அரசாங்க உத்தியோகத்தில் மட்டும் என்று நாம் எண்ண முடியாது. இன்றைய தினம் 100-க்கு 60-க்கு மேலே விவசாயத் தொழிலிலேதான் ஈடுபட்டிருக்கிறார்கள். கொஞ்சம் கைத்தறித் தொழிலிலேயும் ஈடுபட்டிருக்கிறார்கள். மற்ற தொழிலிலும் அவர்களை பயிற்றுவிப்பதற்கு இந்த இலாக்கா பாடுபட வேண்டும் என்று இந்த சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன். பல மாவட்டங்களில் பணியாற்றிய மாவட்ட ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் இன்றைய தினம் உங்கள் அமைச்சரவையின் கீழே வந்திருக்கிறார்கள். நிறைய பயிற்சி பெற்றவர்கள். ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றியும் நன்றாக அறிந்தவர்கள். அவர்களுக்கு இன்னின்ன பொறுப்பு என்று கொடுத்து அவர்கள் திறமையாகவும் செம்மையாகவும் செயல்பட வேண்டும். அடுத்த ஆண்டு இந்த மாமன்றத்தில் வருகின்றபோது என்னென்ன துறையிலே வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டும். ஏனென்றால் சென்ற ஆண்டு கணக்கைத்தான் நாங்கள் இப்போது பார்க்கக்கூடிய அளவிலே இருக்கிறோம். அடுத்த ஆண்டுக்கு ஒன்றும் குறிப்பு இல்லை அந்த ஆண்டு என்னவெல்லாம் செய்தோம் என்று பார்க்கின்றபோது சிறந்த முறையிலே உங்களை பாராட்டுகின்ற அளவுக்கு உங்கள் அமைச்சரவை பணியாற்ற வேண்டும், அதிகாரிகளும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கதர் வாரியத்திலே ஏதோ வெளிமாநிலங்களிலே உற்பத்தி செய்கின்ற அந்தத் துணியை வாங்கி இங்கேவந்து ஒருகமிஷன் வைத்திருக்கின்ற ரிபேட்டுகளைகழித்து விற்பனைநிலையமாக இருக்கின்றதே தவிர அவர்கள் என்ன உற்பத்தி செய்கின்றார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். தொடர்ந்து கதராடை அணிகின்றவன் நான். அதனாலே இன்றையதினம் நான் சொல்கிறேன். கதர் உற்பத்தியிலே நம்முடைய மாநிலத்திலே அதற்கு

ஊக்குவிப்பதற்கு என்ன செய்திருக்கிறார்கள், என்னென்ன துணிகள் இங்கே தயாரிக்கப்படுகின்றன, ஏன் இந்தத் துணிகளை எல்லாம் இங்கே தயாரிக்கக்கூடாது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். பீகார், ஆந்திரா, இன்னும் பல மாநிலங்களிலிருந்து வருகின்ற துணிக்கு நம்முடைய கதர் இலாக்காவிலே ஒரு கிராக்கி இருக்கிறது. அதை உடுத்துகின்றவர்களுக்குத் தெரியும். அதை ஏன் இங்கேயே தயாரிக்கக்கூடாது என்று பார்த்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கதர் இலாக்காவிலே நல்ல ஊறுகாய், அப்பளம், வற்றல் எல்லாம் தயார் செய்கிறார்கள். அதை இன்னும் அதிக அளவில் தயாரித்து, இங்கேகூட, விற்பனை நிலையங்கள் பல இடங்களில் ஏற்பாடு செய்து விற்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும். வெளியிடங்களில் பல ஆர்டர்கள் இருக்கின்றன. அதற்குத் தகுந்த அளவில் அதிகப் பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து, அதை ஊக்குவிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல்தான் டெயிலரிங் கூட, அவர்கள் கொஞ்சம் அறிந்த தொழில். அதைச் செய்வதற்கு, டைபிங் அது மாதிரியான கிளரிக்கல் ஒர்க்—கிளரிக்கல் ஒர்க் என்றால் பெரும்பான்மையான அந்த அளவிற்கு இல்லை என்று சொன்னாலும் கூட, இன்றையதினம் கம்ப்யூட்டர் துறையிலே பெண்கள் அதிகமாக ஆர்வம் காட்டுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலேயுமாவது அந்தக் கம்யூட்டர் துறையிலே அவர்களை ஊக்குவிப்பதற்கு, டிரெயினிங் சென்டர் வைக்க ஏற்பாடு செய்யமுடியுமா என்று பார்க்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நாம் அதிக வேலைவாய்ப்புக்கள், 30 சதவிகிதம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு என்று அறிவிப்புக் கொடுத்தாலும்கூட, நாம் அவர்களை ஆயத்தப்படுத்தவேண்டும், தயார் படுத்த வேண்டும். 30 சதவிகிதம் கொடுக்கின்றபோது, அறிக்கையிலே வந்தால் மட்டும் போதாது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு ஆங்காங்கே பெண்களுக்கு நல்ல உற்சாகப்படுத்தி அவர்களுக்கு, அவர்கள் என்னவெல்லாம் நினைக்கிறார்களோ, என்னென்ன துறையிலே அவர்களுக்கு ஊக்கம் இருக்கிறதோ, அந்தத் துறையில் ஊக்குவித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடிக் கொடுக்க முயற்சி எடுக்கவேண்டும். எல்லாப் பெண்களுக்கும், ஏதோ கிராமத்தில் இருக்கின்ற பெண்களுக்கு—அம்மையார் அவர்கள் சொன்னதுபோல், 3 மாதத்திற்குக் குறையாமல் அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அந்த சமயத்தில் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று சொன்னார். இங்கே கூட அந்தந்த சமயங்களில் கிடைக்கின்ற காய்கறிகள், பழவகைகள் இன்னும் அந்த வட்டாரத்திலே கிடைக்கின்ற ரா—மெட்டீரியல் என்னென்ன கிடைக்கிறதோ அதை சிறு, சிறு கைத்தொழிலிலே பயன்படுத்தமுடியுமா என்றும் வேலைவாய்ப்பு கொடுக்கமுடியுமா என்றும் பார்த்து அதிக அளவில் வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய அளவிற்கு உற்சாகப்படுத்த வேண்டும் என்று நான் இந்த சமயத்தில் சொல்லிக்கொள்வேன்.



நம்முடைய சத்துணவு மையத்திலே பெரும்பான்மையாக செயல்படுவோர்கள் பெண்களாக இருக்கிறார்கள். அவர்கள் அதிகமாகச் செயல்படவில்லை, சரியாக இல்லை, அங்கங்கு குறைபாடு இருக்கிறது, அதிக அளவில் இருக்கிறது என்று சொல்வது—மேற்பார்வையாளர்களாக இருக்கிறவர்கள் ஆண்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதை இவர்கள் கட்டாயம் கேட்கவேண்டிய நிலை, நிர்பந்தம் இருக்கிறது. குறிப்பாக, அவர்களையெல்லாம் அணுகிக் கேட்கின்றபோது, எங்களுக்குக் கொடுக்கின்றபோதே அளவு, எடை குறைத்துக் கொடுக்கின்றார்கள், அதை வைத்துத்தான் இந்தக் குழந்தைகளுக்கு பரிமாறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த ஆண்கள், மேற்பார்வையிடுகிறவர்கள், கொடுக்கிறவர்கள், ஏதோ குடும்பத்தை நடத்துகின்ற ஆண்கள், இதுதான் இருக்கிறது, இதை வைத்து சரி பண்ணு, எப்படியாவது இந்தக் குடும்பத்தை நடத்து என்று சொல்லுகிற மாதிரி கொடுக்கின்றபோது, 4 முட்டை என்றால் 3 முட்டையை வைத்து இந்த மாதத்திற்கு நீங்கள் சரிக்கட்டுங்கள், இந்தக் குழந்தைகளுக்குக் கொடுங்கள் என்று சொன்னால், அதிலே கெட்டிக்காரத்தனமாக எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம், ஆற்றல் அவர்களுக்கு இருந்தாலும்கூட, கடைசியிலே பார்க்கும்போது குறை வருகின்றது. இந்த அமைப்புக்கு வழங்குகின்ற சிவில் சப்ளைஸ் இலாக்காவிலே தான் இந்தக் குறை இருக்கிறது. அவர்கள் குறித்த அளவிற்கு நல்ல அளவோடு, தரமான உணவுப் பண்டங்களைக் கொடுப்பார்கள் என்று சொன்னால், இங்கே வழங்குகிறவர்களும் தாராளமாக வழங்குவார்கள். இருக்கிறதை வைத்து எப்படியாவது வழங்குங்கள் என்று சொல்லும்போது, அவர்களுக்கு சங்கடமும், கஷ்டமும் வருகிறது. குறைந்த ஊதியமாகவும் இருக்கிறது. அந்த ஊதியத்தை உயர்த்துவதற்கு ஏதாவது முயற்சி எடுக்கமுடியுமா என்று பார்க்கவேண்டும்.

வாரத்தில் எல்லா நாட்களுக்கும் விடுமுறை இல்லாமல் பணியாற்றக்கூடி ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒருநாளை விடுமுறை விடுவதில் ஒன்றும் தவறில்லை. பள்ளிக்கூட நாட்களில் குழந்தைகளுக்கு உணவு அளிப்பது நம்முடைய கடமை. இருப்பினும் பள்ளிக்கூடம் இல்லாத நாட்களிலும் நாம் உணவு அளிக்க வேண்டும் என்று சொன்னால் குறிப்பாக, இந்தத் துறையிலே அதை எல்லாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அதிலே எதுவும் சங்கடம் இருக்காது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், உணவு விநியோகத் துறையை இந்த இலாக்கா எடுத்து நடத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். நியாய விலைக் கடைகளை எப்படியாவது கன்ஸுமர் கோஆபரேடிவ் சொசைட்டி, அதாவது பெண்களே நடத்தக்கூடிய கன்ஸுமர்

கோவாப்ரேடிவ் சொசைட்டியை இவர்கள் எடுத்து, எடை குறையாமலும், தரமான நல்ல உணவுப்பண்டங்களை நியாய விலைக்கு விற்பதற்கு அவர்களிடத்தில் விடப்படுவது இயலுமா என்று, அமைச்சர் அவர்கள் முதலமைச்சரிடத்திலே கூடிப் பேசி, இந்த நியாய விலைக் கடைகளை, பெண்களே நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கிராமப்புறத்திலே ஏராளமான பேர் முதியோர் பென்ஷன் கிடைக்காமல் இன்றைய தினம் இருக்கிறார்கள். நம்முடைய இலாக்காவிலே முதியோர் பென்ஷன் கொடுக்கிறோம். விதவைகள் பென்ஷன் கொடுக்கிறோம். ஏதோ கொஞ்சம் ஆதரவற்ற நிலையில் இருக்கிறவர்களுக்கு எல்லாம் உதவி அளிப்பதாக இருக்கிறது. அவை அவர்களிடத்தில் எட்டிச்செல்லவில்லை. அந்தமாதிரி எல்லாம் அரசாங்கம் நடக்கிறது, அரசாங்கத்திலே உதவி அளிக்க இருக்கிறார்கள் என்ற நிலை அந்தக் கிராமத்திற்குப் போய் எட்டவில்லை.

(பிற்பகல் 12-10)

நான் சமீபத்தில் என்னுடைய தொகுதிக்குச் சென்றபோது ஏராளமான பேர் முதியோர் பென்ஷன் கேட்டு என்னிடத்தில் மனுக்களை கொடுத்து இருக்கிறார்கள். அவைகளை இலாக்காவிற்கு அனுப்பி வைத்து இருக்கிறேன். இதற்கு முன்னால் இருந்தவர்கள் அவைகளை ஏன் ஏற்றுக்கொள்ள வில்லை என்பது தெரியவேண்டும். அதற்கு ஒவ்வொரு தாலுக்கா விற்கும் எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள்? இல்லை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு பணம் ஒதுக்குகிறார்கள்? இவைகளையெல்லாம் ஒழுங்காக செலவு செய்கிறார்களா என்று பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கு இவ்வளவு பேருக்குத் தான் வழங்கப்படவேண்டும் என்ற எண்ணிக்கையின் அடிப்படையில் இருந்தது. இப்போது அந்த எண்ணிக்கை அடிப் படை தகர்க்கப்பட்டு தகுதி உள்ள எல்லோரும் அந்த முதியோர் பென்ஷன் தொகையைப்பெறலாம் என்ற அறிவிப்பை அரசு அறிவித்துள்ளது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக முதியோர் பென்ஷன்; விதவைகளுக்கு அளிக்கக்கூடிய பென்ஷன் ஊனம் உற்றவர்களுக்கு அளிக்கக்கூடிய பென்ஷன் இவைகள் எல்லாம் காலதாமதம் ஆகாமல் கொடுக்கவேண்டும். அவர்களிடமிருந்து ஒன்றும் எதிர்பார்க்காமல் அவர்களுக்கு அந்த மானியத்தை



வழங்குவதற்கு முன்வரவேண்டும். முதியோர் பென்ஷன் வேண்டும் என்று சொன்னால் அவர்களை 4, 5 தடவை நடக்க வைத்தால் நடக்கிறபோதே மூர்ச்சையாகி போய்விடுவார்கள். அதேமாதிரி ஊனம் உற்றவர்கள் பல தடவை நடந்து வர அவர்களால் முடியாது. அவர்களை நடக்க விடக்கூடிய நிலை இருக்கக் கூடாது. அவர்கள் மனு கொடுக்கிறபோது குறித்த காலத்தில் ஒரு மாதத்திற்குள் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதுபற்றி இலாக்காவில் கேட்டால் இந்த ஒரு வேலை மட்டும் எங்களுக்கு இல்லை, மற்ற வேலைகளும் இருக்கிறது என்று சொல்லி அதனால் இது தாமதம் ஆகிறது. ஏற்கனவே அவர்கள் ஆதரவு இல்லாமல் இருக்கிறார்கள்; அதோடு சேர்ந்து ஆதரவு இல்லாமல் இருக்க வேண்டும் என்ற நிலையில் இதைப்பற்றி யாரும் கேள்வி கேட்டு அதற்கு பதில் சொல்லக்கூடிய அளவில் இல்லாததால் கால தாமதம் ஆகிறது. அதை தவிர்க்கவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பஸ்ஸில் இந்த ஊனம் உற்றவர்கள் போய் வருவதற்கு ஏதோ பாஸ் அளிப்பதாக இருக்கிறது. குறிப்பாக இங்கே இருக்கின்ற டவுன் பஸ்களில் அனுமதிக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதை அனுமதிப்பதில், பொதுவாக பஸ்ஸில் அனுமதிக்கும்போது டவுன் பஸ்ஸில் போனால் என்ன? நீண்ட தூரப் பஸ்ஸில் போனால் என்ன, எந்த பஸ்ஸில் போனாலும் அவர்களுக்குக் கொடுப்பதில் ஒன்றும் இல்லை. அப்படி ஒன்றும் நாடு முழுவதும் ஊனம் உற்றவர்கள் அதிகமாக இருப்பார்கள் என்று சொல்லமுடியாது. அதனால் பெரிய நஷ்டம் நம்முடைய போக்குவரத்து இலாக்காவிற்கு வந்துவிடாது. அதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விளம்பரத்திற்கு நிறைய நாம் செலவிடுகிறோம், இந்த விளம்பரங்கள் பெண்கள் மத்தியில் அதிகமாக போய் சேரவேண்டும். அவர்களுக்கு எல்லாம் இந்த அரசு என்ன எல்லாம் செய்து இருக்கிறது; என்ன என்ன மானியம் எல்லாம் அளிக்க இருக்கிறது, என்ன என்ன உதவி எல்லாம் செய்ய இருக்கிறது என்பதை எல்லாம் விளம்பரம் மூலம் அவர் களுக்கு தெரியப்படுத்தவேண்டும். மகளிர் மன்றத்தை கொஞ்சம் அதிகமாக அந்த அந்த மாவட்டங்களில் இருக்கின்ற மாவட்ட வளர்ச்சி துறைகளின் மூலம், சமூக நலத்துறையின் மூலம் அவர் களை அழைத்துப் பேசி அவர்கள் இடத்தில் இந்த மாதிரி இந்த அரசு பெண்களுக்கு என்று 30 சதவீதம் எல்லாத் துறைகளிலும் ஒதுக்கி அவர்களை ஊக்கப்படுத்தியிருக்கிறார்கள். அதை நீங்கள் எண்ணிப் பார்த்து தயார் செய்து கொண்டு தயார் ஆகவேண்டும். இதை எல்லாம் நீங்கள் பெறுவதற்கு தயாராக இருக்கவேண்டும் என்று அவர்களுக்கு சொல்லி நல்லமுறையில் அவர்களை ஊக்கப் படுத்தவேண்டும் என்று சொல்லி, இந்த இலாக்காவுக்கு அளித்து இருக்கின்ற பணம் செம்மையாக இந்த ஆண்டு நல்லவிதமாக அந்த மக்களுக்கு தக்க வகையில் போய்ச் சேரவேண்டும். சென்ற ஆண்டு மாதிரி இருந்து விடாமல் கணக்கோடு புத்தகத்தில் இருக்கின்ற நிலையில் இல்லாமல் அவர்களுக்குப் போய்ச் சேரும்

படியாக இந்த அமைச்சர் அவர்களும், இதை சார்ந்து இருக்கின்ற அதிகாரிகளும் உற்சாகத்தோடு பணியாற்றி நல்ல பெயரை அடுத்த வருடம் நாங்கள் பாராட்டும்படியாக நடக்கவேண்டும் என்று சொல்லி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன், நன்றி! வணக்கம்.

திரு எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன், கதர் கிராமத் தொழில்கள் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்லி அமர விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த சத்துணவுத் திட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு இதனால் ஏற்பட்டுள்ள சமூக பொருளாதார மாறுதல்கள் என்ன என்பதை அரசு ஆய்வு செய்து இருக்க வேண்டும். குறிப்பாக ஒரு 'பிராஸ்பெக்ட்வ் அசெஸ்மெண்ட்' என்று சொல்வார்களே அந்த வகையில் ஆண்டுக்கு ஆண்டு ஏறக்குறைய 150 கோடி ரூபாயை நம்முடைய வரிப் பணத்திலிருந்து நாம் செலவழிக்கிறோம். இந்த செலவினத்தின் வாயிலாக என்ன மாறுதல்கள் ஏற்பட்டு இருக்கிறன என்பதை அறிய மக்களுக்கு உரிமை உண்டு. சத்துணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு நமமுடைய பள்ளிகளில் மாணவ, மாணவியர் எண்ணிக்கை எவ்வளவு உயர்ந்து இருக்கிறது? இந்த சத்துணவு போடுவதால் எவ்வளவு உயர்ந்து இருக்கிறது? அது மட்டும் அல்லாமல் அந்த டிராப் அவுட்ஸ் என்று சொல்வார்களே பள்ளிக்கு வராமல் இடையில் நின்று விடக்கூடிய சூழ்நிலை பல்வேறு காரணங்களால் அதுவும் கிராமப்புறங்களில் வசதி வாய்ப்புகள் ஏழை எளிய குடும்பங்களில் இல்லாத காரணத்தால் அவர்கள் நின்று விடுகிறார்கள். அதிலே ஏதாவது மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்பதையும் அரசு பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். இல்லையென்றால், இது கேட்பதற்கு ஒரு நல்ல திட்டமாக இருக்கும். அதைக்குறித்து யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவும் மாட்டார்கள். இதில் அரசியல் நுழைந்துவிடுகிற காரணத்தால் நான் முந்தி, நீ முந்தி என்று இதைக்குறித்து ஆதரவு தெரிவிப்பவர்களாகத்தான் இருப்பார்களே தவிர இதனால் ஏற்படுகின்ற சாதக பாதகங்களை அரசியலுக்கு அப்பாற்பட்டு சமுதாய நலன் கருதி சொல்லக்கூடியவர்கள் நாட்டிலே இன்றைக்கு குறைந்து வருகிறார்கள். எனவே 150 கோடி ரூபாய் அளவிற்கு ஒவ்வொரு ஆண்டும் நம்முடைய செலவினங்களிலே சேர்க்கப்பட்ட ஒரு பெரும் தொகையை நாம் செலாவணிக்கு விடப்படும்போது எதற்கு இதை செலவழிக்கிறோமோ அந்த நோக்கம் உண்மையாக நிறைவேறுகிறதா என்று குறிப்பாக ஆய்வு செய்து அதனுடைய முடிவுகளையெல்லாம் நாட்டுக்கு அறிவிக்கிற பொறுப்பு அரசுக்கு உண்டு. அதை இவர்கள் செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

வயிற்றுக்கு உணவு அளிக்கிற இடங்களில் குறிப்பாக ஒழுக்கத்திற்கான அடிப்படையையும் முறையாக அங்கே அமைக்கப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறே



நம்முடைய குழந்தைகளெல்லாம் கையிலே தட்டேந்தி உணவுக்காக கியூ வரிசையிலே நின்று வருங்காலத்திலே நம்முடைய தலைவர்களாக ஆகப்போகிறவர்கள், ஒரு தாழ்வு மனப் பான்மைக்கு ஆளாவது என்பது. கல்விக்காக அவர்கள் அந்த இழிநிலையை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருந்தாலும் அதையும் சமுதாயம் ஏற்றுக்கொண்டாலும், எந்த அளவிற்கு ஒழுக்கத்திற்கு சிறு வயதிலேயே பிஞ்சுசி உள்ளங்களாக இருக்கிற உள்ளங்களில் எந்த அளவிற்கு நீங்கள் இடம் அளிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்துதான் நீங்கள் உணவு அளிக்காவிட்டாலும் ஒழுக்கத்திற்கு வழிவகுத்தாலே அதுதான் இப்போதிருக்கிற இந்தச் சமுதாயத்திற்கும், வருங்கால சமுதாயத்திற்கும் பயன்படும் என்ற அளவிற்கு இவ்வளவு பெரும் தொகை சமுதாயத்தினுடைய வருங்காலத்திற்காக, ஒரு ஒழுக்கமான சமூதாயம் உருவாவதற்காகப் பயன்படுத்தப்படுவது ஏற்புடையதாக இருக்கும் என்பதை நான் ஆட்சியாளர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போது 'சர்வீஸ் ஹோம்ஸ்' என்று அரசு 6 இடங்களில் தொடங்கி இருக்கிறது என்று கருதுகிறேன். இந்த 6 இடங்களில் ஒரு இடம் சென்னையையொட்டிய ஒரு இடத்தில் இருக்கிறது. ஆனால் ஏனைய 5 சர்வீஸ் ஹோம்களும் மாவட்டங்களிலேதான் இருக்கின்றன. சென்னை மாநகராட்சிக்குள் ஒன்றுமே இல்லை. அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை சென்னைக்கு அந்த சர்வீஸ் ஹோம்கள் தேவையில்லை என்ற முடிவிற்கு அரசு வந்திருக்கிறதா? அப்படி வந்திருக்குமேயானால் அதற்கு என்ன காரணம் என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன் தனியார்கள் நடத்துகின்ற சர்வீஸ் ஹோம்கள் கூட சென்னையிலே இல்லை என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த இந்த கொள்கை விளக்க நூலிலே நான் கண்டேன் எனவே, சென்னையிலே மூன்று பாராளுமன்ற தொகுதிகள் இருக்கின்ற அடிப்படையிலேயாவது, மத்திய சென்னை, வட சென்னை, தென் சென்னை என்ற அளவிற்காவது எடுத்துக்கொண்டு சர்வீஸ் ஹோம்களை இந்த மூன்று தொகுதிகளிலும் ஒவ்வொரு சர்வீஸ் ஹோம்களை ஏற்படுத்துவதற்கு பூர்வாங்கமாக அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக சென்னைக்கு என்று ஒரு சிறப்புத் திட்டமே வகுக்கப்பட வேண்டும். ஏனெனில் சென்னையில், உங்களுக்கெல்லாம் தெரியும். குறிப்பாக பெண்மணிகளுக்கு வேலைவாய்ப்பு என்பது கிடையாது. கிராமப்புறங்களிலே இருக்கின்ற பெண்கள் விவசாய வேலைகளிலே ஈடுபடலாம். பயிர் தொழிலிலே ஈடுபடலாம். விவசாயக் கூலிகளாக அவர்கள் அங்கே தங்களுடைய வாழ்க்கையை நடத்தலாம். அதற்கான சாதனங்களையும் அவர்கள் தேடிக்கொள்ளலாம். ஆனால் சென்னையிலே உள்ள ஏழை எளியவர்கள் அதிலும் பெண்கள், சாலைகளிலே வாழக் கூடியவர்கள், தாழ்த்தப்பட்டோர்

குடியிருப்பு என்று சொல்லக்கூடிய அந்த நெருக்கடியான இடங்களிலே வசிக்கக்கூடியவர்கள் அதிலும் பெண்கள் பல்வேறு வகையிலே ஏமாற்றப்படுகிறார்கள். அந்த விவரங்களுக்கெல்லாம் நான் போக விரும்பவில்லை. அவைகளையெல்லாம் விளக்கிப் பேசுவதுகூட ஏற்புடையதல்ல. அது பொது நலனுக்கு உகந்ததாகக்கூட இருக்காது என்ற காரணத்தினால் நான் அதையெல்லாம் சொல்ல விரும்பவில்லை. பெண்களுடைய மானத்தை காப்பாற்ற வேண்டும். கண்ணியத்தை உயர்த்த வேண்டும் அவர்களுக்கு சம அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்று பேசப்படுகின்ற இந்தக் கால கட்டத்தில் சென்னை நகரத்திலே, நாம் இருக்கிறோமே, நம்முடைய நிழலிலேயே என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் பார்க்க வேண்டும். நீங்களெல்லாம் இந்த சேப்பாக்கம் தொகுதியிலேதான் இருந்து கொண்டு இருக்கிறீர்கள். சட்டப்பேரவை உறுப்பினர்கள் போய் தங்க வேண்டுமென்று சொன்னால், என்னுடைய தொகுதிக்குத்தான் வர வேண்டும்.

(பிற்பகல் 12-20)

எனவே நீங்கள் எல்லாம் கொஞ்சம் பரிவு காட்ட வேண்டும். பலமாடி கட்டடம் இருக்கிறது. அங்கிருந்து கொஞ்சம் கீழே வந்து பார்த்தால் பக்கத்தில் லாக் நகர் இருப்பதைப் பாருங்கள். இப்போது மேம்பாலம் கட்டப்படுகிறது. சென்ட்ரல் இரயில் நிலையத்தைவிட்டு வெளியே சென்னை நகரின் எழிலார்ந்த காட்சியைக் காண முடிகிறது. வெளியே வந்து, கொஞ்சம் தூரம் பார்த்தால் இதுதானா சென்னை நகரம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறது. கட்டப்பட்டு வருகின்ற மேம்பாலத்தில் ஏறி, கீழே வருகின்ற வழியில் இருக்கிறது கூவம். கூவத்தை ஒட்டி வந்தால், அதற்கு பக்கத்திலே 'பரியல் கிரவுண்ட்' இருக்கிறது. அங்கே ஒரு உலகமே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப்பை வகிக்கிற காரணத்தால் ஒரு தடவை அங்கே வந்து பார்க்க வேண்டுமென்று அழைக்கிறேன். அந்த பரியல் கிரவுண்ட் இருக்கிற நகருக்கு நம்முடைய சத்தியவாணி முத்து அம்மையார் பெயரை வைத்திருக்கிறார்கள். அந்த நகருக்கு சத்தியவாணி முத்து நகர் என்று பெயர். அங்கே வந்து பாருங்கள். பெண்களுக்காக நீங்கள் நடத்துகிற சர்வீஸ் ஹோம், பெண்கள் முன்னேற்றத்திற்காக நீங்கள் போடுகிற திட்டங்கள் எந்த அளவுக்குத் தேவைப்படும் என்பதை வந்து பாருங்கள். அவர்கள் வாழ்வதற்கு உணவு இல்லாவிட்டாலும் கூட, உடை இல்லாவிட்டாலும் கூட தாங்கிக் கொள்வார்கள். ஆனால் பெண்கள் கண்ணியத்தோடும் மானத்தோடும் வாழ முடியாத சூழ்நிலையில் அங்கே இருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்த்து, அங்கே ஒரு சர்வீஸ் ஹோம் அல்லது பாதுகாப்பு இல்லத்தை ஏற்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.



மாவட்டங்களில் பாதுகாப்பு இல்லங்களை வைத்திருக்கிறீர்கள். அதைப்போன்று சென்னையிலும் வைக்க வேண்டும். குறிப்பாக என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் சத்தியவாணி முத்து நகரில் பாதுகாப்பு இல்லம் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேவை என்றால் மற்ற இடங்களிலும் வைத்துக் கொள்ளலாம். மாண்புமிகு உணவு அமைச்சர் தொகுதியான புரசவாக்கம் இருக்கிறது; அங்கே வைக்கலாம். இப்படி மற்ற தொகுதிகளிலும் வைத்துக்கொள்ளலாம். எப்படி இருந்தாலும் சென்னை மாநகரில் குறைந்தது 3 இடங்களிலாவது வைக்க வேண்டும்.

இப்போது மகளிர் மன்றங்கள் என்ற முறையில் மாநிலம் முழுவதும் 11,525 மகளிர் மன்றங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த மன்றங்களிலே நிரந்தர பணியாளர்கள் இது வரையில் நியமிக்கப்படவில்லை. ஒரு 'குவார்ட்டருக்கு' 90 ரூபாய் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாதம் 30 ரூபாய். இந்த 30 ரூபாயைக் கொண்டு என்ன செய்ய முடியும்? 30 ரூபாயை வாங்கிக் கொள்வார்கள்; ஆனால் பணி நடக்காது. பணத்தை வாங்கிக்கொள்வார்கள்; காரியம் நடக்காது. ஏனென்றால் அவர்கள் தங்குகிற இடத்திலிருந்து அந்த இடத்திற்கு வந்து போக பஸ்ஸுக்கு தினம் இரண்டு ரூபாய் என்றால் கூட மாதம் 60 ரூபாய் ஆகிவிடுகிறது. ஆனால் நீங்கள் கொடுப்பது மூன்று மாதத்திற்குத்தான் 90 ரூபாய். ஏன் இப்படி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? ஒரு காரியத்தை செய்தால் நல்ல முறையில் செய்யுங்கள். இல்லை என்றால் செய்யாமல் விட்டுவிடுங்கள். தற்காலிகமாக 10 பேர்களை வைத்துக் கொள்வதை விட இரண்டு பேரை நிரந்தரமாக வைத்துக் கொண்டால் கூட பரவாயில்லை. அப்படி வைத்து, வேலை செய்ய ஏற்பாடு செய்யுங்கள். அது இல்லாமல் சர்வீஸ் ஹோம் நடத்துகிறோம், பாதுகாப்பு இல்லம் வைக்கிறோம் என்று சொல்லி, குறைபாடு உடைய பணிகளைச் செய்யாதீர்கள். அதனால் சமுதாயத்திற்கு எந்தவிதமான பயனும் இல்லை. அரசாங்கக் குறிப்புகளை அலங்காரம் செய்வதற்குத்தான் அது பயன்படும். போடுகிற திட்டங்களால் சமுதாயத்திற்கு என்ன வெல்பேர் ஏற்பட்டிருக்கிறது என்பதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். குறிப்புகள் கொடுக்கிறீர்கள். பெர்பாமன்ஸ் பட்ஜெட் ஒவ்வோராண்டும் வருகிறது. நல்ல அழகாக இருக்கிறது; அழகான புத்தகத்தை தருகிறீர்கள். ஆனால் அது நாட்டுக்குப் பயனுடையதாக இல்லை என்பது குற்றச்சாட்டாக இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஆடுமாடு வாங்க கடன் கொடுக்கிறீர்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு இப்போது அவருடைய ஊரிலே, ஆற்காடு தொகுதியிலே தொடர்பு குறைந்துவிட்டது; அவர் சென்னையிலே குடியேறிவிட்டார். அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். அவர்களுக்கு அவ்வளவாகத் தெரியாவிட்டாலும், குறிப்பாக பெண்களுக்கு நன்றாகத் தெரியும் ஆடுமாடு வாங்கக்கடன் கொடுக்கப்படுகிறது. அந்தக் கடனைப்பெற்று, ஒரே ஆடு 30 தடவை கூட வாங்கப்படுகிறது. ஏன்? 31-வது தடவையாகக் கூட விற்கப் படுகிறது.

மாண்புமிகு திரு. ஆர்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆடுமாடு பற்றி எல்லாம் சொல்கிறார்கள் நான் சென்னைக்கு வந்துவிட்டேன் என்றும் சொல்கிறார். ஆடுமாடு வாங்குவதற்கு கடன் வழங்குவது நான் தான். ஆகவே, அதுபற்றி நன்றாகத் தெரியும். ஒரு ஆடு 30 தடவை அல்லது 31 தடவை ரொட்டேஷன் வருவதில்லை. ஏனென்றால் அரசாங்கம் அவ்வளவு வேகமாகப் பணியாற்ற வில்லை. ஒரு தடவை ரொட்டேஷன் வரவேண்டுமென்றால் மூன்று மாதம் ஆகும். அதற்குள்ளே கசாப்புக்கடைக்காரன் எங்கே கொண்டுபோக வேண்டுமோ அங்கே கொண்டுபோய் விடுவான்.

வேறுசில விவகாரங்களில் அதாவது மாடுகள் விஷயத்தில் அப்படி நடக்கிறது என்று அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக் கிறது. தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுத்து வருகிறது.

திரு எம். அப்துல் லத்தீப் : இதிலே அடிப்படையான ஒரு சமுதாய நோக்கம் நிறைவேற வேண்டும். ஏதோ ஊரிலே இருக்கின்ற ஒருசிலர், பெரிய மனிதர்களாக இருக்கக்கூடியவர்கள் அரசியல் ரீதியாக ஊருக்குப் பெரிய மனிதர்களாக இருக்கக் கூடியவர்கள், சாதாரண மனிதர்களைப் பயன்படுத்தி அவர்களுடைய படிவங்களை நிரப்பி எப்படி, எப்படி நடக்கிறது என்பதெல்லாம் தெரியும். எனவே இதைத் தடை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இந்தத் திட்டமே வேண்டாம். முறையாக சமுதாயத்தினுடைய உயர்வுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள். ஆடுமாடுகள் கொடுக்கிறோம் என்று சொல்கிற அடிப்படையிலே கடன் வாங்குவது — அதிலே எத்தனை தட்சிணை தெரியுமா ? கடன் படிவம் கொடுக்கிறபோது தட்சிணை கொடுக்கவேண்டும். அழைத்துக் கொண்டு போகிறவனுக்கு தட்சிணை கொடுக்கவேண்டும். இப்படி எல்லாம் தட்சிணை கொடுக்க வேண்டி இருக்கிறது. 3000 ரூபாய் கடன் பெறவேண்டும் என்றால் என்னுடைய தொகுதியிலே ஒருவர் 1800 ரூபாய் செலவழித்து 3000 ரூபாய் வாங்கியிருக்கின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. மாடும் வீட்டுக்கு வரவில்லை; காட்டிலேயும் காணவில்லை; பணம் மட்டும் வயிற்றுக்குச் சென்றுவிட்டது. அதுதான் கண்ட பலன் என்ற காரணத்தால் இந்தத் திட்டம் குறித்து சரியான நெறிமுறைகளை உண்டாக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அனாதை விடுதிகளுக்கு மானியம் வழங்குகின்ற முறை இருக்கிறது. தற்போது இருக்கின்ற நிலைமையில் மாநிலம் முழுவதும் ஏறக்குறைய 22 அனாதை விடுதிகள் இருப்பதாக உங்களுடைய குறிப்பிலேயே நான் கண்டேன். இது அரசின் சார்பாக அல்லது தனியார் நடத்துகின்ற அனாதை விடுதிகள். ஆனால் தனியார் நடத்துகின்ற அனாதை விடுதிகள் முறையாக நடத்தப்படுகின்றன. அவர்கள் ஒரு தர்ம சிந்தனையோடு நடத்துகிறார்கள். ஏதோ ஒரு குறிப்பிட்ட கொள்கையின்



அடிப்படையில் நடத்த வேண்டுமே என்பதற்காக நடத்தவில்லை. அவர்கள் ஒரு தர்ம சிந்தனையோடு நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட அனாதை விடுதிகளுக்கு நாம் முறையாக கொஞ்சம் மானியம் வழங்கினால் அனாதை இல்லங்கள் முழுப்பலனையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இப்போது மார்க்க அடிப்படையில் முஸ்லீம்கள் நடத்து கிறார்கள்; கிறிஸ்தவர்களும் நடத்துகிறார்கள்; சில இடங்களிலே பெரும்பான்மைச் சமுதாயமான இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நடத்துகின்ற அனாதை இல்லங்களும் இருக்கின்றன. ஆனால் அவற்றுக்கு மார்க்க நோக்கங்கள் இருக்கலாம். இவை களைத் தவிர்த்து எல்லா சமயங்களையும் சேர்ந்த பிள்ளைகள் இருக்கும் அனாதை விடுதிகளுக்கு — அப்படி எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து வளர்ந்தால் அதிலே வெறும் வளர்ப்பு என்பது மட்டுமல்லாமல் ஒரு ஒன்றிப்பு உணர்வு ஏற்பட்டு சமுதாயத்திற்குத் தேவையான பரந்த நோக்குடைய பிரஜைகள் உருவாவார்கள். எனவே அரசு அதிலே கொஞ்சம் சிந்தனை செலுத்தி எல்லா மக்களையும் சேர்த்து, அரசே முழுச் செலவையும் செய்யக்கூடிய அளவுக்கு அனாதை விடுதிகளை நடத்தினால் முறையாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

I am not going to take much more time: Nor am I....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோன்பு காலத்தில் இப்படி அதிகமாக உடம்பை வருத்திக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : அடுத்து மறுவாழ்வு இல்லங்கள் அமைப்பது என்பது டாக்டர் கலைஞர்; அவர்களுடைய தர்ம சிந்தனையிலிருந்து தோன்றிய ஒரு திட்டமாகும். கருணாநிதியின் கருணையால் மறுவாழ்வு இல்லங்கள் நாட்டிலே உருவெடுத்து இருக்கின்றன. நலிந்த பிரிவினர், இயலாமையிலே வாடிக் கொண்டிருப்பவர்கள் அதன்மூலம் பயன் பெறவேண்டும் என்பது தான் அந்தத் திட்டத்தினுடைய நோக்கமாகும். ஆனால் இப்போது மறுவாழ்வு இல்லங்கள் என்று சொன்னால் தொழு நோயாளிகள் மட்டும்தான் அங்கே இருந்து, அவர்களுக்கு மட்டும்தான் அந்த மறுவாழ்வு இல்லங்கள் என்ற அளவுக்கு இன்றைக்கு நடைமுறையில் வந்துவிட்டது. எல்லா மறுவாழ்வு இல்லங்களிலும் தொழு நோயாளிகள்தான் அதிகமாக இருக் கிறார்கள். ப்ராக்டிகலாக இதிலே வேறு சில காரணங்களும் உண்டு. தொழு நோயாளிகள் இருக்கின்ற இடத்தில் மற்றவர்கள் போக விரும்புவதில்லை. அது ஒரு காரணம். நீங்கள் சேர்க்க வில்லை என்று நான் சொல்லவில்லை. தொழு நோயாளிகள் இருக்கிறார்களே, அங்கே நாம் எப்படிப் போவது என்ற காரணத்தினால் அவர்கள் வருவதில்லை. அதிலே தொழு நோயாளிகள், மற்றும் தொழு நோயாளிகளுக்கு அப்பாற்பட்டு ஏழ்மை நிலையிலே இருப்பவர்கள் என்று இரு பிரிவினராகப்

பிரித்து விடுவது நன்றாக இருக்கும். உணர்வுகள் காரணமாக தொழு நோயாளிகள் இருக்கின்ற இடத்தில் சென்று தங்கி அவர்கள் மறுவாழ்வைப் பெற விரும்புவதில்லை. எனவே இப்போதிருக்கிற யதார்த்த நிலையில் மறுவாழ்வு இல்லங்கள் அனைத்தும் தொழு நோயாளிகளின் மறுவாழ்வு இல்லங்களாகவே மாறிவிட்டிருக்கின்றன. இதிலே அவர்களுக்கு ஆண்டுக்கு இருமுறை புடவை வேட்டி வழங்கப்பட வேண்டும். தொழு நோயாளிகளை யார் கவனிக்கப் போகிறார்கள்? ஏழைகள்தான் அவர்கள். அவர்களுக்கு மறுவாழ்வு தருவதாகத்தானே சொல்லிச் சேர்த்தீர்கள். அவர்கள் எல்லாம் நிர்வாணமாக இருக்க முடியுமா? அவர்களுக்குச் சாப்பாடு கொடுக்கிறீர்கள். அதுபோல் உடையும் கொடுக்கவேண்டும். எனவே இப்போது இருக்கக்கூடிய நிலையில் புடவை, வேட்டி ஆண்டுக்கு இரண்டு தடவை இலவசமாக வழங்கப்பட வேண்டும். அதுபோல் போர்வை வழங்கவேண்டும். நமக்கெல்லாம் துண்டு கொண்டு வந்து போடுகிறார்கள். இங்கே கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நான் சேர்த்து வைத்திருக்கிற துண்டுகளை எல்லாம் கொண்டுவந்து கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று. இவற்றை மறுவாழ்வு இல்லத்திற்குக் கொடுக்க விரும்பினால் நான்கூட கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அப்படி ஒவ்வொரு எம்.எல்.ஏ.க்கும் போடப் படுகிற துண்டுகளை எல்லாம் மறுவாழ்வு இல்லங்களுக்குக் கொடுத்தால்கூட இது ஒரு பெரிய தர்ம காரியமாக இருக்கும். எனவே வருடத்திற்கு அவர்களுக்கு இரண்டு தடவை வேட்டி, புடவை வழங்கப்பட வேண்டும்.

அடுத்து இப்போது அவர்களுடைய செலவுக்காகக் கொடுக் கப்படுகின்ற தொகை என்று ஒன்றை நிர்ணயித்து இருக்கி றார்கள். அது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது என்பதே தெரியவில்லை. அதை ப்ராக்டிகலாக யோசனை செய்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதைக் கொஞ்சம் பார்க்க வேண்டும். நடைமுறையிலே என்ன என்பதையெல்லாம் பார்த்து, நாடு எங்கே போய்க்கொண்டிருக்கிறது, பணம் எந்த பாதாளத்திற்கு போயிருக்கிறது என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களுக்கு முறையாக உயர்த்தித் தாருங்கள் அது நியாயத்தின் அப்பாற்பட்டதாகும் என்பதை நான் மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

முதலிலே மறு வாழ்வு இல்லங்களை எல்லாம் நிர்வகிக்கும் பொறுப்பு சமூகநலத் துறையிடமே இருந்தது. டாக்டர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய அந்த கால கட்டத்தில், இதை நிரு வகிக்கக்கூடிய பொறுப்பு சமூகநலத்துறையிலே இருந்தது. இப் போது என்னவென்றால் சிறை அதிகாரிகளிடத்திலே மாற்றி யிருக்கிறார்கள். I do not understand the logic. சிறை அதி காரிகளுக்கும் மறுவாழ்வு இல்லத்திற்கும் என்ன ஒற்றுமை இருக்கின்றது? சிறைக் கைதிகளைப்போல் நடத்தப்பட



வேண்டுமா அவர்கள். இப்போது என்ன நடந்து கொண்டிருக் கிறது என்றால் கைதிகளை விட கேடுகெட்ட நிலையில் சிறை அதிகாரிகளால் நடத்தப்படுகின்றனர். சிறை அதிகாரிகள் தான் இப்போது பொறுப்பு. இந்த அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசர் என்று போடப்பட்டவர்கள், சமூக நலத்துறை அதிகாரிகளை விட்டு விட்டு; சிறை அதிகாரிகள், நம்முடைய ஐ.ஜி.ஆஃப் பிரிசன்ஸ் என்று இருக்கிறார்கள் அல்லவா அவர்கள் இன்றைக்கு அட்மினிஸ் ரேடிவ் ஆபிசராக நியமிக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் கைதிகளிடம் எப்படி நடந்து கொள்வார்கள்? அங்கே கொடுக்கின்ற உணவுப்பொருள்கள் மற்ற பொருள்கள் எல்லாம் எந்தெந்த உருவங்களில் எங்கெங்கே போகின்றனவோ?

கடைசியாக நான் கேட்டுக்கொள்வது. அங்கே நிர்வாகம் நடக்க ஆரம்பித்திருக்கிறது. உடனடியாக அரசு மீண்டும் அதை சமூக நலத்துறையிலே உள்ள அதிகாரிகளை நிர்வாகிகளாக நிய மிக்க வேண்டும். சிறை அதிகாரிகள் நிச்சயமாக இருக்கக் கூடாது. அது இருந்தால் அதை விட சமூகக் கொடுமை வேறு இருக்கமுடியாது. இது சமூக நலத்துறை அல்ல சமூக கொடுமை செய்கின்ற ஒரு துறை என்ற பெயர் வந்துவிடும். எனவே தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெண்மணியாக இருப்பதால் நல்ல இரக்க மனம் படைத்த, நல்ல முறையில் செம்மையாகப் பணியாற்றுகின்றவர் என்று சொல்லப்படக் கூடியவராக இருக்கின்றார். I must pay my encomiums also to the Hon'ble Minister. The Hon'ble Minister functions with utmost sense of propriety and reality. She is highly experienced and I have been observing her She has always been composed I expect much more from the Hon'ble Minister, more so the benefits of the Social schemes should reach the persons whom we intend and want them to reach. Thank you very much.

*திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர் களால் கொண்டு வரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

பெண்களுக்கு நிறைய புத்தகத்திலே பார்த்தால் ரொம்ப நல்ல முறையிலே, மிகப் பெரிய திட்டங்கள் எல்லாம் இருக்கிறது. அவைகளையெல்லாம் நான் வரவேற்கிறேன், பாராட்டு கிறேன் ஆனால் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே நேற்றைய தினம் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, யாரோ ஒரு அதிகாரி, அவர் ஒரு பெண்ணை மானபங்கம் படுத்தியாக இங்கே சொன்னார்கள். அப்படிப் பலவிதமான விஷயங்கள் வருகின்றன

[திருமதி ஏ.எஸ் பொன்னம்மாள்] [1989 ஏப்ரல் 21

அங்கே அந்த பெண்ணை மானபங்கப்படுத்தினார்கள், அந்த
ஊரிலே மானபங்கப்படுத்தினார்கள், அங்கே அந்த பெண்
செத்துவிட்டாள் என்றெல்லாம் செய்திகள் பத்திரிகை வாயி
லாகவும், ரேடியோ வாயிலாகவும் கேட்டுக்கொண்டிருக்கிறோம்
இது பெரிய அதிர்ச்சியை அளிக்கிறது. எங்களைப் போன்ற
வர்களுக்கு அதிர்ச்சியை உண்டாக்குகிறது. காரணம் ஒரு பாது
காப்பு இல்லாத நிலைமை எங்கே வந்துவிடுமோ என்ற பயம்
கூட வந்துவிட்டது. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.
நம்முடைய மகாத்மா காந்தி அவர்கள் நாம் இருக்கும் சுதந்திர
இந்தியாவில் ஒரு அழகான மங்கை, இளம் வயது மங்கை,
வைரத்தையும், வைடூரியத்தையும் உடம்பெல்லாம் அணிந்து
கொண்டு இரவு 12 மணிக்கு தன்னந்தனியாக செல்லவேண்டும்
பயம் இன்றி செல்லவேண்டும், அப்பேர்பட்ட ஒரு சுதந்திரத்தை
நான் விரும்புகிறேன் என்று சொன்னார்கள். இந்த சூழ்நிலையிலே
நான் என்னுடைய பணிவான வேண்டுகோளை விடுகிறேன். நாம்
ஏதோ தண்டனை கொடுக்கிறோம். சிறைத் தண்டனை கொடுக்
கிறோம். இப்படி ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தி கொலை
செய்யக்கூடிய அளவுக்கு ஒரு வெறியன் இருப்பான் என்றால்,
அந்தக் கேஸ்களில் குறிப்பிட்ட இரண்டு பேர்களை மட்டுமாகி
லும் தூக்கிலே போடுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்
களானால் இந்தக் குற்றமும் குறையும் என்று நான் கருதுகிறேன்.
மானபங்கப்படுத்துவது அதற்குமேல் சொல்லத் தெரியவில்லை
அதை சொல்லக்கூடாது. அதைச் செய்தால் ஓரளவுக்காவது
கட்டுப்படுத்தமுடியும் என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர்
அவர்கள் பட்ஜெட்டிலே சொல்லியிருக்கின்றார்கள். 30 சத
விகிதம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவேண்டுமென்ற
ஒரு முக்கியமான நல்ல பெரிய திட்டத்தை இங்கே நமக்குக்
கொடுத்திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன், பாராட்
டுகிறேன். அந்த அடிப்படையிலே எடுத்துக்கொள்வோமானால்.
இன்றைக்கு பல பெண்கள் படித்துவிட்டு மிகுந்த சிரமத்தை
அடைந்து கொண்டிருக்கின்றார்கள். இதற்கு நான் ஏற்கெனவே
காங்கிரஸ் காலத்திலே கூட ஒரு விஷயத்தைச் சொன்னேன்.
அது நடை பெறமுடியாது என்ற அளவுக்கு நாங்கள் எல்லாம்
வெளியிலே வந்துவிட்டோம். அதை மீண்டும் வலியுறுத்தி
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய அமைச்சர்
அவர்கள் தலைமையிலே நல்ல அதிகாரிகள் இருக்கின்றார்கள்.
பெண் அதிகாரிகள். ஐ.ஏ.எஸ். படித்தவர்கள் இருக்கிறார்கள்.
வெளிநாடுகளில் நம்முடைய பெண் அதிகாரிகளை அனுப்ப
வேண்டும். ஜப்பான், நார்வே போன்ற நாடுகளில் பெண்கள்
எப்படி செயல்படுகிறார்கள். எவ்வாறு வேலை செய்கிறார்கள்
எப்படி எல்லாம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது
என்பதை எல்லாம் கண்டறிய வேண்டும், இப்படிப்பட்ட



ஏப்ரல் 1989 21] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

நிலைமைகளை எல்லாம் கண்டறிந்து இந்தநாட்டிலே ஆண்களுக்கு
நிகர் சமானமாக பெண்களும் என்கிற நிலையை உருவாக்க
வேண்டும். அந்த நிலைமையில் இங்கேயுள்ள பெண்கள் வாழ்
கிறார்கள் என்ற தத்துவத்தின் அடிப்படையில் திட்டங்களை
உருவாக்க வேண்டும். அதற்கு இங்கே இருந்து பெண்கள்
அடங்கிய குழு ஒன்று ஜப்பான் மற்றும் கடினமாக பெண்கள்
உழைக்கிற நாடுகள் எது எது எல்லாம் இருக்கின்றனவோ அந்த
நாடுகளுக்கு எல்லாம் போக வேண்டும். அவர்கள் போய்
வந்த பிறகு அவர்கள் தரும் திட்டத்தின் அடிப்படையில்
இங்கேயும் ஒரு மாபெரும் திட்டத்தை பெண்களின் நலனுக்
காக உருவாக்குவது என்பது சாலச் சிறந்ததாக இருக்கும்.
இன்றைக்கு இல்லாவிட்டாலும் கூட வரக்கூடிய காலங்களில்.
எதிர்காலத்தில் வரக்கூடியவர்களுக்கு இது நல்ல வாய்ப்பினை
நல்கும்.

அடுத்து. இன்றைக்கு நாம் சத்துணவு கொடுக்கிறோம்.
அருமை தலைவர் காமராஜர் அவர்கள் அவசியம் சத்துணவு
கொடுக்க வேண்டுமென்று திட்டமிட்டு இத்திட்டத்தை
அன்றைக்கு நடைமுறைக்கு கொண்டு வந்தார்கள். ஆனால்
இன்றைக்கோ எல்லா குழந்தைகளுக்கும் கட்டாயம் சத்துணவை
வழங்க வேண்டுமென்ற அடிப்படை லட்சியத்தோடு இத்
திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக 64 இலட்சம்
குழந்தைகள் சத்துணவு சாப்பிடும் நிலையை உருவாக்கியிருக்
கிறோம். அன்றைக்கு, 1976—77 ஆம் ஆண்டில் நான் சோசியல்
வெல்பேர் போர்டில் மெம்பராக இருந்தேன். அப்போது
இன்டகிரேட்டட் சைல்ட் டெவலெப்மெண்ட் ஸ்கீம் (I.C.D.S.)
என்கிற திட்டத்தின் அடிப்படையில் 100 பால்வாடிகளை
திறந்தபோது 100 ஆயாக்களை நியமித்தார்கள். அத்திட்
டத்தை ஆரம்பித்தபோது நான் அங்கு வழங்கப்படுகிற சாப்
பாட்டை வாயில் போட்டு பார்த்தேன். அது 1 மாதம், 2
மாதம் வரை நன்றாக ருசியாக இருந்தது. ஆனால் காலப்
போக்கில் அதை வாயில் போட்டு ருசி பார்த்தால் அதை
சாப்பிட முடியாத நிலை இருந்தது. இப்படிப்பட்ட
நிலை இன்றைக்கும் கூட சில இடங்களில்
இருப்பதாக கண்டறிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
வேதனையோடு இது குறித்து சொல்லியிருக்கிறார்கள். இன்
றைக்கு பல கோடி ரூபாய் செலவு செய்து இத்திட்டத்தை
நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறோம். 64 இலட்சம் குழந்
தைகள் சத்துணவு சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசால்
நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்த திட்டம் சரியாக நடை
பெறுகிறதா, குழந்தைகள் எல்லோரும் சத்துணவு உண்மை
யிலேயே சாப்பிடுகிறார்களா என்பதை எல்லாம் கண்காணித்து
நல்லமுறையில் சத்துணவு திட்டத்தை அமுல்படுத்த வே
ண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவு போடுகிறோம் என்றால் அங்கே காய்கறி என்றால், கத்திரிகாய், தக்காளி போன்றவற்றில் மஞ்சள் பொடியை போட்டு சத்துணவு கொடுக்கிறார்கள். இத்திட்டத்தை இன்னும் நல்லமுறையில் நடைமுறைப்படுத்த என்னுடைய யோசனை ஒன்றை தெரிவிக்கிறேன். அதாவது பெண்களுக்கு இன்னும் வேலைவாய்ப்பை அதிகமாக உருவாக்க வேண்டுமென்ற அளவில் ஒவ்வொரு யூனியனிலும், பள்ளிகளிலும் அங்கே இருக்கிற காலியிடங்களில் காய்கறி, கீரை போன்றவற்றை பயிர் செய்து உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்தால் அதன் மூலம் ஒவ்வொரு பள்ளியிலும் இன்னும் இரண்டு மகளிர் விதம் வேலைவாய்ப்பு பெற வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து, நல்ல பல திட்டங்களை போட்டிருக்கிறோம். 64 லட்சம் குழந்தைகளுக்கு இன்றைக்கு துணிகள் தைத்து கொடுக்கிறோம். அத்திட்டத்தை நான் வரவேற்கும் நேரத்தில் அதிலுள்ள குறைபாடுகளையும் எடுத்துச் சொல்கிறேன். மகளிர் சங்கங்கள் அல்லது தையல் கூடங்கள் மூலமாக இந்த துணிகளை நாம் தைத்து கொடுக்கிறோம். இப்படி தைத்து கொடுக்கிற நேரத்தில் சில சமயங்களில் 10 வயது பையன் என்றால் வயது அடிப்படையில் தைத்து கொடுப்பதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. இந்த வயதில் பையன் உயரமாக வளர்ந்திருக்கிறான் என்றால் சிக்கல் வருகிறது. ஆக சரியாக, அளவாக தையல் அமைய வேண்டுமென்றால் வயது அடிப்படையில் இதை தைத்து வழங்குவது சரியாக இருக்காது. ஆகவே, உண்மையிலேயே இத்திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்றால் ஒவ்வொரு பள்ளியிலும் அல்லது ஆசிரியைகளிடத்திலும் அல்லது சத்துணவு அமைப்டாளர்களிடத்திலும் அல்லது ஐ.சி.டி.எஸ் அல்லது பெண் ஆபீசர் மூலம் இப்பணியை செய்யும்போது நல்ல முறையில் அளவெடுத்துதான் துணிகளை தைக்க வேண்டுமென்ற ஒரு நிலையை உருவாக்கி நடைமுறைப்படுத்தினால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது கொடுக்கின்ற துணிகளை எடுத்துக் கொண்டால் பெண்களுக்கும் சரி ஆண்களுக்கும் சரி சரியாக அவை இல்லை. பெண்கள் அணிகின்ற துணி முழங்கால் வரை இருக்கிறது. பையன்களுக்கு கூட அப்படித்தான். அது போல செருப்பு வழங்குகின்ற திட்டத்தை நான் அன்றைக்கே எதிர்த்தேன். 10 கோடி திட்டம் இது. ஆனால் பயனில்லாதது. இதற்கு 10 கோடி ரூபாய் செலவிடுவது என்பது தண்ணீரில் போடுவது மாதிரி. நல்ல எண்ணத்தோடு தான் இதனை கொண்டு வந்திருக்கிறார்கள். உண்மையிலேயே அத்திட்டம் பயனுள்ளதா? குழந்தைகள் அந்த செருப்பை போடுகிறார்களா அல்லது வேறு யாராவது போடுகிறார்களா போன்ற விஷயங்களை எல்லாம் கண்காணித்து பார்த்தால் நன்றாக இருக்கும். இதிலும் வயதை பார்த்து செருப்பை கொடுப்பது சரியாக இல்லை. அவர்களின் அளவு பார்த்துத்தான் கொடுக்க வேண்டும்.



மேம்பாட்டு அடுத்து' இன்றைக்கு தமிழ்நாடு மகளிர் அதில் ஓர் ஐ.ஏ.எஸ். கழகம் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். இந்த கழகம் சிறப் பெண் அதிகாரியை போட்டிருக்கிறார்கள். அதாவது சிறப்பாக பணியாற்றக் பாக பணியாற்ற வேண்டும். ஒவ்வொரு யூனியனிலும் கூடிய பெண்களை தேர்ந்தெடுத்து கொடுக்கக்கூடிய குறைந்தது ஆயிரம் பேர்களுக்காவது வேலை அல்லது வேறு தொழில் அளவுக்கு தொழிற்சாலைகளையாவது நல்ல திட்டங்களை வாய்ப்புக்களையாவது உருவாக்குவதற்கான அதோடு மட்டுமல்லாமல், உருவாக்க ஏற்பாடு செய்ய வேண்டும்' இருக்கின்றன. அந்த இன்றைக்கு பெண்களுக்கு பலதிட்டங்கள் திருமணத்திற்கு திட்டங்களை இங்கே கொடுத்திருக்கிறார்கள். பணம் கொடுக் கர்ப்ப ஸ்திரிகளுக்கு பணம் கொடுக்கிறோம், கணவன் இறந்து கிறோம், விதவைகளுக்குப் பணம் கொடுக்கிறோம். நல்ல திட்டங்கள்தான். விட்டால் 2000 ரூபாய் கொடுக்கிறோம். முடியுமா என்றால் ஆனால் இது எல்லோருக்கும் கொடுக்க துன்பங்கள் பல இருக்கின்றன. இல்லை. அவர்கள் படக்கூடிய பெண் அமைப்பாளர்களை ஒவ்வொரு எனவே இரண்டு அடைவோருக்கு ஒழுங்காகப் யூனியனிலும் போட்டு, பயன் பார்க்க வேண்டும். போய்ச் சேருகிறதா என்பதைப் யாருக்கு உதவி போய்ச் சேர வேண்டுமோ அவருக்குப் போய்ச் சேரும்படி செய்தால் அது சாலச் சிறந்ததாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40).

இன்றைக்கு 72 தையற்கூடங்கள் மூலமாக நாம் 65 இலட்சம் பேர்களுக்கு துணிகள் தைத்துக் கொடுக்கிறோம். இதை ஒரு தாலுக்காவுக்கு ஒரு சங்கம் என்று ஆரம்பித்து, நல்ல முறையிலே விதம் விதமான துணிகளைத் தைத்து: நம்முடைய நாட்டில் கொடுப்பதோடு, போலீஸ் துறையில் உள்ளவர்களுக்கும் கொடுப்பதோடு, நல்ல தரமான உடைகளைத் தைத்து வெளி நாடுகளுக்கு அனுப்பக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கிக் கொடுத்தால் அது இன்னும் பெண்களுக்குச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தையல் தொழிலில் 22000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இன்னும் படித்துவிட்டு — எம்.ஏ. படித்த பெண்கள், எம்.எட். படித்த பெண்கள், வேலை யில்லையே. ஏதாவது வேலை கொடுங்கள் என்று கேட்கிறார்கள் இந்த நிலை மாற வேண்டுமானால் உடனடியாக ஒன்றைச் செய்ய வேண்டும். 1 முதல் 3 வயதுவரை உள்ள குழந்தைகளை கவனித்துக்கொள்ளும் Creche ஒவ்வொரு ஊரிலும் ஏற்படுத்தி, அந்த ஊரில் உள்ள குழந்தைகளை அங்கே வரவழைத்து,

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1989 ஏப்ரல் 2

அதற்காக அங்கே ஒரு கட்டிடம கட்டி, அந்தக் குழந்தைகளைக் குளிப்பாட்டி, கதை சொல்லி, பேச வைத்து, முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் இப்படிப்பட்ட Creche திட்டத்தினால் படித்த பெண்களுக்கு 500 ரூபாய் சம்பளம் கொடுத்து, வேலை வாய்ப்பை உருவாக்கினால் நிச்சயமாக எல்லாக் குழந்தைகளும் முன்னுக்கு வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அந்தக் கணவன் எத்தனையோ கல்யாணங்கள் செய்து கொண்டு ஓடிவிடுகிறான். அந்தப் பெண்ணுக்கு 2, 3 குழந்தைகள் இருந்தால் அவள் படும் கஷ்டம் நிறைய இருக்கிறது. அந்த விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்குக் குழந்தைகள் இருந்தால், அந்தக் குழந்தைகளை வளர்க்கும் முழு பொறுப்பையும் அரசு ஏற்க வேண்டும். அந்தக் குழந்தைகள் எவ்வளவு படிக்கிறார்களோ, அதற்கு முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டும். இப்போது 100 ரூபாய் புஸ்தகத்திற்கு, துணிமணிக்கு கொடுக்கிறோம். அவர்கள் படிப்பிற்கு என்ன செலவாகிறதோ, அதற்கு முழுப் பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொண்டால், அந்தக் குழந்தைகளும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக என்ஜினியர்களாக, டாக்டர்களாக வரக்கூடிய நிலைமையை உருவாக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு அரிசி கொடுக்கிறோம். அதையெல்லாம் பாராட்டித்தான் பேசினேன். அதற்கு 20 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அரிசியைக்கூட எல்லோருக்கும் நியாயமாக வழங்க முடியவில்லை. உண்மையில் 300 ரூபாய்க்குள்ளே வருமானம் யார் உள்ளார்களோ அவர்களுக்கு அரிசி கிடைக்க வாய்ப்பில்லை. ஏற்கெனவே சர்க்கரை கிடைக்கவில்லை என்று 500 ரூபாய், 700 ரூபாய் என்று வருமானத்தை உயர்த்திச்சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கவில்லை. யாரோ விஷயம் தெரிந்தவர்கள் உடனடியாகப் போய் வா

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, அரிசி கொடுப்பது பற்றி நேற்றும், இன்றும் பேசப்படுகிற காரணத்தாலே ஒரு விளக்கம் சொல்வது கடமை என்று கருதுகிறேன். 20 கோடி ரூபாய் திட்டமென்பது தமிழ்ப் புத்தாண்டுக்கு மட்டுமல்ல. தமிழ்ப் புத்தாண்டு, தீபாவளி, பொங்கல்— 3 பண்டிகைகளுக்கும் சேர்த்து 20 கோடி ரூபாய் திட்டம். அதிலும் அட்டைகளைப் பற்றிச் சொன்னார்கள். இந்த அட்டைகள் எல்லாம் இந்த அரசாங்கம் வந்த பிறகு தயாரித்தது அல்ல. 1987 ஆம் ஆண்டு அப்போதிருந்த அரசாங்கம் தயாரித்தது. ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால் எந்த நேரத்திலும் அதைப் போக்குவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 21]

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டுகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இந்தக் கார்டுகள் தயாரிக்கப்பட்டு, மாற்றப்பட்டு, அடகு வைக்கப்பட்டு, பல்வேறு கோளங்களுக்கு அவை ஆளாகி இருக்கிற காரணத்தால், புதிதாக ரேஷன் கார்டுகளை வழங்க அல்லது புதிதாக சர்வே எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியம் இங்கே விவாதிக்கப்பட இருக்கிறது. அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் இதைப்பற்றி அரசின் முடிவைத் தெரிந்து கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்க வேண்டும் என்று அவர் கேட்கவில்லை. உணவு நேரம் என்பதை நினைவூட்டவே கேட்டிருக்கிறார். (சிரிப்பு)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: நான் இதைக் குறையாகச் சொல்லவில்லை. நானே தலைமை தாங்கி அரிசியைக் கொடுத்தேன். ஆனால் அது யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. இந்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன். இந்தத் திட்டங்களெல்லாம் சீப் பாப்புலாரிட்டிக்காகச் செய்யக் கூடாது. நாம் போடுகிற திட்டங்கள் 'லாங் ஸ்டேண்டிங்' ஆக இருக்குமா? இதனால் எத்தனை பேர் பயன்பெறுவார்கள்? எத்தனை குடும்பங்களுக்கு இதனால் பாதுகாப்பு கொடுக்க முடியும் என்றெல்லாம் இந்த அமைச்சரவை பார்க்க வேண்டும். அதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விஷயம் தெரிந்தவர்கள். எல்லா விஷயத்திலும் மிகவும் தெளிவானவர்கள். அவர்களுடைய அமைச்சரவையில் இப்படிப்பட்ட சின்னச் சின்ன காரியங்களுக்கெல்லாம் பணத்தைக் கொண்டு போய் போட்டுவிட்டு, பிறகு அரசிடம் நிதியில்லை என்று சொல்லிக் கொண்டு போனால் அது நல்லது அல்ல என்பதற்காகத்தான் நான் இதை இங்கே குறிப்பிடுகிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

அடுத்து வேலை வாய்ப்பு அளிக்கும் போது நாம் விதவைகளுக்கு வேலை கொடுக்கிறோம். கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு வேலை கொடுக்கிறோம். அப்படி கொடுக்கும் போது ஏற்படுகிற நிலையை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் இருந்து ஒரு பெண் என்னை வந்து பார்த்தார். அவர் பி.எஸ்.ஸி வரை படித்திருந்தார். அதுவும் பர்ஸ்ட் கிளாசில் பாஸ் செய்திருக்கிறார். அவருக்கு 1971 ஆம் வருஷம் கல்யாணம் ஆனது. 1983 ஆம் ஆண்டு அவர் கணவன் இறந்துவிட்டார். கணவனை இழந்த பிறகு பி.எட். படித்திருக்கிறார். கணவன் இருந்தபோது 3 குழந்தைகளை வைத்துக் கொண்டிருந்திருக்கிறார். கணவன் இறந்தபிறகு பி.எட்

படித்துவிட்டு சர்விஸ் கமிஷனில் வேலை கேட்டிருக்கிறார் அங்கே ரூல்ஸ்களையெல்லாம் ரிலாக்ஸ்செய்து பணி கொடுக்கலாம் என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் அது சம்பந்தப்பட்ட இலாக்காவுக்கு வருகிறபோது 'உங்களுக்கு வேலை அளிக்க முடியாது. சீனியாரிட்டி பிரகாரம்தான் கொடுக்க முடியும்' என்று சொல்லிவிட்டார்கள். இத்தனைக்கும் அவருடைய கணவர் ஒரு எக்ஸ் சர்வீஸ் மேன். எனவே இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இந்தத் திட்டம் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக பல தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நார்வே நாட்டிலிருந்துகூட உதவி பெறுகிறோம் என்று சொன்னார்கள். என்னென்ன தொழில் செய்யலாம் என்று இங்கே புத்தகத்தில் கூட போட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்களின் சங்கங்களைப் பதிவு செய்து வேறு பல வேலைகளையும் கொடுக்கலாம். ஒருவர் என்னிடம் சொன்னார். சந்தனக் கட்டை இருக்கிறதே அது ஒரு கிலோ ரூ. 5000 ஆகிறது. அதிலே மியூசிகல் இன்ஸ்ட்ருமென்ட் செய்கிறார்கள் என்று என்னிடம் ஒருவர் சொன்னார். செம்மரம் – சந்தன மரத்தில்—அதைச் செய்து வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்களாம். ஜப்பான் நாட்டுக்காரர்களும், நார்வே நாட்டுக்காரர்களும் அதை அதிகமான விலைக்கு இங்கே இருந்து வாங்கிக் கொண்டு போகிறார்களாம். தாள் சந்தனத்தைக் கொண்டு சோப் மற்றும் பவுடர் தயாரிக்கிறார்கள். இதுபோன்ற வேலைகளையெல்லாம் மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் பதிவு செய்து—ரெஜிஸ்டர் செய்து—குறைந்த பட்சம் வடாற்காடு மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள மாதர் சங்கங்கள் மூலமாகச் செய்து அயல்நாட்டு செலாவணியைப் பெறலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வெளிநாட்டுக்காரர்கள் தற்போது பெரும் லாபத்தை நம் நாட்டு மக்களாவது அடையக் கூடிய அளவுக்கு இதை மேற்கொண்டால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நான் கதர் போடுகிறேன். கதர் லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புவது—கிராமத்தில் தற்போது கிளஸ்டர் திட்டத்தின் மூலமாக என்னுடைய நிலக்கோட்டைத் தொகுதியிலே கூட சில வேலைகளைச் செய்து வருகிறோம். இந்தத் திட்டத்தின் கீழ் 10 இடங்களில் 30 பெண்கள் நூற்கிறார்கள் 30 பெண்கள் நெசவு செய்கிறார்கள். ஒரு 10 பெண்கள் பஞ்சு அடிக்கிறார்கள். இப்படி பலவிதமான வேலைவாய்ப்புகளை கொடுக்கிறோம். பல இடங்களில் இந்த கிளஸ்டர் திட்டம் நன்றாக நடத்தப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு பெண் 20, 25 அல்லது 30 ரூபாய் வரை நெசவுக் கூலியாகப் பெறுகிறார்கள். இதை தமிழ்நாட்டில் உள்ள 478 யூனியன்களிலும் ஏற்படுத்திக் கொடுத்தால் நன்றாக



இருக்கும். இந்தத் திட்டம் தற்போது ஹரிஜனங்களுக்கு மட்டும் தான் இருக்கிறது. அதை மாற்றி எல்லா ஜாதிப் பெண்களுக்கும் நாம் இந்தத் திட்டத்தை அமுல் செய்தால் அத்தனைப் பேருக்கும் வேலை வாய்ப்பு கொடுக்க உதவியாக இருக்கும் என்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிச் செய்து கொடுத்தால் 30 சதவீதம் பெண்களுக்கு வேலை கொடுத்த மாதிரியாகும். அவர்களே அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் உதவியாக இருக்கும். அவர்கள் எல்லாம் தங்களின் சொந்தக் கால்களிலேயே நிற்கிற வகையில் இதை நாம் செயல்படுத்தலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு லத்தீப் அவர்கள்கூட சொன்னார். பெண்கள் இப்போது காட்டிலும் மேட்டிலும் வாழ்கிற நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த நிலையை மாற்ற இப்படிப்பட்ட திட்டங்களை நாம் அமுல் படுத்தலாம். ''Try to stand on your own legs' என்று நேருஜி சொல்வார். இன்னொரு அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்கள் சொல்லிக்கொண்டேயிருப்பார்கள். அவர்கள் தங்கள் சொந்தக் காலிலேயே நிற்கக் கூடிய தகுதியை உண்டாக்கிக் கொடுக்க வேண்டும். அந்தத் தகுதியை உண்டாக்குவதற்கு எந்தெந்த துறைகளில் எல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ, அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு, என்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்தால் தான் பெண்கள் சுகமாக வாழ முடியும். அந்தத் திட்டத்தை 375 யூனியன்களிலும் ஏற்படுத்துவதனால், ஒரு யூனியனுக்கு ஆயிரம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். அந்தக் கழகத்தின் மூலமாக பல ஆயிரக்கணக்கான பெண்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

(பிற்பகல் 12–50)

அடுத்தபடியாக, மதிய உணவுத் திட்டத்தில் வேலை செய்பவர்கள் எல்லாம் மிகவும் குறைந்த சம்பளத்தில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். குறைந்தது சம்பளம் மாதத்திற்கு 300 ரூபாயாவது கொடுங்கள் சார் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாரா, அம்மாவா? (சிரிப்பு)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அம்மாதான் (சிரிப்பு) சம்பளத்தைக் குறைத்துக் கொடுப்பதால்தான் அவர்கள் அரிசி, பருப்பு முதலியவற்றைக் களவாடிச் செல்கிறார்கள். அவர்களைக் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. ''ஏன் அம்மா, இப்படிச் செய்கிறீர்கள்? உங்களை ஆண்டவன் கண்டிக்க மாட்டாரா? என்று கண்டிக்கும்போது, அவர்கள் பயப்படுகிறார்கள். அவர்களே வெட்கப்படுகிறார்கள். ஆகவே, மதிய உணவுத் திட்டப் பணியை நல்ல முறையில் ஆற்ற வேண்டுமென்றால், அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தித் தரவேண்டும்.

அடுத்தபடியாக, இந்த creche-களை அதிகப்படியாக ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு சந்தர்ப்பமளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 21

*திருமதி பி.லட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத்துறை மூலமாக சில கருத்துக்களைப் பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெண்கள் மேம்பாட்டுத் திட்டம், விதவை ஊனமுற்றோர் புனர்வாழ்வு திட்டம் என்று பல சமூக நலத் திட்டங்களைக் கொண்டுவந்து, பெண்கள் சமத்துவம் பெறும் வகையில் இன்றையதினம் பெண்களின் சூழ்நிலை ஆணுக்குப் பெண் சரிநிகர் சமம் என்று கூறுகின்ற விதத்தில் பெண்களுக்கும் வேலை வாய்ப்பு எல்லாம் அளித்து வருவதாக கொள்கை விளக்கக் குறிப்பேடுகளில் அறிவித்திருக்கிறார்கள். ஆண்கள் வேலை செய்கின்ற தருணத்தில் வாரிசு உரிமை—அவர்களின் வாரிசுதாரர்களாக—ஆண்களுக்கு மட்டும் வாரிசு அடிப்படையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறார்கள். அதேபோல் சில குடும்பங்களில் ஆண்கள்—ஆண் மகன்கள்—இல்லாத குடும்பங்களில் பெண்கள் இருக்கிறார்கள் என்றால்—அதிலும் நான்கைந்து பெண்கள் இருந்தால்—மூத்தவளுக்குத் திருமணமாகிவிட்டால். திருமணமானவர்களுக்கு அந்த வேலைவாய்ப்பில் முக்கியத்துவம் இல்லையென்கிற தடையைச் சொல்லிவிடுவதால் பெண்களுக்கு அந்த வேலைவாய்ப்பில் முக்கியத்துவம் அளிப்பது கிடையாது.

சமூக நலத்துறை மூலமாக மூன்று சக்கர வண்டிகள் தருகிறார்கள். அப்படி தருகிற தருணத்தில் மாவட்டந்தோறும் மூன்று சக்கர வண்டிகள் ஒரு ஆண்டுக்கு இவ்வளவு என்று நிர்ணயம் செய்து, பெரியோர்களுக்கு, குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. அப்படி நிர்ணயம் செய்திருந்தால் ஒரு ஆண்டில் எத்தனை குழந்தைகளுக்கு, எத்தனை பெரியோர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதையும மாண்புமிகு அமைச்சர் அவர்கள தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அந்த இலவச மூன்று சக்கர வண்டிகள் கொடுக்கும்போது அவர்கள் மிகவும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களின் சூழ்நிலையை கருதி, ஆண்டுக்கு என்று இல்லாமல், அந்த விண்ணப்பங்கள் வரும் போது அவைகளை பரிசீலனை செய்து அவர்களுக்கு உடனடியாக தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலத்துறை மூலமாக விதவைகளின் மகள்களுக்கு திருமணத்திற்காக நிதிஉதவி தரப்படுகிறது; அந்த நிதி உதவியை தருவதற்கு விண்ணப்பங்கள் வாங்கப் பெற்று, அந்த விண்ணப்பங்கள் வந்து சேருவதற்கு ஒரு குறிப்பிட்ட தேதியை குறிப்பிட்டு—அந்த விண்ணப்பத்தில் எந்த தேதியில் திருமணம் செய்கின்றோம் என்று குறிப்பிட வேண்டுமென்று ஒரு காலக் கெடுவை அவர்கள் குறித்து இருக்கிறார்கள். அந்தக் காலக் கெடுவை கொடுக்கின்ற தருணத்தில், அந்த விண்ணப்பத்தை பெற்றுச் சென்று சமூகநலத் துறையின் உதவி அந்தத் திருமணத்திற்குக்கிடைக்கிறதா என்றால்,



1989 ஏப்ரல் 21] [திருமதி பி. லட்சுமி]

கிடைப்பதில்லை. அவர்கள் அந்த திருமணத்தை செய்து முடித்து ஒரு மாதம் கழித்துதான் அந்த உதவித் தொகை அவர்களுக்கு வந்து சேருகின்றது. சில சமயங்களில் அப்படி கிடைக்காமலேயே பல காரணங்களால் அது தடைபட்டு போய்விடுகிறது. எனவே விதவைகளின் குழந்தைகளுக்கு நிதி உதவி தருவதில் அரசு மிக்க கவனம் செலுத்தி, அந்த விண்ணப்பத்தை பெற்ற ஒரு வார காலத்திற்குள்ளாகவே அந்த பணத்தை அவர்களுக்கு வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கயறு திரிக்கும் தொழிற்பயிற்சி மையங்களும் சமூகநலத் துறை மூலமாக செயல்பட்டு வருகின்றன. கயறு திரிக்கும் பயிற்சி மையங்களும், காலணி திட்ட பயிற்சி மையங்களும், இப்படி இது போன்ற பிற மையங்களும் கிராமப்புறங்களிலே தொடர்ந்து செயல்படுகின்றதா என்றால், சில கிராமங்களில் மட்டுமே அந்த வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருகிறார்கள். குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் அந்த பெண்கள் கூலி வேலைக்கு செல்கின்ற கட்டாயத்தில் இருந்தாலும் அவர்கள் இந்த பயிற்சியை ஆர்வத்தோடு கற்று அந்த காலணிகளையும், கயறு திரிக்கும் தொழில்களையும் கற்று பயிற்சி பெறுகிறார்கள். சில இடங்களில் இப்போது அவனாசி தொகுதியில் அன்னூர் ஒன்றியத்தில் சமூகநலத் துறையின் மூலமாக 3 மையங்கள் செயல்பட்டு வந்தன. கயறு திரிக்கும் மையம்; இலவச காலணித் திட்டத்தின் மையம், ஊதுபத்தி மையம் ஆகிய மூன்று மையங்களும் செயல்பட்டு வருகின்றன. அந்த மூன்று மையங்களில் பெண்கள் பயிற்சி பெற்று நல்லவிதமாக கற்று காலணிகளை தயார் செய்து வந்தார்கள். ஆனால் இப்போது அந்த இரண்டு மையங்களும் செயல்படாமல் எந்த ஒரு பயனும் இல்லாமல் இருக்கின்றன. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மையங்களையும், அங்கு பணிபுரிந்த பெண்களின் நிலை கருதி,—அவர்கள் அந்தப் பயிற்சியை ஆர்வமாக பெற்றார்கள்—அந்த பயிற்சி வீணாகாமல் இருக்க அவர்களுக்கு மீண்டும் அந்தத் தொழில் ஆர்வம் ஊட்டும் வண்ணம் அந்தத் தொழில் பயிற்சியை நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவு மையங்களில் பணிபுரிகின்ற சத்துணவு அமைப்பாளர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருந்தவர்களை நிரந்தர ஊழியர்களாக அறிவித்ததற்கு நான் சத்துணவு துறையில் அமைப்பாளராக பணியாற்றியதன் காரணமாக சத்துணவு அமைப்பாளர்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் அவர்களை பகுதி நேர ஊழியர்களாக ஆக்கி இருக்கிறார்கள். பால்வாடிகளில் பணி செய்கின்ற சத்துணவு அமைப்பாளர்கள் காலை 9 மணிக்கு வந்தால் 4 மணிக்குத்தான் அவர்கள் வீடுகளுக்கு செல்கிறார்கள். ஆகவே ஆசிரியர் பெருமக்கள் எப்படி காலை 9 மணிக்கு வந்து 4-00 மணிக்கு பள்ளிக்கூடம் விட்டவுடன் செல்கிறார்களோ—அவர்கள் மட்டும் முழு

நேர ஊழியர்கள் என்றாலும், அவர்களுக்கு மட்டும் அரசு எல்லா
சலுகைகளையும் அளிக்கின்ற நேரத்தில், சத்துணவு துறையில்
பெரும்பான்மையாக பெண்கள்தான் அதிகமாக சத்துணவு
அமைப்பாளர்களாக பணிபுரிகிறார்கள். எனவே மாண்புமிகு
சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் பெண்ணாக இருப்பதன்
காரணமாக, பெண்களின் நலனைக் கருதி அவர்களின் வேலை
திறனை பார்த்து அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் நர்சரி பள்ளி
களில் 2 மாதங்களுக்கு பயிற்சியும் பெற்று இருக்கிறார்கள்.
தற்போது பரவலாக தனியார் நர்சரி பள்ளிகள் காளான்கள் போல
வளர்ந்து வருகின்றன. அதைத் தடுக்கும் வண்ணம், பாலவாடி
களில் நர்சரி பயிற்சி பெற்ற சத்துணவு அமைப்பாளர்களுக்கு
ஊக்கம் அளிக்கும் வண்ணம், அவர்களுக்கு சம்பளத்தை அதிகப்
படுத்தி, அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்கி, அந்த நர்சரி
பள்ளிகள், அந்த சத்துணவு அமைப்பாளர்கள் மூலமாகவே
தொடங்கப்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை
பிறப்பிக்க வேண்டுமென்று சத்துணவு அமைப்பாளர்கள் சார்பில்
கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன்
அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

திருமதி பி. லட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே.
சத்துணவு அமைப்பாளர்களாக பெரும்பாலும் பெண்கள்தான்
இருக்கின்றார்கள். அந்தப் பெண்களுக்கு பேறு கால விடுப்பு தரப்
படுவது கிடையாது. எனவே, அவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய
பேறு கால விடுப்பக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மணியைப்
பார்த்துக் கொண்டுதான் பேசிக் கொண்டிருக்கிறேன். எனது
தொகுதியைப் பற்றி மட்டும் பேசிவிட்டு முடித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் வேட்டைக்காரன்புதூர், பெத்தநாயக்கன்
பாளையம் என்ற இரண்டு பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அந்த
இரண்டு பஞ்சாயத்துக்களிலேயும் தாழ்த்தப்பட்ட சமுதாய
மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். கயிறு திரிக்கும் மையமும்,
காதலணி மையங்களும் இதுநாள் வரையில் எனது தொகுதியில்
இல்லை. ஆனைமலை ஒன்றியத்தைச் சேர்ந்த அந்த இடங்களில்
அந்த பயிற்சி மையங்களை அமைத்து, அந்தத் தாழ்த்தப்பட்ட
சமுதாய மக்களுக்கு வேலைவாய்ப்பு திறனை ஏற்படுத்தித் தர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



எனது தொகுதியான வால்பாறையில் டீ இலை பறிக்கின்ற
பெண்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். இது சமூக நலத்துறை
அமைச்சரவர்களின் மானியத்திற்கு சம்பந்தம் இல்லாததாக
இருந்தாலும் ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு
தமிழக முதல்வரவர்கள் சாராய சாம்ராஜ்யத்தைத் தகர்த்து
விட்டோம் என்று கூறினார்கள். ஆனால் இப்பொழுது வீதிகள்
தோறும், எனது வால்பாறை தொகுதியில் கள்ளச்சாராயம்
வலுவாக அமைக்கப்பட்டு— பெரும்பாலும் பெண்கள் அங்கே
தேயிலை பறிக்கிறார்கள்— அந்த வழிகளில் டீ இலையைப் பறித்து
விட்டு செல்லுகின்ற தருணத்தில், அந்த வழித்தடங்களில் அந்தச்
சாராயத்தை வைத்து விற்றுக்கொண்டு, அந்த வழித்தடங்களில்
வருகின்ற பெண்கள் மிகவும் கடுமையாக தாக்கப்படுவதாக
நேற்றையதினம் என் தொகுதி மக்கள் சார்பாக எனக்கு
விண்ணப்பம் அனுப்பியிருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக
முதல்வரவர்கள்—சாராய சாம்ராஜ்யத்தை அடியோடு அழித்து
விட்டோம் என்று கூறிய முதல்வரவர்கள், எனது வால்பாறை
தொகுதியில் அந்தச் சாராய சாம்ராஜ்யத்தை அடியோடு
முடிக்கும் வண்ணம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய
பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறு
கின்றேன். நன்றி வணக்கம்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர
வர்களே, கதர், சமூக நலத்துறை மானியக் கோரிக்கைகளின்மீது
என்னுடைய கருத்தினைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குச்
சிறு தொழில்கள் மூலமாக கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய
ஏழை எளிய மக்கள், குடும்பத்தில் இருக்கக்கூடியவர்களை
யெல்லாம், அநேகமாக சிறு தொழில்களில் ஊக்குவிக்கின்ற
வகையில் நல்ல பல திட்டங்கள் தொடர்ச்சியாகத் தமிழகத்திலே
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, குடும்பங்
களிலே சிறு குழந்தைகள் முதல் எல்லோரும் இந்தச் சிறு
தொழில்களிலே ஈடுபட்டு இன்றையதினத்திலே பல்வேறு கிராமங்
களிலே குடிசைவாழ் மக்கள் போன்றவர்கள் தொழில்களைச்
செய்து அதிலே வரக்கூடிய வருமானத்தில் வாழ்க்கை நடத்தக்
கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. ஆரம்பத்திலே இப்படிப்பட்ட
திட்டங்களை அரசு ஊக்குவித்து, தொடக்கப்பட்ட பொழுதும்
கூட, பல்வேறு நகரங்களிலே, அப்படித் துவக்கப்பட்ட அந்த சிறு
தொழில்களெல்லாம் இன்றைக்கு நலிவுற்ற முறையிலே,
சிறப்பான முறையில் செயல்படாத தன்மையில் இருந்து
கொண்டிருக்கின்றன. அதிலே அதிகாரிகள் ஆரம்பத்திலே கவனம்
செலுத்தக்கூடிய முறையும், அது காலம் கடந்த பின்னர், அதில்
கவனம் செலுத்த முடியாத நிலைமையும் இன்றையதினத்திலே
இருக்கிறது.

அதைப்போன்றுதான் பனைமரத் தொழிலிலே கிடைக்கக்
கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு கூடைகள், இன்னும்
மற்ற பல்வேறு பொருள்களைச் செய்கின்ற நிலைமை பல்வேறு

மாவட்டங்களிலே இருந்து, அதையே தொழிலாகக்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே அந்தத் தொழில்களெல்லாம் நலிவுற்று, முறையாகச் செயல்பட வில்லை. கைத் தொழிலிலே செய்யப்படக்கூடிய இந்தப் பொருட் களையெல்லாம் பொருட்காட்சி போன்ற இடங்களிலே மக்கள் விரும்பி வாங்குகின்றார்கள். சுற்றுலா மூலமாக வெளிநாட்டிலே யிருந்து வரக்கூடிய பிரயாணிகள் எல்லாம் தமிழகத்திலேயும், இந்தியாவிலேயும் அப்படி செய்யக்கூடிய பொருட்களை விரும்பி வாங்கிச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட தொழில்களெல்லாம் இன்றையதினம் நலிவுற்ற நிலைமையிலே இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் நமது அரசு நல்ல முறையில் ஊக்கமளித்து, அதற்கான நிதியாதாரங்களைக் கொடுத்து ஊக்கு விப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது போன்று தென்னை. தென்னை என்று சொன்னால் கேரளாவிற்கு அடுத்தபடியாக இன்றைக்கு தமிழ்நாட்டில் தென்னை மிக முக்கியமான பயிராக அதிகமாகப் பயிரிடப்படு கிறது. கடலோரப் பகுதிகளில், கடலோர மாவட்டங்களில் தென்னை உற்பத்தி மிக அதிகமாக இருக்கிறது. அந்தத் தென்னை விவசாயிகளுக்குகூட இன்றைக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய விதத்தில் நமது அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். வறட்சியாலும், வண்டுத் தொல்லைகளாலும், தென்னை மரங்கள் அழிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. தென்னை நீண்ட காலத்திற்கு வருமானத்தை தரக்கூடிய பயிராகும். அந்தப் பயிரை பாதுகாக்கிற வகையில் நடவடிக்கையெடுக்க வேண்டும். இன்றைக்கு தேங்காயிலிருந்து வாசனை தைலங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு இன்றைக்கு கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங் களிலும் இருக்கிற மக்கள் எல்லோரும் உபயோகிக்கக்கூடிய விதத்தில் அது அமைந்திருக்கிறது.

என்னுடைய தொகுதியில், தஞ்சை மாவட்டத்தில், முத்துப் பேட்டை ஒன்றியத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் தென்னை பயிராகிக் கொண்டிருக்கிறது. வறட்சியாலும், வண்டு களாலும் அவைகள் பாதிக்கப்படுகிற நிலை இருக்கிறது. தென்னை கீற்று, நார் போன்றவற்றிலிருந்து பல்வேறு பொருட்களைத் தயாரிக்கும் கைத் தொழில்களில் ஈடுபட்ட பல சிறு தொழிற் சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அதன்மூலம் பல குடும்பங்கள் இன்றைக்கு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்றன. இப்படிப் பட்ட தொழில்களில் அரசு கவனம் செலுத்தி, அவைகள் எல்லாம் கூட்டுறவு முறையில் நடக்க உரிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும். கேரளா மாநிலத்தில் இருப்பதைப் போன்று தென்னை வளர்ப்பிலே தனி கவனம் செலுத்த வேண்டும். அதற்காக ஒரு தென்னை கார்ப்பரேஷன் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென்னை கீற்றிலிருந்து அழகான கூடைகளை பள்ளிக்கூடங்



களுக்குச் செல்கிற சிறு பிள்ளைகள், வீட்டில் இருக்கிறபோது தயாரித்து பல்வேறு வர்ணங்களைக் கொடுத்து, அழகுறச் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட தொழில் தஞ்சை மாவட்டத்தில், முத்துப்பேட்டையில் பிரதானமாக நடந்து தயாரிக்கப்படும் பொருள்கள் பல்வேறு இடங்களுக்கு வியாபாரத்திற்காகச் சென்று கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் ஒரு கார்ப்பரேஷன் அமைத்து தொழில் வளர ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இருப்பது பனை. பனையை பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் பதநீர் இறக்குவதிலும், எங்கள் பக்கத் தில் கருப்பட்டி என்று சொல்வார்கள், அதைத் தயாரிப்பதிலும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக் கிறார்கள். பனை மரம் என்பது புயல், வெள்ளம், வறட்சி ஆகிய இயற்கை பாதிப்புகளிலிருந்து நீண்ட காலத்திற்கு தாக்கு பிடிக்கக்கூடியதாகும். அப்படிப்பட்ட பனை மரங்கள் இன்றைக்கு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய பல்வேறு உறுப்பினர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். அவற்றை அழிக்காமல், பாதுகாக்கிற வகையில் அரசு முயற்சி எடுக்க வேண்டும். அதிலே பெரும்பகுதி தனியார்கள், மிராசுதாரர்களி டத்தில் பல லட்சக்கணக்கான மரங்கள் இன்றையதினம் இருக் கின்றன. இந்த மரங்கள் எல்லாம் இன்றைக்கு வெட்டி அழிக்கப் படுகின்றன. அந்த மரங்களைப் பாதுகாக்க நமது அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும். மதுரை ஆதீனம் அவர்களுக்கு நிறைய நிலங்களும், அதில் மரங்களும் இருக்கின்றன. அந்த மரங்கள் வெட்டி வீணாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உடனடியாக அரசு அதைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சி யெடுக்க வேண்டும். அங்கே இருக்கிற பனைத் தொழிலாளர்கள் அதைத் தடுப்பதற்கு முயற்சி எடுத்தார்கள் என்றால், [illegible] போட்டார்கள் என்றால் அவர்கள் குடியிருக்கிற இடங்களை காலி செய்து, பல்வேறு வழக்குகள் போட்டு வெளியேற்றுகிற மோச மான நிலை இருக்கிறது. பனைத் தொழிலை நம்பியிருக்கிற தொழிலாளர்கள் பலபேர் இருக்கிறார்கள். அவர்கள் மரங் களிலிருந்து கீழே விழுந்து இறந்தால் 10,000 ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும் திட்டம் இருந்தாலும்கூட, ஏற்கனவே இருந்த அரசு குறிப்பிட்டதைப் போல அவர்கள் மரங்களிலிருந்து விழுந்து இறந்தால் போஸ்ட் மார்ட்டம் செய்தால்தான் அதை ஏற்றுக் கொள்வோம் என்ற நிலை இருக்கிறது. அப்படி இல்லாமல் அங்கே பஞ்சாயத்து அமைத்து, மரத்திலிருந்து விழுந்து இறந்தார் என்று பஞ்சாயத்து குறிப்பிட்டால், அப்படிப்பட்டவர்களுக்கும் அந்த நிதியை வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சமூக நலம். இன்றைக்கு ஊனமுற்றவர்கள் என்று பார்க்கிறபோது, கண்பார்வையற்றவர்கள், கால் விளங்காத வர்கள், இப்படிப்பட்ட குழந்தைகள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள், கடந்த ஆட்சிக்காலத்தில் அப்படிப்பட்டவர்கள் ஒரு குடும்பத்திற்குள், வட்டத்திற்குள் இருந்தவர்கள் எல்லாம்

144363

D
V211,31 N89 N 89.11.2

[திரு. ஜி. பழனிச்சாமி] [1989 ஏப்ரல் 21

வெளிப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்குகிற திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதன்மூலம் அவர்கள் வெளி உலகத்திற்கு வந்து கொண்டிருக்கிற நல்ல பணியை செய்தார்கள். அதைப்போல இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான ஊனமுற்றவர்கள் வெளியே செல்ல முடியாத அளவில் நொண்டிகளாக, முடங்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம மூன்று சக்கர வண்டி கிடைக்கிறதா என்றால் நிச்சயமாக அது கிடைப்பதில்லை. இதற்கு ஆர்.டி.ஓ.விற்கோ அல்லது கலெக்டருக்கோ மனு போட்டோம் என்று சொன்னால், அவைகளை காலத்தோடு பரிசிலனை செய்து, அவர்களுக்கு உரிய காலத்திலே, அதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது உரிய காலத்திலே கொடுப்பதில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. அப்படி முடமாக இருப்பவர்களுக்கு எல்லாம் இன்றையதினம் வாய்ப்பு வசதி உள்ளவர்கள், மற்றும் இவைகளை வாங்கிக் கொடுப்பதற்கு நல்ல மன நோக்கம் உள்ளவர்கள்தான் மெனக்கட்டு அதற்கான முயற்சிகளைச் செய்கிறார்கள். எனவே இதற்கு அப்படிப்பட்டவர்கள் மனு போட்டால், உடனடியாக அவைகள் கிடைப்பதற்கு இந்த அரசு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும். அப்படிப்பட்டவர்கள் இந்த உலகத்தைப் பார்ப்பதற்கு, வெளி உலகத்திற்கு வருவதற்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதிலே எந்த களங்கமும் இல்லாத வகையில் செய்யப்படவேண்டும். இதிலே 2500 பேர்கள் அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள் பல்வேறு வேலைகளில், அவர்களை எல்லாம் இந்த அரசு கவனித்துக் கொள்ளும் என்று குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பினை வழங்கவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

அதேபோல் முதியோர் பென்சன். இதைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இருந்த அரசு ஒரு தாலுக்காவிற்கு அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு இவ்வளவுதான் என்று நிர்ணயித்திருந்தது. இப்போது இருக்கிற அரசு அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் இந்த முதியோர் பென்சன் என்பதற்கு இலக்கு நிர்ணயம் இல்லை என்று அறிவித்திருந்தாலும்கூட அனேகமாக நியாயமாக கிடைக்கக் கூடிய முதியோர் பென்சன் என்பது கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளியவர்களுக்குக் கிடைப்பதில்லை. யாருக்காவது குழந்தைகள் இருக்கிறது, பெண் குழந்தைகள் இருக்கிறது. என்றால் அப்படிப்பட்டவர்கள் திருமணம் செய்து கொடுத்து விட்டால், அவர்களுக்கு எல்லாம் இந்த முதியோர் பென்சன் என்பது இன்றைக்குக் கிடைப்பதில்லை. இதைக் காரணம் காட்டி தடுத்துவிடுகிறார்கள். எனவே யதார்த்தமாகவே அவர்களுக்கு இது கிடைப்பதற்கு கடுமையான பரிசீலனை செய்து, உடனடியாக நடவடிக்கைகளை எடுத்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 21] [திரு. ஜி. பழனிச்சாமி]

அடுத்து சத்துணவுப் பணியாளர்களைப் பற்றி இங்கே சொன்னார்கள். ஏற்கனவே கேள்வி நேரத்தின்போது, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு சத்துணவு அமைப்பாளர்கள் தவறு செய்தால், அவர்களை மாற்றமுடியாது. அவர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் போதாது. அவர்கள் பஸ்ஸிலே எல்லாம் போய் தங்களுடைய பணியினைச் செவ்வனே செய்ய முடியாது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அனேகமாக இந்தச் சத்துணவு அமைப்பாளர்களாக இருக்கக் கூடியவர்கள், அந்தப் பணியிலே ஈடுபட்டு இருப்பவர்கள் திருமணம் ஆகாத பெண்கள்தான் அதிகமான அளவிலே இந்தப் பணியிலே வந்து அமருகிறார்கள். வேலையில்லாத காரணத்தால். ஏதாகிலும் ஒரு வேலை கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்திலே வருகிறார்கள். இப்படிப்பட்ட சத்துணவு அமைப்பாளர்கள் வேலையிலே வந்து அமர்ந்ததற்குப் பிறகு, அவர்களுக்கு திருமணம் செய்து கொடுத்து விட்டால், கணவன் ஊருக்குப் போகமுடியாத ஒரு நிலைமையிருக்கிறது. அவர்களை மாற்றம் செய்ய முடியவில்லை. அவர்கள் எந்த ஊரிலே சத்துணவு அமைப்பாளர்களாக சேர்ந்தார்களோ அங்கேதான் வேலை பார்க்கக்கூடிய ஒரு கட்டாயம் இருக்கிறது. அதை இந்த அரசு கவனித்து, தவறு செய்தாலும் சரி, இல்லை திருமணம் ஆகிவிட்டாலும் சரி, அவர்களுடைய கணவர் இருக்கிற இடத்திற்கு கணவர் வீட்டுக்குப் போகிற வகையில் சட்டத்தைப் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு வாழையைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால் தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள் அனைவரும் நடக்கிற திருமணம் மற்றும் விசேஷங்களுக்கு எல்லாம் அவர்கள் இந்த வாழைப்பழங்களையும், வாழை இலையையும் உபயோகப் படுத்துகிறார்கள். அதற்கு மிகப்பெரிய வரவேற்பு உண்டு. அதற்கு என்ன விலை சொன்னாலும் அவைகளை வாங்கக்கூடிய நிலைமையிருக்கிறது. அதற்குக் காரணம் உணவுப் பயிராக உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் அது இருக்கிறது. அப்படிப்பட்ட வாழையை வளர்ப்பதற்கும், அதிலே வரக்கூடிய நோய்களைத் தடுப்பதற்கும் நமது அரசு கடும் முயற்சிகளைச் செய்யவேண்டும்.

இன்றைக்கு திருச்சியாக இருந்தாலும், திருநெல்வேலி மற்றும் சிதம்பரனார் மாவட்டமாக இருந்தாலும் சரி, அங்கே வாழைகளுக்கு வாடல் நோய் ஏற்பட்டு இருக்கிறது. எனவே இந்த வாடை நோய் இல்லாமலும், அதனுடைய இலைகள் கருகிப் போகாமலும், அதைப் பாதுகாப்பதற்கு நமது அரசு இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அது தென்னையாக இருந்தாலும் அல்லது வாழையாக இருந்தாலும், இப்படிப்பட்ட நோய்கள் வந்தால், அவைகளுக்கு இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வந்து, அவைகளை பயிர் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு நியாயமான பாதுகாப்பு கிடைக்கவும் அந்த உணவு உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கவும் ஏற்ற வகையில், திட்டங்களைக் கொண்டு வந்து செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜி. பழனிச்சாமி] [1989 ஏப்ரல் 21

அதேபோல் மல்லிகைப் பூ. மல்லிகைப் பூ என்று சொன்னால், என்னுடைய தொகுதியிலேயும் சரி, என்னுடைய தொகுதிக்கு அருகிலே இருக்கிற வேதாரண்யம் தொகுதியிலேயும் சரி, அதிகமான அளவிலே மல்லிகைச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. அனேகமாக சென்னை மாநகரத்திற்கு அங்கேயிருந்துதான் அதிகமான அளவில் மல்லிகைப் பூக்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே இந்தப் பூக்களின் மூலமாக வாசனைத் தைலங்கள் தயார் செய்வதற்காக அங்கே ஒரு தொழிற்சாலையை அமைத்து, இந்தப் பூக்களை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு நல்ல ஊக்கம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பு நல்கியமைக்காக நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. ஆர். இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநல மானியக் கோரிக்கைள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இந்த அரசின் சமூக நல மானியக் கோரிக்கைப் பற்றியும், சமூக நலத்தைப் பற்றியும் குறிப்பிடுப்போது கடந்த காலததில் புரட்சித் தலைவர் அவர்களும், அண்ணாவின் அரசும் எந்தவித சர்ச்சைக்கும் இடம் வைக்காமல் சென்றுள்ளதற்கு நன்றி.

சமுதாயத்தில் தனது மகனின் வாழ்விற்கு வருங்காலத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் செய்து வைத்திருப்பதைப்போல், ஏழைப் பெண்களின் பிரசவ காலத்தில் உதவி புரிய புரட்சித் தலைவர் அரசு ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு நர்சை நியமித்தது. அவர்கள் எம்.பி. எச். டபிள்யு. படித்தவர்கள். அவர்கள் தலைவலி, காய்ச்சல் போன்ற சிறு சிறு வியாதிகளுக்கு உதவியளித்து வருகின்றனர். ஆனால் வளர்ந்து வரும் சமுதாயத்தில் மாறி வரும் சூழ்நிலைகளுக்கேற்ப அந்தந்தப் பஞ்சாயத்துக்களில் ஸ்டாப் நர்ஸ் கோர்ஸ் படித்த நர்சுகளை நியமித்து, அவர்களுக்கு உதவ தற்போது உள்ள எம். பி. எச். டபிள்யு. நர்சுகளை அரசு நியமித்தால், மக்கள் அதிக வசதி பெறுவதோடு பேறுகால பெண்கள் மிகுந்த நன்மை அடைவார்கள். மகளிர் மேம்பாட்டிற்காக அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எல்லாம் செயல் முறையில் வருதல் வேண்டும். விதவைப் பெண்களை மணக்கும் ஆண் மகனுக்கு அவனின் கல்வித் தகுதிக்கேற்ப அரசு வேலை கொடுக்கவேண்டும். ஏழை விதவைகள் ஆதரவற்ற மகளிர் ஆகியோரின் திருமணத்திற்கு தற்போது வழங்கப்படும் ரூ. 1,000 விலைவாசியைக் கருத்திற்கொண்டு. . . . (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: இப்போது டிகிரி ஒன்று சொன்னாரே அது எந்த டிகிரி என்று சொன்னால் கொஞ்சம் நன்றாக இருக்கும். அந்த டிகிரி எனக்கு சரியாகப் புரியவில்லை. தெரிந்து கொள்வதற்காகத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறிப்புகளைப் பார்த்து பின்னர் சொல்லட்டும்.



1989 ஏப்ரல் 21]

திரு. கே. ஆர். இராஜேந்திரன்: எனவே அதை ரூ. 2500/- ஆக உயர்த்தித் தர வேணடும். வளரும் சமுதாயம் இளைஞர்கள் கையில் உள்ளது. குழந்தைகளுக்கு உடல் வளர்ச்சி மட்டும் இருந்தால் போதாது. மன வளர்ச்சியும் வேண்டும். குழந்தைகள் விளையாடுவது அவசியம். முறையான விளையாட்டுக்களை கற்றுத் தருதல் அவசியம். இந்தியாவிலேயே முதன் முறையாக விளையாட்டிற்கென்று ஒரு தனி வாரியம் அமைத்தவர் அமரர் புரட்சித் தலைவர் அவர்கள் தான். இன்றைய அரசு குழந்தைகள் விளையாட எல்லா பள்ளிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி உள்ளதாக நான் அறிகிறேன். ஆனால் பர்கூர் தொகுதியில் 60 சதவீதப் பள்ளிகளுக்கு அவை வழங்கப்படவில்லை. எனவே இவ்வரசின் கவனத்திற்கு அதைக் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். குழந்தைகள் விளையாட்டில் மிகவும் அக்கறை கொண்ட அமரர் புரட்சித் தலைவர் அவர்கள், உலகிலேயே முதன் முறையாக, சத்துணவுத் திட்டத்தை தமிழகத்திலே அமல்படுத்தி, அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி, ஆரம்பப் பள்ளியிலிருந்து அதை உயர் நிலைப் பள்ளிக்கு விரிவுபடுத்தினார்.

இனிய குழந்தைகளுக்கு பால்வாடியும் அமைத்து, சமைத்து, தட்டேந்த வைத்து விட்டார்கள் என்கிறார்கள். ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் சத்துணவில் முட்டைகள் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர். 15 நாட்களுக்கு ஒருமுறை முட்டை சாப்பிடுவது ஏதோ ஆசைக்கு சாப்பிடுவதுபோன்று ஆகுமே தவிர, சத்துணவு சாப்பிடுவதுபோல் ஆகாது. எனவே தினமும் உணவோடு ஒரு முட்டை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சமுதாயத்தில் ஒரு பிரிவு வளர்ந்து கொண்டே போவதும். அதேபோன்று ஒரு பிரிவு தேய்ந்து கொண்டே போவதும் கண்கூடான ஒன்று. மலைவாழ் மக்கள் நாடோடிகளின் குழந்தைகளை கட்டாயக் கல்வியில் சேர்த்து, அவர்களின் குழந்தைகளை கல்வி பயிலவைத்தல் அவசியம் என்பதனை இந்த அரசு உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக மலைவாழ் நாடோடிகளின் குழந்தைகளுக்கு தனியாக காப்பகம் அமைத்து, அவர்கள் அங்கே இருந்து கல்வி பயில வைத்து, சமுதாயத்தில் மற்றவர்களைப் போன்று முன்னேற வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோர் பள்ளிகள் இங்கே 23 தான் உள்ளன. மேலும் அரசு மானியம் பெற்று தனியார்கள் நடத்துவது 25 பள்ளிகள். நகராட்சிகள் நடத்தும் பள்ளிகள் 2. ஆனால் பெருகி வரும் ஜனத்தொகைக்கேற்ப இது போதாது. அவைகளை அரசு குறைந்தது இரண்டு மடங்காக உயர்த்த வேண்டும், தனியார்கள் இதுபோன்று நடத்த முன்வர வேண்டும். மானியத் தொகையை அதிகப்படுத்தி, அவர்களை அரசு ஊக்குவித்தல் வேண்டும். கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் ஊனமுற்றோர் சேர்க்கை விகிதம் அதிகப்படுத்தப்பட வேண்டும்.

மாநிலத்திலுள்ள மொத்த மாவட்டங்களை 5 மண்டலங்களாகப் பிரித்து அங்கு அவர்களுக்கு மட்டும் தனியாக கலை மற்றும் தொழில் பயிற்சி கல்லூரிகளை அமைத்தல் வேண்டும். அப்போது அவர்களுக்கு இடப் பற்றாக்குறை பிரச்சினை தீரும் வாய்ப்பு உள்ளது. அதுபோன்று கல்வி நிலையங்கள், பார்வை இழந் தோர், காது கேளாதோர், பேச முடியாதோர், உறுப்பு அங்க ஹீனமாக உள்ளோர் அனைவரும் சேர்ந்து படிக்கும் மையமாக இருத்தல் வேண்டும். மாநில அளவில் உடல் ஊனமுற்றோர்களுக்கு அனைத்துக் கல்வித் தகுதிகளும், அதாவது கலை, தொழிற் பயிற்சி, என்ஜினியரிங் போன்ற வகைகளில் உடல் ஊனமுற்றோர் பல்கலைக்கழகம் ஒன்றினை அரசு அமைக்க வேண்டும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

என்பது வள்ளுவர் வாக்கு. எனவே ஆண், பெண், இளைஞர் களுக்கு ஒழுக்கம் தேவை அவர்கள் நாட்டிற்கும் வீட்டிற்கும் தேவை என்பதை உணர்ந்து, அரசு தொலைக்காட்சி, திரைப்படம் மூலமாக பிரச்சாரம் செய்வது அவசியம்.

(பிற்பகல் 1-20)

சமுதாயத்தில் பரத்தமை தடுப்புச் சட்டத்தை அரசு தீவிரப் படுத்த வேண்டும். அவர்களின் தண்டனையை ஆண் பெண் என்ற பாரபட்சம் பார்க்காமல் கடுமையாக்க வேண்டும். அதனால் வரும் கேடுகளை நாடு அறிய பிரச்சாரம் தீவிர மாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குருடு, தொழுநோய், மனநோய் இருந்து வருவாய் ஈட்ட முடியாத ஆதரவுள்ள நபர்கள், உதவி பெறும் வயதை 60 என்றும் மற்ற ஆதரவற்ற நபர்கள் குறைந்த பட்சம் வயது 65 அல்லது 70 என்றும் உயர்த்தக் கேட்டுக் கொள்கிறேன். தற்போது வழங்கப்படும் முதியோர் உதவித் தொகையான ரூ. 50/-ஐ அரசு ரூ. 100 ஆக ஆக்க வேண்டும். அப்போதுதான் ஒரு நாளைக்கு குறைந்தது ரூ. 3.30 ஆவது கிடைக்கும், எனச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

சமூக நலத்தில் பெண்களைப் பற்றி மட்டுமே அரசு அதிக அளவில் அக்கறை எடுத்துள்ளது. ஆண்களாகிய நாங்கள் என்ன பாவம் செய்தோம். ஏதோ அவர்களுக்கு வழங்கும் சலுகை களில் பாதியாவது ஆண்களும் பெற வழி வகுக்க வேண்டும். குறிப்பாக கல்வி விஷயத்தில் பெண்கள் பெறும் இலவசக் கல்வி கட்டாயம் ஆண்களுக்கும் கிடைக்க வழி செய்ய



வேண்டும். உலகில் ஆயிரம் பெண்களுக்கு 900 ஆண்கள் தான் உளர். ஆண் இனம் பாதுகாக்கப்பட்டு பெருக்கப்பட்டால் இன்று சமுதாயத்தில் உள்ள வரதட்சிணை கொடுமைகூட ஒழிய வாய்ப்பு உண்டு. எனவே இன்று வளர்ந்து வரும் சமுதாயத்தில் பெண்களுக்குள்ள சரிசமமான உரிமையைக் கருத்தில் கொண்டு ஆண்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டுமாய் இவ்வரசை கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் பேசிக் கொண்டு இருந்தவர் கடைசியில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்களுக்கு ஆதிக்கம் இருக்கிறது என்பதனால்தான், பெண் களுக்கு உரிமை கிடைக்கவில்லை என்பதனால்தான் இந்த ஏற்பாடு. அதுவும் தாய்க்குலத்தைப்பற்றி அதிகமாகப் பேசிக் கொண்டிருந்த ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் அவர் இப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்லியதைப் பற்றி என்னுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாகவே பல வீடு களில் யார் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதில் இன்னும் முடிவு இல்லாமல் இருப்பதனால்தான் அப்படி ஒரு பிரச்சினை நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் நான் நடுவர் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தாங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள் என்பதை நாங்கள் இப்போது நன்றாகப் புரிந்து கொண்டோம். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதைப் பேசியதே நம்முடைய உணவு அமைச்சருக்காகத்தான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. (சிரிப்பு)

6. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பேரவைக்கு ஒரு அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடை பெறும். இன்று மாலை பேரவைக் கூட்டம் இல்லை. (மேசை தட்டும் ஒலி) பிற நாட்களிலும் பேரவைக் கூட்டம் மாலையில் இல்லை.

| | |
|---|---|
| | மானியக் கோரிக்கை எண். |
| 22—4—1989 (சனிக்கிழமை) | 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் |
| 23—4—1989 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை |

| | |
|---|---|
| 24–4–1989 (திங்கட்கிழமை) | 26—கைத்தறியும் துணி தொழிலும் |
| | 34—நகர்ப்புற வளர்ச்சி |
| 25–4–1989 (செவ்வாய்கிழமை) | 23—கூட்டுறவு<br>35—நுகர்பொருள் வழங்கல் |
| 26–4–1989 (புதன்கிழமை) | 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வை களும், நிருவாகம். |
| | 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமை யிடப் பணியாளர்கள் |
| | 11—மாவட்ட நிருவாகம் |
| | 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும் |
| | 43—பல்வகை |
| | 58—பல்வகை மூலதனச் செலவு |
| | 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் |
| 27–4–1989 (வியாழக்கிழமை) | 2—மாநில ஆயத் தீர்வைத் துறை<br>15—காவல் துறை |
| 28–4–1989 (வெள்ளிக்கிழமை) | 16 – தீயணைப்புப் பணிகள் |
| 29–4–1989 (சனிக்கிழமை) | 31— பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன் |
| 30–4–1989 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை |
| 1–5–1989 (திங்கட்கிழமை) | விடுமுறை |
| 2–5–1989 (செவ்வாய்க்கிழமை) | 10—பால் வழங்கு திட்டங்கள்<br>21—மீனளம் |
| | 22—கால்நடை வளர்ச்சி |
| 3–5–1989 (புதன்கிழமை) | 24—தொழில்கள்<br>51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு |
| 4–5–1989 (வியாழக்கிழமை) | (1) 7—மாநிலச் சட்டமன்றம்<br>8—தேர்தல்கள்<br>1-00 மணிக்கு வாக்கெடுப்பு<br>(2) 1989–90ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். |



| | | |
|---|---|---|
| 5–5–1989 (வெள்ளிக்கிழமை) | காலை | 1989–90 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு ஆய்வு செய்தலும், நிறை வேற்றுதலும். |
| | மாலை 6 மணி முதல் 8 மணி வரை | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 50 ஆம் ஆண்டு நிறைவு விழா. மூத்த உறுப் பினர்களை சிறப்பித்தல். |
| 6–5–1989 (சனிக்கிழமை) | | அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்று தலும் மற்றும் அரசினர் தீர்மானங்கள் அலுவல்கள். |
| 7–5–1989 (ஞாயிற்றுக் கிழமை) | | விடுமுறை |
| 8–5–1989 (திங்கட் கிழமை) | | தேவையிருப்பின் பேரவை கூடும் |
| | | அது பின்னால் அறிவிக்கப்படும். |

## 5. மானியக் கோரிக்கைகள் 1989–90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு திருமதி சுப்புலெட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் துறை, சமூக நலம், ஊரக வளர்ச்சி பற்றிய மானியக் கோரிக்கைகளின் விவாதத்திலே கலந்து கொண்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், இந்தத் துறை செயல்பட வேண்டிய முறை களைப் பற்றி சிறப்டான கருத்துக்களை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்தத் துறையினுடைய பொறுப்பேற்றிருக்கின்ற எனக்கு அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற ஆலோசனைகள் நிச்சயமாக வழிகாட்டியாக அமைந்து நான் ஏற்றுக்கொண்டிருக்கின்ற இந்த முயற்சி வெற்றிபெறுவதற்கு அவை உறுதுணையாக அமையும் என்று நான் நம்புகின்றேன். பொதுவாக இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் சமூக நலம் அதில் பெண்களுடைய முன்னேற்றம், அந்தத் துறையின் மூலமாக நடை முறைப்படுத்தப்படுகின்ற சத்துணவுத் திட்டம், குழந்தைகள் நலம் இவைகளைப் பற்றியும், கதர் துறையின் மூலமாக பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் இந்தத் துறையின் மூலமாக எவ்வளவு நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதைப் பற்றியும், ஊரகத் தொழில் மானியக் கோரிக்கையின் கீழ் உரையாற்றியவர்கள் சிறுதொழில் ஆரம்பிப் பதிலே உள்ள இடர்பாடுகள், மூலப்பொருள் வழங்குவதில் ஏற்படுகின்ற சங்கடங்கள், உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை விற்பனை செய்வதிலே ஏற்படுகின்ற பிரச்சினை

[திருமதி சுப்புலட்சுமி செகதீசன்] 1989 ஏப்ரல் 21

களைப் பற்றியும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். நான் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனியே இங்கே பதிலளிக்க நேரம் இல்லை என்றாலும் கூட பேசிய உறுப்பினர்களுடைய ஒட்டு மொத்த கருத்துக்களை தொகுத்து ஒவ்வொரு துறையின் வாயிலாகவும் என்ன நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள இருக்கிறது என்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சமூக நலத்துறையின் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு கின்ற சத்துணவு திட்டத்தில் இருக்கக்கூடிய குறைபாடுகளை இங்கே உரையாற்றிய பெரும்பாலான உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். திட்டம் நல்ல நோக்கத்திற்காக கொண்டுவரப் பட்ட திட்டம் என்றாலும் அதை அமல்படுத்துவதில் இருக்கக் கூடிய குறைபாடுகள் இந்த மாமன்றத்திலே பலமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 87 இலட்சம் குழந்தைகள் 2 வயதிற்கு மேற்பட்டு 15 வயதிற்குட்பட்ட டள்ளியிலே படிக்கக்கூடிய குழந்தைகள் இந்தத் திட்டத்திலே பயன் பெறு கிறார்கள். இந்தத் திட்டம் மூன்று வகையாக செயல்படுத்தப் படுகிறது. இரண்டு வயதிற்கு மேல் 5 வயதிற்குட்பட்ட ஆரம்ப பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளுக்கு குழந்தைகள் நல மையம் என்ற அமைப்பை ஏற்படுத்தி அந்த அமைப்பின் மூலமாக இந்தச் சத்துணவு திட்டமும், மத்திய அரசினுடைய நிதி உதவி யோடு செயல்படுத்தப்படுகின்ற ஒருங்கிணைந்த ஊரக குழந்தைகள் வளர்ச்சி திட்டமும் இந்த குழந்தைகள் நல மையத்தில் அமல்படுத்தப்படுகிறது.

அதற்கு பிறகு ஊராட்சி ஒன்றிய, நகராட்சி, மாநகராட்சி ஆரம்பப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும், உயர் நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு வரை இந்தத் திட்டம் படிப்படியாக உயர்த்தப்பட்டு இந்தத் திட்டம் இருக்கின்ற மையங்களில் இருக்கக்கூடிய முதியோர் உதவித் தொகையை பெறுகின்றவர்களும், மறைந்த இராணுவ வீரர்களுடைய மனைவிமார்களும் இத்திட்டத்தின் மூலம் மதிய உணவு பெறக் கூடிய ஒரு ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒட்டு மொத்தமாக தமிழ்நாடு முழுவதும் இந்தத் திட்டத்திலே பணி யாற்றுகின்ற சத்துணவு அமைப்பாளர்களுடைய எண்ணிக்கை ஏறத்தாழ 2 இலட்சத்துக்கும் அதிகம் என்பது நீங்கள் எல்லோரும் அறிந்த ஒன்றே.

இன்றைக்கு எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களில் முக்கியமான ஒன்று இவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியம் மிகக் குறைவு என்ற கருத்து பெரும்பாலான உறுப்பினர்களால் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. அரசாங்கத்தினுடைய நிதி நிலையைக்கருத்தில் கொண்டு இந்தத் திட்டத்திலே பணியாற்று கின்ற ஊழியர்களுக்கு நீங்கள் சுட்டிக்காட்டியதைப் போல அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஊதியத்திற்கொப்பு அவர



1989 ஏப்ரல் 21] [திருமதி சுப்புலட்சுமி செகதீசன்]

களுக்கு ஊதியத்தை உயர்த்த முடியாத ஒரு நிலை இந்த அரசுக்கு இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் ஒரு கேள்விக்கு விடையளிக்கின்ற நேரத்தில் அரசுக்கு இருக்கின்ற சங்கடத்தை நான் இந்த மாமன்றத்திலே, எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஓரளவிற்கு ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. எனவே, ஆனால் அமைக்கப்பட்டிருக்கின்ற 5 ஆவது ஊதியக்குழுவின் முன்பாக சத்துணவு அமைப்பாளர்களுடைய பல்வேறு அமைப்புகள் இன்றைக்கு தங்கள் கோரிக்கைகளை வைத்து இருக்கின்றன. எனவே, அந்தக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, ஐந்தாவது ஊதியக்குழு அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை அனுப்பியதற்குப் பிறகு, அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் இன்றைக்கு அரசிற்கு இருக்கிற நிதிநிலையைக் கருத்திலே கொண்டு, இன்றைக்கு அவர்கள் வாங்குகிற சம்பளத்தைக் காட்டிலும் ஓரளவிற்கு அதிகமாக அந்தச் சம்பளத்தை உயர்த்த முடியுமா என்பதை இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1.30)

இந்தத் திட்டத்திலே நடைபெற்றுக் கொண்டு இருக்கிற குறைபாடுகளையும் சொன்னார்கள். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படுகிற தவறுகள், விடுமுறை நாட்களில் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குவதிலே ஏற்படுகிற முறைகேடுகள் இவைகளையெல்லாம் அரசினுடைய கவனத்திற்கு அவ்வப்போது இந்த மாமன்றத்தின் மூலமாகவும், ஆங்காங்கே பொதுமக்களுடைய புகார் மனுக்களின் மூலமாகவும் மாண்புமிகு அமைச்சர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், அந்த மையங்களுக்குச் சென்று பார்வையிடுகிற நேரத்தில் நேரடியாக அவர்கள் கண்டு அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி பட்ட முறைகேடுகளைக் களைந்து இந்தத் திட்டம் நல்ல முறையில் குழந்தைகளுக்குப் பயன்படும் வகையில் நிறைவேற்று வதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டு டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதில் பணியாற்ற சத்துணவுப் பணியாளர்களைத் தேர்ந் தெடுக்கிற நேரத்திலே, இந்தப் பணியிலே அவர்கள் சேருகிற நேரத்திலே எப்படிப்பட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட வேண்டும் என்று, அவர்களுக்கு முன்பே அந்த சட்டதிட்டங்கள் எல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டு அதற்குப் பிறகு அவர்கள் அதை முழுவதுமாக ஏற்றுக்கொண்டு அந்தப் பணியிலே அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்.

கொடுக்கப்படுகிற ஊதியம் குறைவு என்ற காரணத்தினாலே
தான் சத்துணவு அமைப்பாளர்கள் அந்த மையத்தைச் சுற்றி
மூன்று கிலோமீட்டருக்குள்ளே இருக்கவேண்டும் என்று உத்தரவு
பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்கள் விரைவில்
மையத்திற்கு வரவும், பணிகளை முடித்துவிட்டுத் திரும்புகிற
நேரத்தில் போக்கு வரத்துக்காக அவர்களுக்கு செலவு ஏற்பட்டு
விடக்கூடாது என்பதற்காகத் தான் மூன்று கிலோ மீட்டருக்
குள்ளாக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற உத்தரவு
பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

இந்தத் திட்டம் வளர்கின்ற குழந்தைகளுக்கு அளிக்கப்
படுகிற திட்டம் என்பதால், இடையிலே இந்தத் திட்டத்தை
நிறுத்துவது என்பது மக்கள் மத்தியிலே ஒரு மிகப் பெரிய
பிரச்சினையை உருவாக்கும் என்ற காரணத்தினாலேதான் ஆண்டு
முழுதும், அதாவது இரண்டு வயதிற்கு மேல் ஐந்து வயதிற்குட்
பட்ட குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிற உணவு ஆண்டு முழுவதும்
வழங்கப்படும் என்ற திட்டமும், பள்ளிக்கூடங்களில், ஆரம்பப்
பள்ளிகளில், உயர்நிலைப் பள்ளிகளில் இந்தத் திட்டம் அமல்
படுத்தப்படுகிற நேரத்தில், தொடக்கப்பள்ளிகளில் 220
நாட்களும், உயர்நிலைப் பள்ளிகளில் 200 நாட்களும் இந்தத்
திட்டம் இன்றைக்கு அமல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசு விடுமுறை நாட்களில், அதாவது பொங்கல், தீபாவளி
போன்ற நாட்களில் விடுமுறை அளிக்கப்படுகிறது. சத்துணவு
ஊழியர்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டாலும், அன்றைக்குப்
பயன்படுத்தப்படவேண்டிய பொருட்களை முதல் நாளே வேறு
வகையிலே தயார் செய்து, அந்தக் குழந்தைகளுக்கு வழங்கப்
பட வேண்டும் என்று அரசு ஆணை இருக்கிறது. ஆனால் அந்த
ஆணை பெரும்பாலான மையங்களில் பின்பற்றப்படுவதில்லை.
அதிலேதான் மிகப் பெரிய முறைகேடுகள் நடக்கின்றன.

பல மையங்களுக்கு நானே நேரடியாகச் சென்று பார்வை
யிட்ட நேரத்தில், அங்கே பதிவுப் புத்தகத்தில் 40 குழந்தை
களுக்குத் தேவையான அரிசி, மற்ற பொருட்கள் எடுக்கப்
பட்டு விடுமுறைக்கு முதல் நாளே அவைகள் உணவுப் பொருள்
களாகத் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டன என்று எழுதி
வைத்து இருக்கிறார்கள். ஆனால் ஓரளவிற்கு விவரம் தெரிந்த
குழந்தைகளைக் கூப்பிட்டு, விடுமுறைக்கு முதல் நாள்
உங்களுக்கு' எப்போதும் வழங்கப்படுகிற சத்துணவோடு
தனியாக உணவு வழங்கப்பட்டதா என்று கேட்டால், பெரும்
பாலான மையங்களில் குழந்தைகள் 'இல்லை' என்று சொல்
கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட முறைகேடுகள் களையப்
பட்டு, இந்தத் திட்டம் நல்லபடியாக எந்தவிதமான
ஊழலுக்கும் அப்பாற்பட்டு நடைபெறுவதற்கான சாத்தியக்
கூறுகளை இந்த அரசு விரைவில் ஆராய்ந்து ஒரு முடிவை
அறிவிக்க இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.



இங்கே மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பழனிச்
சாமி அவர்கள் பேசுகின்றபோது, திருமணமான பெண்ணையும்,
கணவனையும் பிரித்து வைக்கிறீர்களே, இது நியாயமா என்று
கேட்டார். இன்றைக்கு அந்தத் திட்டத்திலே பணியாற்றுகின்ற
வர்கள் ஏறத்தாழ இரண்டு இலட்சம் பேர் இருக்கிறார்கள்.
ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாறுதல் தரலாம்
என்ற நிலை எடுக்க வேண்டுமேயானால், இது ஒரு மிகப் பெரிய
சிக்கலை இந்தத் துறைக்கு ஏற்படுத்தும் என்பது உங்கள்
எல்லோருக்கும் மிக நன்றாகத் தெரியும். எனவே, அப்படிப்
பட்ட பெண்களுக்கு இந்த அரசு ஒரு சலுகை அளிக்க விரும்பு
கிறது. அந்தப் பெண்கள் தன்னுடைய கணவனோடு வாழ
வேறு ஊருக்குச் செல்ல விரும்புவார்களானால், எந்த மையத்
திலே அவர்கள் பணியாற்றுகிறார்களோ, அந்த மையத்தில்
பணியாற்றுகிற பொறுப்பை அவர்கள் 'ரிசைன்' செய்துவிட்டு
அடுத்த மையத்தில் அந்தப் பதவி காலியாகின்ற வரை அவர்கள்
பொறுத்திருப்பார்களேயானால், அவர்களுக்கு முன்னுரிமை
கொடுக்கப்பட்டு, தொடர்ந்து அவர்களுக்கு மற்றப் பகுதிகளிலே
வேலைவாய்ப்பை வழங்குவதற்கு இந்த அரசு முன் வரும்.
ஆனால் மாறுதல் என்பது சமீபத்திலே மேற்கொள்ள இயலாத
ஒன்று என்பதை, அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர
நான் விரும்புகிறேன்.

பெரும்பாலான சத்துணவுக் கூட கட்டிடங்கள் பழுதுபட்டு
சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை என்ற குற்றச்
சாட்டு அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. இங்கே சட்ட
மன்ற உறுப்பினர்கள் அதைச் சுட்டிக்காட்டினார்கள். அந்த
அரசு அப்படிப்பட்ட மையங்களைக் கட்டிய நேரத்திலேயே, இதை
யார் பராமரிப்பது? யாருடைய பொறுப்பில் இந்தப் பராமரிப்பை
ஒப்படைப்பது என்று தீர்க்கமாக ஒரு முடிவு எடுத்து அதை
அமல் செய்யத் தவறியதன் விளைவுதான் இன்றைக்கு ஊராட்சி
ஒன்றியங்களைச் சார்ந்த....

*பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லு
கின்றபோது ஒரு சத்துணவுக் கூடத்திலே பணியில் இருப்பவர்கள்
வேலையை ராஜினாமா செய்து விட்டுக் காத்திருந்தால்
அடுத்த சத்துணவுக் கூடத்திலே அவர்கள் விரும்புகின்ற இடத்
திலே காலி இடம் ஏற்படும்போது கவனிக்கப்படும் என்று
சொன்னார்கள், அதற்குப் பதிலாக காலி இடம் வருகின்ற
போது ஒரு சத்துணவு அமைப்பாளர் அங்கே காலி இடம்
வருகிறது என்று அறிகிறபோது அப்போதே ராஜினாமா செய்து
விட்டு அந்த இடத்திற்கு செல்வதற்கு இந்த அரசு அனுமதிக்குமா
என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து
தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 21

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கை வருமானால் அதை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும். சிலவிடங்களில் குழந்தைகள் நல மையம் கட்டப்பட்டு இருக்கிற இடம் மிக மோசமான இடமாகத் தேர்ந்தெடுத்து கட்டப்பட்டு இருக்கிறது. உதாரணமாக 2 வயதுக்கு மேற்பட்ட 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சென்று பயன் அடையக்கூடிய குழந்தைகள் நல மையங்கள் ஆரம்பத்திலே கட்டுகின்றபோதே [illegible]டங்களின் அருகிலும், சாக்கடையின் அருகிலும் அந்த மையங்கள் பலவிடங்களில் கட்டப்பட்டு இருப்பதன் காரணமாக அந்த மையங்களுக்கு குழந்தைகள் வருவது மிகக் குறைந்து இருக்கிறது. இதை பல மையங்களைப் பார்வையிட்ட நேரத்தில் நானே கண்கூடாக பார்த்தேன். அங்கே இருக்கக்கூடிய [illegible] ஆணையாளர் அவர்களையோ அல்லது மாநகராட்சி அதிகாரிகளையோ அழைத்து இப்படிப்பட்ட இடங்களில் இந்த மையங்களை அமைத்து இருக்கிறீர்களே, சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கக்கூடியதாக இருக்கிறதே என்று கேட்கிற நேரத்தில் [illegible] அரசு அவசரமாக உத்திரவு பிறப்பித்த காரணத்தால் பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுக்க முடியாத [illegible] இந்த இடங்களில் நாங்கள் கட்ட வேண்டிய நெருக்கடி எங்களுக்கு ஏற்பட்டு விட்டது என்று சொல்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட மையங்களில் குழந்தைகளினுடைய எண்ணிக்கை ஓரளவுக்கு குறைந்து இருக்கிறது. இப்படிப்பட்ட மையங்களை மாற்றி அமைக்க முடியுமா என்று சம்பந்தப்பட்ட [illegible]களை இன்றைக்கு நாங்கள் கேட்டு இருக்கிறோம்.

அதைப்போலவே இன்னும் சில மையங்கள் மக்கள் வசிக்கின்ற இருப்பிடத்தை விட்டு சற்று தொலைவில் அமைக்கப்பட்டு இருக்கின்றன. தொலைவில் அமைக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால், இந்த 2 வயது, 4½ வயது உள்ள குழந்தைகளை தூரத்தில் இருக்கக்கூடிய இந்த மையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு பெற்றோர்கள் விருப்பம் காட்டுவது இல்லை. அந்த மையங்களில் பணியாற்றுகின்ற உதவியாளர்களும்கூட நீண்ட தொலைவுக்குச் சென்று குழந்தைகளை அழைத்து வருவதற்கு விருப்பம் காட்டுவது இல்லை. எனவே இந்தக் காரணங்களினால்தான் மையங்களுக்கு வருகின்ற குழந்தைகளினுடைய எண்ணிக்கை குறைந்து இருக்கிறதே அல்லாமல் வேறு [illegible] குறைபாடும் அந்த மையங்களில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். கட்டிடங்கள் பழுதுபட்டு இருப்பது [illegible] சமைப்பதற்கு பயன்படுத்துகின்ற பாத்திரங்கள் [illegible] இருப்பதன் காரணமாக சில சமயங்களில் உணவில் [illegible] தன்மை கலந்து விடுகிறது என்பதும் உங்கள் எல்லோ[illegible]ட்டுமொத்தமான குற்றச்சாட்டு, [illegible] முதல் முறை [illegible] கொடுக்கப்பட்ட அந்த பாத்திரங்கள் ஏறத்தாழ 6 [illegible]க்கு மேலாக தொடர்ந்து பயன்பட்டு வருகின்றன. அதன்



1989 ஏப்ரல் 21] [திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்]

காரணமாக சில சமையல் கூடங்களில் அந்த பாத்திரங்கள் ரிப்பேர் ஆகி மிக மோசமான நிலையில் இருக்கின்றன. அதைப்போலவே கட்டிடங்கள் கட்டி 8 ஆண்டுகள் ஆகியும் கூட அவ்வப்போது ஏற்படுகின்ற சிறு சிறு உடைப்புகள் இடர்பாடுகள் சிறு சிறு ரிப்பேர் ஒர்க்குகள் இவைகளை எந்தத் துறையால் செய்யப் பெறுவது என்று திட்டவட்டமான அறிவிப்பு இல்லாததால் ஆளுக்கு ஆள் ஒதுங்கிக் கொள்கிறார்கள். சமூகநலத் துறையைக் கேட்டால் எங்களுக்கு அதைப் பராமரிக்கின்ற செலவுக்கு பணம் ஒதுக்கவில்லை, அந்தத் திட்டம் எங்களுடையது அல்ல என்று சொல்கிறார்கள். அதைப்போலவே ஊராட்சி ஒன்றியங்களிடம் கேட்டால் எங்களுக்கும் அந்த உத்திரவு வரவில்லை, பொறுப்பு இல்லை என்று சொல்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் அந்த சத்துணவுக் கூடங்கள் இருக்கின்ற காரணத்தால் கல்வித் துறையைக் கேட்டால் கல்வித் துறையும் இந்தப் பொறுப்பு எங்களுடையது அல்ல என்று சொல்கிறார்கள். எனவே தான் பலவிடங்களில் கட்டிடங்கள் இதுபோன்ற மோசமான நிலையில் இருக்கின்றன பலவிடங்களில் சமையல் செய்வதற்கு கூரைவேய்ந்து கட்டிடம் கட்டித் தரப்பட்டு காலப் போக்கில் மேற்கூரை பழுதடைந்து திறந்தவெளியில் சமைக்கவேண்டிய ஒரு கட்டாயம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே இவை எல்லாம் கருத்தில் கொண்டுதான் 3 மாதங்களுக்கு முன்பு, அதாவது தேர்தல் நடப்பதற்கு முன்பு ஆளுநர் ஆட்சியிலே ஏதோ மிச்சம் இருக்கிற கொஞ்சம் நஞ்சம் தொகையை இங்கேயும், அங்கேயும் எடுத்து ஒரு 2 கோடி ரூபாய் அளவுக்கு ஆங்காங்கே இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நகராட்சி ஆணையாளர்கள் போன்று இந்தத் திட்டத்தை அமல்படுத்துகிற எல்லாத் துறைகளுக்கும் அந்தப் பணத்தைப் பிரித்துக் கொடுத்து, மிக மோசமான நிலையிலே இருக்கக்கூடிய கட்டிடங்களை ஓரளவிற்கு பழுதுபார்க்கவும், மேற்கூரைகளே இல்லாத சமையல்கூடங்களுக்கு மேற்கூரைகள் வேயவும், பழுதுபட்டிருக்கிற குழந்தைகள் நல மையங்களை பழுது பார்க்கவும் 2 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. திட்டம் செயல்படத் தொடங்கி இருக்கிறது. குறுகிய காலத்தில் மிக மோசமான நிலையில் இருக்கக்கூடிய சத்துணவுக் கூடங்கள் பழுதுபார்க்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-40)

மகளிர் முன்னேற்றத்திற்காக இந்த அரசு அறிவித்திருக்கிற திட்டங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கின்றன. பொதுவாகவே சமூக நலத்துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையில் மகளிர் நலத்திற்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும், குழந்தைகள் நல்வாழ்விற்காகவும்தான் இந்தத் தொகை செலவு செய்யப்படுகிறது.

இங்கே உரையாற்றிய உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள், சமூகநலத் துறையில் பெண்களுக்கு மட்டும்தானே முக்கியத்துவம் தருகிறீர்கள் ஆண்களுக்கும் இந்த சமூக நலத் துறையின் மூலமாக, அவர்களுடைய முன்னேற்றத்திற்காகவும் ஏதாவது திட்டங்களை அறிவிக்கக் கூடாதா என்று கேட்டார்கள். சமூகநலத் துறையின்மூலமாக எப்படிப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது என்பதை கொள்கைவிளக்கக் குறிப்பிலேயே தந்திருக்கிறோம். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற குடும்பம் என்று தனித் தனியாகப் பிரித்து இருக்கிறோம். சமுதாயத்திலே இதுவரை கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் என்றுதான் கேள்விப் பட்டிருக்கிறோமே அல்லாமல், மனைவியால் கைவிடப்பட்ட ஆண்கள் என்ற ஒரு பிரிவு சமுதாயத்திலே இன்றைக்கு இல்லை. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படி நிரம்பப் பேர் இருக்கிறார்கள் (சிரிப்பு). சொல்லுங்கள் வரதராசன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே உச்ச நீதிமன்றத்திலே மனைவியால் கைவிடப்பட்ட ஒரு கணவன் ஜீவனாம்சம் கேட்ட ஒரு வழக்கும் இருக்கிறது. அப்படி, வசதி பெற்ற மனைவியால் கைவிடப்பட்டு அனாதரவாக இருக்கக்கூடிய ஆண்களுக்கும் சமூக நலத் துறை பாதுகாப்பு கொடுக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்களுக்கு அந்த நிலைவராது என்று கருதுகிறேன். அப்படி யாராவது மனைவியால் கைவிடப்பட்ட ஆண்கள் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு வழியில்லை என்ற ஒரு நிலைமை ஏற்படுமேயானால் நிச்சயமாக அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் அவர்களுடைய கோரிக்கையும் பரிவோடு பரிசீலிக்கப் படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சமுதாயத்தில், விதவைகள், கணவனுடைய ஆதரவை இழந்த பெண்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற குடும்பம் என்றுதான் பிரித்து இருக்கிறோமே அல்லாமல் பெண்களுக்கு மட்டும்தான் என்கின்ற அளவுகோல் எதுவும் வரையறுக்கப்படவில்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற குடும்பப் பெண்களுக்கு உதவிசெய்கிறோம் என்றாலே அந்தக் குடும்பத்தை சார்ந்த ஆண்களும் அதன்மூலம் பயன் பெறுகிறார்கள் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். இப்படி வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற பெண்களுக்கு என் நாம் இந்தத் திட்டத்தை நேரடியாக அமல்படுத்துகிறோம் என்றால், இன்றைக்குப் பெரும்பாலும் வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழ்ந்து





கொண்டிருக்கிற குடும்பங்களில் பெண்களுடைய சம்பாத்தியம் தான் பெரும்பாலும் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு பயன் படுகிறது. ஆண்களினுடைய சம்பாத்தியம் அந்தக் குடும்பத்திற்கு 50 சதவீதம் கூட சேருவது இந்தக் காலகட்டத்தில் கடினம் என்பதை நீங்கள் எல்லோரும் ஒப்புக்கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன். எனவேதான் இந்தத் துறையின் மூலமாக அளிக்கப் படுகின்ற உதவி நேரடியாக குடும்பத்தை, குடும்பத்திலே இருக்கக் கூடிய ஏனையோரை சென்று அடையவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் பெண்களுக்கு நேரடியாகப் பயன்படக்கூடிய வகையில் இந்தத் திட்டம் இன்றைக்கு வரையறுக்கப்பட்டிருக் கிறது.

இதைப்போன்று ஏழையெளிய பெண்களுக்கு இந்தத்துறையின் மூலமாக ஏற்கெனவே பல நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டி ருக்கின்றன. அந்தத் திட்டங்களோடு சமீபத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு ஆளுநர் உரையின் மூலமாகவும் நிதிநிலை அறிக்கையின் மூலமாகவும் பெண்களுடைய முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத் திட்டங்கள், புதிய திட்டங்கள் இந்த அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அத்தனை பேரும் மிக நன்றாக அறிவீர்கள்.

ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற திட்டங்களைத் தொடர்ந்து அமுல்படுத்துவதோடு புதிய திட்டங்கள் மூலமாகவும் சமுதாயத்தில் இருக்கக்கூடிய நலிந்த பிரிவு மக்களுக்கு பயன் கிட்டக்கூடிய வகையிலே இந்தத் துறை அந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலிருந்தே உடனடியாக அமுல்படுத்த இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே உரையாற்றிய சகோதரி லட்சுமி அவர்கள் திருமணத் திற்கு உதவி செய்யப்படுகிற திட்டம் நல்ல திட்டம் ; ஆனால் காலாகாலத்தில் உரிய நேரத்தில் வந்து சேரவில்லை என்று சொன்னார்கள். முடிந்த அளவுக்கு கொடுக்கப்படுகிற உதவித் தொகை திருமணத்திற்கு நேரடியாகப் பயன்படக்கூடிய அளவிலே சென்று அடைய வேண்டுமென்றுதான் இந்தத்துறையிலே பொறுப் பேற்றிருக்கிற அதிகாரிகள், அலுவலர்கள் எல்லாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இந்தக்குறைபாடு வருங்காலத்தில் கவனத்தில் கொள்ளப் பட்டு, இந்தக் குறைபாடு களையப்பட்டு, அரசு அறிவிக்கிற திட்டம் உடனடியாக நேரடியாக உரிய காலத்தில் சம்பந்தப் பட்டவர்களுக்கு கிடைக்க இந்த அரசு நடவடிக்கை மேற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழை விதவை மகள் திருமணத்திற்கு நபர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கப்படுவதற்காக இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போன்று ஆதரவற்ற மகளிர்க்கு, தாய் தந்தை இல்லாதவர்களுக்கு

திருமண உதவித் தொகையாக வழங்கப்படும் ஆயிரம் ரூபாய் திட்டத்திற்காக இந்த ஆண்டு 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று விதவைகளை மறுமணம் செய்து கொள்ள முன்வருகிற முற்போக்குச் சிந்தனை உள்ள இளைஞர்கள் விதவைகளை மறுமணம் செய்துகொள்ளும் திட்டத்திற்கு பணம் ஒதுக்கி, அரசு 5000 ரூபாய் அந்தத் தம்பதியர் பெயரில் சேமிப்புப் பத்திரமாக வழங்குகிறது. இந்தத் திட்டத்திற்காக 5 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வறுமையில் உழலும் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் 8-வது வகுப்போ அல்லது அதற்கு மேலோ படித்தவர்களாக இருந்தால் அவர்களுடைய திருமணத்திற்காக இந்த அரசு 5,000 ரூபாய் வழங்கும் என்ற திட்டம் இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது இந்தத் திட்டத்திற்காக 6 கோடி ரூபாய் இந்த மானியத்திலே உங்களுடைய அனுமதியோடு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதைப் போல உழைத்து அதன் மூலம் குடும்பத்தைக் காப்பாற்றக் கூடிய நிலையில் இருக்கிற பெண்கள் வேலைக்குச் சென்றால்தான் குடும்பத்தைக் காப்பாற்றமுடியும் என்ற நிலையில் இருக்கிற பெண்கள் கர்ப்பவதியாகி, பிரசவக்காலத்தில் வேலைக்கு செல்ல முடியாத காரணத்தால் அந்தக் குடும்பம் மொத்த வருமானத்தையும் இழந்துவிடக் கூடாது என்ற அடிப்படையில் பேறுகாலத்திற்கு முன் இரண்டு மாதங்களுக்கும் பேறுகாலத்திற்குப் பின் இரண்டு மாதங்களுக்கும் ஆக 4 மாதங்களுக்கு மாதம் 50 ரூபாய் வீதம் 200 ரூபாய் வழங்கும் திட்டத்திற்காக ஏறத்தாழ 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல......

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதவைகள் திருமணத்திற்கு 5,000 ரூபாய் கொடுப்பது பற்றிச் சொன்னார்கள். நம்முடைய நாட்டில் விவாகரத்து செய்தவர்களையும் விதவைகளையும் ஒன்றாக மதிக்கிறார்கள். ஆகவே, விவாகரத்து செய்த பெண்கள் மறுமணத்திற்கும் இந்த 5,000 ரூபாய் உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தற்போதுள்ள திட்டம் விதவைகளைத் திருமணம் செய்து கொள்ளக் கூடிய இளைஞர்களுக்கு இந்த உதவித் தொகை அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சார். பாயிண்ட் ஆப் ஆர்டர் மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, விதவைகளை மறுமணம் செய்துகொள்கிறவர்களுக்கு 5000 ரூபாய் வழங்கும் திட்டம் நல்ல திட்டம்தான், தினம் தினம் பல நல்ல திட்டங்களை அறிவிக்கிறோம். ஆனால் இந்த விதவைகள் மறுபடியும் மறுபடியும் மறு



படியும் விதவைகளாகிவிட்டால் என்ன செய்வது? (பலத்த சிரிப்பு) விதவையைத் திருமணம் செய்தவன் சென்றுவிடுகிறான் அல்லது கைவிட்டுவிடுகிறான் என்றால் மறுபடியும் அவள் விதவையாகிறாள். மறுபடியும் கல்யாணம் செய்துகொள்கிறவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுமா ? இப்படியே வழங்கிக் கொண்டிருந்தால் நாம் பணத்திற்கு என்ன செய்வது ? நம்முடைய பணத்தின் நிலைமை என்ன ? (சிரிப்பு) அதையெல்லாம் தெரிவிப்பார்களா ?

(பிற்பகல் 1–50)

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விதவையைத் திருமணம் செய்துகொண்ட இளைஞன் பல்லாண்டுக்காலம் வாழவேண்டுமென்று தீட்சிதர் அவர்கள் தான் வணங்குகின்ற திருவரங்கநாதரிடத்திலே வேண்டிக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவாகரத்து செய்துகொண்ட பெண்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார். சில குடும்பங்களில் பெண்களே கணவனிடமிருந்து பிரியவேண்டுமென்று தாங்களாக முன்வந்து வழக்கு மன்றத்தில் விவாகரத்து வழக்கு தொடுக்கிறார்கள். சில இடங்களில் ஆண்கள் விவாகரத்து கோரி வழக்கு மன்றத்தில் வழக்கு தொடருகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அந்தப் பெண்களுக்கு ஜீவனாம்சம் என்ற பெயரில் ஒரு குறிப்பிட்ட அளவு தொகையைத் தரவேண்டுமென்று வழக்கு மன்றம் தீர்ப்பு வழங்குகிறது. எனவே அப்படிப்பட்ட பெண்களுக்கெல்லாம் நாம் இந்தத் திட்டங்களை நீட்டிக்கொண்டு போனால் அரசாங்கத்திற்கு நிதி நிலை நெருக்கடி எவ்வளவு ஏற்படும் என்பதையும் அருள் கூர்ந்து அனைத்து உறுப்பினர்களும் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதவைகளை மறுமணம் செய்துகொள்கிற அந்த இளைஞர்கள் பெயரில் இந்தப் பத்திரத்தை வழங்குவதற்குப் பதிலாக அந்தத் தம்பதியர்களின் கூட்டுப் பெயரில் வழங்குவது உதவிகரமாக இருக்கும் என்பதை அரசு பரிசீலிக்குமா ?

அதேபோல் கணவனால் கைவிடப்படுகிற அபலைப் பெண்களை மறுமணம் செய்து கொள்கின்ற அந்த இளைஞர்களுக்கு அல்லது அந்தக் குடும்பத்தினருக்கு இந்தத் தொகையை நீட்டிப்பதற்கு அரசு உத்தேசிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : கொடுக்கப் படுகிற 5000 ரூபாய் உதவித்தொகை இருவர் பெயரிலும் தேசிய சேமிப்புப் பத்திரமாக வழங்கப்படுகிறது என்பதை உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த ஆண்டு புதிய திட்டமாக ஒன்றை அறிவிக்கிறோம். சில மாநிலங்களில் பெண்கள் சொந்தமாக ஆட்டோ ரிக்ஷா பெற்று, அந்த ரிக்ஷாக்களின் மூலமாக குடும்பத்திற்குத் தேவை யான வருமானத்தைப் பெறுகிற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டி ருக்கிறார்கள். இப்போது பெரும்பாலும் பள்ளிக்கூடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்கின்ற ஆட்டோ ரிக்ஷாக்களைப் பார்த்தால் பெரும்பாலும் ஆண்கள் தான் அந்தப் பணியில் ஈடு பட்டிருக்கிறார்கள், அதிக எண்ணிக்கை உள்ள குழந்தைகளை ஏற்றிக் கொண்டு கண், மண் தெரியாத வேகத்தில் அவர்கள் தெருவில் போகிற காட்சியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். எனவே இப்படிப்பட்ட பணியில் பெண்களை ஈடுபடுத்தினால் கொஞ்சம் பாதுகாப்பு உணர்வோடு அந்தக் குழந்தைகளை பள்ளிக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள், என்ற எண்ணத்தின் அடிப் படையில் முதல் கட்டமாக பரிட்சார்த்தமா இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்காக 200 பெண்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வாங்கிக் கொடுக்கலாம் என்ற வகையில் 13,60,000 ரூபாய் இந்த ஆண்டு இந்தத் துறையின் மூலமாக வழங்க இந்த அரசு முன்வந்திருக்கிறது. அதைப்போல மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குவதற்காக ஏறத்தாழ 60,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கரும்புச்சாறு பிழியும் இயந்திரம், ஐஸ்க்ரீம் வண்டிகள், பிளாஸ்டிக் பாய் முடைதல் போன்றவற்றில் ஈடுபடுகிற பெண்களை ஊக்கப்படுத்துவதற்காக 23 லட்சம் ரூபாய் இந்தத் திட்டத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் இதை போன்ற சாதாரணத் தொழில்களுக்கு மட்டுமல்லா மல் சற்று கடினமான தொழில்களிலும் பெண்களை ஈடுபடுத்த முடியுமென்றும்மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தில் அடிப் படையில் தான் தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனத்தின் (எல்காட்) உற்பத்தி மையங்களில் பெண்களுக்கு பயிற்சியளித்து மின்னணுத் துறையிலேயும் பெண்கள் வேலை வாய்ப்பு பெற்று வருமானத்தைப் பெறுவதற்கான வகையில் பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. அதை போல நெசவுத் துறையில் பெண்களை ஈடுபடுத்தி தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை பெண்களுக்காக மட்டுமே ஏற்படுத்தி அந்தத் துறையின் மூலமாக வும் பெண்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கான திட்டம் இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து ஏற்கெனவே பல குறைபாடுகள் சுட்டிக் காட்டப் பட்டிருக்கின்றன. ஆடு வளர்ப்புத் திட்டம், கறவை மாடுகளை வாங்கிப் பயன்படுத்துகிற திட்டம் ஆகியவற்றின் மூலம் பெண் களின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்



பட்டு வருகின்றன. ஆடுகளை வளர்ப்பதற்காக கடன் தொகை வழங்குகிற திட்டத்திலும் மாடு வாங்குவதற்காக கடன் வழங்கிற திட்டத்திலும் இருக்கக்கூடிய குறைபாடுகள் இன்றைக்கு நேற்று அல்ல, பல ஆண்டுகளாகவே இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் பேசப்பட்டுள்ளது. எனவே இது குறித்தெல்லாம், இப்போது பொறுப்பேற்றிருக்கிற அரசு கவனத்தில் கொள்ளும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

பல்வேறு துறைகளில் இருக்கக்கூடிய ஊழல்கள் களையப்பட்டு நல்ல நிர்வாகத்தை அளிக்கவேண்டும் என்ற உணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிற முதல்வர் அவர்களைப் பெற்றிருக் கின்ற இந்த அரசு நிச்சயமாக இந்தத் துறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற முறை கேடுகளைக் களைந்து உள்ளபடியே யாருக்கு இந்தத் திட்டம் சென்று பயனளிக்க வேண்டுமோ அவர்கள் இந்த அரசினுடைய நிதியுதவி பெற்று பயன்பெறக் கூடிய வகையில் இந்தத் திட்டத்தைச் செம்மைப்படுத்துவதற்காக இதே அரசு நிச்சயமாக முன்வரும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்து கதர்த் துறை பற்றியும், அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவது பற்றியும், கிராமப் பகுதியிலே சிறிய தொழில்களைத் தொடங்குவதன் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்குவது பற்றியும் இங்கே சிறப்பான ஆலோசனைகள் எடுத் துச் சொல்லப்பட்டன.

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் முன்னாள் அமைச்சர் அவர்கள், இங்கே உரையாற்றிய நேரத்தில், தமிழ்நாட்டிலே ஏராளமான கதர்த் துணிகளை உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு இருந்தும், மற்ற மாநிலங்களிலிருந்து கதர்த் துணிகளை நாம் ஏன் வாங்கி உபயோகிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு கதர் விற்பனை அங்காடிகளில் விற்பனை செய்யப் படுகின்ற தூய கதர் துணிகளும், செயற்கை இழை கலக்கப்பட்ட பாலிஸ்டர் கதர் ஆடைகளும் கதர் பட்டு ஆடைகளும் பெரும் பாலும் நம்முடைய மாநிலத்திலே தயார் செய்யப்படுபவை தான். கம்பளி போன்ற ரகங்கள் தான், வெளி மாநிலத்திலே யிருந்து வாங்கப்பட்டு அந்த அங்காடிகளிலே விற்பனை செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 9 கோடி ரூபாய் மதிப்புள்ள கதர்த் துணிகள், 4 கோடி ரூபாய் மதிப் புள்ள கதர் பாலிஸ்டர் துணிகள் உற்பத்தி செய்ய திட்டம் இடப்பட்டுள்ளது. தமிழ்நாடு கதர் கிராம வாரியத்தில் 650 லட்சம் ரூபாய், ஏறக்குறைய 6½ கோடி ரூபாய் மதிப்புள்ள பட்டு உற்பத்தி செய்து இன்றைக்கு பட்டு உற்பத்தியில், இந்தியாவிலேயே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தனிப் பெயரை ஈட்டியுள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப் பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு அதிக வேலை
வாய்ப்பு கொடுக்கக்கூடிய துறைகளிலே ஒன்று கதர்க் கிராம
தொழில் வாரியம் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது.
காரணம் கிராமப்பகுதியிலே வேலை வாய்ப்பை உருவாக்கு
வதற்கும் வேலை வாய்ப்பைத் தேடி நகரங்களில்மக்கள் வந்து
குவிவதைத் தடுக்கவும், இந்த கிராமத்தொழில் வாரியம் பயன்
படுத்தப்பட்டு வருகிறது. கிராமத்திலே கிடைக்கக்கூடிய, கிராமப்
புறத்திலே சுலபமாகக் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களை அதிக
செலவில்லாமல், பெற்றுக்கொண்டு, அதிக உற்பத்திச் செலவும்
இல்லாமல் குறைந்த செலவிலே பொருள்களை உற்பத்தி செய்யக்
கூடிய முறை கதர் கிராம கைத்தொழில் வாரியம் மூலமாகத்தான்
நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும் அறி
வார்கள். அத்தனை உறுப்பினர்களும் நன்றாகவே அறிவார்கள்
அதற்கு உதாரணமாக பனைத் தொழிலை நாம் எடுத்துக்
கொள்ளலாம். பனை மரம் என்பது, இன்றைக்கு கிராமத்திலே
உள்ள மக்களுக்கு மிகுந்த வேலை வாய்ப்பைத் தரக்கூடிய
கற்பகத் தருவாக இன்றைக்கு அது பயன்பட்டுக் கொண்டிருக்
கிறது. பனை ஓலை, சாதாரண மக்களுக்கு எதற்குமே பயன்
படாத ஒரு துரும்பாக காட்சி அளிக்கலாம். ஆனால்
சிதம்பரனார் மாவட்டம், நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் ஆகிய
மாவட்டங்களில் உள்ள பகுதிகளில் அந்த பனை ஓலைகளைக்
கொண்டு பெண்கள் தயார் செய்கின்ற பொருள்களைப்
பார்ப்போமேயானால் நாம் ஆச்சரியத்திலே மூழ்கிப் போவோம்,
அந்த அளவுக்கு பனை ஓலையிலிருந்து அற்புதமான
பொருள்களை தயாரிக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால்
பனை ஓலைகளில் இருந்து வெளிநாட்டினர் கவனத்தைக் கவரக்
கூடிய அளவுக்கு அற்புதமான பொருள்களைத் தயார் செய்கின்
றனர். அப்படித் தயார் செய்யப்படுகின்ற அந்தப் பொருள்களைக்
கூட வெளிநாட்டிற்கு அனுப்பக்கூடிய முயற்சி மேற்கொள்ளப்
பட்டு ஏறத்தாழ ரூ. 4.52 லட்சத்திற்கு இந்த ஆண்டு பனை
ஓலைப் பொருள்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்
கின்றன.

நடப்பு ஆண்டில் ஏறத்தாழ 1½ லட்சம் ரூபாய்க்கு அதிக
மான பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான திட்டம் அரசின்
பரிசீலனையில் உள்ளது.

அதைப்போலவே, பிரஷ்கள் போன்ற பொருள்கள் தயார்
செய்வதற்கு, பனை தும்புகள் என்று சொல்லக்கூடிய
பொருள்களுக்கு வெளிநாட்டிலே அதிகமான கிராக்கி இருக்கிறது.
அதைக் கவனத்திலே கொண்டு இந்த பனை தும்பு தயார்
செய்கிற பயிற்சி அங்கே இருக்கின்ற பெண்களுக்கு
அளிக்கப்பட்டு, பெண்களாலேயே கூட்டுறவு அமைப்புகள் ஏற்
படுத்தப்பட்டு, அந்த பனை தும்பு தயார் செய்யப்பட்டு, சுத்தம்
செய்யப்பட்டு; அவைகள் எல்லாம் கட்டுக்கட்டாகக் கட்டப்
பட்டு தம்முடைய தேவைகளுக்கும், வெளிநாடுகளின் தேவை



களுக்கும் ஏற்ப அனுப்பப்படுகிற அந்தத் துறையில் ஏராளமான
பெண்கள் இன்றைக்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பெண்களுக்கு வேலைவாய்ப்பு
கொடுப்பதிலே காதி கிராமத் தொழில் வாரியம் சார்பிலே
'தாட்கோ' மூலமாக ஒவ்வொரு யூனியனுக்கும் 10 யூனிட் என்று
ஆரம்பித்து அதிலே ஆயிரம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு
ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கிறது. அதே போன்று எல்லா யூனியன்
களிலும் ஏற்படுத்தப்படுமா என்று கூடக் கேட்டிருந்தேன். அது
பற்றி ஏதாவது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படு
என்பதை அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரின் கவனத்
திற்கு, அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருப்பது பனை ஓலை
பற்றி. அவர்கள் பேசி முடித்த பிறகு தாங்கள் கேள்வி
கேட்டால் அவர்கள் ஒவ்வொன்றாக அறிவிக்க வாய்ப்பாக
இருக்கும்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமிசெகதீசன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பம்பாயில் இருக்கிற காதி
கமிஷன் என்கிற நிறுவனம் தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில்
இதைப்போன்ற திட்டங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று
விரும்புகிறதோ அப்படிப்பட்ட பகுதிகளில் சமுதாயத்திலிருக்கிற
எந்த பிரிவினருக்கும் அது பயன்பட வேண்டுமென்ற அடிப்படை
யில் அங்குள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பினைத் தர வேண்டு
மென்ற அடிப்படையில் அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்
பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை எல்லா ஒன்றியங்களுக்கும்
விஸ்தரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்திருக்
கிறார்கள். இந்தத்திட்டத்தை வருகிற ஆண்டுகளில் விஸ்தரிக்கிற
முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பனை தொழில் பற்றி
ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். இன்றைக்கு இந்தப் பனை
தொழில் மூலம் இன்னும் ஏராளமானவர்களுக்கு வேலை
வாய்ப்புகளை உருவாக்கும் வாய்ப்பு கதர்கிராமக் கைத்தொழில்
வாரியத்திற்குக் கிடைத்திருக்கிறது.

சமீபத்தில் மத்திய கதர் ஆணைக் குழு தமிழகத்தில் இருக்
கிற அதிகப்படியான பனைமரங்களை இன்னும் நல்லபடியாக
பயன்படுத்தி, இன்னும் அதிகமான பேர்களுக்கு வேலை
வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க, இந்தப் பனை மரத்திலிருந்து
இன்னும் அதிகப்படியாக புதிய பொருள்களை ஆராய்ச்சி செய்து
கண்டுபிடிக்க திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் 43
லட்சம் செலவில் பனை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்
படுத்த முன்வந்திருக்கிறது. இந்தப் பனை ஆராய்ச்சி நிலையம்
ஆரம்பிக்கப்பட்டு, இன்னும் பனை மரத்திலிருந்து கிடைக்கிற
மற்ற பொருள்களைக் கொண்டு என்னென்ன தொழில்களை
ஆரம்பிக்க வேண்டுமென்ற ஆராய்ச்சி செய்யப்பட்டால் கிராமப்
புறங்களில் வாழ்கிற ஏழையெளிய மக்களுக்கு, குறிப்பாக

மகளிர்க்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சிறந்த வாய்ப்பாக
அது இருக்கும். அதுபோல நடப்பாண்டில் ஏறத்தாழ 360
நபர்களுக்குப் பயன்படும் வகையில் 9 பனை நார் உற்பத்தி
நிலையங்களை 25 லட்சம் ரூபாய் செலவில் அமைக்க தமிழ்நாடு
கதர் கிராம கைத்தொழில் வாரியம் திட்டமிட்டிருக்கிறது. அது
போல கள் இறக்குகிற பணி தடைப்பட்ட பிறகு, அந்தப் பணி
யில் ஈடுபட்டிருந்தவர்கள் மாற்றுப் பணியில்லாமல் சிரமப்படு
கிறார்கள் என்கிற கோரிக்கை வந்தபோது இந்தத் துறையின்
மூலம் அப்படிப்பட்டவர்களை எல்லாம் பதநீர் இறக்குகிற
கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக ஏற்று பதநீர் இறக்கு
கிற தொழிலை அவர்களுக்குத் தந்து அதன் மூலம் வேலை
வாய்ப்பு தந்திருக்கிறோம். மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்ட
நேரத்தில் அவர்களுக்கு ஏற்கெனவே நபர் ஒருவருக்கு ஆயிரம்
ரூபாய் வீதம் மானியமாகவும், ஆயிரம் ரூபாய் பதநீர் இறக்கி
பிறகு அதை பனைவெல்லமாக மாற்றத் தேவைப்படும் உபகரணங்
களை வாங்கவும் பணம் கொடுக்கப்பட்டது. இன்றைக்கு பனை
மரம் சம்பந்தப்பட்ட சங்கங்களில் இருக்கிற மற்ற உறுப்பினர்கள்
சங்களுக்கும் அந்த் தொழிலில் அங்கள் ஈடுபட்டிருக்கிற கார
ணத்தால் கருவிகளும், உபகரணங்களும் வாங்குவதற்கு உதவித்
தொகை தேவை என்று கேட்டதால் தேசிய ஊரக வேலை
வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 10 லட்சம் ரூபாயும், கதர் கிராம
கைத்தொழில் வாரியத்தின் மூலம் 10 லட்சம் ரூபாயும் ஆக
மொத்தம் 40 லட்சம் ரூபாய் பனை தொழிலில் ஈடுபட்டு
இருப்பவர்களுக்கு நபர் ஒருவருக்கு 400 ரூபாய் வீதம் கருவிகள்
வாங்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து
கொள்கிறேன்.

அதுபோல மட்பாண்டத் தொழில் மூலம் ஏராளமான வேலை
வாய்ப்பினை உருவாக்கக் கூடிய சூழ்நிலை இந்த கதர் கிராம
கைத்தொழில் வாரியத்திற்கு இருக்கிறது. மட்பாண்டத் தொழில்
மிகப் பெரிய அளவில் வேலை வாய்ப்பினை வழங்கக்கூடிய
பரம்பரைத் தொழில். 58 ஆயிரம் பேர்களுக்கு மேல் ஏற்கெனவே
இந்தத் துறை மூலம் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.
இந்தத் தொழில் மூலம் 9 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்
புள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்தத்
தொழிலை மேலும் மேம்படுத்த வாரியம் முயற்சிகளை மேற்
கொண்டுள்ளது. அதனால்தான் நடப்பாண்டில் புகை வராத
மக்கள், சூளா அடுப்புகள்' என்கிற பெயருள்ள மெருகூட்டப்
பட்ட மட்பாண்டங்களை 39.80 லட்சம் செலவில் கதர் கிராம
கைத்தொழில் வாரியத்தின் மூலம் செயல்படுத்த திட்டமிடப்
பட்டுள்ளது. 2,750 பேர் இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு
வேலைவாய்ப்பு பெற தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.
ஏற்கெனவே கதர் கிராம கைத்தொழில் வாரியத்தின் மூலம்
கதர் உற்பத்தியில் பல ரக நூல்களை உருவாக்கவும், அந்தத்
தொழிலில் பெண்களையும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து
கொண்டிருக்கிற சாமானியப் பிரிவினரையும் சேர்த்து கதர்
உற்பத்தியைப் பெருக்கவும், கதர் கிராம கைத்தொழில்



வாரியத்தின் மூலம் வர்களுக்கு பயிற்சி அளித்து அதன்மூலம்
அங்கே கிடைக்கக்கூடிய எளிய பொருள்களைப் பயன்படுத்தி
வேலைவாய்ப்புகளை அதிகப்படியாக உருவாக்கிக் கொடுக்கவும்
இந்தத் துறை அந்த அடிப்படையில் அதிக அளவில் பொருள்கள்
உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் போன்ற
திட்டங்களைத் தீட்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். இந்தத் துறை இந்த ஆண்டில் அதிகப்படியான நபர்
களுக்கு வேலைவாய்ப்பு வழங்க திட்டமிட்டிருக்கிறது என்பதையும்
மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ஊரகத் தொழில்களைப் பற்றி உரையாற்றுகிற நேரத்தில்,
சிறு தொழில்கள் தொடங்க முன் வருகிறவர்களுக்கு மாவட்டத்
தொழில் மையங்களில் சரியான ஒத்துழைப்பு இல்லை என்ற
குறைபாடு இங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மூலப்
பொருள்கள் வழங்குவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது என்ற
குறையை இங்கே உரையாற்றிய மரியாதைக்குரிய உறுப்பினர்
திரு. காதர்பாட்சா அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். பாரபின்
மெழுகு வழங்குவதில் மாவட்டத் தொழில் மையங்கள் கால
தாமதம் செய்கின்றன என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது.
தமிழ்நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு 9000 டன் மெழுகு மத்திய
அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஒதுக்கீடு 1988-89
வரை முறையாக வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால்
தற்சமயம் இந்த ஒதுக்கீடு குறைக்கப்பட்டு, அதன் காரணமாக
இந்த பாரபின் மெழுகை மூலப் பொருளாக வைத்து உற்பத்தி
செய்யும் தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்வதிலே சற்று
காலதாமதமும், குறையும் ஏற்படுகிறது என்பதை ஒப்புக்
கொள்கிறேன். தொடர்ந்து எம்.ஆர்.எல். ஓடும், மத்திய
அரசோடும் தொழில்துறை மூலமாக பேச்சு வார்த்தைகள்
நடத்தப்பட்டு, கூடியவிரைவில் இந்தக் குறைபாடு நிவர்த்தி
செய்யப்படுமென்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய
கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக கடன் உதவி
பெறுவதற்கு வங்கிகளுக்கு சிபாரிசு செய்வதில் ஏற்படும்
குறைபாடுகளும் இங்கே சுட்டிக் காட்டப்பட்டன. வங்கிகள்
மூலமாக சுலபமாகக் கடன் கிடைக்கிறது என்ற காரணத்திற்
காக, தொழில் தொடங்க வேண்டும், கடுமையாக உழைக்க
வேண்டும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று உண்மை
யாகவே ஆர்வம் இல்லாத சிலர்கூட கிடைக்கின்ற கடன்
தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரே நோக்கத்
திற்காக இப்படிப்பட்ட மையங்களை அணுகுபவர்களும்
உண்டு. இப்படிப்பட்ட நிலைமைகள் தவிர்க்கப்பட்டு, உள்ள
படியே கிடைக்கக்கூடிய வாய்ப்பு, வசதிகளைப் பயன்படுத்தி,
தொழில் தொடங்கி, கடுமையாக உழைத்து, உற்பத்தியைத்
தொடங்க வேண்டுமென்ற உணர்வோடு வருகின்றவர்களுக்கு
நிச்சயமாக மாவட்டத் தொழில் மையங்கள் அனைத்து வாய்ப்பு
களையும் உருவாக்கித் தரும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்

காட்ட விரும்புகிறேன். பல்வேறு மாவட்டங்களில் இதுபோன்ற மாவட்டத் தொழில் மையங்களின் அதிகாரிகளோடு ஆலோசனை நடத்திய நேரத்தில், அந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கிற பலர் வந்து, அந்தத் துறையிலே இருக்கிற குறைபாடுகளைச் சொன்ன நேரத்தில், நானே கண்கூடாகக் கண்ட உண்மை, வங்கிகளிலே சுலபமாகக் கடன் கிடைக்கிறது, எப்படியோ பின்னாலே பார்த்துக்கொள்ளலாம் என்ற உணர்வோடு அந்தக் கடன் தொகையை வாங்கி ஆரம்பிக்கப்பட்ட பல தொழில்கள் இன்றைக்கு அரையும் குறையுமாக நின்றுகொண்டிருக்கின்றன. எனவே தொழிலில் முழுமையான ஈடுபாடு இல்லாமல், அவ்வப்போது ஏற்படும் சங்கடங்களை சமாளித்துக்கொண்டு, பொறுத்துக்கொண்டு, அந்தத் தொழிலை முன்னேற்ற வேண்டுமென்று உண்மையான அக்கறையில்லாமல் சிலர் முன்வருவதன் காரணமாகத்தான் சிறு தொழில் வளர்ச்சியில் இப்படிப்பட்ட இடையூறுகள் ஏற்பட்டிருக்கிறதென்பதை நாம் கருத்திலே கொள்ள வேண்டும். எனவே அப்படிப்பட்ட நிலைமைகள் மாற்றப்பட்டு, உண்மையிலேயே தொழில் தொடங்க வேண்டும், அதன் மூலம் நாட்டினுடைய பொருளாதாரத்தையும், தங்கள் குடும்பத்தின் பொருளாதாரத்தையும் உயர்த்த வேண்டுமென்ற உண்மையான நோக்கத்தோடு வரும் அத்தனை சிறு தொழிலதிபர்களுக்கும் மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக தொழில்கள் தொடங்க நிதி உதவும் நிதி நிறுவனங்கள் மூலமாக இந்த அரசு அவர்களுக்குத் தேவையான ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு உரையாற்றிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி மிக அதிகமாக எடுத்துச் சொன்னார்கள். சத்துணவுக் கூடங்களிலே கூட பி.எஸ்.சி., எம்.எஸ்.சி. பட்டதாரிகள் எல்லாம் பணியாற்றுகிறார்கள் என்கின்ற குறைபாடுகள் இங்கே சுட்டிக்காட்டப்பட்டன. கடந்த பல ஆண்டுக்காலமாக தமிழகத்தில் சிறிய தொழில்களுக்கும், பெரிய தொழில்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் குறைந்து போனதன் காரணமாகத்தான் வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு மிகப் பெரிய பிரச்சினையாகி, இன்றைக்கு நம் முன்னாலே விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. எனவே இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், நாட்டில் தொழில் துறையிலே முன்னேற்றத்தை உருவாக்கவும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சமீபத்திலே மேற்கொண்ட முயற்சிகளை எல்லாம் நீங்கள் அறிவீர்கள். சமீபத்தில் டெல்லிக்குச் சென்றிருந்த நேரத்தில் மத்திய அரசோடு, பாரதப் பிரதமரோடு தொடர்பு கொண்டு, மத்திய அரசின் நிதி உதவியோடு தொடங்கப்படுகிற பெரிய பெரிய தொழிற்சாலைகள் இந்த ஆண்டு தமிழ்நாட்டில் தொடங்க முன்வர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக தமிழகத்தில் இருக்கக்கூடிய பெரிய பெரிய தொழிலதிபர்கள் என்ன காரணத்தாலோ



தொடங்குவதைத் தவிர்த்து,
தமிழ்நாட்டிலே தொழில்கள் பல்வேறு வெளி மாநிலங்களில் போய் தொழில்களைத் தொடங்கி
தொடங்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்
யிருக்கிறார்கள், தொடங்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்
என்பது உங்களுக்குத் தெரியும். எனவே இப்படிப்பட்ட
முயற்சிகளை நிறுத்திவிட்டு, அந்தத் தொழிலதிபர்கள் தமிழகத்
திலேயே தங்கள் பொருளாதாரத்தை முதலீடு செய்து தமிழ்
நாட்டிலேயே தொழில்களைத் தொடங்க முன்வர வேண்டுமென்று
பெரிய தொழிலதிபர்களை எல்லாம் சமீபத்தில் சென்னை
கோட்டையில் சந்தித்து, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவர்
களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் தமிழகத்தில்
தனியார் தொழில்துறை விரைவில் முன்னேறுவதற்கான ஒரு
வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப் போலவே இந்த
அரசு சிறு தொழில்களைத் தொடங்குவதற்கான அனைத்து
உதவிகளையும், வாய்ப்புகளையும், வசதிகளையும் சிறுதொழில்
அதிபர்களுக்கு வழங்குவதன் மூலமாக வேலையில்லாத்
திண்டாட்டத்தைப் போக்குகிற நடவடிக்கையை நிச்சயமாக
இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை இங்கே நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-10)

எனவே, இந்தத் துறையின், மூலமாக இங்கே வைக்கப்
பட்டிருக்கிற மானியக் கோரிக்கையில் கோரியுள்ளபடி நிதியை
ஒதுக்கீடு செய்துதருமாறும், மாண்புமிகு சட்டப்பேரவை
உறுப்பினர்கள் கொண்டு வந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத்
திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பணிவோடு கேட்டு,
யாராவது மேற்கொண்டும் விளக்கம் பெற விரும்புவார்களானால்
விளக்கத்தைத் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன்
என்பதைத் தெரிவித்து விடைபெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மகளிர்
மேம்பாட்டுக் கழகத்தைப்பற்றிய சில பிரச்சினைகளைப்பற்றி
குறிப்பிட்டிருந்தேன். அதோடு அங்கே வேலை செய்கிறவர்
களுக்கு ரூ. 300 மட்டுமே—கடுமையாக வேலை செய்தும்—
ஊதியமாகத் தரப்படுகிறது என்றும் அதை ரூ. 500 ஆக
உயர்த்தித் தர வேண்டுமென்றும் கேட்டேன். அதற்கு அவர்
பதில் சொல்லவில்லை, அதுமட்டுமல்லாமல் பாலசேவிகாக்
களுக்கு அண்டை மாநிலங்களில் அதிகமாக ஊதியம் கொடுக்கப்
படுகிறது என்றும் நம் மாநிலத்திலும் அதை அமுலாக்க யோசிக்க
வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மேம்பாட்டுத்துறையின்
மூலமாக நடத்தப்படுகிற சில தொழிற்சாலைகளில் பணியாற்று
கிற பெண்களுடைய ஊதிய உயர்வைப் பற்றி மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அரசாங்கத்
தினுடைய நிதி நெருக்கடி காரணமாகத்தான் அவர்களுடைய
ஊதியத்தை உயர்த்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. அவ
ர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படுமானால் தொடர்புடைய
இன்னும் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றுகிறவர்களுக்கும்
ஊதிய உயர்வை அளிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும்
என்பதைக் கருத்தில் கொண்டுதான் இந்த அரசு அதைப்பற்றி
இன்றைக்குப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மேலும் அங்கே
பணியாற்றுகிற பெண்கள் நல்ல முறையில் நடத்தப்படுவதில்லை
என்றும் அவர்களெல்லாம் இழிவுபடுத்தப்படுகிறார்கள் என்றும்
கேவலப்படுத்தப்படுகிறார்கள் என்றும் அரசு கவனத்திற்கு
மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இனி
அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் உழைக்கிற பெண்களுக்கு
உரிய மரியாதை வழங்கப்படும் என்றும் அவர்கள் மனிதாபி
மானத்தோடு நடத்தப்படுவார்கள் என்றும் அதற்குத் தேவையான
நடவடிக்கைகளையெல்லாம் இந்த அரசு மேற்கொள்ளும் என்றும்
உறுதியாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. வி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பனைமரத் தொழிலைப்பற்றி மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் பெருமையாகப் பேசினார்கள். அதை வரவேற்கிறேன்.
இதற்கு முன்பிருந்த அரசு மதுவிலக்குக் கொள்கையை அமுல்
படுத்தும்போது அந்தக் கொள்கையால் பாதிக்கப்பட்ட மரம்
ஏறும் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் நிவாரணம்
என்றும் ரூ. 1000 கடன் என்றும் வழங்கப்படுமென அறிவித்தது.
ஆனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முழுமையாக
அந்தப் பணம் கொடுக்கப்படவில்லை. அதற்குப் பின்னால்
பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் அரசாங்கத்தை பலமுறை
கேட்டபோது விடுபட்டுப் போனவர்களுக்கும் கொடுக்கப்படும்
என்று சொன்னார்கள். அந்த உதவித் தொகை இன்னும் வந்து
சேரவில்லை. குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு
கொள்கையால் பாதிக்கப்பட்டவர்கள் 8,000 பேர் என்று கணக்
கொடுக்கப்பட்டது. ஆனால் அதில் 2,000 பேருக்கு மட்டும் தான்
உதவிப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படித் தமிழகத்தில்
பல்வேறு இடங்களில் கொடுக்கப்படாமல் விடப்பட்ட தொழிலா
ளர்கள் இருக்கிறார்கள், எனவே அவர்களுக்கு அந்தத் தொகை
மீண்டும் கிடைக்குமா என்று தங்கள் மூலமாக அமைச்சர்
அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு ஆங்காங்கே
இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக எடுத்து
அனுப்பப்பட்ட கணக்குகளின் அடிப்படையில்தான் இந்த உதவித்



தொகை வழங்கப்பட்டது. உதவித்தொகை வழங்கப்பட்ட
தற்குப் பின்னாலும் இன்னும் அதிகப்படியான நபர்களுக்கு அந்தத்
தொகை வழங்கப்படவில்லை என்ற கோரிக்கை பொதுவாகப் பல
இடங்களில் பல மாவட்டங்களிலிருந்து எழுந்து கொண்டிருக்
கிறது. எனவே அப்படிப்பட்ட கோரிக்கையை அரசு இன்றைக்குப்
பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. உதவித் தொகை வழங்கப்பட்ட
பின்பும் மீண்டும் அந்தத் தொகையை மானியத்தை நாம்
வழங்கிக் கொண்டிருந்தால் அந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிற
பலரும் எங்களுக்கும் அந்த நிவாரணத் தொகை அளிக்க
வேண்டுமென்று கோரிக்கை வைப்பார்கள் என்பதற்காகத்தான்
உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்கள் விடுபட்டுப் போயிருந்
தால், அவர்களையெல்லாம் பனை வெல்ல கூட்டுறவுச் சங்கத்தின்
அங்கத்தினர்களாக ஏற்று, அந்தச் சங்கத்தின் மூலமாக வேலை
வாய்ப்பை வழங்குவதன்மூலம், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற
இழப்பை ஈடு செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தத்
துறை அந்தச் சங்கங்களுக்கு அதிகப்படியான சலுகைகளை
வழங்கியிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் க. காஞ்சனா: மாண்புமிகு பேரவைத் தலைவர
வர்களே, இன்றைக்கு காலையிலிருந்து இந்த மாமன்றத்தில்
சமூகநலம் பற்றி விவாதிக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால்
வரதட்சிணை கொடுமையால் அவதிப்படும் பெண்களின் நிலைமை
பற்றி யாரும் வற்புறுத்திச் சொல்லவில்லை. வரதட்சிணை
வாங்க மாட்டோம் என்று ஆண்கள் உறுதிமொழி எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் இந்த
மானியத்தில் பேசிய ஆண் உறுப்பினர்கள் யாரும் வற்புறுத்திச்
சொல்லவில்லை. எத்தனையோ வழக்குகள்; எத்தனையோ
சங்கங்கள்; ஸ்பெஷல் கோர்ட்; மகளிர் மேம்பாட்டு திட்டங்கள்
ஆகிய எதுவுமே வரதட்சிணை கொடுமைக்கு ஒரு முற்றுப்புள்ளி
வைத்ததாகக் காணோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாங்கள் எல்லாம்
வரதட்சிணை வாங்க வேண்டாமென்றுதான் நினைக்கிறோம்.
ஆனால் காலம் கடந்து போய்விட்டது (சிரிப்பு).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவரவர்களே,
அப்படியென்றால் நீங்கள் இப்போது வாய்ப்பு கிடைத்தால் கூட
கேட்பீர்கள் போலத் தெரிகிறதே! (சிரிப்பு)

டாக்டர் க. காஞ்சனா: மாண்புமிகு தலைவரவர்களே,
இப்போது கூட ஒன்றும் காலம் கடந்துவிடவில்லை. உங்கள்
பிள்ளைகளுக்கு வாங்கமாட்டோம் என்ற உறுதிமொழியை
நீங்கள் இந்தப் பேரவையிலே கொடுத்தாலே போதும்.

"பெண்ணடிமை தீரும் மட்டும் பேசும் திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயல்கொண்டு
ஊமை என்று பெண்ணை உரைக்கும் மட்டும்

உள் அடங்கும் ஆமை நிலைதான் ஆடவருக்கும் உண்டு.
புலன் அற்ற பேதையாய்ப் பெண்ணைச் செய்தால்
அந்நிலம் விளைந்த பைங்கூழ் நிலமும் அம்மட்டே!''

என்ற புரட்சிக் கவிஞரின் வரிகளை மனதிலே இறுத்திக்
கொண்டிருக்கிற கழக அரசு இந்தக் கொடுமைகளைத்
தீர்ப்பதற்கு ஏதேனும் புதிய திட்டங்களை அறிவிக்குமா என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு
தலைவரவர்களே, இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே
பெண்களுக்கு சொத்தில் சம பங்கு உண்டு என்ற சட்டம்
கொண்டுவரப்பட இருக்கிறது. எனவே சொத்தில் சம பங்கு
பெண்களுக்கு கிடைக்குமேயானால் நிச்சயமாக வரதட்சிணை
கொடுமைக்கு நம்மாலே ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்று
நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்புமிக்க உறுப்பினர்
வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் ஒரு கேள்வி கேட்காவிட்டால்
அது நிறைவுறாது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர்
அவர்களே, அமைச்சரவர்கள், தொழிற்சாலைகள் எல்லாம்
வேறு மாநிலத்திற்குப் போகிறாற்போல் தெரிகிறது; போய்க்
கொண்டிருக்கிறது; அதற்கு என்ன வழி என்று கேட்டார். பின்
தங்கிய மாவட்டங்களில் தொழில் துவங்கினால் அதற்கு
மானியமோ, கடனோ—மத்திய அரசு சலுகைகளோ, மானிய
சலுகைகளோ நிறைய கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.
அதனாலே, இப்போது அந்த மானிய சலுகைகள் கொடுக்கிறார்
களா, மைய அரசின் சலுகைகள் வருகிறதா; அதனாலே ஏதாவது
தேக்கம் இருக்கிறதா; அதனாலே தொழில் பாதிக்கப்பட்டதா
என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் தொழில் துறையில்
பின்தங்கிய மாவட்டங்களில் சில தாலுக்காக்களில்—மைய
அரசாலும், மாநில அரசாலும் அறிவிக்கப்பட்ட அந்தப் பகுதிகளில்
தொழில் தொடங்குவோருக்கு மத்திய அரசு 15 சதவீத மானியம்
வழங்கும் என்றும், மாநில அரசு 10 சதவீத மானியம் வழங்கும்
என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சமீபத்தில் மைய அரசு
30-9-88 உடன் அறிவிக்கப்பட்ட அந்த 15 சதவீத மானியத்
தொகையை திடீரென்று நிறுத்திவிட்டது. இந்த மானியம்
கிடைக்குமென்று நம்பி அந்தத் தொழிலை பின்தங்கிய பகுதிகளில்
தொடங்க முன்வந்தவர்கள், தொழிலைத் தொடங்குவதற்கான
ஆயத்தப் பணிகள் நடைபெற்று, இன்றைக்கு சில தொழிற்
சாலைகள் தொடர்ந்து முழுமையாக கட்டி முடிக்க முடியாத
சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பல சிறு தொழில் அதிபர்களிட



மிருந்து இப்படிப்பட்ட குறைபாடுகள் பற்றி கோரிக்கை மனுக்கள்
அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருக்கின்றன. அவைகளை
அரசின் தொழில் துறை மூலமாக மத்திய அரசுக்கு அனுப்பி, இந்த
மானியத் தொகையை நம்பி ஏற்கெனவே மனு போட்டு, அவர்
களுக்கும் அந்த மானியத் தொகை உண்டு என்று அறிவிக்கப்
பட்டவர்களுக்காவது அந்த மானிய முழுத் தொகையையும்
வழங்கி, அந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு மத்திய அரசு
முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த
முயற்சியிலே மாநில அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பெண்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வழங்கப்படும் என்று
இங்கு தெரிவிக்கப்பட்டது. அதற்காக நாங்கள் முழு
மகிழ்ச்சியையும், வரவேற்பையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஆனால் இதில் பல நடைமுறை சிக்கல்கள் வரலாம். அதாவது
பெண்கள் பாதுகாப்பாக, தாய்மையின் பாதுகாப்போடு பள்ளிக்குச்
செல்லும் பிள்ளைகளை அழைத்துச் செல்பவர்கள் என்ற
உணர்வோடும், பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்றது
என்ற உணர்வோடும் இதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால்
பெண்கள் பெயராலே வாங்கிக்கொண்டு, ஆண்களே ஓட்டுவதை
தடை செய்வது எப்படி? இதைத் தடை செய்வதற்காக பள்ளி
நிறுவனங்களின் பரிந்துரையின் பேரில் எந்தப் பெண்களுக்கு
வழங்கலாம் என்று குறிப்பிடுகிறார்களோ, அந்த பரிந்துரையின்
பேரில் வழங்கப்பட்டால், கண்டிப்பாக அந்தப் பெண்களே
பள்ளிக் குழந்தைகளைக் கூட்டிச் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு
இருக்கும்.

(பிற்பகல் 2-20)

மேலும், 13 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கியிருப்பதாகச்
சொன்னார்கள். 200 பேர்களுக்கு வழங்குவதாகவும் சொன்னார்கள்.
இது 6,500 ரூபாய்தான் ஒவ்வொருவருக்கும் வருகின்றது. இது
மானியமாக வழங்கப்படுகின்றதா? கடனாக வழங்கப்படுகின்றதா?
மானியமாக வழங்கப்பட்டால் மீதத் தொகைக்கு நிதி நிறுவனங்
களிலிருந்து கடன் வழங்கப்படுமா என்பதையும் பார்க்கவேண்டும்.
மற்றொன்று, கணவனை இழந்த பெண்களை மணப்பவர்களுக்கு
ஐயாயிரம் ரூபாய் கொடுப்பது வரவேற்கத் தகுந்த திட்டம்தான்.
இருந்தாலும் சேமிப்புப் பத்திரமாக வழங்கப்படுவதால் இதிலே
அவ்வளவு ஆர்வம் காட்ட மாட்டார்கள். அதற்குப் பதிலாக
அவர்களுடைய தகுதியின் அடிப்படையின் பேரிலே அரசு
உத்தியோகத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்று அறிவிக்கப்
பட்டால் இந்தத் திட்டம் அதிகப்பயனுள்ள திட்டமாக இருக்கும்
என்ற கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெண்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வழங்குவதற்கான உதவி அளிக்கிற திட்டம் பரீட்சார்த்தமாக இந்த ஆண்டு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதில் மானியமும், கடன்தொகையும் அடங்கும். இந்தத் திட்டத்திற்காகப் பெண்களைத் தேர்வு செய்கிற நேரத்திலேயே, இதை முழுவதுமாக பெண்களே பயன்படுத்த வேண்டும் என்ற அறிவுரையை இந்த அரசு வழங்க இருக்கிறது. மேற்கொண்டு உறுப்பினரவர்கள் சொன்ன ஆலோசனையையும் அரசாங்கம் கவனத்திலே எடுத்துக்கொள்ளும்.

விதவைகளைத் திருமணம் செய்து கொள்ளுகின்றவர்களுக்கு 5,000 ரூபாயைச் சேமிப்புப் பத்திரமாக வழங்குவதன் நோக்கமே திருமணம் முடிந்த உடனே இந்த ஐயாயிரம் ரூபாயைப் பெற்றுக் கொண்டு, அந்தப் பெண்ணைக் கைவிட்டுவிட்டு அவர்கள் ஓடிவிடக் கூடாது என்பதற்காகத்தான். மூன்றாண்டு காலமோ, ஐந்தாண்டுக் காலமோ அந்தத் தொகையை தேசிய சேமிப்புப் பத்திரமாக வழங்க வேண்டுமென்று, ஒரு பாதுகாப்பு உணர்ச்சியின் அடிப்படையில்தான், அந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

*திருமதி எஸ். பி. சற்குணம்: பேரவைத் தலைவரவர்களே, கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவிப் பணம் அளிக்கின்ற திட்டமும், எட்டாவது படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமணச் செலவுக்கு அளிக்கப்படுகின்ற உதவிப் பணத்திட்டமும், கணவன் திடீரென்று மரணம் அடைந்துவிட்டால் அந்த கைம்பெண்ணுக்கு வழங்குகின்ற உதவிப் பணத் திட்டமும் எந்த நாளிலிருந்து அமலுக்கு வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. சட்டப்பேரவை இதற்கான நிதியை அங்கீகரித்தவுடனேயே இந்தத் திட்டம் அமல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 27—கதர்த்தொழில்

திருவாளர்கள் மா. சுந்தரதாஸ், பொன். விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. செ. நூர்முகமது அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "மானியக் கோரிக்கை எண். 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,70,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண் 30.—சமூக நலன்.

திரு. பொன். விஜயராகவன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திரு. என். பழனிவேல் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,08,19,91'000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள்

திருவாளர்கள் மா. சுந்தரதாஸ், பொன். விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. எம். அண்ணாமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 23,31,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஈ) கோரிக்கை எண் 57—ஊரகத்தொழில்கள் குறித்த மூலதனச்செலவு

திரு. பொன். விஜயராகவன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 57— ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,40,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) சட்டமன்றப் பேரவையின் 50-வது ஆண்டு நிறைவுவிழா நிகழ்ச்சி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 5-5-1989 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 50 ஆம் ஆண்டு நிறைவு விழா நடைபெறுகிறபொழுது மூத்த உறுப்பினர் களைச் சிறப்பித்தல் என்ற பகுதியில், முன்னாள் உறுப்பினர்களும் சிறப்பிக்கப்படுவார்கள். மூத்த உறுப்பினர்களாகிய இந்நாள் உறுப் பினர்களும் சிறப்பிக்கப்படுவார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (22-4-1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

82. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் பட்ட அயல்நாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 7-6-1988 ஆம் நாளிட்ட 1159 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குசட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

83. 1987–88 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.



### பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

110. கோரிக்கை எண். 27-தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கொள்கையும், திட்டங்களும் 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

111. கோரிக்கை எண். 30—சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

112. தொழில் கொள்கையும், திட்டங்களும் (ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்) 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

113. பட்டு வளர்ச்சி பற்றிய சாதனைத் திட்டம் 1988–89 (தமிழ், ஆங்கிலம்).

114. சமூக நலத்துறை பற்றிய சாதனைத் திட்டம், 1989-90 (ஆங்கிலம்)

## இணைப்புகள்.

## இணைப்பு I.

### மானியக் கோரிக்கை எண். 27

### தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

### கொள்கையும் திட்டங்களும் 1989–90.

[....ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம், 1959 இன் கீழ் இவ்வாரியம் உருவாக்கப்பட்டது. இவ்வாரியம் உள்ளூரில் கிடைக்கும் வளங் களை பயன்படுத்தி சுய வேலை வாய்ப்பளிக்கிறது. கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது. 1960 ஏப்ரல் திங்களிலிருந்து இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது. கதர் கிராமத் தொழில் பணிகள், வாரியத்தின் துறை அலகுகள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கிராமங்களில் தனிநபர் அலகுகளை ஊக்குவிப்பது ஆகியவைமூலம் நிறைவேற்றப்படுகின்றன. பல்வேறு வேலை வாய்ப்பினை அளிக்கும் வகையில் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிறுவனம், ''தாட்கோ'' உருவாக்கும் திட்டங்கள் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம், தொகுப்பு வளர்ச்சி திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றையும் கதர் வாரியம் ஒருங்கிணைத்து செயல்படுத்துகிறது. இத்திட்டங்கள் கிராமப் புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கும்.

விரிவாக கூறப்போனால், வாரியத்தின் செயல் முறைகள் இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

அவை :

(அ) கதர் :

நூல் நூற்றல், கதர் நெய்தல் மற்றும் பாலியஸ்டர், சில்க் போன்ற கதர் சம்பந்தப்பட்ட துணிகளை நெய்தல்.

(ஆ) கிராமத் தொழில்கள் :

கிராமப் பகுதிகளில் கிடைக்கும் மூலப்பொருட்களை உபயோகப்படுத்தி, கைமுறை உபகரணங்களைக் கொண்டு பரம்பரை தொழில்களை விரிவுபடுத்தி முன்னேற்றம் அடையச் செய்தல்.

கதர் வாரியத்தினால் கீழ்க்கண்ட கதர் மற்றும் கிராமத் தொழில்கள் நேரடியாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

1. கதர்
2. பட்டு
3. பாலியஸ்டர்
4. பனைத் தொழில்
5. செக்கு எண்ணெய்
6. உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு
7. கரும்பு வெல்லம் மற்றும் சர்க்கரை
8. தச்சு மற்றும் கருமார்த் தொழில்
9. தேனீ வளர்ப்பு
10. பருப்பு மற்றும் தானிய வகைகள்
11. மட்பாண்டத் தொழில்
12. தோல் தொழில்
13. கைமுறைக் காகிதம்
14. நார்த் தொழில்
15. சுண்ணாம்பு
16. பிரம்பு மற்றும் மூங்கில்
17. பழப்பக்குவம்
18. அகர்பத்தி (ஊதுபத்தி)

வேலை வாய்ப்பின் அடிப்படையில் கிராமத் தொழில்களை விரிவாக்கும் நோக்குடன் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு, கிராமத் தொழில்களுக்கான விளக்கத்தை அண்மையில் திருத்தி அமைத்தது. இதன்படி, கிராமத் தொழில்கள் என்பது ஏதாவது



ஒரு தொழிலை சார்ந்ததாகவும், மின்விசை இருப்பினும் இல்லையெனினும், ஒரு கைவினைஞர் ரூ. 15,000-க்கு மேற்படாமல் முதலீடு செய்து, ரூ 10,000-க்கு மேற்படாத மக்கட்தொகை கொண்ட எந்த ஒரு பகுதியிலும் செயல்படுவதேயாகும்.

அண்மையில் திருத்தியமைக்கப்பட்ட விளக்கத்திற்கு ஏற்ப கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு, கனிம வளத்தைச் சார்ந்ததும், வன வளத்தைச் சார்ந்ததும், விவசாயத்தைச் சார்ந்ததும், இரசாயனத்தைச் சார்ந்ததும், சேவைத் தொழில், பொறியியல் மற்றும் நடைமுறை வழக்கத்தில் இல்லாத எரி சக்தியோடு செயல்படும் தொழில் என 33 புதிய தொழில்களை கொண்ட தொகுப்பினை ஏற்பு செய்துள்ளது. இதனால் கதர் கிராமத் தொழில்களின் மொத்த எண்ணிக்கை தற்போது 51 ஆகிறது.

கதர் :

வாரியத்தின் கதர் உற்பத்தி ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இந்தக் கதர் திட்டம் அதிக நபர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கக்கூடிய திட்டமாகும். இன்றைய தேதியில் 44,743 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 35,000 நபர்கள் பெண்களாகும். வாரியத்தின் கீழ் 649 கிராமிய நூற்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த அலகுகளுக்கு தேவையான தரமான பஞ்சினை வாரியத்தின் சொந்த அலகுகளிலேயே பதனப்படுத்திய பின் நூற்பதற்காக வழங்கப்படுகிறது. இவற்றின் மூலம் நூற்கப்படும் நூல் சிட்டங்கள் நெசவாளர்களுக்கு கதர் துணி நெசவு செய்ய விநியோகிக்கப்படுகின்றது. தற்போது வாரியத்தின்கீழ் 82 கதர் உற்பத்தி நிலையங்கள் உள்ளன.

நூற்போருக்குத் தேவையான அச்சு மற்றும் விழுது போன்ற உபகரணங்களை வழங்க உதவி செய்ய வேண்டும் என்பதனை கருத்திற்கொண்டு வாரியம் அதற்கான நிதியுதவிகளை செய்து வருகின்றது. 1988–89-ம் ஆண்டில் 800 நெசவாளர்களுக்கு ரூ. 2.00 லட்சம் மதிப்பிற்கு அச்சு மற்றும் விழுது போன்ற உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சாயக்கலவை மற்றும் அச்சிடும் அலகு :

பவானிசாகரில் மிகப் பெரிய அளவிலான ஒரு சாயச் சலவை அச்சு அலகும், தாராபுரம், திருப்பூர், புதுப்பை, ஜலகண்டபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் 5 சிறிய அளவிலான அலகுகளும் வாரியத்தின் தேவைக்கான 45.00 இலட்சம் மீட்டர் கதர் துணிகளை ஆண்டுதோறும் பதனப்படுத்துகின்றன.

பவானிசாகர் அலகிலுள்ள இயந்திரங்களை நவீனப்படுத்துவதற்காக இவ்வாண்டு கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதி உதவியுடன் ரூ. 43.50 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக திட்டம் ஒன்றினை இவ்வாரியம் தீட்டியுள்ளது.

[1989 ஏப்ரல் 21

மேலும் சாயம் மற்றும் சலவை செயல்பாட்டுத் திறனை அதிகரிப்பதுடன் கூடுதல் வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ. 15.53 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒரு சாயச்சலவை அலகு ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அலகின் மூலம் 60 ஆதி திராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

பட்டு :

தமிழ்நாட்டில் கதர் பட்டு உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இன்றைய நிலையில் அனைத்திந்திய அளவில் கதர் பட்டு உற்பத்தியில் வாரியத்தின் பங்கு 15 விழுக்காடு ஆகும். பெருகிவரும் கதர் பட்டு தேவையினை அடிப்படையாகக் கொண்டு வாரியம் ஒவ்வொரு வருடமும் கதர் பட்டு ரகங்களின் உறபத்தியினை அதிக அளவில் பெருக்கிக் கொண்டே வருகிறது. 1987–88 ஆம் ஆண்டு கதர் பட்டு உற்பத்தியின் மதிப்பு ரூ. 552.30 இலட்சமாக இருந்தது. இவ்வுற்பத்தி 1988–89 ஆம் ஆண்டில் ரூ. 650.00 இலட்சத்தினை அடைந்தது. 1989–90 ஆம் ஆண்டிலும் இவ்வாறான உற்பத்தி முன்னேற்றம் தொடரும்.

கதர் பாலியஸ்டர் :

தமிழ்நாட்டில் பாலியஸ்டர் கதருக்கு அதிக அளவில் வரவேற்புள்ளது. 1984–85 ஆம் ஆண்டு ரூ. 55.72 இலட்சமாக இருந்த கதர் பாலியஸ்டர் உற்பத்தி 1988–89 ஆண்டில் ரூ.350.00 இலட்சமாக உயர்ந்தது. 1989–90 ஆம் ஆண்டு ரூ. 400.00 இலட்சத்திற்கு உற்பத்தியை அதிகரிக்க கதர் வாரியம் திட்டமிட்டுள்ளது.

கைவினைஞர்களுக்கான நலத் திட்டங்கள் :

நூற்பாளர்களுக்கும் நெசவாளர்களுக்கும் வாரியம் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதற்கென நூற்பாளர்கள், நெசவாளர்கள் நல நிதி ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. தொழிலாளர்கள் அவர்கள் ஊதியத்திலிருந்து 3 விழுக்காடு செலுத்துகின்றார்கள். அதே அளவினை வாரியம் தனது பங்காகச் செலுத்தி வருகிறது. இது தவிர அவர்களது ஊதியத்தில் 8.33 விழுக்காடு ஊக்க ஊதியமாகவும் அளித்து வருகிறது.

தள்ளுபடி :

தமிழ்நாட்டில் கதர் விற்பனையை உயர்த்துவதற்காகவும், கதரின் உயர்வினை மக்கள் அறியும் பொருட்டும், மாநில அரசு, 1976–76 ஆம் ஆண்டிலிருந்து 30 நாட்களுக்கு கதர் விற்பனையில் 5 விழுக்காடு தள்ளுபடி வழங்கியுள்ளது. 1983–84 ஆம் ஆண்டிலிருந்து தமிழக அரசு கதர், பருத்தி மற்றும் பட்டு ரகங்களுக்கு பண்டிகைக் காலங்களில் மொத்தம் ஆண்டுக்கு 90



1989 ஏப்ரல் 21]

நாட்களுக்கு 10 விழுக்காடு தள்ளுபடி அளித்து வருகிறது. பாலிவஸ்திரா துணிகளுக்கும் தமிழக அரசு 1983–84 ஆம் ஆண்டிலிருந்து 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியாக ஆண்டுக்கு 60 நாட்களுக்கு வழங்கி வருகிறது. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு கதர் ரகங்களுக்கு 15 விழுக்காடு தள்ளுபடி ஆண்டு முழுமையும் வழங்கி வருகிறது. அத்துடன் அவ்வாணைக்குழு 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடியை ஆண்டுக்கு 90 நாட்களுக்கு வழங்கி வருகிறது.

இராமத் தொழில்கள் :

வேலை வாய்ப்பற்றோர் மற்றும் வேலை பற்றாக் குறையில உள்ளவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தி வேலை வாய்ப்பினை அளிப்பதில் கிராமத் தொழில்கள் மிகப்பெரும் பங்கு வகிக்கின்றன. கிராமத் தொழில்களுக்கான திட்டங்கள் உருவாக்குவதில் பெண்களுக்கு அதிக பட்ச வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் கவனம் செலுத்தப்படுகிறது. கிராமத் தொழில் திட்டங்களின் கீழ் 7.59 இலட்சம் கைவினைஞர்களுக்கு இவ்வாரியம் இதுவரை வேலை வாய்ப்பு அளித்துள்ளது. இதில் 2.77 இலட்சம் பேர் பெண்கள் ஆவர். கிராமத் தொழில் இனங்களில் 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 13,900.00 இலட்சங்களாக இருந்த உற்பத்தி 1988–89 ஆம் ஆண்டில் ரூ. 14,800.00 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. 1989–90 ஆம் ஆண்டில் உற்பத்தி ரூ. 16,300.00 இலட்சத்தினை எட்டிவிடுமென எதிர் பார்க்கப்படுகிறது.

பனைத் தொழில்கள் :

தமிழ்நாட்டில் பனைத் தொழில் மட்டுமே 5.69 இலட்சம் பனைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. இந்தியாவிலுள்ள 859 இலட்சம் பனை மரங்களில், தமிழ் நாட்டில் மட்டும் 519 இலட்சம் பனை மரங்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. மாநில அளவில், தமிழ்நாடு மாநில பனை வெல்லக் கூட்டுறவு இணையம், மாவட்ட அளவில் 5 மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனங்களும், 1,131 ஆரம்ப கூட்டுறவு சங்கங்கள் என்ற மூன்று வகைகளில், இந்த பனைத் தொழிலின் ஆக்க வேலைகள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப் படுகின்றன. உண்ணத் தகுந்தபொருட்கள் மற்றும் இதர உண்ணா பனைப் பொருட்கள் தயாரிப்பதில், பனைத் தொழிலில் கவனம் செலுத்தப்படுகிறது. வெல்லம், பனங்கற்கண்டு, பனஞ்சர்க்கரை, மிட்டாய் வகைகள், பழப்பக்குவம், பாம்டா/பாம்கூலா போன்ற உண்ணும் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இவ்வகை உண்ணும் பொருட்களின் உற்பத்தி மட்டும் ரூ. 5,014.00 இலட்சமாகும்.

பனை ஓலைப் பொருட்கள், தும்பு உற்பத்தி போன்ற உண்ணா பனைப் பொருட்களின் உற்பத்தி ரூ. 995.00 இலட்சமாகும். தூத்துக்குடியில் செயல்பட்டு வரும் ஏற்றுமதி பிரிவின் மூலம், பனந்தும்பு ஏற்றுமதி செயல்படுத்தப்படுகிறது. 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 113.68 இலட்சம் மதிப்புள்ள தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 1988–89-ல் ஏற்றுமதி ரூ. 130.00 இலட்சத்தை அடைந்துள்ளது.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 10,000 பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கி பயனளிப்பதற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 2..0 இலட்சங்கள் மான்யம் பெறப்பட்டுள்ளது. இதற்கீடாக கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவும் ரூ. 20.00 இலட்சம் கடன் அளிக்கும்.

தென்னாற்காடு, வடாற்காடு, தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், காயிதேமில்லத், பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் காமராசர் மாவட்டங்களில் ஒன்பது இடங்களில் பனைநார் பனந்தும்பு உற்பத்தி நிலையங்களை துவக்கிடவும், சிதம்பரனார், காமராசர் மாவட்டங்களில் பனை உத்திரங்கள், சாரங்கள் உற்பத்தி செய்திடும் நிலையங்கள் அமைக்கவும், புதுக் கோட்டையில் தென்னந் தட்டிகள் மற்றும் தென்னந் துடைப்பங்கள் தயாரிக்கும் அலகு ஏற்படுத்திட மொத்தம் 360 நபர்கள் பயனடையும் வகையில் ரூ. 23.37 இலட்சத்திற்கான திட்டங்கள் நடப்பு ஆண்டுக்காக திட்டப்பட்டுள்ளது.

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் குலவணிகர் புரத்தில் மத்திய அரசின்கீழ் இயங்கும் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு ரூ. 43.00 இலட்சங்கள் அளவில் அமைக்க உத்தேசித்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க 10 ஏக்கர் நிலத்தை 30 ஆண்டு கால குத்தகைக்கு திருநெல்வேலி மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம் வழங்கியுள்ளது.

பனைத் தொழில் செய்து பதநீர் இறக்கும் தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாகி மரணமடைந்தால், அவர்கட்கு வழங்கும் உதவித் தொகையினை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000 ஆக தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது.

**சோப்புத் தொழில் :**

கதர் வாரியத்தின் அலகுகள் தயாரிக்கும் சலவை மற்றும் குளியல் சோப்புகளுக்கு நல்ல வரவேற்புள்ளது. இத்தொழிலின் கீழ், இரண்டு குளியல் சோப்பு அலகுகள் உள்ளிட்ட 38 சோப்பு அலகுகள் வாரியத்தின்கீழ் இயங்கி வருகின்றன. 1988–89 ஆம் ஆண்டில் வாரியம் ரூ. 422.00 இலட்சம் மதிப்புள்ள சோப்பினை உற்பத்தி செய்து 1,026 நபர்கட்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. 1989–90 ஆம் ஆண்டில் இவைகளின் உற்பத்தி ரூ. 450.00 இலட்சத்திற்கு உயர்த்தப்படும்.

**தச்சு மற்றும் கருமார்த் தொழில் :**

வாரியத்தின்கீழ், 4 துறை அலகுகளும், 61 கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன. தச்சு மற்றும் கருமார்த் தொழில் மூலம் மட்டும் ரூ. 1,600.00 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்து 17,961 நபர்கட்கு வேலை வாய்ப்பினை இவ்வாரியம் அளித்துள்ளது. 1989–90-ல் 1,814 கைவினைஞர்கள் பயன்பெறும் வகையில் ரூ 54.70 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.



**தேனீ வளர்ப்பு :**

வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் தேனுக்கு அதிக வரவேற்புள்ளது. இந்த தேன் அக்மார்க் முத்திரை செய்யப்பட்டு வாரியத்தின் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப் படுகிறது. தேனின் மொத்த உற்பத்தி ரூ. 352.00 இலட்சமாகும்.

இந்தத் தொழில் மேலும் சிறக்க மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் மேற்கு தொடர்ச்சி மலைத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் நிதியினை பெற்று வாரியம் செயல்படுத்தி வருகிறது. 1988–89 ஆம் ஆண்டு வரை 4,501 கைவினைஞர்கள் பயன்பெறும் பொருட்டு ரூ. 50.64 இலட்சம் நிதியுதவி பெற்று திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

**மட்பாண்டம் :**

மிகப் பெருமளவில் வேலை வாய்ப்பு வழங்கும் இத்தொழிலின் கீழ் 58,545 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர். இத் தொழிலின்கீழ் ரூ. 924.00 இலட்சம் மதிப்புள்ள மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தொன்றுதொட்டு சமையல் சாதனங்களையே உற்பத்தி செய்த இத் தொழிலில் தற்போது மெருகேற்றப்பட்ட மட்பாண்டச் சாதனங்கள், செங்கல் மங்களூர் ஓடுகள், மகன் சூளா அடுப்புகள் உற்பத்தி செய்யும் அளவுக்கு திறனை இவ்வாரியம் உயர்த்தியுள்ளது 1989–90 ஆம் ஆண்டில் 2,750 கைவினைஞர்களுக்கு ரூ. 79.80 இலட்சம் நிதியுதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தோல் தொழில் :**

இத்தொழில் கடைநிலை ஏழை கைவினைஞர்களுக்கு உதவி வருகிறது. வாரியம், இதுவரை 20,863 இலட்சம் தோல் தொழில் கைவினைஞர்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது. இத்தொழிலின் கீழ் ரூ. 2,127, 00இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கைவினைஞர்களின் திறனை ஊக்குவித்து அவர்களது வருவாயை பெருக்கும் பொருட்டு, இதுவரை காலணி செய்யும் தொழிலாளர்களுக்கு 3,750 பணிக் கூடங்கள் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கப்பட் டுள்ளது. மேலும் ரூ. 13.70 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பொது சேவை மற்றும் மாதிரி வடிவமைப்பு நிலையம் அம்பத்தூரில் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 1,000 மூலதனத்தில் 50 கைவினைஞர்கள் பயனடையும் வகையில் கருவிகள் மற்றும் நடைமுறை மூலதனம் வழங்குவதற்கு புதிய திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

1989–90 ஆம் ஆண்டில் மேலும் 4,154 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் ஒரு திட்டம் செயல்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இலவசமாக காலணி வழங்கும் திட்டத்தின்கீழ் வாரியம் 19.53 இலட்சம் ஜோடி காலணிகள் விநியோகம் செய்துள்ளது.

கை முறைக் காகிதம் :

வாரியத்தின்கீழ் 17 கைமுறைக் காகிதத் துறை அலகுகளும் 4 கூட்டுறவு சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. 1,286 நபர்கட்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு ரூ. 85.00 இலட்சம் மதிப்புள்ள கைமுறைக் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவைகளில், முக்கியமாக எழுதும் காகிதம், படி எடுக்கும் காகிதம், மேல் அட்டை காகிதம், நகல் எடுக்கும் காகிதம், வண்ண அட்டைகள் முதலியன தயாரிக்கப்பட்டு, அவை அரசுத் துறைகள் மற்றும் பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன, வாரியம் 450 மெட்ரிக் டன் மதிப்புள்ள படி எடுக்கும் காகிதம் மற்றும் மேல் அட்டை காகிதம் விநியோகம் செய்வதற்கு அரசிடமிருந்து ஆணை பெற்றுள்ளது.

சிறப்புத் திட்டங்கள் :

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்காக வேலை வாய்ப்பினை அளிக்கும் பொருட்டு பல்வேறு தொழில்களான தேனீவளர்ப்புத் தொழில், புளி பக்குவப்படுத்துதல், பாய் முடைதல், பிரம்பு மற்றும் மூங்கில் கூடை முடைதல் ஆகிய தொழில்களுக்காக 1988–89 ஆம் ஆண்டு வரை ரூ. 171.35 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்களை அமுல்படுத்தி 5,907 நபர்கள் பயனடைந்துள்ளனர். 1989–90 ஆம் ஆண்டில் 409 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 33.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் :

நீலகிரி மாவட்டத்தில் இத் திட்டத்தின்கீழ் எலுமிச்சை புல் எண்ணெய் மற்றும் நீலகிரி தைலம் வடிகட்டும் கருவிகள் வழங்கிடவும், தேனீ தொழில் அபிவிருத்தி செய்திடவும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்டுமான பணிகளுக்கு நிதி உதவி செய்தும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. 1988–89 ஆம் ஆண்டு வரை 2,745 நபர்கள் ரூ. 65.23 இலட்சம் மதிப்பீட்டு திட்டங்களின் மூலம் பயன் பெற்றுள்ளனர். 1989–90 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 105 நபர்கள் பயன்பெறும் பொருட்டு ரூ. 4.07 இலட்சத்திற்கான திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

மேற்கு தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டம் :

1985–86 ஆம் ஆண்டிலிருந்து திண்டுக்கல் காயிதேமில்லத், காமராசர், திருநெல்வேலி–கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தினை வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் தேனீ வளர்ப்பு, கற்பூரத் தைலம் தயாரித்தல் மற்றும் ஜெரேனியம் எண்ணெய் வடித்தல், பனை ஓலை மற்றும்



பிரம்பு, மூங்கில் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு உதவுவதற்கான திட்டங்களை செயல்படுத்திவருகிறது. கொடைக்கானலில் உள்ள வாரியத்தினுடைய சொந்த நிலத்திலேயே ஜெரேனியத் தாவரத்தை பயிர் செய்து வளர்க்கும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1988–89 ஆம் ஆண்டு வரை இத் திட்டத்தின் கீழ் 983 கைவினைஞர்கள் பயன் அடையும் பொருட்டு ரூ. 23.47 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்துள்ளன. 1989–90 ஆம் ஆண்டில் 767 நபர்கள் பயன் பெறும் பொருட்டு ரூ. 2.25 இலட்சம் மதிப்பீட்டில் செலவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு:

கடந்த 28 ஆண்டு கால வாரியத்தின் செயல்பாட்டினால் 18 வெவ்வேறு தொழில்களின் மூலம் 8.04 இலட்சம் கைவினைஞர்கள் வேலை வாய்ப்பு பெற்று பயனடைந்துள்ளனர்.

இதில் 3.01 இலட்சம் பெண்கள் ; 0.99 இலட்சம் ஆதி திராவிட மற்றும் மலைவாழ் இனத்தைச் சார்ந்தவராவார்.

1988–89 ஆம் ஆண்டில் வாரியம் 50,000 நபர்களுக்கு கூடுதலாக வேலை வாய்ப்பு அளித்துள்ளது. மேலும் 1989-90 ஆம் ஆண்டில் 60,000 நபர்கள் வேலை வாய்ப்பு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1988–89 ஆம் ஆண்டில் 959 ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்த பெண்கள் உள்ளிட்ட 1,220 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு ரூ; 30 இலட்சம் மதிப்பீட்டில், தேனீ வளர்ப்பு, நீலகிரி தைலம் தயாரித்தல், ஷாம்புதயாரித்தல், பின்னுதல் ஊதுபத்திதயாரித்தல் தோல் தொழில், புளி பதனப்படுத்துதல் மற்றும் சொட்டு நீலம் தயாரித்தல் போன்ற தொழில்களை செயல்படுத்த சிறப்புத்திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வாரியத்தின் நிதிநிலை:

இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி உதவிக் கொள்கையின் படி கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற வாரியத்திற்கு தேவைப்படும் நிதி உதவியை வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு, கதர் மற்றும் கிராமத் தொழில் நிதிகளின் கீழ் வணிக முறையில் அல்லாத செலவினங்களால் ஏற்படும் பற்றாக்குறையை சரிக்கட்டுவதற்கு நிகரச் செலவு மான்யம் வழங்குகிறது.

1988–89 ஆம் ஆண்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு இவ்வாரியத்திற்காக ரூ. 1,358.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஆணைக்குழுவின் நிதி.

| (1) | மான்யம். (2) | கடன். (3) | வங்கி நிதி கடன். (4) |
| --- | --- | --- | --- |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. கதர் .. .. | 2.51 | 167.21 | 134.58 |
| 2. கிராமத் தொழில்கள்— | | | |
| (அ) வாரியத் திட்டங்கள் | 60.00 | 355.07 | 343.86 |
| (ஆ) தீப்பெட்டித் தொழில் (இயக்குநர், தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்குவது.) | .. | .. | 294.50 |
| மொத்தம் .. | 62.51 | 522.28 | 772.94 |

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவிடமிருந்து பெறப்படும் நிதி உதவி தவிர, மாநில அரசால் வகுக்கப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி நிறைவேற்ற மாநில அரசிடமிருந்து நிதி உதவி பெறப்படுகிறது. இவ்வாறு தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியுதவி விவரங்கள் வருமாறு :—

| (1) | திருத்திய மதிப்பீடு. 1-88-89 (2) | திட்ட மதிப்பீடு. 1989-90. (3) |
| --- | --- | --- |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. மானில அரசிடமிருந்து மான்யம் : | | |
| (அ) கதர் நிதி நிகர செலவு மான்யம். | 185.00 | 155.00 |
| (ஆ) கிராமத் தொழில் நிகர செலவு மான்யம். | 185.00 | 150,00 |
| (இ) தணிக்கைக் கட்டணம் | 27.00 | 27,05 |
| (ஈ) கதர் விற்பனை தள்ளுபடி | 450.00 | 300.00 |
| (உ) மற்ற சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்ற. | 64.99 | 43.18 |
| மொத்தம் .. | 611.99 | 670.18 |





இணைப்பு II.

கோரிக்கை எண் 30.

சமூக நலத் துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு 1989—90.

( ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

1.1. கோரிக்கை எண் 30-ன் கீழ் 1989-90 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,08,19.91 ஆயிரங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

1.2. சமூகத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று பிரிவினராகிய மகளிர், குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களின் வளர்ச்சி மற்றும் நலனுக்காக சமூக நல இயக்ககம் 1947-ல் நிறுவப்பட்டது.

1.3. இதன் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு :—

(அ) ஆறு வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளும் ஆரோக்கியமாக வளர தேவையான உணவு, ஊட்டச்சத்து மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் கிடைக்கச் செய்தல் மற்றும் குழந்தைகளின் இறப்பு விகிதத்தினை குறைக்க உறுதி செய்தல் ;

(ஆ) 2 வயது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு போதுமான முன் பருவக் கல்வி கிடைக்கச் செய்தல் ;

(இ) பேறுகால இறப்பு விகிதத்தினை குறைக்கும் வகையில் கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்குப் போதிய உணவு, ஊட்டச் சத்து மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் கிடைக்கச் செய்தல் ;

(ஈ) உறைவிடமும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளை பராமரித்தல் ;

(உ) பெண்களுக்கு, முக்கியமாக வறுமைக் கோட்டிற்கு கீழுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கச் செய்தல் ;

(ஊ) துயருறும் மகளிருக்கு, குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்ற மகளிருக்கு தேவையான உதவிகள் அளித்தல் ,

(எ) மருத்துவ வசதியில், பொருளாதாரத்தில், சமூகத்தில் மற்றும் கல்வியில் பின் தங்கிய மக்களுக்கு அதனை கிடைக்கச் செய்தல் ;

(ஏ) சமூகத்தில் நலிவடைந்த மற்றும் பின் தங்கிய பிரிவினருக்கு உதவும் பணியில் ஈடுபட்டுள்ள சமூகநல நிறுவனங்களுக்கு உதவி செய்தல்.

1.4. மகளிர், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் சமூகத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக கருதப்படுவதாலும் இவர் களின் எண்ணிக்கை பெரிய அளவில் உள்ளதாலும் இவர்களின் நலனுக்காக திட்டங்கள் படிப்படியாக அமுல்படுத்தப்படுகின்றன.

1.5. இத்துறையில் தற்போதைய வரவு-செலவுத் திட்டத்தில் பெருமளவு தொகை குழந்தைகள் நலனுக்காகவும், மகளிர் முன்னேபறத்திற்காகவும், உடல் ஊனமுற்றோர் நலனுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 2

## மகளிர் நலம்.

### சிறப்புத் திட்டம்.

2.1. பல வருடங்களாக மகளிருக்கென தீட்டப்படும் திட்டங்கள் அவர்களது நலன் சார்புடையதாகவே அமைந் துள்ளன. பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டங்கள் மூலம் தற்பொழுது இந்நிலை சிறிதளவு மாறியுள்ளது. முதன் முறையாக மகளிர் கல்விக்கும் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கும் நோக்கத்துடன் புதிய திட்டம் ஒன்று தீட்டப் பட்டுள்ளது.

### பெண் கல்வி வளர்ச்சி ஊக்குவிக்கும் திட்டம்.

2.2. வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள எட்டாம் வகுப்பு தேறிய பெண்களுக்கு அவர்களது திருமணத்தின்போது ரூ 5,000 வீதம் நிதியுதவி அளிக்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கென 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### கருவுற்ற பெண்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சிறப்புத் திட்டம்.

2.3. (அ) கருவுற்ற பெண்களுக்கு பிரசவத்திற்கு முன்பும் பின்பும் ஏற்படும் கஷ்டங்கள் உணரப்பட்டு, முதன்முறையாக அப்பெண்களின் பிரசவ காலத்திற்கு முன்பு 2 மாதங்களும், பின்பு 2 மாதங்களும் ஆக நான்கு மாதங்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 50 வீதம் உதவித் தொகையாக அளிக்கப்படவுள்ளது. அதாவது, ஒரு கர்ப்பிணி பெண்ணிற்கு அளிக்க இருக்கும் மொத்த உதவித் தொகை ரூ. 200 ஆகும். இத்தொகை வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள எல்லா பெண்களுக்கும் முதல் மற்றும் இரண்டாவது பிரசவத்திற்கு மட்டுமே அளிக்கப்படும். குடும்பத்தில் பொருளாதார நிலையை உயர்த்துவதில் பங்கேற்கும் இவர்கள் இந்த நான்கு மாத காலங்கள் வேலைக்குச் செல்ல இயலாமற் போவதால், அவர்களுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பை ஓரளவு ஈடுசெய்யும் நோக்கத்துடன் இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1989-90ம் ஆண்டிற்கு ரூ. 4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2.3. (ஆ) குடும்பத் தலைவரை இழக்க நேரிடும் ஏழைக் குடும்பங்கள், திடீரென வருமான இழப்புக்கு ஆளாகி அவதியுறு கின்றன. அத்தகைய குடும்பங்கள் மறுவாழ்வு பெற உதவி செய்யும் வகையில், அவர்களுக்கு அரசின் மூலம் ரூபாய் 2,000 மானியமாக அளிக்கப்படும். இதற்காக, ரூபாய் 5 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கப்படும்.

### மகளிர் கூட்டுறவு சங்கங்கள்.

2.4. தங்கள் குடும்பத்திற்கு கூடுதல் வருமானம் கிடைக்கப் பெறும் பொருட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மகளிக்கு வேலை வாய்ப்பு நல்க வேண்டி 1987-88, 1988-89 ஆண்டுகளில், பல மகளிர் மேம்பாட்டு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் துவக்கப் பட்டன. தற்பொழுது இம்மகளிர் கூட்டுறவு சங்கங்களல் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் அனைத்தும், அரசுக்கும் அரசுத் துறை சார்ந்த நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்யப் படுவதால், இத்திட்டங்கள் அனைத்தும், அரசால் அமுல்படுத்தும் திட்டங்களாகவே இத்துறை மூலம் செயல்பட்டு வருகின்றன.

### தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள்.

2.5. இத்துறையில், 1987–88 ஆம் ஆண்டில் 13 தையற் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே இருந்தன. பிறகு அதே ஆண்டில் 16 புதிய தையற் தொழில் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டன. அத்துடன், 43 மகளிர் தொழிற் கூட்டுறவு தையற் சங்கங்கள், தொழிற் வணிகத் துறையிடமிருந்து இத் துறைக்கு மாற்றப்பட்டன. தற்சமயம் மொத்தத்தில் 72 மகளிக தையற் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இத்துறையின் கீழ் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு அரசு சத்துணவு திட்டத்தின் மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியர், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்கக் கட்டுப்பாட்டின் கீழ், பயிலும் பள்ளி மாணவ மாணவியர் மற்றும் ஆதி திராவிடர், (ம) பழங்குடியினர் நலத் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் பயிலும் மாணவ மாணவியர் ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைகளை இந்த 72 மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தைத்து வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும், இவ்விலவச சீருடைத் துணிகளை வெட்டுவதற்கு தானியங்கி துணி வெட்டும் கருவிகளை அரசு இலவசமாக வழங்கியுள்ளது.

2.6 துணிகள் அனைத்தும் அந்தந்த மாவட்டத்திலுள்ள துணி வெட்டுத் மையத்தில், மாவட்ட சமூகநல அலுவலர் முன்னிலையில் வெட்டப்பட்டு, வெட்டப்பட்ட துணிகளை சீருடைகள் தைப்பதற்காக இச்சங்கங்களுக்கு வழங்கப்படுவதால், இதன் மூலம் பெருமளவிலான துணி சேமிப்பாக கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. 1988-89 ஆம் ஆண்டில் அறுபத்து நான்கு இலட்சம் சீருடைகளை மேற் கூறப்பட்டுள்ள 72 மகளிர் தையற் தொழிற் கூட்டுறவு சங்கங்களும், மூன்றாண்டுகளுக்கு மேலாக பிரசித்தி பெற்ற தொண்டு நிறுவனங்களும் தைத்துள்ளன. 22,009 மகளிர்க்கு மகளிர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வேலை

வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளன. சுமார் நான்கு கோடி ரூபாய் இம்மகளிர்க்கு கூலியாக இத்திட்டம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெண் உறுப்பினரும் சுமார் இரண்டாயிரம் ரூபாய் வரை சென்ற ஆண்டில் கூலியாகப் பெற்றுள்ளனர்.

2.7. இலவச சீருடை தைக்கும் திட்டம் மக்களிரிடையே புகழ் மிக்க திட்டமாக உள்ளதால் நாளுக்கு நாள் இத்தகைய தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் தாமும் உறுப்பினராகச் சேர்ந்து பயனடைய வேண்டும் என்ற உணர்வு மகளிரிடையே வளர்ந்து புதிய உறுப்பினராக இத்தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் மகளிர் அதக அளவில் சேருகின்றனர். ஆனால் அவ்வாறு புதியதாக சேரும் மகளிர் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க போதிய ஆர்டர்கள் சங்கங்களில் இல்லை. இருப்பினும் அனைவருக்கும் வேலை வாய்ப்பு நல்க வேண்டும். என்ற நோக்கத்தில, கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத் தினை இத்துறை ஆர்டர்களுக்கு நாடியுள்ளது.

2.8. சீருடைத் துணிகளை வெட்டுவதற்கு தொடக்கத்தில் ஆண்களே பணியில் அமர்த்தப்பட்டனர். ஆயினும் தற்சமயம் மகளிரும் இத்தானியங்கி துணி வெட்டும் கருவியினை இயக்கு வதற்கும், துணிகளைச் செவ்வனே வெட்டுவதற்கும் பயிற்சி பெற்றுள்ளதால் இனி வரும் காலங்களில் ஆண்களுக்குப்பதில் மகளிர் இத்துணி வெட்டும் பணியினை மேற் கொள்ளச் செய்யப் படுவார்கள். துணி வெட்டுநர், பணியில் அமர்த்தப்படுகிறார். அவ்வெட்டுநர்களுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் ஊதியமாக வழங்கப்படுகிறது.

2.9. சீருடை தைக்கும் மகளிர்க்கு 25 சதவீதம் கூலி முன் பணமாக வழங்கப்படுகிறது. சீருடைகள் அனைத்தும் முழுமை யாக தைக்கப்பட்டு கல்வித் துறையினருக்கு வழங்கப்பட்ட பிறகு மீதமுள்ள 75 சதவீதம் கூலி வழங்கப்படுகிறது. இவ்வாறு அனைத்துச் சீருடைகளையும் தைத்த பிறகு தையற்கூலி வழங்கப் படுவதால் ஏழை மகளிர் உரிய காலத்தில் கூலி கிடைக்காமல் அல்லல் படுவதைத் தவிர்க்க, 1989–90 ஆண்டு முதல் சீருடை தைக்கும் மகளிர்க்கு 40 சதவீதம் கூலி முன்பணமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காலணி தயாரிக்கும் மகளிர் கூட்டுறவு சங்கங்கள்.

2.10 தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையில் பயிலும் பள்ளி மாணவ மாணவியர்க்கு அரசு இலவசக் காலணிகள் வழங்கும் பொருட்டு அக்காலணிகளை தயாரிப்பதற்காக சமூக நலத் துறைக் கட்டுபாட்டின் கீழ் 39 மகளிர் காலணிக் கூட்டுறவுச் சங்கங்கள் 1987-88 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டன.



இரண்டாயிரம் ஆதிதிராவிட மகளிர்க்கு இச்சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. காலணிகளைத் தயாரிப் பதற்கு சங்க உறுப்பினர் அனைவருக்கும் ஒரு மாத காலம் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சிகாலத்தில் ஒவ்வொரு மகளிர்க்கும் ரூபாய் இரு நூறு உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. காலணிகளைத் தயாரிப்பதற்காக ரூ. 250 மதிப்புள்ள கருவிகள் மற்றும் உபகரணங்களை ஒவ்வொரு மகளிருக்கும் இலவசமாக அரசால் வழங்கப்பட்டுள்ளது. இம்மகளிர் காலணிக் கூட்டுறவு சங்கங்கள் 1987-88 மற்றும் 1988-89 ஆம் ஆண்டுகளில் இத் துறைக்கு ஒதுக்கப்பட்ட 11.64 இலட்சம் கோடி காலணிகளைத் தயாரித்து கல்வித் துறைக்கு வழங்கியுள்ளன. மகளிர்க்குக் கூலியாகவும் காலணிக் கூட்டுறவு சங்கங்களுக்கு சேவைக் கட்டண மாகவும் ரூ. 40 இலட்சம் 1987-88 மற்றும் 1988-89 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது. அரசுக்குத் தேவையான காலணிகளை தயாரிப்பதோடு மட்டுமின்றி ஏனைய பிற காலணி களைத் தயார் செய்வதற்குய மகளிர் காலணி கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு செயல் விளக்கம் அளிக்கப்படுகிறது.

சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இலவச தையல் இயந்திரம் வழங்குதல்.

2.11. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 11,000 தையல் இயந் திரங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மகளிர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்ற மகளிருக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. 1989-90ம் ஆண்டில் 857 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளன. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 7 60 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு அரசின் சத்துணவு திட்டத்துடன் சம்பந்தப்பட்ட திட்டங்கள்.

இலவச சீருடை வழங்குதல்.

2.12. தமிழ்நாடு அரசின் சத்துணவு திட்டதின் கீழ் பயனடையும் 1 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு கல்வித் துறை வாயிலாக இலவச சீருடைகள் வழங்கப்படுகின்றன. இது போன்று இலவச சீருடைகள், பிற் பட்டோர் நல இயக்கத்தினாலும் ஆ்திராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்கத்தினாலும் அவர்கள் கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளி சிறார்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆண் டொன்றுக்கு சுமார் 64 லட்சம் சீருடைகள் தைத்து வழங்கப் படுகிறது. இச்சீருடைகள் தைக்கும் பொறுப்பு சமூகநல இயக்கத் திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2.13. 1987-88 மற்றும் 1988-89ம் ஆண்டுகளில் இத்திட்டம் சீரமைக்கப்பட்டு, சீருடை தைக்கும் பணி மகளிர் தையல் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மூன்றாண்டுகளுக்கு மேல் பிரசித்தி பெற்ற தொண்டு நிறுவனங்களிடம் மட்டுமே ஒப்படைக்கப் பட்டது. இக்கூட்டுறவு சங்கங்களின் வரவு–செலவினங்கள் அரசு அலுவலர்களால் பராமரிக்கப்படுகிறது. சீருடை தைக்கும்

பணி அனைத்தும் பெண்களால் மட்டுமே செய்து முடிக்கப் படுகிறது, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மகளிர் மட்டுமே தைக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் பெரும்பாலான சங்கங்களின் விதிமுறைகள் வரையறுக்கப் பட்டும், மாற்றப்பட்டும் உள்ளன. மேலும் இச்சங்கங்களின் நிர்வாக குழு உறுப்பினர்கள் அனைவரும் பெண்களாக இருக்க வேண்டும் என்பதால், சங்கங்களில் பணியாற்றும் உறுப்பினர் களிடையே நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப் படுகின்றனர். இதனால் உழைப்பின் பலன் பாடுபட்ட வர்களையே சென்றடைவதை உறுதி செய்ய முடிகிறது. சீருடைகளை தைக்கும் பணி அனைத்தும் அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலர்களின் நேரடி கண்காணிப்பில் நடைபெறு கிறது. சீருடைகளை தைப்பதற்கு தேவைப்படும் துணிகள் அனைத்தும் கைத்தறி துணி இயக்கத்தினரால் நேரடியாக அந்தந்த மாவட்ட சமூகநல அலுவலருக்கு அனுப்பி வைக்கப் படுகிறது.

இலவசக் காலணி வழங்குதல்.

2.14. தமிழ்நாடு அரசின் சத்துணவு திட்டத்தின் கீழ் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு இலவசக் காலணி வழங்கும் திட்டம் 1987-88ம் ஆண்டு தமிழக அரசால் அமுல்படுத்தப்பட்டது. ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார் களுக்கு (2+ முதல் 4+ வரை வயதுள்ள குழந்தைகளைத் தவிர) உரிய காலணிகளை தயார் செய்யும் பணி தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சமூகநல இயக்ககம் ஆகிய 3 நிறுவனங்களுக்கும் 50 : 30 : 20 என்ற விகிதத்தில் முறையே ஒப்படைக்கப்பட்டது. 1988-89 ஆம் ஆண்டில் சுமார் 65 லட்சம் பள்ளிச் சிறுவர் களுக்கான காலணிகள் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டது. இத்திட்டம், 1988—89 ஆம் ஆண்டிலும் தொடரும். இத்திட்டத் திற்கென சுமார் ரூபாய் 10 கோடி செலவிடப்படும். இத் திட்டத்தின் மூலம் 1989—90 ஆம் ஆண்டில் சுமார் 65 இலட்சம் பள்ளிச் சிறார்கள் பயன் பெறுவர்.

மகளிர் எழுதுபொருள் தொழில் கூட்டுறவு சங்கங்கள்.

2.15. 1979 முதல் 81 வரையிலான ஆண்டுகளில் 15 மகளிர் எழுது பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. 1987-88 மற்றும் 1988-89 ஆம் ஆண்டுகளில் 13 மகளிர் எழுது பொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அச்சு இயந்திரம், இரு கோடிடும் இயந்திரங்கள். பேப்பர் கவர் தயாரிக்கும் இயந்திரங்கள் முதலியன வழங்கப்பட்டன. எழுதுபொருள் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கும் ஆர்டர்கள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திடமிருந்து பெறப் பட்டன. ஏறக்குறைய 700 மகளிர் எழுது பொருள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ளனர்.



அ. மகளிர் பனை ஓலை கூட்டுறவு சங்கங்கள்.

2.16. 1982 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் பனை பொருட்கள் தயாரிக்கும் பத்து மகளிர் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டன. ஏறக்குறைய 250 மகளிர்க்கு வேலை வாய்ப்பு இச்சங்கங்கள் மூலம் அளிக்கப்பட்டன. இச்சங்கங்களில் பெரும்பாலும் பனை வெல்லம் மற்றும் அது தொடர்பான பொருட்கள் தயாரிக்கப்படுகிறது.

ஆ. மகளிர் கயிறு பொருட்கள் தயாரிக்கும் கூட்டுறவு சங்கம்.

2.17. 1981 ஆம் ஆண்டில் கயிறு மற்றும் கயிறு சம்மந்தப் பட்ட பொருட்கள் தயாரிக்கும் மகளிர் கூட்டுறவு சங்கம் ஒன்று இத்துறையின் கீழ் தொடங்கப்பட்டது. இசங்கம் உற்பத்தி நிலையமாகவும், மகளிர்க்கு பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் இயங்கி வருகிறது. ஒவ்வொரு வருடமும் சுமார் 50 மகளிர்க்கு கயிறு தயாரிப்பதில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர 75 மகளிர்க்கு முறையாக வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

இ. பட்டு நூல் தயாரிக்கும் கூட்டுறவு சங்கம்.

2.18. சேலம் மாவட்டத்தில் 1912 ஆம் ஆண்டு பட்டுநூல் தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இக்கூட்டுறவு சங்கங்களின் மூலம் 50 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

ஈ. திரவ சோப்பு தயாரிக்கும் கூட்டுறவு சங்கம்.

2.19. சென்னைக்கருகில் நாராயணபுரத்தில் இருந்த கிராம வளர்ச்சி மையம் மூடப்பட்டதால் அதில் வேலையிழந்த மகளிர்க்குப் புனர் வாழ்வு அளிக்கும் நோக்கத்தோடு 1987ஆம் ஆண்டில் நாராயணபுரத்தில் (வேளச்சேரிக்கு அருகில்) திரவ சோப்பு தயாரிக்கும் மகளிர் கூட்டுறவு சங்கம் ஒன்று தொடங்கப் பட்டது. சுமார் 25 மகளிர்க்கு இக்கூட்டுறவு சங்கம் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

உ. சாக்குக் கட்டி தயாரிக்கும் கூட்டுறவு சங்கம்.

2.20. ஏற்கனவே இத்துறையின் கீழ் இயங்கும் இரண்டு மகளிர் சாக்குக் கட்டி தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்களோடு 19 சாக்கு கட்டி தயாரிக்கும் மகளிர் கூட்டுறவு சங்கங்கள் 1988—89ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. புதிதாகத் துவங்கப் பட்ட 19 சாக்குக் கட்டி கூட்டுறவு சங்கங்களில் உள்ள மகளிர் உறுப்பினர்கள் அனைவருக்கும் சாக்கு கட்டி தயாரிப்பதில் ஒரு மாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி காலத்தில் இவர்களுக்கு உதவித் தொகையாக ரூ. 150 அளிக்கப்பட்டது. இம்மகளிர் சாக்கு கட்டி தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தயாரிக்கும் சாக்குக் கட்டிகள் அனைத்தையும் கல்வித் துறையினர் எடுத்துக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளபடி விரைவில் இக்கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தியைத் துவக்கி கல்வித் துறையினர் தேவையினை பூர்த்தி செய்ய உள்ளன.

சுமார் 1,205 மகளிர்க்கு இக்கூட்டுறவு சங்கங்கள் மூலம் 1989–90 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அளிக்கப்படவுள்ளது.

ஊ. இணையுணவு தயாரிக்கும் கூட்றவு சங்கங்கள்.

2.21. 1988–89 ஆம் ஆண்டில் 22 மகளிர் இணையுணவு தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. சுமார் 1650 மகளிர்க்கு ஒரு வார காலம் இணையுணவு தயாரிப்பதில் பயிற்சியளிக்கப்பட்டது. உதவித் தொகையாக ரூ. 50 இம்மகளிர்க்கு வழங்கப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு மத்தியில் முறையான உற்பத்தியினை இக்கூட்டுறவு சங்கங்கள் துவக்க உள்ளன.

எ. மகளிர் பயிற்சி நிலையங்கள்.

2.22. சமூகநல இயக்கத்தின்கீழ் 36 பயிற்சி நிலையங்கள் மகளிருக்காக நடத்தப்படுகின்றன. இவை 24 தையல் பயிற்சி நிலையங்கள், 3 பனை ஓலை பயிற்சி நிலையங்கள், 3 கம்பளி பயிற்சி நிலையங்கள், ஒரு பாய் முடையும் பயிற்சி நிலையம், ஒரு மூங்கில் பயிற்சி நிலையம், ஒரு பிரம்பு பயிற்சி நிலையம், ஒரு ஆயத்த ஆடைத் தயாரிப்பு நிலையம், ஒரு துணி பொம்மை தயாரிப்பு நிலையம், ஒரு பெட்சீட், டவல் தயாரிப்பு நிலையம் ஆகும். இந்த பயிற்சி நிலையங்கள் 1958 முதல் வெவ்வேறு ஆண்டுகளில் துவக்கப்பட்டவை. இந்த ஆண்டில் இந்த பயிற்சி நிலைய போதகர்களின் திறமையை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் நவீன தொழில் வட்டங்களில் இவர்களுக்கு பயிற்சி கிடைக்கும்.

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி.

2.23. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்தில் மாணவிகளை பயிற்றுவிக்கும் இத்திட்டம் 1979 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் தட்டச்சில் 1,000 மகளிருக்கும், சுருக்கெழுத்தில் 500 மகளிருக்கும் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படுகிறது. தட்டச்சு பயிற்சிக்காக பயிற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும், உதவித் தொகை ரூ. 150 வீதம் அளிக்கப்படுகிறது. இதற்கான பயிற்சி காலம் 10 மாதங்கள். சுருக்கெழுத்து பயிலும் பயிற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 220 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இப்பயிற்சியின் கால வரம்பு ஒரு வருடம், 1989–90-ல் இத்திட்டத்தினால் சுமார் 1,500 பெண்கள் பயன் அடைவார்கள். இதற்கான நிதி ஒதுக்கீடு 2.70 இலட்சங்களாகும்.

மகளிருக்கான கம்ப்யூட்டர் பயிற்சி.

2.24. மகளிருக்கு கம்ப்யூட்டர் பயிற்சியளிக்கும் திட்டம் 1988–89–ல் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1988–89ஆம் ஆண்டில் 500 மகளிருக்கு பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. 1989–90–ல் 500 மகளிருக்கு இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்



கப்படும். இத்திட்டத்திற்கான பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,500 செலவிடப்படுகிறது. அரசு மற்றும் பொதுத் துறையில் இப்பயிற்சிக்கான வசதி இருந்தால் அவற்றின் வாயிலாகவே இந்த கம்ப்யூட்டர் பயிற்சியளிக்கப்படுகிறது.

மகளிருக்கு சுய வேலை வாய்ப்பு திட்டம்.

2.25. 1988–89ஆம் ஆண்டு பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டது. இத்திட்டத்தில், விதவைகள், ஆதரவற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் குடும்ப பொறுப்பை தானே சுமக்கும் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இத் திட்டத்தினால் பயன பெறும் பெண்களில் 2/3 பாகம் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகவும், மீதமுள்ள 1/3 பாகம் பிற்படுத்தப்பட்ட இனத்தவராகவும் இருத்தல் வேண்டும். இத் திட்டத்தின் கீழ் ரூ. 600 மானியமாக வழங்கப்படுகிறது. கடன் தொகையில் 2/3 பங்கு வங்கி கடனாகவும், ஒரு பங்கு மானியமாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பெரும்பாலும் நடமாடும் சிற்றுண்டிச்சாலை, சலவையகம், ஊறுகாய் தயாரித்தல், மூங்கில் கூடைகள் முடைதல், பெயிண்டிங், காய்கறி வியாபாரம், பலகாரம் தயாரித்தல் ஆகிய தொழில்களுக்கு இத் திட்டத்தின் கீழ் கடன் மற்றும் மானியம் வழங்கப்படுகிறது. சுமார் 11,600 ஏழை மகளிர் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். 1989–90-ல் இதுபோன்ற தொழில்களுக்கு ரூ. 50.00 இலட்சம் மானியம் வழங்கவும், 200 மகளிர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 13.60 இலட்சம் செலவில் ஆட்டோ ரிக்ஷாவும், பத்து மகளிர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 0.60 இலட்சம் செலவில் மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாவும், கரும்பு சாறு பிழியும் இயந்திரம், ஐஸ்கிரீம் வண்டி வாங்குவதற்கும், பிளாஸ்டிக் பாய முடைதல் போன்றவற்றிற்கு ரூ. 33 இலட்சமும் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 5,500 மகளிர்கள் 1989–90 ஆண்டில் பயன் பெறுவர்.

வழி காட்டி மையம்.

2.26. 1978–79 ஆம் ஆண்டு வழிகாட்டி மையங்கள் நான்கு மாவட்டங்களிலும் இதனைத் தொடர்ந்து 1983–84-ல் மேலும் நான்கு மாவட்டங்களிலும் நிறுவப்பட்டது. 1988–89-ம் ஆண்டு மீதமுள்ள பன்னிரெண்டு மாவட்டங்களிலும் வழிகாட்டிமையங்கள் நிறுவப்பட்டது. வழிகாட்டி மையம் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. வழிகாட்டி அலுவலர், கணவனால் கைவிடப்பட்டவர், விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு வங்கி மூலம் கடனுதவி பெறுவதற்கு உதவி புரிகிறார். ஏழை விதவைகள் ஆயுள் பாதுகாப்பு ஈட்டுத் தொகை, ஓய்வூதியம், பொது வைப்பு நிதியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ஆகியவற்றினைப் பெறுவதற்கும் இதர துறைகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு வழிகாட்டி உதவி

புரிகிறார், வழிகாட்டி மைய அலுவலர்கள் அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லத்தில் குழந்தைகளை சேர்க்க தக்க நடவடிக்கை மேற்கொள்கிறார். மகளிர் மேம்பாட்டிற்கு உருவாக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் மாவட்ட சமூக நல அலுவலர்களாலும் வழிகாட்டி மைய அலுவலர்களாலும் செயல் படுத்தப்படுகிறது.

சேவை இல்லம்.

2.27. இத்துறையின் கீழ் தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, காரைக்குடி ஆகிய இடங்களில் சேவை இல்லங்கள் நடைபெற்று வருகின்றன. 8 முதல் 40 வயது வரையுள்ள விதவைகள் கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்றோருக்கு கல்வி வசதி அளிப்பதே இவற்றின் நோக்கமாகும். இவர்களுக்கு 8-ம் வகுப்பு, 10-ம் வகுப்பு மற்றும் மேல்நிலைக் கல்வியில் தேர்வு எழுத பயிற்சியளிக்கப்படுகின்றன. இதில் ஆர்வமில்லாதோருக்கு தையல், பூவேலை, துணி நெய்தல் போன்றவற்றில் பயிற்சியளிக்கப்படுகின்றன. தையல் மற்றும் பூ வேலையில் ஓராண்டு பயிற்சி முடித்தவர்கள் அரசின் தொழில் நுட்பத் துறையால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு அனுப்பப் படுகின்றனர்.

சேவை இல்லங்களில் பயிலும் உள்ளுறை மாணவிகளுடன் இரண்டு குழந்தைகள் தங்குவதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தொடர்ந்து மூன்று ஆண்டு காலம் மேற்படி இல்லத்தில் இருக்கலாம். உள்ளுறை மாணவிகளுக்கு மாதம் ரூ. 75 வீதமும் குழந்தைகளுக்கு ரூ. 60 வீதமும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. உள்ளுறை மாணவிகளுக்கு ஆண்டிற்கு ரூ. 100 வீதம் சீருடையும், குழந்தைகளுக்கு ரூ. 60 வீதம் சீருடையும் வழங்க பட்டு வருகின்றன. 6-ம் வகுப்பிலிருந்து 8-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கு பாட நூல் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்கு ரூ. 40 வீதமும் 9 மற்றும் 10-ம் வகுப்பு மாணவி களுக்கு ரூ. 60 வீதமும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் குழந்தைகள் பிரிவில் படிக்கும் குழந்தை களுக்கு பாட நூல்களுக்காக ரூ. 15 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

2.28. தாம்பரம் சேவை இல்லத்தில் 30 மாணவிகளும், கடலூர் சேவை இல்லத்தில் 25 மாணவிகளும் பயன்பெறும் வகையில் மேல்நிலைக் கல்விப் பிரிவு நடத்தப்பட்டு வருகின்றன. இப்பிரிவில் பயிலும் மாணவிகளுக்கு பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகளுக்காக ஆண்டொன்றிற்கு ரூ. 100 வீதமும், சீருடைக்காக ரூ. 110 வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

2.29. தஞ்சாவூரில் 1988–89-ல் தொடங்கப்பட்டுள்ள மேல் நிலைப் பிரிவில் (விஞ்ஞானம்) 50 பேர் பயின்று வருகின்றனர். இவர்களுக்கு மாதம் ரூ. 75 வீதம் உதவித் தொகையும், ஆண் டொன்றிற்கு ரூ. 200 வீதம் பாட நூல்கள் மற்றும் குறிப்பேடு களுக்காகவும் வழங்கப்பட்டு வருகிறது. 1988–89-ல் தாம்பரம் மற்றும் கடலூர் சேவை இல்லங்களில் இப்பிரிவில் சேர்க்கப்படும் மாணவிகளின் எண்ணிக்கை அறுபதாக அதிகரிக்கப் பட்டுள்ளது.



2.30. உடல் ஊனமுற்ற மகளிருக்காகவும், குழந்தைகளுக் காகவும் முறையே 30 மற்றும் 20 பேர் பயன்படத்தக்க அளவில் தாம்பரம் சேவை இல்லத்தில் ஒரு தனிப்பிரிவு நடைபெற்று வருகிறது.

2.31. தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவை இல்லங் களில் செயலகப் பிரிவு நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு சேவை இல்லத்திலும் தலா 20 பேர் பயன்பெற்று வருகின்றனர். ஓராண்டு பயிற்சிக்குப் பின்னர் இம்மாணவிகள் அரசு தொழில் நுட்பத் தேர்வுக்கு அனுப்பப்படுகின்றனர். இப்பயிற்சியாளர் களுக்கு மாதம் ரூ. 20 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1985–86-ம் ஆண்டு முதல் செயலகப் பிரிவில் பயிற்சி பெறும் மாணவிகளுக்கு ஆண்டுக்கு ரூ. 250 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2.32. 1983–84 முதல் இத்துறையின் சேவை இல்லங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சேவை இல்லங்களில் பத்தாம் வகுப்பு தேறிய மாணவிகள் பொது சுகாதாரத் துறையால் நடத்தப்படும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். பொது சுகாதாரத் துறையினால் தமிழ்நாட்டில் 9 இடங்களில் நடத்தப் படும் பயிற்சி நிலையங்களில் 1½ ஆண்டுகள் பயிற்சி அளிக்கப் படுகிறது. இது நாள் வரை 627 சேவை இல்ல மாணவிகள் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு அவர்களில் 237 பேர் வேலைவாய்ப்பு பெற்றிருக்கின்றனர். அரசு சேவை இல்லங்களுக்காக ரூ. 28.91 இலட்சங்கள் 1989–90-ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

## அரசு நிதி உதவியுடன் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்கள்.

2.33. அரசு நிதியுதவியுடன் கஸ்தூரிபா சேவிகாஸ்ர மத்தினால் காந்தி கிராமம், ஈரோடு ஆகிய இடங்களிலும், மதுரை சேவாஸ்ரம் மதுரையிலும் முறையே ஜுன் 1968, ஜுலை 1981, நவம்பர் 1981-ல் சேவை இல்லங்கள் தொடங்கி நடத்தி வருகின்றனர்.

2.34. காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் 120 மாணவிகளுக்கும், மதுரை மற்றும் ஈரோட்டிலுள்ள சேவை இல்லங் களில் தலா 40 மாணவிகளுக்கும் இரண்டாண்டு குறுகிய கால 10–ம் வகுப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் ஒவ்வொரு

வருக்கும் ரூ. 75 வீதம் உதவித் தொகை மானியம் வழங்கப்படுகிறது. இது தவிர மதுரை மற்றும் ஈரோட்டிலுள்ள சேவை இல்ல மாணவிகள் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ. 15 வீதம் தொகுப்பூதியம் வழங்கப்படுகிறது. ஒரு பட்டதாரி ஆசிரியர் ஒரு தமிழ் ஆசிரியர் ஆகிய இருவருக்கான ஊதியத் தொகை ஒவ்வொரு சேவை இல்லத்திற்கும் மானியமாக வழங்கப்படுகிறது. சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மகளிருக்காக தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் செயலகப் பிரிவு நடத்தும் சென்னை ''ஸ்திரீ சேவா மந்திர்'' என்னும் நிறுவனத்திற்கு உதவித் தொகை மானியம் வழங்கப்படுகிறது. 1989–90-ம் ஆண்டிற்கு ரூ. 1.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பயிற்சி பள்ளி.

2.35. ஒவ்வொரு பிரிவிலும் 50 பேர் பயிலும் வண்ணம் இளநிலைப் பிரிவு, முதுநிலைப் பிரிவு என இரு பிரிவுகளுடன் 1966–67-ல் தாம்பரத்தில் தொடங்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தற்போது பல்லாவரத்தில் செயல்பட்டு வருகிறது.

2.36. சேவை இல்லங்கள் மூலம் 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்று வயது வரம்பு கடந்த விதவைகள், கணவனால் கைவிடப் பட்டவர்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு இப்பயிற்சியில் சேர முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இரண்டாண்டு கால இப் பயிற்சியில் பயிலும் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ. 75 உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி முடித்த பின் அவர்கள் இடைநிலை ஆசிரியர்களாக இத்துறையால் நடத்தப் படும் பள்ளிகளிலும், கல்வித்துறை மற்றும் தனியாரால் நடத்தப் படும் பள்ளிகளிலும், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளி களிலும் பணியமர்த்தப்படுகிறார்கள். இவ்வேலைக்காக அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்கள் பெயரை பதிவு செய் திருந்தால் மட்டும் போதுமானது. வேலைவாய்ப்பில் இவர்களது வயது வரம்பு 40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1989–90-ஆம் ஆண்டிற்கு ரூ. 2.66 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசால் நடத்தப்படும் பணிபுரியும் மகளிர் விடுதிகள்.

2.37. பணிபுரியும் மகளிருக்கு, குறிப்பாக நடுத்தர வருவா யுள்ளவர்களுக்கு பாதுகாப்பும் வசதியும் செய்து கொடுக்கும் பொருட்டு பணிபுரியும் மகளிர் விடுதிகள் அமைக்கும் திட்டத்தை அரசு பல நகரங்களில் செயல்படுத்தி வருகிறது. சென்னை, கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, ஓசூர், தூத்துக்குடி ஆகிய ஏழு இடங்களில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. சென்னையிலுள்ள இல்லத்தில் 75 பேரும், கடலூரில் 30 பேரும் இதர ஐந்து இடங்களில் தலா 50 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்விடுதிப் பணியாளர்களான ஒரு கண்காணிப்பாளர், இரண்டு சமையலர்கள், ஒரு அலுவலக உதவியாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு துப்புரவாளரின் ஊதியத்திற்கான மொத்த செலவையும்



அரசு ஏற்றுக்கொள்கிறது. உணவுச் செலவு, கட்டட வாடகை, மின் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் உள்ளுறுப்பினர் களிடமிருந்து சம அளவில் ஈடு செய்யப்படுகிறது. ரூ. 5.61 இலட்சங்கள் 1989–90-ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

பணிபுரியும் மகளிர் விடுதிகட்ட நிதி உதவியளித்தல்.

2.38. தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால், பணிபுரியும் மகளிர் விடுதி கட்டடம் கட்டுவதற்கான மொத்த செலவில் 75 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. மொத்த மதிப் பீட்டில் 15 சதவிகிதம் அல்லது ரூ. 35,000 இவற்றில் எது குறைந்த தொகையோ அத்தொகை மாநில அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை பயன்படுத்த விரும்பும் நிறுவனங்கள் கட்டடம் கட்ட, சொந்தமாக நிலம் வைத்திருந்து, மாநகராட்சி/நகராட்சியின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். இவ்வகைக்காக பிற அரசிடமிருந்தோ, நிறுவனங் களிடமிருந்தோ உதவிகள் பெற்றிருத்தல் கூடாது. கட்டடம் கட்டப்படும் நிலத்தின் மதிப்பில் 50 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் 1988–89 வரை 47 பணிபுரியும் மகளிர் இல்ல கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1989–90-ம் ஆண்டிற்கு ரூ. 1.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகளிர் மன்றங்கள்.

2.39. கிராம மகளிர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட மகளிர் மன்றங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் திலும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் மாநிலத்தில் மொத்தம் 11,520 மகளிர் மன்றங்கள் உள்ளன. இம்மகளிர் மன்ற அமைப் பாளர்களுக்கு காலாண்டிற்கொருமுறை ரூ. 90 மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது. இவர்கள் கிராமப்புறங்களில் பயிற்சி முகாம் நடத்துவதற்காக (ஆண்டிற்கு 8 முகாம்கள்) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 1,200 வீதம் வழங்கப்படுகிறது. குழந்தை கள் கண்காட்சி மற்றும் கல்விச் சுற்றுலாவுக்காக முறையே ரூ. 200-ம் ரூ. 440-ம் வழங்கப்படுகிறது. புத்தகங்கள், பத்திரி கைகள் வாங்கப்பட்டு அதன் மூலம் சமூகக் கல்வியை வளர்க்கும் பொருட்டும் ஆண்டொன்றிற்கு ரூ. 360 வழங்கப்படுகிறது. சிறப் பாகச் செயல்படும் மகளிர் மன்றங்களுக்கு ஆண்டுதோறும் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. சிறந்த மகளிர் மன்றங்கள், மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டு ரூ. 1,000, ரூ. 600, ரூ. 400 வீதம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதுவரை இவ்வாறு 127 பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. 1989–90-ம் ஆண்டிற்காக ரூ. 49.58 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விதவைகளின் குழந்தைகளுக்கு பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்குதல்.

2.40. ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கு குறைவாகவுள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம் 1978–79-ம் ஆண்டில் துவக்கப் பட்டது. இத்திட்டத்தின்படி ஆரம்பப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ரூ. 15 வீதமும், நடுநிலைப்பள்ளியில் பயில்வோருக்கு ரூ. 30 வீதமும், உயர்நிலைப் பள்ளியில் பயில் வோருக்கு ரூ. 90 வீதமும், மேல்நிலைக் கல்வி பயில்வோருக்கு ரூ. 190 வீதமும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இத்திட்டத் தினால் ஒவ்வோராண்டும் 4,000 குழந்தைகள் பயனடைகிறார்கள் 1989–90-ம் ஆண்டிற்கு ரூ. 3 47 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகளிருக்கான திருமணத் உதவித் திட்டங்கள்:

2.41. மகளிர் திருமணத்திற்காக மூன்று விதமான உதவிகள் இவ்வியக்கத்தால் வழங்கப்படுகின்றது.

(அ) ஏழைவிதவையரது மகள் திருமண உதவித் திட்டம்:

ஏழை விதவையரது மகளின் திருமணத்திற்காக ரூ: 1,000 வீதம் வழங்கப்படுகிறது. திருமண உதவி கோரும் மகளிர் 18-க்கும் 30-க்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும். ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே இவ்வுதவி பெறமுடியும். இத்திட்டத்தால் ஒவ்வொரு ஆண்டும் 1,015 பேர் பயன் பெறுகின்றனர். 1989–90-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 10.15 இலட்சங்களாகும்.

(ஆ) ஆதரவற்ற மகளிர் திருமண உதவி திட்டம்:

ஆதரவற்ற மகளிர் திருமணத்திற்காக ரூ. 1,000 வீதம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உதவி கோரும் மகளிர் 18-க்கும் 30-க்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 200 பேர் பயன் பெறுகின்றனர். 1989-90-ஆம் ஆண்டிற்கு ரூ. 2 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) விதவை மறு மணத் திட்டம்:

விதவை ஒருவர் மறுமணம் செய்துகொண்டால் அத்தம்பதியரின் பெயரில் ரூ. 5,000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற 18 வயது முதல் 30 வயதுடைய விதவைகளே தகுதியுடையவர்கள். இத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 100 மகளிர் பயனடை கின்றனர். மேற்கண்ட மூன்று திட்டங்களின் மூலம் பயனடை வோர் வருமானம் அல்லது அவர்களது குடும்ப வருமானம் ரூ. 6,400-க்குள் இருத்தல் வேண்டும். 1989–90 ஆம் ஆண்டிற்கு ரூ. 5 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்:

2.42. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் ரூபாய் ஒரு கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் 1983–ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் துவக்கப்பட்டது. இக் கழகத்தினால் பெறப் பட்ட பங்கு மூலதனம், மைய அரசால் செலுத்தப்பட்ட ரூபாய் பத்து இலட்சங்களையும், சேர்த்து ரூபாய் ஐம்பது இலட்சங் களாகும். சமுதாயத்தில் மகளிர் நிலை முன்னேற்றமடையத்தக்க அளவில் அவர்களின் வருவாயை உயர்த்தி, அவர்களின் பொரு ளாதார நிலையை மேம்பாடு அடையச் செய்யத் திட்டங்களை வகுத்தல், செயல்படுத்துதல், மேற்கொள்ளுதல் மற்றும் உதவி செய்தல் போன்றவை அக் கழகத்தின் முக்கிய குறிக்கோள்கள்.

அரசின் மானியத்துடன் கீழ்க்கண்ட உற்பத்திப் பிரிவுகளை இக்கழகம் செயல்படுத்தி வருகின்றது :—

| வரிசை எண்ணும் பிரிவின் பெயரும். (1) | பயனடைவோரின் எண்ணிக்கை. (2) | திட்டத்தின் மொத்த மதிப்பீடு. (3) (ரூபாய் இலட்சங்களில்.) |
|---|---|---|
| 1. அச்சுக்கூடம், கிண்டி .. | 75 | 24.00 |
| 2. கல்வி உபகரணங்கள் பிரிவு, தாம்பரம் .. | 50 | 13.67 |
| 3. மின்னணுவியல் கூடம், கிண்டி... | 40 | 4.68 |
| 4. அச்சுக்கூடம், சிவகாசி .. | 150 | 52.90 |

2.43 இக்கழகம் 23 மகளிருக்கு வேலை வாய்ப்பினை அளிக்கக்கூடிய வகையில் தாம்பரம், கல்வி உபகரணங்கள் பிரிவுக்கு ரூ. 0.20 இலட்சங்கள் சொந்த மூலதனத்துடன் ஒரு திரை அச்சுக் கூடத்தை ஆரம்பித்துள்ளது. தவிர, முதலில் ரூ. 0.15 இலட்சங்கள் மதிப்பில் மின்னணுவியல் கூடம் ஏற் படுத்தப்பட்டு, பின்னர் விரிவாக்கத்திற்கு அரசின் நிதியுதவி பெறப்பட்டது.

2.44 இக்கழகம் துவங்கப்பட்ட நாளிலிருந்து ஏழை மகளிரின் வருவாயைப் பெருக்கிப் பயனளிக்கும் பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவை பின்வருமாறு :—

| வரிசை எண்ணும் திட்டமும். (1) | பயனடையும் மாவட்டங்கள். (2) | பயனடைவோரின் எண்ணிக்கை. (3) | திட்டத்தின் மொத்த மதிப்பு. (4) (ரூபாய் இலட்சங்களில்.) |
|---|---|---|---|
| 1. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் கமிஷனின் சான்றளிக்கப்பட்ட சர்வோதய சங்கங்கள் மூலமாக நூற்பு மற்றும் நெசவுக் கூடங்கள் மற்றும் அப்பளம், அகர்பத்தி, போன்றவை தயாரிக்கும் கூடங்களை நிறுவுதல். | செங்கை அண்ணா, வட ஆற்காடு, சேலம், தென்னாற்காடு, பெரியார், கோயம்புத்தூர், மதுரை, கன்னியாகுமரி, காமராஜர், பசும்பொன் தேவர் திருமகன், திண்டுக்கல் காயிதே மில்லத், இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி. | 2,588 | 311.55 |
| 2. தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்) உற்பத்தி மையங்கள் மூலமாக பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு அளித்தல். | சென்னை. | 250 | 20.26 |
| 3. ஆடு வளர்ப்புத் தொழில். | திண்டுக்கல் காயிதே மில்லத், காமராஜர், பசும்பொன் தேவர் திருமகன், புதுக்கோட்டை, நெடுமபரனார், கோயம்புத்தூர், மதுரை. | 3,100 | 219.55 |
| 4. கறவை மாடுகள் திட்டம். | செங்கை-அண்ணா, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல் காயிதே மில்லத். | 500 | 29.94 |



| | | | |
|---|---|---|---|
| 5. சென்று வளர்ப்புத் திட்டம். | பரிசீலனையில் உள்ளது | 1,500 | 63.85 |
| 6. மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுதல். | செங்கை அண்ணா, பசும்பொன் தேவர் திருமகன், தர்மபுரி, இராமநாதபுரம், வட ஆற்காடு. | 500 | 52.75 |

2.45. ஏழை மகளிரின் மாத வருவாயைப் பெருக்கும் வகையில் வேலை வாய்ப்பளிக்கும் சிறப்பான கீழ்க்கண்ட திட்டங்களையும் இக்கழகம் வகுத்துள்ளது.

| வரிசை எண்ணும் திட்டமும். (1) | பயன்பெறக்கூடிய மாவட்டங்கள். (2) | பயனடைவோரின் எண்ணிக்கை. (3) | திட்டத்தின் மொத்த மதிப்பு. (4) (ரூபாய் இலட்சங்களில்.) |
|---|---|---|---|
| 1. தொண்டு நிறுவனம் மூலம் குடிசைத் தொழில்கள். | புதுக்கோட்டை, காமராஜர், செங்கை அண்ணா. | 360 | 34.00 |
| 2. மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துதல். | மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, பெரியார், தஞ்சாவூர். | 500 | 52.70 |
| 3. வல்லக்கோட்டை, செயல் மற்றும் ஊரக வளர்ச்சி மையம் (CARD) மூலமாக ஒரு நூற்பு மற்றும் ஒரு நெசவுக்கூடங்கள் ஏற்படுத்துதல். | செங்கை அண்ணா | 48 | 5.78 |

2.46. இக்கழகம், தர்மபுரி, சேலம் மற்றும் தென்னார்காடு மாவட்டங்களில் மகளிரின் சமூக மற்றும் பொருளாதார நிலை உயர்வுக்காக ஒரு விரிவான திட்டத்தினை வேளாண்மை வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி நிறுவன உதவியுடன் செயல் படுத்தத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் அம்மூன்று மாவட்டங்களில் ஏழு ஆண்டுகளில் சுமார் 40,000 மகளிர்கள் பயனடைவார்கள். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 46 கோடியாகும். ஏழை மகளிரின் பொருளாதார மற்றும் சமுதாய நிலை உயர இத்திட்டம் வழி வகை செய்கிறது.

2.47. மகளிரிடையே தன்னம்பிக்கையையும், விழிப்புணர்ச்சி யையும் தோற்றுவிக்கும் வகையில் இத்திட்டத்தின் மூலம் மகளிர் நற்பயனை அடைவதற்காக அவர்களைக் குழுக்களாக அமைத்து, பல வளர்ச்சித் திட்டங்கள் மூலம் பயனடையும் வகையிலும் அவர்களுக்கென்றே செயல்படும் சேமிப்பு மற்றும் கடன் வழங்கும் சங்கங்களை நிறுவி பயனடையவும் ஊக்குவிக்கப் படுவார்கள்.

2.48. இத்திட்டத்தினை 1989–90-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சமூக வளர்ச்சியில் தொண்டு நிறுவனங்களின் முக்கிய பங்கை மையமாகக் கொண்டு இக்கழகம் இந்நிறுவனங்களின் மூலம் மகளிர்களுக்குப் பயனளிக்கும் திட்டங்களை மைய அரசின் நிதி உதவியுடன் இந்தியாண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களில் மகளிரின் பொருளாதார முன்னேற்றம் தவிர விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல், நடைமுறை எழுத்தறிவு, சுகாதாரம், குடும்ப நலம் போன்றவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

2.49. இக்கழகம் தொழில் ஆரம்பிக்க முனையும், மகளிரை ஊக்குவிக்க வேண்டியும் வழிவகைகளை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டியும், மகளிரை தொழில் நிர்வாகப் பொறுப்பில் ஈடுபாடு கொள்ளச் செய்ய "தொழில் வளர்ச்சிப் பிரிவு" ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு தொழில் செய்ய முனையும் மகளிரின் கடன் விண்ணப்பங்களைப் பரிசிலனை செய்தல், தொழிற்கூடம் அமைக்கவிருக்கும் இடத்தினை நேரடியாகப் பார்வையிட்டு தகுதியிருப்பின் அவ்விண்ணப்பங்களை நிதி நிறுவனங்களுக்குப் பரிந்துரை செய்து அனுப்புதல் இப்பிரிவின் முக்கிய பணிகளாகும். மேலும், இப்பிரிவு மகளிரின் திறமைகளை வளர்க்கும் பயிற்சிகள் மற்றும் அவர்களின் கல்வி அறிவு அபிவிருத்தி போன்ற பணிகளையும் செய்து வருகிறது.



## அத்தியாயம் 3.

## குழந்தைகள் நலம்.

### தமிழக அரசு சத்துணவுத் திட்டம்.

3.1. இத்திட்டம் தமிழ்நாட்டில் 1–7–1982 முதல் கிராமப் புறங்களிலும் 15–9–1982 முதல் நகர்ப்புறங்களிலும் தொடங்கப் பட்டது. தற்போது கிராமப்புறங்களில் 28.483 குழந்தைகள் நல மையங்களும் நகர்ப்புறங்களில் 4,840 குழந்தைகள் நல மையங்களும் நடைபெற்று வருகின்றன. இதில் 157 குழந்தைகள் நல மையங்கள் மலைவாழ் பகுதியினர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 18.15 இலட்சங் களாகும்.

குழந்தைகளுக்கு நேரடியாக பயன் அளிப்பதுடன் ஆயிரக் கணக்கான வேலையற்ற ஏழை மகளிர் பலர் இத்திட்டத்தின் மூலமாக வேலை வாய்ப்பு பெற இத்திட்டம் வழி வகுத்துள்ளது. நாடு முழுவதும் சுமார் 30,641 பெண்கள் குழந்தைகள் நல அமைப்பாளர்கள் / அங்கன்வாடி பணியாளர்களாகவும் 52.919 பெண்கள் குழந்தைகள் நல உதவியாளர்கள்/ஆயாக்களாகவும் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

3.2. இத்திட்டத்தில் முக்கியமான மூன்று அம்சங்கள் பொருந்தியுள்ளன. அவை 1. ஊட்டச்சத்து, 2. முன்பருவக் கல்வி, 3. சுகாதார பாதுகாப்பு.

### ஊட்டச்சத்து திட்டம்:

3.3. ஊட்டச்சத்து குறைவினை தடுப்பதற்கு குழந்தை களுக்கு சுகாதார முறையில் தலத்திலேயே சமைக்கப்பட்ட சூடான உணவு மதிய உணவாக மையங்களில் வழங்கப்படுகிறது. இந்த உணவு கீழ்க்கண்ட அளவுப் பொருட்களைக் கொண்டு சமைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. அரிசி | .. .. | 80 கிராம். |
| 2. பருப்பு | .. .. | 10 கிராம். |
| 3. எண்ணெய் | .. .. | 3 கிராம். |
| 4. தாளிதம் மற்றும் காய்கறி | | 50 கிராம். |

ஒரு குழந்தைக்கு ஒரு வேலை உணவுக்காகும் செலவு 44 பைசா. இச்சத்துணவு மூலமாக ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையான சுமார் மூன்றில் ஒரு பகுதி புரதச் சத்து மற்றும் ஊட்டச்சத்துகள் தினந்தோறும் கிடைக்கும் என ஊட்டச்சத்து வல்லுநர்களால் கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்

திற்கும் ரூ. 2,000 மதிப்புள்ள சமையல் உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளன. எரிபொருட்களுக்கான செலவை மீதப்படுத்த குழந்தைகள் நல அமைப்பாளர்கள் வைக்கோல் பெட்டியை உபயோகிப்பது குறித்து அறிவுரைகளுடன் பயிற்சியும் அளிக்கப் பட்டுள்ளார்கள்.

முன்பருவக் கல்வி:

3.4. அனைத்து சத்துணவு மையங்களும் நர்சரிப் பள்ளி களாக மாற்றப்பட்டன. ஆகவே, ரூ. 1,500 மதிப்புள்ள கல்வி உபகரணங்கள், விளையாட்டு சாமான்கள் மற்றும் மேஜைகள் முதலியவை எல்லா மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

உடல்நலம் பேணுதல்:

3.5. சீரான உடல்நிலையைப் பராமரிப்பதற்காக அடிக்கடி மருத்துவ பரிசோதனை செய்வதன் மூலமும், தடுப்பூசிகளின் மூலமும் குழந்தைகளின் உடல் நலம் பேணப்படுகிறது. கிராமப் புறங்களிலும் நகராட்சிகளிலும் பொது சுகாதார துறையினர் குழந்தைகளின் உடல்நலத்தைப் பேணுகின்றனர். குழந்தைகளின்

உடல் வளர்ச்சியையும் ஊட்டச்சத்து நிலையையும் மதிப்பிடு வதற்கு அவர்களின் எடைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு அதற்கென்று உள்ள சுகாதார அட்டைகளில் பதிவு செய்யப் படுகின்றன. இதற்காக அனைத்து குழந்தைகள் நல மையங் களுக்கும் எடை பார்க்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

குடிநீர் சேமிப்பு:

3.6. மையங்களில் குடிநீரை சேமிப்பதற்கு மூடியுள்ள பி.வி. டிரம்கள் முதற்கட்டமாக வாங்க அரசு உத்திரவு வழங்கியுள்ளது. இவ்வருட இறுதிக்குள்ளாக மேற்படி டிரம்கள் வாங்கி 14,063 சத்துணவு மையங்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

துணை சத்துணவு:

3.7. சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை ஒரு கோழி முட்டை ஜூன் 3-ம் தேதி முதல் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இதன் தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



3.8. குழந்தைகளுக்கு சத்து ஊட்டுவதற்காக மருத்துவர் களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வைட்டமின் மாத்திரைகள் வழங்கப்படும் என்பதை அரசு அறிவித்துள்ளது. அதற்காக வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகள் கேட்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

முதியோர்களுக்கான சத்துணவு:

3.9. 15-1-1983 முதல் உதவி தொகை பெறும் முதியோருக்கும் இத்திட்டத்தின் கீழ் உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருக்கும் நாள்தோறும் 200 கிராம் அரிசி, 15 கிராம் பருப்பு, 3 கிராம் எண்ணெய், 50 கிராம் காய்கறி மற்றும் தாளிதம் அடங்கிய சத்துணவு வழங்கப்படுகிறது. அவர்கள் தங்களது உணவை முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகளுக்கு தொந்தரவு இல்லாத வகையில் வீடுகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப் படுகிறார்கள்.

3.10 1-1-1984 முதல் அரசு இத்திட்டத்தை முன்னாள் படை வீரர் நல நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறும் முன்னாள் படை வீரர்களுக்கும் அவர் தம் விதவையர்கட்கும் விரிவுபடுத்தி யுள்ளது. தற்போது இத்திட்டத்தினால் 2,13,209 முதியோரும் முன்னாள் படை வீரர்களும் அவர்தம் மனைவியரும் பயன் பெற்று வருகின்றனர். தாய்மார்களுக்கு குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் சத்துணவு பற்றிய சமுதாயக் கல்வியினை போதிக்கும் மையங்களாக மேற்படி குழந்தைகள் நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அட்டவணை.

மையங்களின் எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| இராமப்புறம் | .. .. | 23,483 |
| நகர்ப்புறம் | .. .. | 4,849 |
| மொத்தம் | .. | 28,332 |

2 முதல் 5 வயதுக்குள் பயன்பெறும் குழந்தைகள் 18.15 லட்சம், பயன்பெரும் முதியோர் மற்றும் முன்னாள் படை வீரர்கள் 2,13,200.

இவற்றில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட மையங்களும் சென்னை பெருநகர் அபிவிருத்தி திட்டமையங்களும் அடங்கும்.

ஆய்வு மற்றும் மேலாய்வு பற்றிய திட்டங்கள்:

3.11. சென்னை மாவட்டம் தவிர மற்ற மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களாலும் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை நகராட்சி ஆணையாளர்களாலும் சத்துணவு திட்டத்தில் தொடர்புடையத் துறைத் தலைவர்களாலும் சத்துணவு மையங்கள் திறம்பட செயல்பட, ஆய்வு மற்றும் மேலாய்வு காலந்தோறும் செய்யப்படுகிறது. இதனால் ஆய்வின்போது காணப்பட்ட குறைபாடுகள் அறவே களையப்படுகின்றன. சத்துணவு திட்டத்தில் அவ்வப்போது காணப்படும் முறைகேடுகளைக் களைவதற்காக தல நிதி கணக்கு அலுவலர்களால் கால முறைப்படி தணிக்கைகள் நடத்தப்படுகிறன. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தினால் சத்துணவு மையங்களுக்கு பொருட்கள் வழங்கும் முறையும் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு வகுக்கப்பட்ட நடைமுறைகளின்படி சத்துணவு மையங்களுக்கு மேற்படி கழகத்தினால் வழங்கப்பட வேண்டிய அரிசி மற்றும் பருப்பு மூட்டைகள் நிர்ணயிக்கப்பட்ட [illegible] அளவுகளில் இருக்க வேண்டும். அவ்வாறு தேவைப்படும் அனுப்புவோர் ஒவ்வொரு பண்டங்களின் அளவுகளும் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவிற்கு குறையாமல் பட்டியல் போட்டு அனுப்ப வேண்டும் ஒப்படைப்பு வாரிகளை இடைமறித்து மையங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு உணவு பண்டங்கள் அவைகளால் ஒப்படைக்கப்பட்டனவா என்று சோதனை செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றும் சார்பு அலுவலர்களுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆய்வின் போது ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் குறிப்பிட்டுள்ள அளவுகள் நிர்ணயிக்கப்பட்ட விதங்களில் பண்டங்கள் இருக்கின்றனவா என்று சோதனை செய்யவும் (ம) தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திலுடைய ஒப்படைப்புப் பதிவேட்டில் முறையான பதிவுகள் செய்யப்பட்டுள்ளனவா என்று சரிபார்க்கவும் தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள களப்பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். எல்லா நிலைகளிலும் பொருட்கள் களவு போவதைத் தடுப்பதற்கு இந் நடவடிக்கைகள் பெரிதும் உதவும்.

3.12. சத்துணவு திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ. 173.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 85 லட்சம் சிறார்கள் இதனால் பயனுறுவர். இத்திட்டத்தில் அவ்வப்போது எழும் முறைகேடுகளையும் குறைபாடுகளையும் களைந்திட தக்க கண்காணிப்புகள் ஏற்படுத்தப்படும். ஆங்காங்கு இத்திட்டம் ஒழுங்குற நடைபெறுகிறதா என்பதைக் கவனித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கும் பொறுப்பை உள்ளாட்சி மன்றங்கள் ஏற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட இருக்கிறது. இத்திட்டத்தை ஒருங்கிணைந்த திட்டமாகவும் வீண் விரயமில்லாத [illegible] திட்டமாகவும் உண்மையிலேயே சிறார்களுக்கு சத்து நல்கிடும் திட்டமாகவும் நடத்திட அரசு நடவடிக்கை [illegible] வருகிறது.



ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகள்.

3.13. சமுதாயத்தில் நலிவுற்ற குழந்தைகள், கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து மற்றும் அது தொடர்பான பற்றாக்குறைகளை சமாளிப்பதற்காக ஒருங்கிணைந்த முறையில் வடிவமைக்கப்பட்ட ஒரு பணியே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டமாகும்.

3.14. இத்திட்டத்தின் பணிகள் கருவிலுள்ள குழந்தையிலிருந்து தொடங்கி 6 வயது ஆகும் வரை அக்குழந்தைக்கு தேவையான சத்துணவு, சுகாதாரம் மற்றும் ஏனைய வளர்ச்சிக்கான தேவைகளையும் கருத்தாகக் கவனிக்கிறது. இத்திட்டத்தின் முக்கிய பணிகளாவன—

1. துணை ஊட்டச் சத்து
2. முன் பருவக் கல்வி
3. மருத்துவ சோதனை
4. நோய்த் தடுப்பு
5. ஊட்டச் சத்து மற்றும் சுகாதார கல்வி
6. மேல் மருத்துவச் சோதனை.

3.15. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் முதன் முதலில் 1975-76 ஆம் ஆண்டு சென்னை, தளி மற்றும் நிலக்கோட்டை ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டது. அதன் பிறகு மேலும் விரிவாக்கப்பட்டு தற்போது 65 வட்டாரங்களில் செயல்பட்டு வருகிறது. நகர்ப்புறமான சென்னை, மதுரை, கோவை, திருச்சி, வேலூர், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், ஆலந்தூர் காஞ்சிபுரம், திருவொற்றியூர், சேலம் தஞ்சாவூர், கும்பகோணம், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், ராஜபாளையம், கடலூர் ஆகிய இடங்களிலும் கிராமப்புறங்களான தளி, நிலக்கோட்டை, புதுக்கோட்டை, செங்கை அண்ணா, காமராஜர் இராமநாதபுரம் மாவட்டங்களிலும் தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு மலைப் பகுதியிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1988–89-ம் ஆண்டிற்கான மேலும் 13 புதிய திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டமும் 1,00,000 மக்கள் தொகை உள்ள இடங்களில் நிறுவப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு திட்டத்திலும் ஒரு குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலரும் 4 அல்லது 5 மேற்பார்வையாளர்களும் உள்ளனர். நகர்ப்புறத்திட்டப்பகுதிகளில் ஒவ்வொரு திட்டத்திலும் ஒரு மருத்துவ அலுவலரும் 4 மருத்

செவிலியரும் உள்ளனர். கிராம மற்றும் மலைப்புறத் திட்டப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் சுகாதாரப் பணிகள் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு திட்டத்திலும் சுமார் 100 அங்கன்வாடி மையங்கள் செயல்படுகின்றன.

3.16. அங்கன்வாடி மையங்கள் மூலம்தான் இத்திட்டப் பணிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு அங்கன்வாடி மையமும் 1,000 மக்கள் தொகை உள்ள இடங்களில் நிறுவப்பட்டு 2 முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகள் 40 பேருக்கும் 0.2 வயது குழந்தைகள் 30 பேருக்கும் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 30 பேருக்கும் ஆக மொத்தம் 100 நபர்களுக்கு திட்டப்பணிகள் வழங்கப்படுகிறது. கீழ்க்கண்ட பணிகள் ஒவ்வொரு மையத்தின் மூலம் வழங்கப்படுகிறது:—

இணை உணவு:

3.17. மத்திய அரசின் உதவியுடன் கோதுமையை அடிப்படையாகக் கொண்ட 'சத்து' எனும் உணவு 6 மாதத்திலிருந்து 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படுகிறது. 80 கிராம் கொண்ட இச்சத்து உணவு கீழ்க்காணும் விகிதத்தில் வருடத்தில் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கோதுமை | .. .. | 60% |
| பொட்டுக்கடலை | .. | 15% |
| வெல்லம் | .. .. | 25% |

ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 80 பைசா விதம் செலவிடப்படுகிறது. இச்செலவினம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசால் மீளப்பெறப்படுகிறது.

2 முதல் 4 வயது வரையிலான குழந்தைகளுக்கு மதிய உணவு வருடத்தில் எல்லா நாட்களிலும் (365) மையத்திலேயே வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் அரிசி 80 கிராம், எண்ணெய் 3 கிராம் மற்றும் காய்கறி 50 கிராம், பருப்பு 10 கிராம் என்ற அளவில் வழங்கப்படுகிறது. இச்செலவினம் மாநில அரசு நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு 44 பைசா விதம் செலவிடப்படுகிறது.

முறைசாரா முன் பருவக் கல்வி (கருத்துணுகுமுறை).

3.18. ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திலும் 3 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு முறைசாரா முன் பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. நல்ல மனப்போக்கையும் நடத்தையையும் வளர்க்க முன் பருவக்கல்வி வலியுறுத்தப்படுகிறது. குழந்தை



களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் அங்கன்வாடி பணியாளர்கள் திட்டமிட்டு செயல்படத்தக்க வகையிலும் கருத்தணுகுமுறை செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்திற்கும் விளையாட்டுச்சாதனங்களும் வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த செலவில் பொருட்கள் செய்ய பணியாளர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மருத்துவப் பரிசோதனை:

3.19. 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சுகாதாரம் மற்றும் சத்து நிலைமைகளை கண்காணிக்கும் வகையில் அவர்களின் எடை பார்க்கப்பட்டு அவ்வப்போது மருத்துவ உதவிகள் வழங்கப்படுகிறது. மேலும் மூன்று முதல் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பொதுவான மருத்துவச் சோதனைகளும் செய்யப்படுகின்றன. மேலும் அவ்வப்போது வயிற்றுப் பூச்சியை நீக்க மருந்து 6 மாதங்களுக்கு ஒரு முறை வைட்டமின் 'ஏ' மாத்திரைகள் கொடுக்கப்படுகிறது. பெண்கள் கருவுற்ற காலத்திலும் மகப்பேறுக்குப்பின் பாலூட்டும் காலத்திலும் சுகாதாரத் திட்டத்தின் கீழ் அவர்கள் கவனிக்கப்படுகிறார்கள்.

நோய்த்தடுப்பு:

3.20. 6 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இளம்பிள்ளை வாதம், தட்டம்மை, கக்குவான், காசநோய், தொண்டை அடைப்பான் போன்ற நோய்களைத் தடுக்க தடுப்பூசிகள் போடப்படுகின்றன. அனைத்துக் கருவுற்ற பெண்களுக்கும் இரண-ஜன்னிக்கான தடுப்பூசியும் போடப்படுகிறது.

ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி:

3.21. 15 முதல் 45 வரையிலுள்ள அனைத்து பெண்களுக்கும் ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி புகட்டப்படுகிறது. குறிப்பாக கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களை பொறுத்தவரை அதிக கவனம் செலுத்தப்படுகிறார்கள். ஊட்டசத்து பற்றாக்குறையால் அடிக்கடி நோய்வாய்ப்படும் குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் மீது தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து கல்வியானது சிறப்பாக வடிவமைக்கப்பட்ட குழுக்கள் மற்றும் வகுப்புகள் மூலமும் திட்டப் பகுதிகளில் அங்கன்வாடி பணியாளர்களின் வீட்டு பணி சமையல் செயல்முறை விளக்கக் கூட்டங்கள், வானொலி போன்ற அமைப்புகள் மற்றும் ஏனைய தொடர்பு பிரிவுகள் மூலமும் இச் செய்திகள் திட்டத்தின் எல்லாப் பகுதியினருக்கும் எட்டும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. பிள்ளைக் கனியமுதே என்ற தமிழ் ஏடு இப்பிரிவின் கீழ் வெளியிடப்படுகிறது.

அட்டவணை.

| | | |
|---|---|---|
| திட்டங்களின் எண்ணிக்கை | | 65 |
| நகர்ப்புறம் | .. | 37 |
| கிராமப்புறம் | .. | 27 |
| தலைப்புறம் | .. | 1 |
| மொத்தம் | .. | 65 |

| | |
|---|---|
| மொத்த மையங்கள் எண்ணிக்கை .. | 5,607 |
| இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள். | 1,04,272 |
| கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள். | 58,118 |
| 2 முதல் 4 வயது வரையிலான குழந்தைகள். | 2,07,281 |

தாய்-சேய் நலத் திட்டம்—சென்னை பெருநகர் அபிவிருத்தி திட்டம்:

(உலக வங்கி உதவி.)

3.22. சென்னை பெருநகர் அபிவிருத்தி திட்டம் ஒருங்கிணைந்த
குழந்தைகள் வளர்ச்சி திட்ட அடிப்படையில் 6 மாதம் முதல்
5 வயது வரையுள்ள குழந்தைகள், கருவுற்ற மற்றும் பாலூட்டும்
தாய்மார்களுக்கு உலக வங்கி உதவியுடன் விரிவுபடுத்தப்
பட்டுள்ளது. தாய்-சேய் நலத்திட்டத்தில், இணை உணவு,
சுகாதாரப் பாதுகாப்பு, மேல் மருத்துவ பரிசோதனைக்கான
பரிந்துரை, முத்தடுப்பு ஊசி போடுதல், சுகாதாரம் மற்றும்
சத்துணவு, கல்வி, முறைசாராக் கல்வி முதலியன இத்திட்டத்தில்
அடங்கியுள்ளன. தற்பொழுது 219 குழந்தைகள் நலத் திட்ட
மையங்கள் சென்னை மாநகரத்தில் நடைபெற்று வருகின்றன.
ஒவ்வொரு காப்பகத்திலும் ஒரு குழந்தை நல அமைப்பாளர்
மற்றும் 2 குழந்தை நல உதவியாளர்கள் பணியாற்றுகின்றனர்.
மூன்று மருத்துவ அலுவலர்கள் சுகாதாரப் பணிகளை கவனிக்
கின்றனர். அவருக்கு உதவியாக மருத்துவ துணை செவிலியர்,
மற்றும் பொது சுகாதார தாதியர் உதவுகின்றனர். இவை
நடமாடும் மருத்துவ முனைப்பு மூலமாக நடைபெறுகின்றன.
இரண்டு வயதிற்குட்பட்ட எடை குறைவான குழந்தைகள்,
கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு 'சத்து'
வழங்கப்படுகிறது. இதரக் குழந்தைகள் தமிழகஅரசு குழந்தைகள்
சத்துணவு திட்டம் மூலமாக உணவு பெறுகின்றனர். 80
குழந்தைகள் காப்பகங்கள் சென்னை பெருநகர் வளர்ச்சி திட்டம்
2-ல் நடைபெறுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட 119 மையங்களின்
மேம்பாட்டிற்காக ரூ. 19.40 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



அட்டவணை.

| | | |
|---|---|---|
| மையங்கள் | | 173 |
| திட்டத்தினால் பயன்பெறும் குழந்தைகள். | 0—2 | 5,673 |
| | 2—5 | 7,122 |
| கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | | 1,437 |

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்:

3.23. குழந்தைகள் ஊட்டச்சத்து திட்டங்களை அமுல்படுத்தி நடத்துவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடியாக விளங்குகிறது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம், இவ்வகையில் குறிப்பிட்ட கால அளவிற்கு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் 6 மாவட்டங்களில் செயல் பட்டு வருகிறது. இத்திட்டத்தில் குழந்தைகளின் ஊட்டச்சத்து அளவுகள் கண்காணிக்கப்பட்டு மிகவும் ஊட்டச்சத்து பற்றாக் குறைவாக உள்ள குழந்தைகளுக்கு இணை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

3.24. இத்திட்டத்தில் மேலும், சுகாதார அடிப்படையில் குழந்தைகளுக்கு தடுப்பு ஊசிகள் மற்றும் வைட்டமின் 'ஏ' பூச்சி நீக்க மருந்து போன்றவைகளும் அளிக்கப்படுகின்றன. மேலும் கர்ப்பிணிப் பெண்களுக்கும், தேர்வு அடிப்படையில் மருத்துவ ஆய்வுக்குப் பின் இணை உணவு வழங்கப்படுகிறது.

3.25. 1989-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் தேதியன்று இத்திட்டத்தின் முதல் பகுதி நிறைவு பெறுகிறது. இத் திட்டத்தின் மூலம் ஊட்டச்சத்து பற்றாக் குறை மிகவும் அதிகமான அளவில் குறைக்கப்பட்டுள்ளது என தனிப்பட்ட முறையில் மேற் கொள்ளப்பட்ட நிறைவு ஆய்வு தெரிவிக்கிறது.

3.26. உலகவங்கி உதவியுடன் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம் கொட்டாம்பட்டி வட்டாரத்தில் சோதனை முறையில் 1980-ம் ஆண்டு நவம்பர் திங்களில் செயல் படத் துவங்கியது. படிப்படியாக இத்திட்டம் மதுரை, திண்டுக்கல் காயிதே மில்லத், பசும்பொன் தேவர் திருமகன், காமராசர், இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, வட ஆற்காடு மற்றும் செங்கை அண்ணா ஆகிய ஒன்பது மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

3.27. இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த ஒதுக்கீடு ரூ.55.78
கோடியாகும். இத்திட்டத்தின் குறிக்கோள் ஊட்டச் சத்து
நிலையினை மேம்படுத்த அரசு எடுத்து வரும் முயற்சிகளை
மேலும் திறன் உடையதாக்கி அம்முயற்சிகளின் பயனை அதிகப்
படுத்துவதாகும். ஊட்டச்சத்து குறைவினால் அதிகமாக பாதிப்பு
ஏற்படக்கூடிய 6 மாதம் முதல் 36 மாதங்கள் வரையிலான
குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைவினை போக்குவதின் மூலம்
இத்திட்டத்தின் குறிக்கோளை அடைய முதன் முறையாக மேற்
கொள்ளப்படுகிறது. மேலும் மற்றவயது வரம்பிலுள்ள குறிப்பாக
ஊட்டச் சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் மற்றும்
பாலூட்டும் தாய்மார்கள், பள்ளி செல்லும் வயதடையாத
குழந்தைகள் போன்றவர்களுக்கும் பயனளிக்கும் வகையில்
இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

3.28. ஆறு மாதம் முதல் 36 மாதங்களுக்குட்பட்ட எல்லா
குழந்தைகளின் எடையும் மாதாமாதம் எடுக்கப்பட்டு தேர்ந்
தெடுக்கப்பட்ட சத்து குறைவுள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணி
களுக்கும், தாய்மார்களுக்கும் இணை உணவு தரப்படுகிறது.
மேலும் குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை வைட்டமின்
'ஏ' திரவமும், நான்கு மாதங்களுக்கு ஓர் முறை வயிற்றுப் பூச்சி
நீக்க மருந்தும் தரப்படுகிறது. பொது சுகாதாரத் துறையின் கீழ்
பணியாற்றும் பல நோக்கு சுகாதாரப் பணியாளர்கள், குழந்தை
களுக்கு தடுப்பு ஊசிகள் போடுகின்றனர்.

3.29, ஒவ்வொரு 5,000 மக்கள் தொகைக்கும் ஒரு சுகாதார
துணை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஒரு ஆண்
பல்நோக்கு சுகாதாரப் பணியாளரும், ஒரு பெண் பல்நோக்கு
சுகாதாரப் பணியாளரும் பணி புரிகின்றனர். சுகாதார மேற்
பார்வையாளர்களும், சுகாதார ஆய்வாளர்களும் இவர்களது
பணிகளை கண்காணிக்கின்றனர். அவர்கள் யாவரும் அண்மை
யிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ
அலுவலரின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றனர்.

ஒன்பது ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்ட மாவட்டங்
களில 1,600 துணை சுகாதார நிலையங்கள் கட்ட திட்டமிடப்
பட்டு அவை அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

3.30. இத்திட்டத்தின் தொடர்பு பிரிவு கிராம சமுதாயத்தின்
சுகாதாரம் மற்றும் உணவுப் பழக்கங்களையும் மாற்றி அமைக்க
முயற்சி செய்வதால் இத்திட்டம் வெற்றி பெறுவதற்கான ஒரு
இன்றியமையாத அமைப்பாக இப்பிரிவு கருதப்படுகிறது.
கருத்தரங்குகள், பயிற்சி தகவல் கூட்டங்கள், முனைப்பு
இயக்கங்கள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம், திட்டத்தின்
பல்வேறு பணியாளர்களுக்கும் திட்டத்தில் குறிக்கோள், செயல்
முறை முதலானவற்றை போதித்து வருகின்றது. திரைப்படங்கள்,
சுவரொட்டிகள், சுவர் வண்ண விளம்பரங்கள், செய்தித் தாள்கள்
ஆகியவற்றைப் பயன்படுத்தி திட்டம் சம்பந்தமான செய்திகள்
பரப்பப்படுகின்றன.



தகவல் தொடர்பு மையம்:

3.31. முதியோர் கல்வி மற்றும் ஊட்டச் சத்து, மக்கள்
நலம் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளை தயாரிப்பதற்கும்
இது தொடர்பான ஒளி/ஒலி நாடாக்களை தயாரித்து வழங்கு
வதற்கும் ஒரு கேந்திரமாக, ஒரு தகவல் தொடர்பு மையம்
தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டத்தின் கீழ்
செயலாற்ற சென்னைக்கருகில் ரூ. 87 லட்சத்தில் கட்டப்பட்டு
வருகிறது.

3.32. 1988 டிசம்பர் மாதத்தில் இத்திட்டத்தின்கீழ் 6-36
மாத வயதிலுள்ள 5.90 லட்சம் குழந்தைகள் எடை எடுக்கப்
பட்டார்கள். மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையாகிய
6.41 லட்சத்தில், எடை எடுக்கப்பட்ட குழந்தைகள் விழுக்காடு
பாராட்டப்படும் அளவிற்கு 92 சதவிகிதமாக பெருகியுள்ளது.
எடை எடுக்கப்பட்ட மொத்த குழந்தைகளில் மிகவும் ஊட்டச்
சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்ட 1.54 லட்சம் குழந்தைகட்கு
இணை உணவு வழங்கப்பட்டது. மொத்த குழந்தைகளின்
எண்ணிக்கையில் இணை உணவு பெறும் குழந்தைகள் கிட்டத்தட்ட
23 சதவிதமாகும். மூன்று மாதங்கள் உணவு பெற்று போதிய
எடை அதிகரிப்பால் திட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட
குழந்தைகளின் விழுக்காடு 65 ஆகும். கடந்த ஆறு மாதங்களில்
75 சதவிகித குழந்தைகளுக்கு கண் பார்வை பராமரிக்கும்
பொருட்டு வைட்டமின் 'ஏ' திரவம் வழங்கப்பட்டது. மேலும்
80 சதவிகித குழந்தைகளுக்கு, வயிற்றுப்பூச்சி நீக்க மருந்து
வழங்கப்பட்டது ஒரு சிறப்பு அம்சமாகும்.

3.33. இத்திட்டம் நடப்பு ஆண்டில் (1989–90) தொடர்
வதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊட்டச் சத்துத்
திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து திட்டங்களையும்
ஒருங்கிணைத்து மாநில அளவில் செயல்படுத்த வேண்டி
திட்டங்கள் வரையப்பட்டுள்ளன. அதன்படி 6 முதல் 36 மாதங்
களில் உள்ள குழந்தைகளில் ஊட்டச் சத்துப் பற்றாக் குறையினை
தமிழ்நாடு முழுவதுமாக 1989–90 முதல் படிப்படியாக நீக்குவது
இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு முழுமைக்கான
இத்திட்டத்தின் திட்ட வரைவு அரசின் பரிசீலனையில் உள்ளது.

அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள்

3.34. 5 முதல் 18 வயது வரையிலான ஆதரவற்ற
குழந்தைகளை பராமரிப்பதற்காக தமிழ்நாடு முழுவதும் 22 அரசு
ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் இயங்கி

வருகின்றன. மேற்படி இல்லங்கள் இயங்கி வரும் இடங்களும் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| இடங்கள். (1) | குழந்தைகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. சென்னை-3 .. .. | 250 |
| 2. சென்னை-10 .. .. | 250 |
| 3. காஞ்சிபுரம் .. .. | 250 |
| 4. திருவண்ணாமலை .. | 250 |
| 5. கடலூர் .. .. | 250 |
| 6. தஞ்சாவூர் .. .. | 250 |
| 7. திருச்சிராப்பள்ளி .. | 250 |
| 8. புதுக்கோட்டை .. | 250 |
| 9. மதுரை .. .. | 250 |
| 10. திண்டுக்கல் .. .. | 250 |
| 11. மானாமதுரை .. .. | 250 |
| 12. விருதுநகர் .. .. | 250 |
| 13. இராமநாதபுரம் .. | 250 |
| 14. ஸ்ரீவைகுண்டம் .. | 250 |
| 15. நாகர்கோவில் .. .. | 250 |
| 16. தர்மபுரி .. .. | 250 |
| 17. சேலம் .. .. | 250 |
| 18. ஈரோடு .. .. | 250 |
| 19. கோயம்புத்தூர் .. | 250 |
| 20. பெந்தட்டி .. .. | 250 |
| 21. ஆத்தூர் (சேலம் மாவட்டம்) | 250 |
| 22. திக்கணங்கோடு (கன்னியாகுமரி மாவட்டம்). | 100 |
| | 100 |

3.35. இவ்வில்லங்களில் குழந்தைகளுக்கு இலவச உணவு, உறைவிடம், உடை, பாடநூல், குறிப்பேடுகள், மருத்துவப் பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகியவை அளிக்கப்படுகின்றன. இல்லத்திலேயே 1 முதல் 5-ம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்



அளிக்கப்படுகிறது. ஆறாம் வகுப்பு முதல் குழந்தைகள் அரசு/மாநகராட்சி/நகரிய பள்ளிகளுக்கு உயர்கல்வி பயில அனுப்பப்படுகின்றனர். 1989–90 ஆம் ஆண்டிற்கு ரூ. 85.91 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.36 உணவிற்காக ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 60-ம் உடைக்காக ஓராண்டிற்காக ஒரு குழந்தைக்கு ரூ. 25 வீதமும் படுக்கை பொருட்களுக்காக ரூ. 20 வீதமும் வழங்கப்படுகின்றன. குளிர் பிரதேசமான நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லக் குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு ஆண்டொன்றுக்கு உடைக்காக ரூ. 60 வீதமும் படுக்கைப் பொருட்களுக்காக ரூ. 50 வீதமும் வழங்கப்படுகிறது.

3.37. 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 35 வீதமும், 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 50 வீதமும், 9 மற்றும் 10-ம் வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 90 வீதமும், மேல்நிலை வகுப்பில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 190 வீதமும் பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வாங்கி வழங்கப்படுகிறது. தற்பொழுது மாதாந்திர உணவூட்டு செலவினமாகிய ரூ. 60-க்குப் பதிலாக உணவு அளவிட்டு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

3.38. பெண் கைதிகளின் குழந்தைகளும் இவ்வில்லங்களில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

3.39. சென்னை–3, சேலம், மதுரை மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் தையல் மற்றும் இதர கைவேலைகளில் பயிற்சி அளிக்க தனி பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

பராமரிப்பும் பாதுகாப்பும் தேவையான குழந்தைகளுக்கான மத்திய/மாநில அரசின் நலத்திட்டங்கள்.

3.40. ஆதரவற்ற குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்து தமது சொந்த குடும்பங்களில் வசிப்பது போன்ற உணர்வில் அவர்களை வாழ வைக்கும் நோக்கத்துடன் 1974–75-ல் குடில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 25 குழந்தைகளைக் கொண்ட பிரிவு ஒரு குடில் ஆகும். ஒவ்வொரு குடிலும் ஒரு இல்லத்தாயின் பொறுப்பிலிருக்கும். இவ்வில்லத்தாய் தனது குடிலிலுள்ள குழந்தைகளை தன் குழந்தை போல் பாவித்து அவர்களுக்கு போதிய உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி, கல்வி வசதி, பொழுதுபோக்கு வசதி முதலியன வழங்கி அறிவுரை கூறி வழிகாட்டியாக நடந்து கொள்வார்.

3.41. குடில் திட்டப்படி குழந்தைகளை பராமரிக்கவும் இக்குடில்களை கட்டவும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட தொகையில் 90% மானியமாக வழங்கப்படுகிறது. 10% செலவை நிறுவனமே ஏற்க வேண்டும். 90% மானியத் தொகை மத்திய அரசாலும் மாநில அரசாலும் 50 : 50 என்ற விகிதத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

1-4-1979-க்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவரும் நிறுவனங்களிலுள்ள குழந்தைகளுக்கான முழு பராமரிப்புத் தொகையும் மாநில அரசே ஏற்கிறது. திருத்தியமைக்கப்பட்ட மத்திய அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட நிதி உதவித் திட்டம் தமிழ்நாட்டில் 1-4-1987 முதல் அமுல்படுத்தப்படுகிறது. திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்படி தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவிகள் பற்றிய விவரம் பின்வருமாறு :—

தொடரும் செலவு.

| | |
|---|---|
| 1. உணவு, உடை மற்றும் இதர செலவினங்களுக்காக. | ஒரு குழந்தைக்கு மாத மொன்றிற்கு ரூ. 150 விதம். |
| 2. வாடகை .. .. | ஒரு குழந்தைக்கு மாத மொன்றிற்கு ரூ. 40 விதம் (கட்டடம் கட்ட மானியம் வழங்கப்பட்டவுடன் இது நிறுத்தப்படும்). |

தொடராச் செலவு.

| | |
|---|---|
| இருக்கைகள், படுக்கைகள், மரச் சாமான்கள் முதலியவற்றிற்காக. | குழந்தை ஒன்றுக்கு ரூ. 500 விதம். |

கட்டடம் கட்டத் தொடங்கியதும் ஒரு குழந்தைக்கு ரூ. 6,000 விதம் அல்லது பொதுப்பணித்துறையால் நிர்ணயம் செய்யப்படும் தொகை இதில் எது குறைவானதோ அத்தொகை கட்டடம் கட்ட மானியமாக வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 158 தொண்டு நிறுவனங்கள் இவ்வாறு மானியம் பெறுகின்றன. இத்திட்டத்தினால் 13,330 ஆதரவற்ற குழந்தைகள் பயனடைகின்றனர். 1989–90 ஆம் ஆண்டிற்கு ரூ. 363.68 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தின் தஞ்சைக் கிளையால் நடத்தப்படும் குழந்தைகள் நல இல்லத்திற்கு மானியம் அளித்தல்.

3.42. இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தில் தஞ்சைக் கிளையால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லத்தின் நிர்வாகம் 8–11–1982 முதல் சீர்திருத்தப்பள்ளித் துறையிலிருந்து சமூகநலத் துறைக்கு மாற்றப்பட்டு 1982–83-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 30,000 பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

இரும்பு ஊட்டச் சத்து உப்பு தயாரிக்கும் திட்டம்.

3.43. குழந்தைகளிடமும், கர்ப்பிணிகளிடமும் பெருகி வரும் இரும்பு சத்து குறைவினால் ஏற்படும் இரத்த சோகையைத் தடுப்பதற்காக இந்திய அரசு தனது உணவுத் துறை மூலம்



சாதாரண உப்புடன் இரும்பு சத்தை சேர்க்கும் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. தமிழக அரசு பல்வேறு சத்துணவு திட்டங்களிலும் இரும்பு சத்து கலந்த உப்பை வழங்குவதற்கு ஆர்வம் கொண்டுள்ளதால் இந்த இரும்பு ஊட்டச் சத்து உப்பை தயாரிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் தமிழ்நாடு உப்பு கழகத்தின் துணையுடன் ஒரு திட்டத்தினை வரைந்துள்ளது. மத்திய அரசு இத்திட்டத்திற்கு தேவையான கருவிகள் மற்றும் வேதியல் பொருள்களை யுனிசப் மூலம் வழங்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளது.

3.44. இத்தொழிலகத்திற்குத் தேவையான கட்டடங்களை கட்டுவதற்கு ரூ. 5.4 இலட்சமும், மின்சாதனம் பொருத்துவதற்கு ரூ. 1.10 இலட்சமும் கடனாக மத்திய அரசால் தமிழ்நாடு உப்பு வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இரும்பு ஊட்டச் சத்து உப்பு தயாரிக்கும் தொழில்கூடத்திற்கான கட்டடங்கள் கட்டும் பணி மார்ச் 1987-ல் முடிவு பெற்றுள்ளது. இயந்திர சாதனங்கள் ஏப்ரல் 1987-ல் இராமநாதபுரம் மாவட்டம் வள்ளி நோக்கத்தில் பொருத்தப்பட்டு, ஜனவரி 1988-ல் வெள்ளோட்டம் பார்க்கப் பட்டது. இக்கருவிகள் மூலம் தயாரிக்கும் ஊட்டச் சத்து உப்பின் திறன் நாளொன்றுக்கு 3 பணி மாற்று முறைகளிலும் 62 மெட்ரிக் டன் ஆகும். அதாவது ஒரு ஆண்டில் 250 வேலை நாட்களில் 15,000 மெட்ரிக் டன் உற்பத்தித் திறனை உடையதாகும். மேலும், உற்பத்தி திறன் அதிகம் பெற ஒரு நவீன உலர் சாதன கருவியை விரைவில் பொருத்தப்படவுள்ளது. அதன்பின் வணிக ரீதியிலான உற்பத்தியை துவக்க முடியும்.

3.45. தமிழக அரசு முதல் ஆண்டு உற்பத்தி திறனை 6,900 மெட்ரிக் டன்னாக வரையறுக்க முடிவு செய்துள்ளது. இந்த உப்பினை அரசின் பல்வேறு துறைகளின் நிறுவனங்களுக்கு வழங்கவிருக்கிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் இரும்பு ஊட்டச் சத்து உப்பினைக் கொண்டு தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம், அரசின் மூலம் இயங்கும் மாணவர்களுக்கான தங்கும் விடுதிகள், மருத்துவத் துறையின்கீழ் உள்ள மருத்துவ மனைகள் மற்றும் சிறைகள் ஆகிய நிறுவனங்களுக்குத் தேவையான உப்பின் அளவை இத்திட்டம் நிறைவு செய்யும். மூலதன உதவியான ரூ. 28 இலட்சத்தை 6 மாதங்களுக்கு வழங்குமாறு தமிழக உப்பு கழகம் மத்திய அரசினை கேட்டுக் கொண்டுள்ளது.

3.46. இந்திய அரசு ரூ. 92,000-ம் மானியமாக இதுவரை வழங்கியுள்ளது. இது ஒரு மாத உற்பத்தி செலவுக்கு உரியதாகும் மானியத்திற்கு பதிலாக 3 மாத உற்பத்திக்குரிய செலவினத்தை முன் பணமாக தமிழக உப்பு கழகத்திற்கு வழங்க இயலும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## அத்தியாயம் 4.

### ஊனமுற்றோர்க்கான நலன் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்.

4.1. சமூக நல இயக்ககத்தில் ஊனமுற்றோருக்கான வாரியம் ஒன்று உள்ளது. உடல் ஊனம், பார்வையின்மை, காது கேளாமை, மன வளர்ச்சி குன்றியமை போன்று ஊனத்தில் பலவகை உண்டு. இவர்களை அடையாளம் கண்டு இவர்களின் மறுவாழ்வுக்குத் தேவையான பணிகளை செய்து தருவதற்காக 1971-ல் உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியம் தொடங்கப்பட்டது. இவ்வாரியம் 1978-ல் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையிலிருந்து சமூக நலத் துறைக்கு மாற்றப்பட்டது. இவ்வாரியம் பிப்ரவரி 1984 முதல் தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டம் 1975-ன்படி பதிவு செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் ஏறத்தாழ 10 லட்சம் ஊனமுற்றோர் உள்ளனர். ஒவ்வொரு வகையான ஊனமுடையவர்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| பார்வையற்றோர் | .. | 1.92 லட்சம் |
| காது கேளாதோர் | .. | 2.05 லட்சம் |
| உடல் ஊனமுற்றோர் | .. | 5.88 லட்சம் |
| மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் குணமடைந்த தொழு நோயாளிகள் | .. | 0.15 லட்சம் |
| மொத்தம் | .. | 10.00 லட்சம் |

இவர்களில் 80,000 பேர் பள்ளி செல்லும் வயதுடையவர்கள்.

ஊனமுற்றோரின் நலனுக்காகவும், அவர்களின் மேம்பாட்டிற்காகவும் பின்வரும் திட்டங்கள் உள்ளன :—

1. சிறப்புக் கல்வி;
2. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டங்கள்;
3. வேலையின்மைக்கான நிவாரணத் தொகை வழங்குதல்;
4. உதவிக் கருவிகள் வழங்குதல்;
5. தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல்; மற்றும்
6. ஊனமுற்றோரில் சில பிரிவுக்கு வெவ்வேறு சலுகைகள் வழங்குதல்.



### 4.2. ஊனமுற்றோருக்கான சிறப்புப் பள்ளிகள்:

பள்ளி செல்லும் பருவத்திலுள்ள 5 முதல் 10 வயது வரையுள்ள 80,000 குழந்தைகள் தமிழ்நாட்டில் உள்ளனர். இவர்களுக்காக மாநிலத்தில் 50 சிறப்புப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 23 அரசுப் பள்ளிகள், இரண்டு பள்ளிகள் நகராட்சியாலும், 25 பள்ளிகள் அரசு மானியம் பெற்று தனியாராலும் நடத்தப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 5,000 ஊனமுற்ற குழந்தைகள் இச்சிறப்புப் பள்ளிகளில் பயின்று வருகின்றனர். அரசால் நடத்தும் பள்ளிகள் அனைத்திலும் இலவசமாக உணவும் உறைவிடமும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இவர்களுக்கு இலவசமாக சீருடையும் வழங்கப்படுகிறது. 1989–90 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 83.22 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் இயங்கி வரும் பல்வேறு வகையான பள்ளிகள் பற்றிய விவரம் வருமாறு :—

| வரிசை எண். (1) | நிறுவனத்தின் வகை. (2) | அரசுப் பள்ளிகள். (3) | மானியம் பெறும் பள்ளிகள். (4) | நகராட்சிப் பள்ளிகள். (5) | மொத்தம். (6) |
|---|---|---|---|---|---|
| 1. | பார்வையற்றோர் பள்ளிகள் | 11 | 9 | .. | 20 |
| 2. | காதுகேளாதோர் பள்ளிகள் | 10 | 11 | 2 | 23 |
| 3. | மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகள். | 1 | 2 | .. | 3 |
| 4. | தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பள்ளி. | .. | 1 | .. | 1 |
| 5. | உடல் ஊனமுற்றோருக்கான பள்ளிகள். | 1 | 2 | .. | 3 |
| | மொத்தம் .. | 23 | 25 | 2 | 50 |

ஊனமுற்றோருக்காக அரசால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளும், அப்பள்ளிகளில் தற்போது கற்பிக்கப்படும் வகுப்பு விவரங்களும்:

| வரிசை எண். (1) | சிறப்புப் பள்ளிகள். (2) | கற்பிக் கப்படும் வகுப்பு விவரம். (3) |
|---|---|---|
| | **பார்வையற்றோருக்கான பள்ளிகள்:—** | |
| 1. | அரசு பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளி, பூவிருந்தவல்லி. | 1—12 |
| 2. | அரசு பார்வையற்றோர் பள்ளி, திருச்சி (மகளிர்). | 1—10 |
| 3. | அரசு பார்வையற்றோர் பள்ளி, தஞ்சாவூர் .. | 1—8 |
| 4. | அரசு பார்வையற்றோர் பள்ளி, சேலம் .. | 1—6 |
| 5. | அரசு பார்வையற்றோர் பள்ளி, மதுரை .. | 1—5 |
| 6. | அரசு பார்வையற்றோர் பள்ளி, கடலூர் .. | [illegible] |
| 7. | அரசு பார்வையற்றோர் பள்ளி, சிவகங்கை .. | 1—5 |
| 8. | அரசு பார்வையற்றோர் பள்ளி, நாகர்கோவில் | 1—5 |
| 9. | அரசு பார்வையற்றோர் பள்ளி. கோயம்புத்தூர் | 1—5 |
| 10. | அரசு பார்வையற்றோர் பள்ளி, புதுக்கோட்டை | 1—5 |
| 11. | அரசு பார்வையற்றோர் பள்ளி. தருமபுரி | 1—5 |
| | **காதுகேளாதோருக்கான பள்ளிகள்:** | |
| 1. | அரசு காதுகேளாதோருக்கான மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர் | 1—12 |
| 2. | அரசு காதுகேளாதோர் உயர்நிலைப்பள்ளி, தருமபுரி | 1—9 |
| 3. | அரசு காதுகேளாதோர் உயர்நிலைப்பள்ளி, கடலூர் | 1—7 |
| 4. | அரசு காதுகேளாதோர் உயர்நிலைப்பள்ளி, புதுக்கோட்டை | 1—7 |
| 5. | அரசு காதுகேளாதோர் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம் | 1—6 |
| 6. | அரசு காதுகேளாதோர் பள்ளி, சேலம் | 1—5 |
| 7. | அரசு காதுகேளாதோர் பள்ளி, ஈரோடு | 1—5 |
| 8. | அரசு காதுகேளாதோர் பள்ளி, விருதுநகர் | 1—5 |
| 9. | அரசு காதுகேளாதோர் பள்ளி, ஊட்டி | 1—5 |
| 10. | அரசு காதுகேளாதோர் பள்ளி, சென்னை | 1—5 |
| | **அரசு கை கால் ஊனமுற்றோர் பள்ளி:** | |
| 1. | அரசு கை கால் ஊனமுற்றோர் பள்ளி, மதுரை | 1—5 |
| | **அரசு மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி:** | |
| 1. | அரசு மனவளர்ச்சி குன்றியோருக்கான நிறுவனம், குரோம்பேட்டை, சென்னை. | 1—5 |



4.3. பார்வையற்ற பெண்களுக்கென்று தனியாக மேல்நிலைப் பள்ளி ஒன்று திருச்சியில் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 170 பெண்கள் பயின்று வருகின்றனர்.

4.4. காது கேளாத குழந்தைகளுக்காக 1988—89ல் மாவட்டத்திற்கு ஒன்று விதம் 20 முன் பருவப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஊமைத் தன்மைதான் காது கேளாமைக்குரிய மூலகாரணம் என்பதை உணர்ந்து, சிறுபருவத்திலிருந்தே கல்வி கற்பிப்பதன் மூலம் பேச முடியாமையை குறைக்கலாம் என்பதால் இம்முன் பருவக் கல்வி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன, இவ்வகுப்புகளில் 200 குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

மாணவர்களுக்கான உதவித் தொகை:

(அ) தமிழ்நாடு மாநில அரசு உதவித் தொகை:

4.5. ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்காக மாநில அரசால் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு குழந்தைக்கு ரூ. 10 முதல் ரூ. 84 வரை அவர்கள் பயிலும் வகுப்பிற்கேற்ப இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1981-82 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறப்புப் பள்ளிகளிலும், பிற பள்ளிகளிலும் பயின்று வரும் ஏறத்தாழ 8,400 ஊனமுற்றோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைகின்றனர். 1989-90 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 3.87 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்திய அரசு உதவித் தொகை:—

4.6. ஒன்பதாம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளில் பயின்று வரும் மாணவர்களுக்கு இந்திய அரசு உதவித் தொகை வழங்கப்படுகிறது. கல்லூரிகளில் பயிலும் ஊனமுற்றோருக்கும், தொழில் நுட்பக் கல்வி பயிலும் ஊனமுற்றோருக்கும் இவ்வுதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வுதவித் தொகை அவர்கள் பயிலும் வகுப்புக்கு ஏற்ப மாதம் ரூ. 85 முதல் ரூ. 240 வரை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் ஏறத்தாழ 2,000 ஊனமுற்ற மாணவ-மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் பயனடைகின்றனர். 1989-90 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 15.48 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு மண்டல பிரெய்லி அச்சகம்:

4.7. பார்வையற்றோருக்கான பிரெய்லி புத்தகங்கள் அச்சடித்து வழங்கும் பொருட்டு பூவிருந்தவல்லி பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தனி அச்சகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அரசு மானியம் பெற்று இயங்கும் பள்ளிகளுக்குத் தேவையான புத்தகங்களை இவ்வச்சகம் வெளியோரித்து வருகிறது. தற்போது இப்புத்தகங்கள் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு விற்பனை செய்யப்படுகிறது. 1989-90 முதல் அரசு பள்ளிகளுக்கும், அரசு உதவியுடன் இயங்கும் பள்ளிகளுக்கும் இப்புத்தகங்கள் இலவசமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 2,000 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர். 1989–90-ம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 3.68 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பார்வையற்றோருக்கான ஒலிப்பதிவு நாடா நூல் நிலையம்:

4.8. 1988–89 ஆம் ஆண்டில் ரூ. 8 லட்சம் செலவில் பார்வையற்றோருக்கென ஒலிப்பதிவு நாடா நூல் நிலையமொன்றுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. பள்ளி பாட நூல்கள் மற்றும் இதர புத்தங்கள் ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்து பிற நூல் நிலையங்களைப் போன்று பார்வையற்ற மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதற்காக 1989–90ல் எல்லா சிறப்புப் பள்ளிகளுக்கும் 100 டேப் ரிக்கார்டர்கள் வழங்கப்பட உள்ளன.

பார்வையற்றோர் காதுகேளாதோர் மற்றும் மன வளர்ச்சிக் குன்றியோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டங்கள்.

4.9. ஊனமுற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் சிறப்புத் திட்டமொன்று அரசாலும், தொண்டு நிறுவனங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றது. இப்பயிற்சி நிலையங்களின் விவரம் பின்வருமாறு:—



| வரிசை எண்ணும் நிறுவனத்தின் வகையும். | அரசால் நடத்தப்படுபவை, | மானியம் பெறும் பள்ளிகளால் நடத்தப்படுபவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 பார்வையற்றோர் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நிலையம், பூவிருந்தவல்லி. | 1 | .. | 1 |
| 2 காதுகேளாதோர் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நிலையம், சென்னை–6. | .. | 1 | 1 |
| 3 மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆசிரியர் பயிற்சி நிலையம், சென்னை–10 | .. | 1 | 1 |
| மொத்தம் .. | 1 | 2 | 3 |

4.10. மனவளர்ச்சி குன்றியோருக்கான நிறுவனம்:

சென்னைக்கருகிலுள்ள குரோம்பேட்டையில் மனவளர்ச்சி குன்றியோருக்கான ஒரு நிறுவனம் பிப்ரவரி 1984 முதல் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதியுடன் கூடிய சிறப்பு கல்வி இங்கு வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 5.68 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.11: பார்வையிழந்தோருக்கான பள்ளி ஆசிரியர் பயிற்சி:

பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மத்திய அரசின் நிதி உதவியுடன் நடைபெற்று வரும் மண்டல பயிற்சிப் பிரிவில் 20 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். நான்கு தென் மாநிலங்களிலிருந்து இப்பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகின்றனர். மேலும் மாநில அரசால் நடத்தப்படும் சிறப்புப் பிரிவில் 15 ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1989-90 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 2.53 லட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காது கேளாதோர் ஆசிரியர் பயிற்சி.

4.12. ஒவ்வொரு ஆண்டும் சென்னை சிறுமலர் காதுகேளா
தோர் மேல்நிலைப்பள்ளியில் 10 பேருக்கு காதுகேளாதோருக்
கான ஆசிரியர் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக்
கான முழுச் செலவையும் மானியமாக அரசால் வழங்கப்படு
கிறது. புதிதாக சிறப்புப் பள்ளிகளில் பணியமர்த்தப்பட்ட
ஆசிரியர்களுக்கு இப்பயிற்சித் திட்டம் பயனளிக்கிறது. இத்
திட்டத்திற்காக 1989-9 ஆம் ஆண்டில் ரூ. 1.30 லட்சம்
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி ஆசிரியர் பயிற்சி:

4.13. மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி ஆசிரியர் பயிற்சி
சென்னை பால விஹாரில் நடத்தப்படுகிறது. இதில் ஒவ்
வொரு ஆண்டும் 20 ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர்.
இந்நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 68,000 அரசு மானியம்
வழங்கப்படுகிறது.

ஊனமுற்றோருக்கான நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி பணிமனை:

4.14. செங்கை அண்ணா மாவட்டத்தில் முட்டுக்காடு
என்னுமிடத்தில் 1975 முதல் ஒரு நவீன பயிற்சி மற்றும் உற்
பத்திப் பணிமனை இயங்கி வருகிறது. இங்கு முச்சக்கர
வண்டிகள், சக்கர நாற்காலிகள், பெட்டிக் கடைகள்.
அலமாரிகள் போன்ற இரும்புப் பொருட்கள் தயாரிப்பதில் ஊன
முற்றோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 1988—89
ஆம் ஆண்டில் ஏறத்தாழ 2,300 முச்சக்கர வண்டிகளும். சக்கர
நாற்காலிகளும் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.
மேலும் இங்கு பயிற்சி முடிந்தவர்கள் தமிழ்நாடு மின் வாரியம்
பொதுப் பணித்துறை மற்றும் சமூக நலத்துறையில் பணிகளில்
அமர்த்தப்படுகின்றனர். இத்திட்டத்திற்காக 1989-90 ஆம்
ஆண்டில் ரூ. 20.20 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையம் கிண்டி:

4.15. கிண்டியில் 1967 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தொழில்
பயிற்சியில் வயது வந்த பார்வையற்றோருக்கு எளிய பொறியிய
லில் 6 மாத காலப் பயிற்சி நடத்தப்பட்டது. இவ்வகை பயிற்சி
தொழில் துறையினரின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடான வகையில்
அமையாததால் இப்பயிற்சியின் கால அளவு, பயிற்சியின் தன்மை
போன்றவற்றை மாற்றியமைக்கும் அவசியம் ஏற்பட்டது. எனவே
1981 உலக ஊனமுற்றோர் நாளில் உருவாக்கப்பட்ட திட்டங்
களில் ஒன்றாக 1982-83 முதல் இதனை ஒரு தொழிற் பயிற்சி
நிலையமாக மாற்றியமைக்கப்பட்டது. அதன்பின் இப்பயிற்சி



நிலையத்தில் பொறிப்பகுதி பொருத்துதல், புத்தகம் கட்டுதல்,
மின்கம்பி சுற்றுதல் போன்ற மூன்று தொழில்களில் பயிற்சி
அளிக்கப்படுகிறது. பொறிப் பகுதி பொருத்துதல், புத்தகம்
கட்டுதல் ஆகிய தொழில்களில் ஓராண்டு பயிற்சியும், மின்கம்பி
சுற்றுதலில் 6 மாத பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்
வொரு ஆண்டும் இப்பயிற்சி நிலையத்தில் 30 ஊனமுற்றோருக்கு
பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கா 1989-90 ஆம்
ஆண்டில் ரூ. 3.62 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இண்டியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காது
கேளாதோர்க்கென தனிப்பிரிவு அமைத்தல்.

4.16 சாதாரண மாணவர்களுடன் காதுகேளாதோர் போட்டி
யிட்டு வெவ்வேறு தொழில்நுட் பபயிற்சி வகுப்புகளில் சேர்ந்து
வேலை வாய்ப்பு பெற முடியாதென்பதை உணர்ந்து கிண்டியி
லுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதோருக்
கான ஒரு சிறப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இச்சிறப்புப் பிரி
வில் ஊனமுற்றோருக்கு 'பொருத்துநர்' தொழிலில் பயிற்சி அளிக்
கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 1989-90 ஆம்
ஆண்டில் ரூ. 0'54 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடசென்னை மற்றும் அம்பத்தூரிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்
களில் உடல் ஊனமுற்றோருக்காக 3 ஆவது சிப்ட் அறிமுகப்படுத்துதல்

4.17 உடல் ஊனமுற்றோருக்கு பயிற்சியளிக்க வடசென்னை
மற்றும் அம்பத்தூரிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் ஊன
முற்றோருக்காக 3-வது சிப்ட் தொடங்கப்பட்டுள்ளது. இத்
தொழிற் பயிற்சி நிலையத்தில் பிட்டர், மெஷினிஸ்ட், பிளம்பர்,
பெயிண்டர் மற்றும் வரைவாளர் போன்ற தொழில்களில் பயிற்சி
அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 34 உடல் ஊனமுற்
றோர் இங்கு பயிற்சி பெறுகின்றனர். இத்திட்டத்திற்காக்
1989-90 ஆம் ஆண்டில் ரூ. 0.46 லட்சம் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

பார்வையற்ற மகளிருக்கான தொழிற்கூடங்களுடன் கூடிய மறுவாழ்வு
மையம்

4.18 பார்வையற்ற மகளிருக்கு விடுதி வசதியுடன் கூடிய
மறுவாழ்வு மையம் ஒன்று 1978-ல் சென்னை நகரில் துவக்கப்
பட்டது. இம்மையத்தில் பார்வையற்ற மகளிருக்கு நெசவுத்
தொழிலும் சாக்கு கட்டி செய்தலிலும் பயிற்சி அளிக்கப்
படுகிறது. 40 வயதுக்குட்பட்ட பார்வையற்ற ஏழை மற்றும்
கைவிடப்பட்டவர்கள் இம்மையத்தில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு
6 மாத கால பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில்
மாதம் ரூ. 90 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.
பயிற்சிக்குப பின்னர் அங்கேயே வேலை வாய்ப்பளித்து அவர்கள்
செய்யும் பணிக்கேற்ற ஊதியம் கொடுக்கப்படுகிறது. இங்கு

தயாரிக்கப்படும் போர்வைகள், துண்டுகள் மற்றும் சாக்கு கட்டிகள் அரசு மருத்துவ மனைகளுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் போதுமான இடவசதி கிடைக்காததால் 1988 நவம்பர் முதல் இம்மையம் பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

மண்டல மறுவாழ்வு மையங்கள் :

4.19 ஊனமுற்றோர் பிரச்சினையை தனிக்கவனிப்புடன் தீர்ப்பதற்கென மத்திய அரசு நடத்துவது போன்று மாநில அரசு மூலம் ஒரு தனி அமைப்பு நிறுவப்பட்டது. இதுதான் மண்டல மறுவாழ்வு மையங்களாகும். இம்மையம் இருபது மாவட்டங் களிலும் பணிபுரியத்தக்க அளவில் சென்னை, வேலூர், தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய ஐந்து இடங்களில் இயங்கி வருகின்றன. இம்மண்டல மறுவாழ்வு மையங்கள் ஊனமுற் றோருக்கு மருத்துவம், வாழ்க்கை, பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் மறுவாழ்வு கிடைக்க ஏற்பாடு செய்து வருகின்றன.

4.20 ஒவ்வொரு மண்டல மறுவாழ்வு அலுவலரும் தனது மண்டலத்தில் அடங்கிய ஐந்து மாவட்டங்களிலுள்ள 2.5 லட்சம் உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிக்கும் பணிகளைச்செய்து வருகின்றனர். 1988–89 ல் 15 இளநிலை மறுவாழ்வு அலுவ லர்களை பணியமர்த்த அரசு அனுமதித்துள்ளது. 1980 முதல் பணியிலுள்ள 5 இளநிலை மறுவாழ்வு அலுவலர்கள் மற்றும் தற்போது அரசால் அனுமதித்துள்ள 15 இளநிலை மறுவாழ்வு அலுவலர்களும் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 20 மாவட்டங் களிலும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இத் திட்டத்திற்கென 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 19.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

ஊனமுற்ற மகளிருக்கான சாக்குகட்டி கூட்டுறவு சங்கங்கள் :

4.21 உடல் ஊனமுற்றோருக்காக தஞ்சாவூர், திருச்சி, வட ஆற்காடு மற்றும் மதுரையில் சாக்கு கட்டி உற்பத்திக்கான கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 1988–89 ஆம் ஆண்டிற்கு ரூ. 16.16 லட்சம் வழங்கப்பட்டது சுமார் 100 உடல் ஊனமுற்றோர்கள் இத்திட்டத்தினால் பயனடை வார்கள்.

ஊனமுற்றோருக்கு பெட்டிக் கடைகள் அமைப்பதற்கு உதவி அளித்தல்

4.22 ரயில் நிலையம், பேருந்து நிலையம் போன்ற முக்கிய இடங்களில் பெட்டிக் கடைகள் அமைத்து ஊனமுற்றோருக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் 1979 ல் அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின்படி பெட்டிக்கடைகள் வைக்க தகுதியான இடங்களை கண்டறிந்து ஒதுக்கீடு ஆணை பெற்று அவ்விடங்களில் பெட்டிக்கடை வைத்து நடத்த தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் ஊனமுற்றோருக்கு கடன் வசதி செய்து தரப்படுகிறது. இவ்வாறு கடன் பெறும் ஒவ்வொருவருக்கும் அவர்களின் கடன் தொகைக்கேற்ப ரூ. 250 முதல் ரூ 500 வரை அரசு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ஆண்டு தோறும் ரூ. 1.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.



ஊனமுற்றோருக்கு சுய வேலை வாய்ப்புக்காக வங்கி மூலம் கடன் உதவி அளித்தல.

4.23. இத்திட்டம் 1981 ல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் போது அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் படி ஊனமுற்றோர் சொந்தமாக தொழில் நடத்த தேசியமய மாக்கப்பட்ட வங்கிகள் மூலம் குறைந்த விகித வட்டியில் கடன் ஏற்பாடு செய்யப்படுகிறது. பெட்டிக் கடைத் திட்டத்தின் கீழ் உதவி பெறாத வேலையற்ற ஊனமுற்றோர்களே இத்திட்டத்தின் மூலம் பயன் பெற தகுதியுடையவர்கள். இவ்வாறு கடன் பெற்று தொழில் நடத்துபவர்களுக்கு அவர்கள் பெற்ற கடனில் 1/3 பங்கு மானியமாக வழங்கப்படுகிறது. அதிக படச மானியம் ரூ. 1,000 ஆகும்.

4.24. ஊனமுற்றோருக்கு பெட்டிக் கடைகள் அமைப்பதன் மூலமும் பிற தொழில்கள் மூலமும் சுயவேலை வாய்ப்பளிக்க உதவிடும் ஒரு திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி பெட்டிக் கடைகள் அமைத்தல், கறவை மாடுகள் வளர்த்தல், தையற்கடைகள், சைக்கிள் கடைகள், மிட்டாய் கடைகள், ஜவுளிக் கடைகள் நடத்துதல், ஆடு வளர்த்தல் கோழி வளர்த்தல் போன்ற தொழில்கள் செய்ய ஊனமுற்றோருக்கு ரூ. 9,000 வரை கடன் வசதி செய்து தரப்படுகிறது. இக்கடன் பெறுவோருக்கு அவர்கள் பெற்ற கடனில் 1/3 பங்கு அரசு மானியமாக வழங்கப்படுகிறது. அதிக பட்ச மானியம் ரூ. 3,000 ஆகும். இத்திட்டத்தின் கீழ் பயனடையும் ஊனமுற்றோர் 18 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவராகவும், இவர்களது குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கு குறைவாகவும் இருத்தல் வேண்டும். 1989–90 ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 8 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்குதல்.

4.25. மாநிலத்திலுள்ள பல்வேறு வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலை வாய்ப்பில்லாத பார்வையற்றவர்களுக்கு நிவாரணத்தொகை வழங்கும் திட்டம் 1981 முதல் செயல்படுத்தப் பட்டு வருகிறது. பள்ளி இறுதித் தேர்வு அல்லது அதற்கு மேல்

படித்தவர்கள் மற்றுஏ தொழில் பயிற்ம் கல்வி முடித்து, வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து மூன்றாண்டுகளுக்கு மேல் காத்திருப் போருக்கு மாதம் ரூ. 50 விதம் நிவாரணத் தொகை வழங்கப் படுகிறது. இத்திட்டம் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1988–89 ம் ஆண்டு முதல் வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை கீழ்க்கண்டபடி அளிக்கப்பட்டுள்ளது.

| | | ரூபாய். |
|---|---|---|
| 1. | பட்டதாரிகள்—முதுநிலைப்பட்டதாரிகள் மாதம் | 100 |
| 2. | புதுமுக வகுப்பு—மேல்நிலை வகுப்பு— பட்டப் படிப்பு முடிக்காதவர்கள். | 75 |
| 3. | இதர வகுப்புகள் | 50 |

இவ்விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப் பட்டவராகவும், வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டு முடித்தவர்களாகவும், இருத்தல் வேண்டும். தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மற்றும் மலை ஜாதியினருக்கு வயது வரம்பு 45 வரை தளர்த்தப்படும். இந்நிவாரணத் தொகை இவர்கள் தகுதி பெறும் காலத்திலிருந்து வேலை வாய்ப்பு கிடைக்கும்வரை அல்லது 40–45 வயது முடிக்கும்படி அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப் படும். 1989–90 ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 0.35 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்றோருக்கு கருவிகள் வழங்குதல் :

4.26 ஊனமுற்றோரின் தேவையறிந்து முச்சக்கர வண்டிகள் சக்கர நாற்காலிகள் மற்றும் காது கேட்கும் கருவிகள் வழங்கப் பட்டு வருகின்றன.

(அ) முச்சக்கர வண்டிகள் வழங்குதல் :

4.27 உடல் ஊனமுற்ற ஏழைகளுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கப்தட்டு வருகின்றன. இத்திட்டம் 1974–75 முதல் அமுல் படுத்தப்பட்டு வருகிறது. 1988–89 ஆம் ஆண்டில் 1,333 முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டிற்கு ரூ. 15 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) சக்கர நாற்காலிகள் :

நடக்க முடியாத ஊனமுற்ற நோயாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 1981-82 முதல் நடைபெற்று ளருகிறது. 1988–89 ஆம் ஆண்டில் 100 சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டிற்கு ரூ. 1 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



(இ) காதொலிக் கருவிகள் வழங்குதல் :

4.28 காதுகேளாத மற்றும் கேட்கும் திறன் குறைவாகவுள்ள குழந்தைகளுக்கும் பிற குழந்தைகளுக்கும் காதொலி கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1974–75 முதல் அமுல்படுத்தப்படுகிறது. 1987–88 ஆம் ஆண்டு வரை 23,540 காதொலிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. காது கேளாதவர் களுக்கு இலவசமாக காதொலிக் கருவிகள் வழங்க தேவையான தகவல்களை சேகரிக்க அனைத்து மாவட்டங்களிலும் முகாம்கள் நடத்தப்பட்டன. 1989–90 ஆம் ஆண்டிலும் காதொலிக் கருவிகள் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல் :

4.29 8 முதல் 14 வயது வரையுள்ள மூளை வளர்ச்சி குன்றிய காதுகேளாத, பார்வையற்ற, கைகால் ஊனமுற்ற குழந்தைகள், தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் தொழு நோயால் பாதிக்கப்பட்டோரின் குழந்தைகளை பராமரிப்பதற்காக தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. 1988-89 ல் 24 தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்பட் டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 741 ஊனமுற்ற குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கென 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 2.10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்ற மாணவர்களுக்கு பயணச் சலுகை வழங்குதல் :

4.30 ஊனமுற்ற மாணவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கு, மருத்துவ மனைக்கு சென்றுவர அரசு பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய சலுகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1981 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிற. 1988–89 ல் 2400 ஊன முற்றோர் இதன் மூலம் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டத் திற்கென 1989–90 ஆம் ஆண்டிற்கு ரூ. 5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

செயற்கை உறுப்பு துணை நிலையம் மதுரை :

4.31 உறுப்புகள் பாதிக்கப்பட்ட 100 குழந்தைகளுக்கு உதவு கின்ற வகையில் செயற்கை உறுப்பு துணை நிலையம் ஒன்று மதுரையில் நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையத்தில், கல்வி, அறுவை சிகிச்சை உடற்பயிற்சி மற்றும் உதவிக் கருவிகள் வழங்கப்படு கின்றன. ஒரு உடற்கூறு நிபுணர் மற்றும் பணியாளர்களால் இந்நிலையம் நடத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்கென 1989-90-ம் ஆண்டில் ரூ. 1.56 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பார்வையற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் பார்வை உளள வர்களுக்கான சலுகைகள்.

4.32 தற்போது நடைமுறையில் உள்ள கலப்பு மணம் புரிந்து கொள்பவருக்கு அளிக்கப்படும் சலுகைகளான 8 கிராம் தங்கம், ரூ. 4,050 ரொக்கத தொகை மற்றும் திருமணச் செலவுக்காக

ரூ. 300 பார்வையற்றோரை மணந்துகொள்ளும் பார்வையுள்ளோ
ருக்கு வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்
மூலம் ஒவ்வொரு ஆண்டும் 20 தம்பதியர் பயனடைகின்றனர்.

**இத்திட்டம் 1987—88 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது மாவட்ட மறுவாழ்வு மையம் செங்கல்பட்டு.**

4.33 மத்திய அரசும், அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசின்
ஊனமுற்றோர் ஆராய்ச்சி நிலையமும் சேர்ந்து ஊனமுற்றோருக்கு
விரிவான மறுவாழ்வு பணிகள் செய்வதற்கான ஒரு முன்னோடி
திட்டத்தை தீட்டியுள்ளது. மாவட்ட மறுவாழ்வு மையம் என்ற
இத்திட்டம் முதல் கட்டமாக செங்கை-அண்ணா மாவட்டத்தி
லுள்ள காட்டாங்குளத்தூர், திருக்கழுக்குன்றம் ஆகிய இரு வட்டா
ரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் குதியில்
நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள பணிகள் தொடங்கப்
பட்டுள்ளன. ஊனமுற்ற நடர்கள் ஒரு மருத்துவ நிபுணர் குழுவால்
பரிசோதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை உடனடியாக வழங்கப்
படுகின்றன. இத்திட்டப் பகுதியில் சிறப்புப் பள்ளிகள் தொடங்
கவும் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தவும் ஊனமுற்றோருக்கு
வேலைவாய்ப்பு கிடைக்கத்தக்க அளவிலான தொழில் கூட்டங்களை
அமைக்கவும் தொண்டு நிறுவனங்களுக்கு மத்திய அரசு மானியம்
வழங்குகிறது.

4.34 இத்திட்டத்தின் கால அளவு 5 ஆண்டுகளாகும்.
இதற்கான செலவினங்கள் மாநில அரசால் முதலில் ஏற்கப்பட்டு
நிதியாண்டு இறுதியில் மத்திய அரசிடம் மீளப் பெறப்படுகிறது.
இதுவரை 912 ஊனமுற்றோர் இத்திட்டத்தின் மூலம் உதவி
பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கென 1989—90 ஆம் ஆண்டில்
ரூ. 8.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பார்வையற்ற மாணவர்களுக்கு தேர்வின்போது எழுத்துத்துணை உதவியாளர்.**

4.35 10 முதல் 12 வகுப்பு வரை பயிலும் பார்வையற்ற
மாணவர்களுக்கு தேர்வின்போது எழுத்துத்துணை உதவியாளர்கள்
அனுமதிக்கப்படுகின்றனர். இந்த உதவியாளர்களுக்கு தேர்வு
ஒன்றுக்கு ரூ. 6 விதம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம்
ஒவ்வொரு ஆண்டும் 200 மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.
1989-90 ம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 0.20 இலட்சம்
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உடல் ஊனமுற்றோர் பயன்படுத்தும் மோட்டார் பொருத்திய ஊர்தி களுக்கு நில எண்ணெய்க்காக மானியம் வழங்குதல்.**

4.36 உடல் ஊனமுற்றோர் பயன்படுத்தும் மோட்டார்
பொருத்தப்பட்ட ஊர்திகளுக்கு வாங்கப்படும் நில எண்ணெய்க்
கான தொகையில் 50 சதவிகிதம் மைய அரசு மானியமாக
வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. 2 குதிரை



சக்தி பொருத்திய மோட்டார் ஊர்திகளுக்கு மாதத்திற்கு அதிக
பட்சம் 15 லிட்டர் நில எண்ணெயும் 2 குதிரை சக்திக்கு மேலுள்ள
மோட்டார்பொருந்திய ஊர்திகளுக்கு 25 லிட்டர் நிலஎண்ணையும்
வாங்க ஏற்படும் செலவில் 50 சதவிகிதம் தொகை உடல் ஊன
முற்றோருக்கு மானியமாக வழங்கப்படுகிறது. இம்மானியம்
உடல் ஊனமுற்றோர் தங்கள் இருப்பிடத்திலிருந்து பணிபுரியும்
இடத்திற்கு சென்றுவர பயன்படுத்தும் ஊர்திக்குரிய நிலஎண்ணெய்
டீசல் வாங்கவே வழங்கப்படும். போக்குவரத்துக் கழக பேருந்து
களில் பயணம் செய்ய இலவச பயணச் சலுகை பெற்ற உடல்
ஊனமுற்றோருக்கு இம்மானியம் வழங்கப்பட மாட்டாது.
ரூ. 2,500-க்கு குறைந்த வருமானமுடைய உடல் ஊனமுற்றோரே
இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியுடையவர்கள். இத்திட்டம்
1985—86-ல் தொடங்கப்பட்டு இது நாள் வரை 42 ஊனமுற்றோர்
பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக 1989—90-ம் ஆண்டில்
ரூ. 0.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசுத் துறைகளில் ஊனமுற்றோருக்கு இட ஒதுக்கீடு:

4.37 1981 உலக ஊனமுற்றோர் ஆண்டில் அரசுப் பணி
களில் உடல் ஊனமுற்றோருக்கு 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு
செய்து அரசு ஆணை வழங்கியது. பிற்படுத்தப்பட்டோர்-
தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் மற்றும் மலை சாதியினருக்கு
இட ஒதுக்கீடுள்ள எல்லா பணியிடங்களுக்கும் இவ்விட ஒதுக்கீடு
பொருந்தும். பார்வையற்றோர், காது கேளாதோர், உடல்
ஊனமுற்றோர் ஆகிய ஒவ்வொரு பிரிவுக்கும் 1 சதவிகிதம் இட
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்றோருக்கான தேர்வுக்குழு அமைத்தல்:

4.38 ஊனமுற்றோருக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்களில்
தகுதியான ஊனமுற்றோரை நேர்முகத் தேர்வு நடத்தி தேர்வு
செய்ய தமிழ்நாடு தேர்வாணைக் குழு உறுப்பினர் ஒருவரின்
தலைமையில் 1988-89-ல் அரசு ஒரு தேர்வுக் குழுவை ஏற்படுத்தி
யுள்ளது. இக்குழுவில் சமூகநல இயக்குநர் அல்லது அவரது
பிரதிநிதி இடம் பெற்றுள்ளனர். தேர்வு முறையில் இடம்
பெற்றுள்ளவர்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பொறுப்
பினை சமூக நலத்துறை ஏற்றுக் கொண்டுள்ளது. வேலை
வாய்ப்பகங்களுக்கு தெரிவிக்கப்பட்ட பணியிடங்களில் இதுநாள்
வரை 297 ஊனமுற்றோர் இத்தேர்வுக் குழுவால் பல்வேறு
துறைகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 1988—89-ல் இவ்விட
ஒதுக்கீடு உத்திரவுப்படி வேலை வாய்ப்பகங்கள் மூலமும் இத்
தேர்வுக் குழுவின் மூலமும் மொத்தம் 1,648 பேர் பல்வேறு
துறைகளில் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

இளம்பிள்ளை வாதத் தடுப்பு மற்றும் நிவாரணத் திட்டங்கள்:

4.39 தமிழ்நாட்டில் இளம்பிள்ளை வாதத்தை தடுக்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் 1988-89-ல் 'இளம்பிள்ளை வாதத் தடுப்பு மற்றும் செயல்முறை' எனும் ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்படுவதை தடுத்தலும், இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் அளித்தலுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1988-89 முதல் 1992 93 வரையுள்ள காலத்தில் மாநிலம் முழுதும் ஐந்து கட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது முதல் கட்டமாக மாவட்டத்திற்கு இரு ஒன்றியங்கள் வீதம் 40 ஒன்றியங்கள் செயல்படுத்தப்படுகிறது. 1988-89-ல் ஏறத்தாழ இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட 16,000 பேர் பயனடைந்துள்ளனர்.

1988–89-ல் முதல் கட்ட திட்டத்திற்குரிய செலவு கீழ்க்கண்ட விவரப்படி ரூ. 109.50 இலட்சங்களாகும்:—

| | ரூபாய் (இலட்சங்களில்.) |
|---|---|
| ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவித்தொகை | 10.00 |
| கருவிகள் வாங்க நிதி உதவி மற்றும் கருவிகள் பொருத்துதல். | 63.00 |
| ஊனமுற்றவர்களுக்கு உதவும் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி. | 20.00 |
| மதிப்பீடு முகாம்கள் | 10.00 |
| மருத்துவம் மற்றும் இதரப் பணியாளர்களுக்குப் பயிற்சி. | 5.00 |
| 1988–89-ல் கணிப்பு மற்றும் முறைப்படுத்துதல். | 1.50 |
| மொத்தம் | 109.50 |

இத்திட்டப் பணியில் இதுநாள் வரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றிய விவரம் பின்வருமாறு :—

மருத்துவ அலுவலர் (முட நீக்கியல்) முட நீக்கியல் நிபுணர், சமூகநலப் பணியாளர், பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர்கள் கொண்ட மருத்துவக்குழு தயார் நிலையில் உள்ளது. இத்திட்டப் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டிய மாவட்ட-வட்டார-கிராம



அளவிலான பணியாளர்களுக்கு பயிற்சி அளித்து முடிக்கப்பட்டுள்ளது. இளம்பிள்ளை வாதத்தைத் தடுக்க அரசு மேற்கொண்டிருக்கும் பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய போதுமான அளவு விளம்பரங்கள் செய்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிப்ரவரி, மார்ச் மாதங்களில் மதிப்பீடு மருத்துவ மனைகள் மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளது. இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கான முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் தயாரிக்கப்பட்டுவிட்டன. இவற்றை விநியோகிக்கும் பணி தொடங்கவிருக்கிறது. 1989-90-ல் இத்திட்டத்தினை விரிவுபடுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## அத்தியாயம் 5.

### தமிழ்நாடு சமூக நல வாரியம்.

5.1. தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் தொண்டு நிறுவனங்களது மேம்பாட்டு வளர்ச்சியில் முக்கியமான பங்கு வகிக்கிறது.

5.2. வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :—

(1) சமூக நல அமைப்புக்களை ஆரம்பித்து, உயர்வடையச் செய்தல்.

(2) தனியார் சேவை நிறுவனங்களின் பணித்திறனை வளர்ப்பதற்குத் தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியளித்தல்.

(3) உதவித் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

5.3. தமிழ்நாடு சமூக நல வாரியம், மத்திய சமூக நல வாரியத்திடமிருந்து பண உதவி பெற்று, தொண்டு நிறுவனங்களின் மூலம் குழந்தைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் மகளிர் ஆகியோரது மேம்பாட்டுக்காகப் பணியாற்றுகிறது. சுமார் 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தொண்டு நிறுவனங்களுக்கு பண உதவி செய்யப்படுகிறது. எஞ்சிய செலவுத் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம் கூட பண உதவி செய்யப்படுகிறது.

5.4. தற்போதைய தமிழ்நாடு சமூக நல வாரியம் 1988 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்று அலுவலக உறுப்பினர்கள் உட்பட 24 உறுப்பினர்களைக் கொண்டதாக, திருத்தியமைக்கப்பட்டது.

[1989 ஏப்ரல் 21

5.5. 1988-89 ஆம் ஆண்டில் 1674 தொண்டு நிறுவனங்களுக்கு ஏப்ரல் 1988 முதல் பிப்ரவரி 1989 முடிய மொத்தம் ரூ. 164.19 இலட்சம் பண உதவி செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | அலகுகளின் எண்ணிக்கை. | அனுமதிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. திட்டக்கால உதவி | 32 | 2.70 |
| 2. வருடாந்திர உதவி | 184 | 3.75 |
| 3. மகிலா மண்டலத் திட்டம் | 34 | 1.25 |
| 4. சத்துணவுத் திட்டம் | 91 | 6.07 |
| 5. குழந்தைகள் காப்பகத் திட்டம் | 850 | 56.76 |
| 6. விடுமுறை முகாம் | 49 | 2.45 |
| 7. பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி | 18 | 1.34 |
| 8. விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் திட்டம் | 35 | 2.80 |
| 9. மாநில அரசு மானியம் | 176 | 5.00 |
| 10. குடும்பநல அறிவுரை நிலையம் | 12 | 4.81 |
| 11. குறுகிய காலக்கல்வி பயிற்சி (1 வருடம்-2 வருடம்) | 15 | 3.54 |
| 12. வாழ்க்கைத் தொழில் பயிற்சி | 132 | 24.53 |
| 13. சமூகப் பொருளாதாரத் திட்டம் :— | | |
| (அ) உற்பத்தி அலகுகள் | 1 | 2.97 |
| (ஆ) சேவை முனைப்புத் திட்டம் | .. | .. |
| (இ) பால்வளத் திட்டம் | 21 | 4.38 |
| (ஈ) சுய வேலை வாய்ப்புத் திட்டம் | 1 | 0.10 |
| (உ) ஆடு வளர்த்தல் | 9 | 2.14 |
| மொத்தம் | 1,674 | 164.19 |



1989 ஏப்ரல் 21]

சமூக நலப் பணிகளில் தொண்டு நிறுவனங்கள் பங்கேற்க அரசு ஊக்கமளித்து வருகிறது. தரமான இனிப்புப் பண்டங்களைத் தயாரித்து அரசு நிறுவனங்கள், கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் மூலமாக அவற்றை விற்பனை செய்ய ஏற்பாடு செய்வதில் உடல் ஊனமுற்ற பெண்களை வேலைக்கமர்த்தும் திட்டமொன்றை தமிழ்நாடு சமூக நல வாரியம் 1986-87 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

## அத்தியாயம் 6.

## சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை

6.1. தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்படும் பல்வேறு நல்வாழ்வுத்திட்ட அமுலாக்கங்களில், சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை மூலம் இளைஞர் நீதிச்சட்டம் 1986 (நீக்கப்பட்ட தமிழ்நாடு குழந்தைகள் சட்டம், 1920)-ன்படி தோற்றுவிக்கப்பட்ட இல்லங்கள் மற்றும் பரத்தமைத் தடுப்பு சட்டம், 1956-ன்கீழ் அமைந்துள்ள மகளிர் ஒழுக்கக் கண்காணிப்பு நிறுவனங்களும் அடங்கும.

6.2. புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் (ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் அனாதைகள்) குற்றம் இழைத்த சிறார்கள் மற்றும் ஆதரவு இன்று தவிக்கும் பெண்டிர் மற்றும் சிறுமியர் ஆகியோரின் பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு முதலான முக்கிய பொறுப்புகளுக்கென சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6.3, சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையின் நிர்வாகம் மற்றும் செயல்பாட்டுக்கென ஒரு முழு நேர இயக்குநர் இத்துறையில் பொறுப்பினை வகிக்கின்றார். மாநிலத்தின் தென்மண்டல நிறுவனங்களின் நிலையான மற்றும் திறமையான மேற்பார்வைக்கென, சீர்திருத்தப்பள்ளிகள் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை துணை இயக்குநரை தலைமையாகக் கொண்டு, மதுரையில் ஒரு மண்டல அலுவலகம் இயங்கி வருகிறது.

இளைஞர் நீதிச்சட்டம் 1986-ன்கீழ் அமைந்துள்ள நிறுவனங்கள்:

6.4. 1986 ஆம் ஆண்டு இளைஞர் நீதிச்சட்டத்தின்படி மொத்தம் 20 சிறப்பு/இளைஞர் இல்லங்கள் மாநிலத்தில் உள்ளன. இந்த 20 நிறுவனங்களில் 2 சிறப்பு இல்லங்களும், 7 இளைஞர் இல்லங்களும் அரசினராலும், மீதமுள்ள 11 இளைஞர் இல்லங்கள் அரசினரின் பராமரிப்பு மானிய உதவி பெற்றும் நடத்தப்பட்டு வருகின்றன. இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் துவங்கப்பட்ட இளைஞர் நீதிமன்றங்கள் மூலம், குற்றம் புரிந்த சிறார்களும், இளைஞர் நலக்குழுமங்கள்மூலம் புறக்கணிக்கப்பட்ட சிறார்களும், இளைஞர் இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

6.5. பதினான்கு கூர் நோக்கு இல்லங்கள் (குறுகிய காலவரை
யரை) இம்மாநிலத்தில் உள்ளன. இந்த இளைஞர் நலக்குழுமம்
இளைஞர் நீதிமன்றம், விசாரணைக்குட்படும் சிறுவர் சிறுமி
யரை விசாரணைக்காலங்களில் பொறுப்பேற்கின்றன. சிறப்பு/
இளைஞர் இல்லங்களின் நுழைவு ஆதார இல்லங்களாக இவை
உள்ளன. மொத்தமுள்ள 14 கூர்நோக்கு இல்லங்களில்
பதினொன்று அரசினராலும், எனைய 3 இல்லங்கள்' குழந்தை
கள் பாதுகாப்புச் சங்கம், விடுதலை பெற்ற கைதிகள் உதவிச்
சங்கம் ஆகிய தனியார் நிறுவனங்களால் அரசினரின் நிதியுதவி
யுடன் நடத்தப்படுகின்றன. தனியார் கூர் நோக்கு இல்லத்தில்
உள்ள இல்ல வாசிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு
தலா ரூ. 2.50 வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்படுகிறது.

இளைஞர் நலக்குழுமம் :

6.6 புறக்கணிக்கப்பட்ட சிறார்களின் விசாரணைக்கென
ஒரு தலைவரும், 4 உறுப்பினர்களும் (மகளிர் உறுப்பினர்
ஒருவர் உள்ளடக்கிய) 13 இளைஞர் நலக்குழுமங்கள் அமைக்கப்
பட்டுள்ளன.

இளைஞர் நீதிமன்றங்கள்:

6.7. சென்னை நகரினைப் பொறுத்தவரை, பன்னிரெண்டா
வது நகர நீதிபதியும், வெளியூர்களில் தலைமைக் குற்றவியல்
நீதிபதி மற்றும் சார்பு உட்கோட்ட குற்றவியல் நீதிமன்ற
நடுவர்கள் குற்றவியல் நீதிபதிகளும் குற்றம் புரிந்த சிறார்களை
விசாரித்து தீர்ப்பு வழங்க ஒதுக்கப்பட்டுள்ளனர்.

6.8. பரத்தமைத் தடுப்புச் சட்டம், 1956 :

அரசினர் கண்காணிப்பு/பாதுகாப்பு இல்லங்கள் (நீண்டகால
வரையறை) 1956 ஆம் ஆண்டில் பரத்தமைத் தடுப்புச் சட்டத்
தின் கீழ் சேர்க்கப்படும் பெண்டிர் மற்றும் சிறுமியர்கட்கு புகலிட
மும் பயிற்சியும் மறுவாழ்வும் அளிக்கின்றன. இத்துறையில்
ஆறு மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் உள்ளன.
இவை நீங்கலாக, எட்டு (குறுகிய கால) மீட்பு இல்லங்கள் சிறு
மியர் மற்றும் பெண்கள் நீதிமன்ற விசாரணைக் காலங்களில்
பொறுப்பேற்கின்றன. இக்குறுகிய கால வரையறையுள்ள நிறு
வனங்கள் நீண்டகால வரையறையுள்ள பாதுகாப்பு இல்லங்
களுக்கு நுழைவாயில்களாகும்.

பிற்காப்பு நிறுவனங்கள் :

6.9. மூன்று பிற்காப்பில்லங்கள் (சட்டத்தின் பாற்படாத)
உள்ளன. இவற்றுள் இரண்டு சிறுவர்களுக்காகவும், ஒன்று
சிறுமியர் மற்றும் பெண்டிருக்காகவும் உள்ளது. பெண்களுக்
கான ஒரு இல்லம் வட ஆற்காடு மாவட்டம் வேலூரிலும் சிறு



வர்களுக்கான இரண்டு இல்லங்கள் ஆத்தூர் (செங்கை அண்ணா
மாவட்டம்) மற்றும் மதுரையிலும் உள்ளன. இவ்வில்லங்கள்
தொழிற்கல்வி பயிற்சியினை, இளைஞர் இல்லங்களிலிருந்து விடு
விக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு, அவர்கள் சுயவேலைக்கு தகுதி
பெறுமளவுக்கு தொடர்ச்சியாக பயிற்றுவிக்கின்றன. உடைகள்
உள்ளடக்கிகள் மற்றும் தோல் பொருட்கள், உற்பத்தியில் பயிற்று
விக்கும் ஒரு தொழில் நிறுவனம், வேலூர் அரசினர் மகளிர்
பிற்காப்பு நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இல்லவாசி
கள், பர்மா மற்றும் இலங்கை அகதிப்பெண்கள் மற்றும்
உள்ளூர் பெண்கள் இந்நிலையத்தில் பயிற்சிக்கென தேர்ந்தெடுக்
கப்படுகின்றனர்.

கல்வி:

6.10 அனைத்து சிறப்பு/இளைஞர் இல்லங்களிலும் 8 ஆம்
வகுப்பு வரை கல்வி அளிப்பதுடன், இவை கல்வித்துறையால்
அங்கீகரிக்கப்பட்ட கல்வி பிரிவுகளாக இயங்கி வருகின்றன. இவை
நீங்கலாக செங்கற்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் மற்றும்
சென்னை அரசினர் பெண்கள் இல்லத்திலும் உயர்நிலைப்பிரிவு
கள் இயங்கி வருவதுடன் மாணவர்களுக்கு 10 ஆம் வகுப்பு
வரை உயர் கல்வி கற்பிக்கப்படுகிறது. உயர் கல்வியில் நாட்ட
முள்ள இல்லவாசிகள் மேல்நிலைப்பள்ளி/கல்லூரி,தொழிற்
பயிற்சி நிலையங்கள்/பல்தொழில் நுட்பக்கல்லூரி ஆகியவற்றில்
பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

வாழ்க்கைத் தொழிற்கல்வி :

6.11 இல்ல நீக்கம் செய்யப்பட்ட பின்னர், மறுவாழ்வுக்
கென, கீழ்குறிப்பிட்டுள்ள வருமானம் ஈட்டக்கூடிய தொழிற்
கல்வி பயிற்சிகளும் இல்லவாசிகளுக்கு பயிற்றுவிக்கப்படுகிறது:

(அ) சிறப்பு/இளைஞர் இல்லங்கள் :

1. தச்சு
2. தையல் மற்றும் பூ வேலை
3. நெசவு
4. பாய் நெசவு
5. கருமாரப்பணி
6. உலோகப்பணி
7. தோட்டம் மற்றும் வேளாண்மை
8. கொத்து வேலை

9. புத்தகம் சட்டுதல்

10. இசைக்கருவி

11. மாட்டுப்பண்ணை

12. சோப்பு தயாரிப்பு

(ஆ) பிறகாப்:| நிறுவனங்கள்:

1. புத்தகம் கட்டுதல்

2. கருமாரப்பணி

மேலேயுள்ள தொழிற்பிரிவு அலருகளில் சென்னை அரசினர் பெண்கள் இல்லம் மற்றும் தஞ்சாவூர் அரசினர் இல்லங்களின் தையற்கூடங்களும், செங்கற்பட்டு அரசினர் இளைஞர் சிறப்பு இல்லத்தின் தச்சு மற்றும் நெசவுத் தொழிற்கூடங் களும் இயந்திரமயமாக்கப்பட்டு, மின்பொறிகளின் உதவியால் மாணவர்கட்கு உற்பத்தி செய்ய பயிற்றுவிக்கவும், இல்ல நீக்கம் பெற்று வெளியேறி அவர்கள் நிறுவனங்களில் வேலை வாய்ப்புப் பெற வசதியும் செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் அரசினர் இளைஞர் இல்லம் மற்றும் இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்திலும் உள்ள தச்சுப்பிரிவுகள் இயந்திரமயமாக்கப்பட் டுள்ளதுடன் சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில் ஒரு மின் சலவையகக் கூடமும் துவக்கப்பட்டு இயங்கி வருகிறது.

சென்னை அரசினர் பெண்கள் இல்ல வளாகத்தில் ஒரு குழந் தைகள் காப்பகம் செயல்பட்டு வருகிறது. 10 மாணவிகள் இப் பிரிவில் பயிற்சியளிக்கப்படுகின்றனர். சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் 20 இல்லவாசிகளுக்கென ஒரு இல்லவியல் பயிற்சியும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அரசினர் பற்றவைப்பு மற்றும் உற்பத்தி தொழிற்கூடம் ஒன் றினை இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்தில் ரூ. 5.34 இலட்சம் செலவில் துவங்க ஆணை பிறப்பித்துள்ளது. இத்தொழிற் கூடத்தில் 20 மாணவர்கள் பயிற்சி பெறுவர்.

விடுதலையான இல்லவாசிகளுக்கு புதுவாழ்வு அளிக்க தமிழ் நாடு நல நிதி' அரசினரால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிதி உதவி மகளிர் காப்பகங்களிலிருந்து விடுதலை பெறும் தேவைப் படும் பெண்களுக்கு வழங்கப்படும். தொடர் ஆண்டு மானியமாக ரூ. 5 இலட்சம் இந்நிதிக்கு வழங்கப்படும். இதில் ரூ. 2.50 இலட்சம் அரசின் நேரிடை மானியமாகவும் ரூ. 2.50 இலட்சம் தமிழ்நாடு முதல் அமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும் மானியமாகவும் வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் 100 இல்ல வாசிகள் இத்திட்டம் மூலம் பயன்பெறுவர்.



இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் :

6.12 சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய மூன்று இடங்களில் உள்ள இளைஞர் வழிகாட்டி நிலையங்கள், இளைஞர் நீதிமன்றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனுப்பும் சிறுவர் சிறுமியரைப் பற்றிய மனோ நிலைகளை ஆராய்வதுடன் மன நிலை அறிக்கையையும் அளித்து சிறுவர்களிடையே விளங்கும் குற்றவியல் தன்மைபற்றி ஆய்வுகள் மேற்கொள்ளுகின்றன. இவ் வழிகாட்டி நிலையங்கள் அருகில் உள்ள கூர்நோக்கு இல்லங்களின் கோரிக்கைகளை கவனிக்கின்றன. இந்நிலையங்களின் மீதான செலவினம் அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்வழிகாட்டி நிலையங்கள் செயற்குழுவினரால் நடத்தப்படுகின்றன.

மறுவாழ்வு :

6.13. இல்லவாசிகள் மற்றும் முன்னாள் இல்லவாசிகளின் மறுவாழ்வு வழங்குவதில் ஒரு பகுதியாக தொழிற் கூட்டுறவு சங்கம் ஒன்று தொழில் வணிகத்துறையில் பதிவு செய்யப்பட் டுள்ளது. 'கஸ்தூரிபாய் காந்தி மறுவாழ்வு தொழிற் கூட்டுறவு சங்கம்' என இச்சங்கத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது. தமிழ் நாடு மாநிலத்தில் இத்துறையில் செயல்படுத்தப்படும் அனைத்து பயிற்சிகளும் மேற்கொள்ளும் வகையில் இச்சங்கம் பதிவு செய்யப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக காலணிகள் தயாரித்தல். பனை ஓலை பொருட்கள் தயாரித்தல் போன்றவற்றில் 3 பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளன. 'தாட்கோ' நிறுவனத்தின் சிறப்பு ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டம் மூலமாகவும் மற்றும் தொழில் வணிகத்துறையின் ஊரக தொழில் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் இப்பயிற்சித் திட்டங்கள் நடை முறைபடுத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சித் திட்டங்கள் முன்னேற்றத்துடன் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி திட்டங்கள் முடிவடைந்த பின்னர் இக்கூட்டுறவு உறுப்பினர்களால் நிறுவனத்தின் (இல்லவாசிகள் மற்றும் முன்னாள் இல்லவாசிகள்) நிரந்தர உற்பத்தி மேற்கொள்ளப்படும்.

சீர்திருத்த நிறுவனங்களால் இல்லவாசிகள் சீர்திருத்தப் பயிற்சி பெற்ற பின்னர், அவர்களை சமுதாயத்தில் தகுந்த இடத்தில் அமர்த்துவதன் மூலமாக மறுவாழ்வு அளிக்கப்படு கிறது.

மறுவாழ்வு அளிக்கப்படும் முறைகளாவன :

(1) விருப்பமுள்ள (ஆதரவற்ற) பெண்களுக்கு திருமண ஏற்பாடு செய்தல்.

(2) வேலை வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தருதல்.

(3) வேலைத் திறமையுள்ள மாணவர்கட்கு அவர்கள் பயின்ற தொழிற் கல்விக் கேற்ப கருவிகள் வழங்குதல்.

தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினரின் தேர்வு வரம்புக்கு உட்படாத இத்துறையின் அனைத்துப் பணியிடங்களுக்கும் மாவட்ட வேலைவாய்ப்பகங்கள் மூலம், தகுதி வாய்ந்த முன்னாள் இல்லவாசிகளைக் கொண்டு நிரப்பப்படுகின்றன. இதற்கென மாவட்ட வேலை வாய்ப்பகங்களில் தனியான பதிவேடும் பராமரிக்கப்படுகிறது.

(4) திருமணம் செய்து கொள்ளும் மணமக்களுக்கு அவர்கள் குடும்பம் துவங்க சீதனமாக ரூ. 1,000 மற்றும் திருமண செலவுகளுக்கென ரூ. 100-ம் அரசால் வழங்கப்படுகிறது.

வரவு-செலவு :

6.14 இத்துறையின் 1989-90-ம் ஆண்டின் வரவு—செலவு மதிப்பீடு (பணியாளர் சம்பளங்கள் உள்ளிட்டது) ரூ. 229.61 இலட்சம் ஆகும். மானியம் உதவியாக தனியார் நிறுவனங்களுக்கு செலுத்தப்படும் தொகை ரூ. 8.31 இலட்சமாகும்.

அத்தியாயம்—7.

முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

7.1 உற்றார், உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, கீழ்க்கண்டவைகளின் கீழ் முதியோர் உதவித் தொகை திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகிறது.—

(அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம் (1-4-1962 முதல்).

(ஆ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் (1-11-1974 முதல்).

(இ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் (1-6-1975 முதல்).

(ஈ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மை தொழிலாளர்) திட்டம் (21-8-1981 முதல்).

(உ) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை திட்டம் (25—4—1986 முதல்).



144863
600 008

முதியோர் உதவித் தொகை (சாதாரணத்) திட்டம்

7.2 குருடு, தொழுநோய், மனநோய், பாரிச வாய்வு மற்றும் அவயமிழந்து வருவாய் ஈட்ட முடியாத, ஆதரவற்ற நபர்கள் உதவித்தொகை பெற குறைந்த பட்ச வயது வரம்பு 60 ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்த பட்ச வயது வரம்பு 65 ஆகும். இந்த திட்டம் 1—4—1962 முதல் செயல்படுத்தப்படுகிறது.

முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம்.

7.3 1-11-1974 முதல் இந்தத் திட்டம் 55 வயது நிரம்பிய ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்களுக்கு அமுலாக்கப்பட்டது. 1975-ல் குறைந்தபட்ச வயது வரம்பு 45 ஆக குறைக்கப்பட்டது. இந்த குறைந்த பட்ச வயது வரம்பு கண்பார்வையற்றவர்களுக்கு பொருந்தாது என்று 1979 ஆம் ஆண்டில் அரசு ஆணையிட்டது. 50 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் உடல் ஊனமுற்ற ஆதரவற்ற நபர்கள் இந்த உதவித் தொகை பெற தகுதியானவர்கள்.

முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம்

7.4. 1—6—1975 முதல் இந்த திட்டம் 45 வயது நிரம்பிய ஆதரவற்ற விதவைகளுக்கு அமுலாக்கப்பட்டது. 1978-ல் இந்த குறைந்தபட்ச வயது வரம்பு 40 ஆக குறைக்கப்பட்டது.

முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் திட்டம்)

7.5. 21—8—1981 முதல் 60 வயது நிரம்பிய ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு அமுலாக்கப்பட்டு செயல் படுத்தப்படுகிறது.

கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித்தொகை

7.6. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற 30 வயதுக்கும் குறையாத பெண்களுக்கும் அரசு விதிகளின்படி முதியோர் உதவித் தொகை திட்டத்தின் அனைத்து சலுகைகளும் அளிக்கப்படுகிறது. தற்போது அரசு சில நிபந்தனைகளை தளர்த்தியுள்ளது. இந்தத் திட்டம் இம்மாநிலத்தில் 25—4—1986 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உதவித் தொகை ஒப்பளிப்பு அளிக்கப்படும் முறை:

7.7. மேற்கண்ட திட்டத்தின்கீழ் உதவித்தொகை ஒப்பளிப்பு அளிக்கும் அதிகாரம் கோட்டாட்சியர்களுடையது. கோட்டாட்சியரின் ஆணையை எதிர்த்து மாவட்ட ஆட்சியர்களுக்கு மேல் முறையீடு (முத்திரை கட்டணமின்றி) செய்ய மனுதாரருக்கு வாய்ப்புள்ளது.

D
V211,31/N89

உதவித்தொகை:

7.8. முதியோர் உதவித்தொகை திட்டம் அமுல்படுத்தப்பட்ட
நாளாகிய 1—4—1962 முதல் 31—3—1979 வரை ஒவ்வொரு
வருக்கும் மாதம் ரூ. 20 உதவித்தொகையாக அளிக்கப்பட்டது.
1—4—1979 முதல் 31—3—1982 வரை மாதம் ரூ. 25 ஆகவும்
1—4—1982 முதல் இது நாள் வரை மாதம் ரூ. 35 ஆகவும்
வழங்கப்படுகிறது. தற்போது வழங்கப்படுகிற தொகை மாதத்
திற்கு ரூ. 35-லிருந்து ரூ. 50 ஆக உயர்த்தப்படும். இந்த
பலன் கிட்டாமல் காத்திருக்கும் 30,000 பேரும்- மொத்தத்தில்
4 இலட்சம் பேரும், இந்த அறிவிப்பினால் பயன்பெறுவார்கள்.
இதனால் தகுதியுடைய அனைவரும் உதவித்தொகை பெறுவதோடு
இந்தப்பலன் கிட்டாமல் ஆயிரக்கணக்கானோர் காத்திருக்கும்
நிலை இனி ஏற்படாது. இதேபோல் எண்ணிக்கை உச்சவரம்பு
நீக்கப்பட்டு உடல் ஊனமுற்றோர் கைம்பெண்கள், ஆதரவற்ற
மகளிர் ஆகியோர் இனிமேல் ரூ. 50 உதவித் தொகை பெறுவர்.
இதற்கென ரூ. 21 கோடி. நடப்பு ஆண்டில் செலவிடப்படும்.
இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித்தொகை பண
அஞ்சல் மூலம் உதவித் தொகை பெறுபவர்களின் முகவரிக்கு
வட்டாட்சியரால் அனுப்பப்படுகிறது. இதற்கான பண அஞ்சல்
கமிஷன் செலவினையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. ஒரு
நபருக்கு ஓராண்டில் செலவிடப்படும் விவரங்கள் அட்டவணை
1-ல் தரப்பட்டுள்ளது.

இலவச கைத்தறி ஜனதா ஆடைகள் வழங்குதல்:

7.9. ஆண்டுக்கு இருமுறை பொங்கல் பண்டிகை மற்றும்
சுதந்திர நாள் அன்று, உதவித்தொகை பெறும் ஆண்களுக்கு
தலா ஒரு கைத்தறி ஜனதா வேட்டியும் பெண்களுக்கு தலா
ஒரு கைத்தறி ஜனதா வண்ண வெள்ளை சேலையும்,
1979 சுதந்திர நாள் முதல் அளிக்கப்பட்டு வருகிறது.

இலவச அரிசி மற்றும் மதிய சத்துணவு வழங்குதல்:

7.10 1—11—1980 முதல் உதவித் தொகை பெறும்
ஒவ்வொருவருக்கும் வாரம் ஒரு கிலோ சன்ன ரக அரிசி இலவச
மாக வழங்கப்படுகிறது.

15—1—1983 முதல் உதவித் தொகை பெறுபவர்களுக்கும்
தமிழ்நாடு சத்துணவு திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இதன்படி
உதவித் தொகை பெறுபவர்களுக்கு நாள் தோறும் மதிய
சத்துணவு இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த உணவு
கீழ்கண்ட அளவில் இருக்கும். சத்துணவிற்கான செலவு, ஒரு
நபருக்கு, ஒரு வேளைக்கு 93 பைசா (இதர செலவுகளின்றி)
ஆகிறது.



| | |
|---|---|
| அரிசி .. .. | 200 கிராம் |
| பருப்பு .. .. | 15 கிராம் |
| எண்ணெய் .. .. | 10 கிராம் |
| காய்கறி மற்றும் தாளிதம் | 50 கிராம் |

சத்துணவு பெறுபவர்களுக்கு மட்டும் வாரம் ஒரு கிலோ
அரிசிக்குப் பதிலாக 15—1—1983 முதல் வாரம் அரை கிலோ
அரிசி வழங்கப்படுகிறது.

10. முதியோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ் பயனடைவோரின் எண்ணிக்கை மற்றும் அதிக பட்ச தோராயமான ஆண்டுச் செலவினம்:—

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| (அ) | முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம். | 1,63,698 |
| (ஆ) | முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் திட்டம். | 20,504 |
| (இ) | முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற விதவைகள்) திட்டம். | 1,17,018 |
| (ஈ) | முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மை தொழிலாளர்கள்) திட்டம். | 45,772 |
| (உ) | முதியோர் உதவித்தொகை (கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதர வற்ற பெண்கள்) திட்டம். | 25,697 |
| | மொத்தம் .. | 3,72,689 |

ஒரு நபருக்கு ஓராண்டில் செலவிடப்படும் விவரங்கள்
அடங்கிய அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதிக
பட்ச, தோராயமான ஆண்டுச் செலவினம் ரூ. 33.65 கோடி
ஆகும்.

முதியோர் உதவித்தொகை திட்டத்தின்கீழ் ஓராண்டில் ஒரு நபருக்கு அரசு செலவிடும் தொகை விவரங்களடங்கிய அட்டவணை.

| வரிசை எண்ணும், செலவின் விவரமும். | சத்துணவு உட்கொண்டால். | | சத்துணவு உட்கொள்ளாவிடில். | |
|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | ஆண். | பெண். |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| 1. உதவித் தொகை மாதம் ரூ. 35 வீதம் 12 மாதங்களுக்கு (35 × 12). | 420.00 | 420.00 | 420.00 | 420.00 |
| 2. உதவித்தொகை அனுப்புவதற்கான பண அஞ்சல் செலவுத் தொகை (பண அஞ்சல் அட்டைக்கான விலை உட்பட மாதம் ரூ. 1.60 வீதம் 12 மாதங்களுக்கு (1.60 × 12). | 1920 | 19.20 | 19.20 | 19.20 |
| 3. (அ) பொங்கல் பண்டிகை மற்றும் சுதந்திர நாள் (ஆண்டுக்கு இருமுறை இலவச துணிகள் வழங்குதல்). | 56.50 | .. | 56.50 | .. |
| (ஆ) இரண்டு கைத்தறி ஜனதா வண்ண சேலைகள் ஒன்று ரூ. 32.90 வீதம் | .. | 65.80 | .. | 65.80 |
| 4. மதிய சத்துணவு உட்கொள்பவர்களுக்கு வாரம் அரைக்கிலோ சன்னரக அரிசி (ஒரு கிலோ அரிசியின் விலை ரூ. 2.25 (½ × 52 × 2.25) | 58.50 | 58.50 | .. | .. |
| 5. மதிய சத்துணவு உட்கொள்ளாதவர்களுக்கு வாரம் ஒரு கிலோ சன்னரக அரிசி (ஒரு கிலோ அரிசியின் விலை ரூ. 2.25 (52 × 2.25) | .. | .. | 117.00 | 117.00 |
| 6. ஆண்டு முழுவதும் இலவச மதிய சத்துணவு (ஒரு நபருக்கு ஒரு வேளை உணவுக்கான செலவு 93 பைசா (0.93 × 365) | 339.45 | 39.345 | .. | .. |
| மொத்தம் .. | 893.60 | 902.90 | 612.70 | 622.00 |
| அதிகபட்ச தோராயமான ஆண்டுச் செலவினம் | ரூ. 903 × 3,72,689 | | | |
| | ரூ. 33,65,38,167 | | | |

''பெண்ணடிமை தீருமட்டும், பேசும் திருநாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே'' என்ற வகையில், மகளிர் முன்னேற்றத்தின் தேவையை'' பகுத்தறிவு இயக்கம் பெரிதும் வலியுறுத்தி வந்துள்ளது. தாயின் நலம், குழந்தையின் வளம், எளியோர்களின் உயர்வு, நலிந்தோர்க்கு நல்லுதவி என்று சமுதாயத்தில் பல்வேறு துறைகளில் அமைந்தவர்க்கு எல்லா வகையான நன்மைகளையும் வழங்க வேண்டுமென்பது சமூக நலத்துறையின் உயரிய குறிக்கோளாகும்.

விடுதலை பெற்ற 40 ஆண்டுகளுக்குப் பின்னரும், நலிவுடனும், மெலிவுடனும் தொடர்ந்து சமுதாயத்தில் பலர் இருப்பதைப் போக்கவேண்டுமென்கிற வகையில் இத்துறை தனது பணிகளை ஆற்றி வருகிறது.

பல நூறு ஆண்டுகளாக சமுதாயத்தைப் பின்னடையச் செய்துவந்த அவல நிலைகளைத் துடைப்பது என்பது இன்றியமையாதது. அரசு செய்யும் ஆக்கப் பணிகளோடு தொண்டு நிறுவனங்களும் பணிமன்றங்களும், சமுதாயத்தில் பல்வேறு நிலையில் பணியாற்றி வருகின்ற பெருமக்களும் அணிதிரண்டு அரசின் ஆக்கப் பணிகளுக்கு தோள் கொடுக்க மேலும் முன்வர வேண்டும். ''சமுதாய நலம் என்பது சமுதாயப் பணியில் ஒவ்வொரு வரும் தாமே பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் தம்மைத் தாமே தான் உட்படுத்திக் கொள்கின்ற தன்னிகரில்லாத் முயற்சியில் வெளிப்பாடாக அமைவது'' முயற்சியில் வெளிப்பாடாக அமைவது'' என்று தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் வலியுறுத்தியதை நினைவு கூர்ந்து தமிழ்ச் சமுதாய மேம்பாட்டுக்கு பணிபுரிய முன் வருவோமாக.



## இணைப்பு III

### தொழில் கொள்கைத் திட்டம்.

(....ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

சிறு தொழில்கள் துறையிலும், கிராமத் தொழில்கள் துறையிலும் தமிழ்நாடு அரசின் தொழில் கொள்கையின் நோக்கம் இரண்டு வகைப்பட்டதாகும். கிராம பகுதிகளில் தொழில் வளர்ச்சியை விரைவு படுத்துவது, மற்றொன்று கிராம பகுதிகளில் வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துவதாகும். இதற்காக மிகச் சிறிய, வீட்டுத் தொழில்கள் உட்பட சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றை ஊக்குவித்து மேம்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக கிராம பகுதிகளில், தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவது தொடர்பாக, தொழில் வணிக இயக்ககம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் போன்ற பல்வேறு முகவரமைப்புகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. இன்றியமையாத அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது உட்பட இவற்றிற்குத் தேவையான நிதி, தொழில்நுட்ப உதவியை இந்த முகவரமைப்புகள் மூலமாக அரசு அளிக்கிறது. இவற்றின் பணிகள் பற்றிய விவரம் கீழே சுருக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்த முகவரமைப்புகள் செயல்படுத்தும் பல்வேறு திட்டங்கள் பின்னர் வரும் அத்தியாயத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன.

தொழில் வணிக இயக்ககம்.— பொதுவாக தொழில்களை குறிப்பாக சிறு தொழில்களை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்தும் பணியை இது கவனிக்கிறது. தற்போதுள்ள புதிய தொழில்களுக்கு உதவியும் ஆதரவும் இது அளிக்கிறது. இந்த இயக்ககம் தானே தொழில்களைத் தொடங்கி நடத்த முடியாது. ஆனால், நடைமுறைகளை எளிதாக்குவதன் மூலம் தனியார் துறையில், தொழில் வளர்ச்சிக்கு சாதகமான நிலமையை உருவாக்குதல், விரைவாக அனுமதி, ஒப்புதல் பெறுவதற்கு தொடர் நடவடிக்கையை மேற்கொள்ளுதல். தேவைப்படும் துறைகளுக்கு உதவிகளை நெறிப்படுத்தலில் மாவட்ட தொழில் மையங்களின் பணியை பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்ககத்தின் மற்றொரு பிரிவு தொழில் கூட்டுறவுகள் ஏற்படுத்துவதை கவனிக்கிறது. இதில் தீப்பெட்டி தயாரித்தல், தேயிலை தயாரித்தல், ஜவ்வரிசி, தென்னை நார் தொழில், பாலிதின் பைகள், மின்னணுப் பொருள்கள், தோல் முதலியவை அடங்கும்.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்.—சிறு தொழில்களை ஊக்குவித்து வளர்ப்பதிலும், பின் தங்கிய பகுதிகளிலும், வளர்ந்து வரும் பகுதிகளிலும் அவற்றை பரவலாக்குவதிலும் கிரியா ஊக்கியாக பணியாற்றும் நோக்கத்துடன் இந்த நிறுவனம் தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக, உருவாக்கப்பட்ட விரிவான ஊக்கத் திட்டத்துடன் 1971-ல் இந்த நிறுவனம் தனது நடவடிக்கையை தொடங்கியது.

சிறு தொழில்களுக்கு குறிப்பாக தொழில் நுட்ப பணியாளர் களிடையே சுய வேலை வாய்ப்பை ஊக்குவிக்கும் பல திட்டங்களை இந்த நிறுவனம் செயல்படுத்துகிறது. தமிழ்நாட்டில் சிறு தொழில்களை திட்டமிட்டு வளர்ப்பதே இந்த நிறுவனத்தின் பணியாகும். இதனுடைய வளர்ச்சி நடவடிக்கையில் பின்வருவன அடங்கும்:—

(1) தொழில் வளமுள்ள வளர்ச்சி நிலையங்களை மேம் படுத்துதல், பல்வேறு அளவிலான தொழிற்சாலை கொட்டகை களை கட்டித்தருதல், சிறு தொழில் பிரிவுகளை ஏற்படுத்து வதற்காக இன்றியமையாத அடிப்படை வசதிகளுடன் சீர் செய்த மனைகளை மேம்படுத்துதல்.

(2) மத்திய முதலீட்டு உதவித்தொகை போன்ற ஊக்க உதவித்தொகை அளித்தல்.

(3) முக்கிய மூலப்பொருள்களை வழங்குதல்.

(4) அரசு கொள்முதலில் முதலுரிமை, முன்னுரிமை வழங்குதல், தேவைப்பட்டியல்களை அனுப்பும்போது முன் பணம் வழங்குதல், போன்றவற்றுடன் விற்பனை உதவி அளித்தல்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.—மாநில அளவிலான முதன்மை நிதியுதவி நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஒரு நிறுவனமாக 1949-ல் ஏற்படுத்தப்பட்டது. கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இது பதிவு செய்யப்பட்ட போதிலும், மாநில நிதியுதவி கழகங்கள் சட்டத்தின் கீழ், மாநில நிதியுதவிக் கழகமாக கருதப்படவேண்டும். ஏனெனில், மாநில நிதியுதவி கழக சட்டத்தின் சில பிரிவுகள் இதற்கு பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன. எனவே, நாட்டிலுள்ள ஏனைய மாநில நிதியுதவிக் கழகங்களைப் போன்று இந்நிறுவனமும் ஏறத்தாழ மாநில நிதி உதவிக் கழகமாகச் செயல் படுகிறது. புதிய தொழில்கள் தொடங்குவதற்கு நிலம், கட்டிடங்கள், தளவாடம், இயந்திரம், சாதனம் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கு மட்டுமின்றி தற்போதுள்ள தொழில் பிரிவுகளை விரிவுபடுத்துதல் நவீனப் படுத்துதல், பல திறப்படுத்துதல் ஆகியவற்றிற்கும் ரூ. 60 இலட்சம் தவணைக் கடனாக இந்த நிறுவனம் வழங்கியது.

தமிழ்நாடு சிறு தொழில்கள் நிறுவனம் லிமிடெட் (டான்சி).— முதல் மூன்று திட்டக் காலங்களில் தொடங்கப்பட்ட சிறு தொழில் பிரிவுகளை மேற்கொள்ள 'டான்சி' என அழைக்கப்படும் தமிழ்நாடு சிறு தொழில்கள் நிறுவனம் 1965ம் ஆண்டில் பல்பொருள் உற்பத்தி நிறுவனமாக அமைக்கப்பட்டது. இது தொழில்—வணிகத் துறையின் கீழ் செயல்படுகிறது. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை பரவலாக்குதல், தொழில் வளர்ச்சி பாலா



இன்றியமையாத அடிப்படை வசதிகளை அளித்தல் போன்ற வணிகத் தன்மையில்லாத பல்வேறு காரியங்களுக்காக, பெரும் பாலான தொழில் பிரிவுகள் பணி—செயல்முறை விளக்க மையங்களாகச் செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டன. இத்தொழில் பிரிவுகளில் வியாபாரத்துறை கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளதால், இவற்றை டான்சி நிறுவனம் மேற் கொண்டது. வணிக அடிப்படையில் இவற்றை நடத்துவதற்கான ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. 64 சிறு தொழில் பிரிவுகளை 'டான்சி' தன்வசம் எடுத்துக் கொண்டது. தற்போது பல்வேறு திட்டப்பணிகளுடன் டான்சியின்கீழ் 47 உற்பத்திப் பிரிவுகளும், 7 விற்பனை நிலையங்களும் உள்ளன. எச்.எம்.டி. நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் உதகமண்டலத்தில் கடிகார பாகங்களை ஒன்று சேர்க்கும் பிரிவு ஒன்றையும், இராணிப்பேட்டையில் இயந்திர பாகங்கள் தயாரிப்பு பிரிவு ஒன்றையும், அம்பத்தூரில் சராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்களை தயாரிக்கும் பிரிவு ஒன்றையும் டான்சி தொடங்கியது.

இந்நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவுகள், கட்டுமானப் பட்டறை, கருவிகள் அறை தொடர்பான பிரிவுகள், பொறியியல் பட்டறைகள், கட்டுமானப் பணிகள், வார்படப்பிரிவுகள், மரச் சாமான்கள் பிரிவு, சிறப்பு வகை பல்வகை பிரிவுகள் என்று வகைப்படுத்தப்படலாம். மாநில, மத்திய அரசு துறைகள், இரயில்வே, தபால்—தந்தி, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு மின்வாரியம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியம் போன்ற பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து பெறப்படும் பணி ஆணைகளை டான்சியின் பெரும்பாலான பிரிவுகள் நிறைவேற்று கின்றன. இத்துடன் தனியார் துறையிடமிருந்து வரும் பணி ஆணைகளை நிறைவேற்றிக் கொடுக்கிறது.

தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம்—டால்கோ.—

தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் ரூ. 10 கோடி அங்கீ கரிக்கப்பட்ட மூலதனத்துடன் 1983 மார்ச் 21-ல் அரசு நிறுவன மாக ஏற்படுத்தப்பட்டது. இன்றுள்ளவரை இதற்கு அரசு சமபங்கு மூலதனமாக ரூ. 250 இலட்சம் கொடுத்தது. இந் நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:—

(1) தமிழ்நாட்டில் தோல் தொழில்களை மேம்படுத்துதல்;

(2) தோல் தொழிலில் பயிற்சி பெற்றவர்களுக்கு உதவி அளித்தல்;

(3) சிறு தோல் தொழிலதிபர்களுக்கு இன்றியமையா அடிப்படை வசதிகளை அளித்தல்;

(4) தமிழ்நாட்டில் தோல் கழிவுப் பொருளை செய்முறைப் படுத்தும் முக்கிய பிரச்சினையை தீர்த்தல்;

மேற்சொன்ன முக்கியமான நோக்கத்துடன் திட்டங்கள் எடுத்துக்
கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டன. இத்துடன் டான்சியில்
4 தோல் பிரிவுகளும் மாதவரத்திலுள்ள தொழில்பேட்டை
ஒன்றும், நடந்தேறி வரும் திட்டங்களாக 1986—ல் எடுத்துக்
கொள்ளப்பட்டன.

தொழில் வணிகத் துறையிலுள்ள மின்னணுவியல் தொழிற் பிரிவுகள்.
நடப்பு காலங்களில் மின் மற்றும் மின்னணு பொருட்கள்
வாழ்க்கையில் இன்றியமையாத சாதனங்களாக அமைந்திருக்
கின்றன. மின், மின்னணு பொருட்களின் அதிவேக உற்பத்தியை
கருதி கீழ்க்கண்ட வேறு பல திட்டங்களை செயல்படுத்தும்
பொருட்டு அரசின் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

(1) குறைந்த மூலதனத்தில் அதிக வேலை வாய்ப்புகளை
அளிக்கும் மின்னணுத் தொழில்கள்.

(2) மின் மற்றும் மின்னணு இயல்புகளில் படித்த பட்டதாரி
ஆண்களும், பெண்களும், அது சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்பு
அளித்தல்.

(3) மேம்பட்ட தொழில் நுட்பவியல் இன்றைய வாழ்க்கைத்
தரத்திற்கு ஒப்பிடுமாறு மாற்றியமைத்தல்.

தொழில் வணிக இயக்ககத்தின் கொள்கைக் குறிப்பு:

மாநில அரசின் முக்கியமான கள அமைப்புகளில் ஒன்றாக
விளங்குகின்ற தொழில் வணிக இயக்ககம், பொதுவாக தொழிற்
களின் வளர்ச்சிக்கும், குறிப்பாக சிறு தொழில்களின் வளர்ச்சிக்
குரிய திட்டங்களைச் செயலாக்குவதில் ஈடுபட்டுள்ளது.
இயக்ககமே தொழில்களை அமைப்பதில்லை என்றாலும், இந்த
தனியார் துறையில் தொழில்களில் வளர்ச்சிக்கு உகந்த
சூழ்நிலையினை உருவாக்கிடும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது.

2. கடந்த ஓராண்டில் இத்துறையின் பல்வேறு பிரிவுகளில்
ஏற்பட்ட வளர்ச்சி பற்றியும் வளர்ச்சிக்குரிய எதிர்காலத்
திட்டங்கள் பற்றியும் கீழ்க்கண்ட பத்திகளில் தரப்பட்டுள்ளன.

1. மாவட்டத் தொழில் மையங்கள் :

3. சென்னைப் பெருநகரம் தவிர மாநிலம் முழுவதும் இத்
திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. சிறு தொழில்
களுக்குரிய பெரும்பாலான உதவித் திட்டங்கள் இம்மையங்களால்
செயல்படுத்தப்படுகின்றன. (சென்னையில் இரு மண்டல



அலுவலகங்கள் சிறு தொழில்களுக்கு உதவி செய்கின்றன)
மாவட்ட அளவில் சிறு தொழில்களைப் பதிவு செய்வது; சட்டப்படி
பெற வேண்டிய உரிமங்கள் மற்றும் இதர அனுமதிகளைப்
பெறுதலில உதவி; மாநில முதலீடு மற்றும் சிறப்புச் சலுகை,
மின் கட்டணச் சலுகை, வட்டியில்லா விற்பனை வரிக் கடன்
இவற்றை வழங்குவது இவற்றுள் அடங்கும். ஒருசில அபிவிருத்தி
நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றிய விவரங்கள் சுருக்கமாக
கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) சிறு தொழில்கள் பதிவு :—

4. (செயல்பட்டு வரும் அல்லது செயல்படக் கூடிய நிலையை
அடைந்த சிறு தொழில்களுக்கு வழங்கப்படும்) நிரந்தர
சான்றிதழ்கள் இத்துறையின் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாக
விளங்குகின்றன. 1987–88-ல் மாநிலம் முழுவதும் 11,000 நிரந்தரச்
சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டுமென்ற
இலக்கிற்கு மாறாக, 11,070 நிரந்தரச் சான்றிதழ்கள் வழங்கப்
பட்டன. இந்த ஆண்டிற்கு 12,000 என இலக்கு நிர்ணயிக்கப்
பட்டுள்ளது. சனவரி 1989 வரையில் 9,631 நிரந்தரச் சிறு
தொழில்கள் பதிவு பெற்றுள்ளன. கைவினைத் தொழில்களுக்கும்
பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 31-1-1989 வரையில்
இந்த ஆண்டிற்குரிய இலக்கான 7,000-க்கு மாறாக 5,047
கைவினைத் தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

5. ஒரு முனைத்தீர்வு அமைப்பின் மூலம் சிறு தொழில்களுக்குத்
தேவையான அனுமதிகளைப் பெறுவதற்குரிய விண்ணப்பங்களைப்
பெற்று சிறு தொழில்களின் சார்பில் சம்பந்தப்பட்ட துறைகளிடம்
தொடர்பு கொண்டு அவற்றைப் பெறும் பொறுப்பு, மாவட்டத்
தொழில் மையங்களுக்குத் தரப்பட்டுள்ளன. சமீபத்தில் அறிமுகப்
படுத்தப்பட்டுள்ள திட்டத்தின்படி, இயந்திரத் தளவாடங்களின்
முதலீடு ரூ. 10 இலட்சத்திற்குக் குறைவாக இருக்கும் மீதான சிறு
தொழில்களுக்கு (சுற்றுப்புற சூழலுக்கு ஊறு விளைவிக்க கூடியவை
தவிர ஏனைய) சட்ட ரீதியிலான அலுவலர்களிடமிருந்து முன்
அனுமதி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
இருப்பினும், சம்பந்தப்பட்ட அலுவலர்களால் சுட்டி காட்டப்படும்
குறைபாடுகளை, அறிவிப்பு கிடைக்கப் பெற்ற 30 நாட்களுக்குள்
சரி செய்யப்படவேண்டும். இந்த நடைமுறைகளிலும் மாவட்ட
தொழில் மையங்கள், சிறு தொழில்களுக்கு உதவியளிக்கின்றன.

ஒரு முனை தீர்வுக் குழுக்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட
2,311 இனங்களில் 31-1-89 வரை 1,848 இனங்கள் தீர்வு
செய்யப்பட்டுள்ளன. இதர இனங்களைப் பொறுத்தவரை,
சம்மந்தப்பட்ட துறைகளுடன் விரவமாக தொடர்பு கொள்ளப்
பட்டு வருகிறது.

(இ) நிதியுதவி:

6. தொழில் வணிகத் துறையின் கள அமைப்புகள், சிறு தொழில்களுக்கு உதவக்கூடிய வகையில், வங்கிகளுடன் இணைந்து செயலாற்றுதல் என்பது மாவட்ட தொழில் மையங்கள் அமைக்கப் பட்ட பிறகு ஏற்பட்டுள்ள ஓர் முன்னேற்றமாகும். 1978-79 முதல் 1987-88 வரை மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் சுமார் 29,000 சிறு தொழில்களுக்கு சுமார் ரூ. 66 கோடி உதவி அளிக்கப்பட்டுள்ளது. 1988-89-ல் 31-1-1989 வரை மாவட்டத் தொழில் மையங்களின் பரிந்துரைகளின் பேரில் 1,933 சிறு தொழில் களுக்கு ரூ. 5.22 கோடி வங்கிகளால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

(ஈ) படித்து வேலையற்ற இளைஞர்களுக்குரிய சுய வேலைவாய்ப்புத் திட்டம்:

7. மைய அரசின் உதவித் திட்டமான இது 1983-84 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 18 முதல் 35 வயது வரையுள்ள பத்தாம் வகுப்புத் தேறியவர்கள் அல்லது தொழிற் பயிற்சிப் பள்ளியில் தொழில் சான்றிதழ் பெற்றிருப் பவர்கள் (சென்னைநகரம் நீங்கலாக இதர இடங்களில்) தொழிற் பணி நிலையங்கள், வர்த்தகநிலையங்கள் ஆகியவை அமைப்பதற்கு உதவி பெற தகுதியுடையவர்களாவார்கள். (மாவட்டத் தொழில் மையங்களில் செயல்படும், பணிக்குழுக்களால் பரிந்துரைக்கப்படும் விண்ணப்பங்களுக்கு (வங்கிகளால்) தொழில்களுக்கு ரூ. 35,000 வரையிலும் பணி நிலையங்களுக்கு 35,000 வரையிலும் வர்த்தக நிறுவனங்களுக்கு ரூ. 15,000 வரையிலும் நிதியுதவி அளிக்கப் படுகிறது. பயனடைவோரின் குடும்ப நிகர ஆண்டு வருமானம் 10,000-க்கு மேல் இருக்கக்கூடாது. மேலும் ஒப்புதளில் 30 சதவீதம் ஆதிதிராவிடப் பழங்குடியினர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது.

8. ஆரம்பத்திலிருந்து அளிக்கப்பட்ட உதவி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு. | ஆண்டுக் குரிய இலக்கு. | பெறப் பட்ட விண்ணப் பங்களின் எண்ணிக்கை. | வங்கி களுக்கு பரிந் துரைக்கப் பட்ட விண்ணப்பங் களின் எண்ணிக்கை. | வங்கி களால் ஒப்புதல ளிக்கப் பட்டவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1983-84.. | 17,500 | 1,92,761 | 33,920 | 22,162 |
| 1984-85.. | 21,500 | 1,71,614 | 28,790 | 22,500 |
| 1985-86.. | 1,8100 | 97,868 | 23,038 | 18,72 |



| ஆண்டு. | ஆண்டுக் குரிய இலக்கு. | பெறப் பட்ட விண்ணப் பங்களின் எண்ணிக்கை. | வங்கி களுக்கு பரிந் துரைக்கப் பட்ட விண்ணப்பங் களின் எண்ணிக்கை. | வங்கி களால் ஒப்புதல ளிக்கப் பட்டவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1986-87.. | 18,100 | 1,01,667 | 26,865 | 18,448 |
| 2987-88.. | 950 | 74,257 | 15,255 | 9,278 |
| 1988-89.. | 18,100 | 83,626 | 24,216 | 4,602 |

(31-1-1989 முடிய)

| ஆண்டு. | | தொகை (ரூபாய் இலட்சத்தில்.) | வங்கிகளால் கடன் வழங் கப்பட்டவை. (எண்ணிக்கை.) | தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| (1) | | (6) | (7) | (8) |
| 1983-84.. | .. | 3,240.00 | 18,080 | 2,168.81 |
| 1984-85.. | .. | 4,181.00 | 17,381 | 3,225.12 |
| 1985-86.. | .. | 3,269.00 | 12,377 | 2,121.19 |
| 1986-87.. | .. | 3,832.00 | 12,259 | 2,361.98 |
| 1987-88.. | .. | 1,766.00 | 6,643 | 1,217.94 |
| 1988-89.. | .. | 797.68 | 2,326 | 396.34 |

(31-1-1989 முடிய).

ஒப்பளிப்புகள் ஓராண்டு காலத்திற்கு உரியவையாகையால் ஒப்பு தலளிக்கப்பட்ட அனைத்திற்கும் பணம் கிடைக்கச் செய்யும் நோக்குடன் பல்வேறு நிலைகளில் வங்கிகளுடன் தொடர்பு கொள்ளப்படுகிறது. இது சம்பந்தமாக இந்திய ரிசர்வ் வங்கி யின் உதவியும் பெறப்படுகிறது.

(உ) மாவட்டத் தொழில் மையக் கடன்:

9. 1971 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின் படி 1 இலட்சம் வரை மக்கட் தொகை கொண்ட இடங் களிலுள்ள சிறு தொழில்களுக்கு மாநில நிதி நிறுவனங்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து தேவையான உதவியினைப் பெறுவதற்கு அவற்றின் பங்காக கொள்வதற்கென இந்த முன்பண உதவித் தொகை கடனாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 25,000 வரை கடன் அளிக்கப்படுகிறது. இத்தொகை 6 முதல் 10 ஆண்டுத் தவணைகளில் குறைந்த வட்டி விகிதத்தில் (ஆண்டொன்றுக்கு 6 சதவீதம்) திருப்பி வசூலிக்கப்படும்.

10. கடந்த மூன்று ஆண்டுகளின் இலக்குகளும், சிறு தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டவையும், பின்வருமாறு:—

| ஆண்டு. (1) | இலக்கு. (2) | ஒப்பளிப்பு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) | பயன் பெற்ற சிறு தொழில்களின் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| 1986–87 | .. 72.00 | 73.80 | 396 |
| 1987–88 | .. 72.00 | 71.94 | 340 |
| 1888–89 (31–1–1989 முடிய) | .. 72.00 | 45.54 | 174 |

(ஊ) ஊரக கைவினைஞர் திட்டம்:—

11, இது மைய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். ஊரகப் பகுதிகளில் தகுதி வாய்ந்த நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சுயவேலைவாய்ப்பு அல்லது வேலை பெறும் நோக்கத்துடன் வாய்ப்பினை உருவாக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் கீழ் பயிற்சி பெறுபவருக்கு மாதமொன்றுக்கு ரூ. 700 உதவித் தொகையும், பயிற்சிக் காலத்தில் மூலப் பொருட்கள் உபயோகத்திற்கென மாதமொன்றுக்கு ரூ. 50–ம் பயிற்சி முடிக்கப்பட்டவுடன் கருவிகள் வாங்குவதற்கென ரூ. 250–ம் உதவித் தொகையாக அளிக்கப்படுகின்றன. தொழிற் கூடங்கள் கட்டுவதற்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 3,000 உதவித் தொகையும், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 5,000 வரையும் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இதைப் போலவே இயந்திர சாதனங்கள் நிறுவுவதற்கும் உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

12. ஏற்கனவே உள்ள தொழில் பயிற்சி பள்ளிகள், பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் அளிக்கப்படும். பயிற்சியளிப்பதற்கென்றே தனிப்பட்ட முறையில் ஏற்பாடு செய்து, பயிற்சியளிப்பவருக்கு ஊதியத் தொகை வழங்கவும் திட்டத்தில் வாய்ப்பு உள்ளது.

13. கடந்த இரண்டாண்டுகளில் இத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட உதவி விவரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு. (1) | ஒதுக்கப்பட்ட நிதி. (2) | செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) | பயனடைந்தவர்களின் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| 1987–88 | 14 | 13.53 | 1,657 |
| 1988–89 (31–1–1989 வரை) | 19 | 8.97 | 1,620 |



எ. மாவட்டத் தொழில் மையங்களால் மேற்கொள்ளப்படும் இதர உதவித் திட்டங்கள்:—

வட்டியில்லா விற்பனை வரிக் கடன்: —

14. திருத்தப்பட்ட திட்டத்தின் கீழ், குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளுக்கு வெளியில் அமைந்துள்ள தொழில்களுக்கு நிலையான சொத்துக்களில் 8 சதவீதம் அல்லது ரூ. 1.25 இலட்சம் அல்லது செலுத்தப்பட்ட விற்பனை வரி இதில் குறைவான தொகை கடனாக வழங்கப்படும். இத் தொகை சிறு தொழில் 6 ஆண்டுகளுக்கு செலுத்தும் விற்பனை வரியின் அடிப்படையில் மொத்தம் ரூ. 7.5 இலட்சத்திற்கு மேற்படாதவாறு இருக்கும்.

15. இதன் பயனை மேம்படுத்தும் நோக்குடன் அரசு அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ள மாற்றத்தின்படி 9–5–88-க்குப் பிறகு உற்பத்தியைத் துவங்கும் தொழில்களுக்கு உற்பத்தி துவங்கப்பட்ட நாளிலிருந்து முதல் மூன்றாண்டுகளுக்கு வசூலிக்கப்பட்ட விற்பனை வரியை (அதற்கு உரிய அளவு வரை) அரசுக்கு செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு அடுத்த மூன்றாண்டுகளுக்கு செலுத்தப்பட்ட விற்பனைவரி அல்லது நிலையான சொத்துக்களில் 8 சதவீதம் அல்லது ஆண்டொன்றுக்கு ரூ, 1.25 இலட்சம் ஆகியவற்றில் குறைவான தொகை கடனாக அளிக்கப்படும். இதன் கீழ் ஆறு ஆண்டுகளுக்கும் சேர்த்து அளிக்கப்படக்கூடிய உதவி ரூ. 7.5 இலட்சத்திற்கு மிகாது.

16. உதவி பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| ஆண்டு. (1) | ஒதுக்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்) (2) | வழங்கப்பட்ட தொகை. (ஒப்பளிப்பு.) (3) |
|---|---|---|
| 1987–88 .. .. | 50.00 | 50.00 |
| 1988–89 .. .. (31–1–1989 முடிய) | 150.00 | 84.45 |

2. குறிப்பிட்ட தொழில்களுக்குரிய மாநில மூலதன உதவித் தொகை மற்றும் சிறப்பு சலுகை தொகை:—

17. அரசினால் பின் தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட வட்டங்களில் அமைந்துள்ள தொழில்களின் விரிவாக்கத்திற்கும், புதிய தொழில்களுக்கும் மூலதன முதலீட்டில் 15 விழுக்காடு

அல்லது ரூ. 15 இலட்சம், இதில் எது குறைவான தொகையோ அது உதவித் தொகையாக வழங்கப்படும். பின்வரும் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழில்களுக்கு 10 சதவீத சிறப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

(அ) மின்னணுத் தொழில்

(ஆ) மருந்துகள் தொழில்

(இ) மோட்டார் வாகன துணைத் தொழில்கள்

(ஈ) வீடுகளிலும் மற்றும் தொழிற்சாலைகளிலும் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்துவதற்கென சேகரிக்க உதவும் கருவிகளை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள தொழில்கள்.

(உ) தோல் தொழிற்சாலைகளால் நிறுவப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு அமைப்புகள். இந்த உதவித் தொகை மைய மாநில அரசுகளின் முதலீட்டு உதவித் தொகை கிடைக்கப் பெறாத பகுதிகளில் அளிக்கப்படும். வளர்ச்சிக்கு அதிக வாய்ப்புள்ள மின்னணு, தோல், மோட்டார் வாகன துணைத் தொழில்கள் போன்றவற்றிற்கு உயர் சலுகை பின் தங்கிய பகுதிகளில் அளிக்கப்படுகிறது. இவற்றுள் அடங்கும் உதவித் தொகைகளும் உதவி விவரங்கள் பின்வருமாறு:—

| ஆண்டு (1) | இலக்கு. (2) | சாதனை. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1987–88 .. .. | 10.00 | 10.00 |
| 1988–89 (31–1–1989 வரை) .. .. | 35.00 | 19.58 |

3 மின் கட்டண சலுகை:

(18) 1–1–1980–க்குப் பிறகு உற்பத்தியைத் துவங்கிய குறைந்த மின் அழுத்த சக்தியைப் பயன்படுத்துகின்ற பதிவு செய்யப்பட்ட அனைத்து சிறு தொழில்களுக்கும் மின் கட்டணச் சலுகை அளிக்கப்படும். இச்சலுகை உற்பத்தி துவக்கியதிலிருந்து முதல் மூன்றாண்டுகளுக்கு செலுத்தப்பட்ட மின் கட்டணத்தில் 30 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 10 சதவீதம் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுகளுக்கு முறையே உதவித் தொகையாக வழங்கப்படும். இந்தக் கட்டணச் சலுகை



புறநகர் பகுதிகள் மற்றும் மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி கோயமுத்தூர் ஆகிய நகரங்களில் 8 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பகுதிகள் தவிர மாநில முழுவதும் கிடைக்கப்பெறும் உதவி பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு. (1) | இலக்கு. (2) | சாதனை. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1987–88 .. .. | 60.00 | 60.00 |
| 1988–89 (31–1–1989 வரை) .. .. | 60.00 | 48.56 |

4. நலிவுற்ற சிறு தொழில்களுக்கு புத்துயிரூட்டுவதற்குரிய முன் பண உதவி:—

(19) நலிவுற்ற சிறு தொழில்களுக்கு புத்துயிர் ஊட்டும் பொருட்டு முன் பணமாக கடன் அளிக்கும் பணியினை 1–11–1987 முதல் இந்த இயக்ககம் மேற்கொண்டுள்ளது. இதன் கீழ் அளிக்கப்படும் அதிகப்படியான தொகை ரூ. 50,000 ஆகும். 1988–89–ல் இதற்கு 6 சதவீத வட்டி விதிக்கப்படுகிறது. இதனை நான்காண்டு இடைவெளிக்குப் பிறகு ஒன்பதாண்டுகளில் திருப்பி செலுத்த வேண்டும்.

(20) ஒப்புதல் மற்றும் வழங்கப்பட்ட தொகை விவரங்கள் பின்வருமாறு:—

| ஆண்டு. (1) | ஒப்புதலளிக்கப்பட்டவை. எண்ணிக்கை (2) | ஒப்புதலளிக்கப்பட்டவை. தொகை. (3) | வழங்கப்பட்டவை. எண்ணிக்கை (4) | வழங்கப்பட்டவை. தொகை. (5) |
|---|---|---|---|---|
| 1–11–1987 முதல் 31–3–1988 | 18 | 6.75 | 17 | 6.56 |
| 1988–89 (31–1–1989) | 73 | 13.80 | 27 | 5.49 |

பொறியியல் தொழில் முனைவர்களுக்குரிய வட்டி சலுகைத் திட்டம்:

(21) வேலை வாய்ப்பு பெற்றிராத பொறியியல் கல்வி பயின்றோர் சொந்தமாக சிறு தொழில்களை அமைப்பதற்கு வழி வகுக்கும் பொருட்டு, உதவி அளிக்கும் திட்டமொன்றை இந்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் கீழ் இத்தகைய தொழில் முனைவோர் வங்கிகள், மாநில நிதி நிறுவனங்கள் மற்றும் இதர நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து பெறும் கடன்தொகைக்கு செலுத்த வேண்டிய வட்டியின் ஒரு பகுதி உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

(22) அதாவது ஆண்டொன்றுக்கு 7 சதவித வட்டி அல்லது நிதி நிறுவனங்களால் வசூலிக்கப்படும் வட்டி ஆகியவற்றிற்கும் இடையே உள்ள வித்தியாசம் உதவித் தொகையாக அமையும். இது ஆண்டொன்றுக்கு ரூபாய் 20,000க்கும் அதிகமாகாது.

(23) உதவித் தொகையானது எந்தவொரு தொழிலுக்கும் ஓராண்டிற்கு ரூபாய் 20,000-க்கும் அதிகமாக இருக்காது.

(24) குறிப்பிட்ட பின் தங்கிய பகுதிகளில் அமைந்திடும் தொழில்களுக்கு வட்டிச் சலுகை 5 ஆண்டுகளுக்கும், இதர பகுதி களில் அமைக்கப்பட்டால் வட்டிச் சலுகை மூன்றாண்டுகளுக்கும் அளிக்கப்படும்.

(25) துவக்கத்தில் மாநில அரசால் வழங்கப்படும் மேற்கண்ட வட்டிச் சலுகை, விதிமுறைகளின்படி, மைய அரசிடமிருந்து பிறகு திரும்ப வசூலித்துக் கொள்ளப்படும்.

(26) நடப்பாண்டில் மாநில அரசு தகுதியுடைய பொறியியல் தொழில் முனைவர்களுக்கு ரூபாய் 15 இலட்சம் வட்டிச் சலுகை யாக அளிக்க ஒப்புதலளித்துள்ளது.

(27) 31—3—1989-க்குள் நிதி முழுவதையும் பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எதிர்காலத் திட்டங்கள்:

(28) தற்பொழுது மாவட்ட தொழில் மையங்களின் பணி வரி வடைந்துள்ளது. தொழில்களைப் பதிவு செய்வது மட்டுமல்லா மல், தேவையான அனுமதிகளைப் பெறுதல், அரசால் வழங்கப் பட்ட சலுகைகளின் பயன் சிறு தொழில்களுக்கு அளிப்பதற்கும் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றில் அவற்றின் பொறுப்பு அதிகரித் துள்ளது. சிறு தொழில் துறையில் சுமார் 10 சதவித வளர்ச்சி யினை அடைந்திடுதல் இவை முக்கிய பங்கினை வகித்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள தொழில்களின் வளர்ச்சியினை மேம்படுத்த சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

2. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்:

(29) கிராமக் கைவினைஞர்களுக்கு பயனுள்ள வேலைவாய்ப் பினை உருவாக்குவதில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய மான பங்கினை வகிக்கின்றன. நலிந்த பிரிவினர், சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோர், மர வள்ளிக் கிழங்கு பயிரிடு விவசாயிகள் சிறு தொழிலதிபர்கள் ஆகியோர் அவர்தம் பொருளாதார நிலை யினை மேம்படுத்திக் கொள்ள உதவுவதற்கு இவை மிகவும் உகந்த சாதனமாக அமைந்துள்ளன.



தொழில் கூட்டுறவு சங்கங்களின் பணிகளாவன;—

(30). (அ) தொழிலாளர்கள், கைவினைஞர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்பளிப்பது.

(ஆ) அமைந்திடும் சங்கங்களுக்கு தகுதிக்குட்பட்டு நிதி யுதவி, தொழில் நுட்ப உதவி விற்பனை உதவி மற்றும் தகுதி நிர்வாக உதவி வழங்குதல்.

(இ) உபயோகிப்பாளர்களின் நலனுக்காக தொழில் நட வடிக்கைகளில் ஈடுபடுவது.

(ஈ) பெரிய தொழில் நிறுவனங்களில் இடைத் தரகர்களால் தொழிலாளர்கள் ஏமாறுவதைத் தடுப்பது.

(31). கடந்த மூன்றாண்டுகளில் சங்கங்களின் உற்பத்தி, விற் பனை மற்றும் இலாபத்தில் செயல்படுபவற்றின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு. | உற்பத்தி. | விற்பனை. | இலாபத்தில் செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1986–87 .. | 8,338.64 | 10,423.30 | 228 |
| 1987–88 .. | 8,722.12 | 11,508.60 | 225 |
| 1988–89 .. | 5,946.20 | 7,288.20 | 201 |

(31—12—1988 வரை).

1987–88-ல் சரிவர செயல்பட முடியாத 50 சங்கங்கள் மூடப் பட்டன. இந்த ஆண்டிலும் 31-12-1988 வரை இதுபோன்ற 50 சங்கங்கள் கலைக்கப்பட்டுள்ளன.

(32). தொழிற் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை, செயல்படாமலும் மற்றும் இலாபகரமாக செயல்பட முடியாத நிலையிலுள்ள சங்கங்களை மூடுவதற்கும் ஏற்கெனவே உள்ளவற் றின் செயல்திறனை மேம்படுத்தவும் முக்கியத்துவம் அளிக்கப்பட் டுள்ளது.

(அ) தேயிலைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்:

நீலகிரியின் பொருளாதாரத்தின் தேயிலை முக்கியமான ஓர் இடத்தை வகிக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் அரை ஏக்கர் முதல் 25 ஏக்கர் வரை மொத்தம் 30,000 ஏக்கர் நிலத்தைச் சொந்த மாகக் கொண்ட சுமார் 20,000 சிறு தேயிலை பயிரிடுவோர் உள்ளனர். தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பின் வரும் நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

[1989 ஏப்ரல் 21

1. சிறிய அளவில் தேயிலைப் பயிரிடுவோருக்கு அவர்களின் பசுந்தேயிலைக்கு நியாயமான விலை அளிப்பது.

2. உரங்கள், பூச்சுக்கொல்லி மருந்துகள் மற்றும் இரசாயனப் பொருட்கள் வழங்கி பயிர்களைக் காப்பாற்றுவது.

3. நவீன விவசாய முறைகளில் பயிற்சி அளிப்பதோடு தேயிலையின் உற்பத்தி திறனை உயர்த்த உதவுதல்.

நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்
சாலைகள் உள்ளன. இவற்றில் 13 தொழிற்சாலைகள் தேயிலை
உற்பத்தி செய்வதன் மூலம் அவற்றின் உறுப்பினர்களுக்கு சேவை
செய்கின்றன. சின்னக் கோரை மற்றும் பிக்கட்டி ஆகிய இடங்
களில் எஞ்சிய இரு கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்
அமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் தேயி
லைத் தொழிற்சாலைகள் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளன.

| ஆண்டு. | தொழிற் சாலைகளின் எண்ணிக்கை. | உறுப்பினர்களின் எண்ணிக்கை. | சிறுதேயிலை பயிரிடுவோர் பெற்றுள்ள மொத்த நிலம். | இண்ட்கோ தேயிலை தொழிற் சாலை பெற்றுள்ள நிலம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1986–87 .. | 15 | 9,818 | 20,000 | 18,840 |
| 1987–88 .. | 15 | 10,199 | 35,000 | 20,625 |
| 1988–79 .. | 15 | 11,530 | 30.000 | 21,51[illegible] |
| (டிசம்பர் 1988 வரை) | | | | |

| ஆண்டு. | கொள்முதல் | உற்பத்தி (இலட்சம் கிலோ) | விற்பனை. (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) |
| 1986–87 .. | 107.85 | 75.16 | 1,377.60 |
| 1987–88 .. | 379,83 | 88.78 | 1,616.40 |
| 1988–89 .. | 363.84 | 86.58 | 1.564.80 |
| (டிசம்பர் 1988 வரை). | | | |

இன்கோசர்வ்: —

'இன்கோசர்வ்' என்றழைக்கப்படுகின்ற நீலகிரி மாவட்ட
சிறிய அளவில் தேயிலைப் பயிரிடுவோர் தொழிற் கூட்டுறவுச்
சேவைச் சங்கம் 1965-ல் அமைக்கப்பட்டது. இது 15 தேயிலைக்
கூட்டுறவுத் தொழிற்சாலைகளுக்கு முதன்மைச் சங்க



1989 ஏப்ரல் 21]

மாகும். தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு தொழில் நுட்ப
மற்றும் விற்பனை உதவி அளிக்கும் நோக்கத்துடன் இச்சங்கம்
அமைக்கப்பட்டது. தேயிலையைச் சேமித்து வைப்பதற்குரிய
சேமிப்பு கிடங்கு வசதிகளையும் இது அளித்து வருகிறது.

இந்த ஆண்டு, கல்கத்தாவிலுள்ள தேயிலை வாரியம் விற்
பனை உதவியளிக்கும் நோக்குடன் தேயிலையை பெட்டிகளில்
அடைக்கும் ரூபாய் 8.50 இலட்சம் மதிப்புள்ள தானியங்கி இயந்
திரம் ஒன்றை வட்டியின்றி வழங்கி இன்கோசர்விற்கு உதவி
யுள்ளது. இந்த இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. 500 கிராம், 250
கிராம் மற்றும் 100 கிராம் பெட்டிகளில் அடைத்து விற்பதற்குரிய
வடிவமைப்புகள் (Designs) தயாரிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்கள் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள்:

மரவள்ளிக் கிழங்கிலிருந்து சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்
தயாரிக்கும் இத் தொழிலில் 600-க்கும் அதிகமான தொழில்கள்
ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டில் மரவள்ளிக் கிழங்கு பயிராகும்
50,000 ஹெக்டேர் நிலப் பரப்பில் 28,000 ஹெக்டேர் நிலப்
பரப்பு சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களிற் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் சவ்வரிசி மற்றும் மாவுப்
பொருட்களில் பெரும்பகுதி வட மாநிலங்களில் பயன்படுத்தப்
படுகின்றன. நிதி நெருக்கடியின் காரணமாக சவ்வரிசி மற்றும்
மாவுப் பொருள் தயாரிப்பாளர்கள் பொருள்களை இருப்பு
வைத்துக் கொள்ள முடிவதில்லை. இதனால் அவர் தம் உற்பத்
திப் பொருள்களுக்கு நியாயமான விலை பெற இயலாமல் இடைத்
தரகர்களால் ஏமாற்றப்படுகிறார்கள். இதனால் இப்பொருளுக்கு
நிலவும் உயர்ந்த விலையின் பயன் உற்பத்தியாளர்களுக்கு கிடைப்
பது இல்லை.

மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியாளர்களை இத்தகையர்களது
பிடியிலிருந்து விடுவித்து அவர்களின் உற்பத்திப் பொருளுக்கு
நல்லவிலை பெற வழி வகுக்க வேண்டுமென்ற நோக்குடன்.
1981–82-ல் சேலம் மாவட்டத்தில் சவ்வரிசி மற்றும் மாவுப்
பொருள் தயாரிப்பாளர்களின் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்று
அமைக்கப்பட்டது. ''சாகோ சர்வ்'' என்றழைக்கப்படுகின்ற
இச்சங்கம் 1982–83-லிருந்து செயல்பட்டு வருகிறது. தர்மபுரி
மாவட்டத்திலுள்ள சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்
பாளர்களின் நலனுக்காக ''ஸ்டார்ச்சர்வ்'' என்றழைக்கப்
படும் இரண்டாவது சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இச்
சங்கம் 1982–83-ல் உற்பத்தியைத் துவங்கியது:

இச்சங்கங்கள் அமைக்கப்பட்ட பிறகு, விற்பனைச் சந்தையில்
உற்பத்தியாளர்களின் செயல்திறன் பெருமளவிற்கு உயர்ந்
துள்ளது.

சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தொழிலில் ஈடுபட்டுள்ள 630க்கும் மேற்பட்ட தொழில்கள் இச்சங்கத்தில் உறுப்பினர் களாக உள்ளன. இவற்றின் உற்பத்திப் பொருள்கள் இச்சங்கத் தால் விற்கப்படுகின்றன. விற்பனை நடவடிக்கைகளைத் தவிர ''சாகோ சர்வ்'' பழுது பார்த்தல் வேலைக்குரிய பொருள் களைத் தருவித்து தருதல் உள்ளிட்ட பல பணிகளையும் உறுப் பினர் சங்கங்களின் நலனுக்காக மேற்கொள்ளுகிறது.

''சாகோ சர்வ்'' மற்றும் ''ஸ்டார்ச் சர்வ்'' அவை அடைந் துள்ள முன்னேற்றம் பற்றிய விவரங்கள் கீழே உள்ளன.

| ஆண்டு. | சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் உற்பத்திக் கொள்முதல் மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்). | விற்பனை மதிப்பு. |
|---|---|---|
| 1986–86 . .. .. | 3,908.24 | 4,68?.30 |
| 1987–88 .. .. .. | 4,216.41 | 4,684.00 |
| 1988–89 .. .. .. (31—12—1988 முடிய). | 2,065.60 | 2,086.40 |

(இ) தீப்பெட்டித் தொழில்:

தமிழ்நாட்டில் கடந்த 50 ஆண்டுகளாக தீப்பெட்டித்தொழி நடைபெற்று வருகிறது. பாதுகாப்பான தீக்குச்சிகள் தயாரிப் பதில் தொழிற் கூட்டுறவுத் துறையில் சிறப்பான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது,

வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள கிராம மகளிரின் நல னுக்காக சிறு தீப்பெட்டித் தயாரிப்பாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் தீப்பெட்டிப் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் துவக்கப்பட்டுள்ளன. தீப்பெட்டிப் பணியாளர்கள் சங்கங்கள் அருகிலுள்ள தீப்பெட்டிச் சேவை சங்கங்களின் உறுப்பினர்களாகப் பதிவு பெற்றுள்ளன. இதன் நோக்கம் தீப்பெட்டிப் பணியாளர்களுக்கு பயனுள்ள முறையில் தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைத்திட வேண்டுமென்பதாகும்.

பணியாளர் சங்கங்களுக்கு மூலப் பொருட்களை வழங்குதல் அவற்றின் விற்பனைப் பொருள்களுக்கும், சேவைச் சங்கங்களுக் கும் நல்ல விலை, உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிக்கும் நல்ல விலை கிடைக்கக்கூடிய படி விற்பனை செய்யும் பொறுப்பேற்றுக் கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகளை இந்த தீப்பெட்டிச் சேவை சங்கங்கள் மேற்கொள்ளுகின்றன.





சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்:

கடந்த மூன்றாண்டுகளில் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் செயல் பற்றிய விவரங் கள்:

| விவரங்கள். | 1986–87. | 1987–88. | 1988–89 (31–12–1988 வரை.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சிறு தீப்பெட்டி உற்பத்தி யாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | | | |
| உற்பத்தி: | | | |
| (அ) பெறப்பட்ட கட்டு களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 13.70 | 11.94 | 9.47 |
| (ஆ) மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). | 883.11 | 796.29 | 689.09 |
| (இ) மூலப்பொருள் கொள்முதல் (ரூபாய் இலட்சத்தில்). | 486.02 | 416.26 | 360.25 |
| மொத்தம் .. | 1369.13 | 1212.55 | 1049.34 |
| விற்பனை: | | | |
| (அ) கட்டுகளின் எண் ணிக்கை (இலட்சத்தில்) | 13.86 | 12.55 | 8.83 |
| (ஆ) மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). | 1031.00 | 943.48 | 746.53 |
| (இ) மூலப் பொருள் (ரூபாய் இலட்சத்தில்). | 504.26 | 748.43 | 415.27 |
| மொத்தம் .. | 1535.26 | 1691.91 | 1161.80 |

தீப்பெட்டிப் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்:

1988 மார்ச் இறுதியில் தமிழ்நாட்டில் 25 தீப்பெட்டிப் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இச் சங்கங்கள் ஆதி திராவிடர் மற்றும் கிராம மகளிரின் நலனுக்காகவே அமைக்கப்பட்டன. தீக்குச்சி தயாரிப்பில் ஈடுபட்டுள்ள இவை ஒவ்வொன்றும் சுமார் 20 பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்பை அளிக்கின்றன. அனைத்து தீப்பெட்டிப் பணியாளர்களின் உறுப்பினர்களாக உள்ளன.

நிதியுதவி:

தீப்பெட்டிச் சங்கங்களுக்கு (சேவை மற்றும் பணியாளர் சங்கங்களுக்கு) அளிக்கப்பட்ட நிதியுதவி பின்வருமாறு:—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | அரசு பங்கு .. .. .. | 21.00 |
| 2. | பங்கு மூலதனக் கடன் .. .. | 88.66 |
| 3. | தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியின் நிதியுதவி. | 187.00 |
| 4. | கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்திலிருந்து வட்டிச் சலுகை. | 732.29 |
| 5. | மிகச்சிறிய தொழில் திட்டத்தின் கீழ் சிறு தொழிற்கூடங்கள் கட்டுவது. | 188.00 |
| 6. | அடிப்படை வசதிகளை அமைத்திட .. | 16.54 |
| 7. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி. | 31.20 |

தமிழ்நாடு மாநிலத் தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம், சாத்தூர், காமராஜர் மாவட்டம்.

தீப்பெட்டி சேவைச் சங்கங்களுக்கு மூலப் பொருள் வழங்குவது மற்றும் அவற்றால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளை விற்பனை செய்வது போன்றவற்றை மேற்கொள்ளுவதற்கென தமிழ்நாடு மாநிலத் தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. குன்றக்குடியிலுள்ள இச்சங்கம், குன்றக்குடி பாரதி தொழில் கூட்டுறவுச் சேவை சங்கத்திடமிருந்து பொட்டாசியம் குளோரேட் கொள்முதல் செய்து அதனை உறுப்பினர் சங்கங்களிடையே பகிர்ந்தளித்தல்' போன்ற பணிகளை மேற்கொள்ளுகிறது.



குன்றக்குடி பாரதி குளோரேட் தொழிற் கூட்டுறவுச் சங்கம், குன்றக்குடி, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்:

சிறு தீப்பெட்டி சேவைச் சங்கங்களின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் குன்றக்குடி பாரதி குளோரேட் தொழிற் கூட்டுறவுச் சங்கம் 10-12-1980ல் பதிவு செய்யப்பட்டு 26-12-81-ல் உற்பத்தியைத் துவக்கியது. ரூ. 11.31 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் கொண்ட இச்சங்கத்தில் 42 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கத்தின் பங்கு மூலதனத்தில் ரூ. 300 இலட்சத்தை அரசு செலுத்தியுள்ளது. பொட்டாசியம் குளோரேட்டை உற்பத்தி செய்து, சாத்தூரிலுள்ள தமிழ்நாடு மாநில தீப்பெட்டிக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தின் மூலம் சிறு தீப்பெட்டித் தயாரிப்பாளர்களுக்கு வழங்குகிறது.

இத்தொழிற்சாலையின் உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 400 மெட்ரிக் டன்னிலிருந்து 600 மெட்ரிக் டன்னாக உயர்த்தும் பொருட்டு, இத்தொழிற்சாலையின் விரிவாக்கத்திற்கு அரசு ரூ. 4 இலட்சம் ஒப்புதலளித்துள்ளது. (இதில் அரசு பங்கு ரூ. 2 இலட்சம், அரசுக் கடன் ரூ. 2 இலட்சம்) இத்தொழிற்சாலையின் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஈ) கயிறு தொழில்:

இந்தியாவில் பழுப்பு நார் உற்பத்தியில் தமிழ்நாடு முதலாவதாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் ஏராளமாக கிடைக்கும் தென்னை மட்டைகளை தொழிலியல் தேவைக்கு பயன்படுத்துவதன் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும் பொருட்டு 1980ஆம் ஆண்டிலிருந்து தனியார் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் கயிறு தொழிற் சாலைகள் அமைப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியில் 30,000 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் பெற்றிருந்த 256 தனியார் கயிறு தொழில் நிலையங்கள் இருந்தன. ஏழாவது திட்ட காலத்தில் 1988ஆம் ஆண்டு மார்ச் இறுதியில், தனியார் கயிறு தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 401 ஆக உயர்ந்தது. இவற்றின் மொத்த உற்பத்தி திறன் 50,000 மெட்ரிக் டன் ஆகும். ஆண்டொன்றுக்கு பழுப்பு நாரின் உற்பத்தி 46,000 மெட்ரிக் டன்னாக இருந்தது என மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தொழிற் கூட்டுறவுத் துறையில் கயிறு தொழில் சிறப்பான வளர்ச்சியைக் கண்டுள்ளது. ஆறாவது திட்ட கால இறுதியில் ரூ. 66 இலட்சம் மதிப்புள்ள கயிறு பொருட்களை உற்பத்தி செய்து வந்த 60 கயிறு தொழில் நிலையங்கள் இருந்தன. ஆனால், 1988 மார்ச்சு இறுதியில் ரூ. 92 இலட்சம் மதிப்புள்ள கயிறு மற்றும் கயிறு பொருட்களை உற்பத்தி செய்யும் 75 கயிறு சங்கங்கள் இருந்தன.

! முன்பெல்லாம், கயிறு நூலிழை பின்னும் தொழில் நிலையங் [1989 ஏப்ரல் 21
கள் மட்டுமே இருந்தன. ஆனால் இத்திட்ட காலத்தில், விலை
மதிப்பூட்டப்பட்ட கயிற்றுப் பாய்கள் மற்றும் கயிறு விரிப்பான்
கள், சுருள் கயிறு, இரப்ப. கலந்த கயிறு ஆகியவைகள் தயாரிப்
பதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்
நாட்டில் 20 சுருள் கயிறு தொழில் நிலையங்களும், 11 பாய்
மற்றும விரிப்பான்கள் தொழில் நிலையங்களும் (இவற்றில் ஒன்று
விசைத்தறி பிரிவில் உள்ளது) மற்றும் 3 இரப்பர் கலந்த கயிறு
நிலையங்களும் உள்ளன.

தமிழ்நாட்டில், கயிறுத் தொழிலின் வளர்ச்சிக்காக பல்
வேறு திட்டங்களின்கீழ் இதுவரை ரூ.104 இலட்சம் ஒப்புதல்
அளிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் கயிறு சங்கங்க
ளின் செயல் பற்றிய விவரங்கள்:

| ஆண்டு. (1) | உற்பத்தி. (2) | விற்பனை. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1986–87 .. .. .. | 71.32 | 77.20 |
| 1987–88 .. .. .. | 91.62 | 96.40 |
| 1988–89 .. .. .. (31–12–1988 வரை). | 85.70 | 103.20 |

(உ) நிலக்கரி சேவைச் சங்கங்கள்:

நிலக்கரி மற்றும் கட்ட நிலக்கரி சேவைச் சங்கங்கள் ஒன்
பது உள்ளன. சென்னையில் ஒரு முதன்மைச் சங்கமும் உள்ளது.
இவை தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின்
பரிந்துரையின் பேரில் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரியை
கொள்முதல் செய்து, பங்கீடு அட்டை பெற்றுள்ள உறுப்பினர்
களுக்கு பகிர்ந்தளிக்கின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் இச்
சங்கங்களின் செயல் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:—

| ஆண்டு. (1) | கொள்முதல். (2) | விற்பனை. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1986–87 .. .. .. | 687.79 | 863.30 |
| 1987–88 .. .. .. | 645.97 | 815.80 |
| 1988–89 .. .. .. (1988 டிசம்பர் வரை). | 565.45 | 722.80 |



தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் நிலக்கரி:

சரக்கு வண்டிகள் போதாமையால் மாநிலத்தின் தேவையை நிறைவு செய்யும் அளவிற்கு இம்முக்கிய மூலப்பொருட்களைப் பெறுவதில் பிரச்னையுள்ளது. இதனால் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்களுக்கு போதுமான அளவிலும், தடையின்றியும் நிலக்கரி வழங்குவதற்காக ஏற்கனவே உள்ள சேவைச் சங்கங்கள் மூலம் 4 நிலக்கரி கிடங்குகளை அமைப்பதென உத்தேசிக்கப்பட்டது.

கோயம்புத்தூர் சிறு தொழில் கூட்டுறவு சேவைச் சங்கம் எடை இயந்திரத்துடன் கூடிய நிலக்கரிச் சேமிப்புக் கிடங்கினை அமைத்துள்ளது. மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் மூன்று சேமிப்புக் கிடங்குகள் நிறுவும் பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

ஏற்கனவே உள்ள சங்கங்களின் மூலம் இது போன்ற கிடங்குகளை சேலம், வேலூர் மற்றும் செங்கற்பட்டு (இருப்புசென்னை) ஆகிய இடங்களில் அமைக்கும் பணி முடியுந்தருவாயில் உள்ளது.

(ஊ) பாலிதீன்:

தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியத்தில் தொடர்ந்து வேலையளிக்கும் பொருட்டு பாலிதீன்; தையற் வேலை, உலோகப் பொருட்கள், தோல் பணி முதலிய தொழில்களில் பல்வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாலிதீன் போன்ற தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் மகளிருக்கு வேலையளித்து அவர்களின் குடும்ப வருவாயை அதிகரிக்க உதவுகின்றன. தற்போது "தமோனே எல்.டி.பி.இ." பைகள் தயாரிக்கின்றன. 19 கூட்டுறவுச் சங்கங்கள் வேளாண்மை மற்றும் வனத்துறைகளுக்கு "பாலிதீன்" பைகள் வழங்குகின்றன. தனியாரும் குறிப்பிடத் தக்க அளவில் இப்பைகளை வாங்க முன்வந்துள்ளனர்.

உரங்கள், விதைகள் ஆகியவற்றை கட்டி அனுப்புவதற்காக மதுராந்தகத்தில் ஒரு பாலிதீன் சாக்கு மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தை இத்துறை அமைத்துள்ளது. இச்சங்கங்களின் செயல் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | சங்கங்களின் எண்ணிக்கை. | இலாபத்தில் செயல்படும் சங்கங்கள். | உறுப்பினர்களின் எண்ணிக்கை. | விற்பனை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1986-87 .. .. | 19 | 12 | 1368 | 258.70 |
| 1987-88 .. .. | 19 | 14 | 1312 | 277.70 |
| 1988-89 .. .. | 19 | 14 | 1319 | 231.1 |

(1988 டிசம்பர் வரை).

பாலிதீன் சங்கங்களின் செயல்களை ஒருங்கிணைப்பதற்கும் அவற்றிற்கு மூலப்பொருட்கள், விற்பனை, தொழில் நுட்ப உதவி ஆகியவை அளிப்பதற்கும் "தமிழ்நாடு பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம்" எனும் சங்கம், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு 20-2-1987இல் பதிவு செய்யப்பட்டது.

(எ) தமிழ்நாடு மாநிலத் தொழிற் கூட்டுறவு வங்கி:

மாநிலத்திலுள்ள தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தாராள மாக நிதியுதவியளிக்கும் பொருட்டு, கூட்டுறவு அடிப்படையில் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி 1961-ல் அமைக்கப்பட்டது. தற்பொழுது இவ்வங்கியில் 497 நிறுவன உறுப்பினர்கள் (தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்) உள்ளனர். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 299.57 இலட்சமாகும். இதில் மாநில அரசின் பங்கு ரூ. 193.30 இலட்சம். அன்றைய விவரப்படி இவ்வங்கி 31-12-1988 அதன் வைப்புத் தொகையை ரூ. 575. 38 இலட்ச அளவிற்கு உயர்த்தியுள்ளது. முன் ஒதுக்கீடு (ரிசர்வ்) வகையில் ரூ. 253.40 இலட்சம் உள்ளது. 30-9-1988 வரை ரூ. 10.705 கோடி கடன் வழங்கியுள்ளது.

இருபதாண்டு கால தீவிர முயற்சியின் பயனாக இவ்வங்கியை தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மறு நிதி உதவித் திட்டத்தின்கீழ் பயன் பெற ரிசர்வ் வங்கி அக்டோபர் 1987ல் அங்கீகரித்துள்ளது. இதனால், சென்னை, நெல்லை-கட்ட பொம்மன் திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீண்ட காலக் கடனுதவி கிடைக்கும். இந்த அங்கீகாரத்தின் விளைவாக இவ்வங்கி, புதிய தொழில் திட்டங்களுக்கு குறைந்த வட்டியில் கடனுதவியும் தொழில் கூட்டுறவுத் துறையில் ஏற்கனவே உள்ள திட்டங்களை விரிவாக்குவதற்கு கடனுதவியும் அளிக்கும். இவ் வங்கியின் கிளை அலுவலகங்கள் கோவில்பட்டி, சாத்தூர், குன்னூர், மதுரை, திருச்சி, சேலம், வேலூர் மற்றும் நாகர் கோவில் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

எதிர்காலத் திட்டங்கள்;

ஏற்கனவே கூறியுள்ளபடி செயலிலுள்ள சங்கங்களை நிலை நிறுத்தி அவற்றை வலுப்படுத்துவதுதான் முக்கியமான குறிக் கோளாகும். எனவே; இச்சங்கங்களின் செயல் திறனை மேம் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விற்பனை வாய்ப்புக்களை மேம்படுத்தி விற்பனையை அதிகரிப்பதற்காக வல்லுநர்களைக் கொண்ட, தொழில் நுட்ப மேம்பாட்டுக்குழு, "இன்கோ சர்வில்" செயல்படத் துவங்கும். சவ்வரிசித் தொழிலைப் பொறுத்தவரை, தென் ஆற்காடு, தர்மபுரி,



மற்றும் சேலம் மாவட்டங்களில் மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் பொருட்டு, கூட்டுறவுத் துறையில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி சழகத்தின் நிதி உதவியுடன் ரூபாய் 10 கோடி செலவில் மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தி தொழில் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இந்நிறுவனத்தின் உதவியுடன் ரூ. 364 இலட்சம் செலவில் 27,000 மெட்ரிக் டன் சவ்வரிசி பொருள்களை சேமித்து வைப்பதற்குத்தக்க 11 சேமிப்புக் கிடங்குகளை கட்டு வதற்கான ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கயிறு துறையைப் பொறுத்தவரையில், கீழே உள்ள திட்டங் கள், 1989-90-ல் மேற்கொள்ளப்படும்:—

(1) தஞ்சாவூர் மாவட்டத்தில், தேசிய கயிறு மேம்பாட்டுக் சழகத்தின் கடன் உதவியுடன் ரூ. 131 லட்சம் மதிப்பில் ஒரு இரப்பர் கலந்த கயிறு தொழிற்சாலை அமைப்பது.

(2) பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள ராஜாமடம் கிராமத் தில் ரூ. 65 லட்சம் செலவில் ஒரு கயிறு தொழிற்பேட்டை அமைப்பது. இதே தொழிற்பேட்டையில் நவீன சாயத் தொழிற் சாலை ஒன்றும் நிறுவப்படும்.

(3) வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் 570 ஆதி திராவிடர்களின் நலனுக்காக, பாய்கள் மற்றும் விரிப்பான்கள் தயாரிக்கும் தொழில் நிலையங்களை கூட்டுறவுத் துறையில் அமைப்பதற்கு, 10 புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

(4) பழுப்புநார் தொழிலுக்கு நல்ல சந்தை வாய்ப்பினைப் பெறுவதற்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் கலந்த கயிறு தொழில் நிலையம் ஒன்று நிறுவப்படும்.

(5) தமிழ்நாட்டில் அதிக அளவில் கிடைக்கும் பழுப்பு நாரினை போதுமான அளவில் உபயோகித்துக் கொள்ள கூட்டுறவுத் துறையில் மேலும் 5 சுருள் கயிறு திட்டங்கள் செயல் படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் 1989-90-ல் கயிறு தொழில் பற்றி விரிவான ஆய்வு மேற்கொள்வதற்கும் கயிறு தொழிலின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு திட்டங்கள் தயாரிப்பதற்கும், கயிறு வாரியத்திற்கு ஒரு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

[1989 ஏப்ரல் 21

இராமநாதபுரம், சிதம்பரனார் மற்றும் பசும்பொன் தேவர் திருமகன் ஆகிய மாவட்டங்களில் நிலக்கரி மற்றும் கல்கரி விநியோகிப்பதற்காக, இம்மாவட்டங்களில் நிலக்கரிச் சேவைச் சங்கங்களை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

3. இரசாயனப் பிரிவு:

தொழில் வணிகத் துறையின் கீழுள்ள இரசாயனப் பிரிவு, மாநிலத்தில் இரசாயனத் தொழிலின் வளர்ச்சியை ஊக்குவித்து வருகின்றது. இப்பிரிவு கீழ்க்கண்ட வசதிகளை அளிக்கிறது:—

(1) அனைத்து தொழிலியல் மூலப் பொருட்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை பரிசோதனை மற்றும் பகுப்பாய்வு செய்வது;

(2) இரசாயனம் மற்றும் அது சார்ந்த தொழில்களுக்கு சோதனைக் கூட ஆய்வு மேற்கொள்ளுவது;

(3) வேண்டுகோளின் பேரில் தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்களுக்கு, பரிசோதனை செய்வதில் பயிற்சி அளிப்பது;

(4) இரசாயனம் மற்றும் அது சார்ந்த தொழில்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் தொழிலியல் விவரங்களை அளிப்பது;

(5) இரசாயனத் தொழில் திட்டத் தொகுப்புகள் வழங்குவது;

(6) உள்நாட்டில் கிடைக்கக் கூடிய மற்றும் இறக்குமதி செய்யப்படும் கிடைப்பதற்கரிய மூலப் பொருட்களை ஒதுக்கீடு பெறுவதில் உதவி புரிவது.

பரிசோதனை வசதிகள்.

பலவகைப்பட்ட தொழில்களின் தேவைகளுக்கேற்ப, விரிவான பரிசோதனை வசதிகளை அளிப்பதற்காக, கிண்டி, மதுரை, மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழில் வணிகத்துறை பரிசோதனை ஆய்வுக் கூடங்களை நிறுவியுள்ளது. கோயம்புத்தூரில் உள்ள ஆய்வுக் கூடம் 10 குதிரை திறன் வரை சக்தி கொண்ட விசைக் குழாய் மற்றும் "புட் வால்வுகள்" (Ford valves) ஆகிய வற்றை பரிசோதிக்கும் வசதிகளையும் கொண்டுள்ளது. மாநில கடல்படு இரசாயனம் மற்றும் உப்பு ஆராய்ச்சி நிலையம், கடல்படு சார்ந்த இரசாயனப் பொருட்களின் பரிசோதனைகளை மேற் கொள்வதோடு உப்பளங்களில் தரமுள்ள உப்பு தயாரிப்பதற்குரிய பரிசோதனை வசதிகளை அளிக்கிறது. சேலத்திலுள்ள சவ்வரிசி ஆய்வுக்கூடம், சவ்வரிசி மற்றும் மாவுப் பொருட்களின் பரிசோதனையை மேற்கொள்ளுகிறது.



1989 ஏப்ரல் 21]

இரசாயனப் பிரிவின் கீழுள்ள ஆய்வுக் கூடங்களால் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனை வசதிகளின் மூலம் பயன் அடைந்த தொழில் நிலையங்களின் எண்ணிக்கை கீழே உள்ளன:—

| ஆய்வுக் கூடத்தின் பெயர். | சனவரி 1989 வரை பரிசோதனை செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை. | சனவரி 1989 வரை வசூலிக்கப்பட்ட பரிசோதனை கட்டணம். | 1988–89 ஆம் ஆண்டிற்கு சனவரி 1989 வரை பயன் அடைந்த தொழில்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடம், கிண்டி. | 50,40 | 4.33 | 2,100 |
| 2. மண்டல ஆய்வுக் கூடம், மதுரை. | 1,707 | 1.35 | 670 |
| 3. மண்டல ஆய்வுக்கூடம், கோயம்புத்தூர். | 1,624 | 1.41 | 667 |
| 4. சவ்வரிசி ஆய்வுக்கூடம், சேலம் | 1,027 | 0.38 | 334 |
| 5. மாநில உப்பு மற்றும் கடல் படு இரசாயனப் பொருள் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி. | 1,677 | 1.37 | 1,615 |

எளிய கட்டணமே வசூலிக்கப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களுக்கு, வசூலிக்கப்பட்ட கட்டணத்தில் 50 சதவிகித சலுகையும், இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் சான்றிதழ் குறியீட்டு திட்டத்தின் கீழ் 33 1/3 விழுக்காடு சலுகையும் அளிக்கப்படுகிறது.

இத்துறையின் இரசாயனப்பிரிவு பாரபின் மெழுகு, தீப்பெட்டி மெழுகு, கொழுப்பு, அமிலம் போன்ற மூலப் பொருள்களைப் பெறுவதில் தகுதி வாய்ந்த சிறு தொழில்களுக்கு உதவியளிக்கிறது. 1988–89–ல் (31–12–1988 வரை ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலப் பொருள்களின் விபரம் கீழே உள்ளன.

| (1) | 1988–89ஆம் ஆண்டு 31–12–88 வரை. (2) மெட்ரிக் டன்கள். |
|---|---|
| பாரபின் மெழுகு | 5,350 |
| தீப்பெட்டி மெழுகு | 1,650 |
| கொழுப்பு அமிலம் | 6,153 |

இவை தவிர, குறைந்த அடர்த்தி கொண்ட வெள்ளை சிமிட்டி "டிட்டானியாம் டை ஆக்சைடு" சூடம், கந்தகம் (LDPE) பாலிதீன் உலைக்கள எண்ணெய், வீரியமற்ற சாராயம் மற்றும் தொழிலியல் சாராயம் முதலியவைகளை சிறு தொழில்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கும் இரசாயனப் பிரிவு பரிந்துரை செய்கிறது. மசகு எண்ணெய் மற்றும் கிரீசு (Grease) இவற்றை உற்பத்தியில் பயன்படுத்தவும், சேமிக்கவும் தொழில்களுக்கு உரிமம் வழங்கும் பொறுப்பும் தொழில் வணிக இயக்குநரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

தொழில் திட்ட தொகுப்புகள் அளித்தல் மற்றும் தொழில் துவட்ட ஆலோசனை:

மாநிலத்தில் இரசாயனத் தொழில்களின் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கும், ரசாயனத் தொழில் பற்றிய ஆலோசனை வழங்குவதற்கும் இப்பிரிவில் ஒரு தகவல் வங்கி அமைக்கப் பட்டுள்ளது. இப்புள்ளி விவர வங்கி, அடிப்படை புள்ளி விவரம் மற்றும் தயாரிக்கப்படும் பொருட்களின் விவரம் ஆகியவற்றை சேகரித்து வைத்து அவற்றை வேண்டும்பொழுது பயன்படுத்து வதிலும், இரசாயனம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களின் திட்டங்களை தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. சிறு தொழில் துறையில், இரசாயனம் மற்றும் அது சார்ந்த தொழில் களை ஏற்படுத்துவதில் ஆர்வமுள்ள தொழிற் முனைவர்களுக்கு, தொழில் நுட்பம் மற்றும் தொழிலியல் தகவல்களையும் இது அளிக்கிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் விவரங்கள் அவ்வப்போது புதுப்பிக்கவும் படுகின்றன.

இரசாயனப் பிரிவுள்ள பீங்கான் மற்றும் கண்ணாடிப் பிரிவு:

பீங்கான் மற்றும் கண்ணாடிப் பயிற்சி நிலையங்கள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



பீங்கான் தொழில் நுட்ப பயிற்சி நிலையம் விருத்தாசம்:—

பீங்கான் தொழில் நுட்பவியலில் பயிற்சி அளிப்பதற்காக விருத்தாசலத்தில் பீங்கான் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 25 மாணவர்கள் பட்டப்படிப்பிற்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இது தொழில்நுட்பக் கல்வி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 1987–78 வரை இப்படிப்பின் காலம் 4 ஆண்டுகளாக இருந்தது. இப்பயிற்சியில் சேர மேல்நிலை பள்ளி இறுதியாண்டு (+2) தேர்ச்சி பெற்றவர்களே தகுதி பெற்றிருந்தனர். 1988–89 முதல் இப்படிப்பின் கால வரம்பு 6 மாதம் செய்முறைப் பயிற்சியுடன் மூன்று ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. தற்போது பள்ளி இறுதி வகுப்பில் (10ஆம் வகுப்பு) தேர்ச்சி பெற்றவர்கள், இப்பயிற்சியில் சேரத் தகுதியுடையவர்களாவர் ரூ. 4.65 லட்சம் மதிப்புள்ள சில பழைய கருவிகளைப் புதுப்பிக்கும் பணி பகுதி–2 திட்டத்தில் செயல்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ரூ. 175 இலட்சம் மதிப்பில் புதிய இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்குவதற்கு நிறுவனங்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

விருத்தாசலத்திலுள்ள பீங்கான் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள பீங்கான் தொழில்களிடமிருந்து பெறப்படும் மூலப் பொருட்கள் மற்றும் உற்பத்திப் பொருள்களை பரிசோதனை செய்யும் பணியையும் இந்நிலையம் மேற்கொள்கிறது.

பீங்கான் தொழில் சேவை மையம், விருத்தாசலம்:—

விருத்தாசலத்திலுள்ள பீங்கான் தொழில் சேவை மையம் 1–4–1988 முதல் தொழில் வணிகத் துறைக்கு மாற்றப்பட்டது. விருத்தாசலத்தைச் சுற்றியுள்ள 100 சிறிய பீங்கான் பொருட்கள் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவைப்படும் "பாடி சிலிப்பை" (Body Slip) இம்மையம் தயாரிக்கிறது. சராசரியாக மாதம் ஒன்றுக்கு சுமார் 180 முதல் 140 மெட்ரிக் டன் உள்ள "பாடி சிலிப்"பை இம்மையம் உற்பத்தி செய்து அவற்றை தொழில் களுக்கும் வழங்குகிறது. உலைக்களம் (Tunn.l Kiln) மூலமாக வெப்பப்படுத்தும் வசதிகளை நாள் முழுவதும் இம்மையம் அளித்து வருகிறது. இதன் மூலம் விருத்தாசலம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள பீங்கான் தொழில்கள் பீங்கான் பொருட்கள் தயாரிப்பதற்குரிய மூலப் பொருட்களையும் (உலைக் கள்) வெபபமூட்டும் வசதிகளையும் பெறுகின்றன. இம்மையம் அளித்திடும் அடிப்படை வசதிகளைக் கொண்டு இத்தொழிற் பேட்டையில் "குறைவுமின்னழுத்த இன்சுலேட்டர்கள்", கலை வண்ணமுடைய பொருட்கள், பீங்கான் பொருட்கள் மற்றும் துப்புரவுப் பொருட்கள் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. 1989 சனவரி வரை இம்மையத்தால் தயாரிக்கப்பட்ட உருவ அமைப்பு சாதனங்களின் அளவு 1,352,58 மெட்ரிக் டன் ஆகும். இதன் மதிப்பு ரூ. 15.49 இலட்சம் ரூ. 29012 இலட்சம் மதிப்புள்ள 1085.59 டன் பீங்கான் பொருட்களும் இதே காலத்தில் வெப்ப மிடப்பட்டு உருவாக்கப்பட்டன.

பீங்கான் தொழிற்பேட்டை, விருத்தாசலம்:—

விருத்தாசலத்திலுள்ள பீங்கான் தொழில்பேட்டை 1–4–1988 முதல் தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்திடமிருந்து தொழில் வணிகத் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இத்தொழிற்பேட்டையில் 60 தொழிற் நிலையங்கள் உள்ளன; இவற்றிற்கு வாடகை அடிப்படையில் தொழிற்கூடங்கள் ஒதுக்கப்பட்டு ஒரு சதுர அடிக்கு 50 பைசா வீதம் வாடகை வசூலிக்கப்படுகிறது.

அடிப்படை தேவைகளோடு, மூலப் பொருட்கள் மற்றும் வெப்பமூட்டும் வசதிகள் நியாயமான கட்டணத்தில் தொழிற் நிலையங்களுக்கு அளிக்கப்படுகிறது.

அரசினர் விஞ்ஞான கண்ணாடி பயிற்சி நிலையம், கிண்டி:—

இப்பயிற்சி நிலையம், விஞ்ஞான கண்ணாடி கருவிகளை தயாரிப்பதில் மாணவர்களுக்கு இரண்டு ஆண்டு பயிற்சி அளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 25 மாணவர்கள் பயிற்றுவிக்கப் படுகின்றனர். பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 125 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. இது வரை 36 தொகுதிகளில், மாணவர்கள் பயிற்சியினை வெற்றிகர மாக முடித்துள்ளனர். பயிற்சி முடிவுற்ற பின் இம்மாணவர்கள் பல்வேறு விஞ்ஞான கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் தொழிற் நிலையங்களில் வேலை பெறுகின்றனர். இவர்களில் சிலர் விஞ்ஞானக் கண்ணாடிப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்களை சொந்தத்தில் நிறுவியுள்ளனர்.

விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் உற்பத்தி மையம் கோயம்புத்தூர்:

மாநிலத்திலுள்ள கல்வி மற்றும் இதர நிறுவனங்களுக்குத் தேவையான விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகளை இந்நிலையம் தயாரித்து வழங்கி வருகிறது.

இரசாயணப் பகுதியின் உப்புப் பிரிவு:—

மாநிலத்தில் உப்பு உற்பத்திக்குரிய புதிய பகுதிகளைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகளை தொழில் வணிக இயக்கத் தின் உப்பி பிரிவு மேற்கொண்டுள்ளது. மேலும்; இம்மாநிலத்தில் சிறு அளவு உப்பு தயாரிப்பவர்களுக்கு தொழில் நுட்பம் மற்றும் அது சம்பந்தப்பட்ட உதவிகளையும் அளிக்கிறது. உப்பை அடிப்படையாகக் கொண்ட சிறு தொழில் நிலையங்களை நிறுவும் புதிய தொழில் முனைவர்களுக்கும் உதவி செய்யப்படுகிறது. உப்புத் தொழிலின் மேம்பாட்டிற்காக பல திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு உப்புக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற பல்வேறு அரசு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது. சிறிய அளவு உப்பு உற்பத்தியாளர்களுக்காக விஞ்ஞான முறை களில் உப்பு உற்பத்தி செய்வதற்குரிய பயிற்சித் திட்டங்களையும் மேற்கொள்கிறது.



1988-ல் ஜூன் ஜூலை மாதங்களில் சுமார் 120 சிறிய அளவு உப்பு தயாரிப்பாளர்களுக்கு நவீன உற்பத்தி முறைகள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் 1989 பிப்ரவரி மார்ச் மாதங் களிலும் சுமார் 25 உப்பு தயாரிப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் வேடசமுஞ்சேரியிலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூரிலும், 322 ஏக்கரில் உப்பு தயாரிக்கும் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கென இரண்டு தொழில் முனைவர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

தூத்துக்குடியில் நீர்வள ஆராய்ச்சி மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் மற்றும் மின்னணுப் பிரிவு:

சமீபகாலத்தில் மின்னணுத் தொழில் மாபெரும் அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. இன்றைய தினம் இதன் பயன் எவ்வாறு மனித வாழ்வோடு பின்னி பரவிக்கிடக்கிறது என்பது தெளிவு.

மின்னணுத் தொழில்களின் வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காக இத்துறை கீழ்க்காணும் வசதிகளை அளிக்கிறது:

1. தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி மையங்களில் மின்னணு மற்றும் அதன் சார்புத் தொழில்களுக்கென்றே தொழிற் பேட்டைகள் அமைப்பது.

2. பல்வேறு சாதனங்களைக் கொண்ட ஆய்வுக்கூடங்கள் மூலமாக நியாயமான கட்டணத்தில் பரிசோதனை மற்றும் தரக்கட்டுப்பாடு வசதிகளை அளிப்பது.

3. உற்பத்தி மற்றும் மனிதவள மேம்பாட்டு வசதிகளை அளிப்பது.

4. மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடு நிலையங்கள் மின்னணு ஆய்வுக் கூடங்கள் மூலம் மின் மருத்துவக் கருவிகளை பழுது பார்ப்பது.

தொழில்கள் துவங்குவதகுரிய அடிப்படை வசதிகள்:

மின்சாரம் மற்றும் மின்னணுத் தொழில்களுக்கென்றே 9 இடங்களில் மின்னணுத் தொழிற்பேட்டைகள் அமைக்கப் பட்டுள்ளன.

இத்தனித் தொழிற்பேட்டைகளின் விவரங்களைக் காட்டும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது:

| | | தொழிற்கூடங்கள். | | | மனைகள். | | |
|---|---|---|---|---|---|---|---|
| வரிசை எண். | இடம். | திட்டமிடப் பட்டவை. | கட்டப்பட்ட தொழிற்கூடங்கள். | கையகப்படுத்தப் பட்டவை. | திட்டமிடப் பட்டவை | கட்டிமுடிக்கப் பட்டவை. | கையகப்படுத்தப் பட்டவை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | டாக்டர்விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற் பேட்டை சென்னை-41. | 104 | 104 | 104 | .. | .. | .. |
| 2 | பெருங்குடி, சென்னை-96 | .. | .. | .. | 174 | 174 | 174 |
| 3 | காக்களூர் .. | 20 | 14 | 13 | 44 | 44 | 42 |
| 4 | ஓசூர் .. | 12 | 12 | 12 | 22 | 20 | 20 |
| 5 | திருச்சிராப்பள்ளி | 12 | 8 | 8 | 65 | 65 | 40 |
| 6 | மதுரை .. | .. | .. | .. | 104 | 101 | 41 |
| 7 | கோயம்புத்தூர் | .. | .. | .. | 24 | 24 | 24 |

பொருள் பரிசோதனை மற்றும் அபிவிருத்தி வசதிகள்:

சிறு தொழில் நிலையங்களுக்கு பரிசோதனை மற்றும் தரக் கட்டுப்பாட்டு வசதிகளை இத்துறையின் ஆய்வுக்கூடங்கள் அளிக்கின்றன.

1. பல்வேறு மின்சாரப் பொருட்களின் தர ஆய்வுக்குத் தகுந்தது என காக்களூரிலுள்ள மத்திய மின்சார பரிசோதனை ஆய்வுக் கூடத்தை இந்திய தர நிர்ணய நிறுவனம் அங்கீகரித்துள்ளது. அரசுத் துறைகளில் வாங்கப்படும் மின்சாரப் பொருட்களின் தரம் பற்றிய அறிவுரை கூறும் ஆலோசனை நிலையமாகவும் இந்த ஆய்வுக்கூடம் செயல்படுகிறது.



2. அடையாறிலுள்ள மின்னணு பரிசோதனை வளர்ச்சி மைய மின்னணுவியல் தொழில் வளப் பரிசோதனை மற்றும் கருவிகளை தேர்ந்தாய்வது பொருள் அபிவிருத்தி மற்றும் சுற்றுப் புறச் சூழல் பரிசோதனை வசதிகள் ஆகியவற்றை அளிக்கிறது.

3. பல்வேறு நிலையங்களில் மின்னணுத் துணைப்பாகங்களை வடிவமைத்து அவற்றை மேம்படுத்துவதற்கும் ஏற்கெனவே சிறு தொழில் துறையில் தயாரிக்கப்பட்ட மின்னணுப் பொருட்களின் தரத்தை உயர்த்துவதற்கும் திருச்சிராப்பள்ளியில் மின்னணு வளர்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

4. வீட்டு உபயோக மின் சாதனங்கள் இந்திய தர நிர்ணய நிறுவன குறியீட்டின்படி உள்ளனவா என்று பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்குவதற்கென்று சென்னை, மதுரை மற்றும் கோயமுத்தூர் ஆகிய இடங்களில் தரக் கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1981 ஆம் ஆண்டு தரக் கட்டுப்பாட்டு ஆணையின்படி இதுவரை 33 தயாரிப்பாளர்களுக்கு நிரந்தரச் சான்றிதழ்களும், 110 தயாரிப்பாளர்களுக்கு தற்காலிக சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

உற்பத்தி திட்ட ஒப்பளிப்பு.

நாட்டில் மின்னணுத் தொழில்கள் சீரிய வகையில் வளர்ச்சி பெறுவதை ஊக்குவிப்பதற்கென, புதிய மின்னணுத் தொழில்களைத் துவங்குவதற்கு முன்பு அவற்றின் உற்பத்தித் திட்டங்களுக்கு முன் ஒப்புதல் பெற வேண்டுமென்பது இந்திய அரசின் கொள்கையாகும். தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான தொழில் நுட்பக் குழு 133 வகையான மின்னணுப் பொருட்களுக்கு உற்பத்தி திட்ட ஒப்புதலளிப்பு அளிக்க அதிகாரங்கள் பெற்றுள்ளது. இதர மின்னணுத் தொழில்களின் உற்பத்தித் திட்டங்களை தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் பரிந்துரையின் பேரில் புது டில்லியிலுள்ள வளர்ச்சி ஆணையாளர் (சிறு தொழில்கள் ஒப்புதலளிக்கிறார்.)

கடந்த சில ஆண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்ட உற்பத்தித் திட்டங்களின் எண்ணிக்கை, தொழில் துறையில் ஏற்பட்டுள்ள பெரும் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். அவை பின் வருமாறு:

| ஆண்டு. | வழங்கப்பட்ட உற்பத்தித் திட்ட ஒப்புதல்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1983 .. .. | 156 |
| 1984 .. .. | 162 |

| | | | |
|---|---|---|---|
| 1985 | .. | .. | 203 |
| 1986 | .. | .. | 219 |
| 1987 | .. | .. | 290 |
| 1988 | .. | .. | 334 |

எதிர்காலத் திட்டங்கள்:

பெருங்குடியில் உள்ள செப்பனிடப்பட்ட மனைத் தொழிற் பேட்டையில் இரண்டாவது கட்டப்பணி மேற்கொள்ளப்படும். இதன்மூலம் சென்னைக்கு அருகில் மேலும் 250 தொழில்களுக்கு இடமளிக்கப்படும். மின்னணுத் தொழிலின் வளர்ச்சிக்கு உகந்த பகுதியாக வேலூர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அங்கு மின் மற்றும் மின்னணுத் தொழில் நிலையங்களுக்கென்று தொழிற் பேட்டை அமைப்பதற்கு இடமும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்ப தொழில் முனைவர்களுக்கு இடவசதி அளிப்பதற் கென திருமழிசையில் தகுதியான இடம் ஒன்று கண்டறியப்பட்டு, அதை கையகப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஓசூரிலும், கோயம்புத்தூரிலும் ஏற்கெனவே உள்ள தொழிற் பேட்டைகளை விரிவு படுத்த நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

5. பொறியியல் பிரிவு:

பரிந்துரை வழங்கும் பொறுப்பு கொண்ட தொழில் வணிக இயக்கம், பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிலையங்களுக்கு கிடைப்பதற்கரிய உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்படும மூலப் பொருட்களைப் பெறுவதில் உதவி செய்கிறது.

இப்பிரிவின் நடவடிக்கைகள் வருமாறு:

நிலக்கரி;

நிலக்கரி மற்றும் கல்கரி ஆகியவற்றை மாநிலத்திலுள்ள தொழில்களுக்கு வழங்குவதற்கு தொழில் வணிக இயக்கம் பரிந் துரைக்கிறது. கல்கத்தாவில் உள்ள ரெயில் போக்குவரத்து நிர்வாக இயக்குநரால் மாநிலத்திற்கு வழங்கப்படும் மொத்த



ஒதுக்கீடு விகிதாச்சார அடிப்படையில் சிறு தொழில் பங்கீட்டளிக் கப்படுகிறது. 1989-இல் ஒதுக்கப்பட்ட நிலக்கரி மற்றும் கல்கரியின் விவரம் கீழ் வருமாறு:

| | | | மாதம் ஒன்றுக்கு சரக்கு பெட்டிகள். |
|---|---|---|---|
| | | | 200 |
| ஸ்டீம் நிலக்கரி | .. | .. | 40 |
| கல்கரி 'பிராக்ஷன்' | .. | .. | 8 |
| கல்கரி (60kg. Fractions) | .. | .. | 84 |
| பழுப்பு நிலக்கரி | .. | .. | 50 |
| கல்கரி பிராக்ஷன் (mcp.) | | .. | |

1988–89-இல் 31–1–1989 வரை இயந்திர சாதனங்களையும் மூலப் பொருட்களையும் இறக்குமதி செய்வதற்காக ரூ. 7.52 கோடி மதிப்பிற்கு அத்தியாவசியச் சான்றிதழ்களை இத்துறை 107 சிறு தொழில்களுக்கு வழங்கி பரிந்துரைத்தது. இப்பிரிவு மேற்கொண்ட முயற்சியின் காரணமாக, இம்மாநிலத்தில் பழுப்பு நிலக்கரி மற்றும் கல்கரி பி ராக்சரின் ஒதுக்கீடு, முந்தைய மற்ற எல்லா ஆண்டுகளையும் விட குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந் துள்ளது. கல்கத்தாவிலுள்ள ரயில் போக்குவரத்து நிர்வாக இயக்குநரிடமிருந்து இப்பொருட்கள் தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் ஒதுக்கப்படுவதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப் பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் நிலக்கரி சேமிப்பு கிடங்குகளை ஆரம்பிப்பதற்காக சம்பந்தப் பட்ட மைய அரசு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு இம் மாநிலத்திற்கு அதிக அளவில் நிலக்கரி கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இரும்பு மற்றும் எஃகு:

இத்துறை நிர்ணயித்துள்ள தேவையின் அடிப்படையில், இரும்பு மற்றும் எஃகு பொருட்களை 'இந்திய இரும்பு நிறுவனம்' வழங்குகிறது. நமது நாட்டில் கிடைக்கும் இரும்பு பற்றாக் குறையாயிருப்பதால் ''இந்திய இரும்பு நிறுவனத்தின்'' மூலம் இரும்பு மற்றும் எஃகுப் பொருட்களை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்து அவற்றை சிறு தொழில் நிலையங்களுக்கு நியாயமான விலையில் வழங்குவது பற்றி கொள்கையளவில் முடிவு எடுக்குமாறு இந்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது

இரும்பு கலவாப் பொருட்கள்:

இரும்பு கலவாப் பொருட்களைப் பெறுவதற்காக சிறு தொழில்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை, கனிமம் மற்றும் உலோக வர்த்தக கழகம் போன்ற நிறுவனங்களுக்கு இப்பிரிவு பரிந்துரை செய்கிறது. மூலப் பொருட்களை பெறு வதில் இப்பிரிவு அளித்துவரும் உதவியின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 5,000 சிறு தொழில்கள் பயனடைந்து வருகின்றன.

ஆய்வு மற்றும் புள்ளி விவர பிரிவு:

மாநில மற்றும் மைய அரசுகளின் பல்வேறு திட்டங்களுக்கு உதவுவதற்காக தமிழ்நாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிலையங்களைப் பற்றிய இன்றியமையாத புள்ளி விவரங்களைச் சேகரித்து, அவற்றை முறைப்படி தொகுப்பதற்கென்று இப்பிரிவு நிறுவப்பட்டுள்ளது. நிரந்தரப் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களைப் பற்றிய அடிப்படை புள்ளி விவரங்கள் அதற்கென்று உள்ள படிவங்களில் பராமரிக்கப்படுகின்றன. மாவட்டங்களிலிருந்து பெறப்படும் ஆண்டு உற்பத்தி விவரங்கள் இப்படிவங்களில் பதியப்படுகின்றன. இந்த புள்ளி விவரத் தகவல்களைப் பராமரிக்க ஒரு சிறிய கம்ப்யூட்டர் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்துறை 1962, 1965, 1969 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் சிறு தொழில் தகவல்களைக் கொண்ட 4 வெளியீடுகள் மூலமாக வெளியிடப்பட்டுள்ளது. தற்பொழுது சிட்கோ நிறுவனத்தின் உதவியுடன் சிறு தொழில் டைரக்டரி (31-12-1987 வரை விவரங்கள் கொண்டவை) அச்சிடப்பட்டு வருகின்றன. இது விரைவில் வெளியிடப்படும்.

இந்திய அரசின் வேண்டுகோளின்படி சிறு தொழில்களின் கணக்கெடுப்பு மற்றும் மாதிரி ஆய்வினை இப்பிரிவு மேற்கொண்டுள்ளது,

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்.
1989-90 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு.

இம்மாநிலத்தில் சிறு தொழிலை ஊக்குவித்து மேம்படுத்துவதிலும், பின்தங்கிய பகுதிகளிலும், போதிய வளர்ச்சி அடையாத பகுதிகளிலும் அதனை ஏற்படுத்தி பரவலாக்குவதிலும் ஊக்கியாக செயல்படும் நோக்கத்துடனும், தமிழ்நாடு சிறு தொழில் முனைப்பை ஊக்குவிக்கும் வகையில் விரிவான வளர்ச்சித் திட்டத்துடன் 1971 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் தன்னுடைய நடவடிக்கைகளைத் தொடங்ியது.

சிறு தொழில்களுக்கு குறிப்பாக தொழில்நுட்ப வல்லுநர்களிடையே சுயவேலை வாய்ப்பை ஊக்குவிக்க அரசின் சார்பாக பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பதினெட்டு ஆண்டு கால அனுபவத்துடன், இந்நிறுவனம் தமிழ்நாட்டில் சிறுதொழில்கள் மிக வேகமாக முன்னேறுவதற்கு தற்போது தன்னை தயார்ப்படுத்திக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் சிறு தொழில்களைத் திட்டமிட்டு ஏற்படுத்தி அதன் வளர்ச்சிக்கு ஊக்கம் தருவதே இந்நிறுவனத்தின் முக்கியப் பணியாகும். அதன் வளர்ச்சி நடவடிக்கைகளில் பின்வருவன அடங்கும்:



1 தொழில் வள வாய்ப்புக்கான நிலையங்களை மேம்படுத்துதல்; சிறு தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான இன்றியமையாத அடிப்படை வசதிகளுடன் பலவேறு வகைகளில் தொழில் கூடங்களையும் மேம்படுத்தப்பட்ட மனைகளையும் கட்டிக்கொடுத்தல்.

2 மத்திய முதலீட்டு உதவித் தொகை போன்ற ஊக்கத் தொகைகளை வழங்குதல்.

3 முக்கிய மூலப் பொருட்களை வழங்குதல்.

4 அரசு கொள்முதலில் முன்னுரிமை, முதன்மை உரிமை போன்ற ஊக்கங்களுடன் விற்பனை உதவி அளித்தல் தேவைப் பட்டியல்களை அனுப்பும்போது முன்கூட்டியே தொகை அளித்தல்.

தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்தல்:

பல்வேறு இடங்களில் வளர்ச்சி நிலையங்களைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்த இந்நிறுவனம் நடவடிக்கை எடுக்கிறது. தேவையான அனைத்து இன்றியமையாத அடிப்படை வசதிகளுடன் பல்வேறு அளவுள்ள தொழிற்சாலை கொட்டகைகளையும் சீர் செய்த மனைகளையும் இந்நிறுவனம் வழங்கி, உருப்படியான தனித்தியங்கவல்ல திட்டத்துடன் சிறுதொழில் தொடங்க தயாராகவுள்ள தொழில் முனைவர்களுக்கு ரொக்கத் தொகை அடிப்படையில் ஒதுக்கிறது.

இந்த வளர்ச்சி நிலையங்களில் அரசு ஏற்கெனவே மேம்படுத்திய சீர் செய்த மனைகளுடன் செங்கற்பட்டு மாவட்டம், ஆலத்தூரில் மருந்துகள், மருந்தாக்கியல் பொருள்களுக்கான தொழில் பேட்டைகள் உட்பட அதுவரை 49 தொழிற்பேட்டைகளையும், 2,349 தொழிற்கூடங்களையும் இந்நிறுவனம் மேம்படுத்தியுள்ளது. 1988-89 ஆம் ஆண்டில் பல்வேறு இடங்களில் 260 கொட்டகைகளை கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது. இப்பணி 1989 மார்ச்சுக்குள் முடிவடைந்து விடும்.

நாள்தோறும் பெருகிவரும் தொழிற்கூடங்களுக்கான தேவையை கருத்தில் கொண்டு அவற்றிற்கான தேவையை மதிப்பிட்ட பின்னர், 1989-90 ஆம் ஆண்டில், இம்மாநிலத்தின் பல்வேறு இடங்களில் சுமார் 200 தொழிற்கூடங்களைக் கட்டுவதற்கு இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் தொழிற்கூடங்கள் கட்டுவதில் அடைந்த முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி பற்றிய பின்வரும் விவரங்கள் ''சிட்கோ'' நிறுவனத்தின் சாதனையை தெளிவாக எடுத்துக் காட்டும்.

| ஆண்டு. (1) | கட்டப்பட்ட தொழிற்கூடங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1983—84 .. | 134 |
| 1984—85 .. | 100 |
| 1985—86 .. | 96 |
| 1986—87 .. | 126 |
| 1987—88 —— | 200 |
| (75 எஞ்சியுள்ள). | 325 |
| 1988—89 .. | 260 |

1989 மார்ச்சுக்குள் கட்டி முடிக்கப்படும்.

பல்வேறு தொழிற்பேட்டைகளின் தொழிற்கூடங்கள் கட்டுவ துடன், பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியைப் பற்றி அனைவரும் அறிந்து கொள்ள வளர்ச்சி மையங்களை ஏற்படுத்த ''சிட்கோ'' நிறுவனம் புதிய இடங்களைத் தேர்வு செய்துள்ளது.

2. மத்திய முதலீட்டு மானியத் திட்டம்:

இந்நிறுவனம், 1987-88 ஆம் ஆண்டு சிறுதொழில் பிரிவு களுக்கு 162·20 இலட்சம் ரூபாய் அளவிற்கு மத்திய முதலீட்டு மான்யத் தொகையை வழங்கியுள்ளது. 1988-89 ஆம் ஆண்டில், 150.00 இலட்சம் ரூபாய் அளவிற்கு மத்திய முதலீட்டு மான்யத் தொகை வழங்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1988 ஏப்ரல் திங்களிலிருந்து 1989 சனவரித் திங்கள்வரை சிறு தொழில் பிரிவுகளுக்கு 94.94இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது

3. மூலப்பொருள் வழங்குதல்:

இரும்பு, உருக்கு, கல்கரி, தீப்பெட்டித் தயாரிப்பு மெழுகு (Match Wax) பாரஃபின் மெழுகு (parraffinwax) பொட்டாசியம் குளோரேட் துத்தநாகம், ஈயம், டைடானியம் ஆக்சைடு போன்ற அரிய மூலப்பொருள்களைச் சிறுதொழில் பிரிவுகளுக்கு வழங்கி இந்நிறுவனம் தொடர்ந்து உதவி செய்து வருகிறது. 1987-88 ஆம் ஆண்டில், 39,336 மெட்ரிக் மூலப்பொருள்களை வழங்கியுள்ளது.

1988-89 ஆம் ஆண்டில் (1989 சனவரி வரை) அரிய மூலப் பொருள்களை வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 45,060 மெட் ரிக் டன்னாகும். இதில் 34,768 மெட்ரிக் டன் மூலப்பொருள் களை இந்நிறுவனம் வழங்கியுள்ளது.



(31—1—1989 வரை)

| தொடர் எண்ணும் பொருளின் பெயரும் (1) | அளவு மெட்ரிக் டன்னில் (2) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1. இரும்பு-உருக்கு .. .. | 16,083 | 1,468.89 |
| 2. கல்கரி .. .. .. | 8,799 | 217.58 |
| 3 தீப்பெட்டித் தயாரிப்பு மெழுகு- | 7,376 | 852.65 |
| பாரஃபின் மெழுகு .. | 340 | 59.80 |
| 4 பொட்டாசியம் குளோரேட்டு .. | 1,222 | 527.20 |
| 5 துத்தநாகம் .. | 323 | 74.09 |
| 6 ஈயம் | 616 | 96.98 |
| 7 ஃபெட்டி ஆசிட் .. | 9 | 5.35 |
| 8 டைட்டானியம்—டை—ஆக்சைட் | | |
| மொத்தம் | 34,768 | 3,552,54 |

மூலப்பொருட்களை மேலும் கொள்முதல் செய்து, தேவைக் கேற்ப கூடுதலாக, விற்பனை நிலையங்களையும், துணை விற் பனை நிலையங்களையும் திறந்து அப்பொருட்களை வழங்குவதன் மூலம் இது தொடர்பான பணிகளை விரிவாக்க இந்நிறுவனம் கருதுகிறது.

4. விற்பனை உதவித் திட்டம்:

சிறு தொழில் பிரிவுகளுக்கு விற்பனை வாய்ப்பு செய்து கொடுக்கும் திட்டம் 1978-79இல் தொடங்கப்பட்டது. இயக்குநர் பொது விநியோகம் மற்றும் விற்பனை (DGS &D) மாநில அரசுத் துறைகள் நிறுவனங்கள் ஆகியவை அறிவித்த ஒப்பந்தப் புள்ளி களில் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சிறுதொழில் பிரிவுகளின் சார்பில் கலந்துகொண்டு ஆர்டர்களைப் பெறுகிறது.

இயக்குநர், பொது விநியோகம் மற்றும் விற்பனைத் துறை அறிவித்த ஒப்பந்தப்புள்ளிகளில் இந்நிறுவனம் கலந்து கொண்டு இரவ சோப்பு, குளிர் சாதனப் பெட்டிகள் முதலியவற்றை வழங்க ரூ. 7.504 இலட்சம் மதிப்புள்ள ஆர்டர்களைப் பெற முடிந்தது.

1988-89ல் 1989 சனவரி வரையில் செய்த மொத்த விற் பனை ரூ. 222.73 இலட்சமாகும். இந்நிறுவனம் அந்த ஆண்டிற் கென நிர்ணயிக்கப்பட்ட ரூ. 600.00 இலட்சம் என்கிற விற்பனை இலக்கை அடையும். 1989—90 ஆம் ஆண்டில் ரூ. 600 இலட்சம் மதிப்புள்ள ஆர்டர்களைப்பெறக் கருதுகிறது.

சிறுதொழில் பிரிவுகள் விற்பனை வாய்ப்பைப் பெருக்க உதவும் பொருட்டு, மோட்டார் வண்டித் துணைப் பாகங்கள் பற்றிய வாங்குவோர்-விற்போர் கூட்டம் 20—11—1988 அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் 300 பிரிவுகள் பங்கு கொண்டன; அவற்றில் 152 பிரிவுகள் சிறுதொழில் பிரிவு களாகும்.

மேற்கூறிய கூட்டம் நடைபெற்றதன் காரணமாக, மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் சில, சிறுதொழில் பிரிவுகள் சில வற்றுக்கு மாதிரி ஆர்டர்களை அனுப்பியுள்ளன.

5. தனி தொழிற்பேட்டைகள்:

சிறு தொழில் பிரிவில், தொழில்நுட்ப மேம்பாட்டை ஊக்கு விக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் 12 உயரிய உயர் தொழில் நுட்ப தொழிற்பேட்டைகளை அமைப்பதற்காக சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தைச் செய லாக்குவதற்காக, இந்நிறுவனம் மத்திய அரசு மூலமாக ஜப்பானில் "யென்" கடனுதவி கேட்டது. தமிழ்நாட்டில், முதல் கட்டமாக (1) மருந்துகள், மருந்தாக்கப்பொருள் (Drugs and pharmaceuticals) மருத்துவ துணைக்கருவிகள் (2)மருத்துவ மின் அணுச் சாதனங்கள் (3) உள்ளாடைகள், (4) பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட் கள் பாகங்கள், (5) மோட்டார் வண்டித் துணைப்பாகங்கள் ஆகிய தொழில்களுக்கான தொழிற்பேட்டைகளை அமைக்க ஜப்பானில் அரசு உதவி செய்ய முன்வந்துள்ளது.

இந்த 5 தொழிற்பேட்டைகளுக்காகும் மதிப்பீட்டுச் செலவு சுமார் ரூ. 52 கோடியாகும். ஜப்பானிய வெளிநாட்டு பொரு ளாதார ஒத்துழைப்பு நிதிவாயிலாக, ஜப்பானிய அரசு 3198 மில்லியன் யென் (ரூ. 27.57 கோடி) கடனுதவி அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது. 1993 ஆம் ஆண்டு வரையில் இக்கடனுதவி பெற அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தொழில்களுக்கான 5 தொழிற்பேட்டை களை அமைக்க, சிட்கோ நிறுவனத்தின் சுவாதீனத்தில் நிலங்கள் ஏற்கெனவே உள்ளன. நில மேம்பாட்டுப் பணி இரண்டு தொழிற் பேட்டைகளில் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரிக்கும் பணியை ஜப்பானிய நாட்டு தொழில் நுட்ப ஆலோசகர்கள் ஏற்கெனவே மேற்கொண்டுள்ள னர்; இப்பணி விரைவில் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திண்டுக்கல்லில் ஒன்றும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒன்றுமாக இரண்டு கிளை அலுவலகங்கள் முறையே 1–6–1988 அன்றும், 13—1988 அன்றும் திறக்கப்பட்டுள்ளன.



தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

1. தோற்றம் மற்றும் பணிகள்:

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கம்பெனிகள் சட்டத் தின்கீழ் 1949ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். இக்கழகம் தமிழ் நாடு அரசினரால் தமிழ்நாட்டில் தொழில் முன்னேற்றத்தை விரைவுப்படுத்தத்தொடங்கப்பட்டதாகும். இது இந்தியாவிலேயே மாநில அளவில் தொடங்கப்பட்ட முதல் தொழில் முன்னேற்ற நிதிஉதவி நிறுவனமாகும். இக்கழகம் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டிருப்பினும் மாநில நிதிஉதவி கழகங்கள் சட்டம் 1951-இன் பல பிரிவுகளின்படி இயங்கி வருவதால், தமிழ்நாட்டின் மாநில நிதியுதவிக் கழகமாகச் செயல்பட்டு வருகிறது.

இக்கழகம் புதிய தொழில்கள் தொடங்கவும் ஏற்கனவே இயங்கி வரும் தொழிலகங்களை அபிவிருத்தி செய்யவும் நவீன மாக்கவும் கடனுதவி அளிக்கிறது இவ்வாறு அளிக்கப்படும் கடனுதவி சிறிய மற்றும் நடுத்தர தொழில்களுக்கு நிலையான சொத்துக்கள் அதாவது தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நிலம், கட்டிடங்கள் மற்றும் இயந்திர தளவாடங்கள் வாங்கு வதற்கு அளிக்கப்படுகிறது. இக்கழகத்தில் அளிக்கப்படும் கடனு தவி ரூபாய் 5 ஆயிரம் முதல் அதிகபட்சம் ரூ. 60 இலட்சங்கள் வரையிலாகும்.

இக்கழகம் தொடங்கப்பட்ட முதல் 20 ஆண்டுகளில் தமிழ கத்தில் பல பெரிய தொழில் நிறுவனங்கள், நூல் மற்றும் ஜவுளி, சர்க்கரை, சிமெண்ட், காகிதம், இரசாயனப் பொருள்கள், பொறியியல் தொழில்கள் போன்றவை அமைப்பதற்கு பெரும் பங்கு வகித்துள்ளது. இக்கழகத்தின் பணி கடந்த 10 ஆண்டு களில் சிறு தொழில்களுக்கு முன்னுரிமை அளிப்பதில் சிறந்த முறையில் அமைந்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் ஒப்பளிப்பு அளித்த மொத்த தொழில் நிறுவனங்களில் 99 சதவிகிதம் சிறு தொழில் நிறுவனங்களுக்காக அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர மகளிர் தொழில் முனைவோர்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உடல் ஊனமுற்றோர் களுக்கும் முன்னாள் படைவீரர்களுக்கும் முதல்முறை தொழில் முனைவோர்களுக்கும் ஊக்கமளிக்கப்பட்டு முன்னுரிமையுடன் கடனுதவி வழங்கப்படுகிறது.

2. மூலதனமும் நிதி ஆதாரங்களும்:

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 40கோடி களாகும். செலுத்தப்பட்ட மூலதனம் 30—6—1988 வரை சுமார் 30 கோடிகளாகும். இம்மூலதனத்தில் தமிழ்நாடு அரசின் பங்கு 53.42 விழுக்காடாகும். இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் பங்கு 45 விழுக்காடுகளாகும். மீதிப்பங்கினை, புதுவை அரசு பொதுக் காப்பீட்டு நிறுவனம், கூட்டுறவு மற்றும் நாட்டுடமை யாக்கப்பட்ட வங்கிகள் அளித்துள்ளன. தற்போது இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 50 கோடிக்கு அதிகரிக்கப் பட்டுள்ளது.

இக்கழகத்திற்குத் தேவையான நிதி ஆதாரங்களில் தமிழ்நாடு அரசு மற்றும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவை அளித்து வரும் மூலதனமும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அளித்து வரும் மறுநிதி உதவியும் தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள கடனீட்டுப் பத்திரங்களும் முக்கியமானவையாகும். 31-3-1988-இல் இதற்கான விவரம் வருமாறு.

(ரூபாய் கோடிகளில்)

| | | |
|---|---|---|
| (1) | இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி உதவி | 152.00 |
| (2) | கடனீட்டுப் பத்திரங்கள் .. .. | 101.19 |
| (3) | பங்கு மூலதனமும் .. .. | 29.99 |

3. கழகத்தின் மண்டல கிளை அலுவலகங்கள்:

சிறுதொழில் பிரிவினருக்கு முன்னுரிமையளித்து சிறந்த முறையில் பணியாற்றிட இக்கழகம் நீலகிரி மாவட்டம் நீங்கலாக மற்ற எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் கிளை அலுவலகங்களைக் கொண்டுள்ளது. மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்களை கோவை, சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் அமைத்துள்ளது. இக்கழகத்தின் நிதியுதவியளிக்கும் வரம்புகள் கீழ் கண்டவாறு செயல்படுத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. கிளை அலுவலகங்கள் | .. | ரூபாய் 3 இலட்சங்கள் வரை |
| 2. மண்டல அலுவலகங்கள் | .. | ரூபாய் 3 இலட்சங்களுக்குமேல் 7.5 இலட்சங்கள் வரை |
| 3. தலைமை அலுவலகம் | .. | ரூபாய் 7.5 இலட்சங்களுக்கு மேல் 12.5 இலட்சங்கள் வரை |
| 4. செயற்குழு | .. | ரூபாய் 12.5 இலட்சங்களுக்கு மேல் 25 இலட்சங்கள் வரை |
| 5. நிர்வாகக் குழு | .. | ரூபாய் 25 இலட்சங்களுக்கு மேல் (60 இலட்சங்கள் வரை) |



கிளை அலுவலகங்கள் ரூபாய் 12.5 இலட்சங்கள் வரை ஒப்பளிக்கப்பட்ட கடனை பத்திரப் பதிவு செய்து விநியோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

4. செயல்பாடுகள் :

(அ) மொத்த உதவிகள் :

(ரூபாய் இலட்சங்களில்.)

| | 31-12-1988 வரையிலான மொத்த உதவி. | | 1988-89 ஆம் ஆண்டு உதவி (31-12-1988 வரை). | |
|---|---|---|---|---|
| | எண். | தொகை. | எண். | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஒப்பளிப்பு அளிக்கப்பட்டவை .. | 40,459 | 77,800.00 | 2,858 | 10,397.37 |
| விநியோகம் செய்யப்பட்டவை .. | .. | 57,802.65 | .. | 6,077.65 |

(ஆ) ஒப்பளிப்பு/விநியோகம் மற்றும் வசூல் ஆகிய விவரங்களைக் (கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு) காட்டும் புள்ளி விவரப்பட்டியல்.

(ரூபாய் கோடிகளில்.)

| நிதி ஆண்டு. | ஒப்பளிப்புகள். தொகை. | ஒப்பளிப்புகள். வளர்ச்சி விகிதம். | விநியோகங்கள். தொகை. | விநியோகங்கள். வளர்ச்சி விகிதம். | வசூல்கள். தொகை. | வசூல்கள். வளர்ச்சி விகிதம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | ரூ. | | ரூ. | | ரூ. | |
| 1983–84 .. .. | 59.74 | 6.9 | 41.11 | 3.9 | 25.23 | 27.1 |
| 1984–85 .. .. | 68.11 | 14.0 | 48.70 | 18.5 | 32.38 | 28.3 |
| 1985–86 .. .. | 82.39 | 35.7 | 63.44 | 35.0 | 42.30 | 30.6 |
| 1986–87 .. ... | 101.48 | 9'8 | 68.59 | 8.1 | 51.50 | 21.8 |
| 1987–88 .. .. | 124.67 | 22.9 | 79.57 | 16.0 | 61.06 | 18.6 |
| 1–4–1988 முதல் 31–12–1988 வரை. | 103.97 | .. | 69.78 | . | 42.04 | .. |



(இ) சிறுதொழில் பிரிவினருக்கான உதவி விவரங்கள் :

(ரூபாய் இலட்சங்களில்.)

| வருடம். | எண். | தொகை. | மொத்த ஒப்பளிப்பின் விழுக்காடு. எண். | மொத்த ஒப்பளிப்பின் விழுக்காடு. தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1983–84 .. .. .. | 3,800 | 5,353 | 99 | 90 |
| 1984–85 .. .. .. | 4,008 | 6,269 | 99 | 92 |
| 1985–86 .. .. ... | 4,398 | 8,607 | 99 | 93 |
| 1986–87 ... .. .. | 3,922 | 9,274 | 99 | 91 |
| 1987–88 .. .. .. | 4,115 | 10,900 | 99 | 88 |
| 21–3–1988 வரையிலான (நிகர ஒப்பளிப்புகள்). | 36,189 | 50,503 | .. | [illegible] |
| 1–4–1988 முதல் 31–12–1988 வரை) .. | 2,325 | 9,3[illegible] | [illegible] | [illegible] |

(ஈ) கழகத்தின் நிகர லாபம் :

கடந்த ஐந்து ஆண்டுகளில் இக்கழகத்திற்கு கிடைத்த நிகர
இலாபம் (வரி, ஒதுக்கீட்டிற்கு பின் பின்வருமாறு):

(ரூ. இலட்சத்தில்).

| வருடம். | | | தொகை. |
|---|---|---|---|
| 1983–84 | .. | .. | 133.16 |
| 1984–85 | .. | .. | 196.54 |
| 1985–86 | ... | .. | 195.40 |
| 1986–87 | .. | .. | 281.52 |
| 1987–88 | .. | .. | 203,04 |

5. பின்தங்கிய பகுதிகளுக்கான நிதி உதவி:

இந்திய மற்றும் தமிழ்நாடு அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள
பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குபவர்களுக்கு இக்
கழகம் பல்வேறு சலுகைகளை அளித்து நிதியுதவி அளித்து
வருகிறது. பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் தொடங்கி
யோர்களுக்கு 31–3–1988-ல் முடிவுற்ற நிதியாண்டில் வழங்கப்
பட்ட நிதியுதவி ரூ. 4,968 இலட்சங்களாகும். 1–4–1988 முதல்
31–12–1988 வரை ரூ. 3,475.00 இலடசங்கள், 1247 விண்ணப்ப
தாரர்களுக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

6. நடைமுறையிலுள்ள திட்டங்கள்:

இக்கழகம் தற்போது கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிதியுதவி
அளித்து வருகிறது.

1. சிறு தொழில்கள் 2. நடுத்தரத் தொழில்கள் 3, தொழில்
விளைஞர்கள், 4, சுலபக் கடன் மற்றும் ஆதார மூலதனக் கடன்
5. மின் உற்பத்தி செய்யும் கருவிகள் (ஜெனரேட்டர்கள்),
6. தங்கும் விடுதிகள் (ஹோட்டல்கள்), 7. பதிவு பெற்ற மருத்து
வர்கள், 8. போக்குவரத்து வாகனக்கடன், 9. ஒருங்கிணைந்த
கடனுதவி, 10. மீன்பிடி படகுகள், 11. சிறு மருத்துவமனைகள்,
12. நவீனப்படுத்தும் திட்டம். 13. உபகரண மறுயுதவித் திட்டம்
14. நலிவுற்ற தொழில்களின் புனரமைப்புத் திட்டம்.

7. மானிய உதவி:

இந்திய மற்றும் மாநில அரசுகள் அறிவித்துள்ள பின்தங்கிய
பகுதிகளில் தொடங்கப்படும் தொழில்களின் நிலையான சொத்துக்
களின் மீது 15 சதவிகிதம் மற்றும் 10 சதவிகிதம் மானிய
உதவியினை மத்திய மாநில அரசிடமிருந்து பெறுவதற்கு முன்னரே
தன்னிடமுள்ள நிதி ஆதாரங்களிலிருந்து இக்கழகம் மானிய நிதி
யுதவி அளித்து தொழில் முனைவோர் விரைவில் திட்டங்களை



நிறைவேற்ற உதவி புரிந்து வருகிறது. 31–3–1988 ல் முடிவுற்ற
நிதியாண்டில் இக்கழகம் தமிழ்நாடு அரசின் மானிய உதவியாக
ரூபாய் 614,81 இலட்சங்களும் மத்திய அரசின் மானிய உதவியாக
ரூபாய் 1,135.73 இலட்சங்களும் வழங்கியுள்ளது.

8. சிறப்புத் திட்டங்கள்:

(அ) சுலபக் கடன்:

சுலபக்கடன் திட்டத்தின் கீழ் தாமே சொந்தமாகத் தொழில்
தொடங்குவதற்குத் தேவையான மூலதனமில்லாத தொழில்
விளைஞர்களுக்கு ரூபாய் நான்கு இலட்சங்கள் வரை நிதியுதவி
அளிக்கப்படுகிறது. நான்கு இலட்சங்களுக்குமேல் தேவைப்படும்
தொழில் விளைஞர்களுக்கு ஆதார முதலீட்டுத் திட்டத்தின் கீழ்
இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடம் இருந்து நிதியுதவிபெற்று
வழங்கப்படுகிறது. 31–3–1988 ல் முடிவுற்ற நிதியாண்டில் சுலபக்
கடன் திட்டத்தின் கீழ் 2231 நிறுவனங்களுக்கு ரூபாய் 785 இலட்
சங்கள் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மின் உற்பத்தி செய்யும் கருவி (ஜெனரேட்டர்) வாங்க
நிதியுதவி:

மின்வெட்டு காரணமாக உற்பத்தி பாதிக்காமல் இருக்க
தொழிலகங்களுக்கு விரைவாக இத்திட்டத்தின்கீழ் மின் உற்பத்தி
செய்யும் கருவி (ஜெனரேட்டர்) வாங்குவதற்கு நிதியுதவி அளிக்
கப்படுகிறது. 1–4 1988 வரை ரூ. 10.00 இலட்சங்கள், 11
விண்ணப்பதாரர்களுக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(இ) தொழில் விளைஞர்களுக்கான திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் பொறியியல் பட்டதாரிகளுக்கு மட்டு
மல்லாமல் அனுபவமும் தேர்ச்சியும் பெற்ற தொழில் விளைஞர்
களுக்கு தாராளமாக நிதியுதவி அளிக்கப்படுகிறது. 31–3–1988
முடிய இக்கழகம் 675 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 975 இலட்
சங்கள் நிதியுதவி அளித்துள்ளது. 1–4–1988 முதல் 31–12–1988
வரை ரூ. 15.00 இலட்சங்கள், 5 விண்ணப்பதாரர்களுக்கு
ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(ஈ) போக்குவரத்து வாகனத் திட்டம்:

சுற்றுலா ஊர்திகள், சரக்கு ஏற்றிச் செல்ல லாரிகள், மற்றும்
வாகனங்கள் வாங்குவதற்கு ஓட்டுனர்களுக்கும் ஓட்டுனர் அல்லாத
வர்களுக்கும் இக்கழகம் நிதியுதவி அளிக்கிறது. 31–3–1988
முடிய இக்கழகம் 8670 விண்ணப்பதாரர்களுக்கு 9,740 இலட்
சங்கள் நிதியுதவி அளித்துள்ளது. 1–4–1988 முதல் 31–12–1988
வரை ரூ. 1,413.00 இலட்சங்கள் 832 விண்ணப்பதாரர்களுக்கு
ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(உ) பதிவு பெற்ற மருத்துவர்களுக்கு நிதியுதவி:

பட்டம் பெற்ற மருத்துவர்களுக்கு இக்கழகம் ரூபாய் 15 இலட்சங்கள் வரை நிதியுதவி அளிக்கிறது. கிராமப்புறங்களிலும் மூதல் தர நகராட்சிகள் உள்ளிட்ட பகுதிகளிலும் மருத்துவ மனைகள் தொடங்குவதற்கு ரூபாய் 5 இலட்சங்கள் வரையிலும் மற்றும் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் நவீனமான மருத்துவ மனைகள் தொடங்குவதற்கு ரூபாய் 15 இலட்சங்கள் வரையிலும் இக்கழகம் நிதியுதவி அளிக்கிறது. 31-3-1988 முடிய 367 விண்ணப்பதாரர்களுக்கு 665 இலட்சங்கள் வரையில் த்திட் டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. 1-4-1988 முதல் 31-12-1988 வரை ரூ. 251.00 இலட்சங்கள், 48 விண்ணப்ப தாரர்களுக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(ஊ) நலிவுற்ற தொழில்களுக்கு புனரமைப்புத் திட்டம்:

நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு புனரமைப்பு திட்டத்தின் கீழ் 24 நலிவுற்ற நிறுவனங்களுக்கு ரூபாய் 142 இலட்சங்கள் வரை 1987-88 நிதியாண்டில் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் நலிவுற்ற தொழில் நிறுவனங்களைப் புனரமைப்பு செய்யும் தமிழக அரசின் முனைப்புத் திட்டத்தின் கீழ் 422 தொழில் நிறுவனங் களுக்கு ரூபாய் 2,348 இலட்சங்கள் 31-3-1988 முடிய நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

(எ) சிறிய மருத்துவ மனைகள்/மருத்துவ இல்லங்கள்:

பதிவு பெற்ற மருத்துவர்களுக்கு ரூபாய் 15 இலட்சங்கள் வரை அளிக்கப்படும் நிதியுதவி தவிர, சிறிய (20 முதல் 50 படுக்கைகள் கொண்ட) மருத்துவமனைகள் தொடங்குவதற்கும் மருத்துவ இல்லங்கள் தொடங்குவதற்கும் ரூபாய் 60 இலட்சங்கள் வரை யிலும் இக்கழகத்தினால் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

(ஏ) ஒருங்கிணைந்த கடன் திட்டம்;

இத்திட்டத்தின்கீழ் தொழில்களுக்குத் தேவையான நிலையான சொத்துக்கள் வாங்குவதற்கும் மற்றும் நடைமுறை மூலதனத் திற்கும் மிகச் சிறிய தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வரை இக்கழகத்தினால் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

(ஐ) பழங்குடியினர் தாழ்த்தப்பட்டோர் உடல் ஊனமுற்றோர் நிதியுதவி

இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர்களுக்கு தாராள மாக நிதியுதவி அளிக்கப்படுகிறது. தொழில் தொடங்குவதற்குத் தொகையான நிதி ஆதாரத்தில் தொழில் முனைவோர் 10 விழுக் காடு தங்கள் பங்காகச் செலுத்தினால் போதுமானதாகும். ரூபாய் 50,000 வரை பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் தொழில் முனைவோர்களுக்கு 10 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி அளிக்கப்படுகிறது.



மகளிர் தொழில் விளைஞர்களுக்கான நிதியுதவி :

(ஒ) மகளிர் தொழில் முனைவோர்கள்

இத்திட்டத்தின் கீழ் மகளிர் தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில் திட்டத்தின் மொத்த தொகையில் தங்கள் பங்காக 15 விழுக்காடு செலுத்தினால் போதுமானதாகும். 12.5 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி அளிக்கப்படு கிறது. இத்திட்டத்தின் கீழ் 5 விண்ணப்பதாரர்களுக்கு ரூபாய் 38.40 இலட்சங்கள் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

(ஓ) முன்னாள் படை வீரர்களுக்கான நிதியுதவி (செம்பெக்ஸ்):

இத்திட்டத்தின் கீழ் முன்னாள் படை வீரர்களுக்கு கூட்டுறவு அமைப்பின் கீழ் அல்லது கம்பெனி அமைப்பின் கீழ் தொடங்கப் படும் தொழில் திட்டங்களுக்கு 10 முதல் 12 விழுக்காடு வட்டி விகிதத்தில் 10 விழுக்காடு தொழில் முனைவோரின் பங்காகப் பெறப்பட்டு ரூபாய் 12 இலட்சங்கள் வரை கடனுதவி அளிக்கப் படுகிறது.

9. புதிய திட்டங்கள்:

(அ) நலிவுற்ற தொழில்களுக்குப் புனரமைப்புத் திட்டத்தின்படி புதிய ஒதுக்கீட்டுப் பணவுதவித் திட்டம்

மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட ஒதுக் தமிழ்நாட்டின் நடைமுறையில் உள்ளது. ஒதுக் கீட்டுப் பணவுதவித் திட்டம்தான் ரூபாய் 50,000 வரைதான் நிதியுதவி இத்திட்டத்தின்படி கீழ் செயல்படக்கூடிய சிறுதொழில் செய்யவியலும். நலிவுற்ற, தேவை ரூபாய் நிறுவனங்களுக்கு ஒதுக்கீட்டுப் பண உதவித் தேவைப்படுமானால் அதற்காக இக்கழகம் 50,000-க்கு மேல் பண உதவித் திட்டம்'' என ஒரு ', புதிய ஒதுக்கீட்டுப் இத்திட்டத்தின் கீழ் உச்சவரம்பாக திட்டத்தை வகுத்துள்ளது. ஒதுக்கீட்டுப் பண உதவி சிறுதொழில் ரூபாய் 5 இலட்சம் வரை களுக்கு வழங்கப்படும்.

இந்தியத் தொழில் மறுசீரமைப்பு வங்கியிடமிருந்து பெறப் படும் ரூபாய் 50 இலட்சம் கடன் தொகை இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் வரையறைகளுக்கேற்ப உரிய வகையில் வழங்கப்படும். இந்தக் கடன் உதவிக்குத் தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் பொது இசைவும் பெறப் பட்டுள்ளது.

(ஆ) ஆசிய வளர்ச்சி வங்கிக் கடன்

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மூலமாக, ஆசிய வளர்ச்சி வங்கியிடம் இருந்து கடன் பெறுவதற்குரிய சிறந்த பணி நிலை நாட்டு நிறுவனங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 8 மாநில நிதி நிறுவனங்களுக்குள் இக்கழகமும் ஒன்றாகும். புதிய தொழில் கள் தொடங்குவதற்கும் ஏற்கனவே உள்ள தொழில் கூடங்

களை விரிவுபடுத்துவதற்கும் தற்போதுள்ள தொழில் முறைப் பாடுகளை மாற்றியமைப்பதற்குரிய எந்திரங்களை ஆசிய வளர்ச்சி வங்கியின் உறுப்பு நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்வதற்கும் இக்கடன் தொகை அளிக்கப்படும். இத்திட்டம் நடப்பு நிதியாண்டில் சீரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(இ) தவணை கடன் மற்றும் நடைமுறை மூலதனக்கடன் ஒருங்கிணைந்த ஒப்பளிப்பு நிதியுதவி

இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 5 இலட்சங்களுக்குட்பட்ட தொழில் திட்டங்களுக்கு தவணைக் கடன் முறையிலும் நடைமுறை மூலதனத்திற்காகவும் நிதியுதவி அளிக்கப்படுகின்றது. இதில் நடைமுறை மூலதனத்திற்கு ஒதுக்கப்படும் அதிகபட்ச தொகை ரூபாய் 2.5 இலட்சங்கள் ஆகும். இக்கடன் தொகையை 10 ஆண்டுகளில் திருப்பித்தர வேண்டும். இத்திட்டம் இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

10 பயிற்சி நிலையம்:

இக்கழகத்தில் பணியாற்றும் அதிகாரிகளின் தகுதி, செயற்பாட்டுத் திறமைகளை உயர்த்தவும் அத்தகைய உயர்வு தொடர்ந்து விளையவும் வழிசெய்யும் வகையில் இக்கழகத்தின் தலைமையலுவலகத்தில் இந்த வாய்ப்பு தொடர்ந்து கிடைக்கத் தக்க வகையில் சிறப்பு அம்சங்களுடன் ஒரு பயிற்சி நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

11. எதிர்காலத் திட்டங்கள்:

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியின் முன்னேற்றமான போக்கைக் கருத்திற்கொண்டும் தொழில் வளர்ச்சியில் தன்னுடைய பங்கினை ஆற்றும் நோக்கத்துடனும் பின்வரும் இலக்குகளை 1988–89 ஆம் ஆண்டிற்கு இக்கழகம் வரையறுத்துள்ளது.

| | | (ரூபாய் கோடிகளில்.) |
|---|---|---|
| 1. | நிதியுதவி ஒப்பளித்தல் | 110 |
| 2. | விநியோகம் | 86 |
| 3. | வசூல் | 76 |

12. தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்தை மேலும் விரைவுப்படுத்தவும் தொழில் முனைவோர்களுக்குக் குறிப்பாக சிறு தொழில் முனைவோர்களுக்கு சிறப்பாக பணியாற்றிடவும் அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்திடவும் மேலும் அவர்கள் தொழில் திட்டங்களைத் தாமதம் இன்றி விரைவில் நிறைவேற்றிடவும் தற்போது இக்கழகத்தின் தலைமை அலுவலகத்தின் ஓர் உதவி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் தொழில் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் தடைகளை நீக்குவதற்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



சிறு தொழில் முனைவோர்களுக்கு உதவிடும் வகையில் விண்ணப்பப் படிவங்களைச் சீரமைத்து எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. கடன்களை வழங்குவதில் விநியோகம் செய்வதிலும் வழிமுறைகள் சீரமைக்கப்பட்டு எளிதாக்கப்பட்டுள்ளன. இதனால் தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில் திட்டங்களை விரைவில் நிறைவேற்றிட ஏதுவாகிறது.

13. முடிவுரை:

இக்கழகத்தின் நடப்பு ஆண்டு சாதனைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தனி இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு-IV

(—ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

நடப்பு ஆண்டு சாதனைகளின் விவரம் 1-4-1988 முதல் 31-12-1988 வரை.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | எண். | தொகை. |
|---|---|---|
| 1. மொத்த உதவிகள்; | | |
| ஒப்பளிக்கப்பட்டவை | 2,858 | 10,397.37 |
| சிறு தொழில்களுக்கு உதவி | 2,825 | 9,391.54 |
| நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள். | 33 | 1,005.83 |
| பின்தங்கிய மாநிலங்கள் | 1,247 | 3,475.62 |
| இதர மாநிலங்கள் | 1,611 | 6,922.35 |
| 2. சிறப்பு திட்டங்கள்: | | |
| தொழில் வினைஞர்களுக்கான கடன். | 5 | 15.30 |
| போக்குவரத்து வாகனங்கள் | 832 | 1,412.62 |
| மின் உற்பத்தி செய்யும் கருவிகள் | 11 | 9.87 |
| பதிவு பெற்ற மருத்துவர்கள் | 48 | 250.69 |
| 3. பொது: | | |
| வேலை வாய்ப்புகள்: | 16,300 | .. |
| விநியோகம் | | |
| வசூல் | .. | 6,077.65 |
| | .. | 4,204.45 |
| மறு நிதியுதவி (இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து) | .. | 4.240.15 |

### டான்சியின் கொள்கை குறிப்பு.

1. முகவுரை:—

1.1. டான்சி எனும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் 1965-ஆம் ஆண்டில் தொழில் மற்றும் வணிக துறையின்கீழ் முதல் மூன்று ஐந்து ஆண்டு திட்டங்களின்போது துவக்கப்பட்ட பல பொருட்களை உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலைகளை



ஏற்று நடத்த அமைக்கப்பட்டது. இத் தொழிலகங்கள் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சியை உயர்த்தவும், பரப்பவும் பயிற்சி மற்றும் செய்முறை சேவை நிலையங்கள் வியாபார நோக்கற்ற காரணங்களுக்காக அமைக்கப்பட்டன. இத்தொழிற் கூடங்களின் விற்பனை கணிசமாக உயர்ந்து வியாபார ரீதியில் நடத்தும் நிலையினை எய்தியபொழுது இது போன்ற 64 தொழிற் கூடங் களை டான்சி ஏற்றது.

1.2. சில தொழிற் கூடங்களை திரும்பவும் தொழில் மற்றும் வணிகத் துறையினருக்கே திருப்பி அளித்துவிட்டதாலும் மூன்று தொழிற் கூடங்களை தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனத் திற்குமாற்றப்பட்டதாலும்,ஓர்தொழிற் கூடத்தை வேளாண்மைத் தொழில் நிறுவனத்திற்கு மாற்றிக் கொடுத்ததாலும் மற்றும் இரண்டு தொழிற் கூடங்களை மூடிவிட்டாலும், டான்சி நீண்ட காலமாக 56 தொழிற் கூடங்களை தன்னகத்தே கொண்டு செயல் பட்டு வந்தது. தமிழ்நாடு கனிம நிறுவனம் அமைக்கப்பட்டவுடன் டான்சியால் செயல்படுத்தப்பட்டு வந்த கருங்கல் பாறைகளை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்யும் பணி அந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு விட்டது. அரசால் வழங்கப்பட்ட சீரமைப்பு ஆணைப்படி 1986-ஆம் ஆண்டில் டான்சியில் இயங்கி வந்த நான்கு தோல் தொழில் தொழிற்கூடங்கள் "தமிழ்நாடு தோல் அபிவிருத்திக் கழகத்திற்கு" மாற்றப்பட்டன. மற்றும் ஐந்து தொழிற் கூடங்கள் மூடப்பட்டன. டான்சி தற்பொழுது தன்னகத்தே 47 உற்பத்தி தொழிற் கூடங்களையும், 7 விற்பனை நிலையங்களையும் கொண்டுள்ளது. மேலும் சில திட்ட வேலை களையும் (project works) மேற்கொண்டுள்ளது. இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் நிறுவனத்தின் கூட்டமைப்புடன் உதக மண்டலத் தில் கைகெடியாரங்களின் உறிப்புக்களை இணைக்கும் தொழிற் சாலை, இராணிப்பேட்டையில் அறுவை மற்றும் துளை போடும் இயந்திரங்களை தயாரிக்கும் தொழிற்சாலையும் மற்றும் சாராவியை (spirit) அடிப்படைப் பொருளாகக் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்யும் ஓர் தொழிற்கூடத்தை அம்பத்தூரிலும் டான்சி புதிதாக தொடங்கியுள்ளது.

1.3. டான்சியின் உற்பத்தி தொழிற்கூடங்களை கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. கட்டுமான தொழிற்கூடங்கள்.
2. கருவிகள் மற்றும் அதனை சார்ந்த பொருட்கள் உற்பத்தி தொழிற்கூடங்கள்.
3. பொறியியல் தொழிற் கூடங்கள்.
4. கட்டமைப்பு புனைவு தொழிற்கூடங்கள்.
5. வார்ப்பட தொழிற்கூடங்கள்.
6. அறைகலன்கள் உற்பத்தித் தொழிற்கூடங்கள்.

7. சிறப்பு வகை/பல்வகைப் பொருட்களின் உற்பத்தி தொழிற்கூடங்கள்.

டான்சியின் பெரும்பாலான தொழிற்கூடங்கள், மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களான இரயில்வே, தபால் தந்தி, விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு மின்சார வாரியம், மற்றும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் போன்றவற்றிடமிருந்து கிடைக்கப் பெறும் பணி ஆணைகளை நிறைவேற்றுவதோடு தனியார் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் பணி ஆணைகளையும் பெற்று நிறைவேற்றித் தருகிறது.

2. கடந்த கால செயல்பாடு :

2.1. 1979-80 ஆம் ஆண்டில் இருந்து இந்நிறுவனம் அடைந்த உற்பத்தி விற்பனை மற்றும் செயல் விளைவு கீழே தரப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்.)

| வருடம். | உற்பத்தி. | விற்பனை. | | செயல் விளைவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) |
| 1979–80 | 1,835 | 1,661 | ( ) | 17.53 |
| 1980–81 | 2,065 | 2,016 | (—) | 31.60 |
| 1981–82 | 2,333 | 2,339 | (—) | 94.46 |
| 1982–83 | 2,216 | 2,985 | (—) | 176.32 |
| 1983–84 | 2,514 | 2,343 | (—) | 211.29 |
| 1984–85 | 2,368 | 2,392 | (—) | 443.36 |
| 1985–86 | 2,479 | 2,420 | (—) | 420.46 |
| 1986–87 | 2,389 | 2.774 | (—) | 280.63 |
| 1987–88 | 2,492 | 2,472 | (—) | 303.77 |

3. டான்சி சிரமைப்பு :

3.1. டான்சி தொடர்ந்து பெருத்த நட்டத்தில் செயல்பட்டு வந்ததால் அரசு ஆணை எண். 832/தொழில் (எஸ்.ஐ.டி-2) துறை, தேதி 30–9–1985-ல் ஆதாயமின்றி டான்சியில் இயங்கி வந்த 8 தொழிற் கூடங்களையும் மற்றும் டான்சியின் இரண்டு தொழிற் கூடங்களின் வார்ப்பட பகுதியினையும் மூடிவிட அரசு ஆணை வழங்கியது. அரசு மூடிவிட ஆணையிடப்பட்ட 8 தொழிற்கூடங்களில், டான்சி இதுவரை கீழ்க்கண்ட 5 தொழிற் கூடங்களை மூடிவிட்டது.



1. டான்சி முலாம் பூச்சு மின்கம்பிகளின் உற்பத்தி தொழிற்சாலை;

2. டான்சி உரோமம் பதப்படுத்தும் தொழிற்சாலை, விண்ணமங்கலம்;

3. டான்சி வார்ப்பட தொழிற்சாலை, கிண்டி.

4. டான்சி வார்ப்பட தொழிற்சாலை, காட்பாடி.

5. டான்சி கட்டுமானத் தொழிற்சாலை, அம்பத்தூர்.

3.2. கீழ்க்கண்ட இரண்டு தொழிற்சாலைகளில் வார்ப்பட பிரிவுகள் மூடப்பட்டன.

1. டான்சி வார்ப்பட மற்றும் பொறியியல் தொழிற்சாலை, தஞ்சை.

2. டான்சி பொறியியல் தொழிற்சாலை, திருச்சி.

3.3. தன் விருப்பப் பணிவிலகல் திட்டத்தின்கீழ் எல்லாத் தொழிலாளர்களும் தாமாகவே பணியிலிருந்து விலக முன்வராததால் கீழ்க்கண்ட மூன்று தொழிற்சாலைகளும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. டான்சி கட்டுமானம் மற்றும் முலாம் பூச்சு தொழிற்சாலை, மேட்டூர் அணை.

2. டான்சி இயந்திரத் தொழிற்கூடம், அம்பத்தூர்.

3. டான்சி வார்ப்பட மற்றும் கனரக இயந்திரத் தொழிற்சாலை, ஈரோடு.

3.4. ஆட்குறைப்பால் ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்கும், தொழிலாளர்களும் மற்றும் அலுவலர்களும் அவர்கள் தாமாகவே தங்கள் வாழ்வின் வளத்தில் மாற்றம் காணவேண்டும் என்ற நல்லெண்ணத்தில், ''தாமாகவே பணி விலகல்'' என்ற திட்டம் அமுல்படுத்தப்பட்டு, அதனால் ஏற்படும் பயன்களைப் பெற்று 157 பணியாளர்களும் மற்றும் 1,195 தொழிலாளர்களும் பணியிலிருந்து விலகியுள்ளனர். பொருளாதார ரீதியில் இலாபகரமுன்றி இயங்கிய தொழிற்சாலைகளை மூடியதாலும் மற்றும் தேவைக்கும் அதிகமாக கருதப்பட்ட தொழிலாளர்களும் மற்றும் அலுவலர்களும் பணியிலிருந்து விலகியதாலும், டான்சி 1984–85 ஆம் ஆண்டில் ரூபாய் 443.36 இலட்ச இழப்பை எய்திய நிலையிலிருந்து 1986–87 ஆம் ஆண்டில் ரூபாய் 280.63 இலட்சத்துக்கு இழப்பை குறைக்க முடிந்தது.

4. தற்போதைய செயல்பாடு :

4.1. 1988–89 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 2,660 இலட்சம் உற்பத்தி மற்றும் விற்பனை இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1988–89 ஆம் ஆண்டில் ரூபாய் 28 கோடிக்கு உற்பத்தியையும் மற்றும் ரூபாய் 30 கோடிக்கு விற்பனையையும் உயர்த்தி நிகழும் ஆண்டில் இழப்பை 198 இலட்சத்திற்குள் கொண்டுவர டான்சி எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. தற்பொழுது, சனவரி 1989 ஆம் வரையிலான செயல்பாடும் கடந்த ஆண்டில் இதே காலத்திற்கான செயல்பாடும் கீழே ஒப்பிடப்பட்டுள்ளது:—

| (1) | 1988–89 (1-4-1988 முதல் 31-1-1989 வரை.) (ரூபாய் இலட்சத்தில்.) (2) | 1987–88 (1-4-1987 முதல் 31-1-1988 வரை.) (3) |
|---|---|---|
| உற்பத்தி .. .. .. | 2,246.28 | 1,793.26 |
| விற்பனை .. .. .. | 2,267.83 | 2,073.09 |
| விற்பனை விலையில் செலவினங்களுக்கான உள்ள பங்கு. | 439.70 | 270.56 |

4.2. மேற்கண்டவற்றிலிருந்து, கடந்த ஆண்டோடு ஒப்பிட்டு பார்த்தால், தற்போதைய செயல்பாட்டில் டான்சியின் போக்கில் சாதகமான போக்கு உள்ளது தெரிகிறது. டான்சி மேலும் முன்னேற்றம் காணும் என்றும் நம்பிக்கை தெரிகிறது. இருந்த போதிலும், சம்பளக் கமிஷனின் பரிந்துரைகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இடைக்கால நிவாரணம் வழங்கப்படுதலால் சம்பளம் வழங்குவதில் ஏற்படும் கூடுதல் செலவுகளால்டான்சியின் இலாபம்-இழப்பு இவற்றில் பாதிப்பு ஏற்படக்கூடும்.

5. 1989–90 ஆம் ஆண்டிற்கான கணிப்பு :

5.1. 1989–90 ஆம் ஆண்டிற்கு உற்பத்தி மற்றும் விற்பனை இலக்காக ரூபாய் 30 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை, செயல்பாட்டில் ஆயத்தீர்வை சலுகைகள் மற்றும் பொருட்களை கையாண்டு உபயோகப்படுத்துவதில் காட்டப்படும் கடுமையான கட்டுப்பாடு ஆகியவற்றால் ஏற்படும் உயரக்கூடிய ஆதாயத் திறனாலும், டான்சி அதன் இழப்பை எய்தும் போக்கினை மாற்றி இழப்பை முழுவதும் தவிர்த்து ஓரளவு இலாபத்தை அடையும் என நம்பப்படுகிறது.



6. நிறைவேற்றப்பட்ட சில பெரிய பணி ஆணைகள் :

6.1. ரூபாய் 4.25 கோடி மதிப்பு கொண்ட 31 நுண்அலை கோபுரங்களின் வடிவமைப்பு பாகங்களை புனைந்து முலாம்பூசி அதனை வழங்கி இராஜஸ்தான் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நிறுவித்தரும் ஒரு பணியினை ஐ.டி.ஐ.க்காக டான்சி நிறைவேற்றி வருகிறது. 70 முதல் 100 மீட்டர் வரை உயரம் கொண்ட அக்கோபுரங்களின் கட்டுமானங்களை போக்குவரத்து வசதியில்லாத மோசமான வானிலையைக் கொண்ட பாலைவனப் பகுதிகளில் நிறுவ வேண்டியுள்ளது, கனத்த பருமானத்தை கொண்ட இக்கட்டுமானங்களை போக்குவரத்து பாதைகள் இல்லாத சில இடங்களில் கொண்டு சென்று மோசமான வானிலையைக் கொண்ட இடங்களில் நிறுவித்தருவது கடும் பணிக்கு ஒரு சவாலாக உள்ளது. இதுபோன்ற பணியை ஏற்றுள்ள மற்ற நிறுவனங்களைவிட டான்சி அதன் பணியை நிறைவேற்றுவதில் முன்னேறி உள்ளது என்பது பெருமைக்குரியதாகும்.

6.2. கனரக கட்டுமானங்களையும் மற்றும் உயர்ரக துல்லியமான பொறியியல் பணிகளை நிறைவேற்றும் வசதிகளைக் கொண்ட திருச்சியிலுள்ள டான்சி கட்டுமானத் தொழிற்சாலை, இறக்குமதி செய்யப்பட்ட அலுமினியத்தை மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கும் ''ஸ்ரவுடு தொகுப்பு'' (Shroud Assembly) என்ற பொருளை புனைந்து வழங்கும் ஓர் பணியினை பெற்று ''வி.எஸ்.எஸ்.சி.'' நிறுவனத்தின் முழு தொழில் நுட்ப திருப்தியுடன் நிறைவேற்றி தந்துள்ளது. இத்துறையில் ''எச்.ஏ.எல்.'' நிறுவனம் ஒன்றே முன்னோடியாக உள்ளது. இதனை வெற்றியுடன் முடித்துக் கொடுத்ததால், 'போலார் விண்கல ஏவுகணை' திட்டத்திற்கு ''வெப்பத் தகடுகள்'' (Heat Shield) வழங்கும் பணி ஆணையை பெற முடிந்தது. விண்வெளி பொறியாளர்களின் சோதனை மற்றும் நுண் தொழில் நுட்ப நிலைகளை சமாளிப்பதற்காக கடுமையான உற்பத்திக் கட்டுப்பாடு, நுண்ணிய பொறியியல் திறன் இப்பணியை நிறைவேற்ற தேவையாகிறது. இக்கடுமையான பணியினை நிறைவேற்றி முடித்து தருவதில் டான்சியின் திறனை, வி.எஸ்.எஸ்.சி.யின் விண்வெளியின் உயர் தொழில் நுட்ப பொறியாளர்கள் பாராட்டியுள்ளனர். திருச்சி டான்சி கட்டுமானத் தொழிற்சாலையின் விரிவாக்கப் பணி முடிந்தவுடன் இதுபோன்ற பணி ஆணைகள் தொடர்ந்து கணிசமான அளவில் கிடைக்கப் பெறும் என நம்பப்படுகிறது.

6.3. கரும்பலகைகள் வழங்கும் திட்டத்தின்படிதமிழ் நாட்டின் 77 இடங்களில் பல்வகைப் பொருட்களை 5,995 தொடக்கப் பள்ளிகளுக்கு வழங்கும் ரூபாய் 1.5 கோடி மதிப்பு கொண்ட ஆணையை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து டான்சி பெற்று தற்பொழுது நிறைவேற்றி வருகிறது.

6.4. சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலுக்காக ரூபாய் 20.00 இலட்சம் மதிப்பு கொண்ட, 3,602 விசேட அமைப்பைக் கொண்ட வாக்குப் பெட்டிகளை மிகவும் குறுகிய 12 நாட்கள் கால அளவில் டான்சி தயாரித்து வழங்கியது.

6.5. இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்கான, அலுமினியப் பாத்திரங்களை வாங்கி வழங்குவதற்கான பணி ஆணையை டான்சிக்கு மாநில வர்த்தக கழகம் வழங்கியுள்ளது (State Trading Corporation) தற்சமயம் ரூபாய் 55 இலட்சத்திற்கான பணி ஆணை பெறப்பட்டுள்ளது. இது போன்ற பணி ஆணைகள் மேலும் எதிர்பார்க்கப்படுகிறது.

7. வியாபார மற்றும் விற்பனை முயற்சிகள் :

7.1. தனி பிரசுரங்கள் மற்றும் பொருட்களின் தரம் வாரியான வெளியீடுகள், பத்திரிகைகள், வானொலி, கண் காட்சிகள் மூலம் டான்சி அதன் பொருட்களின் விளம்பரத்தை அதிகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் டான்சியின் பொருட்கள் மக்களிடையே பிரபலம் அடைந்து டான்சியின் பொருட்களின் அவர்கள் விற்பனை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7 2. டான்சி மேற்கொண்ட கடும் முயற்சியின் பயனாக, மத்திய அரசு நெ. 175/86 ஆம் அறிக்கையில் தனியார் சிறு தொழில் நிறுவனங்கள் மத்திய ஆயத்தீர்வை பெறும் சலுகைகளைப் போன்று டான்சியின் தொழிற் கூடங்களும் பெறும் விதத்தில் திருத்தம் செய்தது. ஆயத்தீர்வை சலுகைகளைப் பயன்படுத்தி டான்சியின் பொருட்களின் விலைகளில் போட்டியிடும் அளவுக்கு மாற்றம் செய்யப்பட்டு பெருத்த அளவில் ஆணைகள் பெறப்பட்டு டான்சி தொழிற் கூடங்களின் தரம் உயர்த்தப்படும்.

7.3. அரசு ஊழியர் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களின் பணியாளர்களும் டான்சியின் பொருட்களை வாங்குவதற்காக ரூ. 2,400 அல்லது அவர்களின் 2 மாத அடிப்படை சம்பளம் இவற்றில் எந்தத் தொகை குறைவானதோ அத்தொகையை 12 மாத தவணைகளில் பிடித்தம் செய்யக் கூடிய வழியில் வட்டியில்லாக் கடனாக வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி டான்சியின் பொருட்களை வழங்குவதற்காக டான்சி அதன் விற்பனைப் பிரிவின் அமைப்பை மாற்றி அமைத்துள்ளது.

7.4. டான்சியின் பொருட்களை மிகவும் பிரபலப்படுத்துவதற்காகவும், அதன் மூலம் விற்பனையில் ஏற்றம் காணவும் மற்றும் டான்சியை பற்றிய எண்ணத்தை உயர்த்தவும் டான்சி பொருட்காட்சிகள் மற்றும் கண்காட்சிகளில் பங்கு கொள்ளும் டான்சியின் உற்பத்தி மற்றும் விற்பனையை உயர்த்தும் பொருட்டு, டான்சியின் உற்பத்திப் பொருட்களான காஸ்கெட் அவலரக்கு (Gasket Shellac) மற்றும் அறுவை சிகிச்சைக்கான சாராவி (Surgical Spirit) போன்ற பொருட்களை விற்பனை செய்வதற்காக முகவர் மற்றும் இருப்பாளர்களை அமர்த்துவது தீவிரமாக உள்ளது.



7.5. டான்சியின் விற்பனை நிலையங்கள், டான்சியின் பொருட்கள் அல்லாத இரப்பர் மெத்தைகள், தலையணைகள் மற்றும் கால் மிதியடிகள் போன்ற பொருட்களை ஒரு குறிப்பிட்ட அளவு வாங்கி விற்பனை செய்வதை மேற்கொண்டுள்ளன. டான்சியின் உற்பத்தி பொருட்களின் விற்பனையைப் பாதிக்காத அளவு இந்த விற்பனையைச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

7.6. 1988 ஆம் ஆண்டு அக்டோபர்—நவம்பர் திங்கள்களில் டான்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாக்கால சிறப்பு விற்பனையின் மூலம் ரூபாய் 107 இலட்சத்திற்கு டான்சியின் பொருட்கள் விற்பனையாகியுள்ளது. கடந்த ஆண்டில் இது போன்ற விற்பனை ரூபாய் 27.00 இலட்சமாகும்.

8, கூட்டுத் தொழில் முயற்சி :

8.1. அரசு ஆணையின்படி இழப்பை எய்தும் தொழிற் கூடங்களின் செயல்பாட்டை மேம்படுத்தும் எண்ணத்துடன் கூட்டு வியாபார செயல்பாட்டு முயற்சியை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டன. இதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றவுடன், அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு. இரண்டு விண்ணப்பதாரர்கள் கூட்டு வியாபராம் செய்வதற்குத் தகுதியானவர்கள் எனக் கருதப்பட்டு, அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. பொறியியல் தொழிற்கூடங்களைப் பொறுத்தமட்டில், இத்தொழிற் கூடங்களில் உள்ள தொழிலாளர்களையும் மற்றும் பணியாளர்களையும் ஏற்றுச் செயல்படுகிற வகையிலும் மற்றும் போதுமான நிதி நிலையைக் கொண்ட பொருத்தமான விண்ணப்பதாரர்கள் இல்லை.

9. புதிய திட்டங்கள் :

9.1. ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் டான்சி சில புதிய திட்டங்களை செயலாக்கம் செய்வதற்காக ரூபாய் 250 இலட்சத்தை திட்ட ஒதுக்கீட்டாக அங்கீகரித்துள்ளது. ரூபாய் 137.00 இலட்சத்தில் கீழ்க்கண்ட திட்டங்களை டான்சி செயல்படுத்தியுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. இண்டியிலுள்ள டான்சி கருவிகள் உற்பத்தி தொழிற்கூடத்தை நவீனமாக்குதல் மற்றும் விரிவாக்கம் செய்தல் .. .. .. | 72.00 |
| 2. திருச்சியிலுள்ள டான்சி கட்டுமானத் தொழிற் சாலையில் வான் மற்றும் விண்வெளி சம்பந்தப்பட்ட தொழிற் கூடங்களுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்கள் மற்றும் அணுமின் உற்பத்திக்குத் தேவைப்படும் பாகங்களை உற்பத்தி செய்து தரும் திட்டம் .. .. .. .. .. | 60.00 |

[1998 ஏப்ரல் 21

| | |
|---|---|
| 3. சூரிய வெப்ப சக்தியால் நீரை சூடாக்கும் உபகரணங்கள் உற்பத்தி செய்து அதை அமைத்து தரும் திட்டம் .. .. | 5.00 |
| | 137.00 |

9.2. புதியப் பொருட்களை உற்பத்தி செய்யும் திட்டங்களை மேற்கொள்ளுதல் சம்பந்தமான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு உயர் தொழில் நுட்பம் மற்றும் மதிப்பைக் கொண்ட பொருட்களின் உற்பத்தியை மேற்கொள்ளும் வகையில், உற்பத்தி வகையில் மாற்றம் காணுவதற்காக சில ஆதாயம் தரக்கூடிய புதிய திட்டங்கள் 1989–90 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்காக ஆராயப்படுகின்றன.

10. டான்சியின் துணை நிறுவனங்கள் :

10.1. தமிழ்நாடு மொபெட்ஸ் நிறுவனம் 1977 ஆம் ஆண்டு மொபட் வாகனங்களைத் தயாரிப்பதற்காக நிறுவப்பட்டது. சில நிர்வாக சுமைகளினால் மொபெட் வாகனங்களின் உற்பத்தி 1981 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. அதன்பிறகு மனித சக்தி மற்றும் இயந்திரங்களின் ஆற்றலைப் பயன்படுத்துவதற்காக, கிடைக்கப்பெறும் சில பணி ஆணைகளை செய்து தரத் தொடங்கியது. இணைப்புக்கூடம், இயந்திரக்கூடம் மற்றும் கருவிகள் கூடம் என்று மூன்று தொழிற்கூடங்கள் தற்பொழுது இத்துணை நிறுவனத்தில் உள்ளது அரசு ஆணை எண் 83.?.இல் தொழில் (எஸ. ஐ டி. 2) துறை, தேதி 30—9—1985 அவ்வாறு விற்பனை செய்ய முடியாவிட்டால், இந்நிறுவனத்தைத் தொடர்ந்து செயல்படும் நிறுவனமாக விற்றுவிட அரசு ஆணை பிறப்பித்தது. இது குறித்து மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தகுந்த பலனைத் தரவில்லை. ஒருவேளை இந்நிறுவனத்தை கலைத்து விட்டு இந்நிறுவத்தின் மூன்று தொழிற் கூடங்களையும், திரும்பவும் டான்சிக்கே மாற்றி விடவும் அரசு ஆணையிட்டது. இந்த மூன்று தொழிற்கூடங்களையும் தமிழ்நாடு நுண்பொறியியல் நிறுவனம் என்ற புதிய பெயரில் தனி உரிமம் கொண்ட துணை நிறுவனமாக வைத்திருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால் சிறு தொழில் நிறுவனங்கள் அடையும் பயன்களை அடைய முடியும். தாமாகவே மாற்றிக் கொள்ளும் அமைப்பு கொண்ட குறைந்த அழுத்த காஸ் அடுப்புகள் மற்றும் எவர்சில்வர் வடிகால் பலகைகள் போன்ற பொருட்களின் உற்பத்தியை மேற்கொண்டு செயல்பாட்டினை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



1989 ஏப்ரல் 21]

10.2 தமிழ்நாடு வண்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் (டபாப்).

இந்த துணை நிறுவனம் 1985 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு 1–4-1986 முதற்கொண்டு அதன் உற்பத்தியை தொடங்கி தற்பொழுது இலாபத்தில் செயல்படுகிறது. இந்நிறுவனம் சாலைகளில் அடையாளக் குறி இடுகின்ற வண்ணங்களையும் மற்றும் மெருகுத் தன்மைகொண்ட வண்ணங்களையும், ரெட் ஆக்ஸைடு வண்ணத்தையும் உற்பத்தி செய்து வழங்குகின்றன. இவ்வண்ணங்கள் டான்சியின் உற்பத்திப் பொருட்களுக்கு உபயோகப் படுத்தப்படுவதோடு, காவல்துறை, சென்னை மாநகராட்சி மற்றும் பலவற்றிற்கும் விற்கப்படுகின்றது. இந்தப் பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

11. நிதி உதவி:

டான்சிக்கு பெருத்த அளவில் இழப்பு ஏற்பட்டதால், டான்சியின் அடிப்படை மூலதனம் பெரும்பாலும் குறைந்துவிட்டது. தொழிற் பொருளாதார நிலையில் இலாபகரமின்றி இயங்கிய சீரமைப்பு நடவடிக்கைகள் கூடங்களை மூடியதன் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கையாலும் மற்றும் உற்பத்தியை உயர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாலும், டான்சி தற்பொழுது நல்ல விளைவை எய்த ஆரம்பித்துள்ளது. 1988–89 ஆம் ஆண்டில் ரூபாய் 100.00 இலட்சத்தை வழிவகை முன்பணமாக (Ways and Means Advance) அரசு டான்சிக்கு வழங்கியுள்ளது. டான்சியின் செயல்பாட்டில் மேலும் முன்னேற்றம் காண்பதற்கு அரசிடமிருந்து மேலும் நிதி உதவி தேவைப்படுகிறது.

12. தொழில் உறவுகள்:

தொழிலாளர்களையும் சேர்த்து தற்பொழுது டான்சியில் 3,457 பேர் பணிபுரிகிறார்கள். உற்பத்தி மற்றும் விற்பனையை உயர்த்துவதற்காக எங்கெல்லாம் அவசியம் எனத் தோன்றுகிறதோ அத்தகைய தொழிற்கூடத்திலும் மற்றும் விற்பனை நிலையங்களிலும் ஊக்க ஊதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1—4—1988 அன்று முதற்கொண்டு புதுப்பிக்கப்பட வேண்டிய தொழிலாளர்கள் ஊதிய ஒப்பந்தம் 6 மாத காலத்திற்குள் தொழிலாளர்களுடன் கலந்து நல்லபடியாக உடன்பாடு செய்யப்பட்டுள்ளது. சுமூகமான தொழில் உறவுகள் நிலவுகின்றது.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம்.
(டால்கோ)

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ) 10 கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் மார்ச் 21, 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு அரசு நிறுவனம் ஆகும். இதில் தற்பொழுது தமிழக அரசின் பங்கு மூலதனம் இதுவரை செலுத்தப்பட்டது ரூ. 250 இலட்சமாகும். இந் நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:—

(அ) தமிழகத்தில் தோல் தொழிலை வளர்ச்சியடையச் செய்தல்.

(ஆ) தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு உதவியளித்தல்.

(இ) சிறிய அளவில் ஈடுபட்டுள்ள தோல் பதனிடுவோர்க்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல்.

(ஈ) தமிழகத்திலுள்ள தோல் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிக்கும் பிரச்சினைக்கு தீர்வு காணுதல்.

மேற்கண்டுள்ள முக்கிய குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப் பட்டன. இதைத் தவிர, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த நான்கு தோல் தொழிற் கூடங்களையும் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த மாதவரம் தோல் தொழிற்பேட்டையையும் இந்நிறுவனம் 1986 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்டு அவற்றை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது.

பல்வேறு திட்டங்களின் செயலாக்கம் கீழ் வருமாறு:—

1. சிறிய அளவில் காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் கைவினைஞர்களுக்கான உதவி.

இரண்டு தோல் உற்பத்தி மற்றும் வளர்ச்சி மையங்கள் பெரம்பூர் மற்றும் உதகமண்டலத்தில் நிறுவப்பட்டுள்ளன. இந்த மையங்கள் சிறிய அளவில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள், முன் பணம் போன்றவற்றை கொடுத்து அவர்கள் தயாரிக்கும் அனைத்து உற்பத்தி பொருட் களையும் சேகரிக்கின்றன. இந்தப் பொருட்கள் டான்கோவின் வியாபாரப் பெயரான ''கப்ரா'' என்ற பெயரில், டான்கோவின் விற்பனைக் கூடங்கள் மூலமாகவும். கூட்டுறவு அங்காடிகளிலுள்ள விற்பனை நிலையங்களின் மூலமாகவும், பொருட் காட்சி அரங்கு கள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் ஏழ்மையான கைவினைஞர்கள் இத்திட்டத்தி னால் பெரும்பயன் பெறுகின்றனர். இத்திட்டத்தின் மூலமாக விற்பனையளவு கீழ்க்கண்டவாறு எட்டப்பட்டுள்ளது.

| | 1985-86. | 1986-87. | 1987-88. | 1988-89 (30-12-88) (முடிய). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| விற்பனை— | 2.60 | 11.31 | 19.84 | 24.06 |



2. சிறு கைவினைஞர்களின் தொழில் திறத்தையும் மற்றும் திறமையையும் உயர்த்துதல்:

தோல் தொழிலில் அவசிய தேவையாகிய நன்கு பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் தேவையை ஈடுகட்டும் வகையில், இந்து ஆதிதிராவிட சமூகத்தைச் சார்ந்த ஆண்கள் மற்றும் பெண் களுக்கு காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பதில் பயிற்சியளிக்க ஆகஸ்ட் 1986-ல் பயிற்சி நிலையம் ஒன்று பல்லா வரத்தில் திறக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்தில் இருபத் திரண்டு நபர்களுக்கு 9 மாத கால பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் ரூ. 200 உதவித் தொகையும் அளிக்கப்படு கிறது. இந்த வகையான பயிற்சி தொழில் மேம்பாட்டையும், பயிற்சியாளரது திறமையையும் வளர்க்க உதவி புரிகின்றது. இதுவரை மூன்று தொகுதியினர் பயிற்சியை முடித்து தனியார் தோல் தொழிலகங்களில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். நான்காவது தொகுதியினருக்கு பயிற்சியளிக்க நபர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

3. சிறிய தோல் பதனிடுவோர்க்கான உதவி:—

சிறிய அளவில் ஈடுபட்டுள்ள தோல் பதனிடுவோர்க்கு தேவை யான இரசாயனப் பொருட்கள் மற்றும் பதனிடத் தேவையான பிற பொருட்களை குறித்த காலத்திலும், நியாயமான விலையில் கிடைக்கவும், இந்த மூலப் பொருட்கள் வங்கிகள் மூலம் கிடைக்க திண்டுக்கல், ஈரோடு, பேரணாம்பட்டு, குரோம்பேட்டை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் திறக்கப்பட்டுள்ளன. இந்த வங்கிகள் பயன்பெற்று மூலமாக சுமார் 400 தோல் பதனிடுவோர்கள் பயன்பெற்று வருகின்றனர். இவ்வங்கிகள் மூலமாக வழங்கப்படும் பொருட் களில் குறிப்பாக வாட்டில் எக்ஸ்ட்ராக்ட் கட்டிகள் மற்றும் துகள்கள் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டு விநியோகிக்கப்படுகிறது. இந்த வங்கிகள் சிறப்பாக செயல்படுவதை கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து காண லாம்.

| | விற்பனை. | இலாபம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1985-86 .. .. .. | 2.98 | 0.10 |
| 1986-87 .. .. .. | 115.15 | 1.41 |
| 1987-88 .. .. .. | 193.46 | 7.55 |
| 1988-89 (31-12-1988 முடிய). | 186.17 | 5.70 |

4. தோல்பதனிடும் தொழிற்சாலைகளுக்கான உதவி:— [1989 ஏப்ரல் 21

நீண்ட நாட்களாக கவனத்தில் இருந்து வருகின்ற தோல் கழிவு நீர் சுத்திகரிக்கும் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் டால்கோ நிறுவனம் முக்கியத்துவம் அளித்து, தோல் தொழிற் கூடங்கள் பரவியிருக்கும் இடங்களில் பொது சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதனால் தமிழகத்திலுள்ள சுமார் 400 தோல் பதனிடுவோர் பயன் பெறுவர். இதில் முதன்மையாக ''டால்கோ வாணியம்பாடி தோல் பதனிடுவோர் சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாடு நிறுவனம்'' என்ற பெயரில் ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது வாணியம்பாடியைச் சுற்றியுள்ள 69 தோல் பதனிடுவோர் பயன்பெறும் வகையில் ரூ. 227 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பொது சுத்திகரிப்பு நிலையத்தை கட்டுகின்ற பணியில் ஈடுபட்டுள்ளது. தமிழக அரசு ரூ. 25 இலட்சமும் மற்றும் மத்திய அரசு ரூ. 25 இலட்சமும் உதவியளித்துள்ளது. இந்தத் திட்டம் 1989 ஆம் ஆண்டு செயல்பட ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வகையான பொது சுத்திகரிப்பு திட்டங்களுக்கு திட்ட மதிப்பில் 25 விழுக்காடு மானியமாக அளிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த வகையான திட்டம் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் உள்ளதால், மேலும் சில பொது சுத்திகரிப்பு நிலையங்கள் திண்டுக்கல், திருச்சி, ஆம்பூர், பேரணாம்பட்டு மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1988 ஜூலை திங்களில் இத்தகைய திட்டங்களை மேற்கொண்ட தருணத்தில், ஆம்பூர், பேரணாம்பட்டு மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் நிறுவ இருக்கும் பொது சுத்திகரிப்பு நிலையங்களின் பணிகளும் டால்கோ நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டங்களை மறுபரிசீலனை செய்யவும் மற்றும் திருத்தியமைக்கவும் திட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆலோசகர்களின் பரிந்துரையை ஆம்பூர் மற்றும் பேரணாம்பட்டில் அமைக்கப்பட்டுள்ள வழிப்படுத்தும் குழு மதிப்பாய்வு செய்து அப்பகுதியில் கழிவு நீரைப் பதப்படுத்தும் முறையைத் தீர்மானித்துள்ளது. இந்த இரு இடங்களில் நிறுவப்பட வேண்டிய சுத்திகரிப்பு இயந்திரங்களின் எண்ணிக்கையை பற்றியும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆம்பூர், பேரணாம்பட்டு மற்றும் திண்டுக்கல்லில் நிறுவப்பட வேண்டிய திட்டங்களுக்கான பொறியியல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. ஆம்பூர், பேரணாம்பட்டு மற்றும் இராணிப்பேட்டைக்கான திட்டங்கள் ஜூலை 1989-ல் மேற்கொள்ளப்படும். இத்திட்டங்கள் 18 முதல் 24 மாதங்களில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



1989 ஏப்ரல் 21]

இத்திட்டங்களுக்கு தோல் பதனிடுவோர்களின் பங்குத் தொகை கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது :—

| | | தோல் பதனிடுவோர்களால் ஏற்கப்படும் பங்குத் தொகை | |
|---|---|---|---|
| | சதவிகிதம். | இலக்கு. | வசூலிக்கப்பட்டது. |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (1) | (2) | (3) | (4) |
| வாணியம்பாடி .. | 20 | 45.40 | 40.98 |
| ஆம்பூர் .. .. | 20 | 46.24 | 30.00 |
| இராணிப்பேட்டை .. | 20 | * | 38.00 |
| திண்டுக்கல் .. .. | 20 | 48.44 | 16.30 |
| பேரணாம்பட்டு .. .. | 20 | 42.10 | 19.60 |
| திருச்சி .. .. | 20 | * | 5.11 |

(* திட்டச் செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.)

இத்திட்டங்களுக்கான ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1989-90-ல் இரண்டு திட்டங்கள் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5. தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோருக்கான உதவி :

'சிட்கோ' நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த மாதவரம் தோல் தொழிற்பேட்டையை டால்கோ ஏற்று நடத்தி வருகிறது. இதில் 35 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு தோல் தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 10 தொழிற் கூடங்களைக் கட்டி தொலை நோக்குடன் செயல்படக்கூடிய தொழில் முனைவோருக்கு அளித்திட திட்டம் உள்ளது. இந்தத் தொழிற்பேட்டை நிர்வாக ஏஜென்சி முறையில் நிர்வகிக்கப்படுகிறது.

இதே போன்று ஒரு தோல் தொழிற்பேட்டையை அண்ணா மாவட்டம், திண்டுக்கல்லில் ஆரம்பிக்க திட்டம் உள்ளது. இதற்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்த மாவட்ட ஆட்சியாளருடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்பப் பணிகள் வரும் ஆண்டில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6. தோல் தொழிற்கூடங்கள் :

டான்சி நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த கீழ்க்காணும் நான்கு தோல் தொழிற்கூடங்களை 14-4-1986 முதல் டால்கோ ஏற்று நடத்தி வருகின்றது :—

(அ) தோல் பதனிடும் நிலையம், விண்ணமங்கலம்.
(ஆ) தோல் பதனிடும் நிலையம், மாதவரம்.
(இ) தோல் தொழிற்கூடம், பெரம்பூர்.
(ஈ) தோல் தொழிற்கூடம், பல்லாவரம்.

கடந்த ஆண்டுகளில் இந்த தொழிற்கூடங்கள் டான்சியின் கீழ் நஷ்டத்தில் இயங்கி வந்தன. இவைகளை டால்கோ எடுத்துக் கொண்ட பிறகு, இத்தொழிற்கூடங்களின் செயல் முறைகள் சீர்படுத்தப்பட்டு நல்ல முறையில் இயங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு டால்கோ எடுத்த நடவடிக்கையின் காரணமாக, இத்தொழிற் கூடங்களில் 56 விழுக்காடு நட்டம் குறைந்துள்ளது என்பது டால்கோ நிறுவனத்தின் சாதனையாகும்.

7. வியாபார நடவடிக்கையின் விரிவாக்கமும் மற்றும் வெளிநாட்டுப் பயணமும்;

ஐரோப்பிய நாடுகளில் தோல் வியாபாரத்தின் வாய்ப்பினை அறியவும் மற்றும் உலக சந்தையில் இந்திய தோலுக்கு இருக்கும் வாய்ப்பினை அறியவும், டால்கோ ஏப்ரல் 1988-ல், மேற்கு ஜெர்மனியிலுள்ள பர்மிசான் என்னும் நகரத்தில் நடைபெற்ற உலக தோல் சந்தையில் பங்கேற்றது. மேலும், செப்டம்பர் 1988-ல், பாரிசில் நடைபெற்ற உலக தோல் சந்தையிலும் பங்கேற்றது. இந்த வகையான சந்தையில் பங்கேற்றதன் பயனாக இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் வகையிலும் மற்றும் வெளிநாடுகளில் தோல்களை விலைக்கு வாங்குவோருடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு இந்நிறுவனத் தால் தயாரிக்கப்படும் தோலினை விற்பனை செய்ய சந்தர்ப் பங்கள் ஏற்பட்டுள்ளன. விண்ணமங்கலம் டால்கோ தோல் பதனிடும் நிலையத்திலிருந்து 4.25 இலட்சம் ச.அடி பசுத்தோலை திருவாளர்கள் எல் எல்.ஐ சாண்டினி இத்தாலி என்ற நிறுவனத் திற்கு ஏற்றுமதி செய்து சுமார் ரூ. 50.00 இலட்சம் அளவில் அந்நியச் செலவாணி ஈட்டியதற்கு இத்தகைய வெளிநாட்டுப் பயணங்கள் வழி வகுத்துள்ளன. இதே போன்று ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பினை திரும்பவும் பெற முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

8. இலவச காலணி திட்டம் :

1987—88 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில், பள்ளி செல்லும் குழந்தைகள் மற்றும் கிராமப் புறங்களில் பணியாற்றும் தாய் மார்களுக்கான இலவச காலணி திட்டம் அறிவிக்கப்பட்டது. கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சமூக நலத்



துறையுடன் சேர்ந்து இலவச காலணிகளை உற்பத்தி செய்வதற்கு டால்கோ நிறுவனம் தலைமைப் பொறுப்பை ஏற்றது. இலவச காலணிகள் உற்பத்தியும் மற்றும் விநியோகமும், முறையே டால்கோ, கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சமூக நலத்துறை ஆகியவற்றிடையே 50:30:20 என்ற விகிதாச் சாரத்தில் நிர்ணயிக்கப்பட்டது. 1987-88-ல் பள்ளி குழந்தை களுக்கு தேவைப்படும் காலணிகளை மேற்சொன்ன மூன்று துறைகளும் மதிப்பீடு செய்து உற்பத்தியில் ஈடுபட்டன. 1987-88 மற்றும் 1988-89 ஆம் ஆண்டு டால்கோ தன் பங்கிற்கு 33,42,377 இலட்சம் ஜோடி காலணிகளை உற்பத்தி செய்து பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு விநியோகம் செய்தது. இத்திட்டத்தைச் செயல் படுத்த டால்கோ ஆறு மண்டல அலுவலகங்களையும் மற்றும் 37 உற்பத்தி கூடங்களையும் தமிழ்நாடு முழுவதும் நிறுவியுள்ளது.

இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் 5,000 தொழிலாளர் களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. நேரிடையான வேலை வாய்ப்பு 200 அலுவலர்களுக்கு கிட்டி யுள்ளது. ஊரகப் பகுதியிலுள்ள பரம்பரைக் கைவினைஞர் களிடையே இத்திட்டம் ஊக்குவிப்பையும், உற்சாகத்தையும் அளித்துள்ளது. ஒவ்வொரு கைவினைஞரும் சராசரியாக ஒரு நாளைக்கு 10 ஜோடி காலணிகளை தயாரித்து ரூ. 25 தினக் கூலி பெறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இந்த திட்டத் தினால் நிரந்தர வருவாய் கொடுக்கக்கூடிய வேலை வாய்ப்பு பெறப்பட்டுள்ளது ஒரு குறிப்பிடத்தக்க பயனுள்ள அம்சமாகும்.

9. டால்கோவின் சாதனைகள்:

இந்நிறுவனம் நடப்பு நிதியாண்டில் உயர்ந்த பட்ச விற்பனை யளவாகிய ரூ. 2,079.00 இலட்சத்தை எட்டும் என்றும் இதன் மூலம் ரூ. 15.00 இலட்சம் இலாபத்தை ஈட்டும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. மேலும், 1989-90 ஆம் ஆண்டில் இலவச காலணி திட்டம் தொடருமானால், இந்நிறுவனத்தின் நடவடிக் கைகள் மேம்பட்டு அதிக பட்சமான விற்பனையளவாகிய ரூ. [illegible],000.00 இலட்சத்தை எட்டி இதன் மூலம் ரூ. 20.00 இலட்சம் இலாபத்தை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

10. வேலைவாய்ப்பு;

தோல் பதனிடும் தொழில் நூறாண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த தொழிலாக தமிழ்நாட்டில் இருந்து வருவதால், இத்தொழில் வளர நல்ல சிறப்பான அடிப்படை வசதியுள்ளது. வரும் ஆண்டுகளில் மூடு காலணி, மேல் தோல், காலணிகள், தோலாடைகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்திக்கு வேண்டிய தொழிற்சாலைகள் நிறுவ புதிய முயற்சிகள் மேற் கொள்ளப்படும். தமிழக அரசு, நடப்பு ஆண்டில் 'சிப்காட்' நிறுவனத்தின் மூலமாக ஒரு தோல் தொழில் இணையகத்தை நிறுவ திட்டம் மேற்கொண்டுள்ளது தோல் பொருள் உற்பத்தியில் ஈடுபடக் கூடிய தொழிற்சாலைகளை நிறுவக் கூடிய நாடு முழுவதும் உள்ள தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தொழில் வணிகத் துறையிலுள்ள மின்னணுவியல் தொழிற் [illegible] பிரிவுகள்.

[illegible] சாதனங்களில் மின் மற்றும் மின்னணு பொருட்கள் [illegible] இன்றியமையாத சாதனங்களாக அமைந்திருக்கின்றன. மின், மின்னணு பொருட்களின் அதிவேக உற்பத்தியைக் கருதி கீழ்க்கண்ட வேறு பல திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு அரசின் கொள்கை வடிவமைக்கப்பட்டது:—

1. குறைந்த மூலதனத்தில் அதிக வேலை வாய்ப்புகளை அளிக்கும் மின்னணுத் தொழில்கள்;

2. மின் மற்றும் மின்னணு இயல்புகளில் படித்த பட்டதாரி ஆண்களுக்கும் பெண்களுக்கும் அது சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்புகளை அளித்தல்;

3. மேம்பட்ட தொழில் நுட்பவியல் இன்றைய வாழ்க்கைத் தரத்திற்கு ஒப்பிடுமாறு மாற்றியமைத்தல்.

மேற்கூறியவைகளைக் கருத்திற் கொண்டு மின் மற்றும் மின்னணுவியல் தொழிற்பேட்டைகளை தொழில் மற்றும் வணிகத் துறையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. இத் தொழிற்பேட்டைகளின் [illegible] இத்துறை கீழ்க்கண்ட உதவிகளை தொழில் முனைவோருக்கு செய்து வருகிறது:—

1. தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் வளர்ச்சி மையங்களில் மின்னணுவியல் மற்றும் அது தொடர்பான தொழில்களுக்கு மட்டுமே தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தல்;

2. அனைத்து வசதிகளுடன் கூடிய சோதனை நிலையங்கள் மூலம் குறைந்த செலவில் சோதனை, தரக்கட்டுப்பாடு வசதி [illegible] செய்து கொடுத்தல்;

3. உற்பத்தி, மனித சக்தி வளர்ச்சி வசதிகளைச் செய்து கொடுத்தல்;

4. மின்னணுவியல் மருத்துவச் சாதனங்கள் மையம்/மின்னணுவியல் சோதனை ஆய்வுக் கூடங்களின் மூலமாக, மின்னணுவியல் மருத்துவச் சாதனங்கள் பழுதுபார்த்தல்/சரிபார்த்தல் [illegible] செய்து கொடுத்தல்.



அடிப்படை வசதிகள்:

மின் சாதனம், மின்னணுவியல், மின்னணுவியல் தொடர்பான தொழில்கள் ஆகியவற்றிற்காகவே கீழ்க் கண்ட 9 மையங்களில் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:—

1. டாக்டர் விக்ரம் சாராபாய் இன்ஸ்டிரானிக் தொழிற் பேட்டை, அடையார், சென்னை.

(அ) கட்டப்பட்ட கொட்டகைகளின் (sheds) எண்ணிக்கை. — 104

(ஆ) தொழில் முனைவோர்க்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கொட்டகைகளின் எண்ணிக்கை. — 10[illegible]

2. மின்சார-மின்னணுவியல் தொழிற்பேட்டை, பெருங்குடி—

பரப்பளவு .. .. — 112.55 ஏக்கர்

சீர்செய்த மனைகளின் எண்ணிக்கை .. — 17[illegible]

(அ) தொழிற்பேட்டை—பெருங்குடி பகுதி I :

சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் மின்னணுவியல் தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தும் எண்ணம் பெருகி வருவதால் தொழில் மனைகளுக்கான தேவையும் அதிகரித்துள்ளது. ஆதலால் பெருங்குடியில் 112.55 ஏக்கர் பரப்பளவில் சீர்செய்த மனை தொழில்களுக்கான தொழிற்பேட்டை அமைக்கப்பட்டுள்ளது. தொழிற் பேட்டையில் பகுதி 1-ல் 121 மனைகளும், பகுதி 2-ல் 53 மனைகளும் உள்ளன. இம் மனைகள் அனைத்தும் தொழில் முனைவோர்க்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) தொழிற்பேட்டை—பெருங்குடி பகுதி II:

பெருங்குடியில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழிற்பேட்டைக்கு அருகே தொழிற் பிரிவுகளுக்கான மனைகளின் மேம்பாட்டிற்கு அரசு ரூ. 29.55 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. இத்தொழிற் பேட்டை முழுவதுமாக இயங்க ஆரம்பிக்குமேயானால் இன்னும் 250 தொழில்கள் வளர உதவுவதுடன் சுமார் 7,600 நபர்களுக்கு (ஆண்/பெண் இருபாலர்கள்) வேலை வாய்ப்பு கிடைக்கும்.

3. மின்னியல் மற்றும் மின்னணுவியல் தொழிற்பேட்டை காக்களூர், ஓசூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயமுத்தூர்.

காக்களூர், ஓசூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 5 மாநிலங்களில் மின் மற்றும் மின்னணுவியல் தொழிற்பேட்டை அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 34 தொழிற் கூடங்கள் அரசின் மூலம் அமைக்கப்பட்டது. மற்றும் 40 தொழிற் கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களால் கட்டிக் கொள்ளப்பட்டன.

மேற்படி எல்லா தொழிற் கூடங்களும் சுமார் 5,500 நபர் களுக்கு வேலை வாய்ப்புகளை தருகின்றன. அரசும் மின், மின்னணு தொழில் உற்பத்தியையும் அதனை ஊக்குவிக்கும் எண்ணத்துடன் 40 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து இத்துறைக்கு மாற்றி ஆணை யிட்டுள்ளது. இந்த 40 ஏக்கர் நிலமும் அபிவிருத்தி செய்து தேவையான தொழில் முனைவோருக்கு உரிய காலத்தில் ஒதுக்கீடு செய்யப்படும்.

4. மின் மற்றும் மின்னணுவியல் தொழிற்பேட்டை சேலம்:

சேலத்தில் மின்னணு தொழிற்பேட்டை அமைக்க மாவட்ட ஆட்சியர், சேலம் அவர்களிடமிருந்து 27.50 ஏக்கர் நிலம் பெறப் பட்டுள்ளது. இந்த தொழிற்பேட்டையில் பட்டதாரிகளுக்கும் சேலம் பொறியியல் கல்லூரி மற்றும் பெண்கள் பல்தொழில் நுட்பப் பயிலகங்களிலிருந்து ஆண்டுதோறும் பட்டயம் பெற்று வெளிவருகின்றவர்களுக்கும் அடிப்படை உள்ளமைப்பு வழங்கும் பொருட்டு செய்யப்பட்ட மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும். கையகப்படுத்தப்பட்ட 27.50 ஏக்கர் நிலத்தில் 51 மனைகள் அமைக்கப்படும். ஏற்கனவே, 20 மனைகள் ஒதுக்கீடு செய்யப் பட்டு விட்டது. மேற்படி நிலத்தில் தொழில் மற்றும் வணிகத் துறையின் கட்டுமானப் பிரிவு அபிவிருத்திப் பணிகளைச் செய்து வருகிறது.

5. மின்னணுவியல் தொழிற்பேட்டை வேலூர்:

இராணிப்பேட்டை, சிப்காட் தொழிற்பேட்டையிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் அமைந்துள்ள நடுத்தர மற்றும் பெரிய தொழில்களைக் கருத்தில் கொண்டு வேலூரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டது. இதற்காக மேல் மணவூர் மற்றும் அப்துல்லாபுரம் ஆகிய இடங் களில் தொழிற்பேட்டை அமைக்க உரிய இடம் தேர்ந்தெடுக்கும் நிலையில் உள்ளது.



6. மின்னணுவியல் தொழிற்பேட்டை திருமழிசை.

திருமழிசை மின்னணு தொழிற்பேட்டை அமைக்கலாம் என்பதைக் கருத்திற் கொண்டு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து நிலத்தை பெறுவதற்கு தற்சமயம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மின்னணுவியல் ஆய்வு மற்றும் வசதிகள் :

காக்களூரில் உள்ள மத்திய மின் ஆய்வுக் கூடமும், அடை யாறில் உள்ள மின்னணுவியல் ஆய்வு-வளர்ச்சி மையமும், இம் மாநிலத்தின் மின் ஆய்வு, மின் உற்பத்திப் பொருள் மேம்பாட்டு வசதி ஆகியவற்றிற்குப் பெரிதும் வகை செய்கின்றன. காக்களூரில் உள்ள மத்திய மின் ஆய்வுக் கூடத்தை இந்தியத் தர நிர்ணய நிறுவனம் பொருள் வழங்கல் விற்பனை இயக்குநர் அலுவலகம் தொழில் நுட்பம் வாய்ந்த மின் பொருட்களுக்காக இந்தியத் தர நிர்ணயக் குறியீடுகளின்கீழ் வருகின்ற மின்னணுவியல் பொருள் ரயில்வே அமைச்சகம் ஆகியவை ஏற்பளித்து உள்ளன. அரசுத் துறைகள் மின் சாதனங்கள் வாங்குவதில் அவற்றிற்கு இந்த ஆய்வுக் கூடம் மின் சாதனங்களின் தரம் பற்றிய ஆலோசனை வழங்கும் அமைப்பாகவும் செயல்படுகிறது. பம்பாய், அகமதாபாத் நாகபுரி, சென்னை ஆகிய இடங்களிலுள்ள இந்திய தர நிர்ணய கழகம் இவ் ஆய்வுக் கூடத்திற்கு சோதனைக்காக பொருள்களை அனுப்பி வைக்கின்றன. இவ் ஆய்வுக் கூடம் 3 இலட்சம் செலவில் கூடுதல் உபகரணங்களைக் கொண்டுள்ளது. இந்திய தரத்தை ஒட்டி எனர்ஜி மீட்டர் கருவியை சோதனைகள் செய்ய உண்டான வசதிகளுக்கு அரசு ஆணைகள் வழங்கியுள்ளது.

2. அடையாறில் உள்ள மின்னணுவியல் ஆய்வு வளர்ச்சி மையத்தில் தொழில் தர ஆய்வு அளவிடும் உபகரணங்களைப் பயன்படுத்துவதில் திறமையை வளர்ப்பதற்கான வசதிகளும், உற்பத்திப் பொருள் மேம்பாட்டு வசதிகளும், சுற்றுப்புறச் சூழல் ஆய்வு வசதிகளும் உள்ளன. மத்திய அரசின் மின்னணுவியல் துறை சோதனை செய்யும் உபகரணங்களைக் கொள்முதல் செய் வதற்காக, உதவி மானியம் வழங்கியுள்ளது. மேலும் தொழில் நுட்ப உதவியும் அளிக்கிறது. இம் மையம், 1988-89 (1988 நவம்பர் வரை) 1,308 மாதிரிகளை ஆய்வு செய்துள்ளது. அடிப் படை அளவீடு ஆய்வு வசதிகளும், ஓசூர், மதுரை ஆகிய இடங் களில் உள்ளன. தமிழ்நாடு மின்னணு தொழில்களுக்கு கிடைக்கக் கூடிய பலவித அனுகூலங்களை கருத்தில் கொண்டு; இம்மையத்தை மத்திய அரசின்கீழ் இயங்க மாற்றம் செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

மின் மருத்துவக் கருவிகள் சேவை நிலையங்கள் :

இந்தத் துறை மின் மருத்துவக் கருவிகளை சரிபார்க்கும் நிலை யங்களை கிண்டி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூரிலும் நிறுவியுள்ளது. இந்த மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவ

மனைகளிலும் அதனைச் சுற்றியுள்ள மருத்துவ நிலையத்திலும் உள்ள மின் மருத்துவக் கருவிகளைச் சோதனை செய்யவும் பழுது பார்க்கவும் உபயோகப்படும் இன்றியமையாத கருவிகள் இந்த ஆய்வகத்தில் உள்ளது.

அடையாறில் உள்ள தகவல் தொகுப்பு வங்கியும் தகவல் மையமும் :

புதிய மின்னணுவியல் பிரிவுகளைத் தொடங்க கருதியுள்ள தொழில் முனைவோர்களுக்கு அனைத்துவகை அடிப்படைத் தகவல்களையும் வழி முறைகளையும் இம் மையம் அளித்து உதவுகிறது. இதில் பின்வருவன அடங்கும்:—

1. உற்பத்தி திட்டத்திற்கு ஒப்புதலளித்தல், முதலீட்டுப் பொருட்கள், மூலப் பொருட்கள், துணைப் பொருட்கள் ஆகிய இறக்குமதி செய்தல், அடிப்படை வசதிகள், தனி வணிகக் கொள்கைகள் முதலியவற்றைப் பொறுத்தமட்டில், அரசின் கொள்கை—நடைமுறை பற்றிய நெறிமுறைகள்;

2. உற்பத்திப் பொருள் குறித்த தொழில்நுட்பத் தகவல், தொழில்நுட்ப உத்தியின் ஆதாரங்கள், தொழில் நுட்பத்தை மாற்றுதல்;

3. உற்பத்திப் பொருட்கள், அவற்றின் நடப்பு நிலை, வருங்கால அங்காடித் தேவை பற்றிய வணிகத் தகவல்;

4. கடன் உதவி வழங்கும் நிறுவனங்களைப் பற்றிய விவரம் அளித்தல்;

5. தேர்ந்தெடுக்கப்பட்ட சில உற்பத்திப் பொருட்கள் பற்றிய, தயார் நிலையிலுள்ள சுருக்கமான திட்ட அறிக்கைகள்.

தொழில் முனைவோரின் பயனுக்காக, தகவல்களைச் சேகரித்து வழங்கும் பொருட்டு கணிப்பொறியும், ஏனைய வசதிகளும் அமைப்பதன் மூலமாக, இம்மையம் நிலை உயர்த்தப்பட்டு நவீனமாக்கப்பட்டுள்ளது. தகவல்களை ஒன்று திரட்டி வழங்கும் பொருட்டு, இம் மையம் பல ஆண்டுகளாக தொழில்முனைவோரின் பயனுக்காகவும் ஏனையோரின் பயனுக்காகவும் சிறந்த தொழில் நுட்பக் குறிப்புத் தொகுப்பு நூலகம் ஒன்றை வைத்து வருகின்றது. மின், மின்னணுவியல், கணிப்பொறியியல் துறை சம்பந்தப்பட்ட 1,620 புத்தகங்களும், 50 உள்நாட்டு, வெளி நாட்டுப் பத்திரிகைகளும் பார்வைக்காக உள்ளன. இந்நூலகம் சமீப காலத்தில் அதிக அளவிலான பார்வையாளர்களைக் கவர்ந்துள்ளது.

நம் நாட்டில் மின்னணுவியல் தொழில்கள் சரியான முறையில் வளருவதைக் கண்காணிக்கும் பொருட்டு, மத்திய அரசு இந்நாட்டில், புதிய மின்னணுவியல் தொழில்களைத் தொடங்குவதற்கு முன் தேவையாக உற்பத்தித் திட்டத்திற்கு முன் ஒப்புதல் பெற வேண்டுமென செய்துள்ளது. புதிய மின்னணுவியல் பொருட்கள்



133 உள்ளன. இவற்றின் உற்பத்தித் திட்டத்திற்கு ஒப்புதலளிக்கும் அதிகாரம், தொழில்துறை ஆணையாளர், தொழில்—வணிகத் துறை இயக்குநரின் தலைமையின் கீழ் உள்ள மாநில அளவிலான தொழில்நுட்பக் குழுவிடம் உள்ளது. எஞ்சிய மின்னணுவியல் பொருட்களைத் தயாரிக்கும் திட்டத்திற்கு தொழில்துறை ஆணையாளர் தொழில் வணிகத்துறை இயக்குநரின் பரிந்துரையின் பேரில், புதுடில்லியிலுள்ள சிறு தொழில் வளர்ச்சி ஆணையாளர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. இத்தகைய ஒப்புதல்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது, இந்த மின்னியல் துறையில் பணிகள் நாளுக்கு நாள் விரைந்து அதிகரித்து வருவதையே காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, 1983-ல் 166, 1984-ல் 182, 1985-ல் 203, 1986-ல் 219, 1987-ல் 290 ஒப்புதல்கள் வழங்கப்பட்டிருக்க, இந்த ஆண்டில் 1988 டிசம்பர் இறுதியிலேயே 334 இனங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஓராண்டு காலத்திற்கே ஒப்புதல்கள் செல்லத்தக்கவை. ஆனால் தொழில் முனைவோரின் வசதிக்காக அடுத்த ஓராண்டு காலத்திற்கு ஒப்புதல்களை நீட்டிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

பொது வசதி மையம், கோயம்புத்தூர் :

இந்நிலையம் மின்னணு சோதனை மற்றும் வளர்ச்சி மையத்தின் அடிப்படையில் மின் மற்றும் மின்னணுப் பொருட்களை சோதனை செய்து தர நிர்ணயத்திற்காக சான்றிதழ் அளிப்பதற்காக புதிதாக துவங்கப்பட்ட சோதனை நிலையம் ஆகும்.

இந்த மையம் கோயம்புத்தூரிலும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள தொழிற்கூடங்களுக்கும் சேவை செய்ய ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையத்தில் மேற்காணும் செயல்களுக்காக வசதிகள் செய்யப்பட்டுள்ளன:—

(1) மின்பொருள்களுக்கு காலிப்ரேஷன் செய்துகொடுத்தல்;

(2) சுற்றுப்புற சூழல் தட்பவெப்ப நிலையை ஆய்வுசெய்யும் அறையில் மின்னணுப்பொருட்களை சோதனை செய்தல்;

(3) மின் மற்றும் மின்னணு உபகரணங்களை சோதனை செய்தல்;

(4) மின் மற்றும் மின்னணு தொழில் முனைவோருக்கும் சோதனை வசதிகள் அளித்தல்.

மின்னணு பொருள் வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி :

புதிதாக மின்னணுப் பொருட்களை உருவாக்க முனைவோரின் வசதிக்காக திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் புதிதாக இந்த நிலையங்கள், நிறுவப்பட்டு, தொழில் முனைவோருக்கு கிராமக் கைத்தொழில் புரிவோர்க்கான திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒரு தடவைக்கு 20 பயிற்சியாளர்கள் விதம் 7 பிரிவு வகுப்புகள் இதுவரை நடத்தி முடிக்கப்பட்டன. 1988-89 ஆம் ஆண்டு கிராமக் கைத்தொழில் திட்ட நிதி உதவியின் கீழ் மேலும் 3 தடவைகள் 20 பயிற்சியாளர்களைக்கொண்ட வகுப்புக்களும் நடத்தப்படும்.

தரக்கட்டுப்பாடு மையங்கள், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் :

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தரக் கட்டுப்பாடு மையங்கள் ஏற்படுத்த அரசு ஆணை வெளியிட்டுள்ளது. சென்னையில் உள்ள மையம் மின்னணு சோதனை மற்றும் வளர்ச்சி நிலையக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இம் மையங்கள் வீட்டு உபயோக மின்சார பொருட்களின் சட்டத்தின் படி தரக் கட்டுப்பாடு தர நிர்ணய முகமையாக இயங்கி வருகின்றன. இந்த நிலையத்தின் அலுவலர்கள், மின்சார பொருட்களின் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், இருப்பு வைப்பவர்கள் ஆகியோர்களின் இருப்பிடத்தை பார்வையிட்டு அவர்கள் குறிப்பிட்ட தர நிர்ணய குறியீட்டின்படி தயாரிக்கப்பட்டுள்ள பொருட்களை வைத்திருக்கிறார்களா என்பதை ஆய்வார்கள்.

இதுவரை 37 தயாரிப்பாளர்களுக்கு நிரந்தர சான்றிதழ்களும் 110 தற்காலிக சான்றிதழ்களும் 1981 ஆம் ஆண்டு தரக் கட்டுப்பாடு ஆணையின்படி வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 264 மாதிரிகள் பல்வேறு தயாரிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்டு 230 மாதிரிகள் சோதனையிடப்பட்டுள்ளன. 159 மாதிரிகளுக்கு முதல் எச்சரிக்கையும் 23 மாதிரிகளுக்கு 2ஆவது எச்சரிக்கையும் அனுப்பப்பட்டது.

கிண்டியிலுள்ள பொது வசதி மையத்தை மேம்படுத்துவது :

இந்தத் தொழிற்கூடம் கீழ்க்கண்ட ஆய்வுகளை மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ளது:—

(1) மின் பொருள்களுக்கு காலிப்ரேஷன் செய்து கொடுத்தல்;

(2) சுற்றுப்புறச் சூழல் தட்ப வெப்ப நிலையை ஆய்வு செய்யும் அறையில் மின்னணுப் பொருட்களை சோதனை செய்தல்;

(3) மின் மற்றும் மின்னணு உபகரணங்களைச் சோதனை செய்தல்;

(4) மின் மற்றும் மின்னணு தொழில் முனைவோர்க்கு தேவையான அறிவுரைகள் வழங்குதல்.

இதைக் கருத்தில்கொண்டு அரசு ஏற்கனவே இம்மையத்தை மேம்படுத்துவதற்கு ரூ. 10.86 இலட்சம் வழங்கியது. இம்மையம் வரும் ஆண்டிலிருந்து முழு வடிவில் இயங்கத் தொடங்கிவிடும்.



பட்டு வளர்ச்சித் துறை.

பட்டு வளர்ப்பானது விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமத் தொழிலாகும். 1979 ஆம் ஆண்டு முதலாக சிறு மற்றும் குறு விவசாயிகள் இப்பட்டுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். சிறிதளவு நிலம் உடைய விவசாயிகளுக்கு இப் பட்டுத் தொழில் ஏனைய பணப் பயிர்களைக் காட்டிலும் இலாபகரமான தொழிலாகும்

2. மேலும் இப்பட்டுத்தொழில் மற்ற விவசாயத்தைப்போல் அல்லாமல் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்ப நபர்கள்அத்தனை பேர்களுக்கும் தொடர்ந்து வருடம் முழுமைக்கும் வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய ஒரு தொழிலாகும். மற்ற விவசாயத் தொழிலில் அல்லாத சிறப்பு அம்சம் ஒன்று இத்தொழிலில் உண்டென்றால் அது பட்டு விவசாயிகளின் குடும்பப் பெண்களுக்குக் கூட வருடம் முழுவதும் வேலை வாய்ப்பை நல்குவதாகும். 1979-ல் பட்டு வளர்ச்சிக்கென தனித்துறை தோற்றுவிக்கப்பட்ட பின்னர் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் துவக்கி, பட்டு முட்டைகள், பட்டுக்கூடுகள், கச்சாப் பட்டு ஆகியவைகளின் உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

3. அதிக அளவு பட்டினை பயன்படுத்தும் இந்திய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் உள்ள கைத்தறிகளுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 800 மெட்ரிக் டன் பட்டுநூல் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது இத்தேவையில் 35 விழுக்காடுதான் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. எஞ்சிய தேவை தொடர்ந்து கர்நாடக மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்து நிறைவு செய்யப்படுகிறது. தமிழகத்தில் குறிப்பாக எல்லையோரப் பகுதிகளில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளில் பெரும்பகுதி கர்நாடக மாநிலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பட்டுநூல் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு காரணம் பட்டு நூற்புத் தொழிலில் கர்நாடக மாநிலம் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளதேயாகும். இந்நிலையினைப் போக்க பட்டு வளர்ச்சி துறையானது பட்டு நூற்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மேம்பட்ட பட்டுநூற்பு பயிற்சி அளித்து தொழில் முனைவோருக்கு தொழில் நுட்ப உத்திகள் மற்றும் பொருளாதார உதவிகள் வழங்கியது. ஆனாலும் எதிர் பார்த்த முன்னேற்றம் காணப்படவில்லை. பட்டு நூற்பு உரிமம் பெற்ற நமது மாநில நூற்பாளர்கள் பட்டுத் தொழிலில் நீண்ட கால அனுபவமும் திறமையும் பெற்றுத் திகழும் கர்நாடக மாநில நூற்பாளர்களுடன் போட்டியிட்டு முன்னேற முடியவில்லை. மேலும் பட்டுக்கூடு அங்காடிகளில் ஏல முறை விற்பனையில் கர்நாடக மாநில நூற்பாளர்கள் பட்டுக் கூடுகளை கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்யக்கூடிய தகுதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே நமது மாநில பட்டு விவசாயிகள், தங்களின் விளை பொருட்களை எல்லையோரப் பகுதியில் உள்ள கர்நாடக மாநில பட்டுக்கூடு அங்காடிகளுக்கு எடுத்துச் சென்று

விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதுபோலவே தங்களுக்குத் தேவையான பட்டு முட்டைகளையும் கூட கர்நாடக [illegible] வித்தகங்களிலேயே கொள்முதல் செய்துவிடுகின்றனர். [illegible] சில காரணங்களுக்குத்தான் தொடர முடியும். [illegible] [illegible] வழிமுறைகள், யுக்திகள் படிப்படியாக [illegible] [illegible] கொண்டு வரப்படவுள்ளது. ஏழாவது ஐந்தாண்டு [illegible] காலத்தில் சாதகமற்ற பருவநிலை வறட்சி நிலைகளோடே நடப்பாண்டில் வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்டது. இருந்த போதிலும் பட்டு வளர்ச்சியைக் காட்டும் தேசிய வரைபடத்தில் தமிழகத்தில் பட்டுத்தொழில் ஓரளவு குறிப்பிடத்தக்க நிலை [illegible] கட்டிக்காட்டப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. [illegible] சில ஆண்டுகளில் பயிரிடப்பட்ட மல்பரி பரப்பில் [illegible] [illegible] அளவு வறட்சியின் காரணமாக பாதிப்புக்குள்ளாகி அழிந்து விட்டது. இந்த இழப்பினை மறு நடவின் மூலம் ஈடுசெய்ய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

4. இம்மாநிலத்தில் கச்சாப்பட்டு தேவை அதிகரித்து உள்ளது. பட்டு நெசவாளர்கள் தங்களுக்குத் தேவையான பட்டுநூலை நியாய விலையில் பெற விரும்புகின்றனர். ஆனால் சமீப காலங்களாக நிலவும் வறட்சி, கர்நாடக மாநிலத்தில் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் அறுவடை கேட்டினால் ஏற்பட்டுள்ள உற்பத்தி வீழ்ச்சி மற்றும் சைனா தனது பட்டு ஏற்றுமதிக் கொள்கையில் செய்துள்ள மாற்றங்கள் இவைப் போன்ற பல தரப்பட்ட காரணங்கள் இந்த விலை உயர்வுக்கு காரணங்களாகக் கொள்ளலாம். இம்மாநிலத்தில் சைனா தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பட்டுநூலை கைத்தறி நெசவுக்கு அவ்வளவு அதிகமாக பயன்படுத்துவது இல்லை. ஏனெனில் இவ்வகை பட்டுநூல் விசைத்தறியில் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய உயர்தர பட்டு ஆடைகள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. இருந்தபோதிலும் ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்ச பரப்பளவில் மல்பரி விளைவின் மூலம் கிடைக்கும் வருவாய் கவர்ச்சிகரமானதாக இருப்பதால் தற்போதைய கைத்தறியை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் வளர்ச்சியடைய போதிய வாய்ப்புகள் உள்ளன. இதன் மூலம் [illegible] வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளும் அதிகமாகும்.

5. பட்டுத்தொழிலின் ஒருமித்த அபிவிருத்தியை கணக்கில் கொண்டு அரசு உலக வங்கி உதவியுடன் கூடிய விரிவான திட்டம் அடுத்துவரும் ஐந்தாண்டு காலத்தில் இம்மாநிலத்தில் செயல்படுத்த பட உள்ளது. மேற்கண்ட உலக வங்கி உதவி திட்டப் பிரேரணையின் பேரில் உலக வங்கி அதிகாரிகளுடன் இறுதி கட்ட பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு நவம்பர் 1988-ல் மதிப்பீடுகள் இறுதியாக்கப்பட்டுள்ளன.

இவ்வுலக வங்கி உதவித்திட்டம், தமிழகத்தில் மல்பரி சாகுபடிக்கு ஏற்ற வசதிகள் அதிகம் பெற்றுள்ள ஒன்பது மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டிலிருந்து செயல்படத் துவங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. உலக வங்கி உதவித்திட்ட மதிப்பீட்டு



நிலையிலான மொத்த தொகை ரூ.41.77 கோடி. இதில் ரூ.19.05 கோடிக்கு கடன் வசதிக்கு வகைசெய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, 12,000 ஹெக்டேர் நிலம் மல்பரி நடவின்கீழ் புதியதாக கொண்டுவரப்படும். பட்டுக்கூடுகளின் உற்பத்தி 7,937 மெட்ரிக் டன்கள் என்ற அளவிற்கு அதிகரிக்கும். பட்டுநூல் உற்பத்தி 850 மெட்ரிக் டன்கள் என்ற அளவிற்கு அதிகரிக்கும். இத்திட்டம் படிப்படியாக ஆண்டுக்கு ஒரு இலட்சம் பேர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பு அளிக்கும். இதில் 37 சதவீதம் வேலை வாய்ப்பு பெண்களுக்குக் கிடைக்கும்.

6. 1989-90-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட அடிப்படை வசதிகளை பலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

1. மல்பரி விதைப்பண்ணை
2. பட்டு வித்தகம்
3. தொழில் நுட்ப சேவை மையம்
4. இளம்புழு வளர்ப்பு மையம்
5. விதைக்கூடு அங்காடி
6. கலப்பினக்கூடு அங்காடி
7. பயிற்சிப்பள்ளி
8. விவசாயிகள் பயிற்சி மையம்
9. பட்டுநூற்புப் பயிற்சி மற்றும் விரிவாக்க மையம்
10. நிர்வாகம்
11. பட்டு கூட்டுறவு சங்கங்கள்

7. 1989-9 -ஆம் ஆண்டில் திட்டப்பணிகளுக்கென ரூ. 602.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதாகவுள்ளது. இதில் ரூ. 444·13 இலட்சம் தொடர்சித் திட்ட செலவாகும். ரூ.153.32 இலட்சம் உலக வங்கி உதவி பெறும் திட்டத்திற்கும், ரூ. 10.06 இலட்சம் புதிய திட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 204.68 இலட்சம் திட்டம் சாராப் பணிக்குண்டான நிதி தேவையாகும்.

தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம்.

கைவினைஞர்களுக்கு தொழில் நுட்ப உதவி, தொழிற் வளர்ச்சிக்கான உதவிகள் அளிப்பதன் மூலமும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதன் மூலமும், இம்மாநிலத்தில் கைத்திறன் பொருட்களின் வளர்ச்சிக்கும், அதன் விரிவாக்கத்திற்கும் தனியானதோர் எழுச்சியையும்,

144363

இணைப்புகள்

[1989 ஏப்ரல் 21

புதிய வழி முறைகளையும் உருவாக்கி கைத்திறத் தொழில் மேம்பாட்டினை வளர்ச்சியடையச் செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இயங்கும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி நிறுவனம் 1973-ல் நிறுவப்பட்டது.

இந்நிறுவனத்தின் கொள்கைகளில் ஒன்றின் அடிப்படையில், கைவினைஞர்களுக்கான உற்பத்தி செய்யும் கைத்திறன் பொருள்களை தமிழ்நாட்டிலும், மற்றும் இதர மாநிலங்களிலும் உள்ள விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்வதற்கு தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனத்தின் சாதனைகள் இவ்வருமாறு:—

விற்பனைகள் :

1987-88—ஆம் ஆண்டிற்கு இந்நிறுவனத்திற்கு விற்பனை இலக்கு ரூ. 325 இலட்சமாகும். இக்கழகம் ரூ.386.78 இலட்சங்களுக்கு அதாவது 119 சதவிகிதம் விற்பனை செய்துள்ளது.

உற்பத்தி :

1987-88 ஆம் ஆண்டிற்கு இக்கழகத்தின் உற்பத்தி இலக்கு ரூ. 95 இலட்சமாகும். இக்கழகம் ரூ.95.81 இலட்சங்கள் அதாவது 100.85 சதவிகிதம் உற்பத்தி செய்துள்ளது.

கைவினைஞர்களுக்குப் பயிற்சி :

1986-87 ஆம் ஆண்டில் மாநில அரசு, கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்திற்காக ரூ. 1.00 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. 1986-ம் வரும் அக்டோபர் மாதத்தில் 28 கைவினைஞர்களுக்கு நாச்சியார்கோயில் மற்றும் மதுரை உற்பத்தி நிலையங்களில் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு சுமார் ரூ. 0.43 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. 1987-88—ம் ஆண்டிலும் இப்பயிற்சி தொடர்ந்து முடிவுற்றது.

ஏற்றுமதி :

1987-88—ஆம் ஆண்டில் இந்நிறுவனம் விற்பனை நிலையங்களின் வாயிலாகவும் கொள்முதல் ஆணையின்பேரிலும் அமெரிக்கா, மலேஷியா, ஜப்பான், ஜெர்மனி, மொரிஷியஸ் மேலும் லண்டன் போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த விற்பனைத் தொகை ரூ.7.96 இலட்சங்களாகும்.

நிதிநிலைமை :

1987-88—ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ. 7.17 இலட்சங்கள் (ஆய்நிலையான) இலாபம் ஈட்டியுள்ளது.

D

V211,31'N89
[illegible]

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrafts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tinnevelly) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9|31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3|1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

---

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.